பாவலர்
துரையப்பாபிள்ளை
நூற்றாண்டு விழா
மலர்



பாவலர்
துரையப்பாபிள்ளை
நூற்றாண்டு விழா
மலர்

மகாஜனக் கல்லூரி

தெல்லிப்பழை

நூற்றாண்டு விழாச் சபை வெளியீடு

1972

மலர் ஆசிரியர் :

ஆ. சிவநேசச்செல்வன், B. A. Hons., [Cey.]
தமிழ் விரிவுரையாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

மலர்க் குழு :

புலவர் நா. சிவபாதசுந்தரன்,
ஆசிரியர்,
மகாஜனக் கல்லூரி.

த. சண்முகசுந்தரம், B. A. [Cey.], Dip. in Ed.,
ஆசிரியர்,
மகாஜனக் கல்லூரி.

கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை,
ஆசிரியர்,
மகாஜனக் கல்லூரி.

அ. இரத்தினம், B. A. [Cey.],
விரிவுரையாளர்,
பல்தொழில்நுட்பக் கல்லூரி,
கொக்குவில்.

மயிலங்கூடலூர் பி. நடராசன்,
ஆசிரியர்,
மகாஜனக் கல்லூரி.

நுழைவாயிலில் .....

பாவலர் தே. அ. துரையப்பாபிள்ளை அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாவை நிறைவு செய்யும் வகையில் இம்மலர் வெளிவருகின்றது. பாவலருடைய வாழ்க்கையையும் சாதனைகளையும் பல்வேறு கோணங்களிலிருந்து மதிப்பிடும் இம்மலரின் முதற் பகுதி இருபதாம் நூற்றாண்டாரம்பகாலச் சமுதாயவியல் வரலாற்றின் முக்கிய கூறுகளை ஓரளவு குறியிட்டுக் காட்டுகின்றது. கல்விமானாகவும், சீர்திருத்தவாதியாகவும், தேசியவாதியாகவும் விளங்கிய பாவலரின் வாழ்வனுபவங்கள் சமகாலத் தேசிய மாற்றங்களோடு இணைந்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன. பல்வேறு கட்டுரைகளும் பாவலர் முயற்சிகளை மதிப்பீடு செய்து கணிக்கும் நோக்கிலேயே எழுந்துள்ளன. ஈழத்து இலக்கிய வளர்ச்சியிற் பாவலர் பதித்துள்ள சுவடுகளையும், ஆளுமையையும் திறனாய்வு நோக்கிலே பல்வேறு அறிஞர்களும் அணுகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இம்மலரின் இரண்டாவது பகுதியாக ஆராய்ச்சிக் கட்டுரைகள் அமைந்துள்ளன. இப்பகுதியிலே ஈழத்தின் கலை இலக்கிய வரலாற்று மரபு சார்ந்த கட்டுரைகளே சிறப்பிடம் பெற்றுள்ளன. பாவலர் அவர்கள் மேற் போந்த துறைகளிற் கொண்டிருந்த ஈடுபாட்டின் காணிக்கையாக இது அமையும் என நம்புகின்றோம். ஈழத்து அறிஞர்களின் முயற்சிகளையும், கலை இலக்கியப் பண்பாட்டு நிலைகளையும் அறிய விரும்புவோருக்கு இம்மலர் உகந்த கையேடாக விளங்கும். இஃது இம்மலரின் தனிச்சிறப்பு எனலாம்.

பாவலர் நூற்றாண்டு விழாவை உரிய முறைப்படி கொண்டாடும் பணியில் முன்னின்று உழைத்தவை பழைய மாணவர் சங்கம், பெற்றூர் ஆசிரியர் சங்கம், இன்றைய ஆசிரிய, மாணவ சமூகம் ஆதியனவாகும். இம்மூன்று அமைப்புக்களினதும் இணைவில் உருவாகியதே பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாச்

சபை. அப்பெருமகனாரின் பன்முகப்பட்ட பணிகளை 1972இல் முழுமையாக நினைவுகூரும் நோக்கிலே சபையின் முயற்சியால் விழா முப்பெரும் பிரிவாக அமைக்கப்பட்டது.

கருத்தரங்கும் கவியரங்கும்

பாவலர் பணிகளை இளஞ் சந்ததியினர் நினைவு கொள்ளும் வகையில், கல்லூரி வழமையாகக் கொண் டாடும் நிறுவியவர் நினைவு நாளைச் சார்ந்து யூன் 22, 23, 24 ஆகிய திகதிகளிற் கருத்தரங்கம், கவி யரங்கம், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் ஆதியன நடைபெற்றன. இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகத் தமிழ்த்துறைத் தலைவர், **பேராசிரியர் சு. வித்தியானந்தன்** தொடக்கப் பேருரை நிகழ்த்தி விழா வினைக் கால்கோள் செய்தார். இரண்டாம் நாள் நிகழ்ச்சியிலே 'இந்துசாதன'ப் பத்திராதிபரும், பாவலரின் பணிகளில் ஈடுபாடு கொண்டவருமாகிய **திரு. நம. சிவப்பிரகாசம்** கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினர். **திரு. ச. ஆறுமுகராசா** தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கிற் செந்தமிழ்மணி பண்டிதர் **போன். கிருஷ்ணபிள்ளை**, இலக்கியச்செல்வர் **கனக. செந்திநாதன்**, **திரு. ஆ. சிவநேசச்செல்வன்**, **திரு. க. சோக்க லிங்கம்** ஆகியோர் கலந்துகொண்டனர். புலவர் **நா. சிவபாதசுந்தரன்** நினைவுரையாற்றினர்.

கவிஞர் **சே. இதிரேசர்பிள்ளை** தலைமையில் நடை பெற்ற **சொல்வளரக் கலைவளர்த்தான் செயல்** என்ற கவியரங்கிலே **மதுரகவி இ. நாகராஜன்**, கவிஞர் **நா. ஆறுமுகம்**, புலவர் **ம. பார்வதிநாதசிவம்**, **வித்துவான் சி. ஆறுமுகம்**, கவிஞர் **வி. சுந்தவனம்** ஆகியோர் கலந்து கொண்டனர். **திரு. த சண்முகசுந்தரம்** எழுதிய **அறிவு கொளுத்திய அமரர்** என்ற நாடகத்தினைக் கல்லூரி ஆசிரியர்கள் நடித்தனர். பாவலரின் பல்துறை ஆற்றல்களையும் நினைவுகொள்ளும் வகையில் இந் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

சிலை நிறுவுதல்

விழாச் சபையினரின் ஒரேமுகமான முடிவுக் கேற்ப பாவலருக்குச் சிலைவடிக்கும் பொறுப்பை, மகாஜனாவின் பழைய மாணவரான **அளவையூர்**

கலைஞர் செ. சிவப்பிரகாசம் ஏற்றுக்கொண்டார். அவருடைய அயரா முயற்சியினாற் பாவலருடைய உருவம் சிலையாக அமைந்தது. சிலை திறந்துவைக்கும் வைபவம் கல்லூரி முன்றிலிலே ஒக்டோபர் 20ஆம் திகதி திருமறையோதலுடன் ஆரம்பமாகியது. எமது கல்லூரியின் பழைய மாணவரும் சுகாதார அமைச்சின் முன்னைநாள் நிரந்தரச் செயலாளருமாகிய **திரு. கு. பாலசிங்கம்** சிலையைத் திறந்துவைத்தார். பாவலரின் புதல்வர்களாகிய, **திரு. தே. து. ஜயரத்தினம்,** திரு. தே. து. தர்மராஜா ஆகியோர் விழாவுக்குப் பொலிவூட்டினர். பாவலரின் முதன் மாணாக்கருள் ஒருவராகிய மண்வள நிபுணர் **திரு. சி. கந்தையா** நினைவஞ்சலியுரையாற்றினர். பாவலரின் வானுயர் தோற்றத்தினை உள்ளக் கிழியில் நிறுத்திச் சிலை வடித்த கலைஞர் செ. சிவப்பிரகாசம் அவர்களுக்குச் **சிற்பக் கலாநிதி** என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. வித்தியோதயப் பல்கலைக் கழகத் தமிழ், திராவிடவியற்றுறை முதல்வர் **கலாநிதி கா. சிவத்தம்பி,** இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்புவளாகச் சிரேட்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி **க. கைலாசபதி** ஆகியோர் விழாவிற் கலந்துகொண்டு முறையே, **பாவலரின் சமூகக் கருத்துக்கள், பாவலரும் காலத்தின் குரலும்** ஆகிய தலைப்புக்களிற் சிறப்புப் பேருரை யாற்றினர்.

மலர் வெளியீடு

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் செயலாண்மையை நினைவுகூரும் வகையில் உருவாகிய இம் மலர் இத்தினத்தில் முன்னெடியாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதன் முதற் பிரதியைப் பாவலரின் புதல்வரும், இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டுப்பெத்தை வளாகத் துணைப் பதிவாளருமாகிய திரு. தே து. தர்மராஜா பெற்றுக்கொண்டார்.

நன்றி

நூற்றாண்டு விழாச் சிறப்புற உழைத்த விழாச் சபையினர் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றி உரியது. விழாச் சபையின் காப்பாளராக விளங்கிய திரு. தே. து. ஜயரத்தினம் எமக்கு வேண்டிய ஆலோசனைகளையும் உரிய இடத்தில் வழங்கி எம்மை வழிப்படுத்தினர். விழாச் சபையை அமைத்தஞான்று

அதிபராக விளங்கிய திரு. மா. மகாதேவன் தலைமை தாங்கி எம்மை வழிநடாத்திச் சென்றார். அவர் இடம் மாறிப் போயபின்னர் அதிபராக அமைந்த திரு. பொ. ச. குமாரசுவாமி மிகவும் ஊக்கத்துடன் பணிபுரிந்து விழாச் சிறப்புற அமைய வழிகோலினார். அவ்வண்ணமே துணையதிபர் திரு. ஆ. இராமசாமி நன்கு உழைத்து விழாவை வெற்றி காணச் செய்தனர். பெற்றார் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. செ. வரதராசப்பெருமாள், பழைய மாணவர் சங்க இணைச் செயலாளர்கள் திருவாளர்கள்: த. இலங்கநேசன், ச. விநாயகரத்தினம், விழாச் சபைப் பொருளாளர் த. பொன்னம்பலம் ஆதியோர் அயராது உழைத்தனர். இவர்கள் யாவரும் விழாவின் உயிர்நாடிகள்.

கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினர் நிதி திரட்டுவதில் எமக்குப் பேருதவி புரிந்தனர். அவர்களுக்கு எமது நன்றிகள். இம் முயற்சியில் கொழும்புக் கிளையைச் சேர்ந்த திருவாளர்கள்: எஸ். சிவபாஸ்கரன், எஸ். ஏ. சிவபாதம், சு. வேற்றிவேலாயுதம், சே. சிவபாலன் ஆதியோருக்குச் சிறப்பாக நன்றி கூறும் கடப்பாடு எமக்கு உண்டு.

இம்மலர் சிறப்புற அமையக் கட்டுரைகள் வழங்கிய அறிஞர்களுக்கும், அட்டைப் படத்தை அழகுற வரைந்த ஓவியர் மூர்த்திக்கும், பட அச்சுக்கள் ஆக்கி வழங்கிய கொழும்பு ஸ்ரூடியோ அதிபரும், எமது பழைய மாணவருமான திரு. அ. குகதாசன் அவர்கள், ஞானம்ஸ் ஸ்ரூடியோ அதிபர், மலரை அழகுற அச்சிட்டு வெளியிடுவதில் ஒத்துழைத்த திருமகள் அழுத்தக அதிபர் திரு. மு. சபாரத்தினம், அச்சகப் பணி முதல்வர் திரு. செ. சின்னத்துரை ஆகியோருக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையோம்.

— மலர்க் குழு

உலகறியச் செய்தல் கடன்

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.'

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக, வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து, பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் பெருமை பெற, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களாகத் திகழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் பெரியார்களின் வரிசையில் வைத்துப் போற்றுதற்குரியவர் தெல்லியூர்ப் **பாவலர் தே. அ. துரையப்பாபிள்ளை** அவர்கள். அவர் ஆற்றிய செயற்கரிய சேவைகளினால் **நாவலர் பேருமான், சேர் பொன். இராமநாதன்** போன்றோர் வரிசையில் வைத்து எம் சந்ததியினால் நினைவுகூர்ந்து போற்றப்படற்குரியவ ராவர்.

அவரது பிறந்த நூற்றாண்டு விழா நடைபெறும் இவ்வேளையில் அவரது சேவைகளின் மூலம் சமூகம் அடைந்துள்ள பயன்களை மதிப்பீடு செய்வ துடன் அவற்றை மேன்மேலும் விருத்தி செய்வதற்கு அவர் வழிநின்று உழைப்போர்க்குப் புதிய உத்வேகத்தையும் உணர்ச்சியினையும் ஊட்டும் நோக்குடன் இம்மலர் வெளியிடப்படுகிறது.

பாவலரின் சேவைகளில் மேலானதும், போற்றுதற்குரியதும், நிலைத்து நிற்பதும் அவர் அமைத்த **மகாஜனக் கல்லூரி** யாகும். கல்லூரியுடன் தொடர்புடையோரனைவரும் அதன் வருங்கால வளர்ச்சிக்கு உழைப்பதே பாவலருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும். மகாஜனக் கல்லூரி ஈழத்தின் முன்னணிக் கல்லூரிகளுள் ஒன்றாக மதிக்கப்படுகிறது. கல்லூரி அறுபத்தி ராண்டுகளாக உன்னத வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இதற்குப் பாவல ரின் மூத்த புதல்வரும், கல்லூரியின் முன்னாள் அதிபருமான **தே. து. ஜயரத்தினம்** அவர்கள் ஆற்றிய தொண்டு அளப்பரியது. பாடசாலையின் காலத்துக்கேற்ற தேவைகளையொட்டிப் பல திட்டங்கள் அவர்களால் தீட்டப்பட்டுள்ளன. நவீன விஞ்ஞான ஆய்கூடம், விளை யாட்டிடம், தொழிற்றுறைப் பாடங்களுக்கான வாய்ப்புக்கள் என்பன அவை. அவற்றைத் தொடர்ந்து நிறைவேற்ற நாம் சித்தமாயுள்ளோம். அவர்களுக்குப்பின் இப்பணிகளைத் தொடர்ந்து நடாத்தும் வாய்ப்பினைப் பெற்ற யான் பாவலரின் பிறந்த நூற்றாண்டு விழா வேளையில் அத்திட்டங் களை எம்மவர் மனக்கண்முன் நிலைநிறுத்துகிறேன். இதற்கான முயற்சிகளை

விரைவில் மேற்கொள்ளவுள்ளேன். அனைவரையும் சந்தித்து ஒத்துழைப்புத் தருமாறு வேண்ட எண்ணியுள்ளேன். பாவலருக்கு நன்றிக்கடனை ஆக்க பூர்வமான வழியிற் செலுத்துவோமாக.

பாவலர் துரையப்பாபிள்ளை கல்விக் கலைஞன்; சமூகத் தொண்டன்; அவர் ஒரு பிரதேசத்துக்கு மட்டுமே உரியவர் என்று கருதுவோருமுளர். இது முழுமையான மதிப்பீடன்று. பாவலர் இலக்கிய உலகிலே நவீன இலக்கிய **வீடிவெள்ளியாகவும் இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய முதல்வருள் ஒருவராக வும்** திகழ்ந்தார். அவர் தாம் வாழ்ந்த காலத்தில் தம் தேசத்தின் நிலையை, தம்மைச் சூழ்ந்திருந்த சமுதாயத்தின் போக்கினைப் பற்றியெல்லாம் சிந்தித் தார்; அவற்றின் நலனுக்காகச் செயலாற்றினார். அவரது சிந்தனைகள் சிறந்த பாடல்களாக ஊற்றெடுத்துப் பாய்ந்தன. அவரது **சிவமணிமாலை** பத்திக் கவிதைகளைக் கொண்டது. அக் கவிதைகள் எம்மை ஆண்டவ னிடம் ஆற்றுப்படுத்துபவை. யாழ்ப்பாண **சுவதேசக் கும்மியும், எங்கள் தேச நிலையும்** சமூகத்தின் சீர்கேடுகளை இடித்துரைப்பவை. எமது நாட்டிற் படிப்படியாக உருவாகி வந்த ஆங்கில - இலங்கை மரபு ஏற்படுத்திய அந்நிய மோகம், அடிமை வாழ்வு, விதேசியப் போக்கு, போலித்தனம் ஆகிய வற்றை அம்பலப்படுத்தி அவற்றிலிருந்து சமுதாயத்தை விடுதலைப்படுத்த எழுப்பிய குரலே அவரது கவிதைகள். **இதோபதேச கீதரச மஞ்சரி, சகல குண சம்பன்னன்** ஆகியவை முறையே இசைத்தமிழ், நாடகத் தமிழ்த் துறைகளில் பாவலரின் ஆற்றலை எடுத்தியம்புவன. பாவலரின் இலக்கியப் பணியை, அவரது மறுமலர்ச்சிச் சிந்தனைகளின் சிறப்பியல்புகளை உலகறியச் செய்வது எமது தலையாய கடனுகும். பாவலர் நூற்றாண்டு விழா மலர் இப் பணியைச் சிறப்புறச் செய்துள்ளது என்பது ஒருதலை.

பாவலரின் உருவச்சிலையை அமைப்பதும் இவ் விழா மலரினை வெளி யிடுவதும் பெருமுயற்சிகளாக அமைந்தன. இதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்ட சில நாட்களின் பின் கல்லூரி அதிபராகிய யான், விழாச்சபைத் தலைவராகி, பொறுப்பினை ஏற்றுத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியவனானேன். கல்லூரியின் பழைய மாணவர், பெற்றோர், ஆசிரியர், மாணவர், பாவலரின் சுற்றத்தார், தமிழ் அன்பர்கள் பொருளுதவி முத லாகப் பல்வேறு வகைகளில் உளமுவந்து உதவினர். அவர்களால் விழாச் சிறப்புப் பெற்றது. அனைவருக்கும் விழாச் சபையின் சார்பிலும் கல்லூரியின் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொ. ச. குமாரசுவாமி
தலைவர்
விழாச் சபை

தெல்லிப்பழை,
10-10-72.

எனது நம்பிக்கை.....

பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையவர்களின் பிறந்த நூற்றாண்டு விழா நினைவுக்காக வெளியிடப்படும் இந்த மலரிலே எனது சில கருத்துக்களும் இடம்பெறுகின்றமை குறித்து யான் பெரிதும் மகிழ்கின்றேன். பிள்ளையவர்கள் வாழ்ந்த காலத்திலே அவருடைய சூழலிலுள்ள சைவ மாணவர்கள் தக்க கல்வி பெறமுடியாமலிருந்தனர். அவர்களின் நலனுக்காகப் பிள்ளையவர்கள் ஓர் ஆங்கில பாடசாலையை நிறுவினார்கள். அக்காலத்தில் மேனாட்டுக் கல்விக் கொள்கைகளுக்கு ஆளாகிச் சைவ மாணவர்கள் தமது மத கலாசாரப் பண்பாடுகளை இழந்து நெறிகெட்டலைவது கண்ட பிள்ளையவர்களது உள்ளம் கொதித்தெழுந்தது. சமூகத்துக்குத் தாம் செய்யவேண்டிய வொரு கடமை இதுவாகும் என்றுணர்ந்தே அவர் இப்பாடசாலையை நிறுவினர்.

செய்வன திருந்தச் செய்யும் திடமும், வெறும் சொல்லளவில் மட்டும் நில்லாத செயல்வீரமும் பிள்ளையவர்களிடம் இயல்பாய் அமைந்தவை.

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

என அமைந்த திருக்குறளுக்கு இலக்கியமாய் வாழ்ந்தவர் அவர். ஒன்றைச் செய்வதெனத் தீர்மானித்துவிட்டாராலல் அதனைச் செய்துமுடிக்கும் வரையும் அயராதுழைக்கும் அருந்திறல் அவரிடம் இருந்தது. மனந் தளர்தலும் மெலிதலும் அவரிடம் இல்லை. தாம் தனித்து நின்று உருவாக்கிய கலைக்கழகத்தை உறுதியாக நிலைபெறச் செய்வதிலும் உயர்வு நோக்கி முன்னேற்றிச் செல்வதிலும் அவர் பட்ட இன்னல்களோ அனந்தம். இங்கிலாந்து நாட்டின் அரசியல் ஆதிக்கத்திலுல் தமது மத சுதந்திரமிழந்து நலிந்த அந்நாட்டு மக்களின் ஒரு பகுதியினர் தமக்கென ஒரு சுதந்திர நாட்டை ஆக்கிக்கொள்ளவேண்டுமென்ற மன உறுதியோடு 'மே பிளவர்' என்ற கப்பலில் அமெரிக்கா சென்று அந்நாட்டில், எத்தனையோ அல்லலுக்காளாகித் தம்மை நிலைநிறுத்திக்கொண்டார்கள் என்பது சரித்திரத்திலே காணப்படும் ஒரு தீர நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சிக்கு, திரு. துரையப்பா பிள்ளையவர்கள் மகாஜனக் கல்லூரியை நிறுவி நிலைப்படுத்திய செயலை ஒப்பிட்டுக் கூறுவதில் யாதும் தவறில்லை. அத்தகையவொரு சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வெற்றிச் சின்னமே மகாஜனக் கல்லூரியாகும்.

தாம் நிறுவிய கல்லூரியின் வளர்ச்சி குறித்து, பிள்ளையவர்கள் மேற்கொண்ட செயல்களுக்கெல்லாம், கிறித்தவ திருச்சபையாரின் பொருமையும், அரசாங்கத்தாரின் அசிரத்தையும், வேண்டா வெறுப்பாக வாழ்ந்த பொதுமக்களின் மனோபாவமும் மாபெருந் தடைகளாக நின்று

வழிமறித்தன. இவற்றுல் அவர் உறுதி தளர்ந்திலர். முன்வைத்த காலைப் பின்வைத்திலர். மனத்திடத்தோடு எதிர்த்து நின்று போராடி வெற்றியுங் கண்டார். ஆனல், இந்த ஓய்வில்லாத போராட்டங்கள் பிள்ளை யவர்களது கட்டுறுதி வாய்ந்த உடலையும், கலங்காத மனேநிலையையும் பெரிதும் தாக்கிவிட்டன. அதனல், பதினேழு வயதே நிரம்பி இளமைச் செவ்வியுடன் மலர்ந்து நின்ற தமதரும் கண்மணியாகிய மகாஜனக் கல்லூரியின் நலமிக்க வளமார்ந்த பெருநிலையைக் கண்டு களிக்கும் நல்வாய்ப்பினை அவர் பெறமுடியாதவரானர். ஆயினும் தமக்குப் பின், மகாஜனக் கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லும் சிறந்த வாரிசுகளாக இருவரைப் பயிற்றி நியமித்துவிட்டே அவர் அகன்றார். அவர் களுள் ஒருவர் பிள்ளையவர்களின் மிக நெருக்கமான உறவினரும், பிள்ளை யவர்களுக்குப் பின் மகாஜனக் கல்லூரியின் அதிபராகி நின்று வழிநடத்திய வருமாகிய திரு. கா. சின்னப்பா அவர்கள் ஆவர். மற்றவர் பாவலரது முதற் புதல்வராய், திரு. சின்னப்பா அவர்களின் பின் கல்லூரித் தலைமைப் பதவியை ஏற்றுக் கல்லூரியை இன்றுள்ள மகோந்நத நிலைக்கு உயர்த்தித் தமது தந்தையாரது அபிலாஷைகளையெல்லாம் பூர்த்திசெய்து அரும்பணித் திறம்புரிந்த திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள் ஆவர்.

திரு. துரையப்பாபிள்ளையவர்கள் மகாஜனக் கல்லூரியை நிறுவிய காரணத்தினலேயே பெருமைக்குரியவரானர் என்பது மக்களுட் பெரும்பா லோரது கணிப்பாகும். அவரிடத்தே திகழ்ந்த பலதுறை மேதா விலாசங் களைப் பலர் அறியார். பிள்ளையவர்கள் மிகச் சிறந்த சமூகப் புரட்சி யாளர்; துணிவுடைய சமய சீர்திருத்தவாதி; தமிழகத்து சுப்பிரமணிய பாரதியார் போன்று, தேசிய உணர்வு தூண்டும் பல கவிதைகளை ஆக்கிச் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய சிறந்த பெருங் கவிஞர். இத்தகைய பேரியல்புகளும், செயலாற்றல்களும் வாய்ந்த பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளையவர்களின் பெருமாண்பை யாவரும் உணர்ந்துகொள்ள இந்த மலர் பெரிதும் உதவும் என்பது எனது நம்பிக்கை.

மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை,
12-10-72.

ஆ. இராமசாமி
துணைத் தலைவர்
விழாச் சபை

பாவலர்
தெ. அ. துரையப்பாபிள்ளை
நூற்றாண்டு விழாச் சபை

பெருந்தலைவர்:

தெ. து. ஜயரத்தினம், B. A. (Lond), J. P.
முன்னாள் அதிபர்
மகாஜனக் கல்லூரி

தலைவர்:

மா. மகாதேவன்,*
B. A. Hons. (Lond.), B. A. (Cey.), Dip.-in-Ed. (Cey.)
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி

பொ. ச. குமாரசுவாமி,
B. A. (Cey.), Dip.-in-Ed. (Cey.)
அதிபர்
மகாஜனக் கல்லூரி

துணைத்தலைவர்:

ஆ. இராமசாமி, B. A. (Lond.), Dip.-in-Ed. (Cey.)
உப அதிபர்
மகாஜனக் கல்லூரி

இணைச்செயலாளர்கள்:

மயிலங்கூடலூர் பி. நடராசன்
ஆசிரியர்
மகாஜனக் கல்லூரி

ஆ. சிவநேசச்செல்வன், B. A. Hons. (Cey.)
தமிழ் விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி

பொருளாளர்:

த. பொன்னம்பலம்
ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்
நெடுஞ்சாலைத் திணைக்களம்

* முன்னாள் அதிபர், மகாஜனக் கல்லூரி. 6-6-72 வரை தலைவராயிருந்தார்.

செயற்குழு

வ. சரவணமுத்து, J. P
துணைத்தலைவர், பழைய மாணவர் சங்கம்

க. வைத்திலிங்கம்
துணைத்தலைவர், பெற்றோர்–ஆசிரியர் சங்கம்

தி. அருமைநாயகம்
துணைத்தலைவர், பெ. ஆ. சங்கம்

செ. வரதராசப்பெருமாள்
செயலாளர், பெ. ஆ. சங்கம்
பொருளாளர், ப. மா. சங்கம்

த. இலங்காநேசன், B. Com. (Cey.), C. A. S.
இணைச்செயலாளர், ப. மா. சங்கம்

ச. விநாயகரத்தினம்
இணைச்செயலாளர், ப. மா. சங்கம்

வ. மகாலிங்கம்
பொருளாளர், பெ. ஆ. சங்கம்

சு. கனகசபை
துணைச்செயலாளர், பெ. ஆ. சங்கம்

க. சச்சிதானந்தம், C. A. S.

பொ. கனகசபாபதி, B. Sc.

இராஜ. சண்முகரத்தினம், B. A.

ந. நடராசா

சு. தம்பிப்பிள்ளை

ஆ. ஞா. சேகரம்

அ. இரத்தினம், B. A. (Cey.)

ரீ. எஸ். அப்புத்துரை

த. சண்முகசுந்தரம், B. A. (Cey.), Dip. - in-Ed.

செ. கதிரேசர்பிள்ளை

புலவர் நா. சிவபாதசுந்தரன்

வே. சிவசுப்பிரமணியம், B. Sc. (Cey.)

கு. ச. இரத்தினேஸ்வர ஐயர், B. A.

சே. ஐ. சத்தியோசாதம், B. Sc.

வே. தனபாலசிங்கம்

த. பூ. முருகையா

பொருளடக்கம்

பக்கம்

I. நுழைவாயிலில்..... iii

II. உலகறியச் செய்தல் கடன் vii
விழாச்சபைத் தலைவர்

III. எனது நம்பிக்கை..... ix
விழாச்சபைத் துணைத்தலைவர்

IV. பண்டிதமணி ஆசியுரை xv

V. பாவலர் வாழ்க்கையில்.. ..... நிகழ்ச்சிகள் சில xvi

பகுதி I

வாழ்க்கையும் இலக்கியப் பணியும்

1. நீங்காத எனது நினைவுகள் 1
சி. கந்தையா

2. உள்ளம் நிறைந்த உருவம் 5
தெ. து. ஜயரத்தினம்

3. எனது தந்தையாரின் ஞாபகங்கள் ... 11
தெ. து. தர்மராஜா

4. துரையப்பாபிள்ளையின் வாழ்க்கையும் சமகாலமும் 15
த. வேலாயுதபிள்ளை

5. துரையப்பாபிள்ளையின் சமூக நோக்கு ... 34
பேராசிரியர் சு. வித்தியானந்தன்

6. துரையப்பாபிள்ளையும் தேசியப் பின்னணியும் ... 37
கலாநிதி க. கைலாசபதி

7. இதோபதேச மஞ்சரியின் சமூகத் தேவை ... 44
சி. தில்லைநாதன்

8. பாவலர் துரையப்பாபிள்ளையின்
சகலகுணசம்பன்னன் பற்றிய ஓர் ஆய்வு ... 46
கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி

9. பாவலர் கையாண்ட பா வடிவங்கள் ... 60
இ. முருகையன்

10. துரையப்பாபிள்ளை — ஒரு கவிஞர் ... 64
செ. வேலாயுதபிள்ளை

11. மானங் காத்தல் 68
எஸ். ஹன்டி பேரின்பநாயகம்

12. பாவலர் துரையப்பாபிள்ளையின் பொருளாதார நோக்கு 70
க. சொக்கலிக்கம்

பக்கம்

13. பாவலரது ஆத்ம சமர்ப்பணம் — சிவமணிமாலை ... 77
செ. கதிரேசர்பிள்ளை

14. மகாஜனக் கல்லூரியை நிறுவிய தெ. அ. துரையப்பாபிள்ளை 83
கு. பாலசிங்கம்

15. இனிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? ... 84
பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை

16. சிந்தனைச் சோலையுள் சிவமணிமாலை ... 86
கனக. செந்திநாதன்

17. புலமைக் குரல்கள் 89
த. சண்முகசுந்தரம்

18. சிந்தையைத் தூண்டும் சிந்தனைச் சோலை ... 93
புலவர் நா. சிவபாதசுந்தரனர்

19. Public worker Par Excellence ... 96
R. N. Sivapirahasam

பகுதி II

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

20. கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள
சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு 1
கலாநிதி கா. இந்திரபாலா

21. கோணேஸ்வரம் கோவிலின் தோற்றக் காலம் எது? 10
செ. குணசிங்கம்

22. ஈழத்துத் தொல்பொருளியலும் தமிழியலும் ... 31
வி. சிவசாமி

23. கிராமியக் கலைகளின் மறுமலர்ச்சி ... 40
சி. மௌனகுரு

24. ஈழத்துத் தமிழ் நாவல்களில் வழக்குத் தமிழின் ஆரம்பம் 45
க. சித்திரலேகா

25. கல்வி நோக்கில் கிராமிய இலக்கியங்கள் ... 51
சபா. ஜெயராசா

26. ஆங்கிலேயராட்சியிலே யாழ்ப்பாணத்தில்
ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சி ... 55
ச. அம்பிகைபாகன்

27. மறுமலர்ச்சிக் குழுவினரும் ஈழத்துக் கவிதையும் ... 65
செ. யோகராசா

28. ஈழநாட்டுத் தமிழும் செட்டிநாட்டுத் தமிழும் ... 68
கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை

29. நொறுங்குண்ட இருதயம்—கதையும் கதைப் பண்பும் 73
ஆ. சிவநேசச்செல்வன்

30. The Tamil Inscription from Māṅkaṇai ... 81
Dr. S. Pathmanathan

சித்தாந்த சாகரம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

வழங்கிய

ஆசியுரை

'தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்'

என்ற பொய்யா மொழியில், 'தக்கார்' என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வாக்குக் இலக்கணமாய்ப் புகழுடம்பில் நிலைத்து விளங்குபவர்கள், திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள்.

அவர்களின் கல்வித்தாபன வளர்ச்சியும், அவ்வளர்ச்சிக்கு அச்சாணியாய் அவர்களின் சற்புத்திரர் தம்மை அர்ப்பணித்துக்கொண்டதும், பிள்ளை அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களாய், அவர்களின் தகுதிப்பாட்டுக்கு விளக்கந் தருபவை. எச்சம் - எஞ்சியிருப்பது.

சென்ற நூற்றாண்டில், நீதி என்ற வானைக் கையிலேந்தி, சைவக் குழந்தைகள் தம் சமயத்தை அறிதற்குச் சந்தர்ப்பங் கிடைக்க ஓட்டாது, அம்மட்டோ! அக்குழந்தைகள் தம் சமயத்தில் நம்பிக்கையீனம் கொள்ளத் தக்க வகையில், மற்றொரு சமயத்தைத் திணிக்கும் அநீதியாகிய புல்லுருவிகளை வெட்டிக் களைந்து வீரகர்ச்சனை செய்தவர்கள் நாவலர் பெருமான் அவர்கள்.

நாவலர் பெருமானின் நீதிவழியைத் தொடர்ந்தவர்கள் மிகமிகச் சிலர். அந்தச் சிலரில் ஒருவராய், சிரேட்டராய் விளங்கியவர்கள் துரையப்பாபிள்ளை அவர்கள். பிள்ளை அவர்களுக்குச் சைவ உலகு செய்யவேண்டிய நன்றிக் கடன் மிகப் பெரிது. இப்பொழுது பிள்ளை அவர்களுக்கு எடுக்கும் நூற்றாண்டு விழா நன்றிக் கடனின் ஒரு சிறு சின்னமேயாம்.

நூற்றாண்டு விழா நல்ல முறையில் அமைந்து, பிள்ளை அவர்களின் புகழுடம்பை நிலைக்கச் செய்து, அவர்கள் செய்துவைத்த நன்மைகளை நினைவு கூர்வித்து, வேண்டிய நலன்களை நல்குவதாக என்று திருவருளைப் பிரார்த்திப்போமாக.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

சி. கணபதிப்பிள்ளை

பாவலரின் வாழ்க்கையில் .....
முக்கிய நிகழ்ச்சிகள் சில

1872-10-12 : பாவலர் பிறப்பு.
தந்தையார் : கச்சேரி முதலியார் அருளம்பலம்.
தாயார் : தங்கம்மா.

1880 : ஆரம்பக் கல்விபெறத் தெல்லிப்பழை ஆங்கில வித்தியாலயத்திற் சேர்ந்தார்.

1885 : தந்தையார் இயற்கையெய்தினர்.

1888 : மேற்படிப்புக்காக வட்டுக்கோட்டைச் செமினரி (யாழ்ப்பாணக் கல்லூரி) யிற் சேர்ந்தமை.
அதிபர் : டபிள்யூ. ஈ. ஹச்கொக் ; தமிழாசிரியர் ஆணல்டு சதாசிவம்பிள்ளை பாவலரின் தமிழறிவைக் கண்டு வியந்தார்.
தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம் என்பவற்றை ஆர்வத்துடன் கற்றார்.

1890 : கேம்பிரிட்ஜ் உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் சித்தியெய்தி அரசாங்க சேவையிற் சேர்ந்தார்.

1892 : நண்பர்கள், உறவினர்கள் விருப்பத்திற்கு மாறுக அரசாங்கப் பணியைத் துறந்தார்.
பாணந்துறை தூய யோவான் கல்லூரி ஆசிரியராகப் பதவியேற்றார்.
அதிபர்: சிறில் ஏ. ஜான்ஸ், சீர்திருத்த இயக்கங்கள் பாவலரைக் கவர்ந்தன.

1894 : பாணந்துறையில் வகித்த ஆசிரியர் பதவியைத் துறந்தார்.
இந்திய விடுதலை இயக்கங்களில் நாட்டம் கொண்டார்.

1895 : பம்பாய் மாநிலத்திலுள்ள கோலாப்பூர் மிசன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியரானார்.
அறிவியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களைத் திறம்படப் பயிற்றினர்.
நிலகர், கோகலே, நவுரோஜி முதலியோரின் தேசிய இயக்கங்கள் இவரின் கவனத்தை ஈர்த்தன.

1897 : பம்பாய் மாநிலத்திலுள்ள பெல்காம் மிசன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியரானார்.

1898 : பம்பாயில் பிளேக் நோய் பரவியது.
தாயாரின் வேண்டுகோட்படி இலங்கை திரும்பினர்.
தெல்லிப்பழை ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.
தலைமையாசிரியர் : பள்ளி உரிமையாளரான திரு. செல்லப்பா.
வடபகுதிப் புகையிரதப் பாதை திறக்கப்பட்டது.
ஆள்பதி சேர் உவெஸ்ற் றிட்ஜ்வே அவர்களது சேவையைப் புகழ்ந்து பாமாலை தொடுத்துப் புகழ்பெற்றார்.

1899 : ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார்.

1900 : பாவலர் கற்பித்த பாடசாலை அமெரிக்கமிசனரிகளால் பொறுப்பேற்கப் பட்டுத் தெல்லிப்பழைச் சந்திக்கருகில் அமைக்கப்பட்ட நாளில் அதன் தலைமையாசிரியரானார்.

சுவாமி சங்கரதாஸ் நாடகக் குழு இலங்கை வருகை. நாடகங்களில் ஆர்வம் கொண்டார்.

மறுமலர்ச்சித் தமிழிலக்கியத்தில் ஆர்வம்கொண்ட சி. பி. குமாரகுலசிங்கியின் நட்புத் தொடர்பு.

1901 : இலகு தமிழில் கீத ரச மஞ்சரி என்னும் செந்தமிழ்ப் பாமாலையை அக்டோபர் பதினேழாந் திகதி வெளியிட்டார்.

திறமையைக் கண்ட மிசன் உயர்பீடம் உதயதாரகை ஆசிரியராக்கியது.

1904 : கல்கத்தா பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வு வகுப்பை ஆரம்பித்துத் திறம்படக் கற்பித்தார்.

இளைஞர் சமுதாய வளர்ச்சி குறித்து மாணவர் சஞ்சிகை என்னும் ஏட்டினைத் தொடங்கி ஆசிரியர்ப் பொறுப்பேற்றார்.

1905 : சகல குண சம்பன்னன் என்னும் நாடகத்தை எழுதி நெறிப்படுத்தி மேடையேற்றினர்.

1906 : யூன் இருபத்துமூன்றாந் திகதி உதயமான உபாத்திமார் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

12-4-1906, 14-6-1906 ஆகிய நாட்களில் வெளியான 'உதயதாரகை'யில் ஆசிரியர்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆசிரியர் சங்கம் அவசியமென எழுதினர்.

ஆகஸ்ட் பதின்மூன்றில் போக்குவரத்துச் சட்டத்தை எதிர்த்து 5000 மாட்டுவண்டிக்காரர் வேலைநிறுத்தம். 'உதயதாரகை'யில் இதுபற்றி நன்கு விமர்சித்தார்.

1907 : கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் 'சிலோன் நாசனல் றிவியூ' ஏட்டில் பாவலரின் கட்டுரைகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் : அன்றும் இன்றும் என்ற கட்டுரை சிறப்புமிக்கது.

1909 : ந. சபாபதிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரி தையல்நாயகத்தை மணம் புரிந்தார்.

1910-10-14 : அமெரிக்க மிசன் பாடசாலையுடன் தொடர்பு முறிந்தது.
தலைமையாசிரியர் பதவியைத் துறந்தார்.

வீட்டில் மகாஜன உயர்நிலைப் பள்ளிக்குக் கால்கோள் விழா எடுத்தார்.

நா. சங்கரப்பிள்ளை, க. இலங்கைநாயகம் ஆகியோர் மிசன் பாடசாலையிலிருந்து விலகி வந்து இவரின் பாடசாலையிற் பணியாற்றினர்.

புதல்வி இரத்தினம்மா பிறப்பு.

1911-12-13 : தெல்லிப்பழை கூட்டுறவுக் கடன் சங்கத்தை ஆரம்பித்தார் ;
முதற் செயலாளரானார்.

1912 : கல்லூரி இப்போது அமைந்துள்ள இடத்தில் புதிய கட்டிடத்தை நிறுவினர்.

மதுவரிக் கட்டளைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. மதுச்சாலைகள் பெருகின. நாடெங்கும் மதுவிலக்குப் பிரசாரம். இவரும் தீவிரமாக ஈடுபட்டார். இவரது மதுவிலக்குப் பாடல்கள் பரவியமை.

1913 : மூத்த புதல்வர் பிறப்பு.

எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்ற துடிப்புடன் இருந்த இவர் மகனுக்கு *ஜயரத்தினம் எனப் பெயர் சூட்டினர்.

யூன் இருபதில் இராமநாதன் கல்லூரி ஆரம்பம் ; பெண்கள் உயர்வுக்கு வழி எனப் பாராட்டினர்.

---

* இத்தொகுப்புக்குரிய மூலங்களிற் பல இவரால் வழங்கப்பட்டன.

1914 : மகாஜனவை உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதியுமாறு வேண்டுகோள். சட்ட நிரூபண சபை உறுப்பினர் சேர் அ. கனகசபை முயற்சி. கல்விப் பணிப்பாளர் காவாட் 'இரங்கவில்லை.'

1915 : பொதுத் தேர்வுக்குத் தோற்ற மகாஜன மாணவர்களுக்கு அனுமதி இல்லை. எனவே, பேரறிஞர்கள் பலரைக்கொண்ட தேர்வுச் சபையை நிறுவினர்.

1916 : பொதுத் தேர்வுகளுக்குத் தோற்றும் அனுமதி வழங்கப்பட்டது; தேர்வில் சிறந்த பெறுபேறுகள்.

1918 : இளைய புதல்வர் தர்மராசா பிறப்பு.
25 அங்குலப் பெருமழை. பாடசாலைக் கட்டிடம் தரைமட்டமானது.
மீண்டும் வீட்டிற் பாடசாலை. ஈ. எஸ். எல். சி. வகுப்பு ஆரம்பம்.

1919 : T வடிவில் பாடசாலைப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது.
1919-5-27இல் உதவி நன்கொடை வழங்கப்பட்டது.
கௌரவ கே. பாலசிங்கம் தந்திமூலம் அறிவித்தார்.
1918ஆம் ஆண்டுக்கான நன்கொடையாக ரூபா 1473/- கிடைத்தது.
தாயார் இயற்கையெய்தினர்.
தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின் முகாமையாளராகப் பாவலர் பொறுப்பேற்றமை.

1921-8-17 : இந்துசாதன ஆங்கில உதவிப் பத்திராதிபர் பதவிக்கு நியமனம் பெற்றார்.

1922 : யாழ்ப்பாணத்தில் தமிழ் மாநாடு (27-12-1922) முதலாம் நாள் — சேர் அ. கனகசபை தலைவர். பாவலரது பாடல்கள் மாநாட்டில் பாடப் பட்டன. இரண்டாம் நாள் — வைத்திலிங்கம் துரைசுவாமி தலைமையில் தமிழ்க் கல்வியின் தற்கால நிலை என்னும் பொருளில் சொற்பொழிவு.
தெல்லிப்பழை சைவ வித்தியாசாலையைக் கையேற்றார்.
யாழ். ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் உதயம். இவர் செயற் குழு உறுப்பினரானார்.

1924-6 : 'இந்துசாதன' ஆங்கிலப் பத்திராதிபராக நியமனம். 1925 வரை பணி.

1925 : சிவதீட்சை பெறல்.

1926 : சரஸ்வதி தமிழ் வித்தியாசாலையை ஆரம்பித்தார்.
மகாஜன உயர்நிலைப் பள்ளியில் அட்சர, கேத்திர கணிதங்களைக் கற்பிக்க அநுமதி.

1927 : சிவமணி மாலை என்னும் பிரபந்தத்தை யாத்தார்.
மகாத்மா காந்தி இலங்கை வருதல்.
வரவேற்புச் சபையில் முக்கிய உறுப்பினராக இவர் பணியாற்றினார்.

1929-6-24 : அமரத்துவம் எய்தியமை.

பாவலர் தமக்கிட்டுக்கொண்ட ஆங்கிலப் புனைபெயர்கள் :

Jaffna Spectator
Jaffna Reformer
De Omnibus Rebus

பகுதி I

பாவலர்
தெ. அ. துரையப்பாபிள்ளை
வாழ்க்கையும்
இலக்கியப் பணியும்

செந்தமிழ்ப் பாவலர், அமரர்

தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள்

தோற்றம் : 20–10–1872 மறைவு : 24- 6–1929

சி. கந்தையா
மண்வள நிபுணர்

நீங்காத எனது நினைவுகள்

தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் 1910ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் திகதி ஒரு பெரும் பரபரப்பு. காரணம், அப் பாடசாலையிலே தலைமை ஆசிரியர் பதவியை வகித்துவந்த சாமுவேல் கற்சிங்கு துரையப்பாபிள்ளை தேயிலர், மிஷனுடனுள்ள தொடர்பை முறித்துக் கொண்டு தமது பதவியைத் துறந்தார். அங்குள்ள மற்றைய ஆசிரியர் நால் வருள் இருவரும், பெரும்பாலான மாணவர்களும் அவரைத் தொடர்ந்து வெளியேறினர். எனக்கு வயது அப்போது பதினென்று. மூன்றும் வகுப்பிற் பயின்று வந்தேன். வெளியேறிய பிள்ளைகளுள் நானுமொருவன். வேறு வசதியான இடமின்மையால், பிள்ளையவர்களுடைய விசாலமான சொந்த வீட்டில், ''தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையிலும் நுண்ணியதாகிய ஆலம்'' விதை முளைத்து வளர்ந்து யானை, தேர், புரவி, ஆட்பெரும் படையுடன் கூடிய மன்னருக்கு நிழல் கொடுப்பதைப் போல் இலங்கையின் பல பாகங் களிலுமிருந்து வரும் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் சேர்ந்து உயர்கல்வியைப் பெறும் வாய்ப்பை அளிக்கக்கூடியவகையில் வளர்ந்து முழு இலங்கையிலும் தலைசிறந்து விளங்கும் மகாஜனக் கல்லூரியாகப் பின் பரிணமிக்கப்போகும் சிறு பள்ளிக்கூடத்திற்கு அன்று வித்திடப்பட்டது.

அமரர் துரையப்பாபிள்ளை 'தன்னை மறந்து தன் நாமம் கெட்டுப்' புனர்ஜென்மம் எடுத்த ஒரு நாளாகவும் அத்தினத்தைக் கருதலாம். கிறீஸ்தவனுக இருந்து வகித்துவந்த தலைமை ஆசிரியப் பதவியையும் அனுபவித்துவந்த சுகபோகங்களையும் துறந்து தன்னலமற்ற சேவைக்குத் தம்மை அர்ப்பணித்ததோடு, **சாமுவேல் கற்சிங்கு தேயிலர்** என வழங்கி வந்த தமது பெயரையும் தெல்லிப்பழை **அ. துரையப்பாபிள்ளை** என மாற்றினர்.

சைவமும் தமிழும் ஒருங்கே தழைத்தோங்க அருஞ்சேவை செய்த திருப் பெருந்திரு. ஆறுமுகநாவலர் அவர்கள் கிறீஸ்தவப்பாதிரிமாருடன் தொடர்பு வைத்திருந்த காலம் அவர்கள் தமது மதமாகிய கிறீஸ்துவத்தைப் பரப்புவ தற்கு முயன்ற செயல்களைக் கண்ணுற்ற நாவலர்பெருமான் சைவமாம் தமது சமயத்தைப் பரப்புவதற்கு எடுத்த பல்வேறு சாதனைகளும் போதனைகளும் அமரர் துரையப்பாபிள்ளையினது மனத்தையும் ஈர்த்துள்ளன என்பதற்கு ஐயமில்லை. அவ்வகை உன்னத எழுச்சியால் உந்தப்பட்டு ஏறக்குறைய முற்று முழுதாகச் சைவ சமயத்தைச் சார்ந்த தெல்லிப்பழையிலும் சுற்றுக்கிரா மங்களிலும் வாழ்ந்து வரும் சிறார்களும் தமது சமயச் சூழலிலேயே தங்கள் கல்வியைப் பெறவேண்டுமென எண்ணியதற்கமையச் சைவப்பள்ளிக்கூடத் தைத் தாபிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார்.

பொருள்வளம் சற்றேனும் இல்லாது இறை நம்பிக்கையும், சமய ஆர்வமும், திடசித்தமுமே துணையெனக்கொண்டு அத்தகைய மகத்தான செயலில் ஈடுபட்டவருக்குப் பல சோதனைகள் காத்திருந்தன. இலங்கையில் இன்று நிலவும் சூழ்நிலையில் அவர் அப்போது பட்டுள்ள கஷ்டங்களை விளங்கிக்கொள்ளவேனும் பலரால் முடியாதிருக்கும். மிஷன் தனக்கிருந்த பணப்பெருக்கத்தாலும் அரசியற் செல்வாக்காலும் அமரர் துரையப்பா பிள்ளை எடுத்துள்ள நன்முயற்சியைச் சிதறடிக்கப் பலவகையிலும் எத் தனித்தது. பள்ளிக்கூடத்திற்குப் போதிய அளவிற் பிள்ளைகளைச் சேர்ப்பதி லேயே பலத்த போட்டி யேற்பட்டது. ஒரு கிராமத்தில் செல்வாக்குள்ள ஒருவரை, படிப்பிக்கும் தரம் அவருக்கு இல்லாதபோதும், அங்குள்ள பிள்ளைகளைக் கவரும் நோக்கத்தோடு உபாத்தியாயராக நியமித்தனர். எமது கிராமமாகிய கொல்லன்கலட்டியில் எடுத்த அவ்வகை முயற்சி யொன்று படுதோல்வி கண்டது. எனினும், அங்கு படித்துவந்த பிள்ளைகளுள் அநேகர் வறுமை காரணமாய்ப் பள்ளிக்கூடச் சம்பளத்தைக் கட்டமுடியா திருந்தனர். பெருக்கற்று அடிசுடும் நாளிலும் ஊற்றுப் பெருக்கால் உல கூட்டும் ஆற்றைப்போலத் தமது பணநிலை மிக மோசமாயிருந்தபோதும் அமரர் பலருக்கு இலவசக்கல்வி அளித்து வந்தார்.

பிள்ளைகளைத் தடுக்கும் முயற்சியிலே தோல்விகண்ட மிஷன் அடுத்த தனது கணையைத் தொடுத்தது. அக்காலச் சூழ்நிலைக்கேற்பச் சகல வசதி களையும் மகாஜனங் கொண்டிருந்த போதிலும் கிறீஸ்தவ, ஆங்கில அரசாங்கத்தின் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி அரசாங்க நிதியுதவியை அப்பள்ளிக்கூடம் பெறுவதைத் தடுத்ததோடு அமையாது அப்பள்ளிக் கூடத்தை நடாத்தும் அங்கீகாரத்தைத்தானும் அரசாங்கம் வழங்கவிடாது மிஷன் முட்டுக்கட்டையிட்டது. அக்காலம் பெருஞ் செல்வாக்குடன் விளங்கிய சேர் அம்பலவாணர் கனகசபை அவர்கள், சட்ட நிருபண சபை அங்கத்தவராகிய திரு. எஸ். பாலசிங்கம் அவர்கள் போன்ற பிரமுகர்கள் எடுத்த பெருமுயற்சிகளும் பிரயோசனமற்றுப் போயின. ''தருமம் வெல்லும்'' என்ற வாக்குப்படி தொடர்ந்து எடுத்துள்ள முயற்சிகளின் பயனாக அங்கீகாரம் வழங்கப்பெற்று முதன்முதலாக அரசாங்கப் பரீட்சை 1916ஆம் ஆண்டு நடைபெற்றது. பரீட்சை முடிவுகளும் மிக மெச்சும் வகையில் வாய்த்தன.

இடைப்பட்ட ஆறு வருட காலமும் படித்துவந்த பிள்ளைகளின் தேர்ச்சி யைக் கணிப்பதற்காகப் பிரபல ஆசிரியர்களான திருவாளர்கள் சஞ்சிவராவ், குரேசெற் தம்பையா, சிவபாதசுந்தரம், சுவாமிநாதன், சுப்பிரமணியம் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று வருடாவருடம் பரீட்சை நடத்தி வந்தது. எனினும், அப் பிள்ளைகளின் பிற்கால வாழ்வு அமரர் திரு. துரையப்பாபிள்ளை அவர்களுக்குப் பெரும் கவலையை விளைவித்த வண்ண மிருந்தது. முடிவில் ஆரும், ஏழாம் வகுப்புக்களிலே திறமைவாய்ந்து காணப்

பெற்ற பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்துக் கேம்பிறிச் கனிஷ்ட சோதனைக்குத் தமது வீட்டிலேயே வைத்துக் கல்வி புகட்ட ஒழுங்கு செய்தார். அரசாங்க அங்கிகாரம் பெற்ற ஒரு பள்ளிக்கூட மூலம் அப்பரீட்சைக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்காக அவர்களுடைய பெயர்கள் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிற் பதியப்பட்டன. இரண்டு, மூன்று வாரங்களுக் கொருமுறை அவர்கள் அங்கு சென்று வருவார்கள். ஆரும் வகுப்பிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட மாணவருள் நானுமொருவன். இலத்தீன் உட்படப் பெரும் பாலான பாடங்களைத் தலைமையாசிரியரே பொறுப்பெடுத்துக் கற்பிக்க, கணக்கியல், உடலியல்-சுகாதாரம் ஆகிய இரு பாடங்களையும் திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் ஏற்றிருந்தார். உணவு வேளையில் வீடு போவதைத் தவிர இராப் பகல் அமரர் வீட்டிலேயே தங்கியிருந்தோம். மகாஜனவில் தமது கடமையை முடித்துக்கொண்டு சாயந்தரத்தில் திரு. சங்கரப்பிள்ளை அவர்களும், இரவு, விடியற்கால வேளைகளில் தலைமையாசிரியரும் எம்மைப் படிப்பித்து வந்தார்கள். எனவே, மறுபிள்ளைகள் படிக்கும் நேரங்களில் எமக்கு ஓய்வும் அவர்கள் ஓய்வு எடுக்கும் வேளையில் எமக்குப் படிப்புமாகக் காலம் கழிந்தது. நித்திரை விட்டெழுந்ததும் படிப்புத் தொடங்கும். தலைமையாசிரியர் பள்ளிக்கூடம் சென்றதும் நாங்களும் வீடுகளுக்குப் போய் உடனே திரும்பி வருவோம். திரும்பி வந்து படிப்பிற் கவனத்தைச் செலுத் தாது எமது வாலிபப் பருவ இயல்புக்கேற்ப, விசாலமான அந்த வளவில் நின்ற மாமரங்களிலும் கொய்யா மரங்களிலும் இருந்து காய்களைப் பறித்துத் தின்பது போன்ற வழிகளிற் பொழுதைப் போக்குவோம். பகலிலே தின்ற மாங்காய், கொய்யாக்காய்க்குப் பதிலாக இரவில் 'பிரப்பம் பழம்' தாராளமாய்க் கிடைக்கும். பிள்ளைகள் அவ்விதம் கடுமையாகப் பிரம்படி பெறுவதைச் சகிக்க முடியாத தாயுள்ளம் படைத்த அவரது அருமை மனைவியார் பலகாலும் பிரம்பை எடுத்து ஒளிப்பர். அதனால் ஏற்படும் உட்பூசல் காரணமாக நாம் தண்டனையிலிருந்து தப்புவதுமுண்டு.

ஆரும் வகுப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர் கேம்பிறிச் பரீட்சைக்குப் படிப்பதிலுள்ள தொல்லை எத்தகையதென்பதை ஒருவர் உற்றுணர முடியும். அத்தோடு இராப்பகல் படிக்கவேண்டிய சிரமமும் சேர்ந்து மனக்கஷ்டத்தையும் சோர்வையும் உண்டாக்கின. அந்நிலையில் சுழிபுரம் போய்வருவதை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்து வந்தோ மென்பதை விளக்கவேண்டியதில்லை. போக்குவரத்துச் சாதனங்கள் விருத்தி யடையாத காலத்தில் மாட்டுவண்டியிலேயே பிரயாணம் செய்வோம். இரு வண்டிகளிற் செல்வதால் வழிநெடுகச் சவாரிப்போட்டி நடக்கும். அதனால் சில ஆபத்துக்களும் ஏற்பட்டதுண்டு. இவ்வளவு கஷ்டங்களுக் குள்ளாகியும் விக்டோறியாக் கல்லூரியில் எமது பெயர்கள் பதியப்பட்டனவே யொழிய நாம் அங்கு படிக்கவில்லையென யாரோ ஒருவர் புகார்செய்த மையால் பரீட்சைக்குத் தோன்ற நாம் அனுமதிக்கப்படவில்லை. அடுத்த ஆண்டு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியிற் சேர்ந்து அப்பரீட்சையில்

பெரும்பாலோர் சித்தியடைந்தோம். அதன்பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிற் பல்கலைக்கழக நுழைவுரிமை பெற்றபின் விவசாயக் கல்வி பெறுவதற்காகப் பூனைவுக்குச் சென்றேன்.

நான் மேற்படிப்புக்காக மகாஜனாவிலிருந்து பிரியவேண்டி இருந்தாலும் அதன் முன்னேற்றத்தில் எனக்கிருந்த ஆர்வம் ஒரு சிறிதும் குன்றாது மேன்மேலும் வளர்ந்தது. அதற்காக ஒல்லும்வகை உழைக்கவும் நான் ஒருபோதும் தயங்கவில்லை. அவ்வகை என்னை ஈர்த்ததின் காரணம் மகாஜனா எனது அறிவன்னை என்பது மாத்திரமன்று ; சைவப்பிள்ளைகள் சைவசமயச் சூழலிலும் அதன் கலாசாரத்திலும் ஊறித் திளைத்துக் கல்வி பயில வேண்டும் என்னும் அன்றைய ஸ்தாபகருடைய சீரிய நோக்கம் ஒரு சிறிதும் குறையாது என்றும் கடைப்பிடிக்கப்படுதலுமேயாகும். இப்பொழுது பள்ளிக் கூடத்தில் ஞானமூர்த்தியாகிய நடராசப்பெருமானின் திருக்கோயில் அமையப்பெற்று ஆசிரியரும் பிள்ளைகளும் தெய்வ வழிபாட்டோடு அன்றாடக் கருமங்களைத் தொடங்குகிறார்கள். மேலும் சரித்திரப் புகழ்பெற்ற கோயில்களான திருக்கேதீச்சரத்திலும், மாவிட்டபுரத்திலும் நடைபெறும் வருடாந்த விழாக்களிலும் மகாஜன மாணவர்கள் பக்தி சிரத்தையோடு பங்குபற்றி வருகிறார்கள். அங்கிருந்து வெளியேறும் பிள்ளைகள் ''மகாஜனன்'' என்னும் தனிப்பெரும் முத்திரை பொறிக்கப்பட்டே வெளிவருகிறார்கள்.

இறையருள் மகாஜன மாதாவுக்கு மேன்மேலும் பாலிப்பதாகுக !

ஆசிரியத் தொழில் மேன்மை பற்றி, பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

என்ன தொழிலைப் புரிபவ ரும்முன்னர்
இங்கிர்த வாசிர்யர் தங்கள்கையில்
மன்ன விரும்வித்தி யாதானம் வாங்கிய
மாணவர் தாமடி சங்கமின்னே.

எல்லாத் தொழிலுக்கு மின்றி யமையாத
தென்றிடும் ஆசிர்ய ரின்தொழிலைப்
புல்லாய் நினைத்துச் சிறங்கித்தல் நீதியோ
புத்தியோ சொல்லடி சங்கமின்னே.

— யாழ்ப்பாண சுவதேசக் கும்மி

தெ. து. ஜயரத்தினம்
முன்னாள் அதிபர்
மகாஜனக் கல்லூரி

உள்ளம் நிறைந்த உருவம்

எனது தந்தையாரின் காலத்தை நினைவு கூரும்போது ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நாமிருந்த சூழ் நிலையைப் பின்னோக்கிப் பார்க்கவேண்டி யிருக்கிறது. அவர் மறையும்போது எனது வயது பதினைந்துதானிருக்கும். என்றாலும் சிற்சில நினைவுகள் என்னுடைய உள்ளத் தில் ஆழப் பதிந்திருக்கின்றன. பிஞ்சு உள்ளத்திற் பதிந்தவற்றை இலேசாகத் துடைத்துவிடுதல் முடியாதென்னும் உண் மையை நாம் நன்கு அறிவோம்.

தந்தையாரைப் பற்றி எண்ணும்போ தெல்லாம் அவரின் கம்பீரமான தோற் றமும் சற்றே பீதியுண்டாக்கத்தக்க பார்வையுமே எனக்கு ஞாபகத்துக்கு வரு கின்றன. அவரின் ஆளுமையின் உயிராக விளங்கியவை அவருடைய கூரிய கண்களும் அடர்ந்த புருவங்களுமே என்று சொல்ல லாம். மனத்திற் கள்ளங் கபடமுள்ளவர்கள் அவருடைய பார்வைக்கு முன் நிற்றல் அரிதாயிருக்கும். ஆனால் அவர் உள்ளத்தில் இரக்க உணர்ச்சியும் கருணையும் நிறைந் திருந்தன வென்பதை அவருடன் நன்றுகப் பழகினவர்கள் அறிவார்கள். நூற்றுக் கணக்கானோர் அவருடைய அன்புக்குப் பாத்திரராகிப் பயன் அடைந்தார்களென் பது யாமறிந்த உண்மை. அவருடைய தோற்றத்துக்கு அணி செய்தவை அவர் தவறாது அணியும் நீண்ட வெண்ணிறக் 'கோற்'றும் சரிகைத் தலைப்பாகையுமே. தமிழருக்கெனத் தனிப் பண்பொன்று உண்டு; அதை எதுவரினும் பேணிக்காக்க வேண்டுமென்பதைச் சொல்லளவில் மாத் திரமன்றிச் செய்கையிலுங் காட்டியவர் அவர். மேலைத்தேச உடுப்பையோ, அவர் காலத்தில் நம்மவரால் தேசிய உடையென ஏற்றுக்கொள்ளப்பட்ட உடையையோ அவர் ஒருபொழுதும் அணிந்ததில்லை. தலைப்பாகை அணியாமல் வெளியே போவது அபத்தம் என்பது அவருடைய உறைப்பான கருத்து. இஃது இந்திய மக்க ளுடன் பலநாள் வாழ்ந்த காரணத்தால் வலுப்பெற்றிருக்கலாம். 1899ஆம் ஆண்டு பம்பாயிலிருந்து வந்த காலந் தொடக்கம் இறக்கும்வரை ''குளோஸ் கோற்''றும் சரிகைத் தலைப்பாகையுமில்லாமல் அவர் சாதாரணமாக வெளியே போனது கிடை யாது. பிள்ளைகளாகிய நாங்களும் சிறுவயதிலேயே ''குளோஸ் கோற்''றும் சரிகை இழைக்கப்பெற்ற ''வெல் வெற்'' தொப்பியும் அணிந்து கொள்ளுவோம்.

போக்கு வரத்துக்குச் சொந்த மாட்டு வண்டியையே கூடிய அளவு உபயோகிக்க வேண்டுமென்பதும் மோட்டார் வண்டி போன்ற அன்னிய நாட்டுச் சாதனங்களிற் பிரயாணஞ் செய்யக் கூடாதென்பதும் அவர் கொள்கைகளாகவிருந்தன. இதற்கு இணங்க அவரிடம் ஒரு சாதாரண மாட்டு வண்டியும் ஒரு சோடி வெண்ணிற எருது களும் இருந்தன. இதைவிட மூதாதையர் உபயோகித்துப் பின் அவரால் திருத்திப் புதுப்பிக்கப்பட்ட பல்லக்கு வண்டியும் அவ ரிடம் இருந்தது; இவற்றிலேயே எங்கும் போய் வருவது வழக்கமாய் இருந்தது. தேவைக்கு உள்நாட்டுப் பொருள்களையே உபயோகிக்கும் இயல்புடையவராக இருந்தார். சுருட்டு, மதுபானம் இரண்டையும் வெறுத்துக் கண்டித்தவர் அவர்.

தந்தையார் வாழ்ந்த காலத்தில் நாம் வசித்த வீடு மிக விசாலமானதாக விருந்தது. அதன் ஒருபகுதி அவருடைய பிரத்தி யேக உபயோகிப்புக்குரியதாய்க் கற்றோரும் கலைஞரும் கலந்து அவருடன் உரையாடுதற் குகந்ததாய் அமைந்தது. எமது தாயாரும் பிள்ளைகளாகிய நாமும் மற்றப் பகுதி யிலேயே அதிகமாகக் காலங்கழிப்போம். ஏதாவது தேவைக்கு எம்மை அழைக்கும் பொழுது மாத்திரமே அங்கு செல்வோம். இவ் வொழுங்குக்குரிய காரணத்தைத் தாயார் சொல்லக் கேட்டிருக்கிறோம். எனக்கு நான்கு வயதாயிருந்தபொழுது தந்தையார் வீட்டில் இல்லாத நேரம் அவ ருடைய மேசையிலிருந்த புத்தகங்களைப் பார்வையிட எனக்குச் சமயம் வாய்த்தது.

அவருக்குப் பெரிதும் வேண்டிய ஆங்கில அகராதி ஒன்று என் கையில் சிக்கியது: படங்கள் நிறைந்திருந்த ஒற்றைகளைச் சிதைத்துப் படங்களை எனதாக்கிக் கொண்ட காட்சியைத் தந்தையார் வந்து கண்டு கோபாவேசங் கொண்டார். தானில்லாத நேரங்களில் புத்தகங்கள் இருக்கும் பகுதிக்கு நான் வரக்கூடாதெனத் தடையுத்தரவு அவராற் பிறப்பிக்கப்பட்டது.

தந்தையாரைச் சந்தித்துக் கலந்துரையாடும் நோக்கமாகப் பிரமுகர் பலர் அடிக்கடி வீட்டுக்கு வருவதுண்டு. கவிதைகளை ஆக்குவதற்கும் கட்டுரைகளை வரைவதற்கும் சமூக அரசியல் விடயங்களைப் பேசுவதற்கும் இச்சந்திப்புகள் மிகவும் பயன்பட்டன. பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்களுடைய அமைதியான தோற்றமும் அவர் கூறும் காத்திரமான கருத்துக்களும் எமது தந்தையாரின் உள்ளத்தை மிகமிகக் கவர்ந்திருந்தன. தந்தையார் ''சிவமணி மாலை''யை யாத்த காலத்தில், ஐயரவர்கள் அடிக்கடி வந்து பாடல்களைப் பார்வையிடுவர்; மாவை பிரம்மஸ்ரீ நவநீத கிருஷ்ணபாரதியார் அவர்கள் ''உலகியல் விளக்க''த்துக்கு உரை கண்டபொழுது தந்தையாருடன் கலந்துரையாட வருவதுண்டு. சைவசித்தாந்த அறிஞரும் நியாயதுரந்தரருமாகிய திரு. கா. தம்பையா அவர்கள் இடையிடையே வந்து சைவசமயதத்துவங்களைப் பற்றி உரையாடிச் செல்வார். சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரனார் அவர்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலிருந்து புலோலிக்குப் போகும்பொழுது தந்தையாரைச் சந்தித்துப் பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுவது வழக்கம். முன்னர் ஆசிரியர்க் காசிரியராயும் பின் பிரசித்த நொத்தாரிசு ஆகவுமிருந்த திரு. மோஸஸ் கந்தையாபிள்ளை அவர்கள் தந்தையாரின் மிக நெருங்கிய நண்பராவர். அவர் அடிக்கடி வந்து அளவளாவிச் செல்வதுண்டு. தந்தையார் தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தலைமையாசிரியராக விருந்த காலத்து திரு. மோஸஸ் கந்தையா அவர்கள் தெல்லிப்பழை ஆசிரிய கலாசாலையில் போதனாசிரியராக விருந்தவர்; இருவரும் ஒரே வயதினர்; புலமையடைந்தவர்கள். செய்யுள் இயற்றல், கவிதைப்பண்பு என்பனபற்றி அதிகமாகக் கலந்துரையாடி மகிழ்வது இருவருக்கும் பெரும் பொழுதுபோக்காக விளங்கியது. அவர்கள் குதூகலமாகச் சம்பாஷிக்கும்பொழுது நாம் மறைவாக இருந்து கேட்டுப் பலமுறை சுவைத்து மகிழ்ந்தது இப்பொழுதும் ஞாபகத்திலிருக்கிறது. கலாநிதி ஐசக் தம்பையா அவர்கள் தாயுமான சுவாமிகளின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சேற்று நாளில் தந்தையாரைச் சந்தித்துப் பாடல்களின் அருங் கருத்துக்களை ஆராய்வர். இந்நேரங்களில் நாம் சத்தமிடாமல் அமைதியாகவிருந்து படித்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது தந்தையார் இட்ட கட்டளையாக விருந்தது. மீறினால் தந்தையாரின் கோபக் காட்சியைக் காணவேண்டிவரும் என்பதால் மிக அமைதியாக விருப்போம். என்றாலும் இடையிடையே எங்களை மகிழ்விப்பதற்கும் தந்தையார் தவறுவதில்லை. தமக்கு நேரம் உள்ளபோது எங்கள் பக்கத்துக்கு வந்து எமது தாயாருடனும் எங்களுடனும் நகைச்சுவையுடன் பேசி விடுகதைகள், உபகதைகள் கூறி எல்லோரையும் மகிழவைப்பார். அரிதாகப் பெறும் இவ் வனுபவத்தை இன்றும் நினைத்து அவர் பெருமையை உணருகிறோம்.

தந்தையாரின் ஆப்த நண்பன் மணியகாரன் திரு. R. R. B. குமாரகுலசிங்கம் அவர்கள் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவதும் தந்தையார் அவரில்லம் செல்வதும் இருவரும் நெடுநேரம் உரையாடுவதும் வழக்கமாயிருந்தன. மணியகாரன் அவர்கள் கிறிஸ்தவராயிருந்தும் தமது பிள்ளைகளை அண்மையிலுள்ள கிறிஸ்தவ பாடசாலைக்கு அனுப்பாமல் சில ஆண்டுகளாக மகாஜனக்கல்லூரிக்குக் கல்வி கற்க அனுப்பிவைத்தமை தந்தையாரிடம் அவர் கொண்ட மதிப்பையே காட்டுவதாகும்.

தந்தையாரிடம் கல்வி பயின்று அவருடன் ஆசிரியராயிருந்து பின் வேறு கல்லூரிகளில் ஆசிரியப்பணி புரிந்துகொண்டிருந்தவர்களாகிய திரு. க: இலங்கைநாயகம்,

திரு: வி. முத்துக்குமாரு, M. A., திரு. N. சங்கரப் பிள்ளை, B. A., திரு. N. கந்தையா ஆகியோர் தமது குருபக்தியைக் காட்டுவதற்காகத் தந்தையாரைச் சந்திக்க அடிக்கடி வருவதுண்டு: அது போலவே அவரிடம் கற்று உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தில் இருந்த திரு. கா. பொன்னையா, திரு. ச. கந்தையா, திரு. சோதி நாகரத்தினம் என்போரும் ஈவு நாட்களில் தவறாமல் தந்தையாரிடம் வந்து உரையாடிச் செல்வர்.

ஏறக்குறையப் பத்து ஆண்டுகளாகத் தவறாது தினமும் வீட்டுக்குவந்து, தந்தையாரின் அந்தரங்கச் செயலாளராய் உதவி புரிந்து வந்தவரும் தந்தையாருடன் சிரேட்ட உதவியாசிரியராகக் கடமை புரிந்தவருமாகிய திரு. கா. சின்னப்பா அவர்கள் என்றுமே எம்மால் மறக்கமுடியாதவர். அவர் தந்தையாரின் பாடல்களையும் கட்டுரைகளையும் பிரதிபண்ணுவதிலும் வேண்டிய கடிதங்களை எழுதுவதிலும் பேருதவி புரிந்துவந்தார். விசேடமாகத் தந்தையார் 'ஆங்கில இந்துசாதன'ப் பத்திரிகைக்கு உதவியாசிரியராக விருந்த காலத்துப் புரிந்த தொண்டு மிகப் பெரிதாகும். தந்தையாருடன் கலந்து பெற்ற புலமையினாலேயே அக்காலம் வெளிவந்த 'ஆனந்த போதினி' முதலிய சஞ்சிகைகளில் பாக்களும் கட்டுரைகளும் தீட்டி மதிப்புமிக்க புலவனாகவும் சின்னப்பா அவர்கள் திகழ்ந்தார். தந்தையாரின் காலத்திலேயே 1927இல் எமது சிற்றன்னையாரை விவாகம் செய்து எமது குடும்பத்தில் ஒருவராகவும் அமைந்தார். தந்தையாரின் மறைவின்பின் எங்கள் குடும்பத்துக்கும் மகாஜன உயர் நிலைப் பள்ளிக்கும் அவர் ஆற்றிய தொண்டு எம்மால் மறக்கமுடியாதது.

விவாக வைபவங்களுக்கும் வேறு பல விழாக்களுக்கும் வாழ்த்துப் பாக்கள் இயற்றுவிக்க யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து நண்பர்கள் வீட்டுக்கு வருங்கால் அவர்கள் தேவைகளை நிறைவேற்றிப் பிழையற உரிய இராகம், தாளம் அமையப் பாடிக் கொடுப்பது தந்தையாரின் பெருஞ் சேவையாகவிருந்தது. நச்சுச் சொற்களை விலக்கிச் சுத்தமாகக் கவனித்துப் பிழை சரி பார்த்தபின்பே பாடல்களைப் பிரதி பண்ணிக் கொடுப்பார். வாழ்த்துப் பாக்களில் பிழை வீரவாமல் இருக்கவேண்டுமென்பது தந்தையாரின் உறுதியான கொள்கையாக விளங்கியது.

அந்தக் காலத்தில் அரசாங்க நிருவாகம் அனைத்தும் பட்டினத்திலும் கொழும்பிலும் நடைபெற்றுவந்தன. மக்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவேண்டுமாயல் நேர்முகமாக எதுவுமே செய்யமுடியாது. ஆங்கிலக் கடிதங்கள் மூலமே தொடர்பு கொள்ளவேண்டிய நிலைமை இருந்தது. ஆங்கிலத்தில் எழுதக்கூடியவர் மிகச் சிலர் வாழ்ந்த அக்காலத்தில் பெரும்பாலார் தந்தையாரின் உதவியை நாடுவதுண்டு. அவர்களுடைய பிரச்சினைகளை அன்புடன் விசாரித்து உரிய முறையில் கடிதங்கள் எழுதிக் கொடுத்து உதவி புரிவார். அதற்கெனக் கடதாசி, தபாலுறை யாவும் தமது சொந்தச் செலவில் வாங்கி வைத்திருப்பார். சிலவேளை யாரும் அவற்றை எடுத்து உபயோகிப்பதுண்டு!

தமது நெருக்கடியான வேலைகளுக்கிடையில் அவகாசம் கிடைக்கும்போது எமது கல்வியிலும் கவனம் செலுத்துவார். ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களை முறையாக எமக்குக் கற்பிப்பார். இரவு பத்து மணிக்கு மேலும் கற்பித்துக்கொண்டிருப்பார். ஆங்கிலத்தில் சம்பாஷணைகள் வியாசங்களை மனனம் செய்யவேண்டுமென வற்புறுத்துவார். எமக்கு அது மனக்கசப்பைத் தந்தாலும் அவருடைய போதனைமுறையில் உள்ள தத்துவத்தின் பெருமையை இன்று உணர்ந்து வியக்கவேண்டியிருக்கிறது. தமிழில் நீதிநூல்கள், இதோபதேசக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் முதலியவற்றைவாசித்து விளக்கந்தருவார். வாழ்க்கைக்குரிய உண்மைகளை அவற்றில் எடுத்துக் காட்டுவார். நைடதம் அவருக்கு மிகப் பிடித்தமான இலக்கியமாகும். அந்நூலிலுள்ள நயம் பொருந்திய செய்யுட் பகுதிகளைச் சுவைக்கச்செய்து சிறப்புக்களையெல்லாம் எடுத்துச் சொல்லுவார். அவர் ஊட்டிய தமிழ்ச் சுவையே எமக்குப் பெரும் பேறாக இன்று விளங்குகின்றது.

சிறந்த அறிஞர்களின் பேச்சு எங்கு நிகழ்ந்தாலும் தந்தையாருக்கு அழைப்பு வரத் தவறாது. சில வேளைகளில் அவரையும் சொற்பெருக்காற்ற அழைப்பர். அவ்வேளைகளில் என்னையும் தன்னுடன் அழைத்துச் செல்வார். பெரியோர்களைக் காணவும் பேச்சுக்களைக் கேட்கவும் தந்தையார் தந்த அரிய வாய்ப்பினை யுன்னி நான் பெரிதும் மகிழ்ச்சியடைவதுண்டு. சேர் பொன். இராமநாதன் அவர்களின் சொல்விருந்தைச் சுவைக்கவும் பிரமஸ்ரீ சங்கர சுப்பிரமணிய சச்சிதானந்த யோகிகளின் கதாப் பிரசங்கத்தைக் கேட்கவும் வாய்ப்பைத் தந்தவர் தந்தையாராவர்.

1927ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகள் இலங்கைக்கு விஜயம் செய்த பொழுது யாழ்ப்பாண மாவட்ட வரவேற்புச் சபையில் தந்தையாரும் ஒரு பிரதான அங்கத்தவராயிருந்தார். வரவேற்பு விழாக்களிலும், தேநீர் விருந்து வைபவங்களிலும் தாம் கலந்துகொள்ளச் சென்ற பொழுதெல்லாம் என்னையும் அழைத்துச் செல்வார். காந்தி மகானை அண்மையில் நின்று தரிசிக்கும் பாக்கியத்தையும் பெற்றேன்.

"கடன் படுபவன் ஒரு மடனே
கண்டு கொள்வாய் இது திடனே"

எனத் தமது கீதரச மஞ்சரியில் பாடி வைத்த தந்தையார், நான் அறிந்த காலந் தொடக்கம் ஒரு கடன்காரனாகவே வாழ்ந்தார்; இது வியப்புக்குரியதாகத் தோன்றினாலும் உண்மையை நோக்கும் போது ஆச்சரியப்படுவதற்கில்லை; மகாஜன உயர்நிலைப் பள்ளிக்கூடத்தைத் தாபித்து எட்டு ஆண்டுகள் அரசினர் நன்கொடை எதுவுமின்றி நடாத்தியது அவருடைய பகீரதப்பிரயத்தனமேயாகும். கல்விகற்கும் மாணவர்கள் பெரும்பாலும் பொருளாதார வளமற்றவர்களாயிருந்த காரணத்தால் உரிய மாதாந்தக் கட்டணத்தில் ஒரு பகுதியையேனும் செலுத்த முடியாதவராயிருந்தனர். அந்தக் காலத்தில் பதிந்து வைத்த சம்பளக் காசு விபரமடங்கிய கணக்குப் புத்தகமொன்றைப் பல ஆண்டுகளுக்குப் பின் நான் பார்த்தபோது வியப்படைந்தேன். இருபதுசத வீதத்தினர் தானும் சம்பளம் கட்டிப் படித்ததாகக் காணப்படவில்லை. முழுச் சம்பளம் கட்டியவர் மிகச் சிலரே. பெருந்தொகையானோர்க்கு இலவசக் கல்வியளித்தமையாலும் அரசினர் உதவியின்மையாலுமே பெருங்கடன்காரனாகித் தமது குடும்பச்சொத்தையும் பிற்காலத்தையும் பணயம் வைக்க வேண்டிய நிலையில் தந்தையார் சேவை செய்தார் என்பது இங்கு கூர்ந்து கவனிக்கும் பொழுது எமக்கு விளங்குகிறது.

வரட்சி மிகுந்த எட்டு வருடங்களின் பின்னர் அரசினரின் நன்கொடை கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தோன்றினாலும் அந்தக் காலத்தில் பெருவெள்ளத்தினால் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் சேதமடைந்தன. சில மாதங்களுக்கிடையில் வருடாந்தச் சோதனை நடைபெறவிருந்த வேளையில் புதுக்கட்டிடம் அமைக்க வேண்டிய நிலை வந்தபோது தந்தையாரின் முயற்சித் திறனுக்கு மேலும் ஓர் பெரும் சோதனையாகவே அஃது அமைந்தது. இவற்றையெல்லாம் சமாளிப்பதற்குப் பெருந்தொகைப் பணம் தேவைப்பட்ட போது பொறுமையுடனும் வீரத்துடனும் சகித்து "நாளைக்குக் குடும்பநிலை எப்படியாமோ?" என்று சிந்திக்க வேண்டிய வேளையிலும் தளராது முயன்று வெற்றி கண்ட எனது தாயாரின் பொறுமையும் பெருமைப்பாடும் பாராட்டுக்குரியனவே.

தந்தையாரின் காலத்தில் பாடசாலைகள் இரு பிரிவினவாக அமைந்தன: ஆங்கிலம் மூலம் போதிப்பன ஆங்கில பாடசாலைகள்; தமிழ் மூலம் போதிப்பன தமிழ்ப் பாடசாலைகள். இவற்றில் தமிழ்ப் பாடசாலையில் மூன்றும் வகுப்பாவது படியாதவர் ஆங்கிலப் பாடசாலையில் சேர முடியாது. நானும் சகோதரர்களும் தமிழ்ப் பாடசாலையிலே ஆரம்பக் கல்வியைப் பெற வேண்டியிருந்தது. எங்கள் வீட்டுக்கண்மையில் பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்திஐயர் என்னும் பிராமணோத்தமர் தமது சொந்த வளவில் ஆரம்பித்து நடாத்திய சைவப் பிரகாச வித்தியாசாலையே எமக்கு உகந்த பாடசாலையாகத் தந்தையர் தெரிவு செய்து அங்கே பயில வைத்தார். அது சைவப்

பாடசாலையா யிருந்த காரணத்தால் அதன் வளர்ச்சியில் தந்தையாரும் அக்கறை கொண்டு ஐயர் அவர்களுக்கு ஊக்கமளித்து வளர்ந்துவரச் செய்தார். 1922ஆம் ஆண்டில் அதனை நிறுவிய ஐயரவர்கள் பாடசாலையை நடாத்த முடியாத காரணத்தால் தந்தையாருக்கே அதன் உரிமை முழுவதையும் கையளித்தார். காலக்கிரமத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை இப்பொழுதுள்ள காணியில் சிறப்பாக அமைக்கப் பெற்றது. இன்னும், மகாஜனக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள பிள்ளைகள் முதல் மூன்றுவருடக் கல்வி பயில்வதற்காக மகாஜனக் கல்லூரி வளவிலேயே 1926ஆம் ஆண்டு சரஸ்வதி வித்தியாசாலை என்னும் பெயருடன் ஆரம்ப பாடசாலையையும் நிறுவினர். குழந்தைகளின் கல்வியில் தந்தையார் கொண்ட அக்கறையையே இச் செயல்கள் காட்டுகின்றன.

மகாஜன உயர்தர பாடசாலையும் இவ்விரு தமிழ்ப் பாடசாலைகளுமே தெல்லிப்பழை கிழக்கு மக்களுக்குரிய சைவப்பாடசாலைகளாய் விளங்கின. கற்பிக்கத் தகுந்த சிறந்த ஆசிரியர்களைத் தெரிந்தெடுப்பதில் தந்தையார் கொண்ட கவனம் மிகப் பெரிது. ''நல்லாசிரியனின் தன்மை பிறப்புடன் வருவது; ஆசிரிய கலாசாலைகள் அதை ஆக்கித்தர முடியாது'' எனத் தந்தையார் கூறுவதில் உள்ள உண்மை சிந்திக்கத் தக்கதே.

தமிழ்ப்பாடசாலைக் கல்வியின்பின் 1921ஆம் ஆண்டு மகாஜன உயர்நிலைப் பள்ளியில் நான் மாணவனாகச் சேர்ந்தேன். என்னைச் சேர்த்த அன்று தந்தையார் ஆசிரியர், மாணவர் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கி மகிழ்வித்தார். பாடசாலைக்கும் எனக்கும் அன்று ஆரம்பமாய ஐம்பது ஆண்டுத் தொடர்பை நோக்குங்கால் அந்த வைபவம் மிகப் பொருத்தமானதாக அமைந்ததென்றே கருதவேண்டும். தந்தையாரின் தீர்க்கதரிசனம் மிகுந்த இச் செய்கை தெய்வசங்கற்பமேயென வியக்க வேண்டியிருக்கிறது.

நான் மகாஜனவில் படித்த காலத்தில் நாளாந்த நிர்வாக வேலைகளில் பெரும் பங்கு கொண்டவர் முன்னர்க் குறிப்பிட்ட திரு. கா. சின்னப்பா ஆசிரியர் அவர்கள் ஆவர். தந்தையாரின் சிரேட்ட உதவியாசிரியராகவும் பின்னர் பதினாறு ஆண்டுகள் தலைமையாசிரியராகவும் அவர்கள் பணிபுரிந்தார்கள். அவருடைய அயராவுழைப்பும் தந்தையாரிடம் கொண்டிருந்த அபார மதிப்பும் குடும்ப உறவும் பாடசாலை வளர்ச்சிக்குப் பெரும் காரணங்களாயிருந்தன. தந்தையார் பள்ளிக்கூட அலுவல்கள் சம்பந்தமாக திரு. கா. சின்னப்பா, திரு. அ. கந்தையா, திரு. சி. தம்பு ஆகிய மூன்று ஆசிரியர்களுடனும் அந்தரங்க ஆலோசனை செய்து வெற்றிகரமாகக் கல்விச் சேவையை ஆற்றி வந்தார். தம்மைப் போலவே 'கோற்' அணிந்து பாடசாலைக்கு வரவேண்டுமென விதித்து மகாஜன ஆசிரியர்களுக்குத் தனித்துவத்தை உண்டாக்கினர். புதிய மரபொன்றை வளர்க்க வேண்டுமென அவர் கொண்டிருந்த ஆவல் சிந்திக்கத் தக்கதே.

மாணவர்கள் தீய பழக்க வழக்கங்களை ஒழித்து நல்லொழுக்கமும் நற்பண்பும் வாய்ந்தவர்களாக வளரவேண்டுமென்னும் பெரு நோக்கினால் தந்தையார் கடுமையான கட்டுப்பாட்டை நிலைநாட்டி வந்தார். மாணவரும் மிகப் பயந்து நல்வழியைக் கடைப்பிடித்து ஒழுகினர். பெற்றோரிற் பலர் தம் பிள்ளைகளின் குறைபாடுகளைக் கூறி அவர்களைத் திருத்தும்படி தந்தையாரிடம் வேண்டுவதுண்டு. அவர் கடுமையாகத் தண்டிப்பவர் என்று பலர் சொல்லுவர். யான் பாடசாலையிற் சேர முன்பு அதிகமாகப் பிரம்பை உபயோகித்தவர் என்று எனது தாயாரும் சொல்லியுள்ளார். ஆனால், நான் அறிந்த வரையில் அவர் கடுமையாகத் தண்டனை செய்தவராகத் தோற்றவில்லை. தீய பழக்கங்களைக் களைவதில் புத்தி புகட்டும் வகையிலும் தீச் செயல்களின் இழிவை உணர்த்தும் வகையிலும் திடீர் திடீரெனப் பாடல்கள் பாடி நல்வழிப்படுத்த முயல்வர். பயன் கிடைக்காத போதுதான் தண்டனை முறையைக் கையாளுவார். வகுப்புக்களிற் படிப்பிக்கும்போதும் இரசனையூட்டிக் கற்பிப்பார். மாணவர் அக்கறை செலுத்தா

விடத்துச் சூழ்நிலையை மாற்றிக் கடுந் தண்டனை கொடுப்பார். எவ்வளவு கடுமையாகத் தண்டித்தாலும் பெற்றோர் ஆட்சேபித்ததையே நான் அறியவில்லை. 'நீர் அவனுக்கு எனது முன்னிலையிலும் இரண்டு கொடுத்துவிடும்' என்று சொல்லிய பெற்றோர்களையே நான் அறிவேன். அவ்வளவு தூரம் பெற்றோர் எம் தந்தையாரிடம் அபார நம்பிக்கையும் மதிப்பும் கொண்டிருந்தனர் என்றே கூறவேண்டும்.

தமது பழைய ஆசிரியர்களிடத்தும் படித்த பள்ளிக்கூடங்களிலும் அபிமானம் கொண்டவராகத் தந்தையார் விளங்கினார். தெல்லிப்பழை ஆங்கில பாடசாலையில் மாணவனாக இருந்தபொழுது தலைமையாசிரியராக விருந்த திரு. செல்லப்பா அவர்களிடமும் அவருடன் உதவியாசிரியராக விருந்து பின்னர் பிரசித்த நொத்தாரிசுவாக விளங்கிய திரு. தெ. ச. துரையப்பா அவர்களிடமும் குரு பக்தியைக் காட்டிவந்தார். 1899ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து திரும்ப வந்தபொழுது தமக்குக் கல்வியூட்டிய திரு. செல்லப்பா அவர்களின் ஆங்கிலப் பாடசாலையிலேயே கடமையேற்றுப் பணிபுரிந்தார். ஒருமுறை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. பிக்னெல் ஐயரவர்களும் உதவி அதிபர் திரு. ஜே. வி. செல்லையா அவர்களும் தங்கள் புதிய கட்டிடத்துக்கு நிதி திரட்டுவதற்குத் தெல்லிப்பழைக்கு வந்தனர். அமெரிக்க மிஷனரிமாருடன் தந்தையார் நல்லுறவு இல்லாமலிருந்த வேளையில் அவர்கள் தந்தையாரிடம் வரப் பின்வாங்கிப் பலமுறை யோசித்தபின் ஈற்றில் வந்து சந்திக்கத் தீர்மானித்தார்கள். அவர்கள் வந்ததும் தந்தையார் எதிர்கொண்டுபசரித்தழைத்து, வந்த விடயத்தை வினவியறிந்து யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவன் என்ற மதிப்பைக் காட்டித் தன்னாலியன்ற பொருளுதவி புரிந்து அனுப்பியதை நானறிவேன்.

நான் அவரை நன்கு அவதானிக்கக் கூடிய காலந் தொடக்கம் அவர் இறைபக்தி மிகுந்தவராகவேயிருந்தார். ஆனால் தவறாது கோயிலுக்குப் போய் வணங்குபவரென்று சொல்வதற்கில்லை. விசேட நிகழ்ச்சிகளுக்குமட்டுமே ஆலயஞ் செல்வர். இந்தக் குறையைப் பெருமளவில் நிவர்த்தி செய்தவர் எனது அன்புத் தாயாரே. வீட்டில் பக்திப் பாடல்கள் அதிகமாய் ஒலித்துக்கொண்டிருக்கும். தந்தையார் திருமுறைகளிலிருந்து தெரிந்தெடுத்த பாடல்களையும் கந்தரலங்காரம் போன்ற பாடல்களையும் மனனஞ் செய்து பாராயணஞ் செய்வர். இதன் பிரதிபலிப்பாகவே ''சிவமணி மாலை'' தோன்றியதெனலாம். ''அரியானை யந்தணர்தம் சிந்தையானை'', ''திருவேயென் செல்வமே'' என்னுந் திருத்தாண்டகங்களை அவர் மிகவிரும்பிப் படிப்பர். 1925ஆம் ஆண்டு வரையில் அவர் சிவதீட்சை பெற்றுக் கொண்டனர். அப்போது தாயாரும் நானும் அவருடன் சேர்ந்து சமயப் பிரவேசஞ் செய்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அதற்குப் பின்னர் அவர் சைவசமய அனுட்டானங்களில் மிகக் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். ஒரு சைவாசார சீலராகவே காட்சியளிப்பார்.

இன்னும் பல ஞாபகங்கள் ஒன்றன் பின் ஒன்றாக என்னுள்ளத்தில் வந்து கொண்டிருக்கின்றன. எழுதின் இன்னும் விரியுமென்றஞ்சி விடுகிறேன். ஒருவரின் நினைவுகள் மூலம் அவருடைய இயல்புகளை அறியலாமென்பர். ஆனால் எனது தந்தையாரின் இயல்புகளோ எம் நினைவில் முற்றாக அடக்கமுடியாதவை. அவ்வளவு பரந்த இயல்புகள் பெற்றவர் அவர். 'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்.....என்றெழுதிக் காட்டொணாதே' என்ற அப்பர் சுவாமிகளின் திருவாக்கை நினைக்கின்றேன். எனக்குத் திருப்தி வரும் என்பதற்காகவே எழுதினேன். அவருடைய ஒப்பற்ற தொண்டு நிலைத்துநின்று மேலும் மேலும் பல்லாண்டு வளர எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜரின் திருத்தாள்களைச் சிரம்மீது கொண்டு வழுத்துகிறேன்.

தெ. து. தர்மராஜா
துணைப்பதிவாளர்,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
கட்டுபெத்தை வளாகம்

எனது தந்தையாரின் ஞாபகங்கள்

எனது பன்னிரண்டாம் வயதில் எனது தந்தையார், பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் காலமானார்கள். அவரைப் பற்றிய எனது நினைவுகள் சிறு பராய ஞாபகங்களாகவே அமையும். அவருடைய பல்வேறுபட்ட ஈடுபாடுகளின் பிரதிபலிப் பாக இவை எத்துணையிருக்க முடியு மென்பது ஒரு கேள்விக்குறி. இது எப்படி யானாலும், வாழ்க்கையின் விருப்பு வெறுப் புக்கள் முதலியவற்றுற் பாதிக்கப்படாத எனது சிறிய உள்ளத்திற் பதிந்த நினைவுகள் பின் நோக்கிப் பார்க்கும்போது தெளிவாக வும் சார்பற்றவையாகவும் இருப்பதைக் காண்கிறேன். ஆகவே, அவை சில வற்றை இங்கே தர முயல்கின்றேன்.

எனது தந்தையாரின் நினைவுகள் என்ற வுடனே அவருடைய கம்பீரமான தோற்றம், அகன்ற நெற்றி, கூரிய ஊடு ருவிப் பாயும் கண்கள், வரிசையாயமைந்த வெண் பற்கள் இவைதான் மனக்கண் முன் எழுகின்றன. அவரணிந்திருக்கும் சரிகைத் தலைப்பாகையை எடுத்துவிட் டால், ஒருபோதும் எண்ணெய் தேய்த்து வாரிவிடப்படாத வரண்ட தலைமயிர் கெம்பி மேல் நோக்கி வளர்ந்திருப்பதைக் காணலாம். இந்த மாதிரி முரட்டுத் தலைமயிருள்ளவர் பெரும் பிடிவாதக்கார ராயிருப்பார் என்று சிலர் சொல்லக் கேட் டிருக்கிறேன். இது உண்மையே. தாம் நினைத்ததைச் சாதிக்கும் குணமுடையவரா யிருந்தார். ஆனால் அவருடைய பிடிவாதமே அவர் தம் சாதனைகளை வெற்றியுடன் நிறை வேற்றுவதற்குக் காரணமாயிருந்ததையும் காண்கிறோம்.

அவருடைய காலத்தில் மோட்டார் வண்டிகள் தெல்லிப்பழையிற் சிலரிடம் சொந்தமாகவும், அநேகமாக வாடகைக் கும் உபயோகத்துக்கு வந்துவிட்டன; ஆனால் எனது தந்தையாரோ இனி இல்லை என்ற அவசர காரணத்துக்கல்லாமல் மோட்டார் வண்டிகளில் ஏறுவதில்லை. தாம் வைத்திருந்த மாட்டுவண்டிகளிலே தான் போய் வருவதுண்டு. அவற்றுள் ஒன்று ''பல்லக்கு'' வண்டி என்று கூறு வோம். பெட்டி வடிவாய், பார்ப்பதற்கு அழகாகவும் பாவனைக்கு வசதியாகவு மிருந்தது. இது விசேஷ தினங்களிலேதான் உபயோகிக்கப்பட்டது. இதில் நாங்கள் போகும்போது சிறுவர்களும், பெரியவர் களும் வியப்புடன் பார்ப்பார்கள்.

மாட்டுவண்டிகளை நினைக்கும்போது அவைகளில் நாங்கள் அவருடன் செல்லும் போது ஏற்படும் ஒரு சிக்கலான நிலையும் நினைவுக்கு வருகிறது. எங்களுக்கு வீட்டில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, நன்னெறி, நல்வழி போன்ற நூல்களைப் படிப்பித்து அச்செய்யுள்களை மனப்பாடமாக்கச் செய்வது அவரின் வழக்கம். அவர் படுத்திருக்கும் சாய்மனைக் கதிரையைச் சுற்றி நின்று அகரம் முதல் அஃகேனம்வரை இச்செய்யுள்களை வரிசை தவறுமல் சொல்லுதல் வேண்டும். இதில் பிழைவிட்டோ, மறந்தோ போனவர்கள் சில மனக்கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். இது சிறுவர்களாகிய எங்களுக்கு எவ்வளவு கசப்பாயிருக்குமென்பது ஊகிக்கக் கூடியதே. இவ்விதமான இக்கட்டான நிலை வண்டியிற் போகும்போது தொடங்கி விடும். ஊர்ப்புதினம் பார்த்து உல்லாச மாய்க் காலம் கழிக்கலாமென்று எதிர் பார்த்து வண்டியில் ஏறினால் அது முட்டாள்தனமாகும். ஆத்திசூடி அகர வரிசை வண்டியிலும் தொடங்கிவிடும். இதனால் ஏற்படும் மனக்கஷ்டங்களும் விரைவிலே தொடரும்.

எங்கள் வீட்டில் கிராமிய நிகழ்ச்சி களுக்குக் குறைவில்லை. உடுக்குத் தட்டிப் பாடும் கலைஞர்கள் வந்து பாடுவார்கள்.

அல்லி அரசாணி மாலை, காத்தவராயன் கதை போன்ற கதைகளை, இந்தக் கலைஞருக்குரிய தனிப் பாணியில் பாட்டுடன் வசனமும், கேள்வியும் மறுமொழியும், பகிடியும் சிரிப்பும் கலந்து வழங்குவார்கள். நிகழ்ச்சி முடிந்ததும் இவர்களுக்கு எனது தந்தையார் உபசாரங்கள் செய்து அனுப்புவார். மாதகல், பண்டத்தரிப்பு முதலிய இடங்களிலிருந்து செல்லச் சந்நிதிக்கு ஆட்டக் காவடிக் கூட்டங்கள் இரவிரவாய்ப் போய்க்கொண்டிருக்கும். இக் கூட்டங்களில் அநேகர் எங்கள் வீட்டு முற்றத்தில் ஆடி, தாகசாந்தி செய்து சன்மானமும் பெற்றுப் போவார்கள். இது போலவே கரகமாடுகிறவர்கள், கம்பங் கூத்தாடிகள் வந்து தங்கள் கலைத் திறனைக் காட்டிச் செல்வார்கள்.

எனது தந்தையாரைச் சுற்றியிருந்தவர்கள் கல்விமான்களாகவும் புலமை படைத்தவர்களாகவும் இருந்ததில் வியப்பேதுமில்லை. இவர்களில் ஒருசாரார் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. பிக்நெல் ஐயர் அவர்கள், உப அதிபர் திரு. யே. வீ. செல்லையா அவர்கள், அர்ச். யோவான் கல்லூரி உப தலைவர் குரூசெற் அவர்கள் போன்றோர். எனது தகப்பனாரை இவர்கள் அடிக்கடி வந்து பார்த்துச் செல்லார்கள். கலாநிதி ஐசாக் தம்பையா அவர்களும் அவ்விதமே அவருடன் நெருங்கிப்பழகினார். இவர் தாயுமான சுவாமிகளின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து "Psalms of a Saiva Saint" என்ற பெயருடன் அச்சேற்றினார். இந்த நூலின் முகவுரையில் எனது தந்தையார் இந்நூல் வெளியீட்டில் செய்த உதவிக்கு நன்றி கூறியிருக்கிறார். இதிலிருந்து இத்தகைய கல்விமான்கள் ஏன் அவருடன் பழகினார்களென்பது புலனாகும்.

பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் வருகை எனது தந்தையாரால் மிகவும் மதிப்புடன் எதிர்பார்க்கப் படுவதொன்றென்பது அவருக்கு நடக்கும் உபசாரங்களிலிருந்து தெரியும். விசேடமாக எனது தந்தையார் "சிவமணி மாலை" பாடி எழுத்துப் பிரதியாயிருந்தபொழுது ஐயரவர்களுடன் அநேக மணிநேரம் கலந்தாலோசிப்பார். அப்பொழுதெல்லாம் வீட்டில் நிசப்தம் நிலவவேண்டும். இல்லாவிட்டால் எங்கள்பாடு ஆபத்துத்தான்! இருட்டிவிட்டால் ஐயரவர்களைத் தனிவழி போகவிடாமல், விளக்குடன் ஒரு ஆளை அனுப்பி வறுத்தலைவிளானிலுள்ள அவரின் வீடுமட்டும் அனுப்பிவைப்பார்.

பன்னாலை முத்துராஜி, பண்டத்தரிப்பு மோசெஸ் கந்தையாபிள்ளை, தெல்லிப்பழை சோமுப்பிள்ளை உபாத்தியாயர் போன்றோர் வருவதுண்டு. இவர்கள் அகடவிகடமாகப் பேசி எங்களையும் தந்தையாரையும் மகிழவைப்பார்கள். முத்துராஜி அவர்கள் "கள்ளி முதுகாட்டின் ஆடி கண்டாய்" என்ற தேவாரச் சொற்றொடருக்கு, கள்ளி மரங்கள் தங்கள் முதுகுகளை ஆட்டினால் அது ஆடிமாதமென்று அறிவாயாக என்று பயன்சொல்லி எனது தந்தையாரைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைப்பார். 'ஊரூருடுப்பிட்டி', 'ஒளவை', 'வெளவால்' போன்ற சொற்களை எழுதச் சொல்லி நாங்கள் திணறுவதைப்பார்த்துப் பெரிதும் திருப்தி அடைவார். மோசெஸ் கந்தையாபிள்ளை அவர்கள் "ஆனை அறிந்த அந்தோனியார்" என்ற விகட கவிதையின் பாகங்களைப் பாடிக் காட்டிச் சிரிக்வைப்பார். சிறப்பாக ஆட்டுக்குட்டி குண்டானுக்குள் தலையை வைத்துத் தன் சிறிய கொம்புகள் தடை செய்ததால் எடுக்கமுடியாமற் தவிக்கும்போது 'தலையை வெட்டு' என்று புத்திமதி கூறியஅந்தோனியார் பின் வெட்டுண்ட தலை குண்டானுக்குள் விழுந்து எடுக்கமுடியாத நிலையில் 'குண்டானை உடை' என்று ஆலோசனை கூறிய கட்டத்தைப் பாடும்போது சிரிப்பினால் வீடு கொந்தளிக்கும். சோமுப்பிள்ளை உபாத்தியாரை நினைக்கும்போது எனது தந்தையார் இறந்த தினம் ஞாபகத்துக்கு வருகிறது. அவரது சடலத்துக்கருகே நின்று புலம்பிக் கொண்டிருந்த என்னைப் பார்த்து "தம்பி வெம்பி, வெம்பி அழாதே, நம்பியிரு எம் பெருமானை" என்று 'பளிச்'சென்று கூறி ஆறுதலளித்தார். இவர் எனது தந்தையார் இருந்த காலத்தில் வந்து அவருடன் பலமணிநேரம் பேசிப் போவதுண்டு.

எனது தந்தையாருக்குச் சேர் பொன் னம்பலம் இராமநாதன் பிரபு என்றால் தனி மதிப்பு. அவரைப் பற்றிய பேச்சு வீட்டில் அடிக்கடி எழும். இராமநாதன் பிரபுவை எனது தந்தையார் இடைக்கிடை போய்ப் பார்த்து வருவார். அவருக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பின்போது தாம் பாடிய பாட்டொன்றை எனது தந்தையார் எங்களுக்குச் சொல்லித் தரு வார். ''சீருறுமிச் சபை மீதினில் மேவிய திவ்ய குணசீலா'' என்று ஆரம்பித்த பாடல் காவடிச் சிந்து மெட்டில் அமைந் திருந்தது. அதைப் பாடுவதிலும் நாங்கள் அதைப் பாடக் கேட்பதிலும் பெரிதும் விருப்பம் கொண்டிருந்தார்.

விழாக்கள், பரிசளிப்புகள், விவாகங்கள் இவைகளுக்கு ஆசிப்பாக்கள் பாடுவிப்பதற் காக அநேகர் வருவார்கள். அவர்களை இருக்கச் சொல்லி, சந்தர்ப்பத்துக்கு ஏற்ற பாட்டுக்களை உடனே பாடிக் கொடுத் தனுப்புவார். பரிதிமாற் கலைஞர் என்னும் சூரிய நாராயண சாஸ்திரிகள் இதனை அறிந்து போலும் ''விரையப் பாடும் சீர் மிகப் படைத்த தேலர் துரையப்பாபிள்ளை யெனும் தோன்றல்'' என்று அவர் இயற்றிய கீதரச மஞ்சரியை முன்னிட்டுப் பாடிய சாற்றுகவியிற் பாடியிருக்கிறார்.

எனது தந்தையார் சைவத்துக்கும் கல்விக்கும் மகாஜனக் கல்லூரியை நிறுவித் தொண்டாற்றினரென்று பலர் கூறுவர். இப்படிப்பட்டவரின் சமய சீவியம் எப்படி யிருந்ததென்று பின்நோக்கிப் பார்க்கும் போது, அவர் யாத்திரைகளுக்குச் சென்ற தென்றே, நாள்தோறும் அல்லது வாரந் தோறும் கோவில் குளங்களுக்குப் போன தென்றே எனக்கு ஞாபகமில்லை. அமா வாசை, பூரண விரதங்களைத் தவிர வேறு விரதங்கள் அனுட்டித்தாரென்றே எனக்கு நினைவில்லை. ஆனால் வீட்டில் தேவாரம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலியன பாராயணம் பண்ணினார். குளிக்கும்போது கிணற்றடியில் நின்று ''அடலருணைத் திருக் கோபுரத்தே அந்த வாயிலுக்கு வட வருகிற் சென்று கண்டுகொண்டேன்'' என்று பாடினால் வீட்டுக்குக் கேட்கும். ஊரிலுள்ள கோவில்களுக்கு அபிஷேகங்கள் திருவிழாக்கள் செய்வித்தார். ஆனால் அநேகமாக அவர் ஒரு கர்மயோகியாகத் தான் இயங்கினரென்று ஊகிக்கக்கூடியதா யிருக்கிறது.

எனது தந்தையாரின் சரித்திரமும் மகா ஜனக் கல்லூரியின் சரித்திரமும் ஒன்று என்று கூறின் அது மிகையாகாது. அவர் தமது நேரத்தில் மிகக் கூடிய பங்கைக் கல்லூரி விஷயங்களுக்கே செலவிட்டார். அதன் பராமரிப்பு, உபாத்திமார்களைத் தெரிவு செய்தல், நிதி திரட்டல், பிள்ளைகளைச் சேர்த் தல் முதலியன அவருடைய தனிக் கவ னத்தை ஈடுபடுத்தின. அவருடைய பழைய மாணவர்களான சிலர் மகாஜனக் கல்லூரி யில் உபாத்திமாராகக் கடமை பார்த்துத் தொண்டாற்றினர். இவர்களிற் தலை சிறந்து விளங்கியவர் திரு. கா. சின்னப்பா அவர்களாவர். ஓர் உருவமும் அதன் நிழ லும் போல் எனது தந்தையாரும் திரு. சின்னப்பா அவர்களும் அமைந்தார்கள். அவர் நினைக்க இவர் செய்து முடிப்பார். எனது தந்தையாரின் பிற்காலத்தில் திரு. சின்னப்பா அவர்களே பள்ளிக்கூட அலு வல்களைக் கவனித்து வந்தார். இதன் காரணமாக அவர் காலமானவுடன், பள்ளிக்கூட விடயங்களைத் தன் கையி லெடுத்துத் தொடர்ந்து நடத்தவும் அவர் செய்த சாதனைகளைப் பேணிக் காத்துப் பிற் சந்ததியாருக்குக் கையளிக்க வும் திரு. சின்னப்பா அவர்களுக்கு முடிந் தது. திரு. சி. தம்பு அவர்களும் அடுத்த படியாக எனது தந்தையாருக்கும் அவர் பின்வந்த அதிபர்களுக்கும் வலக்கைபோல் உதவினர்கள். இவர்களிருவருடைய நினைவு களும் எனது தந்தையாரின் நினைவுக ளுடன் பின்னிக் கிடக்கின்றன.

மேற்கூறியவைகளிலிருந்து எனது தந்தையாரைக் காண அநேகர் வந்து கொண்டிருப்பார்கள் என்பது புலனாகும். இப்படி வருபவர்கள் தங்கள் தங்களுக்கு வசதியான நேரங்களில் வந்துகொண்டிருப் பார்கள். இதனால் வீட்டில் சாப்பாடு முதலியன நேரத்துக்கு நடப்பது அரிதா யிருக்கும். குறிப்பாக இது இராச் சாப் பாட்டைப் பாதிக்கும். எனது தந்தையார்

வந்தவர்களுக்குச் சமாதானம் கூறித் தாம் சாப்பிட இரவு பதினொரு பன்னிரண்டு மணியாகிவிடும். அவ்வளவு நேரமும் காத்திருந்து தனது கணவனுக்கு ஆகாரம் பரிமாறிப் பின், தான் உண்டுறங்கும் எனது தாயாரின் நினைவு நெஞ்சில் என்றும் நிலவுவதொன்றாகும். எனது தந்தையார் வணங்காமுடியன்; சற்று முற்கோபி. ஆனால் எனது தாயாரோ, தாழ்மையும் தாய்மையும் உருவெடுத்தாற்போல் சாந்த மூர்த்தியாக விளங்குவார். எனது தந்தையாரின் திடீர்க் கோபத்துக்கும் சூடு பறக்கும் சொற்பிரயோகத்துக்கும் எதிர்மறையாய்ச் சிரித்த முகத்துடன் அன்புடன் பேசிப் பழகும் சுபாவமுடையவரா யிருந்தார் எனது தாயார். எனது தந்தையாரின் கோபத்துக் கிரையானோர் சிலர் எனது தாயாரைக் கண்டுபேசிச் சாந்திபெற்றுப் போவார்கள். எனது தந்தையாரிடம் வருபவர்களுக்கு விருந்துபசாரம் செய்தல் எனது தாயாரின் கடமையாயிருந்தது. தாமாகச் சமையல் செய்து பரிமாறி விருந்தினர்களை உபசரித்து அனுப்புவார். எனது தந்தையாருக்கு இது மிகத் திருப்தியைக் கொடுக்கும். விருந்தினர்கள் போனதும், ''கேட்டீரே, இன்றைக்கு உம்முடைய சமையல் திவ்யம்'' என்று கூறி உசார் போடுவதைக் கேட்டு நாங்கள் இரகசியமாகச் சிரிப்போம்.

இவைகளைப்போல் எத்தனையோ ஞாபகங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு வருகின்றன. ஆனால் அவைகளெல்லாவற்றையும் எழுதினால் வாசிப்பவர்களுக்கு அலுப்புத்தட்டுமென்று அஞ்சி விடுகிறேன். அதுவுமன்றி, எப்பொழுது ஒருவன் தன் பழைய ஞாபகங்களில் மனதைப் பதிய விடுகிறானோ அப்போது அவன் வயோதிபத்தை அடைந்துவிடுகிறான் என்று சில மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். வயோதிபத்தின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கும் நான் வயோதிபத்தைச் சுவைக்க விருப்பமில்லாதவனா யிருக்கிறேன்! ஆகவே ஞாபக உலகிலிருந்து திரும்பிவிடுவதே நலன் ஆகும்.

பாவலர் போற்றுதும்

சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ் ஆசான்
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி அவர்கள்

விரையப்பா டுஞ்சீர் மிகப்படைத்த தேலர்
துரையப்பா பிள்ளையெனுந் தோன்றல் — புரையப்பா
லெஞ்ச வெழிலிலக யாத்தனனே **கீதரச**
மஞ்சரிநன் னூலை மகிழ்ந்து.

க. வேலாயுதபிள்ளை, பி. ஏ. [ஆனர்ஸ்]
ஆராய்ச்சி மாணவன்,
இலங்கைப் பல்கலைக்கழகம்,
கொழும்பு வளாகம்.

துரையப்பாபிள்ளையின் வாழ்க்கையும் சமகாலமும்

0—0 ஒருவன் உயிருடன் வாழும் பொழுது அவனுடைய தேவை, சேவை, முக்கியத்துவம் முதலியன வீட்டிலோ நாட்டிலோ உணரப்படுவதில்லை. ஆனால் அவன் தான் வகிக்கும் பங்கினை விடுத்து நிரந்தரமாக விலகும்பொழுதோ இவ்வுலக வாழ்க்கையை விட்டு ஒரேயடியாக நீங்கும் பொழுதோதான் அவன் வகித்த பாத்திரத்தின் சிறப்புடைமையும் முக்கியத்துவமும் புலப்படத் தோன்றுகின்றன. இதன் காரணமாகவே "அவர் மட்டும் இன்று இவ்விடத்தில் இருந்தால் ....." என்ற அங்கலாய்ப்பு — ஏமாற்றப் பெருமூச்சு வீடுகளிலும்; "இவர் மட்டும் மீண்டும் பிறந்து வந்தால் ....." என்ற ஏக்க உணர்ச்சி நாடுகளிலும் அடிக்கடி கேட்பதுண்டு. இதே நிலையையே—ஏக்கத் தொனியையே—ஆங்கிலக் கவிஞரான வில்லியம் வேட்ஸ் வேர்த்மில்டன் என்ற கவி பற்றிப் பாடிய பாடலிற் கேட்கலாம். அவரது அவசியத்தைத் தமது காலகட்டத்திலுணர்ந்து,

"Milton thou shouldest be living
at this hour
England hath need of thee"[1].

என்று பாடும் சொற்களிற் காணமுடிகிறது. இது போன்றே இலங்கையில் ஆறுமுக நாவலரை வேண்டி ஏங்குகிறார் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள்.

திருவுடை யீழந் தேர்ந்துபெற் றெடுத்த
அறுமுக நாவல! அரும்பெறற் குரவோய்
மறுவறு சில வனப்புடைக் குரிசில்
இன்றுநீ எம்மோ டிருந்திலை அந்தோ"[2]

மனிதரை மதித்து எடை போடுவதில் ஏற்பட்ட குறைபாடு காரணமாகவே, மனிதர்களுக்காக வாழ்ந்து அவர்களது வாழ்வுக்காகத் தங்களது வாழ்வைச் சிதைத்து மடிந்துபோன மனிதகுல மாணிக்கங்கள் எத்தனையோபேர். அவர்கள் இறந்ததின் பின்னரே போற்றப்படுகின்றனர். அவர்களுக்காகச் சிலைகள் எழுப்பப்படுகின்றன. மணிமண்டபங்கள் நிறுவப்படுகின்றன; காலநீரோட்டத்திற் கலந்துசென்ற **பாவலர்** துரையப்பாபிள்ளையின் சிறப்பும் வரலாற்று முக்கியத்துவமும் இப்பொழுதான் அதிகம் உணரப்பட்டு வருகின்றன. சமீபகாலத்தில் அவருக்காக ஏங்கும் குரல் சற்றுப் பலமாக ஒலிக்கிறது.

1—0. இலங்கையில் சுயாட்சி அழிந்து அந்நியராட்சி சில நூற்றாண்டுகள் நிலைத்திருந்தது. 1796இல் டச்சுக்காரரிடமிருந்து பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிக் கொண்டாரெனினும் 1815இல் கண்டியைக் கைப்பற்றி உடன்படிக்கை செய்து கொண்டதுடனேயே இலங்கை முழுவதும் அந்நியர் ஆட்சிக்குட்பட்டது. இந் நிகழ்ச்சியை வருணிக்கும் வரலாற்று ஆசிரியர் ஒருவர், "சிங்களவரின் சுதந்திரம் கடைசியாக இவ்வாறு வீழ்ந்தொழிந்தது; சிறி விக்கிரம ராஜசிங்கனைக் கைப்பற்றியதும் 1815இன் கண்டிய உடன்படிக்கையும் சுய அரசியல் ஆதிபத்தியமுடைய கண்டியின் முடிவைக் குறித்து நிற்கிறது"[3] என்று கூறும் சொற்கள் சுதந்திர இலங்கையின் வீழ்ச்சியின் அடித்தளத்தையே சுட்டி நிற்கின்றன. அரசியல் ரீதியாகவும் ஆட்சி எளிமைக்காகவும் இலங்கையை ஒன்றாக இணைத்து ஆண்டனர் பிரித்தானியர். அந்நிய ஆட்சியின் பிடி இலங்கையில் எவ் வளவு பலமாக இருந்தது என்பதனை,

1. Wordsworth W — Wordsworth Poetical Works—Edited by Seliverest. 1946 Pg. 116.
2. சுழத்துக் குழூஇறையனர். இளங்கதிர் 1952 — 1953.
3. Silva, Colvin R. De. — Ceylon under the British Rule.

''முழு இலங்கையையும் ஒருங்கிணைத்து ஆள்பதியாலும், சபையாலும் ஆளப்பட வேண்டும்; கொழும்பு, காலி, கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் என ஐந்து பிரிவுகளாக மட்டும் வகுத்து அவை அரசாங்க அதிபருக்குக் கீழ் இயங்க வேண்டும்.''[4] என்ற கோல்புறூக்கின் கூற்று வலியுறுத்தி நிற்கின்றது. பிரித்தானியரின் ஆணைக்கரங்கள் செல்லாத இடங்களுக்கும் சென்று வந்தன.

அவர்கள் தமது ஆட்சிக்கும் போக்குக்கும் இயைய இலங்கையின் சமுதாய, சமய, பொருளாதார மாற்றங்களையும் இயல்பாகவே புகுத்தத் தொடங்கினர்.

1—1. உத்தியோகங்களுக்காகக் கல்வி கற்று அதனடிப்படையிலே வளர்ந்து கொண்டிருக்கும் புதிய ஒரு மத்தியதர வர்க்கத்தின் தோற்றத்தை இக்கால கட்டத்திற் காணக்கூடுவதாயிற்று. இவர்கள் பழைய பாரம்பரிய நாகரிகத்தைக் கைவிட்டுப் புத்தம்புதிய சமுதாய விளைவாக நின்றனர்.

இதற்குதவியாக நவீன கல்வி முறை அமைவதாயிற்று. மிஷனரிமாரே இதனை அறிமுகப்படுத்திவைத்தனரேனும் ஆங்கில அரசாங்கம் பூரண உதவியளித்தது. புத்தி சீவிகளான புதிய வர்க்கத்தினருக்கு, சுய மொழி அழிவதைப்பற்றி எவ்வித கவலையும் இருக்கவில்லை. கவர்ச்சியான உத்தியோகங்கள் அவர்களை முற்று முழுதாகக் கவர்ந்துவிட்டன என்பதில் ஐயமில்லை.

1—2. கிராமப் பிறழ்வுகளும் நகராக்கங்களும் இடப் பெயர்ச்சிகளும் ஒன்றுடனொன்றியைந்து தாராளமாக நடைபெறலாயின. கிராமங்களின் வீழ்ச்சியும் புதிய நகரங்களின் தோற்றமும், அடிப்படையான நேரடி விளைவுகளிலொன்றாக அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதாரச் சீரமைப்பு இம்மாற்றங்களுக்கு விரைவளித்தது. இப்புதிய பொருளாதார மாற்றங்கள் எவ்வளவுக்கு இந்தியாவைப் பாதித்தனவோ அவ்வளவுக்குக் குறையாமல் இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தின. கிராமப் பொருளாதாரத்தைக் கைவிட்டுச் சுயநல நோக்கில் செய்த மாற்றங்கள் பற்றி இந்தியாவுக்குத் தேசாய் கூறியது இங்கும் பொருத்தமுடையதே. அவர், ''பழைய கிராமப் பொருளாதாரத்தை இழுத்து வீழ்த்தி, முதலாளித்துவ வடிவங்களைப் புகுத்தியதன் மூலம் அனைத்திந்தியாவும் ஒரே பொருளாதார அமைப்பிற்குட் படுத்தப்பட்டது. இது முன்னேற்றத்திற்கு ஏதுவாகவிருந்தது என்பதில் ஐயமில்லை; ஆயினும் இம்மாற்றமானது பிரித்தானியாவின் வர்த்தக வங்கி, கைத்தொழில் நலன்களுக்கேற்றவண்ணம் நெறிப்படுத்தப் பட்டமையால் இந்திய சமுதாயத்தின் சுதந்திரமான, தடை செய்யப்படாத பொருளாதார வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டது'' என்று கூறியுள்ளார். அந்த அளவிற்கு ஆங்கிலேய ஆதிக்கம் இந்திய சமுதாய வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்தது.''[5]

1 - 3. ஒரே சமயத்திலே தமது பண்டைய நாகரிகத்தையும் பரம்பரை வாழ்க்கை முறையையும் இழக்கச் செய்த ஆங்கில ஆட்சியின் ஆணைக்கரமாக இலங்கையில் ''ஆள்பதிகள்'' இருந்தனர். சேர் ஹோர்கிலாஸ் ரெபின்சன் (1865—1872), சேர் வில்லியம் கிரகறி (1872 — 1877) முதலிய ஆள்பதிகளின் காலத்திலேயே பிரித்தானிய குடியேற்ற நாடுகளின் தலைவியாக விக்ரோரியா மகாராணியார் அரசோச்சினர். அவர் இங்கிலாந்திலே இருந்தபொழுதும் அவரது ஆட்சிப் பலத்தையும் அதிகார சிரத்தையையும் சாம்ராச்சிய மகோன்னதத்தையும் நிலை நிறுத்துவதற்கு, மகாராணியின் இரண்டாம் மகன் ஏனைய குடியேற்ற நாடுகளுக்கும் இலங்கைக்கும்விஜயம் செய்தான்.[6] எடின்பேர்க்

4. Silva Colvin R. De. – Ceylon under the British Rule.
5. Social Background of Indian Nationalism.
6. Huluqalla H. A. J. – British Governors of Ceylon.

இளவரசரான அல்பிரட்டின் வரலாற்று விஜயம் நடந்து இரு வருடங்களுட் பாவலர் துரையப்பாபிள்ளையின் வரலாறு ஆரம்ப மாகிறது:

1 – 4. இலங்கையில் ஆங்கிலேய ஆட்சியின் உச்ச நிலைக்கு எவ்வாறு 19ஆம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்கதோ அவ்வாறே இலங்கையின் முன்னேற்றத்திற்கும் சுதந்திரத்திற்கும் வித்திட்ட பெரியோர்களின் தோற்றத்துக்கும் குறிப்பிடுதற்குரிய நூற்றாண்டாகும். 'குருவை வென்ற சிஷ்யர்'களாக இலங்கையின் வளர்ச்சியிலே நோக்குடையோராக சேர் ஜேம்ஸ் பீரிஸ் (1856—1930), சேர் பரன் ஜயதிலக (1868—1944), டி. ஆர். விஜயவர்த்தனா (1886 – 1950), கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி (1877 – 1947), சேனநாயகா குடும்பத்தினர், பொன்னம்பலம் குடும்பத்தினர் முதலிய முன்னோடிகள் தோன்றினர். இக்காலத்திலேயே ஆங்கில துரைத்தன வாழ்க்கை வாழ்ந்து ஆங்கில அரசாங்க உத்தியோகங்களும் பார்த்தவர்கள் இவர்கள். இங்கிலாந்திலே கல்வி கற்று முன்னேறிய வர்க்கத்தினரான இவர்களே தேசிய விழிப்புணர்ச்சிக்கும் காரண கர்த்தாக்களாக இருந்தனர். இவர்கள் காலத்தால் வேறுபாடு உடையோராய் இருந்தாலும் குறிப்பிட்ட இலக்கிலும் நோக்கிலும் குறிப்பிடக்கூடிய அளவுக்கு ஒரே குரலுடையவர்கள் என்பதில் ஐயமில்லை: முன்னே குறிப்பிட்டவர்களுள் சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம், ஆனந்தக்குமாரசுவாமி ஆகியோர் யாழ்ப்பாணத் தமிழரிடையே தோன்றி, அவர்களது விழிப்புணர்ச்சிக்கு வித்திட்டு நிற்கையில், அவர்களுக்குச் சமகாலத்தவராகச் (1872 – 1929) சமநோக்குடன் வாழ்ந்தவர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களாவர்.

2 – 0. மிஷனரிமார் தங்கள் நோக்கங்களையும் போதனைகளையும் புகுத்தக் கூடிய இடமெனத் தெரிந்தெடுத்த இடங்களில் தெல்லிப்பழையும் ஒன்று.[7] அமெரிக்க மிஷனரிமாரின் கண்ணோட்டத்தியதெல்லிப்பழை பரம்பரைச் சைவக் குடிகளைக் கொண்ட பிரதேசம். இப்பிரதேசத்தின் சைவ உணர்வுக்கும் பழமைப் பண்புக்கும் சமீபகாலத்தில் இடம்பெற்ற மாவிட்டபுரப் பிரச்சினையே போதிய சாட்சியாகும். தெல்லிப்பழைச் சந்தியிலே அமைந்திருந்தது ஒரு வீடு. அதற்குரிமையுடைய பரம்பரையினர் இவ்வுணர்வுகளுடன் இனம் கண்டுகொள்ளக்கூடிய குடும்பத்தினராக இருந்தனர். கதிர்காமச் சட்டம்பியார் என்றால் அக்காலத்தில் அவர் இரு மொழிப்புலமை வாய்ந்த கல்விமான் என்பது யாவர்க்கும் தெரியும். இன்று ஆங்கிலம் என்னும் இரண்டாம் மொழியறிவு ஒருவனுக்கு எவ்வாறு ஓர் அறிஞனாக முத்திரை பதிக்கத் தேவைப்படுகிறதோ அதுபோன்றே அன்று கல்விமானாகக் கருதுவதற்குச் சங்கதம் அவசியமாயிருந்தது. கதிர்காமச் சட்டம்பியாரும் சங்கதம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் புலமையுடைய வல்லுநராக விளங்கினர். இவரது வழித்தோன்றல்தான் கச்சேரி முதலியாராக விளங்கிய பாவலரின் தந்தை அருளம்பலம் அவர்கள். இவ்வாறிருக்க நுண்கலை வல்லுநராகவும், சகலகலா விநோதராகவும் சிற்பம், ஓவியம், நாடகத்துறைகளிற் பேர்பெற்று அக்காலத்தில் விளங்கிக் கொண்டிருந்தவர் காசிநாதர் கந்தப்பிள்ளை அவர்கள். இந்தக் கந்தப்பிள்ளையின் வழியில் மலர்ந்தவர் தங்கம்மா அவர்கள்; அறிவுத்துறையும், கலைத்துறையும் ஒன்றுக் கலந்து சங்கமமாகின; அருளம்பலம்—தங்கம்மா திருமணம் நடந்தேறியது.

2 – 1. பரம்பரை ஊற்றுப்போலும்! இவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் யாவரும் பிரபல்யமாக விளங்கினர். அறிவியல் துறையும், கலைத்துறையும் ஒருங்கே கைவரப்பெற்ற இத்தலைமுறையினரிற் சிலரைக் காலன் மறைத்தபோதும் அவர்களின் வழிவந்த பலர் இன்று அழியாப் புகழுடன் வாழுகின்றனர். இத் தம்பதிகளின் மூத்த புதல்வராகப் பிறந்த தெ. அ. இராசரத்தினம்பிள்ளை அவர்கள்

7. வேலுப்பிள்ளைப் போதகர் — அமெரிக்க மிஷனரியின் சரித்திரம்.

இந்தியாவில் வாழ்க்கையை நடத்திய பொழுதிலும் தமக்கெனத் தனியிடம் பெற்றுக்கொண்டவர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலே கடமை புரிந்த இவர் அக் கல்லூரியின் முன்னேற்றத்துக்கு முன்னின்று உழைத்தார். அக்கல்லூரியிலே இவருக்கிருந்த அக்கறை பல வழிகளில் வெளிப்பட்டுத் தோன்றுகின்றது. ''கல்லூரித் தினக் கொண்டாட்ட ஒழுங்கு செய்த இவர் இலங்கையில் இருந்த தமது சகோதரர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களைக் கொண்டு பாடல் யாப்பித்துப் பெற்றுக்கொண்டார்.''[8] தாம் கற்பிக்கும் கல்லூரியின் முன்னேற்றத்திற் கொண்ட அக்கறையும், தமது சகோதரரின் புலமையிற் கொண்ட பற்றும் இதனாற் புலப்படக் காணலாம். கல்லூரியிற் கொண்ட ஈடுபாடே, அந்தக் கல்லூரித் தாபகர் கலாநிதி மில்லருடன் ஏற்பட்ட அத்தியந்த உறவுக்கும் வித்திட்டது. கலை ஆற்றல் படைத்த இராசரத்தினம்பிள்ளை அவர்கள் மில்லரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றை எழுதி முடிக்க இத்தூண்டுதல் காரணமாயிருக்கலாம்.

இவரது எழுத்தாற்றலுக்கு சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு, மாணவர்களுக்கென எழுதிய கதாவாசகத்தொடர்நூல், பஞ்சதந்திரம், இந்தியச் சரித்திரம் முதலிய நூல்கள் சான்று பகர்வனவாயுள்ளன. கல்வி உலகிலே கால்வைத்துக் கலை உலகத் தொடர்பும் கொண்ட இவர் பாவலருக்கு முன்னோடியாகத் திகழ்ந்திருந்தா ரென்பதில் ஐயமில்லை.

2 — 2. ஆங்கிலேயர் வருகையுடனேயே அச்சுக்கலைத்தோற்றமும் இலங்கையில் ஏற்படுகிறது. ''1821ஆம் ஆண்டில் 'கறெற்' என்னும் ஓர் அமெரிக்க பாதிரியாரை இயந்திரத்துடனும், அச்சுக்களுடனும் ஆங்கில அரசு இலங்கைக்கனுப்பியது ... . 1855ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் அச்சேறிய வெளியீடுகள் இவ்வியந்திரத்திலேயே அச்சிடுவித்தனவாகும்''[9] என்னும் மதியாபரணம் அவர்களின் கூற்று அச்சுக்கலையின் ஆரம்ப நிலையை மிகவும் தெளிவாகத் தருகிறது. இப்படியான ஒரு மழலைப் பருவத்தையடுத்துக் 'கற்றனி'ல் அச்சுயந்திரம் நிறுவி ஊக்குவித்தவர் க. பொன்னையா அவர்கள். இவர் அச்சுயந்திரம் தாபித்ததைப் பாராட்டிப் பாடியுள்ளார் பாவலர். இவ்வச்சுக்கலை முன்னோடிகளில் ஒருவரான பொன்னையா அவர்களுக்கு வாழ்க்கைத் துணைநலமாக வாய்த்த இராசம்மா, அருளம்பலம் தம்பதிகளின் ஏக புதல்வி. இச் சகோதரர்கள் யாவர்க்கும் முன்னோடியாகவும், தம் பெயரால் இவர்கள் பெயர்களையெல்லாம் நிலை பெற வைக்கவும் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள் 1872ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ஆந் திகதி பிறந்தார்.

2 — 3. ஐந்தாவது வயதிலேயே கல்வி கற்கப் புகுந்த இவருக்குத் தெல்லிப்பழை மிஷனரிமாரின் தமிழ்ப் பாடசாலையே கிடைத்தது. மிஷனரிமாரின் கல்வித் தாபனங்களைத் தவிர வேறு புகலிடம் தமிழ் மாணவர்க்கு இருக்கவில்லை. அப்படி வேறு ஒன்று இரண்டு இருந்தாலும் அவை திறம்பட இயங்கவில்லை; இந்த நிலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் ஆங்கில ஆரம்ப பாடசாலையில் காலடி வைத்தார். இது சுதேசியவாதியான செல்லப்பா என்பவரின் தனிமுயற்சியில் உருவாகிய ஒன்றாகும். ஆங்கில பாடசாலையிற் காலடி வைத்த வேளையில், தம் தந்தை அருளம்பலத்தை இழந்தார். 'எல்லாமே இனிமேல் ஆகவேண்டிய' காலகட்டத்தில் தந்தையை இழப்பது எத்தனை துர்ப்பாக்கியம்!

'சான்றோனாக்கி, அவையத்து முந்தி இருத்த வேண்டிய தந்தை', அதனைச் செய்துமுடிக்க முன்னரே இவ்வுலகை நீத்தார். எனினும், இவரது கல்வி

8. பாவலரது தனிப்பாடல்களிலொன்று. இதில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.
"Songs to be sung at the occasion of the celebration of the Madras Christian College Day at the request of his brother T. A. Rajaratnampillai.

9. சான்றாம் இலங்கைத் தமிழ் விழா மலர் 1951 — பக்: 156.

தொடர்ந்தது. ஆங்கிலத்தில் ஆரம்பக் கல்வியை முடித்த பாவலரை, தாயும் தந்தையுமாக விளங்கிய தங்கம்மா எவ் வாறே யாழ்ப்பாணக்கல்லூரியிற் சேர்த்து விட்டார். ''யாழ்ப்பாணக் கல்லூரி ஒன்று தான் அக்காலத்திலே உயர்தரக் கல்வி பயில விரும்புவோரின் புகலிடமா யிருந்தது.''[10] இப்படியான ஒரே நிறுவ னத்தில் எவ்வாறு சேர்ந்தார்? சேரும் பொழுது இவருக்கிருந்த தடைகள் எவை? பொருளாதார நிலை எவ்வாறிருந்தது? கிறித்தவராகிச் சேர்ந்தாரா? என்னும் நிலைகளைத் தெளிவாக்கி அறிந்துகொள்ள ஆதாரங்கள் அவசியமாகும். எனினும் ஒன்று மட்டும் நமக்குத் தெளிவாக உள்ளது. இவர் படிக்கும் காலத்தே (1888 — 1891) கல்லூரியிலே சிறந்து விளங்கினர். டபிளியு. ஈ. ஹெச்கொக் எம். ஏ. அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிப ராக விளங்கினர். இவ்வதிபர் துரையப்பா பிள்ளையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது ''இவர் தமது காலத்தில், வகுப்பிலே உயர்நிலையைப் பிடித்திருந்தார். தமது சிரேட்ட பத்திரப் பரீட்சையில் சித்தி யடைந்தபொழுது ஆங்கிலத்தில் மிகத் திறமையாகச் சித்தியடைந்தமைக்கான பரிசையும் பெற்றார்.''[11] எனக் குறிப்பிட் டுள்ளார்.

இவரது திறமையை வேறு எடுத்துக் காட்டுமூலமும் தெளிவுபடுத்தலாம். இவர் படித்த காலத்தே யாழ்ப்பாணக் கல்லூரி யின் போதனாசிரியரான ஆணல்ட் சதாசிவம் பிள்ளை அவர்கள் மிகச் சிறந்த தமிழ் அறிஞராகவும் தமிழ்ப் புலமையும் புகழும் உடையவராகவும் விளங்கினர். இவரால் இயற்றப்பட்ட பாவலர் சரித்திர தீபம் என் னும் நூல் ஈழத்து இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக்கு உதவும் முன்னோடியாக இன்றும் விளங்குகின்றது. இத் தனிச் சிறப்புடைய அறிஞர் ஆணல்ட் அவர்கள் துரையப்பாபிள்ளை யவர்களுடன் அதிக நெருக்கமுடையவராகவும் இவரிடத்தில் அதிக அக்கறையும், ஈடுபாடுமுடையவராக வும் இருந்தார் எனத் தெரியவருகிறது. துரையப்பாபிள்ளையவர்களிடம் காணப் பட்ட புலமையும், திறமையும் இவரைக் கவர்ந்து இருக்கலாம். ஆணல்ட் அவர்கள் காட்டிய அன்பும், ஆதரவுமே அவர் இறந்த பின்னரும் பிள்ளையவர்களை அவர்மேற் பற் றுறுதி கொள்ளத் தூண்டியிருக்கவேண்டும். கன்னி முயற்சியான கீதரச மஞ்சரியை அன்னருக்குச் சமர்ப்பணம் செய்து, ஆங்கில முன்னுரையிலே பின்வருமாறு எழுதுகிறார் பிள்ளையவர்கள். ''இச்சந்தர்ப் பத்தில் எனது அன்பும், பற்றும் நிறைந்த தாழ்மையான காணிக்கையாக மறைந்த ஜே. ஆர். ஆணல்ட் அவர்களுக்கு இச்சில மலர்மாலையை அவரது ஞாபகமாகப் பொறித்துச் செலுத்துகிறேன். அரைநூற் றாண்டாக அவர் தமிழ் மக்களின் ஒழுக்கத் துக்கும் இலக்கிய முயற்சிக்கும் உண்மை யாகவும் வெற்றிகரமாகவும் உழைத்து யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு வீட்டிலும் தமது பெயரை ஒலிக்கவைத்தார். தமிழ் உலகத்தில் இவருடைய பெயர் வைத்துப் போற்றப்பட வேண்டியதொன்று''.[12] இவ ரது அஞ்சலிச் சொற்கள் ஒவ்வொன்றும் இவரது உள்ள ஆழத்தில் அறிஞர் ஆணல் டுக்கு இருந்த இடத்தைத் தெளிவாக்கு கின்றன. இத்தனைக்கும், பிள்ளையின் யாழ்ப்பாணக் கல்லூரிக் காலத்தில் ஆணல்ட் அவர்கள் இவர்மேல் வைத் திருந்த பாசப்பிணிப்பே காரணமெனல் தவருகாது.

2—4. யாழ்ப்பாணக் கல்லூரியிற் கற்ற கல்வியும், பெற்ற அனுபவமுமே துரையப்பாபிள்ளை அவர்களை வழிநடத்திச் சென்றன. இவரது காலத்தில் பிரபல்ய மாய் விளங்கிய கிறித்தவக் கல்விமானனா ரி. எச். குருசெற் அவர்களும் யாழ்ப் பாணக் கல்லூரியிலேயே கற்றிருந்தார். இவர் அக்கல்லூரியின் சேவையையும் தாம் பெற்ற அனுபவரீதியான கல்வியையும் கூறுகின்றார், ''நான் யாழ்ப்பாணக் கல்லூரியிலே 19ஆம் நூற்றாண்டின்

10. சிந்தனைச்சோலை — பக். x.

11. ஹெச்கொக் டபிளியு. ஈ. அவர்களால் அளிக்கப்பட்ட கற்சாட்சிப்பத்திரம்.

12. Taylor S. H. T. — Preface to இதோபதேச மஞ்சரி — 17 Oct. 1901.

எழுபதிலும், எண்பதிலும் கற்கும்பொழுது அளிக்கப்பட்ட பாடத்திட்டத்தையும், வேலைத்திட்டத்தையும் தற்காலமும் பின்னுறச் செய்யவில்லை. நாங்கள் அறிவின் பல்வேறு துறைகளுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டோம். இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம், கணிதம், தத்துவம் என்பவற்றுடன் வானசாத்திரத் துறையும் எங்களுக்குக் கற்பிக்கப்பட்டன. எங்களுக்கு உடலியல், உளவியல், ஒழுக்கவியல், சன்மார்க்கவியல்களில் அளிக்கப்பட்ட பயிற்சியே எங்கள் வாழ்நாளின் பிற்பகுதி முழுவதற்கும் எங்களுடன் உறுதுணையாக நின்றது.''[13] குரோசெற் அவர்களின் கூற்றுப் பிள்ளையவர்களின் வாயூடாகப் பெற்றதொன்று எனக் கூறுவது மிகையாகாது. 1888இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் காலடி எடுத்துவைத்த துரையப்பாபிள்ளை அவர்கள், குரோசெற் அவர்கள் பெற்ற அதே வகைக் கல்வியையும், அனுபவத்தையும் பெற்றிருப்பார் என்பதற்கு வேறு சொல்ல வேண்டியதில்லை.

யாழ்ப்பாணக் கல்லூரியிற் பயிற்சிகளைப் பெற்று வெளியேறிய அதே நேரத்தில் கிறித்தவக் கொள்கைகளையும் பற்றிக் கொண்டார். சைவராக அக்கல்லூரியிற் புகுந்த இவர், கிறித்தவராக வெளியே வந்தார். கல்விக்காகச் சமயம் மாறுவதென்பது அக்காலத்தில் சர்வசாதாரணமான ஒன்று. கல்வியிலே சிறந்து விளங்கியவர்கள் யாவரும் கிறித்தவத்தைத் தழுவியே தமது கல்வியைப் பெற்றுக் கொண்டவர்கள். சைவ சமய மறுமலர்ச்சியின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படும் நாவலரே பார்சிவல் துரையுடன் தொடர்பு கொண்டு கிறித்தவப் பின்னணிக் கல்வி கற்றவரென்பதைத் தவிர இந்நிலைக்கு வேறு உதாரணம் தேவையில்லை. நாவலருடைய பிறமதக் கல்விக்குப் பார்சிவல் எவ்வாறு காரணமாக இருந்தாரோ, அவ்வாறே பிள்ளையவர்களின் மதமாற்றத்துக்கு ஆணல்ட் ஓர் இயக்கச் சக்தியாக இருந்திருக்கலாம்.

மூன்று வருடங்களை யாழ்ப்பாணக் கல்லூரியிற் கழித்த துரையப்பாபிள்ளை அவர்கள் ''பத்தொன்பதாவது வயதிலே கேம்பிரிஜ் சர்வகலாசாலையின் உயர்தரப் பள்ளி இறுதித் தேர்விலே ஆங்கிலம் முதலிய பாடங்களில் விசேஷ புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தார்'' எனச் சிந்தனைச்சோலையில் 'நூலாசிரியர் வரலாறு' கூறுகிறது. 1891ஆம் ஆண்டுவரை இவர் யாழ்ப்பாணக் கல்லூரியிற் கல்விகற்றுக் கொண்டிருந்தனரேனும் 1890ஆம் ஆண்டிலே அதாவது, இவரது பதினெட்டாம் வயதிலேயே இப் பரீட்சையிற் சித்தியடைந்துள்ளார். இவருக்கு, கேம்பிரிஜ் சர்வகலாசாலையால் அளிக்கப்பட்ட தேர்வு அத்தாட்சிப்பத்திரம், சுட்டிலக்கம் 47ஐயும் வயது 18ஐயும் கொண்ட இவர் மேற்படி பரீட்சையின் பரீட்சகர் குழுவைத் திருப்தி செய்துள்ளாரெனக் கூறுகிறது. இளம் வயதிலேயே இத் தேர்வைத் தாண்டிய போதிலும், இவர் மேற்படிப்பு முயற்சிகளில் ஈடுபட்டதற்கு எவ்வித ஆதாரங்களும் கிடைத்தில. பிற்காலங்களிலே மேற்படிப்புக்கென இலங்கையிலொரு தாபனம் வேண்டுமென அங்காலாய்த்து ''எம்மூர் உயர்தரக் கல்விக்கு இன்னும் அரசாட்சியார் அத்திபாரமிடாதிருக்கின்றனர், ஆனபடியால் பெற்றோரும் மற்றும் நன்மை விரும்பிகளாயிருக்கப் பட்டவர்களும் இவ்விஷயத்திற் கவனம் செலுத்துவது இன்றியமையாதது''.[14] என எழுதும் இவருக்கு மேற்படிப்புக் கிட்டாதது துரதிருட்டமே. ஆயினும் ஆசிரியத் தொழிலி லீடுபாடு கொண்ட துரையப்பாபிள்ளை அதிலே உயர்ச்சி காண்பதற்கான பரீட்சையொன்றுக்கு 1899ஆம் ஆண்டில் தோற்றினர் எனத் தெரிகிறது. அவ்வாண்டிலேயே ஆங்கில ஆசிரிய தராதரப் பரீட்சையிற் சித்தியடைந்தார்.

2 — 5. கல்வி முயற்சிகள் இவ்வாறாக முற்றுப்பெற, உத்தியோக நாட்டம் இவரைப் பற்றிக்கொண்டது. ஆரம்பத்திற் சிலகாலம் அரசாங்கக் கணக்காளராகப் பணிபுரிந்தாரெனினும் அதன் தன்மை, பணிபுரிந்த காலம் என்பவற்றுக்கு ஆதா

13. St. Johns College Magazine 1948 — Pg. 17.

14. உதயதாரகை — 12 சித். 1901.

ரங்கள் கிடைத்தில. அவ்வுத்தியோகம் இவரைக் கவர்ந்திருந்ததாகத் தெரிய வில்லை. ஏனெனில் 1892இலேயே பாணந் துறை அர்ச். யோவான் உயர்தரக்கல்லூரி யில் ஆசிரியப் பதவியை ஏற்றுக்கொண் டார். இது அதே வருடம் நடைபெற் றிருக்கவேண்டும். 1894 மார்கழியில் ''பிள்ளையவர்கள் இரண்டரை வருடங் களாகத் தனக்குக் கீழ் ஆசிரியராகப் பணி புரிந்தார்'' என அக்கல்லூரியின் அன்றைய அதிபரான சிறில் ஏ. ஜேம்ஸ் அவர்கள் கூறு கிறார். எனவே 1892 ஆனிக்கும் யாழ்ப் பாணக் கல்லூரியை விட்ட 1901க்கு மிடைப்பட்ட காலத்தில்தான் கணக் காளர் பதவியை இவர் வகித்திருக்க முடியும். துரையப்பாபிள்ளை அவர்களின் ஆரம்பகால ஆசிரியத்தொழிலே அதிட்டம் நிறைந்ததாகவும், ஆர்வமூட்டுவதாகவும் அமைந்ததெனலாம். சிறில் ஏ. ஜேம்ஸ் அவர்களின் சொற்கள் இதனைப் பிரதி பலிக்கின்றன. ''ஆரம்பத்தில் இரண்டாம் உதவியாசிரியராகவும் கடைசி பதினெரு மாதம் முதலாம் உதவியாசிரியராகவும் கடமை புரிந்த இவர் தமது கடமை களை மனச்சாட்சியுடனும் விடாமுயற்சி யுடனும் நிறைவேற்றினார். மனத்தாங்க லின்றி எவ்வித மேலதிக வேலையையும் கொடுக்கும் பொழுதெல்லாம் செய் தார்.''[15] என ஜேம்ஸ் அவர்கள் கூறியுள் ளார். பிற்காலத்தில் பிள்ளையவர்கள் மேற் கொண்ட முயற்சிகளுக்கும், வெளி வேலை களுக்கும், பொதுநலநோக்குக்கும் இது ஒரு நல்ல ஆரம்பகட்டமாக விளங்கியுள்ளது.

2 – 6. இலங்கையில் இவ்வாறுகப் பெற்ற இளமை அநுபவத்துக்கு உரமூட்டி யது இவரது இந்திய வாழ்க்கையேயாம். 1894 மார்கழி 15ஆம் திகதி பரியோவான் கல்லூரியில் இருந்த துரையப்பாபிள்ளை அவர்கள் 1895 தை மாதத்தில் இந்தியா விற் கோலாப்பூர் மிஷன் உயர்தர பாட சாலையிற் கடமையேற்றுக்கொண்டார். ஆசிரிய உத்தியோகத்திலேயே அமர்ந் திருந்த பிள்ளையவர்கள் அதே உத்தியோ கத்தை இந்தியாவிற் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதற்குக் காரணம் எது வெனத் தெரியவில்லை. ஆனால் அக்காலத் திலே இந்தியா சென்று தம் செல் வாக்கை நிலைநிறுத்தி அங்கேயே குடியும் குடித்தனமுமாகி விடுவதும், சிறிது காலத் துக்கு அங்கு தங்கிப் பெறுவதைப் பெற்றுக் கொடுப்பதைக் கொடுத்து மீண்டு வருவதும் தாராளமாக நடைபெற்றன. இது அறி ஞத்துவத்தின் ஓர் அம்சமாக அடிப்படைத் தேவையாக அக்காலத்திற்கொள்ளப்பட்ட ஒன்று எனக் கூறுவதே பொருத்தமுடை யது. ஆறுமுகநாவலர் காலத்திருந்து இத்தேவை ஏற்பட்டிருக்கலாம். தமது சமயப்பணிக்குக் களம் அமைக்க முற்பட்ட இவர், காலூன்றி நின்று தம்மை அறிமுகம் செய்துவைக்க இத் தேவையைப் பயன் படுத்தியிருக்கலாம். இஃது எவ்வாறிருப் பினும், சி. வை. தாமோதரம்பிள்ளை, வி. கனகசபைப்பிள்ளை, கரோல் விசுவநாதபிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, தி. த. கனக சுந்தரம்பிள்ளை, ரி. சரவணமுத்து முதலிய அறிஞர்கள் எல்லோரும் இந்தியாவுடன் தொடர்பு கொண்டவர்களே. தமிழ ராய்ச்சியிலீடுபட்ட வி. கனகசபைப்பிள்ளை போன்று, துரையப்பாபிள்ளையின் மூத்த தமையனான இராசரத்தினம்பிள்ளையும் தமி ழகத்தில் வாழ்க்கையைத் தாபித்துக் கொண்டவர். தமிழகத்திலே வாழ்ந்த தமையனரிடம் துரையப்பாபிள்ளை அவர்கள் போய்ச் சேராமல் நேரே பம்பாய் மாகாணத்துக்கே சென்றுவிட் டார். உயர்தரப் படிப்பை மேற்கொள் பவர்களைப் பம்பாய் மாகாணம் மிகவும் கவர்ந்திருந்தது. ''சரவணமுத்து எம். ஏ. அவர்கள் பெரும்பான்மை உயர் கல்வியை இங்கேயே பெற்றார்.''[16] பிள்ளையின் சம காலத்தவரான ''ரி. எச். குரோசெற் அவர்கள் பம்பாய் மாகாண அகமதுகான் மிஷன் உயர்தரக் கல்லூரியின் தலைவராய் இருந்தே பட்டப் படிப்பில் தேறியவர்.''[17] இதே நோக்கு துரையப்பாபிள்ளையையும்

15. ஜேம்ஸ், சிறில். ஏ. அவர்களால் 15 மார்கழி 1884இல் அளிக்கப்பட்ட பத்திரம்.
16. A Brief Biography of The Late Mr. T. Saravanamuttu.
17. St. Johns College Magazine 1948.

கவர்ந்திருக்கலாம். எவ்வித தடைகளால் இவருக்கு இம் மேற்படிப்புக் கைகூடா தமைந்ததோ தெரியவில்லை.

எதுதான் இவருக்கு இங்கே கைகூடா விட்டாலும் ஒன்றுமட்டும் நிச்சயமாகக் கைகூடிற்று. இவரது வாழ்க்கையை இவர் பிற்காலத்தில் அமைத்துக்கொள்ளவும், தமது கருத்துக்களைச் செம்மை செய்து கொள்ளவும், இன்று பல்லோராலும் போற்றும் நிலைக்குத் தம்மை மாற்றிக் கொள்ளவும் இந்திய வாழ்க்கை பெரிதும் உதவிற்று; இங்கு பெற்ற அனுபவங்களும் கண்ட காட்சிகளும் இவருக்குத் தூண்டு கோலாயிருந்தன. இதனை வி. முத்துக்குமாரு அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்: ''சமுதாய உணர்ச்சியில் ஏற்பட்ட பற்றுக் கோடு கோல்காப்பூர், பெல்காம் என்ற பம்பாய்ப் பகுதிகளில் இருந்ததன் காரண மாகவும் திலகர், கோகலே ஆகியோரின் தேசிய வேலைகளில் கொண்ட ஈடுபாடு காரணமாகவும் வளர்ந்திருக்கலாம்.''[18]

கோல்காப்பூர் கல்லூரியிற் கற்பித்த இவர் பெல்காம் இங்கிலாந்து மிஷன் உயர் நிலைப் பாடசாலைக்கு மாறிச் சென்று அங்கு இருவருடங்களைக் கழித்தார். இவ்விரு கல்லூரிகளில் இவரது ஆற்றலும் திறமை யும் செயற்பட்டன. 'இளங் கிறித்தவர் சங்கம்', 'இலக்கிய மன்றம்', 'ஞாயிறு பாடசாலை' முதலிய பொதுஇயக்கங்களின் பொறுப்பை ஏற்றுத் திறம்பட இயக்கி வந்தார். செயல்கள் திறம்பட நடந்தேறிய காலத்தில் இந்தியாவிற் கொள்ளைநோய் பரவிற்று. 1893இல் இடம்பெற்ற கொள்ளைநோய் இந்தியாவில் ஏற்படுத்திய அழிவு சொல்லுந்தரமன்று. இக் கால கட்டத்தில் வருந்தியழைத்த தாயின் வேண்டுகோளுக் கிசைந்து இலங்கை திரும்பினர் துரையப்பாபிள்ளை அவர்கள்.

3 – 0: இக் கட்டுரையின் ஆரம்பத் திலே அந்நியராட்சியின் விளைவாக இலங்கை அடைந்த மாற்றங்களைப் பார்த் தோம். இம்மாற்றங்களுக்கு மறுதலையாக இவர் இலங்கை வந்த காலத்திற் காரி யங்கள் நடைபெறத் தொடங்கின. சுதேச எண்ணங்களும், அதற்கியைந்த இயக்கங் களும் மலரத் தொடங்கின. பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் ஏற்பட்ட விழிப் புணர்ச்சி இலங்கையிலும் ஏற்படத் தொடங்கியது. குறிப்பாகப் பக்கத்து நாடான இந்திய தேசத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கங்களில் இலங்கையரும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர்.

3 – 1. இந்தியாவில் அரசியல் விழிப் புணர்வும், அதன் போக்கும் வங்காளப் பிரிவினையுடன் தீவிரமாகின. ''வங்காளப் பிரிவினையை உத்தியோகரீதியாக அறிவித்த அன்று வெளிநாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரிக்கக் கோரித் தொடங்கப்பட்ட இயக்கமே சுதேசிய இயக்கமாகப் பரிண மித்தது;''[19] ''வந்தே மாதரம்'' விடுதலை வேட்கை கொண்டோரின் தாரக மந்திர மாயிற்று. சுரேந்திரநாத் பானர்ஜி, புவேந்திரநாத் வாசு, நரேந்திரநாத் சென் முதலிய இருபத்தேழு பேர் எதிர்ப்பைத் தெரிவித்துத் தங்கள் உத்தியோகங்களை விட்டு வெளியேறினர். கோபாலகிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர், சித்த ரஞ்சன்தாஸ், சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய அறிஞர்கள் அரசியல்வானிலே ஒளிரும் நட்சத்திரங்களாய் மக்களை வழி நடத்திச் சென்றுகொண்டிருந்தனர்.

3 – 2. இவர்கள், அரசியல் விழிப் புணர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் சமாந்தர மாக ஒருங்கிணைந்து ஆணிவேராகச் செல்ல வேண்டிய பொருளாதார வளர்ச்சிக்குப்புத் துயிரளிக்கும் முயற்சிகளிலு மீடுபட்டனர். இம் முயற்சிகளின் முன்னோடிகளாகக் கிராமத்திற்குத் திரும்பி விவசாயத்தி லீடு படவும், கமத்தொழில், வணிகம் முதலிய துறைகளிற் கவனம் செலுத்தவும் சுதேசிகள் தூண்டப்பட்டனர். இப்படி யான பொருளாதார முயற்சியொன்றி லீடுபட்ட பாரதியின் தந்தை பட்ட துயரத் தைப் பாரதியாரின் —

18. Mahajana Carnival Souvenir 1954 — Pg. 17.

19. Life and Times of C. R. Das — Pgs. 38, 39.

"ஆர்ப்பு மிஞ்சப் பல்பல வாணிகம்
ஆற்றி மிக்க பொருள்செய்து வாழ்ந்தனர்
நீர்ப்படுஞ் சிறு புற்புத மாமது
நீங்கவேயுள்ளங்குன்றித்தளர்ந்தனன்."[20]

என்னும் பாடலால் அறியலாம்.

முயற்சி தோல்வியோ வெற்றியோ என்னும் கவலையின்றி முழுமனதுடன் மக்கள் இவ்வகை யியக்கங்களி லீடுபட்டதை இந்நிகழ்ச்சிகள் தெளிவுறுத்துகின்றன.

3 – 3. பொருளாதார முயற்சியுடன் மட்டும் நில்லாது மக்களிடையே நிலவிய சமூகக் கட்டுப்பாடுகள், சாதி மத வேறுபாடுகள் யாவற்றையும் களைந்தெறியத் தலைவர்கள் முன்னின்றனர். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற உணர்ச்சியை விதைக்க முயன்றனர். சைவசமயத்தின் அடித்தளம்போல இடம்பெற்று விளங்கிய சாதி பேதத்தை அகற்றச் சர்வமத சன்மார்க்க நெறிகள் தழைத்தெழுந்தன. சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் போதனைகள் இப்போக்கை நெறிப்படுத்தின. ஆங்கிலக் கல்வியைக் கற்று அவர்கள் வழிநின்றமையும், நாட்டில் அதிகமாக நிலவும் அறியாமையுமே இந்தியரின் அடிமைத் தனத்துக்கும் அதனால் ஏற்பட்ட குறைபாட்டுக்கும் காரணம் எனப் பலர் உணர்ந்தனர். அவ்வுணர்ச்சியால் உந்தப்பட்ட அறிஞர்கள் கல்வித்துறையிற் கருத்தைச் செலுத்தி ஆவன செய்து கொண்டனர். எல்லா வழிகளாலும் அந்நியராட்சியை அகற்றிச் சுதந்திரத்தை நிலைநிறுத்த முயன்ற இந்திய மக்களே, இலங்கையருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினர்.

4 – 0. "இந்தியாவைத் தொடர்ந்து இலங்கையிலும் சுயாட்சியை நிலைநாட்டும் எண்ணங் கொண்ட தலைவர்கள் அரசியல் விழிப்புணர்வுக்கு வித்திட்டனர். இப்பணியில் ஈடுபட்ட சுதேசிய இயக்கமான 'இலங்கைத் தேசிய சங்கம்' முன்னோடியெனக் குறிப்பிடுதற்குரியது. வேகம், புத்தொளி, உறுதி என்பவற்றைக் கொண்டிருந்த சேர் பொன். இராமநாதன் அவர்கள் தலைமையில் இயங்கிய இச்சங்கம் ஒன்றே முற்போக்கும் முடிவும் அற்ற செயல்களுக்கும், மிக முக்கியத்துவ அரசியல் வலுவுக்கும் இடமாக இருந்தது."[21] சேர் பொன். இராமநாதனின் பின்னவரான சேர் பொன். அருணாசலம் அவர்களும் இவ்வரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்பினர். இவர்கள் சிங்களத் தலைவர்களான சேர் ஜேம்ஸ் பீரிஸ், சேர் பாரன் ஜயதிலகா, திரு. டபிள்யூ. எ. டி. ஈ. சில்வா, திரு. டி. ஆர். விஜயவர்த்தனா முதலியோருடன் தோளோடு தோள் நின்றுழைத்தனர். சுதேசிய இயக்கத்துக்கு வலுவூட்டிய இத்தலைவர்கள் அந்நியர் ஆட்சியை ஒழிப்பதில் முன்னணியில் நின்றனர். இலங்கைச் சீர்திருத்தச் சங்கத் தலைவரான சேர் பொன். அருணாசலத்தின் கூற்று அந்நியருக்கெதிரான போக்கின் வேகத்தைச் சுட்டி நிற்கிறது. "உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், பலமானதும் மதிப்பானதுமான சுய ஆட்சியையுடைய சுயமரியாதை விரும்பும் ஏனைய தேசத்தினர் தம் தேசத்திலிருப்பது போன்றே; எம் தேசத்தில் நாங்களிருக்கக் கேட்கிறோம் .....மற்றவர்களிடத்திற்கைநீட்டிப் பிச்சை புகுவதற்கு இலங்கை யொரு பக்கிரியல்ல. தன்னுடைய பரம்பரை உரிமையையே கோருகிறது."[22] பழைமையைப் போற்றும் குணமுடையவராயிருந்த போதிலும் தேசிய விழிப்புணர்ச்சியின் விறுவிறுப்பு அருணாசலம் அவர்களையும் விட்டுவிடவில்லை என்பதையே இச்சொற்கள் காட்டுகின்றன.

4 – 1. சட்டசபையின் உள்ளும் புறமும் சுயராச்சியத்துக்குப் போராடிக் கொண்டிருந்தவர்கள் இவ்வரசியல்வாதிகள். இப்போராட்டங்களிலே துரையப்பாபிள்ளை அவர்கள் நேரடிப் பங்கு பெறவில்லையெனினும் இப்போராட்டத்தின் முன்வரிசையில் நின்ற அரசியல் வாதிகளான இராம

20. சுயசரிதை — பாரதியார் பாடல்கள்.

21. Vythilingam M. — Life of Ramanathan.

22. Hullugalla H. A. J. — Life and Times of D. R. Wijayawardana — Pg. 67.

நாதன், கனகசபை, பாலசிங்கம் முதலிய தமிழ்த் தலைவர்களுடன் நேரடித் தொடர்புடையவராயிருந்தார். ''இவருடைய புகைப்படங்கள் பத்திரிகைகளிலே வரவில்லை. இவர் சுருக்கமான சொற்களும் விசித்திரமான போக்கும் உடையவர். ஆயினும் இவருடைய காலத்து நிகழ்ச்சிகளிலே இவருடைய தாக்கம் பல அரசியல் வாதிகளுடையதிலும் பார்க்க ஏராளம்''.[23] என்று டி. ஆர். விஜயவர்த்தனவைப்பற்றிக் கூறும் சொற்கள் பாவலருக்கும் பொருத்தமுடையன. தேசிய விழிப்புணர்ச்சிக்கும், அரசியல் சுதந்திரத்திற்கும் இவர் ஆற்றிய தொண்டு இக் கூற்றை வலியுறுத்தும்.

உதயதாரகைப் பத்திரிகையின் ஆசிரியராகக் கடமை செய்யும்பொழுது இப்பணி செவ்விதாக நடைபெற்றது.

''வங்காள தேசத்தவர்களே அதிவைராக்கியமும் தேசாபிமானமுமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். ஐப்பசி 16ஆந் திகதியை வங்காள தேச முழுவதும் துக்கதினமாகக் கொண்டாடினர் ''பிரிவினையை எதிர்த்து'' என எழுதிய பிள்ளையவர்கள் நமது நாட்டின் அரசியல் போக்கைக் கண்டித்து எமக்கு எது அவசியமென்பதைப் பின்வருமாறு கூறுகிறார்: ''அரசாங்கத்தின் போக்குக்கெல்லாம் சம்மதம் காட்டி அவர்களைப் 'பிளீஸ்' பண்ணி நோகாமல் நடந்துகொள்வதே தங்கள் கடமையென்று இலங்கைப் 'பெருத்த' மனுஷர்களெல்லா மெண்ணிக் கொண்டு பொது நன்மைக்குரிய காரியங்களில் கையிடாதிருக்கின்றனர். இவ்வகை நிலை எவ்வளவுக்கிருக்குமோ அவ்வளவு காலமும் இலங்கை விருத்தியற்ற தேசமாயிருக்குமென்பதைச் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை. கோக்கலே, பனேர்ஜி போன்ற பிரபுக்கள் நம் இலங்கைக்கு அவசியம்.'' உணர்வு பூர்வமாக இவ்வாறு உதயதாரகையில் எழுதும் பிள்ளையவர்கள் அரசியல் சுதந்திரத்தை உள்ளும் புறமும் அவாவி நின்றார்.

அரசியல் சுதந்திரத்தை அடைவதற்குத் தேவையான பலம் இதுவே என முற்றுக உணர்ந்த பிள்ளையவர்கள் ஒரு கட்டத்தில் ''பெரிய மனுஷர்களான ஜேம்ஸ் பீரிசுத் துரையவர்களும் சேர் பொன். இராமநாதன் துரையவர்களும் சிறிய விஷயத்திலே மனவேறுபாடுகொள்வது அழகன்று. பொதுவிஷயத்தில் ஈடுபட்டவர்களுக்கு இக்கருத்து மாறுபாடு பொதுநோக்கை அடைவதில் தடை ஏற்படுத்தும்''[24] எனக் கூறி ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

4 — 2. அரசியற் சுதந்திரத்துக்கு அடிப்படையான பொருளாதாரமுன்னேற்றத்திலும் இவர் அதிகஅக்கறைகொண்டிருந்தார். பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் வளத்தையும், பொருளையும் கண்ட பிரித்தானியர் விவசாயம் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கு முன்வரவில்லை. பதிலாக இலங்கையிற் பாதகமான நடவடிக்கைகளையே கைக்கொண்டனர். 1878இன் 11ஆம் இலக்கச் சட்டப்படி எல்லாக் கமக்காரர்களும் பத்துச்சதவீத வரி செலுத்தவேண்டுமெனத் தானியவரி விதித்தனர்; சொந்த வாழ்க்கையையே நடத்தத் துன்பப்படும் வறிய கமக்காரன் இதனாற் பெரிதும் பாதிக்கப்பட்டான். 'விவசாயத்தை விட்டொழி' என்று பிரித்தானியர் கூறுவதாக இதனாற் கருதப்பட்டது; இதற்கு மறுதலையாக மக்கள் யாவரும் விவசாயத்திலீடுபடவேண்டும்; அரசியல் விழிப்புணர்வுடன் இவையும் ஒருமித்து வளரவேண்டுமென்ற கோஷம் பலமாக ஒலித்தது. இந்தியாவிலே திகழ்ந்துகொண்டிருந்த அதேவகை முன்னேற்றம் இலங்கையிலும் திகழ்வதாயிற்று. 1889இல் தானியவரியை நீக்கக்கோரித் தொடங்கிய இராமநாதனின் வாதம் 1892இல் அதன் ஒழிப்புடன் முடிவுற்றது. விவசாயவளர்ச்சிக்குந்தகம் விளைத்த வரியை நீக்கியதுடன், விவசாயத்திலீடுபட எல்லா வழிகளாலும் மக்கள் ஊக்கப்படுத்தப்பட்டனர். இராமநாதனுக்கு முன்னரே ஆறுமுக நாவலர்

23. Hullugalla H. A. J. — Life and Times of D. R. Wijayawardana.

24. உதயதாரகை

ஒரிடத்தில் விவசாய விருத்திபற்றிப் பின் வருமாறு கூறுவதும் இங்கு நோக்கற் பாலது. ''துரைத்தனத்தாருடைய சகாயம் போதுவதன்று. துரைத்தனத்தார் இங்குள்ள காடுகளை அழித்து நாடுகளாக்கி ஏரிகளைத் திருத்தி நீர்பாய்ச்சுவிப்பாராயின் இலங்கைக்குப் போதும் அளவினதாகிய நெல் விளையும்.''[25] துரையப்பாபிள்ளையின் சிந்தனைப்போக்கும் இத்துறையில் மற்றெல்லோரையும் மிஞ்சிவிடுகிறது. மக்கள் வன்னிக்காடுகளுக்குப் போகவும், நவீன விஞ்ஞான சாதனங்களைப் பயன்படுத்தவும், விவசாயச்சங்கங்களை அமைக்கவும், மகாவலிகங்கையைத் திசைதிருப்பவும் கோரி அழைப்புவிடுகிறார். ''யாழ்ப்பாணத்தவர் வன்னி நாடுகளுக்குச் சென்று, கிருஷிக முயற்சி செய்ய அதிக சிரத்தை கொள்ளாதிருப்பது மிகத் துக்கத்துக்குரிய காரியம்'' என்று உதயதாரகையில் குறிப்பிடுமிவர், ''யாழ் கமக்காரர் சேர்ந்து நூதன கிருஷிக முறைகளைப்பற்றிப் பிரசாரணங்கள் செய்வதும், கிருஷிகப் பொருட் காட்சிகள் வைப்பதும், மாதிரிக் கிருஷிகத் தோட்டங்கள் தாபித்து நடத்திச் சனங்கள் நூதன கிருஷிக முறைகளைத் தம் சொந்தக் கண்களால் காணச்செய்வதும் கடமையன்றே'' எனவும் நவீன சாதனங்களுடன் விவசாயத்தைத் தொடர்பு படுத்துகிறார்.

4 – 3: விவசாய வளர்ச்சியோடு ஒட்டிக் கைத்தொழில் வணிகங்களை லீடுபடுவதும் அவசியமாயிற்று. அக்கால இளைஞர்கள் யாவரும் அரசாங்க உத்தியோகங்களே தஞ்சம் என வாழ முற்பட்டனர். இதனால் ஏற்பட்ட விளைவுகளை உத்தியோக ரீதியில் விசாரித்த அமெரிக்கன் போர்ட் பிரதிநிதிகள் சொல்லிய ஆலோசனை பின்வருமாறு அமைந்தது: ''படித்துத் தேறுகிற மற்றெல்லாரும் வேலைக்காகக் கவர்ண்மெண்டார் பேரிலும் மிஷன்கள் பேரிலும் சார்ந்திருக்கிறார்கள். இதனால் வேலைக்காகக் காத்திருப்போர் தொகை வருஷத்துக்கு வருஷம் அதிகரித்து வருகிறது.....உத்தியோகஸ்தர்களும், பிரசங்கிகளும், உபாத்தியாயர்களும் இருக்கவேண்டியது போலவே நன்முயற்பட்ட சமுதாயிகளும், சிற்பக்காரர்களும், சித்திரக்காரர்களும், வியாபாரிகளும் அவர்களுக்குள் இருக்கவேண்டியது அவசியமே. கைப்பாடுள்ள வேலை செய்யப் பிரியமில்லாத எந்த மாணவனும் மிஷன் உதவி பெற்றுப் பள்ளியில் இருக்கப்படாது.''[26] இவ்வாறு இந்தியாவுக்குக் கூறிய நிலையும் ஆலோசனையும்இலங்கைக்கும் பொருந்தியிருந்தது. இச்சவாலைச்சமாளிக்க இந்தியாவில் தோன்றிய சுதேசிய் கைத்தொழில் வணிக முயற்சியை இலங்கையரும் பின்பற்றினர். வங்காளிகளின் புதிய தொழில், முயற்சிகள் இவர்களைக் கவர்ந்தன. கலாநிதி ரேயின் இரசாயன மருத்துவ தொழிற்சாலையையும் சுதேச மேலா (Swadeshi Mela) வையும் பார்த்தபின்னர் இலங்கையிலே தொழிற் புனருத்தாரணம் பற்றிப் பலர் சிந்திக்கலாயினர். ''ஜப்பான், அமெரிக்கா, ஜேர்மனி முதலிய நாடுகளுக்குச் செல்லக் குழந்தைகளைத் தொழிற் பயிற்சிக்கு அனுப்புவதுபற்றி''[27] ரி. சரவணமுத்து எம். ஏ. அவர்கள் சிந்திக்க முன்னரே துரையப்பாபிள்ளையவர்கள் இந்தவழிகளில் ஆலோசனைகள் கூறியுள்ளார். ''இந்தியாவைப்போல் இலங்கையிலும் பரோபகாரிகளெழும்பிச் சங்கங்களாய்க்கூடி முதல் சேர்த்துக் கைத்தொழில் கற்கும்படி தமது வாலிபரை இங்கிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான் முதலிய தேசங்களுக்கு அனுப்புதல் வேண்டும்'' என்று பிள்ளையவர்கள் கூறிய இதேவகை உணர்ச்சியைப் பாரதியாரும் பிரதிபலித்தார். ''வெளிநாட்டுக்குக் கப்பலேறிப் போங்கள், புறப்படுங்கள், புறப்படுங்கள். தொழிலாளிகளே, வியாபாரிகளே, வித்வான்களே, புத்திமான்களே, அந்நிய தேசங்களைப் பார்த்துவிட்டு வாருங்கள். நமது தொழில்களுக்கும், கலைகளுக்கும்,

---

25. யோகசுவாமிகள் — பக். 56

26. Report of the American board representatives on mission work in India.

27, A short biography of the late Mr. T, Saravanamuttu.

யோசனைகளுக்கும் வெளிநாடுகளில் ஏராளமான உதவி கிடைக்கும்''[28] என்று கூறிய பாரதியிலும் ஒரு படி முன்னே சென்று செயலிலும் இறங்கினர் துரையப்பாபிள்ளை. வித்தியாபகுதியினர் தொழிற் கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து கொள்ளாத அக்காலத்திலேயே மாணவர்களைத் தொழிற்கல்வி பயிலும்படி தூண்டி அச்சுத்தொழிலிலும், புத்தகங்கட்டுந் தொழிலிலும் மாணவர் பயிற்சி பெறுவதற்குத் தெல்லிப்பழை ஆசிரிய பயிற்சிக் கூடத்திலே வசதிகள் செய்து கொடுத்தார்.

4 – 4. இத்தகைய செயற்பாட்டுக்கு இலங்கைத் தேசிய வாதமும், தேசிய உணர்ச்சியும் அத்திவாரமாக விளங்கின. சிங்கள மக்களிடையே தேசிய உணர்வு அரும்ப முன்னரே இலங்கையில் தமிழரிடம் இது தளிர்விடுவதாயிற்று. கல்வியில் நாட்டம் கொண்ட மத்தியதர வர்க்கத்தாரின் விழிப்புணர்வு இங்கு அதிகமெனல் பிழையாகாது. உண்மை நிலையில் இராமநாதன் அவர்களே, இலங்கைத் தேசியத்தின் தந்தையும், தீர்க்கதரிசியும் எனக் கூறலாம். இவரைப் பின்பற்றியே ஒருங்கிணைந்து ஏனைய சிங்களத் தலைவர்கள் ஆரம்பத்திற் செயற்பட்டனர். இந்தியாவிலும், இலங்கையிலும் பணிபுரிந்த ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள், மேலும், தமிழரின் மேன்மையையும், உன்னதத்தையும், பழைமைப்பண்பின் சிறப்பையும் சுட்டி அறிவுறுத்தினர். ''இந்தியாவின் கடந்த 2000 ஆண்டுச் சரித்திரத்தை— நமது சமயம் தத்துவ சாத்திரம் கலைகள் முதலியவற்றை விளக்கும் சரித்திரத்தை—ஆராயும் பொழுது காணப்படுவதிலும் சிறந்த இலட்சியங்களை வேறெங்கும் காணமுடியாதென்ற முடிபுக்கு வருகின்றேன்.''[29] என்ற சொற்களின் உத்வேகம் துரையப்பாபிள்ளையவர்களையும் கவர்ந்திருக்குமென்பதில் தவறில்லை. ஆங்கிலக் கல்வியும். யாழ்ப்பாணக் கல்லூரிப் பயிற்சியும் இருந்தபொழுதிலும் பழைமைப் பண்பைக் கைவிட்டாரில்லை. இவரை ஈரடி நிலைக்கு இப்போக்கு உட்படுத்தியபோதிலும் தேசிய உணர்வும் தமிழரின் பாரம்பரிய ஈடுபாடும் அவரை அவைபற்றிப் பேசவும், எழுதவும், கடைப்பிடிக்கவும் தூண்டின. யாழ்ப்பாணத்திலே தமிழ் மகாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்தியப் பேச்சாளர்கள் அழைக்கப்பட்டனர். இதில், துரையப்பாபிள்ளையவர்கள் 'தமிழரின் இன்றையநிலை' என்னும் பொருளிலேயே கட்டுரைவாசித்தார். ஆனந்தக் குமாரசுவாமி அவர்களினால் நடத்தப்பட்ட 'இலங்கைத் தேசிய மதிப்பீடு' (Ceylon National Review) என்னும் சஞ்சிகைக்கு எழுதிய பிள்ளையவர்கள் 'யாழ்ப்பாணத்தின் முற்கால இக்கால நிலை' என்ற தலைப்பில் எழுதினர். இதில் அந்நிய மோகத்தினால் அழிந்த தேசியப் பழைமைக்காக ஏங்கினர். கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலைப் பரிசளிப்பு விழாவிற் சொற்பொழிவாற்றும்பொழுது ''இளம் பெண்களின் ஆடைகள் தேசியத்தன்மை இழந்து போகின்றன; இந்துசமய நாகரிகத்துக்கியையப் பெண்களது உடைகளை அமைப்பது பெற்றோர் கடமை'' எனத் தேசியம் அழிந்தமைக்கு வருந்துகிறார். தமிழரது பண்பாடுகளில் தலைப்பாகையும் ஒன்று. தலைப்பாகை இன்றித் துரையப்பாபிள்ளையவர்களை வெளியிற் காணுவது முடியாத காரியம். இவர் தமது புத்திரர்களுக்குக் 'குல்லா' தலையிலணிந்தே பாடசாலைக்கு அனுப்பி வைப்பாராம். இச்சிறுநிகழ்ச்சிகள் யாவும் அன்னிய மோகத்துக்கு எதிராக மேற்கொண்ட சுதேச உணர்ச்சியின் பிரதிபலிப்புக்களே.

4 – 5. இச் சுதேசியத்தின் இன்னொரு விளைவாகச் சமய மறுமலர்ச்சியும் திகழ்ந்தது. ஐரோப்பிய நாடுகளிலே இந்து சமயத்தை இழிவாகக் கருதி இருந்தனர். இந்நிலையைப்போக்கி இந்துசமயம் என்றால் என்ன என்பதை நிலைநிறுத்தி வந்தார் சுவாமி விவேகானந்தர். இவர் இவ்வாறு பிரசங்கித்துத் திரும்பும் வழியில் இலங்கையில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பிரசங்கம் செய்தார். இவரது சிஷ்யரான

28. சமூகம், பாரதியார் வசனம் பக். 90, 91.

29. ஆனந்தக்குமாரசுவாமி அவர்களுக்கு 1906இல் யாழ்ப்பாணம் அளித்த வரவேற்பு.

சுவாமி அபிதானந்தா என்பவரும் அமெரிக்காவினின்றும் திரும்பும் வழியில் யாழ்ப்பாணத்திற் சொற்பொழிவு நிகழ்த்தினர். இவைகளெல்லாம் தேசியவாதத்துக்குச் சமயத்தின் இன்றியமையாமையை வற்புறுத்தின. ''இந்துக்களென்ரூல் முற்றும் அவபத்தியும் அறியாமையும் நிறைந்த காட்டுச்சனங்களேயெனத் தொடக்கத்தில் ஐரோப்பிய, அமெரிக்கர் கொண்டிருந்த மோசமான விளக்கத்தை மாற்றிப் பூர்வீகத்தில் அவர்கள் அறிவில் மேம்பட்டவோர் சாதியா யிருந்தார்களென மதிக்கவந்தது இந்துக்களின் பூர்வீக மேன்மை அவர்களின் நூல்களிலிருந்து உள்ளவாறு வெளிப்பட்டிருந்ததனாலேயாம்.''[30] சைவசமயம் ஒரு சமயமாக மதிக்கப்படாத நிலையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும், அந்நிலை களையப்படுதலும் தெளிவாக அபிதானந்த சுவாமிகளின் கூற்று வாயிலாகத் தெரிகிறது.

''பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடத்தில் இளமைப் பருவத்தில் கற்கப் புகுந்தவர்கள் அனேகர் சைவமயத்து உண்மையை அறியாமையினாலே கிறித்து மதத்தில் பிரவேசித்துவிட்டார்கள்''. இவ்வாறு பிரவேசித்த பலர் தங்களது அறிவு முதிர்ச்சியினாலும், சமய மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட உண்மை விளக்கங்களாலும் மீண்டும் சைவசமயத்தைத் தழுவத் தொடங்கினர். கிங்ஸ்பரி, கறல், பெரிய நெவின்ஸ் என்பவர்கள் தாமோதரம் பிள்ளையாயும், விசுவநாதபிள்ளையாயும், சிதம்பரப்பிள்ளையாயும் மாறினர். இம்மாற்றம் முன்னர்க் கூறியதுபோலத் தற்செயல் நிகழ்ச்சியல்ல. பழம் பெருமை, யாழ்ப்பாண மகத்துவம். தமிழர் நாகரிகம் முதலியவற்றில் சிரத்தையுடைய துரையப்பாபிள்ளை அவர்களும் ரெயிலர் என்பதை விடுத்து அருளம்பலம் துரையப்பாபிள்ளையெனக் கூறிச் சைவசமயத்துக்கு மீண்டதும் பொருத்தமுடையதே.

இன்று ஐக்கிய போதனா பாடசாலை எனக் கூறப்படும், மிஷனரியால் நடத்தப்பட்ட தெல்லிப்பழை உயர்நிலைப் பாடசாலையில் தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றிய பிள்ளை உதயதாரகையென்ற கிறித்தவ பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். இவர் திருமணம் 1909இல் நடைபெறும்பொழுது உதயதாரகையில் பின் வருமாறு பிரசுரிக்கப்பட்டது. ''ரெயிலர் செல்வி ரூஸபெல் தையல்நாயகத்தை மணம் முடிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. திருமணம் மிகவிரைவில் நடைபெறும்.'' தையல்நாயகி என்னும் சைவப் பெண்ணை மணந்தபொழுதிலும் கிறித்தவத்துக்கு மதம் மாற்றியே செய்து கொண்டார். இவ்வாறெல்லாம் தான் கைக்கொண்ட சமயத்துக்கு உண்மையாக நடந்தபொழுதிலும் உள்ளமென்னவோ சைவத்தையே நாடி நின்றிருக்கவேண்டும்? ''காடினல் நியூமோனைப் போன்று 'மகாஜனா' தாபகரின் சமயத்திலுள்ள கருத்துக்கள் ஒரு நீண்ட கால மாற்றத்துக் குட்பட்டிருத்தல் வேண்டும்.''[31] என்னும் கூற்று ஆதாரமாகிறது. இவர் கோலாப்பூரில் இருக்கும் பொழுதே இம்மாற்றம் ஆரம்பித்திருக்கலாம். மராத்தி மொழியைப் பேசும் இப் பகுதி மக்கள் உறுதியான சைவப் பழமைப் பேர்வழிகள். இவர்களுடன் சேர்ந்து பழகிய தோஷம் இவரைப் பற்றியிருக்கலாம். நேரடிக் காரணம் எதையும் நாம் அறியாவிட்டாலும் வித்துவான் பிரம்மஸ்ரீ சிவானந்தையர், பிரம்மஸ்ரீ முத்துக்குமார சுவாமிக் குருக்கள் ஆகிய இவர்களது சகவாசமும் பெருமளவுக்கு உதவியிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

5 – 0. இவரது சமய மாற்றத்தின் முக்கிய விளைவே தெல்லிப்பழையில் தலை நிமிர்ந்து நிற்கும் தன்னிகரிலாத கல்வி நிலையமாகக் கருதப்படும் மகாஜனக் கல்லூரி. 1910ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் மிஷனரிமாரின் தெல்லிப்பழை உயர் நிலைப் பாடசாலையை விட்டு வெளியேறியதும் தமது வீட்டிலேயே பாடசாலையை ஆரம்பித்தார் பிள்ளை அவர்கள்.

30. உதயதாரகை 1906.

31. மகாஜனக் கல்லூரிப் பொன்விழா மலர் — பக். 3.

"Here was a man to hold against the world
A man to match the mountains and the sea"
என்று புகழக் கூடியதாயிற்று; அக்காலத்தில் அவர் செய்த இச் செய்கை. "இவருடைய ஒரு வார்த்தையினாலேயே 80 சதவீத மாணவர்களும் நான்காசிரியர்களில் இருவரும் மிஷனைவிட்டு விலகி வீட்டில் நடாத்திய புதிய பாடசாலையிற் சேர்ந்து கொண்டனர்."[32] என்ற என். சங்கரப் பிள்ளையின் கூற்றுப் பிள்ளையின் செயலின் வலுவைத் தெளிவுபடுத்துகிறது.

5 – 1. மிஷனின் ஆதிக்கத்துக்குக் கீழேயே கல்வி நிலைத்திருந்த அக்காலத்தில் பல சைவப் பெரியார்கள் இவ்வகையான நடவடிக்கைகளை மிஷனுக்கு எதிராக மேற் கொண்டனர். காரைநகர் இந்துக்கல்லூரியின் தாபகரான அருணாசலம் அவர்கள் இவ்வாறான நடவடிக்கையில் முன்னோடியெனக் கூறப்படுவர். திரு. அருணாசலத்துக்கு முன்னரே நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்து நடத்தினாரெனினும் அதன் வளர்ச்சியும், தொடர்ச்சியும் இடையிடையே அற்றுவிட்டது. காலம் பின்னோக்கி நகரவே தேவையும், சேவையும் சேர்ந்து இவ்வகையான கல்வி முயற்சிகளில் பெரியவர்கள் ஈடுபட முனைந்தனர். இடையறாத இம்முயற்சிகளில் முன்னின்று ஏனையவர்க்கு வழிகாட்டினார் அருணாசலம். இவர் பாதிரிமாரின் கல்வி கற்பித்தலின் உள்நோக்கத்தையும் மத மாற்ற முறையையும் நன்குணர்ந்தவர்; தெல்லிப்பழை போதனா பாடசாலையில் இறுதிப்பரீட்சைக்குக் கற்றுக்கொண்டிருக்கும்போது கிறித்துவ சமயத்தில் புகவேண்டிய நெருக்கமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. பரீட்சை முடிந்து வீடு செல்லுமுன் ஞானஸ்நானம் பெறுகிறேன் என்று கூறினார். பரீட்சை முடிந்த அன்றிரவு நடுநிசியில் தம் பெட்டியையும் எடுத்துக் கொண்டு மதிலின் மேலாகப் பாய்ந்து நடந்து வீட்டை அடைந்தார்."[33] சைவப் பிள்ளைகளின் துன்பத்தை நன்குணர்ந்த இவர் 1885ஆம் ஆண்டளவில் அக்கால வழக்கப்படி ஒரு வீட்டுத் திண்ணையிற் பாடசாலையை ஆரம்பித்தார். இது சுப்பிரமணிய வித்தியாசாலையாயிற்று. 1889இல் இவர் காட்டிய ஊக்கத்தின்வழி உதயமான 'சயம்பு பாடசாலை' இன்று காரைநகர் 'இந்துக்கல்லூரியாக'த் திகழ்கிறது.

இதே சிந்தனைப்போக்குடன் வண்ணார் பண்ணையில் திரு. ரி. நாகமுத்து அவர்கள் மெத்தை வீட்டில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். 'இந்துக்கல்லூரியில்' ஆசிரியராயும் விடுதி மேற்பார்வையாளராகவும் விளங்கிய இவர் சைவ மாணவர்களின் நலன் கருதித் தொடங்கிய இப்பாடசாலை இன்று 'வைத்தீஸ்வர வித்தியாலய'மாக விளங்கி நிற்கிறது. இவ்வாறு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே பாடசாலைகள் தோன்றிக்கொண்டிருந்தன. அங்கெல்லாம் பாடசாலை தோன்றும்போது மக்களின் ஆதரவும் கிடைத்துக் கொண்டிருந்தது.

5 – 2. மிஷனின் ஆரம்பகாலச் செல்வாக்கை முற்று முழுதாகப் பெற்ற தெல்லிநகர் மக்கள் தங்களுடைய பணப்பையைத் திறப்பதில் மிகவும் தாமதமுடையவர்களாகவும் ஓர் இந்துப் பாடசாலை வேண்டுமென்ற கருத்துக்களை அறியக்கூடிய உயிர்ப்பு இல்லாதவர்களாகவும் காணப்பட்டனர். இத்தன்மையுடைய மக்கள் துரையப்பாபிள்ளைக்கு முழு ஆதரவையும் அளித்திருப்பார் எனக் கூறலியலாது. திரு. நாகமுத்து அவர்கள் ஆரம்பித்த பாடசாலைக்கே மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை; அரசாங்க உதவியும் இல்லாத நிலையிற் பாடசாலை தளர்ந்து விடாது காக்க இராமகிருஷ்ணமிஷனிடம் பாடசாலையை திரு. நாகமுத்து அவர்கள் ஒப்படைக்க வேண்டியதாயிற்று. இத்துன்ப நிலையின் பெறுபேற்றை மாணிக்க இடைக்காடரின் சொற்கள் பிரதிபலிக்கின்றன. "தெற்கின் கல்வி நிலைய முகாமையாளனாக இருப்பது போன்று வடக்கில் இருப்பவன் அதிர்ஷ்டம் வாய்ந்தவனெனக் கூறமுடியாது. வடக்கில் தனித்தோ, குழுவாகவோ ஒரு நிறுவ

32. Mahajana College Carnival Souvenir.

33. திரு. ச. அருணாசலம் — காரைநகர் சைவமகாசபை வெளியீடு.

திருமதி தையல்நாயகம் துரையப்பாபிள்ளை

தோற்றம் : 25–6–1889 மறைவு : 1–3–1954

னத்தை ஆரம்பித்தால் அவன் பொருள் வசதியற்று அத்தாபனத்தை நடத்துவதில் தளர்வடைவது இயல்பாயிற்று.''[34] இந்த யதார்த்த சூழ்நிலையில் தெல்லிப்பழைச் சுற்று வட்டத்துக்கெனத் துரையப்பா பிள்ளை அவர்கள் பாடசாலையை ஆரம்பித்த முற்போக்குவாதமும், அதனை 'மக்கள் பாடசாலை'யெனப் பெயரிட்ட உறுதியும் போற்றுதற்குரியனவே.

மிஷனரியின் பாடசாலைத் தலைமைப் பதவியை வகித்த, ஒரு கிறித்தவர் அவர்களுடன் மனவேறுபாடுகொண்டு, அவர்களது கண்ணெதிரிலேயே மதத்தை மாற்றிக் கொண்டு, கிறித்தவ மதத்துக்கெதிரான சைவப் பாடசாலையை ஆரம்பிப்பதென்றால் அவரது தீர்க்கதரிசனப் போக்கும், காலச் சூழலும் ஒருபுறமிருக்க, அவரது வலுவான உளத்தையும் அது காட்டி நிற்கிறது. இது இவரது உறுதியான போக்கை மலினப்படுத்த — துணிவாக இறங்கிய செயலைப் பலவீனப்படுத்த—பல காரியங்கள் நடந்தேறின. ''அப்பகுதியிற் பிரபல்யமான மனிதர்களை ஆசிரியர்களாக்கி அவர்களைக் கொண்டு அப்பகுதி மாணவர்களை மிஷன் பாடசாலையிற் சேரத் தூண்டிக் கொண்டிருந்தனர். இதன்மூலம் துரையப்பாபிள்ளையின் பாடசாலையை முறியடிக்கலாம் என்பது அவர்கள் கருத்து.''[35] ஊர்ப் பிரமுகர்களினதும் மிஷனரிமாரினதும் நிலை இவ்வாறிருக்க அரசாங்கத்தின் மனப்போக்கும் பிள்ளைக்குப் பாதகமாகவே அமைந்தது. ''திரு. ஜே. ஹோவாட் கல்வி அதிபர் தெல்லிப்பழை மிஷன் பாடசாலையைப் பார்வையிட்டு அதனுடைய அநாதரவான நிலையை மனதிற்கொண்டு மகாஜனவைக் கணிக்கக் கூடாதென்ற ஒரு பாரபட்சமான முடிவைக் கொண்டிருந்தார்.''[36] பலமானத் தாக்குதலுக்கிடையே பாவலர் பாடசாலையைப் பரிபாலிக்கவேண்டியிருந்ததுடன் அரசு ஏற்பதற்குரிய தகுதியிலும், மாணவர்க்குக் கல்வி புகட்டும் சாதுரியத்திலும், குறைவு நேராது கவனிக்க வேண்டிய பொறுப்பையும் ஏற்றிருந்தார்.

பாடசாலை மாணவர்களின் தொகையைக் காப்பாற்றுவதிலும், நிதி சேர்ப்பதிலும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் அளிப்பதிலும், கட்டிடங்களையும் தளபாடங்களையும், எதிரிடையான கல்விக் கந்தோருடன் பாடசாலைப் பதிவு சம்பந்தமாகப் போராடுவதிலும் பெருங்காலம் செலவழிந்தது. இவ்வாறான போராட்டங்களை மனதில் நினைத்தே திரு. சங்கரப்பிள்ளை அவர்கள், துரையப்பாபிள்ளை அவர்கள் இறந்த பின்னர் பின்வருமாறு இரங்குகின்றனர்: ''சுமத்தப்பட்ட பாரம் மிகவும் கூடுதலாக இருந்த காரணத்தினால் அவருடைய உருக்கு நரம்புகளும் தளர்ந்துபோக வேண்டியதாகவும் காலத்துக்கு முந்தியே அவரைக் கூற்றுவன் அழைத்துக்கொண்டான்.''[37] ஏனையோருக்கு ஒளி கொடுப்பதற்காகத் தீபம் தன்னையே எரித்துக் கொள்வது போன்று பொருளாதாரப் பலம் சிறப்பாக இல்லாத நிலையிலும் சைவப் பாடசாலையைத் தமது இல்லத்திலே தொடங்கி அதனை அரசாங்கம் 1918இல் உதவி நன்கொடை வழங்கி அங்கீகரிக்கும் வரையும், தம்மையே எரித்துக்கொண்டுள்ளார்.

இக் காலகட்டத்தில் இவரது இலக்கிய சமூக முயற்சிகள் மந்தப்பட்டிருந்த நிலை ஒன்றே இவரைப் பாடசாலை விவகாரம் நிலைகுலைத்திருந்தது என்பதைத் தெளிவுறுத்தும்.

5 — 3. மிஷனரிமாரின் சார்பாக இருந்த அரசுக்கு எதிராக மகாஜனவைச் செழிப்புறச் செய்யக் கையாண்ட புதிய உத்திகள் இவரது திறமையையும்சிந்தனையையும் ஆற்றலையும் புலப்படுத்துகின்றன. பரீட்சிக்க

---

34. 'Vaidyeswaran' — Golden Jubilee Number.
35. கந்தையா எஸ். — மகாஜனா பொன்விழா மலர் — பக். 82.
36. சங்கரப்பிள்ளை என். Ibd — Pg. 14.
37. சங்கரப்பிள்ளை என். Ibd — Pg. 12.

விரும்பாத அரசுக்கு எதிராகச் சிறந்த கல்வி மான்களைக் கொண்ட பரீட்சகர் குழுவை அமைத்து அதன்மூலம் பரீட்சித்தார். இக் குழுவில் சைவப்பெரியார் எஸ். சிவபாத சுந்தரம், ஜீ. சிவராவ், சி. கே. சுவாமிநாதன், ரி. எச். குறெசெற் ஆகிய அறிஞர்கள் அங்கம் வகித்தனர். அக்காலத்து இப் பெரியார்கள் பாவலரிடம் கொண்டிருந்த பெருமதிப்பும் இதனுலே தெரியவரும்.

முழுநேர ஆசிரியர்களை எல்லா வகுப்பு களுக்கும் ஒழுங்கு செய்யமுடியாத பட்சத் தில் வேறு பாடசாலைகளிலே கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவையைப் பயன்படுத் தினர். அவ்வாறு பயன்பட்டவர்களில் திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் குறிப்பிடப் படக்கூடியவர். ''திரு. சங்கரப்பிள்ளை அவர் கள் கணிதத்திற்கு அவரது பாடசாலை முடிந்ததும் வந்து சேர்வார்'' எனத் துரையப்பாபிள்ளை அவர்கள் பாட சாலையை ஆரம்பித்த காலத்தே கற்ற திரு. கந்தையா அவர்கள் கூறுவார்.

வசதிகள் குறைந்த இப் பாடசாலையில் மாணவர்களுக்குக் கற்பித்தல் என்பதே தனிக்கலை. அக்கலையைப் பிள்ளையவர்கள் உபயோகித்த முறையே தனிச்சுவை யுடை யது. ''ஆரும் வகுப்பிலிருந்து கேம்பிரிஜ் கனிஷ்ட பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவது இலகுவான காரியமன்று. இலத்தீன் போன்ற பாடங்களால் ஆசிரியர்களும் நாங்களும் கடுமையாக உழைத்தோம். 'அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டாது' என்ற பழமொழியில் நம்பிக்கையுடையவர் எங்கள் தலைமை ஆசிரியர். இதனுல் அது எந்த நேரமும் உபயோகிக்கப்படும். அவ்வீட்டு அம்மை யார் இரக்கங் கொண்டு சிலவேளைகளிற் பிரம்பினை ஒளித்துவிட்டால் அங்கு ஒரு சிறு குழப்பம் நடைபெறுவதைக் கேட்கலாம்... ..... எங்களுடைய வகுப்புக்கள் தலைமை யாசிரியரின் வீட்டில் நடைபெற்றன. எங்க ளுக்குத் தரப்பட்ட பயிற்சியோ தனித்துவ முடையது. அது பழங்காலக் 'குருகுல' முறையை ஒத்திருந்தது. முழு நாளுமே எங்களுடைய வீட்டுப் பாடசாலையில் கழிந்தது''.[38] எவ்வளவுக் கெவ்வளவு பழமைப்பாணியைப் பிள்ளையவர்கள் கையாண்டாரோ அவ்வளவுக் கவ்வளவு நவீன உத்திகளையும் தெரிந்து பயன் படுத்தினர். ''இவர்கள் மாணவர்களுக் குச் சுவைபடப் பாடங்களை நடத்தும் கலையைத் தெரிந்தவர். ஆகக் குறைந்த மாணவனும் இவர் பாடங்களில் ஈடுபா டடைவான் .....மாணவர்களின். கஷ்ட நஷ்டங்களை உணரவும் கருணை காட்டவும் உள்ளம் உடையவர். விஞ்ஞான விரி வுரைகள் செயல்முறையாகவும் (Magic Lantern Show) மூலமாகவும் விளக்கப் பட்டது.''[39] இவ்வாறு நவீன நாட்டங் கொண்ட பிள்ளையவர்களைப் பற்றிக் கூறும் பா. முத்துக்குமாரு அவர்கள் மாணவர் மீது அவர்கொண்ட அன்புக்கும் நெகிழ்ச் சிக்கும் ஓர் உதாரணம் காட்டுவார்: ''பதினெரு வயது நிரம்பிய எமது சகோ தரன் மகாஜனவில் படித்துக்கொண்டிருக் கும்போது நோய்வாய்ப்பட்டிருந்தான். அவனது கடைசி நாட்களில் அடிக்கடி அவனைப் பார்த்துவந்த துரையப்பாபிள்ளை அவர்கள் கடைசியில் மனநெகிழ்ச்சி உடை யவராய் விட்டா ரென்பதை அவரெனக் கெழுதிய தேற்றக்கடிதத்திலிருந்து அறியக் கூடியதாயிற்று.'' இவரது இத்தகைய செயல்களைத் தொகுத்து நோக்குமிடத்து ''நல்ல ஒரு சூழ்நிலையிற் பிரசித்தி பெற்ற கல்விமானுக 'ஆர்னல்ட் றக்வி' போன்று எழுச்சி உற்றிருக்கலாம்'' என்ற சங்கரப் பிள்ளை அவர்களின் கூற்று மிகப் பொருத்த முடையதே.

இவர் தமக்கும் அரசுக்கும் இடையே யுள்ள முட்டுக்கட்டையைப் அரசியல் வாதிகளின் உதவியை நாடித் தீர்க்க முனைந்தார். அக்காலத்தில் பிரபல்யமான திரு. கனகசபை, திரு. பாலசிங்கம் ஆகிய அரசியல்வாதிகள் இவரது பாடசாலைக் காக உழைத்தபொழுதிலும் எட்டு ஆண்டு களுக்குப் பின்னரே அரசாங்கம் கையேற்க முன்வந்தது. இவ்வெட்டாண்டுக் காலமும்

38. கந்தையா எஸ். — மகாஜன பொன்விழா மலர் — பக். 83.

39. Mahajana Carnival Souvenir — Pg. 17.

அரச அலுவற் பற்றற்ற தேர்வுக் குழு — 1915

மகாஜனக் கல்லூரியை அரசினர் அங்கீகரித்துப் பதிவுசெய்ய மறுத்தமையால் இக் குழுவை நிறுவி உரிய முறைப்படி தேர்வுகளை நடாத்த பாவலர் துரையப்பாபிள்ளை ஒழுங்கு செய்தார்.

இருக்கையில்: [இ – வ] திரு. சி. கே. சுவாமிநாதன் (துணை அதிபர், இராமநாதன் கல்லூரி), பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை, திரு. ஜி. சிவராவ் (அதிபர், யாழ். இந்துக்கல்லூரி), திரு. ரி. எச். குரேரெச் (உப அதிபர், பரி. யோவான் கல்லூரி). திரு. சு. சிவபாதசுந்தரம் (அதிபர், விக்ரோறியாக் கல்லூரி – படத்தில் இல்லை).

நிற்றல்: கல்லூரி ஆசிரியர் திரு. என். சங்கரப்பிள்ளை, திரு. ஏ. கந்தையா, திரு. எஸ். இரத்தினசபாபதி, திரு. க. இலங்கநாயகம்.

தமது குடும்பமான மனைவியிலும், மூன்று மக்களிலும் அதிக அக்கறை காட்டும் சந்தர்ப்பம் கிடைத்திலது. ''எங்கள் குடும்பம் தாயின் பொறுப்பிலேயே இயங்கிற்று. எங்களின் தேவைகளையெல்லாம் தாயாரே கவனித்தார். அடுக்களைக்கும் வந்து நின்று வேடிக்கையாகக் கதைகூறும் தந்தை அதிகமான நேரத்தை ஆழ்ந்த சிந்தனையிலேயே செலவழித்தார்.'' என்னும் தெ. து. ஜயரத்தினத்தின் கூற்று இதனை மெய்ப்பிப்பதாக உள்ளது.

6 - 0. வீட்டு விவகாரங்கள் என்ன, தனக்குக் கைவந்த கவிதைக் கலையிலும் இக்காலத்தில் கவனத்தைச் செலுத்தியதாகத் தெரியவில்லை. இவரது ஆக்கத் தொகுதியான சிந்தனைச்சோலையின் பெரும் பகுதி 1910க்கு முன்னரும் 1918க்குப் பின்னருமே வெளிவந்திருக்கவேண்டும். பாடசாலை தவிர்ந்த ஏனைய முயற்சிகளில் மந்த நிலையைக் காட்டும் இடைப்பட்ட காலத்தில் தனிப்பாடல்கள் தேவை கருதி இயற்றப்பட்டன. இராமநாதன் கல்லூரித் திறப்பு விழாவிற்கு 1913இல் பாடிய பாடலை இவ்வாறே கருதமுடியும். இவரது இலக்கிய சேவை கவிதையோடும் நாடகத்தோடும் அமையாது கட்டுரைத் துறையிலும் சென்றது. 'இந்துசாதன'த்தின் உதவியாசிரியராகக் கடமையாற்றும் பொழுது எழுதியதாகக் கருதக்கூடிய, ஆனால் இன்னும் உறுதி செய்யப்படாத கட்டுரைகள் இவர்பேரில் எழுத்துருவம் பெறுதுள்ளன. 'How to eat and what to eat', 'Use and usefulness of English' என்பன இவரால் எழுதப்பட்டன எனக் கருத இடமுண்டு. இவை எழுதப்பட்ட காலகட்டத்திலேயே 'Ceylon National Review' என்னும் பத்திரிகையில் எழுதிய 'Jaffna Past and Present' என்னும் கட்டுரையும் பெயர் குறியாமல் வெளிவந்து கொண்டிருந்ததென்பதும் மனங்கொள்ளத் தக்கது. கேட்டார்ப்பிணிக்குந் தகையதாக யாழ்ப்பாணத் தமிழ் மகாநாட்டிலே இவர் வாசித்த 'தமிழரின் இன்றைய நிலை' என்ற தலைப்புக் கட்டுரையும் பிள்ளையவர்களின் கட்டுரைத் திறமைக்குச் சான்று பகர்கிறது.

6 – 1. கவிதை உரைநடை இலக்கியங்களைப் பொறுத்த மட்டில் 'பாவலர்' காலம் குறிப்பிடக்கூடிய வொன்றாகும். ''நவீனத்துவத்தைக் கையாள முற்பட்ட முயற்சி 20ஆம் நூற்றாண்டிலே இலக்கிய கர்த்தாக்களால் முழு உணர்வுடன் கைக்கொள்ளப்பட்டதாயினும் பின் நோக்கிப் பார்க்கும்பொழுது சென்ற நூற்றாண்டின் கடைக்காலமிருந்து அது படிப்படியாக உருவாகிவந்துள்ளது.''[40] இத்தொடர்பிலே கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர், அண்ணாமலை ரெட்டியார், இராமலிங்க சுவாமிகள், வேதநாயக சாஸ்திரியார் முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் பெரும்பாலும் இனிய, எளிய நடையில் இசைப்பாங்குடன் செய்யுள்கள் இயற்றியவர்கள். சிந்து, கும்மி, கண்ணி முதலிய இசைப்பாக்களும், கீர்த்தனைகளும் இவர்களாற் சிறப்பாகப் பாடப்பெற்றவை, இவர்கள் எளிய பதம், எளிய நடை, எளிய சந்தம், எளிய மெட்டு என்பவற்றைக் கையாண்டபொழுதிலும் ஒருசிலரே எளிய பொருளைக் கையாள முனைந்தனர். பொருளிலும் எளிமையைப் புகுத்த முனைந்தவர்களுள் வேதநாயக சாஸ்திரி, இராமலிங்க சுவாமிகள் இருவரும் குறிப்பிடப்படக் கூடியவர்கள். இவர்களது பாடல்களிலே தமது கால சமூகப் பிரக்ஞை தலைகாட்டுகிறது. கிறித்தவரான வேதநாயக சாஸ்திரியின் பாடல்கள் ''கிறித்து மார்க்கத்தின் கொள்கைகளைத் தன்முனைப்புடன் எடுத்துக் கூறுவனவாயுள்ளன. புதிதாக மதம் மாறியோரிடத்துக் காணப்படும் வரம்பு மீறிய கொள்கை வெறியும் பற்றூர்வமும் சாஸ்திரியார் பாடல்களிலே பிரதிபலிக்கின்றன.''

''சாதியேதுகாண் – அதிலொரு
சைவமேதுகாண்''

என்னும் பாடல் அக்காலச் சமுதாயப் பிரச்சினையை இவர் அணுகுமுறைக்குத் தக்க எடுத்துக்காட்டாகும்.

40. கைலாசபதி க. தினகரன் 25 யூன். 1972.

6 - 2. பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பாவலரான துரையப்பாபிள்ளையவர்களின் கவிதைகளை இப்புதுமைப் போக்கு நெறிப் படுத்தியது. இவருக்குப் பத்து வருடங் களின் பின்னே பிறந்து, பாவலர் உலகத் தையே புதுமையாற் கவர்ந்த பாரதியார் இவருக்குச் சமகாலத்தவர். பாரதிக்குக் களம் சமைத்தவர்களாக முன்னே கூறிய கவிஞர்கள் கருதப்பட்டாலும் எல்லா வகையிலும் நவீனத்துவத்தின் முன்னோடி யாகப் பாரதி அமைந்துவிட்டான். சொல் லிலும் சிந்தனையிலும் ஒரு புதிய காலத் தைப் படைக்க முனைந்த பாரதி பாவல ரைக் கவர்ந்திருப்பாரென்பதில் ஐயமில்லை. ஆயினும், பாவலர் பாடல்களிலே காணப் படும் அறக்கருத்துக்களும் பழமைக்கும் புதுமைக்கும் முடிச்சுப்போடும் போக்கும் பாரதியினின்றும் இவரைத் தெளிவாக வேறுபடுத்துகின்றன. ஆயினும் பாவல ரிடத்திற் காணப்படும் பழமைப் பண்பு ஈழத்து இலக்கிய முன்னோடி எனக் கூறு வதைத் தடை செய்யாது.

6 – 3. **"இவர் பாடிய பாடல்கள் சமூக விழிப் புணர்ச்சியையும் சமுதாயச் சீர்திருத்தத்தை யும் அவாவிய அக்காலச் சமூகத்தின் போக்கிற் கிணங்கக் காலத்தின் குரலாகப் பன்முகப் பட்ட உணர்வுகளையும் தேவைகளையும் ஒருங்கே நிறைவு செய்வனவாக அமைந்தன"**[41] என்று ஆ. சிவநேசச்செல்வன் அவர்கள் கூறுவது மேலும் பிள்ளையவர்களின் உணர்வு பூர்வமான சமுதாய நோக்கைச் சுட்டிக் காட்டுகிறது. அக்காலத்திலே இந்திய அரசியல் வானிலே நிகழ்ந்த வீரர்கள், சமயச் சீர்திருத்தவாதிகள், கிறித்தவ மிஷனரிமாரின் செயல்கள், தமிழ்க்கல்வி யின் தாழ்ந்த நிலை, கலாசாரப் பாரம் பரியத்தின் வீழ்ச்சி முதலியவற்றை யெல் லாம் பேச்சுத்தமிழை அடிநிலையாகக் கொண்டு ஆக்கினர். இச்சிந்தனைச் சிதறல் கள், அவரது பத்திரிகைத் தொடர்பால் ஏற்பட்டிருக்கலாம். காலத்துக்குக் காலம் காணப்படும் குறைபாடுகளைப் பத்திரிகை வாயிலாக உணர்த்திய பிள்ளைக்கு இவை உந்துதலாக அமைவுற்றிருந்தன.

இதன் காரணமாகவே "கோபால கிருஷ்ண பாரதியார், இராமலிங்க சுவாமிகள், வேதநாயகம்பிள்ளை, பாரதியார் என்போர் தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றிப் பாடிய பாட்டுக் களை அடிக்கடி நினைவூட்டும் பாடல்களைப் பிள்ளை யவர்கள் யாத்திருக்கின்றார்."[42] யாழ்ப்பாண சுவதேசக்கும்மி, எங்கள் தேசநிலை, கீதரச மஞ்சரி ஆகிய பகுதிகளிற் காணப்படும் பாடல்கள் புதியதொரு யாழ்ப்பாணத்தை நிச்சயமாகக் காட்டவில்லை. எங்கள் தேச நிலையில்,

"கொண்டைக்குப் பூச்சூடும் குணம்போச்சு—நாடாக்
கொண்டு மயிர்முடிக்கும் காலமாச்சு
தண்டைப்பாதசரங்கள் தவிப்பாச்சு–பெண்கள்
சப்பாத்துள் நொண்டிவரக் காலமாச்சு"

என வரும் அடிகள் நல்லதோர் உதாரண மாகும்.

கீதரச மஞ்சரிக்கு முகவிலாசம் எழுதிய கதிரைவேற்பிள்ளை அவர்கள் "தமிழ் நாட் டவருக்குச் சற்புத்தி புகட்டிக் கால விருத்திக்கும் தேச நலத்திற்கும் மேற் சன்மார்க்க விஷயங்களில் எவரும் விளங்கத்தக்க செம்பாகமான பாஷையிற் கேட்போர் செவிக்கின்பம் பயக்கத்தரும் மதுரமான இராகங்களில் சொற்சுவை பொருட்சுவை நிறைந்த இக் கீர்த்தனை மாலையை வெளிப்படுத்தியுள்ளார்கள்", என்பர். இவரது கூற்று, பாவலர் சங்கீத ஞானத்தைத்தெளிவுபடுத்துகிறது. மேடை களிலே பாடுவதற்கு முன்னர் பலமுறை பயிற்சியளித்து இராகத்துடன் அமைந் தாலே பாடகரை மேடையேற்றும் நடை முறைப் பண்புடையவராயிருந்தார் பிள்ளை யவர்கள். கீர்த்தனங்கள் இவருக்குக் கை வந்தனவாயிருந்தன: கிறித்தவராயிருந்து கீர்த்தனங்களிலே பாடிப் பழகிய தோஷம் இவருக்கு இந்நிலையை அளிப்பதாயினும் பிற யாப்புக்களையும் கையாள்வார். வெண்பா, ஆசிரியப்பா முதலியவற்றில் ஆற்றல் உள்ள இவர் எடுத்த உடனேயே கவிபாடும் திறன் படைத்தவர். மாணவன் ஒருவன் புகையிலை மென்றதைக் கண்ட

41. மல்லிகை, துரையப்பாபிள்ளை நினைவு இதழ் ஜூலை 1972. பக். 22.

42. கைலாசபதி க. தினகரன் 28–12–60.

பாவலர் அவனைத் தண்டியாது அவன் மேல் வெண்பா ஒன்றை இயற்றினராம். தமிழிலுள்ள பா வடிவங்களை ஆங்கிலப் புலமையுடையவரான கா ர ண த் தா ல் பரிசீலனை முயற்சியாக ஆங்கிலத்திலும் பாடிமுடித்துள்ளார்.

பாவலரின் பாடல்கள்,

"கவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதைஎந்நாளும்அழியாதமாகவிதை."

எனப் புகழத்தக்கனவே.

6 – 4. கிறித்தவராயிருந்த காலத்தே கிறித்தவ நெறி பரப்பிய 'உதயதாரகை'ப் பத்திரிகையின் ஆசிரியராகவும் கடமை புரிந்தார். இது 1905இலிருந்து 1908வரை யுள்ள மூன்று வருட காலமென ஊகிக்க இடமுண்டு. இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் இப்பத்திரிகை ஒரு புதிய மாற்றத்தையும், வேகத்தையும் பெறுவ துடன் சமகாலத்துச் சமுதயாய அரசியல் பிரச்சினைகளையும் உணர்வு பூர்வமாக அணுகுகிறது. இவர் எழுதிய தலையங்கங் கள் இவரது காலத்தின் தேவையற்ற மாற்றங்களைச் சாடி நிற்கின்றன. 'யாழ்ப் பாண தரிசனன்' என்ற புனைபெயரிலே அந்நிய பழக்கவழக்கங்களையும் கண்மூடித் தனமான கொள்கைகளையும் வேடிக்கை யாகக் குத்திக் கண்டித்தார்.

இக்கண்டனங்களும் சீர்திருத்தக் கருத் துக்களும் வாழ்நாளின் இறுதிவரை நீடித் தன. 'இந்துசாதன' ஆங்கிலப் பத்திரிகை யின் துணையாசிரியராக விளங்கும்போது இத்தொண்டைச் செவ்வையாக நிறை வேற்றினர். அப்பொழுது அவர்தம் புனை பெயரை "யாழ்ப்பாணச் சீர்திருத்தவாதி" (Jaffna Reformer) என வைத்துக்கொண் டார். 1921ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17ஆம் திகதி ஆங்கில உ த வி ப் பத்திராசிரிய ராக இருந்த ச. சிவகுருநாதர் அவர்கள் தேகவியோகமாயினர். அவருடைய இடத்தில் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள் நியமனம் பெற்றார். 1924ஆம் ஆண்டு மேமாதத்தில் அ. சபாபதி அவர்கள் காலமாகவே ஆங்கிலப் பத்திராசிரியராக வும் கடமைபுரிந்து, மீண்டும் எம். எஸ். இளையதம்பிஅவர்கள் பத்திராசிரியராகவே அவருடனும் 1925வரை உதவி ஆசிரியராக இருந்து பணிபுரிந்தார். இதனைவிட 'மாண வர் சஞ்சிகை' என்ற ஆங்கில சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து மாணவர்களுக்கு உதவி புரிந்த இவர் கொழும்பில் வெளி யான தினசரிகளுக்கும் விடயதானமளித்த தாகத் தெரிகிறது.

இவர் எழுப்பிய சீர்திருத்தக் கருத் துகள், செய்துமுடித்த சமூகசேவைகள், நடத்திய இலக்கியக் கூட்டங்கள், யாத்து முடித்த கவிதை ஊற்றுக்கள் மக்களால் இன்றும் உணரப்படுகின்றன. இளம் வயதிற் கால நீரோட்டத்துடன் சேர்ந்து நீச்ச லடித்த பிள்ளையவர்கள் வாழ்வின் பிற் பகுதியில் காலநீரோட்டத்திற்கு எதிர் நீச்சல் போட்டு வெற்றிகரமாகக் கரை யேறி நின்ற கர்மவீரன். பாவலர் துரை யப்பாபிள்ளை அவர்களைக் க ா ல னி ன் கைகள் கவர்ந்தபோதிலும், காலத்தின் கைகள் அணைத்து நிற்கின்றன.

பாவலர் போற்றுதும்

பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை

ஆங்கிலமும் வல்லான் அருந்தமிழ்நூ லும்வல்லான்
தேங்குபிர சங்கமழை சேர்ந்தமுகில் — பாங்குடைய
தேசநலம் பாஷைநலம் சேர்ந்ததொண்டி னிற்பிரியன்
ஆசிரிய னன்றிமற்றிங் கார்.

பேராசிரியர்
கலாநிதி கு. வித்தியானந்தன்
M. A. (Cey.) Ph. D. (Lond.)
தமிழ்த்துறைத் தலைவர்,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை வளாகம்.

துரையப்பாபிள்ளையின் சமூக நோக்கு

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈழத்திற் சமூக சீர்திருத்தங் கருதித் தொண்டாற்றிய பெரியார்களுட் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றவர் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையவர்கள். கலாயோகி ஆனந்தக்குமாரசாமியும், சேர் பொன். இராமநாதனும் கலை, தேசியம், அரசியல் ஆகிய துறைகளில் ஆற்றிய சமூக நலன் கருதிய தொண்டுகளுக்கு இணையாகக் கொள்ளக் கூடிய பெருமை மிக்கது பாவலரவர்களது சமூகத் தொண்டெனலாம்; சமூக சேவையிற் செயல்வீரராக இவர் விளங்கியதை அவர் நிறுவிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இன்றும் பறைசாற்றி நிற்கின்றது. இன்று மக்கள் சகாப்தம் என்று கூறப்படுகின்றது. ஆனால், 62 ஆண்டுகளுக்கு முன்பே தெல்லிப்பழையில் மக்கள் சகாப்தத்தை — மகாஜன சகாப்தத்தை — துரையப்பாபிள்ளை தொடக்கி வைத்துவிட்டார். பாவலர் தாம் நிறுவிய கல்லூரியைச் சமூக நோக்குடன் மக்கள் கல்லூரியாக — மகாஜனங்களின் கல்லூரியாக — அன்றே அமைத்துவிட்டார்.

கருத்தளவில் அவர் கொண்ட சமூக நோக்கினை அவரது கனி மலர்களான 'இதோபதேச கீதரச மஞ்சரி', 'எங்கள் தேசநிலை', 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி' முதலியவற்றில் நாம் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். ஈழத்தில் ஆங்கிலங் கற்ற நடுத்தரவர்க்கம் சமூக முக்கியத்துவம் பெற்று வளர்ந்துவந்த காலகட்டத்தில் வாழ்ந்த பாவலரவர்கள் அந்தப் புதிய வர்க்க வளர்ச்சியாற் சமூகத்திற் காணப்பட்ட முரண்பாடுகளைத் தெளிவாக இனங் கண்டுகொண்டார். அதன் பலனாக அவரது கவியுள்ளத்தில் ஏற்பட்ட துடிப்பு, சீர்திருத்தக் கவிதைகளாக மலர்ந்தது. எடுத்துக்கொண்ட கருத்திற்கு முக்கியத்துவம் தர எண்ணிய அவர், அணி, சொல்லாட்சி என்பவற்றிற்குக் கருத்துக்களைச் சிறைப்படுத்த விரும்பவில்லை. எல்லோருக்கும் விளங்கக் கூடிய இலகுதமிழிலே பாடினார்; மகாஜனப் பாவலராகக் காட்சியளித்தார். பொதுமக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த பதங்கள், கீர்த்தனங்கள், கும்மிகள் ஆகிய சந்தப் பாவகைகளைக் கையாண்டார். பொதுமக்கள் நலன் கருதிய பாவலராக விளங்கினார்.

பாவலர் வாழ்ந்த காலம் (1871-1929) பாரத நாட்டிலே தேசிய சமூக உணர்ச்சிகள் மூளையிடப்பட்டு வளர்ந்துவந்த காலம்; பாரதி பழமையிற் காலூன்றி நின்று, புதுயுகத்தை வரவேற்றுக் கவிதைகளைப் படைத்த காலம்; புதிய கருத்துக்களை வெளியிடத் தக்கதாகத் தமிழ்க் கவிதைக்குப் பழகு தமிழ்ச் சொற்களைப் பெய்து பாடிய காலம். பாவலரவர்கள் பாரத நாட்டிலும் ஆசிரியப்பணி செய்தவர்; அங்கு விடுதலை வீரர்களுடன் பழகியவர். எனவே, அங்கு ஏற்பட்ட புதிய போக்குகளாலும் நோக்குகளாலும் அவர் கவரப்பட்டிருக்கவேண்டும். இயல்பாகவே நுண்மாண் நுழைபுலம் மிக்கவரும், சமூகநலன் கருதும் பண்பினரும், போதனை செய்யும் இயல்பினதாகிய ஆசிரியப் பணியைச் செய்தவருமாகிய பாவலரது சமூக நோக்குப் பாரத நாட்டுத் தொடர்பால் மேலும் உரம்பெற்றிருக்கக்கூடுமெனக் கருதுவதிலே தவறில்லை.

தொடக்கத்திற் கிறித்தவராகவும் பின்னர் சைவராகவும் விளங்கிய பாவலர் சமூக நோக்கிற் சமயக் காழ்ப்புணர்ச்சி வசப்படாது ஒரேநிலையில் நின்றமையினை முதலிற் பாடிய 'கீதரசமஞ்சரி'யிலும், பின்னர் பாடிய 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி'யிலுமுள்ள கருத்தொருமைப்பாடுகள் மூலம் கண்டுதெளியலாம். 'கீதரச மஞ்சரி'யின் ஆங்கில முகவுரையில் (அ) நல்லொழுக்க போதனை, (ஆ) சமூக சீர்திருத்தம், (இ) இசையார்வம் வளர்த்தல் என்பவற்றைத் தமது நோக்கங்களாக வகுத்துக்

காட்டியுள்ளார். கோடேறி வழக்காடுவது, மதுபானம் செய்வது, கைக்கூலி வாங்குவது, சீதன வழக்கம், சூதாடுவது முதலிய தீமை பயப்பனவும் ஒழுக்கங் கெடுப்பனவுமான செயல்களைக் கண்டிக்கிறார். இக் கேடுகள் பொதுவாக எல்லாக் காலத்திலும் சமுதாயத்தில் விரவியிருப்பவை. பாவலரவர்கள்

"மதிகெட நிதிகெட ஸ்திதிகெட மதுவுனைச்
சதிசெயுஞ் சருப்பமென் றதைத்தவிர்த்
திடநினை"
(தே. 13)

எனவும்,

"எல்லா வினையாட் டினுந்திது கெட்ட
ஈனம் நிறையும் கொடுஞ்சூது"

எனவும், எல்லா நிலையிலும் உள்ள பொதுமக்களை நோக்கிப் பாடியுள்ளார்.

ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்ற ஓரம்சம் சாதிப் பாகுபாடு. சிறப்பாக இதன் நுணுக்க உட்பிரிவுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் யாழ்ப்பாணத்தில் இன்றும் காணலாம்.

"தாயினும் புத்திரன் தான்சாதி மானெனச்
சாற்றிப் பெருமைகொள் ளிந்நாட்டில்
நேயம் பெருகிநம் சாதியின் ஐக்கியம்
நீடுதல் கூடுமோ சங்கமின்னே."
(யா. சு. கு. 248)

எனச் சாதிபேதம் பாராட்டுவது தமிழினத்தின் ஒற்றுமைக்கே பங்கம் விளைக்குமென அவர் கூறுவது எவ்வளவுக்கு உண்மை என்பதை நாம் இன்றும் உணருகிறோம். சாதியின் பேரில் ஒருவரையொருவர் கொலைசெய்யும்போது தமிழர் கூட்டாக எவ்வாறு இயங்கமுடியுமெனப் பார்வையாளர் கேட்பது நியாயந்தானே! சாதி ஏற்றத் தாழ்வு பாராட்டிப் பந்தி உணவு தவிர்த்துப் பிரிந்து வாழ்கின்ற நிலை சுத்தப் பைத்திய நிலை என்பது அவர் கருத்து. அவர் வாழ்ந்த காலத்தின் பின்னணியிலும் அவரது சமூக அந்தஸ்தின் பின்னணியிலும் மேற்கூறிய கருத்துத் தெரிவிப்பதற்கே அவருக்கு அதிக துணிவு இருத்தல்வேண்டும். அதனால், அவரை நாம் அவரது காலத்தில் ஒரு முற்போக்குச் சிந்தனையாளரென்றே கொள்ளவேண்டும். அவரது காலத்திற் சாதிப் பிரச்சினையைப் பொருளாகக் கொண்டு நாவல் எழுதிய இடைக்காடர் என்பவர் சாதியில் ஏற்றத் தாழ்வில்லை என்ற கருத்தினைத் தெரிவித்தாலும் சாதிப் பாகுபாட்டை ஏற்றுக்கொண்டவராகவே காணப்படுகிறார். அவரது 'நீலகண்டன்' (ஒரு சாதிவேளாளன்) என்ற நாவலில் இதனைக் காணலாம்.

ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தினை இன்றும் வருத்துகின்ற சீதனக் கொடுமையைத் துரையப்பாபிள்ளை அவர்கள் உற்றுநோக்கியுள்ளார். சீதனம் கொடுக்க வழியில்லாததனால் விவாகம் செய்யாமல் வாழும் பெண்கள் இன்றுபோலவே அவர் காலத்திலும் பெருந்தொகையாக இருந்தனரென்பதனை,

"மிக்க பெருந்தொகைச் சீதன மில்லாது
மேதினி யில்மண வாழ்விலராய்த்
துக்க முறும்பெண்கள் யாழ்ப்பாண நாட்டிற்
றொகையா யிருக்கிறார் சங்கமின்னே."
(யா. சு. கு. 258)

என்ற பாடலால் அறியலாம். சீதன வழக்கத்திற்குப் பெற்றோரது சாதிப் பெருமை பாராட்டும் இயல்புதான் காரணம் என்று கூறும் பாவலர் 'கீதரச மஞ்சரி'யிற் சீதனம் பெற்று மணம் செய்ய விழைவோரைக் கேலிசெய்து கண்டிக்கிறார்.

எல்லோருக்கும் இனி உத்தியோகம் கிடையாது; தமிழ் மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட வேண்டுமென்று அன்றே கூறிய பாவலர் அத்துறைகளுக்குரிய கல்வியைத் தமது கல்லூரியில் அளித்து வந்தார்; படித்த மாணவர் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் என்பவற்றில் ஈடுபடவேண்டுமென வற்புறுத்தினர். இவற்றின்மூலம் நாட்டின் சுயதேவை பூர்த்தியாக்கப்படுமென்ற அவரது சமூகப் பொருளாதார நோக்கு வெளிப்படுகின்றது. விவசாயம் வளரவேண்டியதன் அவசியத்தையும் அதனை முறைப்படி பேணிச் செய்யவேண்டியதற்கான ஊக்கத்தையும் வற்புறுத்துகின்றார்.

"நீர்மெத்த வுள்ள நிலாவரை தன்னை
நிலைபெறு நல்ல ஒழுங்கு செய்து
பார்மெச்ச இந்தநன் ஞட்டைநீர்ப் பாய்ச்சுதல்
பண்பல்ல வோசொல்லு சங்கமின்னே."
(யா.சு. கு. 13)

என யாழ் நாட்டிற்கு நீர்வளம்பெற வழி கூறும் பாவலர், அங்கு நிலமும் நீரும் பெற வசதியற்றோர் வன்னிநாட்டிற் குடியேறி விவசாயம் செய்யலாமெனவும் ஆலோசனை கூறுகிறார். கோப்பி, தேயிலை ஆகிய மலை நாட்டுப் பயிர்களுக்கு ஈடாக யாழ்ப்

பாணம் பயிர்த் தொழில் வளம்பெற வேண்டுமென விரும்புகின்றார். பலவகைக் கைத்தொழில்களும் வளர்க்கப்படவேண்டு மென வற்புறுத்தும் பாவலர் கூட்டு முயற்சியின்மூலம் நலம் காணலாமெனக் கூறுகிறார். அவர் நிறுவிய கல்லூரியே கூட்டுமுயற்சியால் உருவானதென்பதை நாம் மறத்தல் கூடாது.

சமூகத்தில் ஆசிரியர் தொழிலுக்கு மதிப்பையும் அந்தஸ்தையும் தேடிக் கொடுத்தவர் அவர். சமூகத்தில் ஆசிரியருக்குச் சிறப்பான இடம் உண்டு. இளம் சந்ததியினரை நல்வழியிற் செயற்படுத்துபவர் ஆசிரியரே. எனவே, ஆசிரியர்கள், தமது தொழிலுக்குத் தம்மை அர்ப்பணம் செய்யவேண்டும்; கடமை உணர்ச்சி உடையவராக இருத்தல்வேண்டும்; ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டு மென்ப வற்றைச் செயலிற் காட்டியவர் அவர். இதனாலேயே சம்பளம் இல்லாமலும் குறைந்த சம்பளத்துடனும் வேறும் சிலரை ஆசிரியர்களாகத் தமது கல்லூரியிற் கடமையாற்றச் செய்யக்கூடிய சக்தி அவரிடம் இருந்தது. தம்மைப்போல வேறு பலரையும் சமூக நோக்கோடு பணிசெய்ய வைத்த பெருமை அவரைச் சாரும்.

இன்றைய ஆசிரியர்களுக்குச் சமூக நோக்கில்லை; அவர்கள் சம்பளத்துக்கு ஏற்றவேலை செய்கிறார்களில்லை; பாடசாலை நேரத்தில் வகுப்பறைக்குப் போகாது சொந்த வேலைகளில் ஈடுபடுகின்றனர்; பாடசாலையிற் படிப்பிக்கவேண்டிய பாடத்தைப் பாடசாலை நேரத்திற்குப் பின் பெருந் தொகையான பணம் பெற்றுத் தமது வீட்டிற் சொல்விக்கொடுக்கிறார்கள் என்றெல்லாம் குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால், துரையப்பாபிள்ளையவர்கள் பள்ளிக்கூட நேரத்திற்குப் பின்பும் தமது இல்லத்தில் மாணவருக்கு இலவசக் கல்வி அளித்து வந்தார். இவற்றால், ஆசிரியர்களைச் சமூகத்தொண்டர்கள் என மக்கள் மதித்தனர்.

ஒரு சமூகம் முன்னேற வேண்டுமாயின் தாய்மொழிக்கல்வி மிகவும் இன்றியமையாதது. இதனாலேயே 'இங்கிலிசும்வேணும்செந் தமிழும்வேணும்' என்று கொண்ட துரையப்பாபிள்ளை அவர்கள், சொந்தத் தமிழ் தனைச் சாத்திரங்கள்தமைத் தூரவிட்டுப் பிறமொழி மோகங்கொண்டவரைத் தமது பாடல்களிற் சாடினார். இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று வாதாடியவரும் அவர். ஈழத்தில் நல்ல கல்லூரிகள் இருக்கின்றன; கல்வி கற்போர் தொகையும் பெரிது; எனவே, மேலாம் உயர்தரக் கல்வியை மிக்க விருத்தி செய்யும் சர்வகலாசாலை ஒன்று ஈழத்து மக்களுக்கு வேண்டுமென்று கேட்டார்.

பெண்கல்வி பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்கள் சமூகத்திற் பெண் வகிக்க வேண்டிய நிலை என்ன என்பதை வலியுறுத்துகின்றன. சமூகம் முன்னேற வேண்டுமானால் பெண் குடும்பவிளக்காகத் திகழ வேண்டும். எனவே, வீட்டினிற் சீவியம் இன்பம் நிறைந்து விளங்குதற்கேற்ற கல்வி பெண்களுக்கு அளித்தாற் போதுமென்று கருதினார். ஆண்களோடு போட்டியிட்டுப் படித்து, உடம்பைக் கெடுத்து, இல்லறம் செவ்வனம் நடத்த முடியாத பரிதாப நிலை பெண்களுக்கு ஏற்படக்கூடுமென அவர் அஞ்சியது உண்மையாகி விட்டது.

படித்த மாணவர் நல்ல மரியாதைக் கேற்ற குணங்களில்லாதவராக, சுதேச ஆதாரங்களை முற்றுகக் கைவிட்டுப் பரதேசிகளாகத் திரிவதாற் சமூகம் பாழாகப் போகின்றதே எனக் கவலைப்பட்டார் அவர். மொழியிரவல், உத்தியோகம் இரவல், பண்பாடு இரவல், பழக்க வழக்கம் இரவல் என எல்லாத்துறையிலும் எமது வாழ்க்கை இரவல் வாழ்க்கையாக அமைந்துவிட்டாற் சமூகத்தின் கதி என்ன வாகுமென அவர் அஞ்சியது, அவரின் சமூக நோக்கைத் தெளிவாக விளக்குகின்றது. புதுமையை வரவேற்கவும் சிறப்பான பாரம்பரியங்களைப் பேணவும் தக்கதாக அவரது மிதமான சமூக நோக்குக் காணப்படுகின்றது. இந்தவகையில் அவர் புதுமைக்கும் பழமைக்கும் ஒரு பாலமாக விளங்கினர் என்றால் அது மேலெழுந்தவாரியான ஒரு மதிப்பீடன்று.

சமயப் பிரபந்தங்கள் பாடுவதிலும் தனிப்பட்டவர்களைப் புகழுவதிலும் இலக்கண அலங்கார வித்தைகளைக் கையாளுவதிலும் தமது புலமையைச் செலவிட்ட சமகாலத்து ஐம்பதுக்கு மேற்பட்ட புலவர்களிற் பாவலர் துரையப்பாபிள்ளையும் முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பியும், நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் வேறு ஒரு சிலருமே தம் கவித்துவத்தைச் சமூகத்திற்கும் தேசத்திற்கும் பயன்படச் செய்தனர். இவ்வொரு சிலருள்ளும் பாவலரவர்களே செயலிலும் சமூகத்தைக் கருத்திற் கொண்டு தொழிற்பட்டார். அந்த வகையில் இன்றைய சமூக நோக்காளர் பலருக்கும் பாவலர் துரையப்பாபிள்ளையவர்கள் ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றாரெனலாம்.

கலாநிதி க. கைலாசபதி
M. A. (Cey.) Ph.D. (Birm.)
இலங்கைப் பல்கலைக் கழகம்,
கொழும்பு வளாகம்.

துரையப்பாபிள்ளையும் தேசியப் பின்னணியும்

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் அவரது வாழ்க்கையையும் சாதனைகளையும் பல்வேறு கோணங்களிலிருந்து நோக்கி மதிப்பிடுதல் இயல்பானதொன்றேயாகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இலங்கையிலே தேசியவாதம் படிப்படியாக உருவாகி வந்துள்ளது: இத்தேசியவாதம் முற்பகுதியிலே சமய, சமூக, கலாசாரத் துறைகளிலும் பிற்பகுதியிலே, பொருளாதார, அரசியல் துறைகளிலும் சிறப்பாக வெளிப்பட்டது. பிரதேச அடிப்படையிலே தேசியத்தின் வேகமும் வலுவும் ஒரு சீராக இருக்கவில்லை என்பது உண்மையே. எனினும் தேசியவாதத்தின் அடிப்படைக் கூறுகள் நாடு முழுவதிலும் பொதுவாக விரவிக் காணப்பட்டதும் மனங்கொள்ள வேண்டியதொன்றே. இப்பொதுவிதியின் அடிப்படையிலே துரையப்பாபிள்ளை இயங்கிய சூழலை ஓரளவு விளக்குவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் மட்டுமன்றி ஏனைய ஆசிய நாடுகள் பலவற்றிலும் தேசியத்தின் உடனிகழ்ச்சியாக, உயர்ந்தோர் குழாம் ஒன்று உருவாகியது. உயர்ந்தோர் குழாம் என்பதனை நவீன சமூகவியலாளர் 'எலீற்' [Elite] என்னும் ஆங்கிலச் சொல்லாற் குறிப்பர். மனித வரலாற்றிலே வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு தன்மை வாய்ந்த உயர்ந்தோர் குழாங்கள் தோன்றி மறைந்துள்ளன. பொருளுடைமை, சமூக அந்தஸ்து, அரசியற் செல்வாக்கு என்பன இவ்வுயர்ந்தோர் குழாங்களின் தனிச்சிறப்பியல்புகளாயும், வெவ்வேறு காலப் பகுதிகளில் இவற்றுக் கிடையேயுள்ள வேறுபாட்டைத் துலக்கிக் காட்டுவனவாயுமுள்ளன.

பிரித்தானியரது ஆட்சியின் விளைவாகவும் நாட்டின் பொருளாதார அமைப்பில் நிகழ்ந்த பெருமாற்றங்களின் பயனாகவும் புதியதொரு உயர்ந்தோர் குழாம் உருவாகியது எனச் சுருக்கமாகக் கூறுவது பொருத்தமாகும். நிலமானிய அடிப்படையில் கமத்தொழிலை மாத்திரம் பிரதானமாய்க் கொண்டியங்கிய பொருளாதார அமைப்பில், வரையறுக்கப்பட்ட சாதியமைப்பின்மீது கட்டியெழுப்பப்பட்டிருந்த சமூக உறவுகள், பிரித்தானிய ஆட்சியில் நிலைகுலையலாயின. குடியேற்ற நாடாக அமைந்த இலங்கையைப் பிரித்தானியர் தமது தேவைக்கேற்ப, மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்து உள்நாட்டிலே விற்பனை முறையை விஸ்தரிக்கும் நாடாகவும் மாற்றியமைக்கும் பெரும்பணியைச் செய்தனர். இது தவிர்க்கவியலாத வரலாற்று நிகழ்வாகவும் இருந்தது. இம்மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தபோது புதிய புதிய துறைகளிலும் வழிகளிலும் பொருளீட்டும் வாய்ப்புப் பலருக்குக் கிடைத்தது. இவர்கள் ஏலவே சமூகத்தில் உயர்நிலையில் இருந்தவர்களாயினும், இடம்பெயர்ந்து சென்று புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதில் முந்தியோரினின்றும் வேறுபட்டனர். தாம் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு தமது பிள்ளைகளுக்குப் புதிய கல்வியைப் பெற்றுக் கொடுத்ததோடு இங்கிலாந்துக்கு மேற்படிப்பிற்காக அனுப்பவும் வழிகண்டனர். அவர்கள் அங்கு பெற்ற உயர் கல்வியும் ஆங்கிலப் பயிற்சியும் மேலும் அவர்களது வேலை வாய்ப்புக்களையும் உத்தியோக சந்தர்ப்பங்களையும் அதிகரித்தன. இவ்வாறு காரணகாரியத் தொடர்புடன் புதிய வர்க்கம் ஒன்று — உயர்ந்தோர் குழாம் ஒன்று — தோன்றியது. இஃது

இலங்கை முழுவதற்கும் பொதுவான வளர்ச்சி முறையாயிருந்தது. அதாவது சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று சமூகத்தவர்கள் மத்தியிலும் இப்போக்கினைக் காணக்கூடியதாயுள்ளது. பெரும்பாலும் சிற்சில குடும்பங்கள் பிரித்தானியர் ஆட்சியிற் சீரும் சிறப்பும் செல்வாக்கும் பெற்றன. கொழும்பில் இருந்த பொன்னம்பல முதலியார் குடும்பத்தை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாய்க் கொள்ளலாம். இராமநாதன், அருணாசலம் ஆகியோர் இலங்கையின் உயர்ந்தோர் குழாத்தில் இடம்பெற்ற வரலாறு இங்கு நினைவுகூரத்தக்கது.

நவீன இலங்கைச் சமூக வரலாற்றை ஆராய்ந்தவர்கள், இங்குக் குறிப்பிடும் உயர்ந்தோர் குழாம் இரு பிரிவானது என்பர்.[1]

உயர்ந்தோர் குழாம் தேசிய அடிப்படையிலும் பிரதேச அடிப்படையிலும் பாகுபடுத்தப்படுவதுண்டு. முன்குறிப்பிட்ட மூன்று அம்சங்களான பொருளுடைமை, சமூக அந்தஸ்து, அரசியற் செல்வாக்கு என்பவற்றில் தேசிய ரீதியான உயர்ந்தோர் குழாத்துக்கும், பிரதேச ரீதியான — உள்ளூர் — உயர்ந்தோர் குழாத்துக்கும் அடிப்படை வேறுபாடில்லை எனலாம். ஆயினும், வாழ்க்கைமுறை, இலட்சியங்கள், பாரம்பரிய உணர்வு முதலியவற்றில் இவ்விருபிரிவுகளுக்குமிடையிற் குறிப்பிடத்தக்க சில அழுத்த வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக, அனைத்து இலங்கைக்கும் பொதுவாக — தேசியத் தலைவர்களாக— விளங்கியோர் கூடுதலாக மேலைப்புல நாகரிகத்தை ஏற்றுக்கொண்டவராய், நாட்டின் வெகுஜனங்களிலிருந்தும் 'விலகி'யிருந்தோராய், தாய்மொழியிலும் பார்க்க ஆங்கிலத் திலே பயிற்சியும் புலமையும் மிக்கு உடையோராய் விளங்கினர். இப்பண்புக்கு நேரெதிர்நிலைப்பாட்டைப் பெற்றிருந்தனர் உள்ளூர் உயர்ந்தோர் குழாத்தினர்.[2]

எனினும், தேசிய உயர்ந்தோர் குழாத்துக்கும், உள்ளூர் உயர்ந்தோர் குழாத்துக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு இருந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தோன்றியிருப்பினும் தலைநகருடன் தொடர்புகொண்டுஅதனைத்தமதுபிரதான இருப்பிடமாக்கிக் கொண்ட தேசிய உயர்ந்தோர் குழாத்தினர் இன, மொழி, மத வித்தியாசங்களைக் கடந்து வர்க்க அடிப்படையில் கூடுதலான ஒருமைப்பாடுடையராய் விளங்கினர். வர்க்கம் என்ற சொல்லில் இக்குழாத்தைக் குறிப்பிடுவதில் தவறு எதுவும் இல்லை. ஒரே தன்மையான வாழ்க்கைமுறை, பொருளீட்டம், மதிப்பீடுகள், வருமானம் என்பவற்றாலும் நெருங்கிய தொடர்புகளினாலும் இவ்வர்க்கத்தினரிடையே 'வர்க்க உணர்வும்' வளர்ச்சியுற்றுக் காணப்பட்டது. அதுமட்டுமல்லாது இவர்கள் ஆங்கிலேய ஆட்சியாளரிற் பெரும்பகுதியினரையும் தமது சக 'வர்க்கத்தின'ராகவே கருதிப் பழகினர். பிரித்தானிய அரசினால் வழங்கப்பட்ட விருதுகளும் பட்டங்களும் இத்தகைய மன ஒற்றுமையை உறுதிப்படுத்துவனவாய் அமைந்தன.

உள்ளூர் உயர்ந்தோர் குழாமோ அத்தகை ஒருமைப்பாடும் ஒன்றிணைப்பும் கொண்டிருக்கவில்லை; அதன் காரணமாக அதனைச் சார்ந்தோர் சில வேளைகளில் முரண்பட்ட கருத்தோட்டங்களையும் நலநாட்டங்களையும் பிரதிபலிப்பவராயிருந்தனர். இன, மொழி, மத அக்கறைகள்

---

1. உதாரணமாக, இலங்கைத் தேசியத்தின் சிற்சில அம்சங்களை ஆராய்ந்துள்ள கலாநிதி மைக்கல் ரொபர்ட்ஸ், இப்பாகுபாட்டை நட்பமாக விளக்கியிருக்கிறார். சிங்களப் பகுதிகளையே சிறப்பாக ஆராய்ந்திருக்கும் அவரது கருத்துக்கள் சில இக்கட்டுரையை எழுதுங்கால் எனக்குத் துணைசெய்வனவாயிருந்தன.

2. சிற்சில வரலாற்றுக் காரணிகளினால், தென்னிலங்கையில் இருந்த பிரதேசப் பிரமுகர்களிலும் பார்க்க, அவர்களுச் சரிநேரினராய் வட இலங்கையில் இருந்தோர் கூடியளவு ஆங்கிலக்கலை இலக்கியப் பரிச்சயமும் ஈடுபாடும் உடையராய் இருந்தனர். இதன் விளைவுகள் இன்றுவரை பல வழிகளில் பாதிப்பை ஏற்படுத்திவருகின்றன.

இவர்களைக் கூடுதலாகப் பாதித்தன; கலாசாரப் பிரச்சினைகளில் இவர்கள் தவிர்க்க இயலாதவாறு ஆழ்ந்த ஈடுபாடும் சிரத்தையும் கொண்டியங்கினர். உதாரணமாக, தேசிய உயர்ந்தோர் குழாத்தைச் சேர்ந்தோர் அனைவரும் அன்றைய நிலையில் ஆங்கில மொழியையே தமது பிரதான கருத்து வெளிப்பாட்டுச் சாதனமாகக் கொண்டனர். ஆனால் பிரதேசங்களில் வாழ்ந்த பிரமுகர்கள் (குறிப்பாகச் சிங்களப் பகுதிகளில்) தாய்மொழியையே அதிகமதிகமாகப் பயன்படுத்தலாயினர். ஆறுமுக நாவலரிலிருந்து துரையப்பாபிள்ளை, ஈழகேசரிப் பொன்னையா வரையிலான உள்ளூர் உயர்ந்தோர் குழாத்தினர் தாய்மொழிப் பாண்டித்தியம் நிரம்பப் பெற்றவராய்த் திகழ்ந்தனர். இத்தகைய பொதுப்பண்புகள் வாய்க்கப் பெற்றிருந்த உள்ளூர்ப் பிரமுகர்கள் வரிசையில் இடம் பெறுபவரே பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை.

பாவலர் அவர்கள் இயங்கிச் செயற்பட்ட தேசியப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குமுகமாகத் தென்னிலங்கைக்கும் வடபகுதிக்கும் பொதுவாக அமைந்த சில இயக்கங்களை ஈண்டு விவரிக்கலாம் என எண்ணுகிறேன். நாட்டின் பல பகுதிகளிலும் மாவட்ட, பிரதேச அடிப்படையில் எழுந்த இவ்விடயங்களிற் சில காலக்கிரமத்தில் அனைத்திலங்கை முக்கியத்துவம் பெற்றது மட்டுமன்றி, மெல்ல மெல்ல உருவாகிவந்த தேசிய வாதத்தின் மிக முக்கியமான கூறுகளாகவும் அமைந்தன என்பது மனங்கொள்ளத் தக்கதே. அத்தகையதோர் இயக்கம் மதுவிலக்கு இயக்கம் ஆகும்.

கலாநிதி (திருமதி) குமாரி ஜயவர்த்தனே[2அ], கலாநிதி பி. டி. எம். பெர்னாந்து ஆகியோர் அண்மையில் விரிவாக நிகழ்த்தியுள்ள ஆய்வுகளின்படி, இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுவிலக்கு இயக்கம் (சிறப்பாகத் தென்னிலங்கையில்) பரவலாக நடைபெற்றமை தெரியவந்துளது. மது அருந்துவது பௌத்தமதக் கோட்பாடுகளுக்கு விரோதமானதாயும், மேற்குநாட்டு நாகரிகச் சின்னமாகவும், அந்நிய பழக்க வழக்கமாகவும் கருதப்பட்டமையால், அவ்வியக்கம் பரந்துபட்ட வெகுஜன இயக்கமாக அமையக்கூடிய உள்ளியல்பைப் பெற்றிருந்தது. இறுதி ஆய்வில் மதுவிலக்குப் பிரசாரம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான பிரசாரமாகவும் அமைந்தது. அன்றைய ஆட்சியாளர் அதனைக் கவனிக்கத் தவறவில்லை. 1915ஆம் ஆண்டுக்குரிய பொலிஸ் மா அதிபரின் ஆண்டறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: ''இம் மதுவிலக்குக் கூட்டங்களிலே தேசியமும் அரசியலும் பெருமளவு கலந்தே இடம்பெற்றன. மதுவிலக்கு என்ற பெயரில் இவை உண்மையில் அரசியற் கூட்டங்களாகவே நடைபெற்றன.''

1912ஆம் ஆண்டு இயற்றப்பெற்ற மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் விளைவாக நாடு முழுவதும் மதுபானச் சாலைகள் (தவறணைகள்) பெருகின. உள்ளூர்த் தலைவர்கள் இதனை வன்மையாய்க் கண்டித்துக் குரலெழுப்பினர். தென்னிலங்கையிற்பேரியக்கமாக நடந்தேறிய மதுவிலக்குப் பிரசாரம், 1915ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரங்களுக்குப் பங்களித்துதவிய காரணியாய் இருந்தது என அரசாங்கம் கருதியபடியாலேயே, அதில் சம்பந்தப்பட்ட தலைவர்கள் பலரை அரசாங்க விரோதிகள் எனக் குற்றஞ்சுமத்திச் சிறையிட்டது.

இவ்வாறு தென்னிலங்கையை உலுப்பிய மதுவிலக்கு இயக்கம் வடபகுதியிலும் தீவிரமாக நடைபெற்றது. இயக்க வடிவம் பெறுவதற்குப் பல்லாண்டுகள் முன்னதாகவே ஆறுமுகநாவலர் மதுவிலக்கைப் பற்றிச் சிந்தித்து எழுதியிருந்தார்:

> ''வறுமைக்கும் துன்பத்துக்கும் சகல பாவங்களுக்கும் பிறப்பிடம் மதுபானம். இலங்கையிலே பூர்வகாலத்தில் மதுபானம் மிக அரிது. தற்காலத்திலோ அது விருத்தியாகிக் கொண்டே வருகின்றது. தூரைத்தனத்தாருக்குச் சாராயத்தினால் 1852ஆம் வருஷத்து வரவு ஏறக்குறைய 6,00,000 ரூபா; 1872ஆம் வருஷத்து வரவு ஏறக்குறைய 20,00,000 ரூபா. கல்வியிலும் நாகரிகத்திலும் சிறப்புற்ற ஆங்கிலேய துரைத்தனத்தார், தமக்குச் சாராயத்தால்

2அ. Economic and Political Factors in the 1915 Riots, **The Journal of Asian Studies**, Vol. XXIX, No. 2, 1970.

எய்தும் பொருளைப் பிறவாயில்கள் சில வற்றால் எய்துவிக்கத் தலைப்பட்டுக்கொண்டு சாராயத்தை ஒழிவிப்பாராயின், இலங்கைச் சனங்கள் நல்லொழுக்கமும், செல்வமும், ஆரோக்கியமும்தீர்க்காயுசும்அடைவார்கள்.

1874ஆம் ஆண்டில் வெளியிட்ட பூமி சாத்திரத்தில் மேற்கண்டவாறு சஞ்சலத்துடன் எழுதினார் நாவலர்.[3]

சமய அடிப்படையிலேயே நாவலர் தமது எதிர்ப்பைத் தெரிவித்தாரெனினும், ''இலங்கைச் சனங்கள்'' என்ற சொற்றொடர் உற்று நோக்கவேண்டியதாயுள்ளது. நாவலர் இயற்றிய பாலபாடம் நான்காம் புத்தகத்தில் கொலை, களவு, கள், வியபிசாரம் முதலிய பாதகங்களில் ஒன்றுனை கள்ளுண்ணலைக் கடிந்து எழுதியுள்ளார். ஆனால் ஆட்சியினர் தமது வருவாயைப் பெருக்குவதற்காகச் சாராய விற்பனையை அதிகரிப்பதைக் கண்டிக்கும் பொழுது அவரது 'சமூக—பொருளாதார' உணர்வு புலப்படுகிறதெனலாம்.

பல வழிகளில் நாவலர் இலட்சியங்களைப் பின்பற்றியவர் எனத்தகும் பாவலரவர்கள் பலவாண்டுகளாகவே மதுவிலக்குப் பிரசாரத்தில் முன்னின்றுழைத்தார்; வசனத்திலும் பாட்டிலும் மதுவிலக்கு சம்பந்தமாக நிறைய எழுதினார். உதயதாரகை பத்திரிகையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த பிள்ளையவர்கள் அதிலே குடிவெறியின் கொடுமைகளைப்பற்றியும், கேட்டைப்பற்றியும் பலவாறு தமது கருத்துக்களை வெளிப்படுத்தினார். 'தெல்லிமா நகர்' முகவரியிட்டு 'ஓர் கிறிஸ்தவன்' என்னும் புனைபெயரில்[4] எழுதிய கடிதமொன்றிலே '' யாழ்ப்பாணமே ..... கொள்ளை நோயிலும் பார்க்க நின்னகத்திற் குடிகொண்ட சாராயக் கடைகள் பத்து மடங்கு கொடுமையுடையது'' என்றும், ''முன் இருமுறை இத்தாரகை வாயிலாய் வெளிப்படுத்திய படியே .... பெரியோர் சிறியோர், தலைமைக்காரர், உத்தியோகத்தர், கமக்காரர், வியாபாரிகளென்ற பேதமின்றி யெல்லோரு மொரேமனதாயிக்கொடிய களரியைத் துகள்துகளா யற்றுப்போகச் செய்யவேண்டும்''[5] என்றும் எழுதியிருக்கிறார். குடிவெறி குறித்துத் தெல்லிப்பழையிலிருந்து அடிக்கடி பல விஷயங்களைத் 'தாரகை'யில் எழுதியிருப்பதைக் காணலாம். 1907ஆம் வருடம் '' Ceylon National Review' என்னும் சஞ்சிகையில்[6] ''Jaffna Past and Present'' என்னும் தலைப்பில் எழுதிய நீண்டகட்டுரையிலும் மேற்கு நாட்டு மதுபானங்களும் சாராயமும் ஏனைய குடிவகைகளும் எமது சமுதாயத்தில் வந்து புகுந்துள்ளமையைப் பற்றிக் கடிந்துரைத்திருக்கிறார். யாழ்ப்பாண சுவதேசக்கும்மி என்னும்நூலில் மதுவிலக்குப்பற்றிப் பல பாக்கள் யாத்துள்ளார்.

''எங்கள்தே சத்திற் குடியால் வருந்திமை
யிம்மட் டென்னவிங் கியலாது
சங்கங்கள் நாட்டியித் தீமையை முற்றும்
தடுத்திடு வாயடி சங்கமின்னே.''

இப்பாடலில் மதுவிலக்கு இயக்கரீதியாக ஒழிக்கப்படல் வேண்டும் என்னும் கருத்து ஒலிப்பதைக் கேட்கலாமன்றே! இது விஷயமாகப் பல வருடங்கள் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வந்தார் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. 1917ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற அளவெட்டி மதுவிலக்குச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற் பாடுவதற்காகப் பல பாடல்களை இயற்றியிருக்கிறார். மதுவிலக்கு இயக்கத்தைப் பாராட்டியும் அதனை வாழ்த்தியும் எத்தனையோ இசைப்பாக்களை—ஜனரஞ்சகமான கீர்த்தனைகளை—ஆக்கினார். 1916ஆம் ஆண்டளவில் இயக்கரீதியாக அமைக்கப்பெற்ற இந்து வாலிபர் சங்கமும் இத்துறையில் முன்னின்று உழைத்தது.[7] மதுவிலக்கு விஷயத்தில்,

3. ச. அம்பிகைபாகன், **யோகசுவாமிகள்**, யாழ்ப்பாணம் 1972. பக். 50—54.)
4. **உதயதாரகை,** மார்கழி 30, 1901)
5. **உதயதாரகை** (ஒக்டோபர் 22, 1903.)
6. மேற்படி கட்டுரையின் தமிழாக்கம் இம்மலரில் இடம்பெற்றுள்ளது.
7. **யோகசுவாமிகள்** பக். 51.

இலங்கைக்குப் பொதுவான இயக்கம் ஒன்றில் பாவலர் பிரதேச அடிப்படையில் ஈடுபட்டிருந்தமையை இவை தெளிவுறுத்துகின்றன.

1914, 1915ஆம் ஆண்டுகளை அடுத்த காலப்பகுதியில் தென்னிலங்கையிலே பல விடயங்களில் இலக்கியக் கழகங்களும் இலக்கியச் சங்கங்களும், மாநாடுகளும் அடிக்கடி நடைபெற்று வரலாயின. மதுவிலக்கு இயக்கத்தைப் போலவே இவ்விலக்கிய இயக்கமும் அரசியல் நோக்கங்களைக் கொண்டிருந்தது. சிங்களத்தைப் பொறுத்தவரையில் இவ்வியக்கத்தின் விளைவாகப் பல கவிதை நூல்களும், நாடகங்களும் வெளியிடப்பட்டன. ஜோன் டி சில்வா அவர்களின் வரலாற்று நாடகங்கள் இத்தொடர்பில் குறிப்பிடத்தக்கன. அக்காலத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த எச். எல். டௌபிகின் என்பாரது கட்டளைப்படி சிங்களக் கவிதை நூல்களையும் பொலிஸ் பகுதியினர் கவனமாகப் பரிசீலனை செய்தனராம். சுருங்கக் கூறின் இலக்கியச் சங்கங்கள் தேசிய விழிப்புணர்ச்சியின் மற்றோர் அம்சமாக விளங்கின.

இத்துறையிலும் துரையப்பாபிள்ளையவர்கள் ஊக்கத்துடன் உழைத்தார். தாமே ஓர் இலக்கிய கர்த்தாவாக இருந்தமையால் இலக்கிய சிருஷ்டியில் மட்டுமன்றி அதற்குரிய சூழல், அதற்குகந்த மொழி, இலக்கிய நோக்கு முதலியவற்றிலும் அவருக்கு ஆழ்ந்த அக்கறையிருந்தது. அவர் பாடிய கவிதைகள் பலவற்றில் இது பிரதிபலிக்கின்றது; இது விஷயத்தில் சுப்பிரமணிய பாரதியுடன் ஒப்புநோக்கி ஆராயப்படவேண்டியவர்.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக (27-12-1922) நடந்த தமிழ் இலக்கிய மகாநாட்டைப்பற்றிய செய்தியொன்று "HINDU ORGAN" பத்திரிகையிற் காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் றிஜ்வே மண்டபத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டுக்கு ஏ. கனகசபை அவர்கள் முதல்நாள் தலைமை தாங்கினர். இக்கூட்டங்களிலெல்லாம் பிள்ளையின் பாடல்கள் பாடப்பெற்றன. 1922ஆம் ஆண்டு நடைபெற்ற இவ்விலக்கிய மகாநாட்டிற்கு அந்நாளில் தென்னிந்தியாவிலே பிரசித்திபெற்று விளங்கிய அறிஞர்கள் சிலர் அழைக்கப்பட்டிருந்தனர். இந்து சாதனம்[8] செய்தியொன்றின்படி, சென்னைப் பல்கலைக் கழகத்து வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், சென்னைச் சட்டக்கல்லூரி விரிவுரையாளர் கா. சுப்பிரமணியபிள்ளை, பிரபல நாவலாசிரியர் அ. மாதவையா (1874 — 1925), தமிழறிஞர் பா. வே. மாணிக்கநாயக்கர் (1871—1931) ஆகியோர் மகாநாட்டுக்கு வருவதற்கு உடன்பட்டிருந்ததாய்த் தெரிகிறது. யாது காரணத்தாலோ பின்னர் மாதவையா வரவில்லை. மகாநாட்டின் இரண்டாம் நாள் அரங்குக்கு வைத்திலிங்கம் துரைசாமி தலைமை தாங்கினர். அக்கூட்டத்தில் துரையப்பாபிள்ளை, "தமிழ்க்கல்வியின் தற்கால நிலை" என்னும் பொருள் குறித்துப் பேருரை நிகழ்த்தினர். இடையிடையே பாடல்கள் ஒலித்த அவ்வுரையிலே தமிழ்க்கல்வியிற் காணப்பெற்ற பெருங்குறைகளும் சீர்க்கேடுகளும் இடித்துரைக்கப்பட்டன. சபையிலிருந்தோர் பேரார்வத்துடன் அப்பிரசங்கத்தைக் கேட்டிருந்ததாய்ப் பத்திரிகை எழுதியிருந்தது.

இலக்கியச் சங்கமும் மாநாடும் சிறப்புற நடந்த அவ்வாண்டிலேயே (1922) யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நிறுவப்பெற்றது என்பதும் நினைந்துகொள்ளத் தக்கது. இச்சங்கத்திலும் பிள்ளையவர்கள் செயற்குழு உறுப்பினராக அமர்ந்து தொண்டாற்றினர். இலக்கியச் சங்கங்களாக இருப்பினும் அவை குறுகிய வட்டத்திற்குள் இயங்காது, பொதுவான கலாசாரப் பிரச்சினைகளையெல்லாம் தழுவிச் சென்றன. அப்போக்கு பிள்ளையவர்களின் ஆளுமைக்கும் அக்கறைகளுக்கும் ஏற்றதாயிருந்தமையால் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் உழைத்தார் எனலாம்.

கொழும்பிலே 1906ஆம் வருடம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று நடந்தேறியது; அவ்வாண்டு ஆகஸ்டு

8. இந்துசாதனம் (ஒக்டோபர் 9, 1922).

மாதம் 13ஆம் திகதி ஐயாயிரம் மாட்டு வண்டிக்காரர் வேலை நிறுத்தஞ் செய்தனர். அக்காலத்தில் துறைமுகத்திலிருந்து பண்டங்களை ஏற்றிச் செல்லவும் துறைமுகத்துக்கு ஏற்றுமதிப் பொருட்களைக் கொண்டு செல்லவும், நகரில் வர்த்தகப் பொருட்களை எடுத்துச் செல்லவும் மாட்டு வண்டிகளே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. 1910ஆம் ஆண்டளவில் சுமார் இருபத்து மூவாயிரம் வண்டிகள் இருந்தன என்று 1911ஆம் ஆண்டுக் குடிசன மதிப்புப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. முனிசிப்பல் சபை புதிதாக விதித்த போக்குவரத்துச் சட்டம் ஒன்றினை எதிர்த்தே ஐயாயிரம் வண்டிக்காரர் வேலைநிறுத்தஞ் செய்தனர். அப்பொழுது உதயதாரகை ஆசிரியராக இருந்தவர் பிள்ளையவர்கள். 23-8-1906 இதழிலே, 'வண்டிக்காரர் குழப்பம்' என்னும் தலைப்பில் 13ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கமாய் வேலைக்குப் போகவில்லை..... ஒருவரினுதவி மற்றவர்க்கு அகத்தியம் தேவையாயிருக்கு'' என்று எழுதினர். பத்திராதிபர் என்ற வகையில் பிள்ளை பாரபட்சமற்ற முறையில் இவ்வாறு எழுதினர் என நாம் கொள்ளலாம். எனினும் தீவிரவாதியாக விளங்காவிடினும் வாழ்நாள் பரியந்தம் 'தொழிற்சங்கங்கள்' நிறுவுவதிலும் அவற்றை வளர்ப்பதிலும் அவருக்கு நிரம்பிய நாட்டம் இருந்தது: ''இவரது சங்கங்கள் தேசியம் வாய்ந்தனவாக இருக்கும்''.

யாழ்ப்பாணத்திலே பல சங்கங்களை நிறுவியதில் பெரும்பங்கு கொண்ட பெருமை துரையப்பாபிள்ளை அவர்களுக்கு உண்டு: அவை யாவற்றுள்ளும் 'உபாத்திமார் சங்கம்' நிறுவியதிலேயே அவருக்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டது எனலாம்: ''உபாத்திமாரை முகாமைக்காரர்களும் அரசாங்கமும் கவனியாதிருப்பதேனோ?..... உபாத்திமார் எல்லோரும் ஒருங்குகூடிச் செய்ய வேண்டிய விஷயங்கள் எவையென்று யோசிக்க ஓர் உபாத்திமார் சங்கம் இருத்தல் அவசியம்''.[9]

''உயர்ந்த சம்பளம் பெறுபவர்களுக்கே வயோதிப காலத்திலும் உபகாரச் சம்பளம் கொடுத்தற்கேற்ற ஒழுங்குகளுண்டு. அற்ப சம்பளம் பெறும் உபாத்திமார்க்கு அவ்வித ஒழுங்கில்லை —... உபாத்திமார் ஒருங்குகூடி அரசாட்சியாருக்கு முறையிடுவதற்கும் போதிய நியாயங்களிருக்கின்றன.''[10]

தொழிற்சங்கம் என்று நேரடியாய்க் கூறுவிடினும், ''ஒருங்குகூடிச் செய்ய வேண்டி''யதன் அத்தியாவசியத்தை மேற்காட்டிய கருத்துரைப்பகுதிகள் ஐயத்துக்கிடமின்றித் தெளிவாக்குகின்றன. இத்தகைய பிரசாரத்தின் பயனாகவும் முயற்சிகளின் விளைவாகவும் அவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் உபாத்திமார் சங்கம் ஒன்று உருவாகியது.

''23 ஜூன் 1906 சனிக்கிழமை பகல் பதினொரு மணியளவில் உபாத்திமார் சங்கக் கூட்டம் அடைக்கலமாதாவின் பாடசாலையில் நடைபெற்றது. அமெரிக்க, உவெஸ்லிய, சேட்சு, கத்தோலிக்க மிஷன் சங்கங்களின் கீழும் சுதேச முகாமைக்காரர்களின் கீழுமுள்ள ஆசிரியர் நிறைந்தனர். தலைவர்: தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள்; தெல்லிப்பழை ஆங்கில வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்; லிகிதர்: ஏ. தோமஸ்; கொழும்புத்துறை போதனவித்தியாசாலை ஆசிரியர்.''[11]

Brother Philip என்பவர் இம்முயற்சிகளில் முக்கியபங்கு வகித்ததாகத் தெரிகிறது. இச் சங்கத்தின் பிறிதொரு கூட்டத்திலே, உயர் சம்பளம், உபகாரச் சம்பளம் கோரல் முதலியனவற்றை உள்ளடக்கிய பல நிர்ணயங்கள் (தீர்மானங்கள்) கொண்டுவரப்பட்டன. இம்முயற்சிகளின் முக்கியத்துவத்தை இதற்குமேலும் இவ்விடத்திலே விளக்குதல் வேண்டா.

தென்னிலங்கையிலும் உள்ளூர் உயர்ந்தோர் குழாத்தைச் சேர்ந்த பலர் சிங்களப் பத்திரிகை எழுத்தாளராயும், ஆசிரியர்க

9. உதயதாரகை, 12-4-1906.
10. உதயதாரகை, 14-6-1906.
11. உதயதாரகை, 28-6-1906.

ளாயும், இலக்கிய கர்த்தாக்களாயும் இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆசிரியர் சங்கங்களில் மட்டுமன்றி, யாழ்ப்பாணம் தமிழ்க் கழகம், யாழ்ப்பாணம் சனசங்கம் போன்ற பல நிறுவனங்களிலும் இடையீடற்ற அக்கறை கொண்டிருந்தார் துரையப்பாபிள்ளை அவர்கள். வாய்ச்சொல் வீரராக அன்றிச் செயல் வீரராயும் விளங்கினார். அதேவேளையில், தான் வாழ்ந்த பிரதேசத்து விவகாரங்களில் மட்டுமல்லாது அனைத்திலங்கைப் பிரச்சினைகளிலும் அவ்வப்போது அபிப்பிராயம் தெரிவித்தார். இந்திய அரசியல் விவகாரங்களையும் கூர்ந்து கவனித்துப் பல கட்டுரைகளை எழுதினார்.

இவையெல்லாவற்றையும் நோக்கும் பொழுது, இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படிப்படியாக எழுச்சி பெற்றுவந்த தேசியம் நாடு முழுவதற்கும் பொதுவான சில கூறுகளையும் அம்சங்களையும் கொண்டிருந்தது என்பதும், அவை பிரதேச அடிப்படையில் பல்வேறு வண்ணங்களிலும் வடிவங்களிலும் செயற்பட்டன என்பதும், வடபகுதியில் அவை நடந்தேறியவாற்றைத் தெரிந்து கொள்ளுவதற்குக் கல்விமானும், சீர்திருத்தவாதியும், தேசியவாதியுமான தெ. அ. துரையப்பாபிள்ளையின் வாழ்க்கையையும் பணியையும் எடுத்துக்காட்டாகவும், முன்மாதிரியாயும் கொள்ளுதல் சாலப் பொருந்தும் என்பதும் ஒருவாறு துணியப்படும்.

பாவலர் போற்றுதும்

புன்னாலைக்கட்டுவன், வித்துவசிரோமணி,
பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

உதயதா ரகைமுதல பத்திரிகைக்
கதிபதியா யோங்கச் செய்தோன்
இதயதா மரைவிரிய வொளிபரப்பி
ஞாயிறுபோ லிலங்கி நின்றோன்
மதியதாழ் சடைக்கடவுள் தன்பாத
நீழலுக்கு மருவு மன்பாற்
புதியதாங் கவிகள்தமைப் பட்டணத்தெம்
மடிகளிற்செய் புலவன் மாதோ.

ஆரியமுந் தமிழும்வளர் சங்கமுதற்
பலசங்கத் தங்கத் தோனுய்
சீரியன வுலகினுக்குத் தெரிந்துசெயும்
பெருமையினன் தேசத் தொண்டே
காரியமென் றினிதாற்று மிவன்செயலை
முற்றுறயாங் கழற லாகா
நேரியலச் செயுமுதவி கருதியிவன்
றனைப்போற்றல் நீர்மை யாமே.

கி. நில்லைநாதன்
M. A. (Cey.) M. Litt.,
இலங்கைப் பல்கலைக் கழகம்
பேராதனை வளாகம்

இதோபதேசமஞ்சரியின் சமூகத்தேவை

'சின்னவயதிற் கல்வி சிலையில் எழுத்ததுபோல்
சென்னியில் எழுதிவைத்தாய் ..... தாயே
தேவபயம் என்நெஞ்சில் ஸ்திரமாய்க்குடி
கொள்ளவே

ஆவலாய் அறிவீந்தாய் ..... தாயே
அன்பு, பொறுமை, நீதி ஆகிய லட்சணங்கள்
இன்புற எனில் அமைத்தாய் ..... தாயே
பொய்யை வெறுத்து மெய்யைப் பொன்னென
மதிக்கவே

துய்ய போதனை தந்தாய் ..... தாயே
சன்மார்க்க கீதங்கள் தயவாய் எனக்குச்
சொல்லித்

தந்து சாதனை பண்ணினாய் ..... தாயே'

மேற்கண்டவாறு 'தாய்செய்ந்நன்றி' போற்றும் பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளை அவர்களின் கூற்றுக்களின் மூலம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூற்றிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்கூற்றிலும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த அன்னாரது மனப்பாங்கினையும் மதிப்பீடுகளையும் அறிந்துகொள்ள முடியும். கல்வியையும் தெய்வத்தையும், அன்பையும், பொறுமையையும் நீதியையும் வாய்மையையும் பேணிப், பொய்ம்மையை வெறுத்துச் சன்மார்க்க வழியினுக் கொளிபாய்ச்சும் வேட்கை பூண்ட அவரது உள்ளத்தைப் புரிந்துகொள்ள வியலும்.

சமூக, பொருளாதார, அரசியற் காரணிகளாற் காலகதியிற் புதிய நெருக்கடிகளும் முரண்பாடுகளும் ஒழுக்கநெறிப் பெயர்ச்சிகளும் தோன்றும்போது, அமைதியும் ஒழுங்கும் பொருந்திய சமூக நலத்தினை நாடுபவர்களும் தோன்றி, நேச பாவமும் கூட்டுறவும் சகிப்புத்தன்மையும் விளக்கமும் ஏற்பட வழிகாட்டுவது உண்டு. யாழ்ப்பாணச் சமூகத்தில் மேல்நாட்டவர் வருகையாலும், ஆங்கிலக் கல்வி முறையின் தாக்கத்தினாலும், அரசியல், பொருளாதார மாறுதல்களினாலும் ஒழுகலாற்றுப் பிறழ்ச்சிகள் நிகழ்ந்ததோடு மரபு வழி மதிப்பீடுகளும் முக்கியத்துவம் குன்றின. இச்சூழ்நிலையில் உதித்த பாவலர் பிறர்க்கென வாழும் பண்பினால் உந்தப்பட்டுத் தம் காலத்துக்குப் பொருந்தக்கூடிய பழைய ஒழுக்கங்களை வற்புறுத்தியதோடு புதிய விளக்கங்களையும் எடுத்தியம்பிச் சமூக அமைதி பேண முனைந்தார். அதன் விளைவுதான் அவராலியற்றப்பட்ட 'இதோபதேச கீதரச மஞ்சரி'யாகும்.

சமூக நலனுக்குப் பாதகமான பண்புகளை ஒதுக்கிச் சமூக சீராக்கத்துக்கு உதவக்கூடிய ஆளுமையை வளர்க்கும் உணர்வினைத் தனிமனிதருக்கு ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட பாவலரை அமைதியான ஒரு சமூக சீர்திருத்தவாதியெனலாம்.

சீரான இல்லங்களும், சுகாதாரத்துக்கேற்ற ஒய்வுநேர நடவடிக்கைகளும், சிறந்த கல்வியும், செவ்விய சமூக நிறுவனங்களும், ஏற்ற நம்பிக்கைகளையும், ஒழுக்க நெறிகளையும் தழுவிய பழக்க வழக்கங்களும் நல்ல குடிமக்களை உருவாக்கும் என்பதை உணர்ந்துகொண்டு செயற்பட்டவர் பாவலர்.

"என்ன நன்மையானாலும் எனக்கிதனாலே
யாதும்
லாபம் வந்தாலேயன்றி எண்ணேனினதை
யென்றேதும்
சின்னத் தனத்தால்வந்த தீவினை போதும்"

என்று சுயநலத்தைச் சாடிப் பொதுநலன் நாடிப் புறப்பட்ட பாவலர் தமது உபதேசங்கள் இதமானவையாக இருக்கவேண்டுமென்று விரும்பியமையே அவரது சமூகப் பார்வையைப் புலப்படுத்துவதாகும்.

'இதோபதேச மஞ்சரி'யை வெளியிட்டபோது, தமது நோக்கங்களையும் முகவுரையிற் பாவலர் தெளிவுபடுத்தினர்: தமது ஒழுக்கங்களுக்குக் கேடு நேராத வகையிலே தமிழ் மக்கள் யாவரும் படிப்பதற்கேற்ற பாடல்களை நல்குவதையும் தேசத்திற்கு அத்தியாவசியமான சீர்திருத்தங்களின் பால் மக்களின் கவனத்தை ஈர்ப்பதையும், இசைக்கலையினை வளர்க்கும் ஆவலைத் தூண்டுவதையும் தமது நோக்கங்களாகப் பாவலர் குறிப்பிட்டுள்ளார்.

சங்கீதம், சங்கீத மகத்துவம் ஆகிய பாடல்கள் அவரது இசைக்கலை யார்வத்

தைக் காட்டுவனவாயினும், இசை தழுவிய பாடல்களை அவர் இயற்றியது மக்கள் கவனத்தைச் சமூக சீர்திருத்தத்தின்பால் இதமாக இழுக்கும் நோக்கத்தினால் என்றே தோன்றுகிறது. அரசவைகளுக்கும், வல்லோர் குழுக்களுக்கும் வெளியே வந்து பொதுமக்களோடு தமது உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் பகிர்ந்துகொள்ள விரும்பிய புலவர்கள் இசை தழுவிய இலகுவான நடையினைக் கையாண்டதைத் தமிழிலக்கிய வரலாற்றில் முன்னரும் கண்டுள்ளோம். தமிழ்மக்கள் இசையினாற் கவரப்பட்டவர்களாயிருந்தனரென்றும் பாவலர் தம் முகவுரையிற் குறிப்பிட்டுள்ளார். 'இதோபதேச மஞ்சரி'யின் உள்ளடக்கமும் எமது கருத்துக்கு அழுத்தம் தருவதாகும்.

எல்லோரும் புரிந்துகொள்ளத்தக்க எளிமை நோக்கிச் சிலவிடத்து அவர் கையாண்டுள்ள பேச்சுவழக்குச் சொற்கள் சொல்ல வந்த கருத்தினை உள்ளத்தில் வலுவாகப் பதியவைக்கும் வல்லமை பெற்றுக் காணப்படுகின்றன.

"ஒரு பொய்தன்னை மறைக்கப் பல
பொய்யைக் கூட்டும்
.....
சனியன் அது பெரிய சள்ளினில் மாட்டும்"

என்பது அதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

நல்ல பொருளொன்றினை வலியுறுத்தப் புகுந்தவிடத்து, அது அமைந்தவிடத்து ஏற்படும் நன்மைகளையும், அல்லாதவிடத்து நேரும் தீமைகளையும் கூறும் வகையும், பொதுமக்கள் மத்தியிற் செல்வாக்குப் பெற்ற பழையகதை நிகழ்ச்சிகளைச் சிலவிடத்து எடுத்துக் காட்டும் அழகும் குறிப்பிடத்தக்கன. தெய்வம் தொழுதல், கல்வியறிவு, நற்குண நற்செய்கைகள், உண்மை பேசல், கோபம் தவிர்தல், மெய்யான சிநேகம், நன்றி மறவாமை, அடக்கம், இன்சொல், ஜீவகாருண்யம், ஈகை, வாசித்தல், தேகாப்பியாசம் முதலியவற்றினால் விளையும் நன்மைகளையும், பொய், சதி, கடன், மது, முகஸ்துதி, கைக்கூலி, பணவாஞ்சை, வீண்செலவு, சூதாட்டம் முதலியவற்றின் தீமைகளையும் அவர் அழகாக வலியுறுத்தியுள்ளார்.

முக்கால் நூற்றாண்டுக்கு முன்னமேயே ஆங்கிலக் கல்வியின் அவசியத்தோடு தமிழ்க்கல்வியின் முக்கியத்துவத்தையும், தமிழ் மொழியின் பெருமையையும், ஆங்கில மோகங் கொண்டவர்களாலே தமிழ்த்தாய்க்கேற்பட்ட அவலத்தையும், பெண்கல்வியின் அவசியத்தையும், தொழிலின் மான்மியத்தையும், வாசித்தலின் இன்பங்களையும் வலியுறுத்திய பாவலரின் தரிசனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. எமது மக்கள் மேலான நூல்களையும், விந்தைசெறி நூல்களையும், உலகப் புதினங்களையும் வாசிக்க வேண்டுமென்றும், கைத்தொழிலோடு கமத்தொழிலையும் போற்ற வேண்டுமென்றும் விரும்பிய பாவலரின் போதனைகள் இக்காலத்துக்கும் அர்த்தமும், தேவையும் பொருந்தியவையாகும்.

வழக்காடலினால் வரும் தீமைகள், தற்பொழிவு, சுற்றத்தவரை நீங்கும் பெருமை, நகை போடுவதினால் வரும் நஷ்டங்கள், சீதன வழக்கத்தின் தீமைகள் ஆகிய பாடல்கள் தம்மைச் சுற்றியிருந்த யாழ்ப்பாணச் சமூக வாழ்வின் பிரச்சினைகளைப் பாவலர் எவ்வளவு கவனமாக அவதானித்துள்ளார் என்பதைக் காட்டுவனவாகும்.

"பெண்ணம்பெரிய மானம் பறிபோய் விட்டதாகச் சின்னஞ்சிறிய விஷயங்களுக்காக வழக்காடுகின்றனர்; எல்லைத் தகராற்றால் வழக்காடிய செலவுக்காக இறுதியில் அவ்வெல்லைக்குரிய காணியையே விற்கின்றனர்; நீதிமன்றத்திலே தீர்ப்பாக வழங்கினால், அதற்குக் கட்டுப்படுவார்களேயன்றி, அறிந்த நல்லோர் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க வழிகூறினாற் கேளார்" என்றெல்லாம் யாழ்ப்பாண மக்களைப் பற்றி அவர்களிடைப் பணியாற்றிய ஒரு சிங்கள நீதிபதி கூறக் கேட்டபொழுது, அதற்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னமே வழக்காடலின் தீமைகளைப் பன்னிப் பன்னிக் கூறிய பாவலரை வியக்காமலிருக்க வியலவில்லை.

முடிவாக இரண்டு கருத்துக்களைக் கூறலாம் எனத் தோன்றுகிறது. முதலாவது, அப்போது கிறித்தவராக இருந்த பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் இந் நூற்றாண்டு உதயமான ஆண்டில் (1901) சமயச் சார்பின்றி ஒழுக்கங்களை உபதேசிக்கும் 'இதோபதேச மஞ்சரி'யை வெளியிட்டமை கிறித்தவ சமயக் கோட்டினைத் தாண்டிக் கொண்டு தம்மைச் சுற்றி வாழ்ந்த மக்கள் சமூகத்துக்கு அன்று தேவைப்பட்ட பணிகளை ஆற்ற அவர் வருவதற்கான ஒரு முன்னறிவித்தலாக அமைந்தது. இரண்டாவது, அச்சமூகத்துக்கு இன்று தேவையற்றவை எனக் கடிந்து ஒதுக்கத்தக்கவை எவையும் 'இதோபதேச கீதரச மஞ்சரி'யில் இல்லை.

கார்த்திகேசு சிவத்தம்பி
M. A. (Cey) Ph. D. (Birm.)
இலங்கைப் பல்கலைக்கழக வித்தியோதய வளாகத்
தமிழ், திராவிடவியற்றுறை முதல்வர்.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்க காலத்து
இலங்கைத் தமிழ் நாடகம்

பாவலர் துரையப்பாபிள்ளையின் சகலகுணசம்பன்னன் பற்றிய ஓர் ஆய்வு

0 : 1 பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கூற்றிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும், யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி, இலக்கிய வரலாறு களிலே தென்படும் சில நெறிகளை விளக்குவதாகவும், அந்நெறிகளுக்கான எடுத்துக்காட்டாகவும் அமைகின்றது தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்களது (1872-1921) வாழ்க்கை; ஆறுமுகநாவலர் மூலம் முகிழ்த்துக் கிளம்பிய சில வரலாற்றுச் சக்திகள் அவர் மறைவின் பின்னர் எத்தகைய நெறியிலே சென்றன, தொழிற் பட்டன என்பதை அறிவதற்குத் துரையப்பாபிள்ளை அவர்களின் வாழ்க்கை பெரிதும் துணைபுரிகின்றது. அந்த அளவுக்கு துரையப்பாபிள்ளையின் வாழ்க்கை இலங்கைத் தமிழர் வரலாற்றிலும் முக்கியமானதாகின்றது.

0 : 2 துரையப்பாபிள்ளை அவர்கள் கிறித்தவராகி ஆங்கிலம் கற்றுப் பின் ஆசிரியராக விளங்கியவர். தனது தொழிலுக்குரிய பண்பாட்டுப் பூரணத்துவத்தையும் சமூகப் பயன்பாட்டையும் அடைய முனைந்த அவர், மீண்டும் இந்துவாகி, ஓர் இந்துக் கலாசாலையை நிறுவி அதனைத் திறம்பட நடாத்தினர். பிள்ளையவர்களின் இலட்சியப் பயணத்தையும், வாழ்க்கை மாற்றங்களையும் காட்டி நிற்கின்றன அவர் விட்டுச் சென்றுள்ள அவரது ''எழுத்துக்கள்''. ''சிந்தனைச்சோலை'' என்ற பெயருள்ள தொகுதியில் அவ்வெழுத்துக்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.''1

''உயர்திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள் நாவலர் அவர்களுக்குப் பின், நாவலர் அவர்களைப் போலவே நமது நிலைமையையும், நமது தேசத்தின் போக்கையும் நன்கு சிந்தித்திருக்கின்றார்கள். நாவலர் அவர்கள் வசனமூலம் தமது சிந்தனைகளை வெளியிட்டிருக்கின்றார்கள்; பிள்ளையவர்கள் கவிதை மூலம் தமது சிந்தனைகளை வெளியிட்டிருக்கின்றார்கள். கவிதை பிள்ளை அவர்களுக்குக் கைவந்தது.''2

பிள்ளையவர்கள் எழுதியவற்றுள் சகலகுணசம்பன்னன் எனும் நாடகமும் இடம் பெறுகின்றது.

0 : 3 ஈழத்துத் தமிழ்நாடகத்தின் வரலாறு இன்னும் எழுதப்படவில்லை; இதுவரை இதுபற்றி வெளிவந்துள்ளவை பூரணமான ஒரு வரலாற்றுக்கு வேண்டிய ஆதார ஏடுகளே. இந்நிலையில், குறிப்பிட்ட ஒரு காலப்பிரிவில், ஈழத்தில் தமிழ்நாடகம் எந்நிலையிலிருந்தது என்பதைக் காட்டும் சான்றுகளை விரிவாக ஆராய்வது பூரண

1. சிந்தனைச் சோலை — மகாஜனக் கல்லூரிப் பொன்விழா நினைவுச் சிறப்பு மலர், யாழ்ப்பாணம்—1960
2. கணபதிப்பிள்ளை இ. பண்டிதமணி — ஷை நூல் — பக். V.

மான வரலாற்றை எழுதுவதற்கு உதவியாகவிருக்கும்.

1 : 1 பிள்ளையவர்களின் நாடகத்தை ஆராய்வதன் முன்னர், அவரது இலக்கியப் பணியின் அடிப்படைப் பண்பினை அறிந்து கொள்வது அவசியமாகும்.

ஆறுமுகநாவலர் காலத்தில் (1822-1879) 'சைவமும், தமிழும்' என்ற கோஷம், ஈழத்து வடபகுதியின் சமூக, அரசியற்றேவைகளை – ஒரு வரலாற்றுத் தேவையினைப் பூர்த்தி செய்வதாக வமைந்தது. நாவலருடைய கண்ணோட்டத்தில், சைவம் என்பது வெறும் மத ஆசாரத்தை மாத்திரமல்லாது அம் மத ஆசாரத்தைப் பின்பற்றுவோரை, சிறப்பாக விவசாயிகளையும் குறிப்பதாகவே இருந்தது. யாழ்ப்பாணத்துச் சமயநிலை போன்ற கட்டுரை உண்மையிலே சமூகப் பிரச்சினை பற்றியனவே. நாவலரது கண்ணோட்டத்தில் தமிழ் என்பது சுதேசப் பண்பாட்டுக் கருவூலமாக விளங்கியது. அப்பண்பாட்டுக் கருவூலம் பிறரது கையிற் சிக்கி, அவர்களால் ஆயுதமாகப் பயன்படுத்தப்படக் கூடாது என்பதற்காகவே தமிழைச் சைவத்திலிருந்து பிரிக்கமுடியாத வொன்றாகக் கொண்டார்.[3]

இந்தப் பண்புநெறி பிறழாது வளர்ந்திருக்குமேல் அது சைவமக்களை – அதாவது யாழ்ப்பாணத்துக் கமக்காரர்களை மேலும் மேலும் பிரதிபலிக்கின்ற, அவர்களது பிரச்சினைகளை எடுத்துக் கூறித் தீர்வுமுறை காட்டுகின்ற இலக்கியங்கள் தோன்றியிருக்கும். இயக்கங்களின் வரலாறுகளை நோக்கும்பொழுது, ஆரம்பநிலையிற் காணப்படும் நேரடிச் சமூகத் தொடர்பு பின்னர் படிப்படியாக மறைக்கப் படுவதையும், மறக்கப் படுவதையும் காணலாம். இது காலம் வழங்கும் ''தண்டனை'' களிலொன்று. சமூகநிலைப்பட்டு நின்ற சைவ ஆர்வம், சைவத்திற்குக் கிட்டிய வெற்றியின் பின்னர் சாஸ்திரீயநிலை ஆர்வமாக முகிழ்க்கத் தொடங்குகின்றது. சைவச் சூழலில் ஆங்கிலம் கற்பதற்கான வாய்ப்புக்கள் பெருக (உத்தியோக வாய்ப்பினைத் தராத) தமிழ்க்கல்விபற்றிய ஆர்வம் குன்றத் தொடங்கிற்று. யாழ்ப்பாண நிலமானியவுடைமைச் சமுதாய அமைப்புக் கேற்ற முறையில், அச்சமுதாயத்து மேன்மக்களின் பொருளாதார, சமூக மேன்மை தொடர்ந்து நிலைப்பதற்கேற்ற வகையில் ஆங்கிலக் கல்வி புகட்டத் தொடங்கியதும் சைவமும், தமிழும் என்ற கோஷம் வலுவிழக்கத் தொடங்கிற்று. அரசியலிலும் புதிய உணர்வு எதுவும் ஏற்படவில்லை. இவை காரணமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பாகத்தில், ஈழத்துத் தமிழ் இலக்கியம், நாவலர் வகுத்த சமூக அர்ப்பண நிலையிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டுக் கொண்டிருந்தது.

1 : 2 துரையப்பாபிள்ளை அவர்கள் வட்டுக்கோட்டை செமினறியிற் பயின்றவர்; Taylor என்னும் கிறித்தவ நாமம் பெற்றிருந்தவர்; 'பாவலர் சரித்திர தீப' ஆசிரியர் ஆணல்ட் சதாசிவம்பிள்ளையின் விருப்புக்குரிய மாணாக்கர்களுள் ஒருவர்; 1910இல் மகாஜனக் கல்லூரியைத் தொடங்கும்வரை கிறித்தவத் தொடர்புகளைப் பேணிவந்தவர். கிறித்தவ நெறியிலே இவர் தொடர்ந்து சென்றிருப்பின், தமது ஆசிரியர் சதாசிவம்பிள்ளையைப் போன்றே இவரும், ''கிறித்தவத்தைத் தமிழ் மண்ணுடன் இரண்டறக் கலக்க வைக்கும்'' பணியிலீடுபட்டிருப்பார்.[4] ஆனால் இவரோ

3. ஆறுமுகநாவலரின் சைவத்தமிழ்ச் சேவையின் தேசிய முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதற்கு உதவும் ஆக்கங்களிற் சில.

(அ) Azeez A. M. A. The West Reappraised — Colombo.

(ஆ) நாவலர் முத்திரை வெளியீட்டின்பொழுது தபால் – தந்திப் போக்குவரத்துத் திணைக்களம் வெளியிட்ட வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் — 1971.

(இ) சிவத்தம்பி கா. நமது பரம்பரை – ஆறுமுகநாவலர் புதுமை இலக்கியம் — 1961.

4. சைவரது தமிழ்த்தொண்டுக்கும் கிறித்தவரது தமிழ்த்தொண்டுக்குமுள்ள பண்பாட்டு நிலை வேறுபாட்டினை இக் கட்டுரையாசிரியர், ''தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர்களின் பெருமுயற்சிகள்'' (ஆசிரியர் கலாநிதி பொ. பூலோகசிங்கம்) என்னும் நூலை விமரிசனஞ் செய்த கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார் — (தினகரன், 17-2-1971).

சமூகப்பணியையே தமது வாழ்க்கைப் பணியாகக் கொண்டார். தமது இதய வேட்கைக்கியையத் தொழிற்படுவதற்கான திடசித்தத்தை இந்திய சீவியம் ஏற்படுத்திற்று எனலாம். இவர் 1894 முதல் 1898 வரை வட-இந்தியாவில் ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

பிள்ளையவர்கள் பற்றிய கட்டுரையொன்றில், வி. முத்துக்குமாரு அவர்கள் குறிப்பிட்டுள்ளவை மிக முக்கியமானவையாகும்: ''தனது பராபரிப்பிலிருந்த குழந்தைகளின் நலனிலும், பாடசாலை வேலையிலும் கவனஞ் செலுத்திவந்த அதே வேளையில் அவர், சமூகத்துக்குத் தான் ஆற்றவேண்டிய கடமையை என்றுமே புறக்கணித்திடவில்லை; சமூகச் சீர்திருத்தத்துக்கான அவர் திட்டம் வளர்ந்தோர் கல்வி, அறநெறியுறுத்தல், இசை, நாடக மறுமலர்ச்சி ஆகிய பலவற்றைக் கொண்டதாகவிருந்தது. .....

திலகர், கோகலே ஆகிய இந்தியப் பெருந்தலைவர்கள் தமது தேசியப் பணியினைத் தொடங்கிய காலத்தில் பம்பாய் மாகாணத்தில் கோலாப்பூர், பெல்காம் ஆகிய இடங்களில் வசித்ததன் பலனாகவே இவர் [மக்கள்] சேவையின்பால் விருப்புடையரானார் எனலாம். குறைபாடுகளை அகற்றுவதற்கான கிளர்ச்சிகளைச் செய்வதற்கெனக் காலத்துக்குக் காலம் இவர் கூட்டங்களை ஒழுங்கு செய்துவந்தார்.''[5]

1 : 3 இவரது பாடல்கள் பெரும்பாலும் சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்கான இலக்கிய முயற்சிகளாகவேயுள்ளன. சிந்தனைச் சோலையில் இடம் பெறும் இவரது கவிதைகளுள் சிவமணிமாலை தவிர்ந்த மற்றையவை யாவுமே, மேலே குறிப்பிடப்பட்டதுபோன்று, "சமூக சீர்திருத்தம்'' சம்பந்தப் பட்டவையே.

வெகுசன நிலையில், மக்கள் பாடல்களை இசைத்துப் பாடவேண்டும் என்பதற்காகவே இவர் தமது ஆக்கங்களைக் ''கீதங்களாக'' இயற்றினார். இலக்கியத்தைக் கற்றறிந்தோரது ஆர்வ ஈடுபாடாக மாத்திரம் கொள்ளாது, சாதாரண மக்களது பாடற்பொருளாகவும் கொள்ள இவர் முனைந்தமை, இவரை இக்காலப் புலவர்கள் பலரினின்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. 'இதோபதேச கீதரச மஞ்சரி' என்ற இவரது பாடற்றொகுதிக்கு ''முகவாசகம்'' எழுதிய கு. கதிரவேற்பிள்ளை அவர்கள் கூறியுள்ளவை இப் பண்பினை எடுத்துக் காட்டுகின்றன; ''நமது தேசத்தில் புலவர் சன்மார்க்க விஷயங்களைச் சார்ந்த கீர்த்தனங்கள் இசைப்பாருளராயினும் ஓரோர் மார்க்கத்தோடு சம்பந்தப்பட்டனவாய் அல்லது நரஸ்துதியோடு கலந்தனவாயன்றிப் பெரும்பாலும் இசைத்தாரல்லர், ஆனால் இம் மஞ்சரியில் இசைக்கப்பட்ட கீதங்களோ சர்வசமயிகளும் ஒத்த உள்ளத்தினராய்ப் பாடக்கூடிய கீர்த்தனைகள். தாம் பெற்ற அங்கிலோ தமிழ்க் கல்வியறிவின் பயனுய்த்த தேச நன்மைக்கேற்ற சிறந்த தேர்ச்சிக்குரிய கருத்துக்களைக் கீர்த்தனங்கள் மூலமாய் இந்நூலைச் செய்தவரே முதன் முதல் வெளிப்படுத்துகிறாரென்று சொல்லலாம்.''[6] ஆசிரியரும், தமது நூலின் ஆங்கில முன்னுரையில் சமுதாயத்தின் சீவாதாரமான அமிசங்களை அரித்துத்தின்றுகொண்டிருக்கும் தீயநெறிகளை, அவற்றின் உண்மையான தோற்றத்துடன் எடுத்துக்காட்ட முயன்றுள்ளதாகக் கூறியுள்ளார்.[7] இலக்கிய ஆக்கத்தில், தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் பழையனவற்றையே மீண்டும் மீண்டும் பிரதிசெய்யாது, புத்தம் புதிய நெறிகளிற் செல்லவேண்டும் என்ற தமது கருத்தைத் துரையப்பாபிள்ளை

---

5. முத்துக்குமாரு V. — Some Recollections of the Founder in the Mahajana College Carnival Souvenir — 1954. pp. 16-7.

6. சிந்தனைச்சோலை — பக். 292. துரையப்பாபிள்ளை அவர்கள் தாம் கிறித்தவராகவிருந்த காலத்திலேயே "சன்மார்க்கம்'' என்னும் சமய சமரச நெறியைப் போதிக்கின்றார் என்பதை மனத்திருத்துதல் நலம். தமது மதக்கோட்பாட்டையும், தமது பண்பாட்டுப் பின்னணியையும் இணைப்பதற்குச் சன்மார்க்கம் என்னும் இக்கோட்பாடு உதவியிருத்தல் வேண்டும். மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் பாடல்களிலும் இத்தகைய ஒரு சமரச நிலையைக் காணலாம்.

7. சிந்தனைச்சோலை — பக். 297.

யவர்கள் தாம் எழுதிய ஆங்கிலக் கட்டுரை யொன்றில் மிக வன்மையாக எடுத்துக் கூறியுள்ளார்.[8]

இவ்வாறு பார்க்கும்பொழுது இலக்கியத்தை, அல்லது, "எழுத்தை" மக்களின் பாற்படுத்த வேண்டுமென்ற நோக்கம் இவரிடத்துக் காணப்படுவதை நாம் காணலாம்.

இவர் எடுத்துக்கூறும் இப்பண்பு இவர் காலத்திலேயே இயக்க வியாப்தி பெறுதற்குப் பல காரணங்கள் உள்ளன.[9] ஆனால் தன்னால் இயன்ற அளவுக்கு இவர் இலக்கியத்தின் பணியையும், பண்பையும் மாற்றியமைக்க முயன்றார் என்ற பேருண்மையை நாம் மறந்திடலாகாது.

இலக்கியம், துரையப்பாபிள்ளையின் பன்முகப்பட்ட சமூகசேவா சாதனங்களில் ஒன்றே. இவர் கல்வித்துறையில் ஈடுபட்ட அளவுக்கு இலக்கியத்துறையில் ஈடுபடவில்லையென்பதை மனதிற்கொண்டே இவரைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளல் வேண்டும்.

2 : 1 இலக்கியத்தை மக்கள்பாற் படுத்துவதைத் தமது முக்கிய குறிக்கோளாகக் கொண்ட ஒருவர் எழுதிய நாடகத்தை ஆராய்வது பயன் தரக்கூடிய முயற்சியாகும்.

துரையப்பாபிள்ளையவர்கள், 'சகலகுண சம்பன்னன்' என்ற நாடகத்தை மேடையேற்றும் நோக்கத்துடனேயே எழுதினர் என்றும், அந்நாடகம் 1905இலும் அவர் மறைந்த பின்னர் 1930இலும் நடிக்கப் பெற்றதென்றும் அறிகின்றோம்.[10] இந்நாடகம் 1960லேயே முதன் முதலில் வெளியிடப்பட்டுள்ளது. துரையப்பாபிள்ளை அவர்கள் அதனை அச்சுக்கான பிரதியாகக் கருதியிருக்க மாட்டாரென்பது பின்னர் கூறுவனவற்றால் தெரியவரும். எனவே இந்நாடகப் பிரதி முற்றிலும் நடிப்பதற்கென்றே பயன்படுத்தப்பட்டதெனக் கொள்ளலாம்.

2 : 2 ஒரு கருத்தினை அல்லது உணர்ச்சிநிலையை வெளிப்படுத்தி அதன் காரணமாகப் பிறருடன் தொடர்பு ஏற்படுத்துவதில் ஆக்க உத்வேகம் காணும் உணர்வு கலை உற்பத்தியின் பொது அமிசமாகும். நாடகத்தைப் பொறுத்தமட்டில் அவ்வெளிப்பாட்டு உறவு கண்முன்னே இருக்கும் குழுவினருடன் (பார்வையாளர்கள்) ஏற்படுத்திக் கொள்ளப்படுவதால் நாடகம் மற்றெல்லாக் கலை வடிவங்களையும் விட "நேரடி"யானதாக விளங்குகின்றது. முன்னொரு காலத்தில் கவிதையும் இவ்வாறு நேரடியாக அனுபவிக்கப்பெற்ற கலைவடிவமே. நடனமும் இத்தகைய ஒரு நேரடிக்கலைதான். ஆனால் அது தனக்கெனச் சில குறியீட்டு மரபுகளைக் கொண்டது. அக்குறியீட்டு மரபுகளிற் பரிச்சயமில்லாததோர் நடனத்தைப் பூரணமாக ரசித்தல் முடியாது. நாடகத்து உத்திகள் சாஸ்திரீய நடனத்து உத்திகள்

8. துரையப்பாபிள்ளை அ. Jaffna, Past and Present Ceylon National Review - Jan. 1907. Reprinted in Mahajana College Golden Jubilee Supplement 1960. pp. 16-28.
"Tamil educated men must write original works in Tamil. That is the great need of the day.....
I think an overestimation of the merits of old works, an undue reverence for things of the past, an extreme conservatism which would only follow the beaten track and stoutly oppose the introduction of new features or original mortifications and a feeling of diffidence coupled with the lack of sympathy and support to literary ventures characteristic of the Tamil scholars must be deemed responsible for the defect I have pointed out ....."

9. அக்காலத்துச் சமூக, பொருளாதார நிலைமைகள், இவ்வாசிரியரது தன்மைகள் என அவற்றை விரிவாக ஆராய்ந்தறிதல் வேண்டும்.

10. சிந்தனைச்சோலை — பக். II

போன்று நெகிழ்ச்சி அற்றவையன்று. நேரடிக் கலையானமையால் கலைஞரும், பார்வையாளரும் தத்தம் தொழிற்பாடுகளால் இணைந்து நிற்கின்றனர். ஒருவரின் உணர்ச்சிப் பூரணத்துவம் மற்றவரின் உணர்ச்சிப் பூரணத்துவத்திலேயே தங்கியுள்ளது. அந்த இரண்டு உணர்ச்சி நிலைகளும் சங்கமிக்கும்பொழுது தோன்றும் அநுபவத்தைப் "பங்குகொளல் அனுபவம்" (participatory experience) என்பர்: நாடகக் கலையின் ஆதார உந்துசக்தி இதுவே:

மேற்குறிப்பிட்ட பண்பு காரணமாக, நாடகம் கருத்துப்பரப்பும் வடிவங்களில் முக்கிய ஒன்றாக விளங்குகின்றது. கருத்துக் கோட்பாடுகளை மனிதநிலைப்படுத்தி, உணர்ச்சிப் போராட்டக்களத்து நிறுத்தி வாழ்க்கையோடு இணைத்துக் கண்முன்னே காட்டுவது நாடகம். எனவேதான் மத நிறுவனத்தினர்முதல் சமூக சீர்திருத்த வாதிகள்வரை யாவரும் நாடகத்தைப் பயன்படுத்துகின்றனர்.

குறிப்பிட்ட ஓர் இலக்கியக் கோட்பாட்டினைக் கொண்டிருந்த ஓர் இலக்கிய கர்த்தன் நாடகத்தைக் கையாளும் பொழுது. நாடகத்தின் "நேரடியநுபவத்" தன்மையை நன்கு பயன்படுத்துவான்: அதனால் நாம் அத்தகைய நாடகத்தில், ஆசிரியனது கருத்துக்களை மாத்திரமல்லாது, நாடகத்தின் அன்றையநிலைமையையும், நடிப்பு, மேடையேற்ற மரபுகளையும் அறிந்துகொள்ளக்கூடியதாக விருக்கும்:

3 : 1. சகலகுணசம்பன்னன் முத்தன் முதலில் மேடையேற்றப்பட்ட பொழுது (1905) யாழ்ப்பாணக் கலை வாழ்க்கையில் நாடகம் வகித்த இடம் யாது?

யாழ்ப்பாணத்து நாடக வரலாற்றை யறிய விரும்பும் மாணவன் இதுவரை ஒன்றிணைத்தாராயப்படாத இரு நிலைப்பட்ட சான்றுகளை ஆராயவேண்டியுள்ளான்: முதலாவது இலக்கிய வரலாற்றாசிரியர் தரும் "செய்திகள்". இவை பெரும்பாலான ஆசிரியர் பெயராகவோ அன்றேல் நூற்பெயராகவோ மாத்திரமேயுள்ளன. அதாவது இன்ன புலவர் இன்ன நூல்களை இயற்றினர்; அவை இவை என்றே அன்றேல், இந்நூலை இயற்றினர் இவர் என்றேதான் உள்ளன. பெரும்பாலான நூல்கள் கிடைப்பதற்கு அரியனவாயுள்ளன. இந் நிலையில் நூல்களின் தனிப்பட்ட இலக்கியத் தன்மையைப் பூரணமாக ஆராய முடியாதிருக்கின்றது:

மேனாட்டார் ஆட்சிக் காலத்து வாழ்ந்த பல புலவர்கள் நாடக நூல்களை எழுதியுள்ளனர் என்பதற்கு இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இந் நாடக நூல்கள் எத்தகையன? நாடகக் கலாரசிகர்களுக்கும் நாடகத்துறையினர்க்கும் நாடகத்தின் "எழுத்துநிலை"—அதாவது நாடக இலக்கியம்—நாடகத்தின் ஓர் அமிசமே. அதுவே நாடகமாகாது: அது நடிகர்களால் அரங்கேற்றப்பட்டு மக்கள் பார்க்கும்பொழுதுதான் நாடகமாகின்றது. எனவே நாடகநூற் பட்டியலை வைத்துக்கொண்டு மாத்திரம் நாடக நிலையை விவரித்துவிட முடியாது:

இந்திய இலக்கிய மரபில், நாடகத்தை ஓர் இலக்கியவடிவமாக மாத்திரமே பயன்படுத்தும் ஒரு நெறியும் உண்டு; அதாவது நாடக அரங்குடன் எத்தகைய தொடர்புமில்லாது முற்றிலும் இலக்கியமாகவே இயற்றப்படுகின்ற தன்மை உண்டு: இப் பண்பு மேனாட்டு இலக்கியங்களிலும் ஒரோவிடங்களிற் காணப்படுவதுண்டெனினும், அவர்களது நாடக ஆக்கங்கள் அரங்க மரபிலிருந்து முற்றிலும் விடுபட்டவையாக விளங்கவில்லை.

தமிழ் இலக்கிய வரலாற்றிற் குறிப்பாக 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் இத்தன்மை நிலவுவதைக் காணலாம். இக் காலப்பிரிவிலும், சற்றுப் பின்னரும் தோன்றிய பள்ளுக்கள் யாவும் கோவில் நாட்டிய மரபுடன் இணைந்தவையன்று. குறிப்பாக ஈழத்து 'கதிரைமலைப் பள்ளு', 'பருளை விநாயகர் பள்ளு'ப் போன்ற நூல்கள் ஆட்ட மரபுகளுடன் இணைந்தவையன்று. இப்பள்ளு நூல்களைப் பாடியோருக்குப் பள்ளு என்பது முற்றிலும் சிற்றிலக்கிய

வகையாகவே இருந்திருத்தல் வேண்டும்.[11] ஈழத்து இலக்கிய நூற்பட்டியல்களில் வரும் பெரும்பாலான நாடகங்களும், விலாசங்களும், இலக்கிய வடிவங்களாகவே எண்ணி எழுதப்பட்டனவோ என்பது தெரியவில்லை.

மேலும் தமிழ்நாடக வரலாற்றை யறிந்தோர் தமிழ்நாடகமும், தமிழர் சமுதாய அமைப்புக்கியைய வேத்தியல், பொதுவியல் என அமைந்ததை அறிவர். உயர்மக்களுக்கெனத் தனியொரு நாடக மரபும் (வேத்தியல்), பொதுமக்களுக்கெனத் தனியொரு நாடகமரபும் (பொதுவியல்) நிலவிவந்தது. பொதுமக்கள் என்னும் கருதப்படாத குலக்குழுக்களின் நாடகக் கலைகள் (ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி, பள்ளுப் போன்றவை) பொதுவியலுள் அடங்கவில்லையென்றே கூறவேண்டும்.[12] ஏற்புடைத்தான இலக்கியமுடையவையாயிருக்கும் நாடகங்கள் உயர்குழுக்களின் நாடகமரபைச் சார்ந்தனவாகவே இருத்தல் வேண்டும். எனவே உள்ள நாடக இலக்கியங்கள்கூட (அவை உண்மையான ஆட்ட அரங்குடன் தொடர்பு கொண்டவையாயிருப்பின்) முற்றுமுழுதான நாடக வரலாற்றை எழுத உதவா; அதற்கு மூன்று சமூகநிலையிலும் பயிலப்பட்ட நாடக மரபுகளை அறிதல் வேண்டும்.

இரண்டாவது நாடகப்பயில்நிலை பற்றிய சான்றுகளாகும். இவை மக்களிடையே நிலவிய நாடகமரபுகளைப்பற்றிக் கூறுவன. ஆனால் இவை நாடக இலக்கியம் பற்றி எதுவும் கூரு. கத்தோலிக்க மரபினரின் நாடக மரபுகளைப்பற்றி முதலில் ஆட்டமரபுவழி சென்றே, பின்னர் அவற்றுக்கான இலக்கியங்களை அச்சேற்ற முடிந்தது.[13]

3 : 2. இத்தகைய இடர்ப்பாடுகளிடையேயும் மேலோட்டமான ஒரு நோக்கினைத் தருவதற்கான சான்றுகள் பல உள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதிப் பகுதியில் பல நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. 1874 இல் காலமான உடுப்பிட்டிக் குமாரசுவாமி முதலியார் 'இந்திரகுமார நாடகம்' என்னும் 'நூலினை' இயற்றினார். 1885 இல் காலமான ஆனைக்கோட்டை வாசியான இராமலிங்கமென்பவர் 'மாணிக்கவாசகர் விலாசம்', 'தமயந்தி விலாசம்' என்ற நாடகஞ் சார்ந்த நூல்களை எழுதியுள்ளார் எனத் தெரிகின்றது.[14] இவர் ''புலவராய்ப் பற்பல பதங்கள், கீதங்கள் பாடினார்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் நாடக அரங்கத் தொடர்புடையவராகவும் இவர் விளங்கியிருக்கலாம்.

நாடக நூல்கள் பற்றிய செய்திகளிலும் பார்க்க முக்கியமானது, 1887 யூன் மாதம் 28, 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண முற்றவெளியிற் கொண்டாடப் பெற்ற விக்ற்ரோறியா இராணியின் 'யுபிலி' விழா பற்றிய செய்தியாகும்:

> ''1887 யூன் 28 இராணியின் யுபிலி விழா வைபவம் தீவின் எல்லாப் பட்டினங்களிலும் பெரு மகிழ்ச்சியுடன் கொண்டாடப் பெற்றது. யாழ்ப்பாணத்தில், முற்றவெளியில் பெரியதொரு கூட்டம் திரண்டிருந்தது. இராணியாரின் ஆட்சிக் காலச் சேவை பற்றிய ஒரு பட்டியலை அரசாங்க ஏசண்டர் திரு. டபிள்யூ. சி. துவைனம் ஆங்கிலத்திற் படித்தார். யாழ்ப்பாணத்தில் பின் வரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.....

---

11. பல்லு இலக்கிய வகையின் சமுதாய முக்கியத்துவத்தைக்கூட உணர்ந்திருப்பார்களோ என்பது சந்தேகமே. உயர்த்தோரின் புகழை எடுத்துக்கூறுவதற்கு அடி நிலையிலுள்ளோரைப் பயன்படுத்தவேண்டிய வரலாற்றுத்தேவை மிகவும் முக்கியமானதாகும்.

12. இதுபற்றிய பூரண விளக்கத்துக்கு : சிவத்தம்பி கா, Drama in Ancient Tamil Society (Ph. D. Thesis submitted to the University of Birmingham, 1970), unpublished.

13. பேராசிரியர் வித்தியானந்தன் பதிப்பித்த ஞானசவுந்தரி நாடகம், எஸ்தாக்கியர் நாடகம், மூன்று இராசாக்கள் நாடகம் ஆகியனவற்றை நோக்குக.

14. 9. V. Martyn, John. H, Notes on Jaffna. (Jaffna, 1922). p. 237.

மு. ப. 9 மணி புறக்கோட்டைத் தேவாலயத்தில் ஆங்கிலத் திருச்சபை வழிபாடு

மு. ப. 11-00 மணி : ஏழைகளுக்கு அன்னதானம்.

பி. ப. 4-00 மணி: முற்றவெளியில் அமைக்கப்பட்ட பந்தலிற் சேவை விபரம் வாசிக்கப்பட்டமை.

பி. ப. 7-30 மணி: தமிழ்நாடகம்- வர்த்தகநாடகம், சுதேசிய இசைவாத்தியக்காரர் இன்னும் பிறவும்.

யூன் 29. பி. ப. 4-00 மணி: பெண்களுக்கான விக்ரோறியா சிகிச்சைச் சாலைக்கான அடிக்கல்நாட்டு வைபவம்.

பி. ப. 7-30 மணி: வாண வினோயாட்டு, சுதேசிய இசை.

பி. ப. 9-00 மணி: தமிழ்நாடகம் அரிச்சந்திர விலாசம்''.[15]

விக்ரோறியா மகாராணியின் ஆட்சி நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்குக் கூடிய பெருவிழாவில், இரு நாட்களிலும் நாடகம் இடம்பெற்றதெனின், அக்காலத்தில் நாடகம் முக்கிய கலையாக இடம் பெற்றிருந்ததென்பது ஐயந்திரிபறத் தெரிகின்றது. இத்தகைய சந்தர்ப்பத்தில் அரங்கேற்றப்பட்ட நாடகத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரே பங்குபற்றினர் என்று கொள்வதும் முடியாது. எவ்வாறு பார்க்கினும் நாடகம் இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் உயர்ந்தோரின் கலையாகவும் விளங்கிற்றென்பது திண்ணம்.

அரங்கேற்றப்பட்ட நாடகங்களுள் அரிச்சந்திர விலாசம் மரபுவழிவரும் கதையைக் கொண்டது. அரிச்சந்திர விலாசம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விக்ரோறியா மகாராணியிடமே சமர்ப்பிக்கப்பட்ட நாடகநூலாகும்:

மற்றையதுபற்றிய ஆங்கிலக்குறிப்பு அதனை ''வர்த்தகநாடகம்'' என்றே வாசிக்கத் தூண்டுகின்றது. இப் பெயர் தமிழ் ஒலியமைப்புக்கியைய ஆங்கிலத்தில் எழுதப்படவில்லை யாதலால், இதனை ''வார்த்தக'', ''வர்த்தாக'', ''வார்த்தகா'' எனப் பலமுறைகளில் வாசிக்கலாம். ஆனால் அவை கருத்துடையனவாக அமையா. மேலும் நாடகத்தின் முழுப்பெயரும் இதுவாகவே இருத்தலால் வர்த்தக நாடகம் என வாசித்தலே பொருத்தமானதுபோற் றோன்றுகின்றது.

அவ்வாறு வாசிப்பின், இந்நாடகத்தின் கதை புதுமையானவொன்றாக விருந்திருத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தின் வர்த்தக விருத்தி, அல்லது ஆங்கில வர்த்தக விருத்தி, அல்லது வர்த்தகன் ஒருவன் பற்றிய நாடகமாகவிருக்கலாம். இவ்வாறு சிந்திக்கும்பொழுது, சேக்ஸ்பியரின் வெனிஸ் வர்த்தகன் நாடகத்தின் தமிழாக்கமாக விருந்திருக்கலாமோ என்றும் ஐயுற இடமுண்டு. சமகால ஏடுகளை நன்கு ஆராயும்பொழுது உண்மை புலப்படும். எவ்வாறு நோக்கினும் இந்நாடகம் புதிய கதை தழுவிய நாடகம் என்னும் எண்ணமே மேலோங்கி நிற்கின்றது. அவ்வாறாயின் நாடகக்கலை காலத்துக்கேற்ற இயைபுடன் வளர்ச்சியடைந்து வந்தது என்பதும் தெரிய வருகின்றது.

1887 திசெம்பர் 27ஆம் திகதி யன்று யாழ்ப்பாணக் கத்தோலிக்க வாசிகசாலை நிதிக்காக சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நாடக இசை நிகழ்ச்சியொன்று நடைபெற்றதாக ஜோன் மார்ட்டின் குறிப்பிட்டுள்ளார்.[16] கத்தோலிக்கரிடையே நாடகம் மதச்சடங்காகவே நிலையூன்றி வளர்ந்தது என்பது யாவர்க்கும் தெரிந்தவொன்றே. கத்தோலிக்க உயர் சமூகத்தினரிடையேயும் அது ஏற்புடைத்தான பொழுதுபோக்குக் கலையாக விளங்கிற்று என்பதை இச் செய்தி நிரூபிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட இரு செய்திகளும் அக்காலத்து யாழ்ப்பாணத்து உயர் சமூகத்தினரிடையே நாடகம் ஏற்புடைத்தான

15. V. Martyn, John H. Notes on Jaffna (Jaffna 1922), பக்கம் 48—முதலாவது நாடகம் ஆங்கிலத்தில் Varthaga Nadagam எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

16. மேற்படி நூல் பக். 48.

கலையாக இடம்பெறுவதையும், நன்கு பயிலப்படுவதையும் எடுத்துக் காட்டுகின்றது. துரையப்பாபிள்ளையவர்கள் தமது சகலகுணசம்பன்னன் என்னும் நாடகத்தை எழுதும்பொழுது, நாடக எழுத்துக்கான ஒரு தேவை (மிகக் குறைந்த அளவில்) இருந்ததென்பது தெரியவருகின்றது.

3 : 3 உயர் சமூக ஏற்புடைமையுடன் அரங்கேற்றிய நாடகங்கள் எம்முறையிலே நடித்துக் காட்டப்பெற்றன?

யாழ்ப்பாணத்து நாடக அரங்க வரலாற்றை அறிவதற்கு எம்மிடையேயுள்ள ஒரேயொரு பயனுள்ள ஏடு, கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் எழுதியுள்ள ''ஈழத்தில் நாடகமும் நானும்'' என்ற சுயசரிதை நூலே.[17]

கலையரசு அவர்கள் ''எனக்கு ஏழு வயதாக விருந்த காலத்திலேதான், அதாவது 1896ஆம் ஆண்டிலேதான் முதன் முதலாக மேடையிலே திரைகளுடன் யாழ்ப்பாணத்தில் (மணியகாரன் தில்லை நாதரின் வளவில்) நாடகங்கள் நடைபெற ஆரம்பித்தன'' என்கின்றார்.[18] மேலும் இவர் எழுதியிருப்பனவற்றை நோக்கும் பொழுது, 1896உக்கு முன்னர் நாட்டுக் கூத்து ஆட்டமுறைமையே முக்கிய இடம் பெற்றிருந்தது என்பது தெரியவரும். கலையரசு அவர்கள் விலாசம், நாடகம் என அவற்றின் வகைகளைத் தெரிவிக்கின்றார்.[19]

அவற்றின் ஆட்ட முறைமைபற்றி விவரிக்கும்பொழுது அவர் கூறுவதாவது: ''விலாசத்தில் மேடையமைப்பு வட்டமாகவும் தரையைவிட ஒரு முழம் உயந்ததாகவும் இருக்கும். நான்கு புறங்களிலும் ஜனங்களிருந்து பார்க்கலாம்.....
..... ஆனால் நாடகத்தில் எல்லாம் மாறுகவே இருக்கும். மேடை சதுரங்கமாகவே அமைக்கப்பட்டிருக்கும். நான்கு மூலைகளிலும் தூண்களை நாட்டி, முன் மூன்று பக்கங்களிலும் கயிறுகளைக் கட்டி விடுவார்கள். அண்ணாவி, பின்பாட்டுக்காரர், பக்கமேளக்காரர் பின்புறமாகவே வீற்றிருப்பார்கள். ஆட்டங்களெல்லாம் பரதநாட்டிய முறையையே யொட்டியிருக்கும்.''[20]

1896இலேதான் திரைச்சீலையைப் பயன்படுத்தும் அரங்கமுறைமை யாழ்ப்பாணத்துக்கு வந்ததெனின், அதற்கு ஒன்பது வருடங்களுக்கு முன்னர், 1887இல் முற்ற வெளியில் நடந்த நாடகத்தில் நாடக முறைமைக்குச் சொல்லப்பட்ட அரங்க வமைப்பே ஏற்புடைத்தாகவிருந்திருக்கும்.[21]

1896க்கு முன்னரே கொழும்பில், பார்சிமரபு நாடகக் கம்பெனிகள் நாடகங்கள் நடாத்திவந்தன என்பதும் தெரியவருகின்றது.[22] மேலும் அதற்கு முன்னரே ''இந்தியாவிலிருந்து வருடாவருடம் தஞ்சாவூர்ப்பக்கத்து நாடகக்கோஷ்டிகள் யாழ்ப்பாணம் வந்து கிராமங்களில் நாடகங்களை''[23] நடாத்திவந்தனர். அந்த நாடகக்

---

17. சொர்ணலிங்கம் க, கலையரசு. 'ஈழத்தில் நாடகமும் நானும்'. யாழ்ப்பாணம்—1968.
18. ஷை — பக். 8.
19. ஷை — பக். 4.
20. ஷை — பக். 4.
21. அரிச்சந்திரவிலாசம், விலாச முறைமையில் ஆடப்பெற்றிராதோவெனின், அம்முறைமை அத்தகைய சனத்திரளிடையே வசதியற்றது என்க. விலாசம் என்ற சொல் நாடகநூல் என்ற பொருளிற் பயன்படுத்தப்படுவது தமிழ் லெக்சிக்கனிலிருந்து தெரியவருகின்றது. எனவே அரிச்சந்திரவிலாசம் என்பது நாடக இலக்கியத்தைக் குறித்த பெயராகவே கொள்ளல் வேண்டும்.
(உ—ம் : டம்பாச்சாரி விலாசம்)
22. ஷை — பக். 9.
23. ஷை — பக். 2.

கோஷ்டிகளின் ஆட்டமரபைப்பற்றிக் கலையரசு அவர்கள் குறிப்பாக எதையும் கூறவில்லையெனினும், அவையும் பொதுவாகப் பார்சிநாடகமரபையே பின்பற்றின வெனலாம்.[24]

1905இல் சகலகுணசம்பன்னன் முதன் முதலில் மேடையிடப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணம் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களையும் கண்டுகளித்துள்ளது. சங்கரதாஸ் சுவாமிகள் 1900இல் யாழ்ப் பாணத்துக்கு வந்தார்.[25]

எனவே சகலகுணசம்பன்னனில் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகமரபின் தாக்கத்தையும் காண்பதற்கு இடமுண்டு.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் தகப்பனார் எஸ். கே. லோற்றன் அவர்களுடன் (1851-1919) துரையப்பாபிள்ளை அவர்களுக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. மகாஜனக் கல்லூரியின் முதல் முகாமையாளராகவிருந்தவர் எஸ். கே. லோற்றன் அவர்களே.[26] எஸ். கே. லோற்றன் அவர்கள் யாழ்ப்பாணத்துக் கல்வி, கலை மறுமலர்ச்சியில் மிக முக்கியமான இடத்தினை வகிப்பவர்.[27] லோற்றன் அவர்களுக்கு நாடகத்திற் பெருநாட்டம் இருந்ததென்பது அவரது மகனது வாழ்க்கை வரலாற்றிலிருந்து தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு வந்த இந்தியப் பார்சிமரபு நாடகங்களைப் பாவலர் அவர்களும் பார்த்துள்ளாரென்பதற்கும் சான்று உண்டு. 'கீதரசமஞ்சரி' எனும் தமது பாடற் றொகுதிக்கு எழுதிய ஆங்கில முன்னுரையில் அந்நாடகக் கம்பெனிக்காரர் பாடிய பார்சி, இந்துஸ்தானி மெட்டுப் பாடல்களைக் கண்டித்துள்ளார்.[28] இந்துஸ்தானி மெட்டுக்களை விடுத்துத் தமிழிசைமரபு மெட்டுக்களையே மக்கள் போற்றவேண்டுமென அக்குறிப்பிற் கூறியுள்ளார்.

துரையப்பாபிள்ளை அவர்களுக்கிருந்த தொடர்புகளையும், அவரது கூற்றுக்களையும் கொண்டு பார்க்கும்பொழுது, அவர் நாடகத்தின் வெகுசனக் கவர்ச்சியை அறிந்தே அதனைப் பயன்படுத்த முனைந்தார் என்று கொள்வதிற் பிழையெதுவும் இருத்தல் முடியாது.

4 : 1. பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் தமது நாடகத்தைத் தாம் வாழ்ந்த காலத்தே அச்சிடவில்லை. 1905இல் முதன்முதலில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. மேடையேற்றப்பட்ட வருடம் பற்றிய தகவல் மாத்திரமேயுள்ளது. இது எப்பொழுது எழுதப்பட்டதென்பது தெரியவில்லை.

நாடகம் இலக்கியமாகப் பிரசுரிக்கப்படுவதற்கல்லாது, நடிக்கப்படுவதற்கென்றே எழுதப்பட்டதென்பதற்கு அகச்சான்றுகள் உள்ளன. செய்கை 2 இடம் 2இல் பின்வரும் குறிப்பொன்று காணப்படுகின்றது:

> ''பிதா பின்பு மனமிரங்கி மகனை இரண்டாம் முறை வர்த்தகஞ் செய்ய அனுப்ப அவன் இரண்டாம் முறை ஒரு நகரையடைந்து அங்கு அத்தேச அரசனால் பிறதேசத்தினின்று..... கைதிகளாக்கப்பட்டுக் கொண்டுவரப்பெற்(ற)..... மறியற்காரரை மீண்டபின் வீடு செல்ல தகப்பன் முன்னிலும் பன்மடங்கு கோபாவேசனாய் அவனை வீட்டினின்று துரத்தியதைப் பற்றிய சம்பாஷனை யொன்று சுருக்கமாய் இதில் சேர்க்க வேண்டியது''.[29] இப் பகுதியைக் கதை விளக்கம்

---

24. சம்பந்தமுதலியார் ப. நாடகத்தமிழ். சென்னை—1933, பக். 63.
25. ஈழத்தில் நாடகமும் நானும் — பக். 9.
26. A Short History the College, Mahajana College Golden Jubilee Supplement, 1960 - p.4
27. Notes on Jaffna — p. 324.
28. சிந்தனைச்சோலை—பக். 298.
29. மே — பக். 215

எனக் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய கதை விளக்கங்கள் பல இந் நாடகத்தில் வருகின்றன.[30]

4 : 2. சகலகுணசம்பன்னன் நாடகக் கதைச் சுருக்கம் பின்வருமாறு :

பாக்கியபுரமெனு மூரிலுள்ள பெரு வியாபாரியான வணிககுலசூரியர் என் பார் மகன் சகலகுணசம்பன்னன், கல்வி பயின்ற பின்னர், ஆசிரியரின் சிபாரிசின் பேரில், பெருநிதியத்துடன் கப்பலொன் றில் வர்த்தகம் செய்ய அனுப்பப்படுகின் ருன். துருக்கர்கள் சிலர் கைப்பற்றிக் கொண்டுவந்த விஜயபுரி மன்னன் விஜய சிங்க ராஜனின் மகள் ஆனந்த மனோகரி யையும் அவள் தோழி இரத்தினம்பாளை யும் மீட்பதற்குச் சம்பன்னன் துருக்கிய ருக்குத் தன் கப்பலையே கொடுத்து விடு கிருன். வீடு திரும்பிய மகனைத் தந்தை வைகின்ருர். ஆசிரியரின் சிபார்சின் பேரில் மூன்ரும் முறையும் சம்பன்னன் அனுப்பப் படுகின்ருன். இம்முறை அவன் தனது மனைவியாகிவிட்ட மனோகரியின் தகப்ப னது இராச்சியத்துக்குச் சென்று அங்கு தான் யாரெனக்கூறிப் பின்னர் துர்மந்திரி யொருவனின் சதிச்சொல்களினின்றும் தப்பி இராச்சியத்தையும், சௌபாக்கியங் களையும் பெறுகின்ருன். நற்குணவாழ்வு நலத்தைத் தருமென்பது யாவராலும் உணரப்படுகின்றது.

4 : 3 இந்நாடகத்தைத் துரையப்பா பிள்ளையவர்கள் எழுதியபொழுது தெல்லிப் பழை அமெரிக்கமிஷன் ஆங்கிலப் பாட சாலையின் தலைமையாசிரியராகவிருந்தார். மதம்பற்றிய மனமாற்றம் ஏற்படத் தொடங்கிவிட்டதெனினும், பூரணமான மதமாற்றம் ஏற்படவில்லை. அப்பெருமாற் றம் மகாஜனக் கல்லூரி நிறுவப்படுவதுட னேயே (1910) ஏற்படுகின்றது.

இந்நாடகத்தின் கதையமைப்பு, மொழிநடை முதலியனவற்றை நன்கு விளங்கிக் கொள்வதற்கு இம்மதநிலை முக் கியமாகின்றது.

5 : 1. இந்நாடகத்தின் அமைப்புநெறி யினைப் பார்ப்போம்.

நடிப்பதற்கென்றே எழுதப்பட்டதால் இதன் அமைப்புநெறி இக்கால நாடக நிலைமையை அறிவதற்குப் பெரிதும் உதவும்.

ஆசிரியர் ஆங்கில இலக்கியப் பயிற்சி யும், தேர்ச்சியும் பெற்றவர். 'கேம்பிரிஜ் சீனியர்' த் தேர்வினிற் பத்தொன்பதாவது வயசிலேயே சித்தியடைந்தவர். ஆங்கிலத் தில் எழுதியுள்ள முன்குறிப்பிட்ட கட்டுரை யொன்றில் ஷேக்ஸ்பியரது ஆக்கங்களைப் பற்றிய பரிச்சயம் தனக்கு உண்டு என்பதை நன்கு புலப்படுத்துகின்ருர்.[31]

ஆங்கில நாடக இலக்கியமரபில், நாடகங்களைக் காட்சி நிகழ்வுகளுக்கியைய Act, Scene என வகுக்கும் மரபு ஒன்றுண்டு. மேற்குறிப்பிட்ட ஆங்கிலப் பதங்களை அங்கம், களம் என மொழிபெயர்ப்பது மரபு.[32] ஆனல் துரையப்பாபிள்ளையோ Act என்பதைச் ''செய்கை'' என்றும், Scene என்பதை ''இடம்'' என்றும் மொழி பெயர்த்துள்ளார். நாடக அமைப்பில் அங்கம் எனப்படும் Act நாடகக்கதை வளர்ச்சியில் முக்கியகூறுக அமைதல் வேண்டும். இவ்வங்கப்பிரிவுபற்றி ஆங்கில நாடக மரபிலேயும் ஏகோபித்த கருத்து எதுவுமில்லை. அங்கம் என வகுப்பது நாட காசிரியன் நிலையிலேயே நடைபெறும் ஒரு வகைப் பாடாகும். ஷேக்ஸ்பியர் தாம் எழுதிய நாடகங்களை இவ்வாறு வகுத் தாரா என்பதுபற்றி ஐயமுண்டு.

---

30. சிந்தனைச்சோலை — பக். 195, 254.

31. குறிப்பு 8ஐப் பார்க்கவும்.

32. சூரியநாராயணசாஸ்திரியார் வி. கோ. நாடகவியல் (3ம் பதிப்பு) சென்னை 1936 — பக். 188–90. சோமசுந்தரப்புலவர் க. உயிரிளங்குமரன் நாடகம், யாழ்ப்பாணம், 1936. பேராசிரியர் கணபதிப்பிள்ளை உறுப்பு (Act), களம் (Scene) என்று வகுப்பர்—நாடகம், கொழும்பு 1941.

சகலகுணசம்பன்னனில் முதலாவது ''செய்கை''யில் நான்கு காட்சிகளும் (இடம்) இரண்டாவதில் ஆறு காட்சிகளும் மூன்றுவதில் ஆறும் இடம் பெறுகின்றன: இப்பிரிவு இலக்கிய நெறிப்பட்ட பிரிவே என்பது நாடகத்தினுள் வரும் சில குறிப்புக்களால் தெரியவருகின்றது. கதைவிளக்கம் என்னும் பகுதிபற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் செய்கையில் ஒரு கதைவிளக்கமும், இரண்டாம் செய்கையில் இரண்டு கதைவிளக்கங்களும் இடம் பெற்றுள்ளன. காட்சி அமைப்பு நன்கு எழுதப்பட்டிருப்பின் இப் பிரச்சினை ஏற்பட்டிருக்கவிடமில்லை. நாடகத்தில் இரு இடங்களில் உள்ளவற்றைவிட மேலும் சில சம்பாஷணைகள் சேர்க்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[33] இவையாவும் இந் நாடகம் உண்மையில் மேடைக்கான முன்பிரதி யென்பதையே நிறுவுகின்றன. பாத்திரங்கள் சில தனிமொழி (Soliloquy) பேசுவதை ஒரு காட்சியாகக் கொண்டிருப்பது (செய்கை 3 இடம் 2) ஆங்கில நாடகச் சாயலைக் காட்டுகின்றது.

நாடக அமைப்பில் மேற்குறிப்பிட்ட சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டமைக்கான இன்னொரு காரணம், நாடகத்தில் மரபுவழி உத்திகளையும் இணைக்க முயன்றமையேயாகும். மரபுவழி நாடகங்களின் இசை, நாடக அமைப்புப்பற்றிய ஒன்றுகும். நாட்டுக் கூத்தில் அதுவே நாடக உறுப்பைக் காட்டிநிற்கும் (வரவுப்பாட்டு). ஆனால் பார்சியர் வழிவந்திணைந்த 'ஸ்பெஷல்' நாடக மரபில் பாடலைப் பாடிப் பின்னர் அதன் கருத்தை வசனத்தில் விளக்கமாகக்கூறுகின்ற மரபுண்டு.[34] அந்த முறையினைத் துரையப்பாபிள்ளையவர்களும் பின்பற்றியுள்ளார். நாடகம் முழுவதிலும் இப்பண்பு காணப்படுகின்றதெனலாம். பம்மல் சம்பந்தமுதலியாரது நாடகங்களிலும் இம்மரபு போற்றப்படுவதைக் காணலாம்.[35] ஆங்கிலநாடகச் செல்வாக்குக் குட்பட்டவர்கள் கூட மரபுவழி நாடக மரபினை எந்த அளவுக்குப் பேணவேண்டியிருந்ததென்பதை இவ்வுண்மை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

கர்நாடக இசை இயைத்து வருவதும் பார்சிவழி வந்ததுமான நாடகமரபில் தமிழ் யாப்பு வகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. விருத்தம், கட்டளைக் கலித்துறை முதலியன உதாரணங்களாம். சங்கரதாஸ் சுவாமிகள் பிரபலப்படுத்திய இந்த நாடகமரபில், முன்னர் நடந்த கதையை மீட்டும் (நாடகத்தின்) கூறும் பொழுது அகவலைப் பயன்படுத்தல் மரபு. இதற்கான தலைசிறந்த உதாரணம் ஸம்பூரண அரிச்சந்திராவில், மயானகாண்டத்தில் வரும் அரிச்சந்திரன் அகவல், சந்திரமதி அகவல் ஆதியனவாகும்.[36] சகலகுணசம்பன்னனிலும் பாத்திரங்கள் முன்னர் நடந்தனவற்றைத் தொகுத்துக் கூறும் பொழுது அகவல் பயன்படுத்தப்பட்டுள்ளது.[37]

5 : 2 சகலகுணசம்பன்னன் முதன் முதலில் மேடை யேற்றப்பட்டபொழுது எம்முறையில் மேடை யேற்றப்பட்டது என்பது பற்றிய குறிப்புக்கள் கிடைக்கவில்லை. மேடையமைப்பில் சதுர உயர்ந்த மேடையே (இப்பொழுதுள்ளது) பயன்படுத்தப்பட்டிருக்கலாம். திரைகள் பயன்படுத்தியிருத்தல் வேண்டும். ''செய்கை'' 2 இடம் 5இல் வரும் நிகழ்ச்சிகள் ''ரூட் சீன்''ப் பயன்படுத்தியே காட்டப்பட்டிருத்தல் வேண்டும். அக் காட்சியில் முதலில் மந்திரியின் தனிமொழியும் பின்னர் அரண்மனையில் நடப்பனவும் வருகின்றது. செய்கை 1, இடம் 2இல் வரும் துறைமுகக் காட்சி, செய்கை 2, இடம் 1இல் வரும்

33. இந்தனைச்சோலை — பக். 215, 245.

34. சங்கரதாஸ் சுவாமி டி. டி. சாரங்கதரன் (மதுரை, 1929), ஸதி அநசூயா (மதுரை, 1926), குற்றுலம்பிள்ளை K. ஸம்பூரண அரிச்சந்திரா (சென்னை, 1948).

35. சம்பந்த முதலியார் ப. அமலாதித்யன் (சென்னை, 1908).

36. குற்றுலம்பிள்ளை K. ஸம்பூர்ண அரிச்சந்திரா — பக். 38, 39, 45.

37. இந்தனைச்சோலை — பக். 237, 268.

கடற்காட்சி முதலியனவற்றுக்கும் பூங்காவனத்துக்கும் (1 : 3) திரைச்சீலைகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

வேடப்புனைவு, உடைகள் ஆகியனவற்றில் சம்பந்தமுதலியார் மரபுக்கும் (ஆங்கிலநெறியை அறிந்த மரபு) சங்கரதாஸ் சுவாமிகள் மரபுக்கும் (அந்தப் பிரக்ஞை இல்லாத மரபு) வேறுபாடு இருக்கவில்லை யென்பதை அக் காலத்தில் எடுக்கப்பட்ட நாடகத்துப் புகைப்படங்கள் காட்டுகின்றன.[38]

5 : 3. இலங்கைத் தமிழ் நாடக மொழி நடைவளர்ச்சிபற்றி ஆராய்வதற்குச் சகலகுணசம்பன்னன் பெரிதும் உதவுகின்றது. ஈழத்துக்கெனத் தனிப்பட்ட ஒரு தமிழ்நாடக மரபு ஏற்படவேண்டுமெனில், அது முதன்முதலில் நாடகக் கதையிலும், மொழி நடையிலுமே தொடங்கல் வேண்டும். மரபுவழிவரும் நாடகங்களில் கண்டிராசன், பூதத்தம்பிவிலாசம் ஆதியன சுதேசக் கதைப் பொருளைக் கொண்டவை. கலையரசு சொர்ணலிங்கம் பரப்பிய நாடக மரபில் இத் தேசியமரபு போற்றப்படவில்லை. ஈழத் தமிழ் நவீன நாடக மரபில் ஈழத்துப் பிரச்சினைகளை வைத்து, சமூக நாடங்கள் எழுதி, தேசிய நாடக மரபுக்கு வழிவகுத்த பெருமை பேராசிரியர் கணபதிப்பிள்ளையைச் சாரும்.[39] அவரே முதன்முதலில் முழு நாடகத்தையும் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் எழுதினர்.[40] யாழ்ப்பாணத்துப் பேச்சுமொழி நாடகங்களிற் பயன்படுத்தப்பட்டதன் வரலாற்றை அறிவதற்குச் சகலகுணசம்பன்னன் உதவுகின்றது.

இந்நாடகம் 'இலக்கிய'த் தமிழிலேயே பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளதெனினும், இடையிடையே யாழ்ப்பாணத்துப் பேச்சுமொழி இடம்பெறுவதைக் காணலாம். அவற்றுட் சில வருமாறு :

பக்கம்	செய்கை	இடம்		
178	I	I	(i)	நொத்தாரிஸ் சத்தியசன்மா
			(ii)	அப்படிச் சொல்லாதேயும்
179	I	I	(iii)	நேரம்போகுது
184	I	III	(i)	பத்திரம் ராணி
198	II	I	(i)	தன் தொழில் விட்டவன் சாதியிற் கெட்டவன்
211	II	II	(i)	ஆயிரக்கணக்கான பறைச்சிகளையும் ஒரு பொள்ளற் கப்பலையும் கொண்டுவந்தாலே
214	II	II	(i)	இளவரசியல்ல நளவரசியாக்கும்
223	II	III	(i)	பகையரசர் நம்மைச் சருவும் பொருட்டு
235	II	VI	(i)	பாடல் ஆச்சரியம் என்றன் புத்திரி சித்திரம் அச்சொட்டாயிங்ஙனமமைந்ததென் னூதனம்
26	III			இதென்ன பார இழவாய்க் கிடக்கு

யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்கு மொழி குறிப்பிட்ட சில பாத்திரங்களால்மாத்திரமல்லாது எல்லாப் பாத்திரங்களாலும் பேசப்படுவது ஒரு முக்கிய அமிசமாகும். சகலகுணசம்பன்னன் மொழிநடையைப் பார்க்கும்பொழுது, பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய சங்கிலிநாடகத்து நினைவு எழுவது இயல்பே. அந்த நாடகத்

38. குறிப்பு 36இல் வரும் நூலின் அட்டையிலுள்ள படம் கலையரசு சொர்ணலிங்கத்தின் நூலில் பக். 72 அடுத்துள்ள படம்.

39. சிவத்தம்பி கா. வெறுங்கோயில், புதுயுகம், மேகின மலர் (கொழும்பு, 72) பக். 44—48.

40. கணபதிப்பிள்ளை க. நாடகம் முன்னுரை (கொழும்பு, 1941).

திலும் யாழ்ப்பாணத்துப் பேச்சு மொழிப் பதங்கள் இயற்றமிழ் நடையிலே பயின்று வருவதைக் காணலாம்.

காலத்தால் வேறுபட்ட இரு நாடகாசிரியர்கள் நாடக அமைப்பில் ஒரேவிடங்களில் ஒத்து நிற்பதற்கான காரணம் யாது? இருவரும் எழுதப் புகுந்த கதைப் பொருளும், நாடகத்தின் பொதுசனத் தாக்கம் பற்றிய அவர்களது கருத்துமேயாகும்.

சகலகுணசம்பன்னன் ''இராஜா இராணி''க் கதையாகவிருப்பினும் சமூக முக்கியத்துவமுள்ள கதை; ஆசிரியரின் சமூகக் கருத்துக்களை எடுத்து விளக்கும் நாடகம். (இதனைச் சிறிது பின்னர் பார்ப்போம்) பாவலர் தமது நாடகம் சமூகத்திலே தாக்கத்தினை ஏற்படுத்தவேண்டுமென்ற கருத்துடையவரென்பது முன்னரே புலனாகிவிட்டது. இதனாலேயே அவர் மக்களின் மொழிநடையில் வரும் சில சொற்களைக் கையாண்டார்; ஆனால் இம் மொழிநடை பூரணமான ஒன்றாக மிளிரவில்லை. அதற்கு அவரது சமூக நோக்கும் ஒரு காரணமாகும். மக்களின் முன்னேற்றம் எனப் பாவலர் கருதியது ஒரு குறிப்பிட்ட சமூகநிலைக்குக் கீழே செல்லவில்லையென்பது, யாழ்ப்பாண சுவதேசக் கும்மி (244, 253), எங்கள் தேசநிலை (3, 4, 7) போன்ற பாடல்கள்மூலம் தெரிகிறது. இது காலத்துக்கியைய நடந்துகொண்டதன் இயல்பே. ஆனால், பேராசிரியரோ ''யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்துக் குடும்பப் பிரச்சினைகள் சமூகப் பிரச்சினைகள் யாவற்றையும்.....பிரதேச மொழி நடையிலே எழுதினர்.''[41] தனது வளர்ச்சியநுபவ அடிப்படையில் முழுத் தமிழ்ச் சமூகத்தையுமே சித்திரித்துக் காட்டினர். மேலும் பேராசிரியரின் மொழிக் கல்வியறிவும் சமூக உணர்வும் அவரைப் பாமரத் தமிழினதும் பாமரத் தமிழனதும் நண்பனாக்கின; எனவேதான் அவரது நாடகங்களிற் பேச்சுத்தமிழ் பூரணமாக இடம் பெற்றது.

ஆயினும் சமூக உணர்வுடன் நாடகம் எழுதுவோர் மக்களின் மொழிநடையையே கையாளவேண்டிவரு மென்னும் உண்மை இதனாற் புலப்படுகின்றது. அத்துடன் பேராசிரியர் கணபதிப்பிள்ளையினால் தொடக்கப்பெற்ற ஒரு நாடக நெறியின் மூலத்தை நாம் இதனால் அறிந்துகொள்கின்றோம்.

5 : 4. சகலகுணசம்பன்னனில் வரும் பாடல்கள், பாவலரின் இசைக் கோட்பாட்டினை விளக்குவனவாக வுள்ளன. கட்டளைக் கலித்துறை, விருத்தம், அகவல் என்பவற்றைவிடப் பதங்களிலும் இசைப் பாடல்களை எழுதியுள்ளார். சம்பந்த முதலியார் மரபு நாடகங்களிலும், சங்கரதாஸ் சுவாமிகளின் மரபு நாடகங்களிலும் வரும் பாடல்களைப் போலவே இவையுமுள்ளன. பார்சி நாடக நெறியை நேரடிப் பிரதி செய்தாரைப் போன்றல்லாது, சங்கரதாஸ் சுவாமிகள் தமது நாடகங்களில் கர்நாடக இசையினை நன்கு பயன்படுத்தினர். அவர் ஒரு சிறந்த புலவர். சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பிரதிகளில் பாடலின் இராக தாளம் கூறப்பட்டிருக்கும். தமது கீதரசமஞ்சரிக்கு இராக தாளம் குறிப்பிட்ட பாவலர் நாடகப் பாடல்களுக்கு அவ்வாறு குறிப்பிடாது விட்டது ஆச்சரியத்தைத் தருகின்றது.

இசைப் பாடல்கள் பற்றிய சில சொற்கள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. இசைப் பாடல்கள் ஒவ்வொன்றையும் **பதம்** என்றே கூறுகின்றார். பதம் என்பது அபிநயிக்கப்படும் பாடல் என்ற கருத்தில் நிற்கும்.[42] இசைப் பாடல்களைப் பல்லவி, அநுபல்லவி, சரணம் எனப் பிரித்தல் மரபு. பாவலரோ பல்லவியைப் **பல்லவம்** என்றும், அநுபல்லவியை **அநுபல்லவம்** என்றும் எழுதுகின்றார். பல்லவியைப் பல்லவம் என வழங்கும் பிரயோகம் வின்ஸ்லோ அகராதியிற் காணப்படுவதாகத் தமிழ் லெக்சிக்கன் குறிப்பிடுகின்றது. தமிழ்க் கிறித்தவர்

41. 39இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுரை.

42. இன்றைய பரதநாட்டிய மரபில் இக் கருத்துச் சிறிது வேறுபட்டுள்ளது.

களின் மரபில் பல்லவம் என்பதே வழக்குப் போலும்.

தமது பிற பாடல்களிற் கும்மி போன்ற கிராமியக் கவிதை வடிவங்களைக் கையாண்ட பாவலர், தமது நாடகத்தில் கப்பற் பாட்டுகளைப் பயன்படுத்தியுள்ளார்.

5 : 5. இந்த நாடகம் எந்த அளவுக்கு நாடகாசிரியரின் கருத்தினைப் பிரதிபலிக்கின்றது என்பதை அறிதல்வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கான சமூக சீர்திருத்த வழிமுறையில் வர்த்தகத்துக்குப் பிள்ளையவர்கள் மிக முக்கியமான இடம் கொடுத்திருந்தாரென்பது யாழ்ப்பாணச் சுவதேசக் கும்மியிலும், எங்கள் தேசநிலைக் கண்ணிகளிலும் தெரியக் கிடக்கின்றது; நாடகத்தில் சகலகுணசம்பன்னன் வர்த்தகஞ் செய்து பொருளீட்ட முற்படுவதைக் காணலாம்.

கல்வித்துறையிற் பெரும்பணியாற்றிய பாவலர் அவர்கள், தமது நாடகத்தின் முக்கிய பாத்திரங்களுள் ஒருவராக ஆசிரியர் ஒருவரைச் சித்திரித்துள்ளார். சம்பன்னனை மூன்றுமுறையும் வணிகஞ் செய்ய அனுப்புமாறு தகப்பன் தீர்மானிப்பதற்குக் காரணகர்த்தர் ஆசிரியரே.

பாவலர் தாம் நிஜவாழ்க்கையிற் போதித்த சன்மார்க்க நெறியினை நாடகத்தில் ஆசிரியர்மூலம் போதிக்கின்றார். (செய்கை 1, இடம் 1.) எனவே, ஆசிரியர் என்ற பாத்திரத்தினை இலட்சியங்கள் மிக்க உயர்குண சீலராகச் சித்திரிப்பதில் வியப்பில்லை.

பாவலர் கிறித்தவத்திலிருந்த காலத்து எழுதப்பட்ட நாடகம் என்பதை எடுத்துக் கூறுவனபோலமைந்துள்ளன சில சொற்பிரயோகங்கள் :

''ஜெகதீசன் அனுப்பிய பரமதூதன்'' (பக். 204).

'' ஏழையினை இரட்சிப்பதற்காய் '' (பக். 214).

''ஏழைக் கிரங்குபவன் ஈசனுக்குக் கடன் கொடுக்கிறான் என வேதம் புகல்கின்றதே;'' (பக். 221)

என்பவற்றை உதாரணமாகக்காட்டலாம்.

6. நாடகம் கத்தோலிக்க மரபில் வகித்த இடத்தினைப் போன்ற ஒரு முக்கியமான இடம், அதற்குப் புரட்டஸ்தாந்த மரபில் இருக்கவில்லை. இங்கிலாந்திலும் புரட்டஸ்தாந்த மரபில் நாடகம் முக்கிய கலா சக்தியாக முகிழ்க்கவில்லை. தியூடர் காலத்து நாடக வளர்ச்சிக்கு வணிக சமுதாயத்தின் எழுச்சியே முக்கிய சமூக நிலைக் காரணமென்பது இப்பொழுது நிறுவப்பட்டுள்ளது; ஆயினும், இங்கிலாந்தில் வழக்கிலிருந்த ''நன்னெறி'' நாடகங்களை (Morality Plays)ப் புரட்டஸ்தாந்தத்தினர் ஒரோ வேளைகளிற் பயன்படுத்தினர் என்பதற்குச் சான்றுகள் உள. அந்நாடக மரபில் மனிதக் குணங்களைப் பாத்திரங்களாக உருவகிக்கும் ஒரு மரபு உண்டு. சகலகுணசம்பன்னனிலும் அத்தகைய ஒரு சாயலைக் காணலாம். ஆனால் இப் பாத்திரச் சித்திரிப்பு சனமரபு நாடகங்களின் ஒரு முக்கிய பண்பாகும்.

சகலகுணசம்பன்னனை எழுதிய காலத்திலே பிள்ளையவர்களுக்குக் கிறித்தவத் தொடர்பிருந்தது. அந்த அளவுக்கு இந்நாடகம் அவர் கூர்ந்து நின்ற மதக்கோட்பாட்டினையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

இ. முருகையன், B. A., B. SC.
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
கொழும்பு

பாவலர் கையாண்ட பா வடிவங்கள்

"பாவலர் திரு: தெ. அ: துரையப்பா பிள்ளை அவர்கள் போலவே யாழ்ப்பாண நாட்டில் வாழ்ந்து தமிழ்ப்பணி புரிந்த பண்டிதர்கள், பாவலர்கள், நாவலர்கள் பலர் உளர்; அவர்தம் பாடல்களையும், உரைகளையும் தேடி,அவர்மாட்டுத் தொடர் புடைய அறிஞர்கள் அச்சிட்டு வெளியிடல் வேண்டும் என்பது எமது வேணவா."

மேற்கண்டவாறு மகாஜனக்கல்லூரிப் பொன்விழாச் சபையின் தலைவராகிய திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள் எழுதியுள் ளார். பாவலரின் 'சிந்தனைச் சோலைக்கு' எழுதப்பட்டுள்ள வெளியீட்டுரையில் இது காணப்படுகிறது. யாழ்ப்பாண நாட்டில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றிய ஏனைய பாவலர்களைவிட, திரு. தெ. அ. துரை யப்பாபிள்ளை அவர்கள் நல்ல அதிட்டசாலி என்றே கூறுதல் வேண்டும். ஏனெனில், 'அவர்மாட்டுத் தொடர்புடைய அறிஞர் கள்' செயலாக்கமும், ஆர்வமும் நிறையப் பெற்றவர்களாக உள்ளனர்; பாவலரின் படைப்புகளிற் பெரும்பாலானவற்றை — பிரதானமானவற்றை—ஒருங்குதிரட்டி ஒரு புத்தகமாக வெளியிட்டனர். அவ்வளவில் அமையாது, பாவலரின் நூற்றாண்டுவிழா வினைக் கொண்டாடுவதற்கும், நினைவுமலர் வெளியிடுவதற்கும், சிலை நாட்டுவதற்கும் கூட முன்வந்துள்ளனர். இத்தகைய பெரு மைக்கும், மதிப்புக்கும் உரியவரான நம் பாவலர், தமது எழுத்துப்பணிக்கு மிகவும் வாய்ப்பானவை என்று கருதித் தெரிந் தெடுத்துக்கொண்ட பா வடிவங்கள் எவை எவை என்பது குறித்துச் சில செய்திகளைத் தருவதற்கு இங்கு முயல்வோம்.

எந்தக் கலைப்படைப்பை எடுத்துக் கொண்டாலும், அதன் உருவத்துக்கும், உள்ளடக்கத்துக்கும், அப்படைப்பின் நோக்கத்துக்கும் இன்றியமையாத சில தொடர்புகள் நுனித்து நோக்குவார்க்குப் புலப்படாமற் போகா. துரையப்பாபிள்ளை அவர்களின் பாட்டுகளிலும் நாம் இத் தொடர்புகளிற் சிலவற்றைக் கண்டு தெளியலாம்;

முதலில் 'இதோபதேச கீதரச மஞ்சரி' என்ற தொகுப்பினை எடுத்துக் கொள் வோம். இதுவே பாவலரது படைப்புகளுட் காலத்தால் முற்பட்டது. இது நம் பாவலர் 'தேவர்' என்ற பெயருடன் கிறித்தவராக இருந்த காலத்தில் இயற்றப்பட்டது. சமயச்சார்பு இல்லாத இந்தப் பாட்டுகள் நல்லொழுக்க போதனையை அடிநோக்க மாக உடையன. ஒழுக்க போதகராகிய பாவலர், உண்மை, தாய்செய்நன்றி, நீதியின் தைரியம், பொறுமை, வழக்காட லினால் வரும் தீமைகள், முகஸ்துதியின் மோசம், அங்கிலோ கல்வி அவசியம், நகை போடுதலினால் வரும் நஷ்டங்கள், தேகாப்பியாசம் — என்று இப்படியாக வரும் பல தலைப்புகளில் எழுதியிருக்கிறார். நல்லறங்களையிட்டு மக்கள் சிந்தித்தல் வேண்டும் என்பதும், இடையறாத போதனை யினால் மக்கள் மனத்தில் இவற்றை ஆழப் பதித்துவிடலாம் என்பதும் பாவலரின் நம்பிக்கைகள்.

இந்தப் போதனைகளெல்லாம் மக்க ளிடைச் சென்று செறிவதற்கு அவை அவர்களால் அடிக்கடி பயிலப்படல் வேண்டும். ஆகவே கவர்ச்சிகரமான மெட்டுகளிலமைந்த பாட்டுகளாக அவற்றை அமைத்தல் வேண்டும் என்று புத்திபூர்வமாக அவர் முயற்சி செய்துள் ளார்; இந்தப் பாட்டுகளின் மெட்டுகளை யிட்டு, பாவலர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள வற்றைத் தமிழாக்கித் தருகிறோம்.

"நமது மூதாதையர்கள் மிகவும் விரும்பிப் பாடிய பண்டைய மெட்டுகள் மீது யாழ்ப்பாணத்தில் ஒருவகை வெறுப்பு வளர்ந்து வருகிறது; இந்திய

நாடகக் கம்பனிகளின் வருகையுடன் இந்த நாட்டின் இசைச் சூழலே நிறைத்துப் பரந்து பெருகும் பார்சி மெட்டுகளையும் இந்துஸ்தான் மெட்டுகளையுமே மக்கள் விரும்புகிறார்கள். இந்த மெட்டுகள் யாழ்ப்பாணத்தாரின் நல்லொழுக்கத்துக்கு ஊறு விளைப்பன ஆகும்..... இந்த அன்னிய மெட்டுகளின் வசீகர சக்தியையும், ஆற்றலையும் நான் மனமுவந்து பாராட்டுகிறேன்; இவை மனத்தின் மென்மையான உணர்வுகளை நுண்மையாகத் தொடுகின்றன என்பதும் உண்மையே. ஆனால் நம்செவிக்குப் பழக்கமான பழைய மெட்டுகளைக் கைவிட்டு இவற்றை மாத்திரமே நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என யாரும் சொன்னால், அதனை ஒப்புக்கொள்ள மாட்டேன். எளிமையான பரிவும், இயற்கையான எழிலும் படைத்த எங்கள் பழைய மெட்டுகளிற் சில எந்தப் புதிய மெட்டினாலும் வெல்லப்பட இயலாத அளவுக்கு மேம்பட்டு நிற்கின்றன. இது என் உறுதியான கருத்து.''

இவ்வாறு கருதும் பாவலர் பழைய மெட்டுகளிற் சிலவற்றையும், புதிய மெட்டுகளிற் சிலவற்றையும் தாம் தெரிந்தெடுத்துள்ளதாகத் தெரிவிக்கிறார். பழைய இசைப்பற்றாளர்களையும், புதிய மெட்டுகளில் மோகம் கொண்டுள்ளவர்களையும் திருப்திப்படுத்துவதே பாவலரின் உத்தேசம் எனலாம்.

இங்ஙனம் பாவலர் தேர்ந்தெடுத்திருக்கும் மெட்டுகள் எல்லாம் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற உறுப்புகளுடன் கூடிய கீர்த்தனங்களாக உள்ளன. ஆதி, ரூபகம், ஏகம், சதுஸ்ரலகு ஆகிய தாளங்களில் உள்ள இப்பாட்டுகள் பெரும்பாலும் கர்நாடக இராகங்களிற் பாட வேண்டியவை என்பதை அப்பாட்டுகளுடன் வரும் குறிப்புகள் காட்டுகின்றன. மிகச் சில பாடல்கள் இந்துஸ்தான் இசை மரபைச் சேர்ந்த இராகங்களையும் வர்ண மெட்டுகளையும் உடையன என்று கூறப்படுகின்றன. இறுதியில் வரும்,

''மங்களம் சொல்வோம் மனமகிழ் வுடனே
மதுர நல்ரச கான சுதிமுழங்க''

என்ற பாட்டுக்கு 'இராகம், இங்கிலிஷ்' என்று குறிக்கப்பட்டுள்ளது.

இப்படி, பழைய இசைப்பற்றாளர்களையும், புதிய மெட்டுகளில் மோகம் கொண்டவர்களையும் திருப்திப்படுத்த எண்ணித் தம் இசை உருப்படிகளை ஆக்கிய பாவலர், நம்மவர் இசைக்கலையிற் காட்டும் ஈடுபாடு மிகவும் குறைவானது என்று கூறி மனம் நொந்துகொள்கிறார். ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஒவ்வொருவரும் பயிலவேண்டியதொரு நற்கலையாக இசையினைக் கருதாமல், அதனைத் தாசியருக்கும், வேசியருக்கும் உரிய தொழிலென ஒதுக்கும் நிலை மாறல்வேண்டும் என்று நம் பாவலர் 'கீதரச மஞ்சரி'க்கு எழுதிய ஆங்கில முன்னுரையிலே தெரிவிக்கிறார். இங்ஙனமாக, மக்களிடம் தம் போதனை சென்று சேர்வதற்கு இசை ஒரு சிறந்த துணையாக உதவும் என்ற நம்பிக்கையுடன் தொடங்கிய பாவலர், பிற்காலத்தில் இயற்றிய பாட்டுகளில் இசைநுணுக்கத்துக்கு அதிக அழுத்தம்தரும் நடைமுறையைக் கைநெகிழ விட்டுள்ளார். 'கீதரச மஞ்சரி'க்குப் பிறகு வந்த பாடல்களை அணுகி நோக்குவார்க்கு இது தெள்ளிதிற் புலனாகும்.

'எங்கள் தேசநிலை' என்ற பாட்டு 44 செய்யுள்களால் ஆனது. ஒவ்வொரு செய்யுளும் நான்கு அடிகள் கொண்டனவாக உள்ளது.

''சாமிகள் தொகையூரில்
கனத்துப்போச்சு—பக்தி
சத்தியம் சிவதொண்டு
குறைந்துபோச்சு
வாமமிகும் புண்ணியம்
அருகிப்போச்சு—எங்கும்
மறக்குண மொன்றுமே பெருகிப்போச்சு.''

'எங்கள் தேசநிலை'ச் செய்யுளுக்கு வகைமாதிரியானதோர் உதாரணம் மேலே தரப்பட்டுள்ளது. இங்குள்ள நாலு அடிகளும் பின்வரும் திட்டத்தில் அமைந்துள்ளன:

முதலாம் அடி : மூன்று சீர்கள். பெரும் பாலானவை மூவசைச் சீர். ஆங்காங்கே ஈரசைச் சீர்களும் வருகின்றன.

தனிச்சொல் : முதலாம் அடியின் இறுதியில் வருவது.

இரண்டாம் அடி: தனிச்சொல் இல்லாத முதலாம் அடி போல்வது.

மூன்றும் அடி : முதலாம் அடி போல்வது.

தனிச் சொல் : மூன்றும் அடியின் இறுதியில் வருவது.

நான்காம் அடி: இரண்டாம் அடி போல்வது.

இதன் ஒவ்வோர் அடியிலும் வரும் மூன்றாவது சீர் காய்ச்சீர் ஆகும். அதாவது நேர் அசையில் முடிவடையும் மூவசைச் சீர்.

இவை தவிர வேறு தளை வரையறைகள் இங்கு உள்ளவைவாகத் தெரியவில்லை.

பாவலர் பாடிய மற்றொரு பிரபல பாடல் 'சுவதேசக் கும்மி' ஆகும். இது முழுவதுமே வழமையாக உள்ள கும்மி இலக்கணத்துக்கமைய இயற்றப்பட்டுள்ளது. வெண்டளைகள் மாத்திரமே கொண்டவையாக வருவது வரன்முறையான கும்மிகளுக்குரியதோர் இலக்கணம். அந்த இலக்கணத்தினை வழுவாது கடைப்பிடித்துள்ளார் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள்.

ஆயினும், குறிலிணையையோ, குறில் நெடிலையோ ஒரேயொரு நிரையசையாக அலகிடும் மரபு சில இடங்களிற் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இவை சில சமயங்களில் விட்டிசைத்து இரண்டு நேர்அசைகளாகக் கொள்ளப்படுகின்றன. உதாரணமாக,

"பத்து மணிக்கென்ற கூட்டம் சிலவேளை
பன்னிரண் டுமணிக் கேதுவங்கும்."

என்பதில், 'டுமணி' என்ற சீரை, 'நிரை நேர்' என்று கண்டிப்பதே ஏற்புடைத்து. ஆனாலும், கும்மி இசைக்கும் இலக்கணத்துக்கும் இப்பாட்டுப் பொருந்த வேண்டுமாயின், அதனை 'டு–மணி' என விட்டிசைத்து 'நேர்நிரை' என்று கவனிக்க வேண்டியதாக உள்ளது. இதே போல,

"இந்தத்தே சத்திலு சிதக னியெமக்
கீந்திட நல்ல புதுமரங்கள்"

என்று வரும்போது, 'சிதக', 'னியெமக்' என்ற சீர்களிற் குறில்கள் விட்டிசைக்கின்றன. 'சி–தக' சமன் 'நேர்நிரை' என்றும், 'னி–யெமக்' சமன் 'நேர்நிரை' என்றும் அலகிட்டால் மாத்திரமே வெண்டளைப் பொருத்தம் உண்டாகும். வேறொரு வகையிற் சொன்னால், மேற்படி பாட்டினைக் கும்மியாக இசைப்போமானால் பின் வருமாறு திரிபடையும்:

"இந்தத்தே சத்திலு சிதக னியெமக்
கீந்திட நல்ல புதுமரங்கள்."

இப்படியான திரிபு நேரினும், பரவாயில்லை; தாம் சொல்ல வந்த கருத்துகளே முக்கியம்—என்று பாவலர் கருதினர் போலும். அதனால், பழைய இலக்கணத்தினைக் கடுமுனைப்புடன் அவர் கடைப்பிடித்தாரல்லர். பாரதியின் 'பெண்கள் விடுதலைக் கும்மி' யையோ, சோமசுந்தரப் புலவரின் 'ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை' என்ற கும்மியையோ பாவலரது கும்மியுடன் ஒப்பிட்டு இசைத்துப் பார்ப்பவர்களுக்கு வித்தியாசங்கள் துல்லியமாகப் புலனாகும்.

மேலே நாம் குறிப்பிட்டவை தவிர வெண்பாக்களையும், கட்டளைக் கலித்துறைகளையும், விருத்தங்களையும் பாவலர் கையாண்டுள்ளார். இவையெல்லாம் வழமையான இலக்கணப்படி ஓசை நிறைவுள்ளனவாக அமைக்கப்பட்டுள்ளன.

பாவலர் தமது எழுத்துப் பணியின் தொடக்க காலத்தில் இசை உருப்படிகளையே இயற்றினர். அக்காலத்தில் இசைக்கலை தாசியர் குலத்துக்குரிய இழி தொழிலாகக் கருதப்பட்டமை ஒரு புறமாக, கர்நாடக இசையானது நிபுணர்களுக்காக, நிபுணர்களால் இசைக்கப்படும் ஒன்றாகவே அக்காலத்திலும் இருந்தது போலும். மக்களிடையே இசை

ஞானமும், இசை ஆர்வமும் இல்லை என்று நம் பாவலரே குறிப்பிட்டுள்ள செய்திக்கு, மேற்கண்டவாறு நாம் விளக்கம் கூறலாம். அப்படி விளக்கினால், மக்கள் விரும்புவர் என்ற உத்தேசத்துடன் நுணுக்கமான இசையமைதி பொருந்த, கர்நாடக மரபினையே பொரும்பாலும் கடைப்பிடித்தும், ஒரு சில சமயங்களில் அன்னிய மரபுப் படியான புதிய மெட்டுக்களைப் புகுத்தியும் தாம் எழுதிய பாட்டுகள் தாம் எதிர் பார்த்ததற்கு மாறாக, இசையறிந்து அக் கலையிற் பயிற்சி பெற்ற ஒரு சிலர் மட்டுமே நயக்கக் கூடியனவாக இருந்தமையைப் பாவலர் தம் அனுபவத்திற் கண்டிருப்பார். கண்டு, தம் இசை நுணுக்க ஆர்வத்தை நெகிழ்த்தி, இசை ஞானமோ பயிற்சியோ அதிகம் இல்லாரும் படித்து நயக்கத்தக்க இயற்றமிழ்ப் பா வடிவங்களை அவர் கையாளத் தொடங்கினர் என்று கொள்ள இடமுண்டு. இசைப் பா ஆசிரியராக ஆரம்பித்த பாவலர், இயற் பா ஆசிரியராகப் பரிணமித்த கதை இதுவே ஆதலும் கூடும்.

பாவலர் போற்றுதும்

உடுப்பிட்டி
ஸ்ரீ அ. சிவசம்புப் புலவரவர்கள்

உரைகொண்ட சுவையொடு பொருட்சுவை வளஞ்செறிந்
துற்றிடு மிதோபதேச
மொன்றிடுங் கீதரச மஞ்சரி படிப்பவ
ருளங்கொள வுவந்துரைத்தான்
தரைகொண்ட வரசருத் யோகநெறி நிலைநின்ற
தனதனரு ளம்பலவரோ
தயனியற் றியதவத் துற்றபுத் திரனுண்மை
சாந்தமாம் பணிபுனைந்தோன்
விரைகொண்ட பூம்பொழி லுடுத்திடுந் தெல்லிநகர்
மேவிடுங் குரவர்பெருமான்
மேதக்க வங்கிலோ கலைமுற்றும் விரிவாக
விதியுளிக் கற்றநிபுணன்
வரைகொண்ட தோற்றமலி நல்லவர்கள் சபைநடு
வயங்குமா ணிக்கரத்நம்
வடிதமிழ்க் கலையுணர்வு வாய்ந்தவன் கங்கைகுலம்
வந்ததுரை யப்பவேளே.

செ. வேலாயுதபிள்ளை, பி. ஏ. [ஆனர்ஸ்]
பாடவிதான அபிவிருத்தி நிலையம்
கொழும்பு

துரையப்பாபிள்ளை — ஒரு கவிஞர்

கவிஞன் ஏன் கவிதை பாடுகின்றான்? இந்த வினவுக்குப் பலர் பலவாறு விடை கூறுகின்றனர். தன் உள்ளத்தில் இடங் கொள்ளாது பொங்கி எழும் உணர்ச்சி வெள்ளத்தை அணைகட்டி ஒழுங்காகப் பாய விடுவதற்கே அவன் அவ்வாறு செய் கின்றான்; அவனுக்குப் பாட்டு இயல்பாக வருவதனால் — கவிதையே அவனுக்குக் கைவந்த மொழியாதலினால் — அவனது கருத்து வெளிப்பாடு கவிதை வடிவம் பெறுகின்றது. அவ்வாறானால், அவன் தன் பொருட்டே — தன் சொந்த மனநிறைவுக் காகவே—கவி பாடுகின்றானா? தன்னுடைய சொந்த மனநிறைவுக்காக மட்டும் கவி பாடுகின்றவன், தன் மனக்குறை யொன்றை மாற்றுவதற்காகவே அவ் வாறு செய்பவனாவான். கவி பாடுவது அவனது மனக்கோளாற்றுக்கு மருந்தாகப் பயன்படும். அவனது மனத்தில் இருந்த வேதனைகளும் விரக்திகளும் இவ்வாறு சொற்களின் வாயிலாக வெளிவந்ததும், அவன் மனவமைதி பெறுகின்றான். பின்பு கவிதை எழுதவேண்டிய தேவை இல்லா மையால் அதனைக் கைவிட்டு விடுவான். இவ்வாறு, தன் மன நோய்க்கு மாற்றாகக் கவிதை எழுதுபவனை உண்மையிலே ஒரு கவிஞன் என்று உலகம் போற்றாது.

அப்படியானால், உண்மைக் கவிஞன் யார்? அன்று ஒருவன் ''நெஞ்சு பொறுக்கு தில்லையே — இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்'' என்று வாய்விட்டுக் கூறினான். அவன் தன்னைப் பற்றி மட்டும் சிந்திக்கவில்லை. தான் வாழ்ந்த சமுதா யத்தில் உள்ள மற்றவர்களைப் பற்றியும் சிந்தித்தான். அவர்களுடைய அறியாமை யையும், கோழைத்தனத்தையும், வறுமை யையும், சிறுமைகளையும் பற்றியெல்லாம் சிந்தித்தான். அவர்களுக்காக இரங்கினான்; அவர்கள்மீது பரிவு கொண்டான். 'பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப் பாலித்திடவேணும்'என்று பராசக்தியிடம் வரம் வேண்டினான். ''நமக்குத் தொழில் கவிதை — நாட்டிற் குழைத்தல் — இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல்'' எனறு மன வுறுதியும் பூண்டான். கடல்மடை திறந் தது போலக் கவிதைகளைப் பாடினான். அவன்தான் பாரதி. அவன்தான் உண்மைக் கவிஞன். பாரதி, பட்டிக்காட்டாருக்குப் பாடினவனேயன்றிப் படித்தவர்களுக்குப் பாடினவன் அல்லன் என்று ஒரு காலத்திற் பண்டித உலகம் அவனை ஒதுக்கி வைத்தது உண்மையே, ஆனால், பண்டித உலகமும் பாரதியை மகாகவி என்று ஒப்புக்கொள் ளும் அளவுக்கு இன்று அவன் புகழ் நிலைத்து விட்டது. 'பாரதி என்றால் கவிஞன்; கவிஞன் என்றால் பாரதி' என்று எண்ணும் அளவுக்கு அவன் இன்று மக்கள் மனத்தில் இடம் பெற்றுள்ளான்.

பாரதி தமிழ்நாடு தந்த செல்வம். அந்தப் பாரதியைப் போலவே, கவிதை யுள்ளம் படைத்த ஒருவர் நமது ஈழ நாட்டிலே — யாழ்ப்பாணத்திலே — ஏறத் தாழ ஒரேகாலப் பகுதியில் விளங்கினார். அவர்தான் பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளை அவர்கள். இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னே பிள்ளையவர்களின் பதங்களும், கீர்த்தனைகளும், கும்மிகளும், பிற பாடல்களும் யாழ்ப்பாணத்திலே பிரசித்திபெற்றிருந்தன. அன்று, யாழ்ப்பா ணத்தின் பல பகுதிகளிலும் அவருடைய கீர்த்தனைகளை மக்கள் பாடிப் பாடி மகிழ்ந் தனர். அவருடைய கன்னிப் படைப் பாகிய ''இதோபதேச கீதரச மஞ்சரி'' என்னும் நூல் 1901 ஆம் ஆண்டில் வெளி வந்தது. நாற்பத்திரண்டு கீர்த்தனைகளைக் கொண்ட இம் மஞ்சரி பிள்ளைவர்களின் இருபத் தொன்பதாம் வயதிலே வெளி யிடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. ''விளையும் பயிரை முளையிலே தெரியும்'' என்றபடி, எதிர்காலத்திலே பிள்ளையவர்கள்



பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையின் மாதிரிக் கையெழுத்து

எத்தகைய கவிஞராய்த் திகழுவார் என்பதைக் 'கீதரச மஞ்சரி' முன்கூட்டியே காட்டிவிட்டது! இக் கீர்த்தனைகளை இயற்றிய காலத்திற் பிள்ளையவர்கள் கிறிஸ்தவராயிருந்தார். இருந்தாலும், எந்தவொரு சமயத்தையுஞ் சாராமல், நாட்டுக்கு நன்மை செய்யத்தக்க சீர்திருத்தக் கருத்துக்களைப், பழகுதமிழிலே சந்தவளம் கொழிக்கப் பாடியுள்ளார்.

பாரதியாரைப் போலவே, துரையப்பாபிள்ளையும் தாம் வாழ்ந்த சமுதாயத்தைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் விளங்கிப் பாடிப் பயன்கொள்ளவேண்டுமென்று பழகுதமிழிலே பாடினார். இருவரும் சமூகத்திலுள்ள சீர்கேடுகளையும் ஊழல்களையும் போக்கி, முன்னேற்றமுள்ள புதிய சமூகத்தை உருவாக்கவே விழைந்தனர். பாரதியாரோ, ஆங்கிலர் ஆட்சியை எதிர்த்து, சுதந்திர ஆட்சியைக் கோரிப் புரட்சிகரமான சமுதாய மாற்றங்களைப் புகுத்தத் துடிதுடித்தார். ஆனால், துரையப்பாபிள்ளை அவர்கள் இத்தகைய தீவிரவாதக் கொள்கையை விட்டு, மிதவாதக் கொள்கையையே கடைப்பிடித்தார். பாரதியாருடைய ஆளுமைக்கும் பிள்ளையவர்களின் ஆளுமைக்குமுள்ள வேறுபாடே இதற்குக் காரணம். ஒருவகையிலே பார்க்கையில், தென்னாட்டிலே தேசியக் கவிஞராய்த் திகழ்ந்த பாரதியாருக்கும் நமது பிள்ளையவர்கள் முன்னோடியாய் விளங்கினர் என்பது புலனாகும். பாரதியாரின் முதற் கவிதையாகிய 'தனிமை இரக்கம்' 1903 — 4 இல் வெளிவந்தது. இதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே துரையப்பாபிள்ளையின் 'கீதரச மஞ்சரி' வெளிவந்துவிட்டது.

துரையப்பாபிள்ளை அவர்களின் கவிதைகளைப் படிக்கும்போது, அவற்றுக்கும் பாரதியாருடைய கவிதைகளுக்குமுள்ள கருத்தொற்றுமை, பொருளொற்றுமை, நடையொற்றுமை முதலியன ஒருவருக்குப் புலப்படாமற் போகா. நமது பிள்ளையவர்கள் பாரதியார் பிறப்பதற்குப் பத்தாண்டுக்குமுன் பிறந்தவர். பாரதியார் மறைந்த பின்னரும் பிள்ளையவர்கள் எட்டாண்டுக் காலம் உயிர் வாழ்ந்தவர். இவ்வாறு ஏறத்தாழ ஒரே காலத்தில், இரு வேறு இடங்களில் வாழ்ந்த கவிஞர்களிடையே கருத்தொற்றுமையும் நோக்கொற்றுமையும் காணப்படுவது வியப்பன்று, அன்றிருந்த தமிழ்நாட்டுச் சூழ்நிலையே கவிஞர் பாரதியாரை உருவாக்கியது; அந்தச் சூழ்நிலை பெரும்பாலும் நமது நாட்டுக்கும் பொருந்தும். அத்தகைய ஒரு சூழ்நிலையால் உருவாக்கப்பட்ட துரையப்பாபிள்ளை அவர்களின் கவியுள்ளம், பாரதியாருடைய கவியுள்ளமே போன்றிருந்தது. ஆண்டில் மூத்தவராகிய துரையப்பாபிள்ளை அவர்கள் பாரதியாருக்கு முன்னோடியாய் விளங்கினர். அவரை இலங்கையராகிய நாம், இக்கால ஈழத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி என்றும், நவீனத்துவத்தின் விடிவெள்ளி யென்றும் ஐயமின்றிக் கூறலாம். பாரதியாரைப் போலவே தமிழ்ப் பற்றையும் தேசியப் பற்றையும் பொதுமக்களுக்கூட்டி, சமூகத்துக்கு வேண்டிய நல்ல சீர்திருத்தக் கருத்துக்களைப் பொதுமக்கள் நயக்கும் பதங்கள், கீர்த்தனங்கள், கும்மிகள் என்பன போன்ற பாடல்வகைகளிலே, எளிய இனிய பழகுதமிழில் எடுத்துக்கூறிய பிள்ளையவர்களுக்கு இக்கால ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியிலே முக்கியமான ஓர் இடமுண்டு என்பதை எவரும் மறுத்தல் இயலாது.

ஆயினும், அண்மைக் காலத்திலே, ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றி நூல் எழுதியவர்கள், பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களைப் பற்றி ஒன்றுமே கூறாது போயினர். இது விந்தையாகவே இருக்கின்றது! 'ஈழமும் தமிழும்' என்ற நூலைத் தொகுத்த வித்துவான் எவ். எக்ஸ். சீ. நடராசா அவர்களோ, 'இலங்கையில் இன்பத் தமிழ்' என்ற நூலை எழுதிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களோ, 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்ற நூலை இயற்றிய இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களோ, 'ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்' என்ற நூலை எழுதிய தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை அவர்

களோ நமது பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களைப்பற்றி ஒரு வரிதானும் எழுத வில்லை. இந்த நூலாசிரியர்கள் இலக்கியப் படைப்புக்கள் என்றும், இலக்கிய கர்த்தாக்கள் என்றும் என்ன அளவுகோல் கொண்டு அளந்தார்களோ தெரியவில்லை. ஆயினும், துரையப்பாபிள்ளை அவர்கள் ஓர் கவிஞர் — இலக்கிய கர்த்தா — இலக்கிய முன்னோடி — என்ற உண்மையை மூடி மறைக்க முடியாது.

இற்றைக்கு ஏறத்தாழ 60, 70 ஆண்டு களுக்கு முன்னரே துரையப்பாபிள்ளை யவர்கள் பாடிய கவிதைகள் இன்றும் நமது சமுதாயத்துக்கு ஏற்றவையாகவே விளங்கு கின்றன! எடுத்துக்காட்டாகச் சிலவற் றைப் பார்க்கலாம்; 'தொழிலின் மான் மியம்' என்ற கீர்த்தனையின் சில பகுதிகள் வருமாறு :

"என்ன தொழிலேயும் சிராய்—செய்தல்
இங்கிதமாம் ஓராய்;
பன்னும் மேலத்தேசம் பாராய்—அங்கு
பயிலும் தொழில் ஆராய்."

இங்கே, கவிஞர் எந்தத் தொழிலும் ஏற்ற முடையதே என்றும், செய்யுந் தொழிலைச் செவ்வனே செய்வதே சிறப்புத் தருமென்றும் பாடியுள்ளார். அக்காலத் திற் கல்விகற்ற இளைஞரின் நிலை, இக்கால இளைஞரின் நிலையினும் வேறுபடுதன்று:

"கமத்தின் மேன்மை உணராரே—அதைக்
கற்றோர் கருதாரே,
நமக்குத் யோகமே யென்பாரே—அதை
நாடித் திரிவாரே."

கவிஞர், இக்கால இளைஞரைக் கருத்திற் கொண்டுதானே இவ்வாறு பாடினார் என்று எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறே 'வழக்காடலினால் வருந் தீமைகள்', 'கைக் கூலி வாங்குதல்', 'தமிழ் மாதின் பிரலா பம்,' 'சீதன வழக்கத்தின் தீமைகள்' என்பனபோன்ற பல கீர்த்தனைகள், நமது சமூகம் ஈடேறுவதற்கான நல்ல சீர் திருத்தக் கருத்துக்களைக் கொண்டு விளங்கு கின்றன. அன்று போலவே, இவை இன்றும் நமது சமுதாயத்துக்கு வேண்டியவை. பிள்ளையவர்கள் பாடிய 'தமிழ் மாதின் பிரலாபம்', 'தமிழ்ப் பாஷையின் மகத்துவம்' என்ற கீர்த்தனங்களின் எதி ரொலியைப் பாரதியார் பாடிய 'தமிழ்த் தாய்', 'தமிழ்' என்னும் பாடல்களிலே கேட்கின்றோம். பிள்ளையவர்களின் முதிர்ச்சிப் பருவத்திற் பாடப்பட்ட 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி', 'எங்கள் தேச நிலை' என்னும் இரு நூல்களும் தேசிய—சமூகச் சார்பானவை. இவற்றிலே பிள்ளையவர்களின் தனிப்பண்பு இனிது புலனாகின்றது. 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி' அக்காலத்து யாழ்ப்பாண நிலைமையை நமக்குப் படம் பிடித்துக் காட்டுவதோடு, பாவலரின் கவிதை உள்ளத்தையும் கண்ணாடிபோற் காட்டு கின்றது; பொதுமக்கள் இலகுவில் விளங் கிப் பயன்கொள்ளத் தக்க எளிய தமிழ் நடையிலே பாடுவதே பொருந்துவது என் பதைக் கவிஞர் உணர்ந்திருந்தார். இது அவையடக்கத்தில் வரும்,

"தேசோப காரங் கருதியிக் கும்மியைச்
செப்புகின் றேனுத லாலெவரும்
லேசாய் விளங்க இலகு தமிழில்
இயம்புவ தேநலம் சங்கமின்னே."

என்ற கும்மியாற் புலப்படுகின்றது. இக் கும்மிப் பாடலிலே கிருஷிகம், கைத் தொழில், கூட்டுமுயற்சி, வர்த்தகம், எங்கள் தாய்மொழி, எங்கள் மாணவர் கற்கும் விஷயங்கள், எங்கள் கற்ற வாலிப ரின் பழக்கங்கள், எங்கள் புதிய ஸ்திரீகள், எங்கள் தொழிலாளரின் நேர்மையீனம், சாதியும் சீதன வழக்கமும், தேசாபிமானம் முதலிய பல பொருள்களிலே, அக்கால யாழ்ப்பாண மக்களின் நிலைமையைச் சித் திரித்துக்காட்டி, முற்போக்கான பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக் கின்றார். பாரதியாரும் இப்பொருள்கள் பலவற்றிலே கவி பாடியுள்ளார். இரு வருடைய கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆராய் வது சுவை பயக்கும்; முற்போக்கை விரும் பும் இருவரும் இம் முடிவை எய்துவதற்கு, முறையே மிதவாதத்தையும் தீவிரவாதத் தையும் கைக்கொள்ளுவதைக் காண்கின் றோம். எடுத்துக்காட்டாகச் சாதி வேற் றுமை பற்றி இருவரும் கூறியிருப்பனவற் றைப் பார்க்கலாம்.

பாரதியாரோ,

"பறைய ருக்கும் இங்கு தியர்
புலையருக்கும் விடுதலே
பரவரோடு குறவ ருக்கும்
மறவருக்கும் விடுதலே ... ..."

என்றும்,

"ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனு மில்லை சாதியில்
இழிவு கொண்ட மனித ரென்ப
திந்தியாவில் இல்லையே;
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநி கர்ச
மான மாக வாழ்வமே."

என்றும்,

சமூக சமத்துவத்தை ஆர்வத்தோடு பாடியுள்ளார். துரையப்பாபிள்ளை அவர்களும் இத்தகைய சாதி வேற்றுமை பாராட்டாத சமூகத்தையே விரும்பினர். ஆனல், சாதிவேற்றுமையை எடுத்த எடுப்பிலே தகர்த்தெறிந்துவிட முடியாது என்பதை உணர்ந்தார். ஆகவே, நையாண்டியும், நகையும் செய்து, சமூகத்திலுள்ள இச் சாபக்கேட்டைப் பற்றி மக்களைச் சிந்திக்க வைத்து, படிப்படியாக இவ் வேற்றுமையை ஒழிப்பதற்கு வழியும் கூறினர்.

"ஒவ்வொரு வீட்டினுக் கொவ்வொரு சாதியாய்
ஊரிற் பிரிவினை மெத்திடுங்கால்
செவ்வையு றும்ஐக்கிய சந்தோஷ மெங்களைச்
சேருதல் எங்ஙனம் சங்கமின்னே."

"தாயினும் புத்திரன் தான்சாதி மானெனச்
சாற்றிப் பெருமைகொள் இந்நாட்டில்
நேயம் பெருகிநம் சாதியின் ஐக்கியம்
நீடுதல் கூடுமோ சங்கமின்னே."

"சாதியை ஒரே முறையினில் நம்மவர்
தள்ளுத லோமிகு கஷ்டகரம்
நீதியு டன்சிறி துசிறி தாயதை
நீக்குதல் நங்கடன் சங்கமின்னே".

முதலிலே, ஒவ்வொரு சாதிக்குள்ளும் இருக்கும் உட்பிரிவுகளை நீக்குவதும், பொதுக் கொண்டாட்டங்களிலே, சாதி வேற்றுமை பாராட்டாது, எல்லாரும் ஒன்று சேர்ந்து உறவாடுவதும் நல்ல பல னளிக்கும் என்று கவிஞர் சாதியொழிப் புக்கு வழிகாட்டுகின்றார்.

இனி, அக்காலச் சைவர்கள் உண்மை யான சமயநெறியைக் கைவிட்டு, அதி காரத்துக்காகவும், பட்டம் பதவிகளுக் காகவும், பிழைப்புக்காகவும், பிற கார ணங்களுக்காகவும் வெவ்வெறு வகையான சைவங்களை அனுட்டித்த அவல நிலையை,

"ஆங்கில சைவமென் றொருசமயம் — இங்கு
அரசியற் சைவமென் றொருசமயம்
தாங்கள் பெருக்கவொரு சைவசமயம்—எனத்
தாபிக்கி றார்சிலர் இதுசமயம்."

(எங்கள் தேசநிலை 11)

என்று நையாண்டி பண்ணி, நயமாகக் குறைகளை எடுத்துக் காட்டுகிறார். இது போலவே, நமது கவிஞர் நம் சமூகத்தவர்க ளிடையே காணப்படும் பொய்யையும், புரையோடிய பழக்க வழக்கங்களையும், பொருந்தாக் கொள்கைகளையும் சுட்டிக் காட்டி மக்களை நகைக்க வைத்துத் திருத்த முற்பட்டார். அன்று பாவலர் பாடியவை இன்றும் நமது சமுதாய மக்களுக்கு நல் லறிவுச் சுடர் கொளுத்த வல்லனவாய் உள்ளன.

பாவலரின் உள்ளம் பழுத்த நிலையிலே பாடியது 'சிவமணிமாலை' என்னும் பாடல். மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், பட்டினத்துப் பிள்ளையார், தாயுமானவர் போன்ற திருவருட் செல்வர்களின் பாடல் களின் எதிரொலியை இப் பாடலிலே பல விடத்தும் கேட்கலாம். அவ்வாருயினும் கவிஞனின் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் இங்கும் பற்பல இடங்களிலே மின்னிக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக ஒன்றைப் பார்க்கலாம்:

"வட்டிக்குக் காசு வழங்கிப்
பொருளை வளர்த்துமற்றோர்
நட்ட மடைந்து நலியச்
சுயநயம் நாடியருள்
விட்டிய லுங்குணம் வேண்டாது
நானவ் வினைதவிர்க்கச்
சிட்டர்கள் போற்றுஞ் சிவனே
திருவருள் செய்குவையே."

கவிஞரின் கட்டளைக் கலித்துறைப் பாட லின் கனிவு ஒருபுறமிருக்க, சமூக நலன் கருதும் பரந்த உள்ளமும் நம்மை ஈர்க் கின்றது. இவ்வாறு சமுதாய உணர்வுடன் தொட்ட இடமெல்லாம் கவிமணங் கமழக் கவி பாடிய துரையப்பாபிள்ளை அவர்கள் உண்மைக் கவிஞர் என்பதில் எவருக்குமே ஐயமிராது. அவர் பாரதிக்கு முன்னோடி— யாழ்ப்பாணத்தவர் — என்பதனல் இலங் கையிலுள்ள நாம் அனைவேமும் பெருமைப் படுகின்றோம்.

எஸ். ஹன்டி பேரின்பநாயகம்
முன்னாள் அதிபர்
கொகுவில் இந்துக் கல்லூரி

மானங்காத்தல்

ஐரோப்பிய அரசுகள் இலங்கையிலே தலைகாட்டியதும் கிறித்து மதமும் இங்கு வேரூன்றிற்று. தம்மதமே மெய்ம்மதமென்றும் அதன் முத்திநெறியே ஆன்ம ஈடேற்றம் அளிக்குமென்றும் இவ்வரசுகளின் ஆணையாளர் நம்பினர். ஆகையால் எப்படியோ தம் மதத்தை எம்மவர் மனதிலே திணித்துவிட நடவடிக்கைகள் எடுத்தனர். பலாத்காரத்தை ஓர் அரசு கையாண்டது. இன்னொன்று சலுகைகள் மூலம் தன் நோக்கத்தை நிறைவேற்றப் பார்த்தது. ஆங்கில அரசுடன் இங்குவந்த சமயகுரவர் பள்ளிகள் மூலம் தம் மதத்தைப் பரப்ப முயன்றனர். ஆங்கிலக் கல்வியை எம்மவர் அறிவு வேட்கை ஒன்றுல் மாத்திரம் கற்கவில்லை. உத்தியோகமும் அதன் மூலம் செல்வமும் செல்வாக்கும் கிடைக்குமென்று அவர்கள் நம்பினார்கள். நம்பிக்கையும் பலன் அளித்தது. மற்றப் பள்ளிகளைப் பற்றி எனக்குப் போதிய அறிவில்லை. 1823ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் உருவான உயர்தரப் பள்ளி (Seminary)யையும் 1872 இல் தோன்றிய யாழ்ப்பாணக் கல்லூரியையும் பற்றி எனக்குக் கணிசமான அறிவுண்டு. செமினரியிற் படித்தவர்களைப்பற்றிய விபரங்கள் அடங்கிய சாசனங்கள் இன்னும் வட்டுக்கோட்டையிலிருக்கின்றன. மாணவருக்கு அமெரிக்க பரோபகாரிகள் பொருள் உதவி செய்தனர். பிள்ளைகள் கலாசாலையிற் சேர்ந்தபோது அவர்களுக்கிருந்த பெயர்கள் கைவிடப்பட்டு அவர்களுடைய கல்விக்குப் பொருளுதவி புரிந்த பரோபகாரிகளின் பெயர்கள் இடப்பட்டன. மாணவன் பெயர், தந்தையின் பெயர், அவன் ஊர் ஆகிய விபரங்களைக் கொண்ட பதிவேடு இன்னும் அங்கிருக்கிறது. பள்ளியை விட்டு வெளியேறியதும் அநேகர் பள்ளியில் வழிபட்ட சமயத்தைத் துறந்தனர். பெயர்கள் இன்னும் மறைந்து விடவில்லை. இதே முறை மற்றப் பாதிரிமார் நடத்திய பள்ளிகளிலும் பின்பற்றப்பட்டது. தமிழ்ச் சைவப் பெயர்கள் ஒதுக்கப்பட்டு ஆங்கிலக் கிறித்த பெயர்கள் இடப்பட்டன. பாதிரிமாரும் அறிவு புகட்டும் நோக்கம் ஒன்றுடன் மாத்திரம் கல்வி ஊட்டவில்லை. தம் மதத்திற்கு ஆதரவு திரட்டுவதே அவர்கள் முக்கிய நோக்கம். இந்த நோக்கத்தை அவர்களும் அவர்கள் வழித்தோன்றல்களும் இன்றும் கைவிட்டதாகத் தெரியவில்லை.

சிறிது காலத்திற்குமுன் அரசு கல்வி நிலையங்களைப் பொறுப்பேற்க நடவடிக்கைகளில் இறங்கியதும் பாதிரிமாரும் அவர்களுடைய பரிவாரங்களும் திகிலடைந்தனர். பாதிரிமாரும் கிறித்த ஆசிரியரும் பண்டாரவளையிலொரு ஆலோசனைக் கூட்டங் கூடினர். இவ்வாலோசனையின் விளைவு ஒரு துண்டுப் புத்தகமாய் வெளிவந்தது. அரசாங்கம் பள்ளிகளின் பொறுப்பை ஏற்கும்போது ஒவ்வொரு பிள்ளைக்கும் அவனுக்கோ அவளுக்கோ உரிய சமயமே கற்பிக்க வேண்டி வரும். கிறித்து மதமொன்றே உண்மை என்று கடைப்பிடிக்கும் கிறித்தவ ஆசிரியர் இதைச் செய்ய முடியாது. உண்மையென்று தாம் நம்புவதற்கு மாறுன ஒன்றை அவர்கள் உண்மையென்று கூறுவது துரோகம். அத்துடன் தாம் உண்மையென்று கடைப்பிடிப்பதைக் கூறத் தவறுவதும் தவறு. இந்த நெருக்கடியை என்னென்று சமாளிப்பது? கூட்டத்தார் கண்ட முடிவு இதுதான்: கிறித்தவ கொள்கைகளை மறைமுகமாய் ஆசிரியர்கள் கற்பிக்கவேண்டும். விஞ்ஞானம், வரலாறு ஒழுக்கநூல் போன்றவற்றைக் கற்பிக்கும் போது கிறித்த கோட்பாடுகளையும் மறைமுகமாய்ச் செலுத்திவிடலாம்!

சைவரும், சமயத்திற்கும் கல்விக்கு முள்ள நெருங்கிய ஈடுபாட்டை அறியாது இருக்கவில்லை. நாவலர் செய்த இடி

முழக்கங்கள் இந்த அடிப்படையிலேதான் உருவாகின. பல்லாண்டுகளுக்கு முன் சுன்னாகச் சந்தையிலே துரையப்பாபிள்ளை அவர்கள் நிகழ்த்திய பேச்சொன்று நினைவிலிருக்கிறது. சைவப் பள்ளிகளைக் கட்டி அவற்றின் மூலம் பிற சமயிகளின் சூழ்ச்சியைத் தோற்கடிக்கவேண்டுமென்பதே அவர் அன்று கூறியது. ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, கறல் விசுவநாதபிள்ளை, மு. கி. இராசரத்தினம், சு. சிவபாதசுந்தரம், சு. இராசரத்தினம், தெ. அ. துரையப்பாபிள்ளை ஆகியோர் சைவப் பள்ளிகளை ஆக்க முயன்றதும் அவற்றை நிறுவியதும் இதை உணர்ந்தே. இவர்கள் யாவரும் கிறித்த பாடசாலைகளிற் கற்றுத் தேறியவர்களாயிருந்ததும் ஆர்வங்கொண்டு சைவப்பள்ளிகளை உருவாக்கியதும் காரணம் பற்றிப் பிறந்த காரியமோ, தற்செயலோ? யாரறிவார். அன்னிய மதப் பிரசாரத்தாலே தமிழர் தமது பரம்பரைச் சமயத்தைக் கைவிட்டதுடன் தம்முடைய தன்மானத்தையும் விலைக்கு விற்று விட்டனர் என்ற உணர்ச்சி இவர்கள் உள்ளத்தை உறுத்தியது போலும்.

துரையப்பாபிள்ளை அவர்கள் போன்றவர்கள் இதை உணர்ந்து ஆத்திரப்பட்டனர். ஆனால் பாதிரிமார் தமக்குச் செய்த நன்றியை மறக்கவில்லை. நானும் கிறித்த பள்ளியிற் படித்தேன்; படிப்பித்தேன்; கிறித்த கோயில்களில் சமயப் பிரசங்கம் செய்தேன். கிறித்தவர்கள் செய்த செய்கிற சூழ்ச்சிகளையும் அறிவேன். ஆனால் யாழ்ப்பாணக் கல்லூரியோ விக்னெல் (Bicknell) பாதிரியாரோ எனக்குச் செய்த நன்றியை நான் மறக்கவில்லை; மறக்கவும் முடியாது. துரையப்பாபிள்ளை அவர்களுடைய வாழ்க்கையிலே நிகழ்ந்த ஒன்று அவரும் யாழ்ப்பாணக் கல்லூரி செய்த நன்றியை மறக்கவில்லை யென்பதற்குச் சான்று. 1922-23 இல் வட்டுக்கோட்டை செமினரியின் நூற்றாண்டு விழாவும் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஐம்பதாண்டு நிறைவு விழாவும் நடைபெற்றன. கொண்டாட்டத்திற்குப் பணம் திரட்ட அதிபர் விக்னெல் (Bicknell) அவர்களும், உப அதிபர் யோன் செல்லையா அவர்களும் தெல்லிப்பழைக்குப் போயிருந்தனர். போகும்போது துரையப்பாபிள்ளை அவர்களின் படலையைக் கண்டதும் காரை நிறுத்திச் சிறிது சிந்தித்தனர். கிறித்த பள்ளி அதிபர் பதவியை உதறி எறிந்துவிட்டு அதற்கு எதிராய் ஒரு சைவப் பள்ளியைக் கட்டி நடத்தும் துரையப்பா அவர்கள் எப்படித் தம்மை வரவேற்பாரென்று எண்ணிச் சிறிது தயங்கினர். ஈற்றில் ''போய்ப் பார்ப்போம்'' என்று முடிவு கட்டி உள்ளே சென்றனர். துரையப்பாபிள்ளை அவர்கள் எழும்பிவந்து அவர்களை வரவேற்று ''மன்னிக்கவும், உங்களை நான் அலக்கழித்திருக்கக்கூடாது; நானே நன்கொடையைக் கொண்டுவந்து தந்திருக்கவேண்டும். இந்தாருங்கள் நூறு ரூபா (அக்காலத்தில் நூறு ரூபா பெருந்தொகை) இன்னும் என்னால் இயன்ற தொகையை அனுப்புவேன்'' என்று அந்த நூறு ரூபாயை நன்றிக் காணிக்கையாகக் கொடுத்தார். இதை எனக்குச் சொன்னது யோன் செல்லையா ஆசிரியர் அவர்களே. பாதிரிமார் பள்ளிகளிற் படித்து அங்கு நிகழ்ந்த சூழ்ச்சிகளைப் பிற்காலத்தில் உணர்ந்துள்ள பலருடைய, உள்ளத்திலிருக்கும் உணர்ச்சி எனக்குத் தெரியும்— ஆத்திரம் ஒருபுறம், நன்றி மறுபுறம். ஆங்கிலத்தில் இதை 'Ambivalence' என்று கூறுவர்.

க. சொக்கலிங்கம், பி. ஏ. [இலங்கை]
உதவி ஆசிரியர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பாவலர் துரையப்பாபிள்ளையின் பொருளாதார நோக்கு

பொருளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், பயன்படுத்தல் என்னும் முத்திறத் தொழிற்பாடுகள்பற்றி ஆராய்ந்து விளக்கமும், ஆலோசனையும் வழங்கும் ஒரு விஞ்ஞானப் பிரிவே பொருளாதாரமாகும். அண்மைக்காலத்திலேயே இஃது ஓர் அறிவியற்றுறை என்னும் தகுதியினை அடைந்துள்ளது. எனினும் பொருளாதாரச் சிந்தனைகள் மிகப் பழைமையானவை. இந்தச் சிந்தனைகளின் உணர்ச்சிபூர்வமான வெளிப்பாடுகளை நாம் எமது தமிழ்க்கவிதை யிலக்கியங்களிலே பரவலாகக் காணல் கூடும். மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, வீடு என்ற மூன்று மாகும். இவற்றுள்ளும் உணவே முதன்மை யானது. பழைய ஆட்சி நிறுவனங்களின் தலைவர்களான அரசர்கள், உணவு உற்பத்தியிலே மக்களுக்கு உறுதுணையாதல் வேண்டும் என்ற கோட்பாடு, சங்ககாலப் புலவர் பலராலும் வற்புறுத்தப் பெற்றது. பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் குட புலவியனார் கூறும் அறிவுரை இது: ''பெரியோய்! உடம்பிற்கு நீர் இன்றியமை யாதது. அதற்கு உணவு கொடுத்தோரே உயிர் கொடுத்தோருமாவர். ஏனெனில், உடம்பு உணவையே முதன்மையாகக் கொண்டதாகும். ஆதலால் உணவாவது நிலத்தொடு கூடிய நீர்தான். நீரையும் நிலத்தையும் ஒருவழிக் கூட்டியவர்களே இவ்வுலகத்தில் உடம்பையும் உயிரையும் படைத்தவராவர். நெல்லை விதைத்துவிட்டு வானத்தைப் பார்த்திருக்கும் இடமகன்ற நிலத்தினால் யாது பயனுமில்லை. அஃது அரசனின் முயற்சிக்குப் பயன்படாது. ஆதலால் கொல்லும் போரையுடைய செழியனே! இதனைக் கடைப்பிடித்து விரைந்து நிலங்குழிந்த இடத்திலே நீர்நிலை மிகும்வண்ணம் கட்டியவர்களே (குளம், வாய்க்கால் ஆதியன கட்டியவர்களே) தாம் செல்லுகின்ற உலகத்துச் செல்வம் அனைத்தையும் இந்த உலகத்திலேயே தம் பேரோடு கட்டி நிறுத்தியவராவர். அவ்வாறு கட்டாதவர் தமது பெயரை நிலை நிறுத்தாதவராவர்.''[1]

மக்களுக்கு வேண்டிய அறவுரைகளையும் அறிவுரைகளையும் புகல வந்த திருவள்ளுவரும் உணவின் இன்றியமையாமையையும் செல்வத்தின் சிறப்பையும் ஏற்றிக் கூறியுள்ளார். 'தவிர்த்தற்கரிய விளைபொருளும், சான்றோரும் என்றும் குறைவுபடாத செல்வரும் சேர்வதே, நாடு எனச் சொல்லத் தகுவது' என்பது அவரின் கருத்து.[2] இவ்வாறு உற்பத்தியாகும் உணவுப் பொருளும், செல்வமும் யாவர்க்கும் பரவலாக விநியோகம் செய்யப்படும் பொழுதுதான் நாட்டில் அமைதியும் இன்பமும் நிலவும். ''அங்கு ஈவாரும் இரார்; ஏற்பாரும் இரார். வண்மையும் இராது; வறுமையும் இராது.'' என்று பொருள் விநியோக இலக்கினைக் கம்பரும் தமது இராமாயணத்திலே வலியுறுத்துவர்.[3-4]

பொருளைப் போற்றி வாழும் உணர்வு வளர வளரப் போட்டியும் பூசலும் நிகழ்ந்து 'வலியனவே வாழும்' என்பதற்கிணங்க, ஆற்றல் வாய்ந்தோர் ஏகபோக்கியம் கொண்டாடத் தொடங்கியபொழுது, சமுதாயத்திலே சிலர் வளவாழ்வு வாழவும் பலர் அவர்களுக்கு அடங்கி வறுமையில் வாடவும் நேர்ந்தபொழுது, சமதர்ம, சமத்துவ வாழ்க்கைநெறி வற்புறுத்தப் பட்டது. இரத்தல், பட்டினி கிடத்தல்

1. புறம் - 18
2. திருக்குறள் - 731
3 — 4. பாலகாண்டம் நகரப்படலம் 72, 73

ஆகியன சமுதாயத்தின் பொருள் விதியோகச் சீர்கேட்டின் தீய அறிகுறிகளே என உணர்ந்து அவற்றைத் திருவள்ளுவர், பின்வந்த பாரதியார் போன்றவர்கள் சாடினர். ''பிறரிடம் இரந்து உயிர் வாழ்தலாகிய கொடுமை ஏற்படின் அந்நிலையை ஏற்படுத்திய படைப்புக் கடவுளே பரந்து கெடுக''[5] என்று திருவள்ளுவரும், ''தனி ஒருவனுக்கு உணவு கிடைக்கவில்லையானால் அதற்குக் காரணமாயமைந்த இந்த உலகினையே அழித்துவிடுவோம்''[6] என்று பாரதியும் கூறுவன கருதத்தக்கன.

புலவன் இலட்சியங்களை உருவாக்குபவன்; சமுதாயத்தின் சீரழிவுகளைக் கண்டிப்பதோடு அவனது கடமை முடிந்து விடுவதில்லை. எதிர்காலச் சுபீட்சத்திற்கான வழிவகைகளைக் கூறவேண்டிய கடப்பாடும் அவனுக்கு உண்டு. இக் கடப்பாட்டினை உணர்ந்த தன்மை பாரதியின் 'பாரததேசமென்று பெயர் சொல்லுவார்'[7] எனத் தொடங்கும் பாடலிலே ஓரளவு புலப்படுகின்றது. எனினும் அதில் எதிர்காலப் பொருளாதார முயற்சி கூறப்படுவதோடு, கவிஞனின் கனவும் இழைந்து விடுகின்றது. (பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம், சேதுவை மேடுறுத்தி வீதி சபைப்போம், சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம் என்பன போன்றவை).

சங்கப் புலவர் தொட்டு இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் பாரதி ஈறாகச் சமுதாய வளர்ச்சிக்கான பொருளாதார நோக்கினைக் கொண்டவராகப் புலவர் பலர் விளங்கியுள்ளதை நாம் காணலாம். எனினும், இவர்களிலிருந்து பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையவர்களின் பொருளாதார நோக்கு ஒருவகையில் வேறுபட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கான இலக்குக்களை இலக்கிய நயம் பொருந்த உணர்ச்சிபூர்வமாக இவர்கள் சொல்லப் பாவலர் துரையப்பாபிள்ளையோ, நடைமுறையிலே சாத்தியமான விடயங்களைச் சிந்தித்து ஒழுங்குபடுத்தித் தந்துள்ளார். காரண காரியத் தொடர்போடு எழுதப்பட்ட ஒரு கட்டுரையின் தன்மையையும் அவரின் 'யாழ்ப்பாணச் சுவதேசக் கும்மி'யில் நாம் காணலாம். சொல்லினிமைக்காகவோ, எதுகை மோனை அழகிற்காகவோ கருத்தைப் பலியிடாது கருத்தின் அமைதிக்கேற்பச் சொற்களை அமைத்துள்ள சிறப்பினை இந்தக் கும்மியிலே நாம் காணக் கூடியதாயிருக்கின்றது. இதனை அவரே தமது அவையடக்கப் பாடல்களிலே கூறி விடுகின்றார். ''தேச உபகாரம் கருதி இந்தக் கும்மியை நான் கூறுகின்றேன். ஆதலால் யாவரும் லேசாய் விளங்கிக் கொள்ள இலகு தமிழிலே கூறுவதுதான் நன்று. கடினமான அரும்பதத்தோடு புணர்ச்சியும் மிகுதியானால் பொதுசனங்களுக்கு எக்காலமும் விளங்க மாட்டாது. அதனால் என்ன நலம் வரும்? நான் எனது கல்வித் திறத்தினை உலகத்தவர் அறிவதற்காக இதனைப் பாடவில்லை; நாடு நல்விதமாகத் திருந்தவேண்டும் என்றே கூறுகின்றேன். ஆதலால் இதில் இராமாயணம் போல அரும்பொருள், சொல்லழகு இல்லை எனச் சான்றோர் கருதமாட்டார்; தள்ளமாட்டார். மனம் பூரித்து மகிழ்வது நிச்சயம்''. இஃது பாவலரின் காலத்தோடு ஒட்டிய சித்தனையைக் காட்டுகின்றது.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் புதிதாக இலங்கையில் உருவாகிய மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலக் கல்வியைப் பெறத்தக்க நல்வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இதன் அருமைப்பாட்டினை உணர்ந்து, மிஷனரிகளின் ஆதிக்கத்திலிருந்த ஆங்கிலக் கல்வியினைச் சைவச் சூழலுக்குக் கொண்டுவரப் பாடுபட்டுக் கல்வி நிலையங்களை உருவாக்கிய பெருமையும் அவருக்கு உண்டு. இருப்பினும் இந்தக் கல்வி முறை தற்காலிகமானது, இதனாற் கிடைக்கத்தகும் பொருளாதார வாய்ப்புக்களும் தற்காலிகமானவை, என்பதை

5. திருக்குறள் – 1062
6. பாரதசமுதாயம் - (பாரதிபாடல்கள் 17ஆம் பாடல்)
7. பாரத தேசம் - 5ஆம் பாடல் (தேசியகீதங்கள்) பாரதி
8. யாழ்ப்பாணச் சுவதேசக் கும்மி (ஒத்தனைச்சோலை பக். 18)

அவர் நன்கு உணர்ந்திருந்தார். 'சுவதேசக் கும்மி'யிலே கிருஷிகம், கைத்தொழில் என்பவற்றின் சிறப்பினையும், அவற்றை வளர்க்கவேண்டிய இன்றியமையாமை யையும் அவர் யாழ்ப்பாணத் தமிழருக்கு வலியுறுத்துவது இக்காரணத்தினாலேதான். இலக்கியங்களில் இவை வானளாவப் புகழப்படுகின்றன என்ற காரணத்திற் காகவோ, தாமும் ஏதாவது அறிவுரை வழங்குவோம் என்பதற்காகவோ அவர் இவற்றை வலியுறுத்தவில்லை. நிகழ்காலச் சூழலை நன்கு ஆராய்ந்து, எதிர்கால நிலை களைத் தீர்க்கதரிசனமாகக் கண்டு எடுத்துக் கூறிய சிறப்பினை அன்னாரின் 'சுவதேசக் கும்மி'யிலே நாம் காணக்கூடியதா யிருக் கின்றது.

'யாழ்ப்பாணச் சுவதேசக் கும்மி' 334 கும்மிப் பாடல்களை உள்ளடக்கியது. கிருஷிகம், கைத்தொழில், கூட்டுமுயற்சி, வர்த்தகம் என்ற நான்கு உபதலைப்புக்க ளும் பாவலரின் பொருளாதார நோக்கினை நன்கு எடுத்துக் காட்டுவன. இவை மொத்தம் 65 பாடல்களைக் கொண்டவை. கல்வி, இலங்கைக்கொரு சர்வகலாசாலை, எங்கள் தாய்மொழி முதலாக வரும் மற் றைய உபதலைப்புப் பாடல்களிலும் மறை முகமாகவேனும் பொருளாதாரக் கருத் துக்கள் விரவியுள்ளன; இருப்பினும் முத லிற் கூறிய நான்கையும் கொண்டு பாவ லர் துரையப்பாபிள்ளை அவர்களின் பொரு ளாதார நோக்கினைக் காணலாம்.

கிருஷிகம் பற்றிய கும்மிப்பாடல்கள் 8 தொடக்கம் 40 வரையுமுள்ள 33 பாடல் கள். கைத்தொழில் பற்றியவை 41 தொடக்கம் 55 வரையுமுள்ள 15 பாடல் கள். கூட்டுமுயற்சி 56 தொடக்கம் 64 வரையுமுள்ள 9 பாடல்கள். வர்த்தகம் 65 தொடக்கம் 72 வரையுமுள்ள 8 பாடல்கள்.

'திருப்திகொள்ளும் இனம் (பொரு ளாதாரத்தில்) வீழ்ச்சி அடைந்துகொண் டிருக்கும் இனமாகும்' என்பது பொருளா தார அறிஞர் ஒருவரின் கூற்றுகும்.[9] சிந்திக்கவேண்டிய நடுத்தர வர்க்கம் தனக் குக் கிடைத்த உத்தியோக வாய்ப்புக்க ளாலே திருப்தி அடைந்து சிந்திப்பதை நிறுத்தியும், செயற்பட்டு நாட்டை வளர்க்க வேண்டிய விவசாய, தொழிளா வர்க்கம் பழையகால முறைகளிலேயே அழுந்திப்போய்ச் செயலற்றுமிருந்த இந் நூற்றாண்டின் தொடக்கப்பிரிவிலே பாவல ரவர்கள் இம்முற்போக்குக் கருத்துக்களைச் சொன்னார் என்பது உளங் கொள்ளத் தக்கது. அந்த அடிப்படையிலே பார்க்கும் பொழுதுதான் பாவலரின் மகிமை விளங்கும்.

பாவலரின் பொருளாதார நோக்கி னைப் பிண்டப்பிரமாணமாகத் தருதலே இக்கட்டுரையின் நோக்கமன்றி, அதற்கு வியாக்கியானம் செய்வதன்று. ஒருவகை யிலே நோக்கினால் அது தேவையுமில்லை. நிகழ்கால வாழ்க்கையில் எமது இனம் அநுபவபூர்வமாக உணர்ந்துகொண்டிருக் கும் உண்மைகள் பலவற்றை அன்றே உணர்த்திவிட்ட பெருமை ஒன்றுதான் நாம் சிந்தித்து, வியந்து, பெருமைப்படத் தக்கது. பாவலரின் கருத்துப் போக்குகளை அப்படியே தருவது பயனுடையது.

கிருஷிகம்:

லங்காதுவீபத்தின் மத்திய, மேற்கு, தெற்குப் பகுதிகளைப்போல எண்ணத்தக்க தன்று யாழ்ப்பாணம். எங்களின் நல்ல தேசத்திலே ஆறு, மலை, குளம் எங்கும் இல்லை. மற்றைய பிரதேசங்களைப் போல எமது பிரதேச மண்ணும் செழிப்பான தன்று. (ஆகவே) நல்லவகையிலே கிருஷிகம் செய்வதற்கு உரிய நன்மை ஒன்றும் இங்கு இல்லை.

அல்லும் பகலும் சொல்லுதற்கரிய துன்பங்களை எமது கமக்காரர் அடைகின் றனர். இவ்வாறு தொல்லைப்பட்டாலும் நீர்வளம் இல்லாது சுகமடைவது எங்ஙனம்? எம் கமக்காரர் வானத்தை அண்ணாந்து பார்த்து வருந்துபவர்களாய் இருக்கின்

9. A satisfied race would be a declining race — George W. Southgate B. A. in his Introduction xii — English Economic History.

றனர். இவர்கள் மானுவாரிப் பயிர்[10] செய்வது எங்ஙனம்?

கருணை நிறைந்த எமது அரசினர் தமது கருத்தினைச் செலுத்தி ஆரணியம் போன்று விளங்கும் இந்த நாட்டைச் (யாழ்ப்பாணத்தை) செழிக்கச் செய்தல் ஆகாதோ? மிகுந்த நீரையுடைய நிலாவரையை[11] நிலை பெற்ற நல்ல ஒழுங்குகளைச் செய்து உலகம் மெச்சும்படி இந்த நல்ல நாட்டினை நீர்ப் பாய்ச்சுதல் பண்பல்லவோ?

நீர்வளமின்மை மாத்திரமன்று, எம் கமக்காரரின் குறை. கமம் பலன் தராமைக்கு வேறு காரணங்களும் உள்ளன. சீர்திருத்தம் மிக மேலாக ஓங்கும் இந்நாளிலே செவ்வையான பல யந்திரக் கருவிகள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தாமை அறியாமை யல்லவோ? கோணலான தடியிலே இரும்புக்கூர் ஒன்றைக் கொளுவி அதைக் கலப்பை என்று ஏற்றுக் கொள்வதைக் கல்விச் சீருடைய மக்கள் பார்த்து, ஐயையோ! நகைக்கின்றனர். கலப்பை, மண்ணை மேல்கீழாக மாற்ற வல்ல கருவியன்று. அது மண்ணை மறுப்படுத்திக் கீறும் ஒரு கருவியே. இதனை எண்ணத்திலேகூடக் கலப்பை என்பது நூதனந்தான். மேன்மையையுடைய விவசாய நூலைக் கற்று அதன் கண்ணுள்ள பிரதான உண்மைகளை நன்கு உணர்ந்து கமஞ் செய்தாற் பயன் மிகுதியும் வராதோ?

எங்கள் தேசத்திற்கு (யாழ்ப்பாணத்திற்கு) ஏற்ற புதுப்பயிர்கள் இன்ன இன்ன என்பதை நன்கு உணர்ந்து குறைவின்றி அவற்றைச் செய்தால் நற்பயன் விளையாதோ?

கையிலே முதலின்றிக் கமக்காரர் பலர் செட்டிமாரிடம் கடும் வட்டிக்குக் கடன் வாங்கி அநுபவிக்கின்ற கஷ்டம் இம்மட்டோ? செய்யும் கமத்திலே வருகின்ற வரும்படி, கடன் தீர்க்கவே போதாது என்ற நிலையில், ஐயகோ! இவர்கள் உய்யும் வழி என்ன? எங்கள் உள்ளம் உருகுதே!

கற்றவர்கள் எவ்வளவுதான் பாக்கியவான்களாயினும் கமத்திலே சற்றும் விருப்பம் கொள்ளாது, உத்தியோகத்தையே அடையவேண்டும் என்று ஓடித்திரிகின்றனர். ஏடுகளிலே ஔவையும் வள்ளுவரும் பாட்டாகச் சொல்லியிருக்கும் கமத்தொழிற் சிறப்புக்களை உணர்ந்தும், அவர்கள் பரீட்சை செய்யாது பதுங்கித் திரிகிறார்கள்: இப்படியே கமக்காரர்களின் நிலை கூறுவதற்கே அரியதான பழுது நிறைந்துள்ளது. எப்படியும் கிருஷிகத்தை நயமுடையதாக்குதல் எங்கள் கடன்.

புண்ணியவாளனாகிய சேர் ஹென்றி பிளேக் என்னும் தேசாதிபதி[12] கிருஷிகத்தை உயர்த்த எண்ணிச் செய்த பிரயாசைகள் நலம்பெற ஏற்ற உதவி செய்தல் வேண்டும்.

இங்கு (யாழ்ப்பாணப் பகுதிகளில்) விவசாயத்திலே பயன்பெற வியலாத கமக்காரர்கள், தங்கள் நயங்கருதி வன்னிப் பகுதிக்குச் சென்று குடியேறிக் கமஞ் செய்தல் சத்தியமாகவே யுக்தியானது. இவ்வாறு இவர்கள் குடியேறவும், கமஞ் செய்யவும் அரசினர் தயைசெய்தல் நீதியேயாகும்.

மலையகத்திலே வளர்கின்ற பயிர்களான கோப்பி, நல்ல தேயிலை, சின்கோனா போன்று யாழ்ப்பாணத்திலே வளர்ந்து பயன்தரத்தக்க பயிர் ஒன்றும் இல்லையோ? தீமைதரும் புகையிலை செய்வதனால் பெரும் நட்டமே ஏற்படும். நம்மூர்க் (இவ் வடியின் அடுத்த இரண்டு சீர்களும் தரப்படவில்லை. கையெழுத்துப் பிரதியிலே சிதைவு ஏற்பட்டுள்ளது போலும். இதேபோன்று அடுத்த

10. மானுவாரிப்பயிர் — நீர்ப்பாய்ச்ச முடியாத, வானம்பார்த்த பூமியிலே வளரும் பயிர்.

11. நிலாவரை, புத்தூரிலிருந்து மேற்காகச் செல்லும் வீதியில் இரண்டுமைல் தொலைவிலுள்ள வற்றாக் குளம். இதனை அயலிலுள்ள தோட்டக் காரவுகளுக்கு நீர்ப்பாய்ச்சப் பயன்படுத்துவதாகிய முயற்சி அரசினரால் இருபத்தைந்தாண்டுகளுக்குமுன் தொடங்கப்பெற்று ஓரளவு பயன் கிடைக்கின்றது.

12. சேர் ஹென்றி பிளேக் (Sir Henry Blake)

அடியிலும், மற்றைப் பாடலின் முதல் ஈரடிகளிலும் இவ்விரண்டு சீர்கள் விடப் பட்டுள்ளன.) காரணமென்பதை..... நமது அரசாட்சியினர் ..... நலம்பெறக் கிர்ஷி .. .. சிறந்த ஒருவரை நியமித்தல் சிறப்பன்றே? இவர் (இவ்வாறு நியமிக்கப் படுபவர்) ஆங்காங்குச் சென்று விவசாயம் ஓங்குதற்கு நன்முயற்சி செய்தால் நலம் உண்டாகாதோ? ஆங்கில, தமிழ்ப் பாடசாலைகள் தோறும் அரிய நல்ல மாதிரித் தோட்டங்களைச் செய்வித்தலும் நலத்திற்கு வழியாகும். தோட்டங்கள் உயர்ச்சி பெறுதற்கு, வித்தியாசாலைகளுக்கு அரசினர் நன்கொடையளித்தல் நியாய மன்றே?

இத்தேசத்தில் (யாழ்ப்பாணத்தில்) உண்டாக்கத்தக்க உசிதமான கனிமரங் களைச் சிந்தனையோடு மற்றைத் தேசங் களிற் சென்று தேடிக்கொள்ளுதல் நன்று. இங்கு அவற்றைக் கொணர்ந்து, இங்குள்ள கனிதரு மரங்களோடு சிங்காரமான தோட்டங்களில் வளர்த்தால் நற்பலன் தருமன்றே? இந்த இலங்காபுரியின் மற் றெல்லா விடங்களிலும் உண்டாகும் கனி களிலும் எம்மூர்க் கனி உருசி கூடுதலாக உடையது. தூரத்தேயுள்ள அவுஸ்திரே லியா, கலிபோணியா முதலாமிடங்களி லிருந்து பலவகைக் கனிகள் பாரம்பார மாய்க் கொழும்பில் விற்கப்படுகின்றன வல்லவோ? காய்ந்த பழங்களையும், புதிய பழங்களையும், காய்வகைகளையும் அனுப்பி வைப்போமானால் அவற்றை யாவரும் ஆவலோடும் மகிழ்வோடும் தெரிந்து விலைகொடுத்து வாங்கிக் கொள்ளுவர்.

நல்ல கனிகளுள் முதலாவதாய் இலங் குவது தேன் நிகர்க்கும் திராட்சைக் கனியாகும்.[13] இதனைப் புகைவண்டியிலே ஏற்றிச் சென்று விரைவாகக் கொழும்பிலே விற்கலாம். நல்ல வருமானம் தரவல்ல பல பயிர்களையும் நாட்டிக் கிருஷிகம் செய் தால் நம் தேயம் சிறந்திடும்.

கைத்தொழில்

எங்களது நல்ல நாட்டிலே கைத்தொ ழில் செய்வது இழிவென்னும் மோசமான எண்ணம் தங்கியிருந்து செய்த, செய்கின்ற தீமைகள் இம்மட்டு என்று சொல்லல் இயலாது. எத்தனையோபேர் மிகுந்த வறுமை காரணமாக என்றும் வருந்தினு லும் உத்தியோகமல்லாது வேறொன்றும் செய்யாமல் உலைந்து திரிகின்றனர். பொய் சொல்வார்; களவும் எடுப்பர்; இழிந்த வழிகளில் வயிற்றை வளர்ப்பர். ஆனால் செய்வதற்கென ஒரு கைத்தொழிலையும் தெரிந்திடார். இது தீமை அல்லவோ?

மேலைத்தேயங்களின் மேலான நிலை மைக்கு அங்கு அமைந்துள்ள பலவகைக் கைத்தொழில்களே மிக உதவியாகும். அவ்வாறெனில் (நாம் கைத்தொழில்களைப் புறக்கணிப்பதால்) எமது ஊரிலே மிக்க தரித்திரம் ஏற்படாதோ? இந்தியா தேசத் திலே பிரபுக்கள் பலர் பொருத்தமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, முன்வந்து நன்மை செய்திடும் பாங்கு எமக்கு நல்ல முன்மாதிரியாகும்.

குண்டூசி, ஊசி, நெருப்புக்குச்சி ஆதிய கூறுதற்கு அரிய வேறுபல வேலைகளினாலே, சொல்லற்கரிய பெரிய செல்வம் சேர்ந் திடும். இந்த விந்தையை என்னென்று உரைப்பேன்?

எங்கள் தேசத்துப் பணமானது எவ் வகையிலும் இதரதேசங்களைச் சேருவதால் எம்மைப் பங்கம் நிறைந்த வறுமை எட்டிப் பாராது என்செய்யும்?[14] புத்தி குறைந்த

---

13. திராட்சைக்கனி, முதன்முதல் தோலகட்டியிலுள்ள கத்தோலிக்க மௌனசபைக் குருமாரால், தமது தோட்டத்திலே வினைவிக்கப்பெற்றது. இன்று இலாபந்தரும் பயிர்ச்செய்கையாகக் கருதிப் பலர் ஈடுபட்டுள்ளனர்.

14. அந்நியச் செலாவணி (Foreign Exchange) காரணமாக இன்று நமது ஸ்ரீலங்கா பெரியதொரு பொருளாதார நெருக்கடியிற் சிக்கி மீள முடியாது அல்லற்படுவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின் றோம். இறக்குமதி, ஏற்றுமதியிலும் பலமடங்கு கூடியிருந்ததே இவ்விழிநிலைக்குக் காரணமாகும்.

வர்களைப் புத்திமான்கள், பொருந்திடும் தந்திரம் வல்லார் எக்காலத்திலும் வென்றிடுவர் என்றதுபோலப் பிறர் எங்களை ஏய்க்கின்றனர். பார்வைக்குப் பளீர் என்று ஒளிகாலும் போலிப் பொருள்கள் பற்பலவற்றை இங்கு அனுப்பி உறுதியான பணத்தினைச் சேகரிக்கும் பிறரின் புத்திசாதுரியம் சிந்திக்கப்பெறவேண்டியதாகும். அந்நிய தேசத்திலிருந்து இங்கு வந்து எங்கள் சந்தைகளிலே நிலையான செல்வத்தினை அந்நியர் தேடும் வழி என்ன என்பதைச் சிந்திக்க.

கைத்தொழில்களைச் செய்பவர்களின் உடை, நடை காட்சிக்கு ஏற்றவையல்ல என்று சிலபேர் பித்தம் பிடித்தவர்போல இகழ்ந்து தள்ளுதல் பேதைமை அல்லவோ? கட்டிவைத்த தலைப்பாகையும் மீசையும் சட்டையும் கைத்தொழிலாளரின் உடல்களிலே ஒட்டிக் கிடக்கமாட்டாவென்று சொல்லுமோ? (இவற்றைத் தொடர்ந்து மூன்று பாடல்களிலே கல்வி கற்றுப் பின் கைத்தொழில் செய்வது கல்விக்கு இழுக்கன்று என்றும், அத்துவக்காத்து, பிறக்கிருசி, கிளாக்கு, நொத்தாரிசு ஆகிய தொழில்கள் கைத்தொழில்களிலும் சிலாக்கியம் உள்ளவையல்லவென்றும், எத்தொழிலையும் நேர்மையுடனும், இயன்ற அளவு அழகோடும் செய்தல் மேன்மைக்கு வழி காட்டிகள் என்றும் பாவலர் உரைக்கின்றார். எமது பொருளாதார வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் கைத்தொழில்களுக்கு மகத்துவம் அளிக்காமையே என்பதை அநுபவம் எமக்கு உணர்த்திவிட்டது).

கூட்டு முயற்சி

நமது தேசத்திலே செல்வரான பலர் தமது திரவியங்களை மிகவும் லோபத்தனத்தோடு பலவிதங்களிலே பூட்டிவைத்து இந்தத் தேசத்தினைப் பாழாக்க முயல்கின்றனர்.[15] கூட்டு முயற்சிகளை மேற்கொண்டு சமுதாய நலத்திற்காகப் பாடுபடுவோர் விரும்பி நல்ல கைத்தொழிற்சாலைகளைத் திறத்தல் நலமல்லவோ?[16] ஒருவர் இருவர் செய்யக்கூடாத வேலையை ஒன்றுபட்ட பலர் கூடிச் செய்வதனால் சிறப்பு நிலவும்; பலன் மிக உண்டாகும்; நம் தேசம் செழிக்கும்; இவ்வகையாக நாம் முயற்சி செய்தால் எமது அரும்பொருள் அந்நிய தேசங்களுக்கு எவ்வகையாகச் செல்லும்? இங்கே அது பெருகும். இது நிசம். கூலிவேலை செய்து பிழைப்பவரும், அரசகருமங்களை நாடிச் செல்பவரும் தொல்லை இல்லாமல் நல்ல வேலை வாய்ப்புப் பெறுவர். இதுவே சிறப்பு.

சீலை, கண்ணாடி, கடதாசி, தீக்குச்சி, ஆணி[16அ] முதலிய பல்வகைப் பொருள்களையும் செய்தற்கான வேலைகளை இங்குத் தொடங்கினால் நமது செல்வம் விருத்தி அடையாதோ? இன்றுள்ள தொழில்களை மேலும் திறம்படச் செய்வதன்மூலம் சொல்ல வியலாத பல நன்மைகளை இத் தேயம் (இலங்கை) அடைவது திண்ணம். பச்சடி, காஷாயம், களி, புளிப்பாணி வகைகள் முதலான உணவுகளை மெச்சிப் பிறர் விலைக்கு வாங்கும் பணிகளை மிகவும் மேன்மையுடன் செய்க. சாடிகளிலும், செப்புக்களிலும், பேணிகளிலும் அடைத்து நமது தேசத்தில் விற்பனையாகும் உணவு வெளிக்கவர்ச்சி (மோடி)யிலன்றி, சுவையிலே எமது பண்டத்திற்கு ஈடாகாது.

வர்த்தகம்

சம்பாதிக்கும் பொருளிலே கவனமுள்ளவர் என்று கூறப்படும் நாட்டுக் கோட்டைச் செட்டிமாரே எமது தேசத்து வியாபார வேலைகளை நன்முக வேட்டை

---

15. பொருளாதார மந்தத்திற்குப் பணத்தை ஓரிடத்தில் முடக்கி வைத்தலும் காரணியாகும் என்பதை எமது நிதிமந்திரி உணர்ந்து ஐம்பது, நூறு ரூபாய்த் தாள்களை வெளிக்கொணர எடுத்த நடவடிக்கை கருதத்தக்கது.

16. இன்று கூட்டுத்தாபனங்கள் பல இக்காட்டில் அமைந்து வருகின்றன.

16அ. இத்தொழில்கள் பலவும் இன்று ஒரிய அளவிலாயினும் இலங்கையின் பல இடங்களிலும் தொடங்கப்படுகின்றன.

யாடுகின்றனர்.[17] எம்மவருக்கு வேண்டிய நெல் முதலான பலவகைப் பொருள்களையும் மற்றத்தேசத்தவரே வியாபாரம் செய்கின்றனர். இதனால் எமக்குப் பெரிய பெரிய நட்டம் ஏற்படுகின்றது. நெல் முதலிய பொருள்களை விற்பதற்குச் சங்கங்கள் நியமித்து வர்த்தகம் செய்யும் பொழுது, நல்ல மலிவாயும், பெருக்காயும் நமக்கு நயம் வரும். இலாபப் பணமும் நம்மவருக்கே வாய்த்திடும். அதனால் செல்வம் உள்நாட்டிலே பெருகிக்கொண்டிருக்கும். இந் நன்மொழியினைச் சொல்லவும் வேண்டுமோ?

ஆங்கிலேயர், பார்சிகள் (Persians) போலவே எம்மவரும் பிறதேசங்களுக்குச் சென்று எவ்விடத்தும் வியாபாரம் செய்தால் எமது இலாபம் மிக அதிகமாகும்.

கைத்தொழில், விவசாயம், வர்த்தகமாகிய மூன்று காரணிகளாலேயே எந்தத் தேசத்திற்கும் செல்வம் மிகுதியாகப் பெருகும் என்னும் உண்மையிலே நம்பிக்கை வைக்க மேற்சொன்ன மூன்றிலும் எங்கள் தேசநிலை மிகக் கீழாகவே (இருப்பதால்) எங்கள் செல்வம் காற்சதம்போலப் பெறுமதியில் மிகக் குறைவுற்றிருக்கிறது. இதனைக் கவனிக்கவில்லையோ?

உத்தியோகம் என்ற உபதலைப்பில், வெளிநாடுகளுக்கு உத்தியோகம் தேடிச் செல்வதின் நிலையற்ற தன்மை பற்றியும், ஆசிரியர் உத்தியோகம் என்ற உபதலைப்பில் ஆசிரியர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கு மிடையேயுள்ள சம்பளப்பாகுபாடு (Disparity) பற்றியும் பாவலர் விமர்சனம் செய்வதும் அவரின் பொருளாதார நோக்கின் சிறந்த தன்மையைப் புலப்படுத்துகின்றது. சுருங்கக் கூறின் காருண்ணியம் நிறைந்த பிரிட்டிஷ் அரசாங்கத்திலே அபிமானம் மிக்க மிதவாதிபோலக் கருதத்தக்க பாவலர், அதேசமயத்திலே தேசாபிமானம், இனஅபிமானம், பாஷாபிமானம் மிக்குற்றவராய்த் தெளிவும், விரிவும், தீர்க்கதரிசனமும் பொருந்திய பொருளாதார நோக்குடையவராயும் விளங்குவதனை மறுக்கமுடியாது.

17. தென்னிந்திய வர்த்தக ஆதிக்கம் இன்று குறைந்து வரினும், அந்நிய நாடுகளின் வியாபார ஆக்கிரமிப்பு முற்றுக எம்மை நீங்கிற்று எனல் இயலாது. இதுவும் எமது நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

தமிழ்ப் பாஷையின் மகத்துவம்

தேனொழுகும் செந்தமிழின் சீரைநாம் கண்டு
தேறுவோம் அப்பாஷை நூல்கள் செவ்வையாய் உண்டு.

✯

தண்டமிழ் பல்பாஷைகளின் தாயெனல் மெய்யே
சமஸ்கிருதத்தால் வந்ததெனச் சாற்றுதல் பொய்யே.

✯

இன்னிசை இலக்கண விலக்கிய மாட்சிசேர்
எங்கள் தமிழ்ப்பாஷை தனக்கெந்தப் பாஷைநேர்.

பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

செ. கதிரேசர்பிள்ளை
உதவி ஆசிரியர்
மகாஜனக் கல்லூரி

பாவலரது ஆத்ம சமர்ப்பணம் —சிவமணிமாலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியும், இருபதாம் நூற்றாண்டின் முற் பகுதியுமாகிய காலப்பிரிவிலே வாழ்ந்த ஈழத்துத் தமிழறிஞர் சிலரிடத்தே ஒரு பொதுமை நிலை காணப்படுகின்றது. அவர்கள் ஆரம்பத்திலே கிறித்தவ மதத்தினராக வாழ்ந்து பின்னர் சைவர்களாக மாறிக் கலைத்தொண்டு புரிந்தனர். திருவாளர்கள் கறல் விசுவநாதபிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை போன்றோர் இத் தகையோராவர். இவர்களுள் பாவலர் அவர்கள் தெல்லிப்பழையிலே ஓர் ஆங்கில பாடசாலையை நிறுவியும், அக்காலத்துச் சமூகத்தை முன்னேற்றும் வகையிற் பல கவிதைகள் யாத்தும், கட்டுரைகள் எழுதியும் மதித்தற்கரிய பெருந்தொண்டாற்றி வாழ்ந்தார்கள். சமூகத்தை நோக்கி உணர்ச்சிகொண்டு பாடல்கள் பாடி, கவிதைமூலம் ஓர் உன்னத சமூகத்தை ஆக்கிவிடமுடியும் என்று துணிந்து முயன்றவர்களுள் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களை முதல்வர் என்று குறிப்பிடலாம். அவர் ஈழத்துத் தமிழினத்தின் தேசிய கவிகளின் முன்னோடியாகத் திகழ்கின்றார். இத்தகைய பெருமைக்குரிய பாவலர் தமது ஆத்ம சமர்ப்பணமாக யாத்த பிரபந்தமொன்று 'சிவமணி மாலை' என்னும் பெயருடன் அவரது ஆக்கம் எல்லாம் கொண்டு வெளிவந்திருக்கும் 'சிந்தனைச்சோலை' என்னும் நூலிலே முதலாவதாக விளங்குகின்றது. இப்பிரபந்தம் பாவலர் அவர்களது பல்வேறு ஆற்றல்களையும் இயல்புகளையும் விளக்கி நிற்கும் ஒரு பக்தி நூலாக உள்ளது.

தமிழ்மொழியிலே உள்ள பக்தி இலக்கியங்கள் பல, மாலை என்னும் பெயரையுடையன. மாணிக்கவாசகனார் 'ஆனந்த மாலை' எனப் பெயரிட்டு ஒரு பதிகம் பாடியுள்ளார். தொண்டரடிப்பொடியாழ்வாரது நூலொன்று 'திருமாலை' எனப் பெயர்கொண்டு விளங்குகின்றது. இவையன்றி 'நான்மணிமாலை', 'இரட்டைமணிமாலை' எனப் பல பிரபந்தங்கள் விளங்குகின்றன. இத்தகைய பிரபந்தங்களுள் ஈடுபாடு மிகவுடைய பாவலர் திரு. துரையப்பாபிள்ளை அவர்களும் சிவார்ப்பணமாகத் தாம் பாடிய பிரபந்தத்துக்குச் 'சிவமணிமாலை' எனப் பெயர் தந்துள்ளார். பாடல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணிபோல் ஆக அந்த மணிகளின் தொடையால் இயன்ற காரணத்தால் நூல்கள் மணிமாலை எனப் பெயரிடப்பட்டன. ஈண்டு, சிவனுக்கு அணிந்த மணிமாலை என்னும் பொருளிலே பாவலர் தமது நூலுக்குச் 'சிவமணிமாலை' எனப் பெயர் சூட்டினர் எனக் கூறலாம். மணிமாலைகள் பலவின மணிகள் கொண்டு தொடுக்கப்பட்டனவாய் அவை யாவும் ஒருமித்து ஒரு பேரெழிலை ஆக்குவனவாய் அமைதல் போலச் சிவமணிமாலையும் பல்வேறு உணர்ச்சிகள் பொருந்திய பாடல்களால் இயன்று முழுமையில் பக்தி உணர்வைப் பெருக்கி நிற்கும் ஒரு நூலாக விளங்குகின்றது.

அந்தாதி, அலங்காரம் முதலிய பிரபந்தங்களைப் போலவே, பாவலரும் தமது 'சிவமணிமாலை'யைக் கட்டளைக்கலித் துறைப் பாக்களிலே பாடியுள்ளார். ஆனால் அந்தாதி முதலியன நூறு செய்யுள்களைக் கொண்டிருக்கும் மரபையுடையனவாக, இந்தச் 'சிவமணிமாலை' தொண்ணூற்றாறு செய்யுள்களிலே நிறைவெய்துதலாகிய சிறு வேறுபாடு பெற்றுள்ளது. பாவலர் நூறு செய்யுளே செய்திருக்க, அவை பதிப்பாசிரியர் கைக்கு வரும்போது நான்கு செய்யுளாற் குறைவுற்றிருக்கலாம். அன்றி,

பாவலர் தொண்ணூற்றாறு செய்யுளைக் கொண்டே நூலை முடிவுசெய்து மிருக்கலாம். சைவசித்தாந்தம் தொண்ணூற்றாறு தத்துவங்களை எடுத்தியம்பி, அவற்றைக் கடந்து நிற்பதே சிவ பரம்பொருளாகும் எனக் காட்டுவதை உணர்ந்தே, பாவலர் ஒவ்வொரு தத்துவத்துக்கும் ஒவ்வொரு பாடலாக, தொண்ணூற்றாறு தத்துவங்களையும் குறிப்பிட அத்தொகை யளவினதாகப் பாடல் செய்திருக்கலாம் எனவும் கொள்ள இடமிருக்கிறது. 'சிவமணிமாலை' யின் இறுதிச் செய்யுளின் ஈற்றடி 'சாயுச்ய வீடுறல் நிச்சயமே' என்றமைந்திருப்பது எமது இந்தக் கருத்தை வலியுறுத்துகின்றது.

ஆரம்பகாலங்களிற் பிறமதங்களின் கொள்கைகளுக்கமைய வாழ்ந்து பின் சைவர்களாக மாறியவர்கள் தமது முன்னை வாழ்வு நிலையைக் குறித்துக் கழிவிரக்கமும், மனத்துன்பமும் உடையவர்களாய் அதற்குக் கழுவாயாகச் செயற்கருஞ் செயல்கள் புரிந்துள்ள செய்திகளை யாவரும் அறிவர். சமணசமயத்தில் இளமையைக் கழித்த திருநாவுக்கரசர் சைவராகியபின் பாடிய அருட் பாக்களிலெல்லாம் அவரது கழிவிரக்கம் காணப்படுகிறது.

"மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொழாதே..."

என்ற பாடலை முதலாகவுடைய திருவாரூர்ப் பதிகத்தின் குறிப்பெல்லாம் அப்பர் அடிகளது மனத்துன்பத்தையே வெளியிடுகின்றன. இங்ஙனம் பாடிய தோடு அமையாது அப்பர் அடிகள் சமண சமயந் தழுவியமையாலே தமது சரீரம் புனிதங் கெட்டதெனக் கருதி அம்மானை போக்கித் தம் உடம்பைத் தூய்மைசெய்ய இறைவனிடம் பரிந்து கேட்டு அவனுல் இடப சூலக் குறிகளைத் தம்மேனிமேற் பொறிப்பித்துக் கொண்டமையையும் நாம் அறிவோம். கிறித்தவராகி வாழ்ந்த காலத்திற் செய்த சிவநிந்தனைக்காக வருந்திய கறல் விசுவநாதபிள்ளையவர்கள் சைவராக மாறியபோது சிதம்பர தலத்திற்குச் சென்று பொன்னாசி காய்ச்சித் தம் நாவைச் சுட்டுக்கொண்டார் என்ற செய்தியும் அவரது கழிவிரக்க நிகழ்ச்சியேயாகும். பாவலர் திரு. துரையப்பாபிள்ளையவர்கள் மேற் காட்டப்பட்டுள்ள செயல்களைச் செய்திலராயினும் தமது பரசமய வாழ்வு குறித்து மிக மிக மனம் நொந்தார்கள்; பச்சாத்தாபமடைந்தார்கள்; நினைந்து நினைந்து உருகினர்கள். இந்தவித மனோநிலையிற் பிறந்த உணர்ச்சிப் பெருக்கே 'சிவமணிமாலை'ப் பிரபந்தமாக உருப்பெற்றதென்னலாம். இக்கருத்துக்கு ஆதாரமாக,

"..... உன் அற்புத ஆனந்தத் தன்மைபெறு
தீனப் பவங்களு ளாழ்ந்தேன் ....",

"புன்மை யெனுநெறி மீதினில் யான்செலும்
போக்கொழித்து
நின்மய மாக்கு ... ..."

என்னும் இவையும், இவைபோன்ற பல செய்யுள்களும் 'சிவமணிமாலை'யினகத்தேயுள்ளன. பரசமய வாழ்வினுற் புனிதங் கெட நின்ற தம்மைத் தேசுபெற்ற தூயவனாகும் வண்ணம் அருள்புரிய வேண்டுகின்றார் மற்றொரு பாடலிலே.

"ஆரும் வியக்கு மரிய
மனத்தைநின் ஆரணங்கள்
தேரவும் நின்னை வணங்கவும்
மாநலஞ் செய்யவுமாங்
காரண மாய்த்தந் தனைபர
னேயதைக் கன்மவினை
சேரும்வித் தாக்கினன் ஆள்வா
யெனைத்துய்ய தேசுறவே."

என்பது அப்பாடல். இவற்றுல், பாவலர் உணர்வினின்று 'சிவமணிமாலை'ப் பிரபந்தம் உதயமானதற்காகிய காரணத்தை நாம் ஒருவாறு ஊகித்துரைக்கலாம்.

பாவலரது கவிபுனையும் ஆற்றல் ஆரம்பகாலத்திலே கீர்த்தனங்கள் புனைவதிலேயே சிறந்து விளங்கிற்று. அவரது முதனூலாகிய "இதோபதேச கீதரச மஞ்சரி" கீர்த்தனங்களின் தொகுப்பே யாகும். ஆனுல், அக்கீர்த்தனம் ஒவ்வொன்றினதும் தொடக்கத்திலே, பாவினங்களில் ஒவ்வொன்றைக் கீர்த்தனப் பொருளின் சுருக்கமாகப் பாவலர் அமைத்துள்ளார். இந்தப் பாவினங்கள் பாவலரது செய்யு

ளியற்றுந் திறத்தையுங் காட்டி நிற்கின்றன. ஆயினும், அவரது அந்தத் திறமையின் முழுமையைச் 'சிவமணிமாலை'யிலேயே நாம் காண்கின்றோம். தனித்தனி பொருள்மேற் பாடப்படும் கீர்த்தனங்கள் போலன்றி, ஒரு பொருள்மேற் பல செய்யுள்கள் தொடர்பாக அமைக்கும் காவியப் படைப்பாற்றலும் பாவலர்க்குண்டென்பதற்குச் சான்று பகர்வது 'சிவமணிமாலை'யே. முத்தமிழும் பாவலர் கைவரப் பெற்றவர் என்பதை அவரது படைப்புக்கள் அடங்கிய 'சிந்தனைச்சோலை' உணர்த்த, அதனுள் இயற்றமிழ்த் திறமையை எடுத்தியம்பிப் பெருமை தருகிறது 'சிவமணிமாலை'.

பாவலர் அவர்கள் கிறித்து மதத்தினின்று சைவராக மாறியதும் சைவ சமயத்து உண்மைகளையெல்லாம் தெளிவு பெற உணரவேண்டுமென்ற தாகம் அவருக்கு நிறைய இருந்தது. அவரது சுகுணங்களில் ஈடுபாடுடைய பெரியார் பலர் அவரை நாடி வருவது வழக்கமாயிருந்தது. பன்னூலைப் பதியில் வாழ்ந்த வித்துவான் பிரமஸ்ரீ சிவானந்தையரும், பிரமஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக் குருக்களும் பாவலரை நாடி அடிக்கடி வந்தார்கள். மகாவித்துவான் பிரமஸ்ரீ கணேசையரும் வந்து பாவலரது படைப்புக்களையும், சேவைகளையும் பார்த்துப் பாராட்டினார்கள். இந்த வித்துவான்களது தொடர்பு பாவலருக்குக் கிடைத்தற்கரிய பெரும் பேறுயிற்று. சைவ சித்தாந்தத் தெளிவு பெறவும், சொற்சுவை, பொருட்சுவை மிக்க செய்யுள்களாக்கும் திறமை பெறவும் இவர்கள் பாவலருக்குப் பெரிதும் உதவினார்கள். ஐசக் தம்பையா என்ற பெரியார் தாயுமான சுவாமிகள் பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்கள். அவர்களது இந்த முயற்சியில் பாவலரும் கலந்து உதவி புரிந்தார்கள். இவ்வாற்றூற் பிள்ளையவர்களுக்குச் சைவத்தெளிவு நிரம்பியது; அத் தெளிவின் வெளிப்பாடு பிள்ளையவர்களது 'சிவமணிமாலை'யிலே நன்கு தெளிந்து கிடக்கிறது.

'சிவமணிமாலை' பத்தி உணர்ச்சிப் பிரபந்தமாக இருப்பினும் உணர்ச்சி வெளிப்பாடு பாடல்தோறும் ஒழுங்காக உயர்ந்து செல்லவில்லை. மணிவாசகனாரின் நீத்தல் விண்ணப்பம், அப்பர் சுவாமிகளது பாடல்கள் ஆகியவையெல்லாம் உணர்ச்சி படிப்படியாக உயர்ந்தோங்கிச் சென்று முடிவுற்றிருக்கும் அமைப்பை உடையன. பாவலரது 'சிவமணிமாலை'யில் அத்தன்மை அமையாதமையை நோக்கும்போது அவர் ஒரே தொடர்பாக அமர்ந்திருந்து இந்நூலைப் பாடவில்லை என்பது தெரிகிறது. அவ்வப்போது ஓய்வுள்ள நேரமெல்லாம் பாடி நூலை முடிவு செய்திருக்கின்றார் பாவலர். இங்ஙனமாயினும், கூறியது கூறல் முதலாம் குற்றங்களின்றி நூல் சிறப்புற முடிந்திருக்கின்றமை பாவலரது மன ஒருமையை நன்கு உணர்த்துகின்றது.

பிரபஞ்ச மாயையில் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வு வேட்டலையே இந்நூல் பொருளாகக் கொண்டுள்ளது. பாவலர் அவர்களுக்கு, பட்டினத்தார் பாடல், கந்தர் அலங்காரம், அப்பர் சுவாமிகளின் தேவாரப் பகுதிகள் ஆகிய நூல்களிலே நல்லாட்சியும் பயிற்சியுமுண்டென்பதைச் 'சிவமணிமாலை'யைப் படிப்பவர்கள் நன்குணர்வர். மேற்காட்டிய நூல்கள் திருவருள் வேட்டலையும், நிலையாமையையும் பொருளாகக் கொண்டு கட்டளைக்கலித்துறையாப்பில் இயன்றுள்ளன. அந்தப் பொருளை அந்த யாப்பிலே பாட முனைந்த பாவலரது பாடல்களும் அந்தப் பாடல்களின் சாயல் பெற்று நடப்பது இயல்பேயாகும். சிற்சில பாடல்கள் மேற்காட்டிய நூல்களின் செய்யுள் வரிகளையும் பொருளையும் அப்படியே அடியொற்றி நடந்திருப்பதையும் 'சிவமணிமாலை'யிலே நாம் காணலாம்.

"நோயென்ன செய்யுந் தரித்திர
மென்செயும் நூறெனுமெண்
ணெய்வரு மின்னல் எனையென்ன
செய்யு மறிமனமே
சேயனின் மேற்கரு ணைநிதி
யாய சிவபெருமான்
நேயமென் னெஞ்சில் நிறைந்தெந்த
நாளும் நிலைத்திடவே."

(சிவ. மாலை 16)

என்ற 'சிவமணிமாலை'ப் பாடலைப் படிக்கும் போது,

"நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த..."

என்ற கந்தரலங்காரப் பாடல் நினைவூட்டப் படுகின்றது.

"நாளுந் தொலைந்து பெலமுங்
குறைந்து நலிவடைந்து
மாளுஞ் சமய மெனக்குமுன்
தோன்றி மறுபிறப்பை
ஆளும் பலத்தை அருளியென்
சீவ னகன்றபின்னர்
நீளும் சுகாநந்தம் நீயருள்
வாய்சிவ நின்மலனே"

(சிவ. மாலை 13)

என்ற பாடல்,

"ஐயுந் தொடர்ந்து விழியுஞ்
செருகி அறிவழிந்து..."

என்று தொடங்கும் பட்டினத்தார் பாட லின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது.

"தாயு மெனைக்கை விடுவாள்சிற்
போதுநற் றண்ணளிசேர்
நேய மிகுந்தந்தை யுங்கை
விடுவாரிந் நீணிலத்தில்
ஆய சிநேகருங் கைவிடு
வாரய லாரகல்வார்
தூய சிவபெரு மானே
நிதமுந் துணையெனக்கே."

(சிவ. மாலை 20)

என்ற பாடல்,

"என்பெற்ற தாயரு மென்னைப்
பிணமென் றிகழ்ந்துவிட்டார்..."

என்ற பட்டினத்தார் பாடலின் சாயலைப் பெற்று நடக்கின்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் திருவங்கமாலைப் பதிகத்திலே தமது உடல் உறுப்பு ஒவ்வொன்றும் சிவ தொண்டுக்காகவே பயன்படவேண்டும் என வேண்டும் முறையைப் போலவே, பாவலர் அவர்களும் தமது உறுப்புக்களின் பயன் சிவதொண்டில் ஈடுபடுதலேயென, அத் தொண்டுகளைச் சிறிது விரித்துக் காட்டு கின்றார். 'சிவமணிமாலை'யின் 80, 81, 82, 83ஆம் பாடல்கள் முறையே தேகம், கண், கை, கால் என்ற உறுப்புக்களின் பயன் பற்றி எடுத்துக் கூறுகின்றன. எடுத்துக் காட்டாக ஒரு செய்யுளைக் காண்க:

"கைகளைத் தந்தனை கூப்பவும்
சேர்த்த கடிமலரால்
வைகலும் நின்னை வணங்கவுந்
தர்மம் வழங்கவுமே
மெய்கருத் தோடுயர் ஆன்மாவைக்
கேட்டுள் மிகப்படுத்தும்
செய்கை நிதம்புரிந் தேனெனைக்
காபவந் தீர்ப்பவனே."

சில திருமுறைப்பாடல்களின் பொருளை முழுமையும் சுவீகரித்துக்கொண்டு அப் பொருள் தமது பாடலில் மிகப் புதுமையும் எளிமையு மமையுமாறு அமைத்துவிட்டார் பாவலர். உதாரணமாக,

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."

என்ற திருமந்திரப் பாடல் குறிப்பால் உணர்த்தும் பொருள்,

"தருமஞ் சிறிதெனி னுஞ்செய்ய
வேதுந் தருணமிலார்
அருமன்பு செய்ய அநேக
வழியுள ஆக்களுக்குத்
தருமொரு கைப்பிடி புல்லேனு
மிட்டுத் தயைமொழிகள்
வருமெவ ருக்கும் வழங்கிடு
வாரருள் வாய்ந்தவரே."

எனப் பாவலரது செய்யுளிலே தெளிவுறு மாறு வெளிப்பட்டு நின்று சிறக்கின்றது. திருஞானசம்பந்தரது தேவாரங்களில் உள்ள தொடர்களும் பொருளும் 'சிவமணி மாலை'யில் காணப்படுகின்றமையையும், இங்கு எடுத்துக் காட்டலாம்.

"செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே"

என்ற தேவாரத் தொடரின் பொருள்,

" ....
என்றும் நிலைந்து சிவநேச மென்னும்
இருநிதியம்
ஒன்றே மெய்ச்செல்வம்....."

(சிவ. மாலை 31)

என்ற பாடலும்,

" ..அவை நல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே"

என்ற கோளறுபதிகப் பொருள்,

" அருள் கிடைத்தால் வேளை யெதுவுஞ் சரி"

என்ற பாடலிலும் அமைந்துள்ளன.

இவ்வாறு 'சிவமணிமாலை' பெரியார்களது கொள்கைகளையும், சொல், பொருள் ஆகியவற்றையும் தாங்கி நிற்றலோடமையாது, பஞ்சமா பாதகங்களின் இழிவும், பலியிடல், நாத்திகம் பேசுதல், வீண் செலவு, போதைப்பொருள் கொள்ளல் ஆகிய செயல்களின் தகவின்மையும் பற்றி எளிமையான செஞ்சொற்களால் கண்டனமுஞ் செய்கின்றது.

" கள்ளே கதியென் றிராப்பக
லாயதைக் காதலுடன்
உள்ளே செலுத்தி யுளந்தடு
மாறி யுலைந்துநிதம்
சள்ளே புரிகின்ற மூடர்முன்
மாதிரி தாரணியில்
கொள்ளேன் மதுச்சிறி தும்பரு
கேனென் குருபரனே."

என்ற பாடல் மதுவினால் வருந் தீமையையும், அதைத் தீண்டலாகாது என்னும் உறுதியையும் எவ்வளவு எளிமையாக உணர்த்துகிறதென்பதைக் காண்க. இது போன்ற பாடலெல்லாம் பாவலர் அவர்கள் இறைவனை நோக்கி வேண்டுதல் செய்வதாக அமைந்துள்ளன. இந்த அமைப்பின் மூலம், இப்பாடல்களை மனனஞ் செய்து ஓதுபவர்களுக்கும் இறையருள் கிடைக்கும் வண்ணம் பாவலர் செய்துள்ளார். எனவே, 'சிவமணிமாலை' ஓதுபவர்களுக்கும் பத்தியுணர்வும் பயனும் நல்கும் நூலாக விளங்குகின்ற தெனலாம்.

இந்நூல், முன்னர் யாம் கூறியது போல் பாவலரது ஆத்ம சமர்ப்பணமாக அமைந்துள்ளது; உணர்ச்சியோடு பாடப் பட்டது. எனவே, அநாயாசமாகப் பொருள்செறிந்த சொற்களும், அணிகளும் செய்யுள்களில் விளங்கி நிற்கின்றன. ஒருவரது பாப்புனையும் ஆற்றலை அவர் கையாண்டுள்ள பொருத்தமான உவமைகளைக் கொண்டு அளவிடலாம். இந்நூலிலே பல உவமைகள் வருகின்றன. அவை சொல்லப் பட்ட முறையிலும், எடுத்த பொருளை விளக்கும் முறையிலும் புதுமையாக உள்ளன. புவியிலிருந்து இறைவனுக்கு நாம் கூறும் விண்ணப்பம் 'மண்ணையும் விண்ணையுங் கட்டும் பொன்னுண்' என்ற உவமையினால் விளக்கம் பெறுகிறது. (சிவ. மாலை 86) கடவுள் கருணையிலே உயிர் தங்கியிருத்தல் 'தாருவைப் பற்றுங்கிளை' (சிவ. மாலை 10) என்று உவமிக்கப்படுகின்றது.

" நித்திலத்துக் கீடு சொலும் புத்திரர்" (33)
" எள்ளுக்கு ளெண்ணெய்" (63)
" மோதுவளி" (94)

ஆகிய இவையெல்லாம் பாவலர் கையாண்ட உவமைத் தொடர்கள். இவற்றின் இனிமை பாடலை முழுமையாகப் படிக்கும்போது மிக இன்பந் தருகிறது; உவமையேயன்றி உருவக அணிகளும் காணப்படுகின்றன.

" ஐம்புல னுற்றங்கரை மரம்" (5)

என்பது உருவக அணிக்கு ஓர் உதாரணமாகும். இவ்வாறு 'வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்' என்ற இலக்கணநூல் மேற்கோட்கு அமையப் பாவலரது 'சிவமணிமாலை'யும் சிறப்பெய்தி நிற்கின்றது.

இன்னும், இச் 'சிவமணிமாலை'யிலே சைவசித்தாந்தத்து உண்மைகளும், திருக்குறள், நாலடியார் முதலாம் நீதி நூல்கள் காட்டும் நன்னெறிகளும் ஆங்காங்கு பரந்து காணப்படுகின்றன.

" பொற்பு மிகுஞ்சிவ புண்ணியஞ்
செய்யும் பொழுதுமென
தற்பு நிறையு மரும்பத்தி
தன்னையும் ஆணவமாம்
துர்ப்பல மொட்டிக் கெடுத்திடு
தேயுன்றன் தூயவருள்
சிற்பர னேதந்து காப்பாய்மெய்ப்
புண்ணியஞ் செய்திடவே."

(சிவ. மாலை 23)

என்ற செய்யுளில் ஆணவத்தியல்பு ஓரளவு விளக்கமுறுதலைக் காண்கிறோம்.

வடமொழிப் பிரயோகம் இச் 'சிவமணி மாலை'யில் நிறைந்து காணப்படுகின்றது. பாவலரது காலம் வடமொழி தென்மொழி எனப் பேதங் காணுத தமிழ்நடை பயின்ற காலமாகும். வட எழுத்துக்களை நீக்கியே பண்டை யிலக்கியங்கள் பயின்றிருக்க, அருணகிரிநாதர் தமது திருப்புகழிலும், கந்தரலங்காரத்திலும் அந்நியதியின் நீங்கி வடசொற்களையும் எழுத்துக்களையும் தம் எண்ணப்படியே கலந்து விட்டார். அலங் காரம் போன்று கட்டளைக்கலித்துறை யாப்பிலே கடவுளுக்குச் சமர்ப்பித்த தமது 'சிவமணிமாலை'யிலும் பாவலரவர்கள் வட சொற் பிரயோகத்தைத் தயங்காது செய் துள்ளார்கள். இஃதேயன்றி, கிறித்தவத் தமிழிலக்கியங்களிற் காணப்படும் சொல் லமைப்புக்களும் இம்மாலையில் இடம் பெற்றுள்ளன. சிவபாஸ்கரன், சாயுச்யம், மனுஷர், ஞானவரோதயவீஸ்வரன், கர்த்தன், விசுவசித்தல், துர்ச்சிந்தை ஆகிய சொல்லமைப்புக்கள் இப்பந்தியில் யாம் கூறியவற்றுக்கு உதாரணங்களாகும். இப்பிரயோகங்கள் சந்த இசைவு நோக்கி யும், இனிய ஓசை பயக்கும் என்று கருதியும் அமைக்கப்பட்டன போலும்.

பாவலர் தமது ஆத்மாவின் தூய் மைக்காக, கடவுளை வேண்டிப் பாடிய இந் நூல், பயில்வாருக்கும் அத்தகைய தூய்மை நிலையையும் பத்தி உணர்வையும் நல்கும் ஒரு தோத்திர நூலாகும் எனலாம். இறு திச் செய்யுளிலே பாவலரவர்கள் இந்நூற் பயனின்னதுதான் என்று தெளிவு பெற்ற உள்ளத்துடன் கூறியிருப்பதும் எம் முடிவுக் கோர் ஆதாரமாகும். அதனை இங்கு காண்க :

" பலமே வியநித்தி யானந்த
மூர்த்தியைப் பாசமதில்
அலையா தெனைத் தடுத் தாள்குரு
நாதனை அன்புருவ
நலமார் சிவாலய வாசனை
யர்ச்சிக்கி னொடொறும்நாம்
நிலையா கியவுயர் சாயுச்ய
வீடுறல் நிச்சயமே."

(சிவ. மாலை 96)

இராமநாதன் கல்லூரி வாழ்த்து

இலங்கைத் தமிழர் சிரமேனல் வாணி யெழிலம்சமே
நலங்கிள ருங்கௌ ரவராம நாத நரேந்திரனே
பலங்கிள ரிந்துநற் பெண்கள்கல் லூரி பரிந்தளித்தீர்
பொலன்கொளச் சாலைக்கு நேரோ வளக புரிநகரே.

பாட்டலங் காரம் சுவைகல்வி கற்றிடு பாவையரே
வீட்டலங் காரம் மதியலங் காரம் விசும்பினுக்கு
நீட்டலங் காரம் பயோததிக் கேயெழில் நீடுமியாழ்
நாட்டலங் காரஞ் சிறீராம நாதன் கலாநகரே.

பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

கு. பாலசிங்கம், C. C. S.
முன்னாள் நிரந்தரச் செயலாளர்
சுகாதார அமைச்சு

மகாஜனக் கல்லூரியை நிறுவிய தெ. அ. துரையப்பாபிள்ளை

இற்றைக்கு நூறு ஆண்டுகட்குமுன் தோன்றிய திரு. துரையப்பாபிள்ளை அவர்களை நினைவுகூர்தற்கு அவர் நிறுவிய மகாஜனக் கல்லூரி ஒன்றே போதியதாகும். எந்தக்காலத்திலும், எந்தத் தேசத்திலும் மக்கட்குக் கல்வியை ஊட்டுவது பெரும் சேவையாகக் கொள்ளப்படுகின்றது. எல்லோருக்கும் இலவசக்கல்வி கிடைக்கும் இவ்வேளையில் நாம் பாடசாலைகள் நிறுவுதலின் முக்கியத்துவத்தை அதிகம் பாராட்டுவதில்லை. ஆனால் சமய மாற்றத்துக்கு உதவு கருவிகளாகப் பாடாசாலைகள் ஐம்பது வருடங்கட்கு முன்னும் உபயோகிக்கப்பட்டன என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆசிரியர்களுக்கு இன்னும் போதிய வேதனம் இல்லை என்ற முறைப்பாடு யாவரும் அறிந்ததே. மாணவர்கள் கொடுக்கும் பள்ளிக்கூடச் சம்பளம், அக்காலத்து ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த வேதனம் கொடுப்பதற்கும் போதாமையாற் பள்ளிக்கூட முகாமையாளர் ஒவ்வொரு மாதத்திலும் பெருந்தொகையான பணம் செலவிட நேர்ந்தது. இது கிறீஸ்தவ மிஷனரிமார்களுக்கே முடியும். நாவலர் முயற்சியினற் தொடங்கப்பட்ட இந்துமதப் பாடசாலைகள் ஒரு சிலவே இருந்தன. அவற்றை நடத்துவதும் மிகவும் கடினமாகவே இருந்தது. இந்தச் சூழ்நிலையிலேதான் 1910ஆம் ஆண்டு துரையப்பாபிள்ளை அவர்கள் தெல்லிப்பளையில் வாழும் மக்களுக்குச் சைவப்பள்ளிக்கூடத்தைத் தோற்றுவித்தார். இப் பகீரதப் பிரயத்தனம், தன்னம்பிக்கையும், உற்சாகமும், விடாமுயற்சியும் பெரிதும் நிறைந்த பெருமகனுகிய துரையப்பாபிள்ளை அவர்களால் வெற்றிகரமாகவே நிறைவேறியது.

துரையப்பாபிள்ளை அவர்கள் மனதில் தமது குறிக்கோள் சாத்தியமானது எனும் நம்பிக்கை ஊன்றி இருந்தது. ஆகையால் தான் தம்முடன் மிஷனரிகளுடைய பாடசாலையில் படிப்பித்த சில ஆசிரியர்களையும் சில மாணவர்களையும்கூட அழைத்துச் செல்ல முடிந்தது. பாடசாலை நடத்துவதற்கு இடம் ஒன்று வேண்டுமே, தமது வீட்டில் ஒரு பாகத்தைப் பள்ளிக்கூடமாக மாற்றினார் திரு. துரையப்பாபிள்ளை. எந்தக் கஷ்டத்தையும் ஒழித்து வெற்றி காண்பேன் என்ற நம்பிக்கை அவரிடம் இல்லாவிட்டால் இப்பெரு முயற்சியில் இறங்கி இருக்கவே மாட்டார். பாடசாலை நடத்துவதில் இருக்கும் கஷ்டங்களை அவர் அறியாதவரல்ல. ஆசிரியராகப் பாணந்துறையிலும், பின்னர் கோலாப்பூர், பெல்காம் முதலிய மகாராஷ்டிரப் பட்டணங்களிலும், மிஷனரிப் பள்ளிக்கூடங்களிலும் கடமையாற்றிய அவருக்கு மிஷனரிகள் கைவசம் உள்ள பெருந்தனத்தின் இன்றியமையாமை நன்கு தெரியும். அதுபோலவே தம்முடன் இருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் சமயத்துக்கும், சமுதாயத்துக்கும், கல்விக்குமாக எந்தத் தியாகமும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்பதையும் அறிந்திருந்தார். இவர்களுக்கு வழிகாட்டும் தலைவராக நின்று பல கஷ்டங்களை ஏற்று வெற்றி கண்டார். வெள்ளம் அழித்த கட்டடத்தைக் கட்டி அதே இடத்தில் பள்ளிக்கூடம் மறுபடியும் நடத்தினர். அரசினர் அனுமதி பெறுவதற்கு இருந்த எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாது வெற்றி பெறும்வரை அயராது உழைத்தார்.

1924ஆம் ஆண்டு தான் ஆங்கிலம் பயில்வதற்குச் சென்று கண்ட ஒரு மண்டபமும், மூன்று அறைகளும் கொண்ட மகாஜனப் பள்ளிக்கூடம் என்றும் என் நினைவில் இருக்கும். அதுபோலவே மண்டபத்தில் ஒரு பெரிய மேசையின் பின்னே மூடிய கோட்டும் தலைப்பாகையும் அணிந்து கொலு வீற்றிருக்கும் தலைமை ஆசிரியர் திரு. துரையப்பாபிள்ளையும் என் நினைவில் என்றும் இருப்பார். இன்று பழைய மகாஜனப் பள்ளிக்கூடம் மறைந்து இரண்டு மாடிகள் கொண்ட பெரிய கட்டடமும் வேறுபல கட்டடங்களும் கொண்டு இலங்கை முழுவதும் பிரசித்திபெற்ற முதலாந்தர மகாஜனக் கல்லூரி எங்களுக்குக் காட்சி அளிக்கின்றது. இவையாவும் திரு. துரையப்பாபிள்ளையின் மகனுகிய திரு. ஐயரத்தினமவர்களின் முயற்சியினால் எழுந்தவை. ஆனால் ஆதியில் திரு. துரையப்பாபிள்ளை ஒரு உயர்ந்த குறிக்கோளைக் கொண்டு இப் பள்ளிக்கூடத்தைத் தொடங்கியமையால் தான் அது இத்துணை சிறப்புடன் இன்று திகழ்கின்றது. ஸ்தாபகர் அவர்களது முயற்சியும், நம்பிக்கையும், தயாளகுணமும் இங்கு கற்கும் மாணவர்களுக்கு ஒரு அரிய உதாரணமாக விளங்குவதாக.

பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை
முன்னாள் தலைமையாசிரியர்
சேர் கனகசபை வித்தியாலயம்

இனிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

நீண்டதொரு வரிசை நிற்கிறது. உப்புப் புளிக்காக உழலும் மனிதரது வாடையே வீசாத வரிசையது. அந்த வரிசையிலே நிற்பவை யத்தனையும் சொற்கள். ஆம்! பதங்கள்தான் வரிசையாக நின்று பரிதாபகரமாகக் கெஞ்சுகின்றன; ''எனை வைத்தி! எனை வைத்தி!'' என இடையிடையே நின்றிரந்து வேண்டுகின்றன. ஏடும் எழுத்தாணியும் ஏந்திய கையராய் மகாவித்துவான் ஒருவர் வீற்றிருக்கிறார். தம்மைப் பார்த்துப் பல்லிளிக்கும் பதங்களை நோக்கி ''இனிவைப்பாம்! இனிவைப்பாம்! பொறுத்திடுமின்! பொறுத்திடுமின்!'' என்று கையமர்த்திவிட்டு, ஒரு க்ஷணப் போதுக்குள் அளவிலாத கவிதைகளை எழுதிக் குவித்து விடுகிறார் அவர். மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையின் கவித்துவத்திலீடுபட்ட கவிஞர் ஒருவரின் கற்பனைதான் இது.

''எனைவைத்தி எனைவைத்தி எனப்பதங்கள்
இடையிடைநின் றிரந்து வேண்ட
இனிவைப்பாம் இனிவைப்பாம் பொறுத்திடுமின்
பொறுத்திடுமின் என்று கூறி
நினைவுற்ற ஒருகடிகைக் களவில்கவித்
தொடைதொடுத்து நிமலர் பூணப்
புனைவுற்ற மீனாக்ஷி சுந்தரவள்
ளலைப்போல்வார் புவியில் யாரே.''

துரையப்பா பிள்ளையை நினைக்கும் போதெல்லாம் இந்தப் பாடல் எனது நினைவுக்கு வருவதுண்டு. பிள்ளையவர்களது பாடல்களைப் படித்தவர்களுக்கு ''எனை வைத்தி! எனைவைத்தி!'' என இரந்து வேண்டித்தான் பதங்கள் அவர் பாடல்களிலே இடம் பிடித்தனவோ என்று எண்ணத் தோன்றுவதில் வியப்பில்லை.

இன்றைய கவிஞர்கள்(!) கவிதை என்ற பெயரிலே படைத்துவிடும் பாலியில், நின்று. நிதானித்து, உலவ முடியாது திணறுவோருக்குச் 'சிந்தனைச் சோலை' எத்தகைய சுகமளிக்கும் என்பதைச் சொல்லித் தெரியவைக்க முடியாது; சுவைத்துத்தான் புரிந்து கொள்ள வேண்டும். பிள்ளையவர்கள் இயற்றிய கவிதைகளுள் என்னை மிகக் கவர்ந்தவை 'கீதரஸ மஞ்சரி'ப் பாக்கள். ஒவ்வொரு பதமும் ஒவ்வொரு நீதிமொழியைப் பொருளாகக் கொண்டவை. அந்தக் காலத்திலே இளைஞர் முதல் முதியோர் வரை ஒவ்வொருவர் வாயிலும் ஒலித்துக் கொண்டிருந்தவை. ஒருவகையில் எனக்கும் அவருக்குமிடையிற் பிணைப்பு ஏற்படக் காரணமானவையும் இந்தப் பாக்கள்தான்.

நாவலர் காவிய பாடசாலையிலே சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவரவர்களிடம் நான் பாடங்கேட்டு வந்த சமயமது. வாரத்தின் முதல்நாளிலே நாவலர் பாடசாலைக்குச் சென்றால் வாரத்தின் இறுதி நாளிலேதான் திரும்புவது வழக்கம். செல்லும்போதும் திரும்பும் போதும் நடைதான். தெல்லிப்பளைச் சந்திக்கு அண்மையிலே — தமது வீட்டின் தலைவாயிலிலே—பிள்ளையவர்கள் நிற்பார்கள். யான் அவரிடம் படித்ததோ அதற்கு முன் பழகியதோ கிடையாது. இருப்பினும் ஏனோ என்மீது அவருக்குத் தனியானதொரு அன்பு. சற்று நேரம் உரையாடிய பின்தான் மேலே செல்ல அனுமதிப்பார். சம்பாஷணை அநேகமாக அவ்வப்போது அவரியற்றிய புதிய பாடல்களைப்பற்றியதாகத் தானிருக்கும். தாமியற்றிய கவிதைகளைச் சொல்லி அதன் மெட்டையும் பாடிக் காண்பித்துவிட்டுப் பதினாறு வயசுப் பையனை என்னைப் படிக்கச் செய்து கேட்பதில்

அவருக்குத் தணியாத ஆவல். தமது புதிய கவிதைகளை வீழாக்களிலே அரங்கேற்ற நேரும் போதெல்லாம் நான்தான் அவைகளைப் படிக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தியதால், விழாக்கள் சிலவற்றில் அவர் கவிதைகளை நான் படித்ததுண்டு. விழா ஆரம்பிப்பதற்குச் சிலமணி நேரத்துக்கு முன்பாகப் பலமுறை ஒத்திகை பார்த்துக்கொள்வதென்பது அவருடைய வழக்கமான பழக்கம். தமது பாணியிற் கவிதை பாடப்படுகின்றதென்ற திருப்தி ஏற்படும்வரை அவர் ஓயவே மாட்டார்.

பிள்ளையவர்களின் பதங்களைப் படிக்கும்போது அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து நினைவிற்கு வராமற் போகாது. அத்துணை எதுகை மோனைச் சிறப்பு மிக்கவை அவை.

"**காகம்** பண்ணி **காரம்** — ஓர் துண்டைக்
கவ்வி மிகு **சோரம்**
ஆகக் கொஞ்ச **நேரம்** — மரமொன்றில்
ஆற அதன் **பாரம்**
சோகமுறும் நரியொன்றின் கண்ணிற் படச்
சூழ்ந்து முகஸ்துதி அந்நரி செய்**திடக்**
காகம் பெருமையுற்றே சத்தம் **பண்ணிடக்**
கவ்வுண்ட துண்டதன் வாயினின்றுங் **கெடக்**
கண்டதேநரி **துண்டதை** எடுத்
துண்டதேஎன்றுபண்டைக்கதைஉண்டு."*

என்பது போன்ற எத்தனையோ பகுதிகளை உதாரணத்திற்கு எடுத்துக்காட்டலாம். ஆனால் இது வெறுங் கட்டுரையாயிற்றே. பாவலரின் பாணியிற் பாடிக்காட்ட முடியாதபோது, எடுத்துக்காட்டி என்ன பயன் என்ற ஆதங்கந்தான் ஏற்படுகிறது.

'சிந்தனைச் சோலை'யில் இடம் பெறும் "நூலாசிரியர் வரலாறு" என்ற கட்டுரையிலே பிள்ளையவர்களது வாழ்க்கை, தொண்டு, கவிதைகள், சீர்திருத்தக் கருத்துக்கள், கவிதாசக்தி என்பவற்றைப் பற்றிய எனது கண்ணோட்டத்தைத் தெளிவு படுத்திவிட்டேன். அதே நூலின் இணைப்பு மலரிலே யான் அவர் பேரிற் சொன்ன பாடல்கள் சிலவற்றை இணைத்துள்ளார்கள். அங்கும் பிள்ளையவர்களைப்பற்றி என் மனசிலே பசுமையாகப் பதிந்திருந்தனவற்றையெல்லாம் சொல்லியிருக்கின்றேன். இத்தனைக்கும் மேலே சொல்வதற்கு ஒன்றே ஒன்றுதான் எஞ்சியிருந்தது. பிள்ளையவர்களின் கவிதைகளைத் தமிழுலகம் தக்கபடி மதித்து வரவேற்கவில்லையே என்ற குறைதான் அது.

அண்மையில், கொழும்புப் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து என்னைச் சந்திக்க வந்ததாகக் கூறிய ஒருவர் துரையப்பாபிள்ளை பற்றிய விபரங்களைக் கேட்டார். எனக்கு வியப்பாக இருந்தது. துரையப்பாபிள்ளை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவதற்காகவே விபரங்கள் தேவைப்படுவதாக வந்தவர் தெரிவித்தார். கண்கெட்ட பிறகு தான் சூரிய நமஸ்காரமா? என்று கேட்கத் தோன்றினாலும் துரையப்பாபிள்ளையின் உழைப்பு வீண்போகவில்லை; போகாது என்ற மகிழ்வும் பிறக்கத்தான் செய்தது. எனது மகிழ்வு எத்தகையதென்பதைத் துரையப்பாபிள்ளையோடு நேரிலே பழகியவர்கள்தான் உணர்ந்துகொள்ள முடியும்: இனிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

"அறமேய குருவென்கோ அன்றமரர் கடைந்
அமிர்த மென்ன [தெடுத்த
நறவார்ந்த கவிபாடுங் கவியென்கோ வந்தடுத்த
நன்மா ணாக்கர்க்
குறவான இருள்நீக்கு முதயசூ ரியனென்கோ
உலகி லென்றும்
இறவாத புகழுடைய துரையப்ப பிள்ளையுனை
யென்சொல் கேனே."

*"முகஸ்துதிக்குக் காது கொடாதே" என்ற உசேனி இராகப் பாடலின் ஒரு பகுதி.

இரசிகமணி
இலக்கியச்செல்வர்
கனக. செந்திநாதன்

சிந்தனைச் சோலையுள் சிவமணி மாலை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்குப் பின் தமிழ், சைவம், பண்பாடு என்பவற்றை வளர்த்த ஒருசிலருள், மகாஜனக் கல்லூரி என்ற கற்பகதருவைத் தந்து பொதுப் பணிகள் பலவற்றுள் ஈடுபட்ட பாவலர் துரையப்பாபிள்ளையவர்களும் குறிப்பிடப் படக் கூடிய ஒருவராவர். அவரது கவிதை நூல் 'சிந்தனைச் சோலை' என்பதாகும்.

துரையப்பா பிள்ளை அவர்களின் 'சிந்தனைச்சோலை' என்ற கவிதை நூலிலே— பக்திரசம் ததும்பும் 'சிவமணிமாலை', படிக்கும் தோறும் தெவிட்டாத 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி', சீர்திருத்தக் கருத்துக்களை அழுத்திக் கூறும் 'எங்கள் தேசநிலை', அறிவுரை பகர்ந்திடும் 'இதோபதேச கீதரச மஞ்சரி', பல தனிப் பாடல்கள், நல்ல நாடகமாகிய 'சகலகுணசம்பன்னன்' என்ற — ஆறு முக்கிய பகுதிகள் அடங்கி இருக்கின்றன.

துரையப்பாபிள்ளை அவர்களின் கவிதை ஆற்றலை விளக்க இவற்றுள் எதையும் குறிப் பிட்டுக் காட்டலாம். எல்லாமே எழுதக் கூடிய விடயங்கள்தாம். எனினும் சுருக்க மாகிய ஒரு கட்டுரைக்கு ஒரு பகுதியைப் பற்றி எழுதினாலே போதும்.

ஆம். எல்லாவற்றையும் பற்றி எழுதா மல் 'சிவமணிமாலை' என்ற பகுதியைப் பற்றி எழுதலாம் என்று நினைத்தேன்.

இந்தச் 'சிவமணி மாலை'யில் 96 பாடல் கள் இருக்கின்றன. பல விடயங்களை உள் ளடக்கிப் பாவலர் இதனைப் பாடியுள் ளார். அவற்றுள் செல்வம், அதைப் பெற்றவர் செய்யவேண்டிய கடன், ஈகை என்பவை பற்றிப் பாவலர் கூறியுள்ள தைத் தொட்டுக் காட்டியுள்ளேன்.

இந்தச் 'சிவமணிமாலை'யைப் பற்றிப் பண்டிதமணி 'சி. க.' அவர்கள் பின்வரு மாறு குறிப்பிட்டிருக்கிறார்கள் :

> ''பிள்ளையவர்களின் சிந்தனைச் சோலையிலே அழகிய நறுமணங் கமழும் புஷ்பங்களால் ஆயதொரு மாலை 'சிவமணி மாலை'. அது ஈசுர சந்நிதானத்தை அண்ணிப்பதற்குத் தொடுத்த தொரு மாலை. அந்தக்கரணங்களைச் சுத்திசெய்து நமது குறைகளை முறையீடு செய்தற்குரிய இடத்திலே முறையீடு செய்வதே சிவமணிமாலை''

எதையும் ஆழ்ந்து அளவிட்டுச் சரியான வார்த்தைகளால் கூறும் பண்டிதமணி யவர்கள் ''அழகிய நறுமணங் கமழும் புஷ்பங்களால் ஆயதொரு மாலை 'சிவமணி மாலை''' என்று கூறியிருப்பதே அதன் பெருமைக்குப் போதும்.

இப்போதைய தமிழனின் மனம் சுருங்கி, பிற்கால வாழ்க்கை—பெண்மக்கள், சீதனம் என்ற கோடுகளுக்கிடையேதான் சுழன்று கொண்டிருக்கிறது; யாரைப் பார்த்தாலும் பணம், பணம் என்றே ஓடிக்கொண்டிருக் கிறார்கள். எதைப் பற்றிப் பேசினாலும் — அது இலக்கியம், கலை, அரசியல், சமயம் எதுவாயினும்—அதற்குப் பணம்வேண்டுமே என்றவுடன் பதுங்கி ஒளிக்கும் பேர்வழி களையே காணக்கூடியதாக இருக்கிறது.

தன்னுடைய சொத்து முழுவதையுமே கல்வித் தொண்டுக்காகவே செலவிட்ட பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் இந்தப் பணங் காக்கும் பூதங்களை — வட்டி வாங்கிக் கொழுக்கும் பணவாஞ்சை யுள்ளோரை — அக்காலத்திலேயே கண் டிருக்கிறார். செம்மையாகக் கண்டித்திருக் கிறார்.

தமிழர்கள் பேசுவதிலே — அதிலும் பழம் பெருமை பேசுவதிலே — சூரர்கள். பாரியின் கொடை, கன்னனின் ஈகை என் றெல்லாம் கதை அளப்பார்கள். ஆம், அந்தக் கன்னனின் ஈகையை மேடைமீது முழக்குவார்கள்.

சமீபத்தில் கொழுத்த சீதனம் வாங்கி வீடும் காரும் இனமாகப் பணமும் பெற்று இன்ப லாகிரியில் வாழும் ஒரு பட்டதாரி—காலத்திற்கேற்ப வேஷமிட்டு—ஏழைகளுக்குக் கொடுங்கள்—, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புங்கள் என்று முழக்கமிட்டுவிட்டுக் கன்னனுடைய கதைக்குத் தாவினர்.

யுத்த களத்திலே அருச்சுனனுடைய அம்புகளால் தாக்குண்டு ஆவி பிரியப், போகும் நிலையிலே கன்னன் நிற்கின்றான். அவனைத் தருமதேவதை காத்து நிற்கிறது. அத்தரும தேவதையை அகற்றினலன்றிக் கன்னனைக் கொல்லல் முடியாது என்பதைக் கண்ணபெருமான் உணர்கிறான். எனவே அந்தணவேடந் தாங்கி, அந்த யுத்தமுனையில் பிரவேசிக்கிறான். பிரவேசித்தவர் கன்னனை நோக்கி ''யான் உன்னிடம் ஒரு பொருளை யாசிக்க வந்திருக்கிறேன், கொடுப்பாயா?'' என்று கேட்கிறார். அவன் முகமலர்ச்சியுடன் ''என்ன வேண்டும்?'' எனக் கேட்க, ''நீசெய் புண்ணியம் அனைத்தும் உதவு'' என்கிறார். கன்னனின் கொடைச் சிறப்பை—இறக்கும் தறுவாயிலும் அவன் தருமத்தை ஈந்த பெருமையை—பாரத ஆசிரியர் அழகாகப் பாடுகிறார்.

''ஆவியோ நிலையில் கலங்கியது யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவம் தன்னில்வந் திலையால்
ஓவிலாது யான்செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றுல்
புண்ணியம் அதனினும் பெரிதோ.''

அந்தப் பிறவியில் ஈந்த தன்மை மட்டுமா? தான் இனிமேல் பிறந்தாலும்—ஏழெழு பிறப்புப் பிறந்தாலும் ''இல்லை என்று, இரப்போர்க்கு இல்லை யென்று உரையா இதயம் நீ ஈந்தருளவேண்டும்'' என்றும் வரம் கேட்கிறான்.

அந்தப் பட்டதாரி பேசி முடிந்ததும் வேலையற்ற பட்டதாரி ஒருவர் தம் கஷ்டத்தைச் சொல்லி அவரிடம் ஒரு ஐந்து ரூபா கேட்டார். ஆனை நின்ற இடத்துக்கும் காணும்.

இது இன்று நேற்றல்ல, அன்றும் இருந்த சங்கதிதான். பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் ஏழைகளுக்குக் கொடுங்கள் என்று இடித்துச் சொல்கிறார்.

''அன்னம் பணம்வத் திரதானம்
ஏழைகட் கன்புடனே
சொன்னயம் சேர்புகழ் வேண்டாது
அகம்நிறை தூய்மையொடும்
எந்நிலை தன்னிலும் ஈதல்
கடமை எனஉணரும்
பொன்னித யம்தரு வாய்தில்லை
மேவிய பூரணனே.''

இந்தப் பாடலில், 'அன்புடனே சொன்னயம் சேர்த்து' ஈதல் வேண்டும் எனவும், புகழ் வேண்டாது ஈதல் வேண்டும் எனவும், எந்நிலை தன்னிலும் ஈதல் வேண்டுமெனவும் கூறப்பட்டிருத்தலை நோக்குங்கள். பாரதத்துக் கன்னன் அப்படியே நம் கண்முன் நிற்கின்றனல்லவா?

பண்டிதமணியவர்கள் எங்கே சைவம் தொடங்குகிறது? யார் சைவன்? நாமெல்லாம் சைவர்களா? என்ற வினவை எழுப்பி ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். மனத்துக்கண் மாசில்லாதவனே சைவன். அந்த நிலையை அடையப்பெறுவதே பெரிய பேறு. அந்தப் பேற்றை அடைவதற்கு இரண்டு படிகளைக் கடக்க வேண்டும். முதலாவது படி தன்னைத்தான் நேசிக்க வேண்டும். தன்னை நேசித்தலாவது—பிறர்க்குத் துன்பம் செய்யாமல் இருத்தல். பிறர்க்குத் துன்பம் செய்பவன் தனக்குத்தானே துன்பம் செய்பவனவான்.

''தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்
துன்னற்க தீவினைப் பால்.'' [தொன்றும்

என்பது குறள். பிறர்க்குத் துன்பஞ் செய்யாமல் இருக்கும் முதற் படியைக் கடந்தவன் இரண்டாவது படியிற் கால் வைக்கிறான். அது ஏழைகளுக்கு உதவுதல்.

'ஏ! மனிதர்களே!! உங்களிடம் அறத்தில் நின்று சேர்த்த பொருள் இருக்கிறதா? நல்லது, அதை வைக்கக்கூடிய வங்கி எது தெரியுமா? ஏழை எளியவர்களது வயிறு' என்கிறார் திருவள்ளுவர்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

எனவே, சைவன் என்று பெயர் சொல்லத் தொடங்குபவன் வெறும் விபூதி உருத்திராக்கம் அணிந்தவன் அல்லன். அவன் பிறருக்குக் கேடு செய்யாமல், அறத்தால் வந்த பொருளில் ஏழை எளியவர்களை வாழ்வித்து, மனத்துக்கண் மாசில்லாதவனாக வாழ்பவனேயாவான்.

சரியான சைவத்தை முறையாக உணர்ந்த துரையப்பாபிள்ளையவர்கள் 'அற்றார் அழிபசி தீர்த்தல்' என்ற குறளை வற்புறுத்திப் பாடுவதைக் கேளுங்கள் :-

"ஊனம் குருடர்சப் பாணிக
ளாதி உலகிலுள
ஈன மிகுமங்க ஹீன
ரியார்க்கும் இயன்றபொருள்
தானமெந் நாளும் மனப்பூர்வ
மாச்செயின் சங்கரனும்
வானத் தவரும் மகாபுண்
ணியமென வாழ்த்துவரே."

இனி, கொடுப்பதாகிய எந்தச் செயலையும் நான் செய்கிறேன் என்ற அகந்தையின்றிக் கடவுள் தந்த சொத்து, அது சரியான வழியில் பயன்படுகிறது எனப் பயபக்தியோடு செய்ய வேண்டும்.

ஒரு கதை சொல்ல ஆசைப்படுகின்றேன்.

ஒருமுறை தேவேந்திரன் உமாதேவியை வணங்கித் தான் அம்மைக்கு ஒரு அபிஷேகத் திருவிழா செய்யப் போவதாக வேண்டினான். அம்மையும் சம்மதித்தாள். சங்கநிதி, பதும நிதி படைத்த பெருஞ் செல்வனல்லவா இந்திரன்; எனவே தன் அந்தஸ்துக்கு ஏற்றபடி எத்தனையோ குடம் பால், எவ்வளவோ குடங்களில் நெய், எங்கெங்கிருந்தோ நறுமலர்கள், தீர்த்தங்கள் எல்லாம் வரவழைத்தான். அம்மையின் மனம் குளிர வேண்டும் என அபிஷேகம் செய்தான். முடிந்ததும் தான் செய்த பெரிய அபிஷேகத்தைப்பற்றி ஓரிடத்தில் இருந்து புளுகிக்கொண்டிருந்தான். எல்லா இடங்களுக்கும் போய்வரக் கூடிய துர்வாச முனிவர் அம்பிகையின் சந்நிதானத்திலே நின்று அம்பிகையின் முக விலாசத்தைப் பார்த்தார். உமாதேவியின் முகத்தில் பெரிய கொப்புளங்கள். அவர் திடுக்குற்றார். 'அம்மா இது என்ன?' என்று அலறினார். தேவி திருவாய் மலர்ந்தாள். 'இது இந்திரன் செய்த அபிஷேகத்தின் பலன். நான் பெரும் செல்வம் படைத்தவன் என்ற மமதையோடு செய்த காரியத்தின் பலன். நான் அனுபவிக்கிறேன்' என்றாள் அவள்.

'இது எப்போது மாறும்' எனத் துர்வாசர் கேட்டார். 'இதோபார் ஒரு நாழிகைப் பொழுதில் மாறப் போகிறது. அந்தச் சிறு கிராமத்திலே ஒன்றும் இல்லாத வறியவன் ஒருவன் அன்போடு—கண்ணீர்சோர—ஒரு செம்பு தண்ணீரை ஊற்றி அழுது அரற்றப் போகிறான். உடனே இது மாறிவிடும்' என்றாள் பிராட்டி.

துர்வாசர் பார்த்துக்கொண்டே நின்றார். அம்மை சொல்லியபடியே நடந்தது.

இப்படியே கல்வியிலே மமதை கொண்டோர், செல்வத்திலே இறுமாப்புடையோர், உயர்மரபு பேசித்திரிவோர் செய்யும் செயல்கள் பொருளற்றவை. அவற்றை விட்டுவிட்டு சிவநேயமாகிய செல்வத்தைத் தேடி அலைய வேண்டும் எனத் துரையப்பாபிள்ளை அவர்கள் வற்புறுத்துகிறார்:

"கல்வியில் நாம்செல்வர் ஆஸ்தித னிற்செல்வர்
கண்ணியம்சேர்
வெல்லும் உயர்மர பிற்செல்வர் என்றுபல்
வீம்புசொலும்
புல்லர் உலகில் சிவநேசச் செல்வத்தைப்
பூண்பவரே
செல்வர்மற் றேரெல்லர் என்னுமெய்ஞ் ஞானம்
தெளிகிலரே."

இந்த மூன்று பாடல்களுமன்று,

'வீணைப் நடக்கும் இடம்பங்களுக்கு' என்ற பாடலிலும்,

'அல்லும் பகலும் பணம் பணம் என்று' என்ற பாடலிலும்,

'வட்டிக்குக் காசு வழங்கி' என்ற பாடலிலும்

பாவலர் துரையப்பாபிள்ளையவர்கள் செல்வத்தைத் தேக்கி அறமொன்றும் செய்யாத மனித ஜென்மங்களைக் கண்டிக்கிறார்.

சங்கப் புலவர்கள், திருவள்ளுவர் தொடக்கம் இற்றைநாட் புலவர்கள்வரை எடுத்தோதப்படும் பொருள்தான் இது. எனினும்,பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் தொண்டை நினைக்கும்போது இப் பாடல்கள் மேலும் மெருகு பெறுகின்றன.

த. சண்முகசுந்தரம்
B.A.[Cey.]., Dip. in Ed. [Cey.]
உதவி ஆசிரியர்
மகாஜனக் கல்லூரி

புலமைக் குரல்கள்

— தலைப்பாகைகள் பேசின —

" நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்....."
(பாரதியார். விநாயகர் நான்மணிமாலை - 25)

என்றது பாக்குநீரிணைக்கு அப்பாலிருந்து வந்த பாரதியாரின் குரல். பாக்குநீரிணைக்கு இப்பால் உள்ள யாழ்ப்பாணத்திலிருந்து எழுந்தது பாவலர் துரையப்பாபிள்ளையின் குரல். பாரதியாரின் கருத்தை அழுத்தந்திருத்தமாகக் கூறியது பாவலரின் குரல்.

" கல்வித் திறனே யுலகோ ரறியக்
கழறிட வில்லையிக் கும்மியையான்
நல்வித மாகநம் நாடு திருந்த
நவிலுகி றேனடி சங்கமின்னே."
(சிந்தனைச்சோலை— பக். 18)

நாட்டின் நலனைக் கருதினர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள்; அதற்காகவே தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தார். அவரின் கல்வித் தொண்டு, பத்திரிகைத் தொண்டு, சமுதாயச் சீர்திருத்தத் தொண்டு இவைகளை மதிப்பிடுவோம். அப்போதெல்லாம்,

"தேசோப காரங் கருதியிக் கும்மியைச்
செப்புகின் றேனுதை லாலெவரும்
லேசாய் விளங்க இலகு தமிழில்
இயம்புவ தேநலம் சங்கமின்னே."
(சிந். பக். 18)

பாவலரின் இக் கூற்றை நோக்குதல் சாலப்பொருந்தும். தன்னிடம் இருந்த செய்யுள் திறமையை நாடு நலமுற அவர் பயன்படுத்தினர். அத்தொண்டிலே தன்னலம் இல்லை. அந்தப் பேச்சுக்கே இடமில்லை.

'கவிபாடிப் பரிசுபெறும் மனம்போல ஒன்று"

என்று மற்றொரு புலமைக் குரல் கதறியது. "கவி" பாடுவதன் நோக்கம் பரிசோ? பரிசு பெறுவிட்டால் கொதிப்போ? இவை கேள்விக்குரிய அலுவல். இந்தக் கேள்விகளுக்குப் பாரதியாரும் பாவலரும் எந்த மறுமொழி கூறியிருப்பார்களோ தெரியாது.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களுக்கு எதிர்ப்பு இருந்தது. அதனால் அவர் வருத்தமுற்றார்; பரிசு பெறவில்லை என்று ஏங்கவில்லை.

" புண்ணில்மொய் ஈக்களைப் போலக் கசடர்
புகல்வர் பலகுற்றம் சங்கமின்னே."
(சிந். பக். 19)

"கும்மி, கீர்த்தனம் முதலியவை சிற்றிலக்கியப்பாற்படுபவை", என்பது செந்தமிழ் வாணர் சிலரின் கருத்து. பாரதியார் இத்தச் செய்யுளமைப்பைப் பயன்படுத்தியது போலப் பாவலரும் நன்கு பயன்படுத்தினர்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
— வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்."
என்றது பாரதியின் குரல்.

"நல்வரு மானந் தரத்தகும் பல்பயிர்
நாட்டிக் கிருஷிகம் செய்தாக்கால்
செல்வம் பெருகும்நம் தேயஞ் சிறந்திடும்
சிந்தித்துப் பாரடி சங்கமின்னே."

(சிங். பக். 25)

என்றது பாவலரின் குரல்.

"கோணிகள் செய்வோம் இரும்
பாணிகள் செய்வோம்."

என்ற பாரதியின் குரலுடன்,

" குண்டூசி ஊசி நெருப்புக்குச் சாதிய
கூறரும் வேறுபல் வேலைகளால் "

என்ற பாவலரின் கருத்தை நோக்கலாம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு — இங்கு
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு."

என்பது பாரதியாரின் செய்யுள்.

" கூடி முயற்சி செய்து சமுதாயங்
குலவும் பலவிங்கு தாபித்தவர்
நாடிநற் கைத்தொழிற் சாலை திறத்தல்
நலமல்ல வோஅடி சங்கமின்னே."

(சிங். பக். 29)

என்று பாவலர் கூறுகின்றார்.

ஆங்கிலக் கல்வியைக் கண்டு வெகுண்டவர் பாரதியார்.

"செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது
தீதெ னக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன
நலமோ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்."

(பாரதியார் சுயசரிதை – 28)

என்றார் பாரதியார்.

ஆங்கிலத்தை வெறுக்காத பாவலர், ஆங்கிலரைப் பார்த்துக் குரங்காகநடக்கும் போலித் தமிழரை எள்ளி நகையாடுகின்றார்.

" செந்தமிழ் சற்று மறியாத வாங்கிலர்
சீர்மை யிருந்திங்கு வந்தவர்போல்
நந்தமி ழர்சிலர் செந்தமிழ் பேசிட
நாணுகி றாரடி சங்கமின்னே."

(சிங். பக். 37)

கல்விக்காகவே தம் வாழ்நாள் முழுவதையும் படையல் செய்த பாவலரின் நகைச்சுவைக்கும் ஏக்கத்திற்கும் எடுத்துக் காட்டு ஒன்று :-

" ரத்தா சயமெங் கிருக்கென் றறியாத
ஈன மிகுந்தபல் வாலிபர்கள்
லத்தீன் கிறிக்முழு மூச்சாய்ப் படிக்கிறார்
லாபமங் கென்னடி சங்கமின்னே."

(சிங். பக். 39)

பாவலர் சிறந்த விஞ்ஞான ஆசிரியராகத் திகழ்ந்தாரென்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

"வீட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்."

(பெண்கள் விடுதலை – 3)

என்றது பாரதியின் கும்மி.

"குண்டான் வழித்திடும் பெண்களுக்குக் கல்வி
கூடாதெனச் சொன்ன தக்காலம்
பண்டாய்ப் பறந்திடப் பெண்களெங் குங்கலை
பற்றுகி றாரடி சங்கமின்னே."

(சிங். பக். 40)

என்பது பாவலரின் கும்மி:

"பறையருக்கும் இங்குதீயர்
புலையருக்கும் விடுதலை."

(விடுதலை - 1)

என்று பாடினர் உழுத்த சமுதாயத்தைத் தகர்த்தெறிய விரும்பிய அதர்வெடி பாரதியார். சமுதாய ஊழல்களைப் படிப்படியாக வெடிக்க வைத்த பகுமரத்தாணி போன்றவர் பாவலர். பாவலர் நிதானமானவர். எனவே,

"கீழ்சாதி யாரொரு போது முயர்ந்து
கிளர்ந்த நிலைக்கு வருதலின்றிப்
பாழா யிருக்க விடுதலெம் சாதியின்
பாதக மல்லவோ சங்கமின்னே "

(சிங். பக். 66)

என நிதானக் குரல் எழுப்பினர் பாவலர். பாரதியாரின் ஆவேசமும் பாவலரின் ஏக்கமும் இன்றும் நிறைவேறாமல் இருப்பது கவலைக்குரியது.

பாவலரின் கடைசிக்காலம் ''ஆத்ம விசாரத்திலே'' சென்றது.

'நோயென்ன செய்யுந் தரித்திர மென்செயும்
நூறெனுமெண்
ணுய்வரு மின்ன லெனையென்ன செய்யு
மறிமனமே
சேயனின் மேற்கரு ணைநிதி யாய
சிவபெருமான்
நேயமென் னெஞ்சி னிறைந்தெந்த நாளும்
நிலைத்திடவே.

(சிந். பக். 4)

பாரதியாரின் கவலை நிறைந்த நேரம் எழுந்த குரலை நோக்கலாம்:-

'' சத்தி யென்று நேரமெல்லாந்
தமிழ்க் கவிதை பாடி
பத்தியுடன் போற்றி நின்ருல்
பயம னைத்தும் தீரும்.''

என்றும்,

''சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக.''

என்றும் பாடி உள்ளம் அமைதி கொள்கிறார் பாரதியார்.

காந்தியைப் பற்றிப் பாரதியார் கூறியவை:—

'' வாழ்கநீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பரழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வரழ்க! வாழ்க!''

'' அட்ட திக்கும் புகழ் காந்தி மகாத்மா''

என்கிறார் பாவலர்.

சீரிய நோக்கிற்காக வாழ்ந்தவர் பாரதியார். பாவலரும் அப்படியே வாழ்ந்தார். அதனல் இன்னல்பெரிதும் பட்டார். பாவலர் பட்ட இன்னல் பல; பாவலரின் வாழ்க்கையின் திறவுகோலாக அமைவது நம்பிக்கை; மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் நம்பிக்கை.

' நற்செய லொருபோதும் நானிலத் தழியாது
நான்பெற்ற போத மிதுவே''

(சிந். சகலகுண சம்பன்னன் —பக். 171)

ஏழையைக் கண்டு கதறினர் பாரதியார். தனியொருவனுக்கு உணவில்லை என்ருல் இந்தப் புவியை ஒழிப்போம் என்ருர். பாவலரின் அடக்கமான குரல்,

''செய்யுங் கமத்தின் வரும்படி யோகடன்
தீர்க்கவும் போதா தெனிலவர்க்கிங்கு
உய்யும் வழியென்ன வோஐய கோளங்கள்
உள்ள முருகுதே சங்கமின்னே.''

(சிந். பக். 21)

பாரதியாரும் பாவலரும் தலைப்பாகை அணிந்தவர்கள். பாரதியார் தலைப்பாகை பற்றிப் பாடவில்லைப் போலும்! பாவலர் தலைப்பாகை பற்றிப் பாடினர்.

முற்காலத் தோர்தலைப் பாகை யணிதல்
முறையென்ற தின்றி வெளித்தோற்றத்தில்
தற்காலத் தோர்:. தில்லாமல் வெறுஞ்.....
சாதிய ராகினர் சங்கமின்னே.''

(சிந். பக். 55)

பாரதியாருக்கும் பாவலருக்கும் தலைப்பாகை உண்டு; ஒளிமிக்க கண்கள் உண்டு; மீசையுண்டு. பாரதியாரின் குரல் தமிழ் அணங்கின் அருளாற் கிடைத்த உணர்ச்சிக் குரல். பாவலரின் குரல் முன்செய்த புண்ணியம் திரண்டு நாவுக்கரசர் பாதையிற் செல்லவைத்தது. அதன் எதிரொலிதான் பாவலரின் செய்யுள். பாரதியாரின் துடிப்பை, உணர்ச்சிக் குமுறலை, ஆவேசத்தை, சொல்முறுக்கைப் பாவலரிடம் காணவில்லை எனலாம். பாவலர் அடக்கமாக, ஆழ்ந்த கருத்தைப் பழகுதமிழில் அள்ளி அழகாகச் சொரிந்தார்.

பாரதியாரைப்போலப் பாவலரும் இலகு தமிழ், பழகு தமிழ், இனிய தமிழை விரும்பினர். இருவருக்கும் இசைத் தமிழிற் பெருவிருப்பம் இருந்தது. இதனைப் பாவலரின் 'தேதரசமஞ்சரி'யின் முன்னுரையிலே காணலாம். இசைத்தமிழின் மேன்மையை நன்குணர்ந்த பாவலர் சங்கீத மகத்துவம் பற்றிப் பாடியுள்ளார்.

சங்கீத மகத்வமதைச்
சாற்றஎவ ராலியலும்

இங்கித மிகுமதனுக்
கிணையாயெதை மொழியத்தகு
மிகபர மெனினுமிகு தலமதில்—சங்கீத

விண்ணுலக மீதுந்தொண்டர்
விள்ளரு மினிமையோடு
கண்ணுதல் நிகர்பரற்குக்
கனதுதியை அனுதினமும்
கழறுவராங் களிகொளவே — சங்கீத

ஏதுக்கும் உருகாவொன்
றிசைக்குமிக் குருகுமெனச்
சாதிக்கும் பழமொழியித்
தாரணிதனிற் சீரறிஞர்கள்
ஓதியதுள தாதலினுயர் — சங்கீத

(சிந். பக். 129)

பாவலருக்கு இசை நுணுக்கங்களை எடுத்து அறிவித்தவர் [1]அளவெட்டி நாயனப் புலவர் 'தர்பார்' கந்தையா என்பர்.

உறுப்பெல்லாம், நரம்பெல்லாம், வாழ்நாள் எல்லாம் பண்ணுக வாழ்ந்த பாவலருக்கு இத்தகைய உதவி கிடைத்ததும் நன்றே.

சில சொற்களுடன் இக் கட்டுரை முடிகின்றது. பாரதியாரும் பாவலரும் யாத்த செய்யுள்கள் சுவைமிகு குவியல் போன்றவை. சிலவற்றின் சுவை காட்டும் முயற்சி இது. செய்யுள் விருந்து வைக்கும் ஆராய்ச்சி செய்வதற்கு இளைஞர் யாரும் வாராரோ?

மலையைக் காணத் தூரம் வேண்டும். பெரிய நிகழ்ச்சிகளை மதிப்பிடக் காலம் வேண்டும் என்பர் ஆன்றோர். பாரதியாரைச் சிறியதொரு வேதாந்தச் சிமிழிலோ அல்லது புலமைச் சிமிழிலோ அடக்கி வைக்க முயற்சி செய்தனர் செய்யுள் நலம் ஆய்வோர். பாரதியார் அதற்கு அப்பாற் பட்டவர். அதேபோன்ற விதி பாவலருக்கும் ஏற்படக்கூடாது. பாவலர் பிறந்து நூறு ஆண்டுகளாகின்றன. அவரின் பன்முனைத் தொண்டினை மதிப்பிட ஏற்றகாலம் இதுவேயாம்.

1. தர்பார் கந்தையா — தர்பார் இராகத்தை மிகச் சிறந்த முறையிற் கையாண்டபடியால் இவருக்கு இப் பெயர் எழுந்தது.

இலங்கைக்கொரு சர்வகலாசாலை

மேலா முயர்தரக் கல்வியை யிங்ஙனம்
மிக்க விருத்திசெ யும்பொருட்டுக்
காலத்தே யெம்மர சாரிடம் சர்வ
கலாசாலை கேளடி சங்கமின்னே.

கல்லூரி யின்தொகை யோபெரி தாங்குயர்
கல்விகற் போர்தொகை யும்பெரிது
நல்லொரு சர்வ கலாசாலை முன்னரே
நாட்டாத தென்னடி சங்கமின்னே.

எங்களின் மாணவர் தங்கள் குணங்குறைக்
கேற்றதோர் சர்வ கலாசாலை
துங்க முடனிங்குஸ் தாபனஞ் செய்யாத
சூட்சமி தென்னடி சங்கமின்னே.

பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

புலவர் நா. சிவபாதசுந்தரனார்
உதவி ஆசிரியர்
மகாஜனக் கல்லூரி

சிந்தையைத் தூண்டும் சிந்தனைச் சோலை

1945ஆம் ஆண்டு மகாஜனக் கல்லூரியில் தமிழ் ஆசானாக அமர்ந்தேன். அப்பொழுது அதிபர் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வந்தார். பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களைப் பற்றி நான் பலரிடம் பலவற்றைக் கேட்டறிந்தேன்; ஆனால், அவருடைய சாதனைகளைப் பற்றி எனக்கு அப்பொழுது அதிகம் தெரியாது. எனினும் பிள்ளையவர்களின் பாடல்களை, இலக்கியப் படைப்புகளைப் பெற்று ஆராய்வதில் நாட்டம் கொண்டு இருந்தேன். பிள்ளையவர்களின் நூல்களை ஆராய வேண்டும் என்ற பெருவிருப்பு அன்னாரின் மூத்த மகன் அதிபர் தெ. து. ஜயரத்தினம் அவர்களிடம் இருந்தது. பிள்ளையவர்களின் அச்சேறிய, அச்சேறாத படைப்புக்களைக் கற்றறிய விரும்பினேன். திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களிடம் இது பற்றி உசாவிய போது அச்சுப் பிரதியையும் கையெழுத்துப் பிரதியையும் என்னிடம் மனமுவந்து கொடுத்தார்; அவைகளை வாங்கிப் படிக்கத் தொடங்கினேன்; அந்தப் படிப்பில் சுவையும் கண்டேன். தமிழ் இலக்கிய வளர்ச்சியில், குறிப்பாக ஈழத்துச் செய்யுள் நோக்கில் பிள்ளையவர்களின் படைப்புப் புதுமையானது என்பதை உணரக் கூடியதாக இருந்தது. இத்தனை செய்யுட் செல்வத்தையும் அச்சேற்றித் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு வழங்காது விடுவது பிழை என்பதையும் உணர்ந்தேன். அதிபர் திரு. ஜயரத்தினம் அவர்களை அணுகி இதுபற்றிக் கூறினேன். அவரும் உளப்பூர்வமாக இயைந்தார்; பதிப்புச் செய்யும் பொறுப்பை என்னிடம் கொடுத்தார். பிள்ளையவர்களின் படைப்புக்களை நுணுகி மீண்டும் கற்கும் அரிய வாய்ப்பை நான் பெற்றேன். பதிப்பாசிரியன் பொறுப்பை ஏற்ற யான் விரைந்து அப்பணியில் ஈடுபட்டேன்.

பிள்ளையவர்களின் செய்யுள்நடை என்னைப் பெரிதும் கவர்ந்தது; ஆனால், முத்தும் மணியும் போன்ற ஒளியுடன் இலங்கும் பிள்ளையவர்களின் கருத்துகள் என்னை அடிமையாக்கிவிட்டன. பிள்ளையவர்களின் தொகுப்பு நூலுக்கு ஏற்ற தலையங்கம் ''சிந்தனைச் சோலை'' என்ற முடிவுக்கு வந்தேன். இதுவே, சிந்தனைச் சோலை உருவாகிய வரலாறு எனலாம்.

பிள்ளையவர்கள் இந்தியாவிலே வாழ்ந்த பொழுது சமகால நிகழ்ச்சிகளில் பெரிதும் ஈடுபட்டார். இந்திய சுதந்திரப் போராட்டம் அவரைப் பெரிதும் கவர்ந்தது. சுதந்திரப் போராட்டத்துடன் தேசியப் பற்று, இனப்பற்று, மொழிப்பற்று என்பவை பிள்ளையவர்களின் உணர்ச்சி மிக்க உள்ளத்தில் படிந்தன. ஆங்கில மோகத்தையும் மேல்நாட்டு வாழ்க்கை முறையையும் பிள்ளையவர்கள் வெறுத்தார். தமிழ்க் காதலனைப் பிள்ளையவர்கள் மாறினர். தமிழ்க் காதலனைய மகாத்மா அடிகளார் மாணவர்களுக்கு வழங்கிய கருத்தை இங்கு நோக்குதல் சாலவும் பொருந்தும். அடிகளார் கூறியவை:

> ''தாய்மொழியை அவமதிப்பது ஒருவன் தன்னுடைய தாயை அவமதிப்பது போல் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். தாய்மொழியை அவமதிப்பவன் தேசபக்தன் அல்லன். ....ஆங்கிலத்தின் மூலம் தான் உயர்ந்த சிந்தனைகளை வெளியிட முடியும் என்று நினைத்துக்கொண்டு நம்முடைய மொழியை வளம் படுத்

தாமல் இருப்போமானால் நாம் என்றென்றும் அடிமைகளாகவேதான் இருப்போம்.''

பிள்ளையவர்கள் இக் கருத்தை மேல் வரும் செய்யுளில் துணிச்சலுடன் வடித்துள்ளார்.

''ஆங்கிலங் கற்பார் ஆங்கிலர்போல் — தாங்கள்
ஆணவ மலமிக வீங்கினர்போல்
ஈங்கித தமிழ்ச்சாதி நீங்கினர்போல் --ஈங்கு
இயலுகிறார் கர்வப் பாங்கினர்போல்.''

பிள்ளையவர்களின் கல்விப் பணியின் கருத்தைச் சற்று ஆழ்ந்து நோக்குவோமானால் தமிழ்க் கலையே அதில் ஊடுருவச் செறிந்து இருப்பதை நாம் காணலாம். இந்தத் தமிழ்க்கலைத் தத்துவம் தனித்துவம் பெறவேண்டும் என்பதற்காகவே அவர் மகாஜனக் கல்லூரியைக் கட்டி எழுப்பினர். அந்த முயற்சியில் அவர் பட்ட இன்னல்களை உலகமறியும். அவை இப்பொழுது வரலாற்றுடன் ஒன்றிவிட்டன. ''தெல்லிப் பழை மகாஜன வித்தியாசாலை இந்து வாலிபர்சங்க சுதேசகொண்டாட்ட கீதங்கள்'' என்ற பாடற் பகுதியைப் படித்தால் பிள்ளையவர்களின் ஏக்கம் தெரியவரும். அந்தச் செய்யுள் மேல்வருமாறு:

''கண்டபடி புத்தியின்றிக்
காதலுடன் மேலையோர்
காட்டும் பழக்கவழக்கம்
கைக்கொள்ளுதல் நீதியோ.''

போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் ஈழத்தைப் பிடித்து ஆண்டதன் பயனாக ஏற்பட்ட தீமைகள் பல. ஆங்கிலேயர் தங்கள் மொழியைப் பரப்ப எடுத்த உத்திகள் பல. ஆங்கில மூலம் இலங்கை அரசாட்சியையும் தம் மதத்தையும் நிலைநாட்ட முயன்றனர் ஆங்கிலேயர். அதற்கு எதிராக எழுந்தது நாவலர் ஐயாவின் உரைநாதம். அந்தச் சிங்கநாதமாம் உரைநாதத்திற்கு எதிரொலிதான் பிள்ளையவர்களின் செய்யுள் நாதம். ஓர் இடத்திலே பிள்ளையவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறினர்.

''அரிய எங்கள் செந்தமிழை
அலட்சியம் நான் செய்தல்லோ
அன்னிய பாஷைகளை வளர்த்தல்
அறிவு நீதி யல்லவோ.''

வேறோர் இடத்தில் பிள்ளையவர்கள் நமக்கு ஆணையிட்டு அறைகின்ற செய்யுள் எம் உள்ளத்தைக் கவருகின்றது.

''ஐரோப்பிய பாவனை பாங்கு — நமக்கு
ஆகா தென்றதைவிட்டு நீங்கு — மிகு
தைரியமாய் முன்னர் ஓங்கு --எங்கள்
தமிழ்ப்பழம் வழக்கங்கள் தாங்கு.''

என்று இடித்துரைக்கின்றார் பிள்ளையவர்கள். ''மிகு தைரியமாய் முன்னர் ஓங்கு'' என்ற செய்யுள் அடி ''ஆங்கிலத் தமிழனின்'' ஆணவம் ஏறிய தலைக்கு அடித்த அடியன்றோ? தமிழர்கள் ஆங்கிலமொழியை விரும்பிக் கற்றனர். தம் சூழலில் உள்ள மக்களிடம் இருந்து பிரிந்து வாழ்ந்தனர். அதனால் தம் இன மக்களின் வாழ்க்கையையும் கருத்தையும் விளங்கிக்கொள்ளாதவர்களாய் இவர்கள் வாழ்ந்தனர். தமிழ் மக்களின் கட்சியை எடுத்துரைக்கத் தகுதியற்றவர்களாயும் விழிபிதுங்கினர். இதனையே பிள்ளையவர்களின் செய்யுள் விளங்குகின்றது.

''எங்களுக்குத் தமிழ் சீர்திருத்தம் ஒன்றே
இயைத்தநற் சுகிர்தமாம் பொருத்தம் — பர
ஆங்கிலேய சீவியம் வருத்தம் — தரு
அறிந்ததைத் தவிர்த்திடல் திருத்தம்.''

பிள்ளையவர்களின் சோகம் தணிகின்ற வகையில் இச் செய்யுள் அமைகின்றது. பண்டைக் காலந் தொட்டுத் தமிழ்க் கல்வி வளர்த்த அறம், அடக்கம் ஆகிய நல்லியல்புகளை ஆங்கிலக் கல்வி அழித்தது என்பதே பிள்ளையவர்களின் கருத்து. மேலும் மேலைநாட்டுக் கல்வியானது கடவுள், குரு, பெரியோர் ஆகியோரிடம் பக்தி செலுத்துதல், நியாயமான வாழ்க்கை நடத்துதல், உளஉறுதி பூணுதல், அடக்கம், நோன்பு ஆகியவைகளை அழித்தது என்பதைப் பாவலர் கண்டுகொண்டார். ஆங்கிலம் கற்றவர்கள் இன்ப விரும்பிக

ளாய் வாழ்ந்ததைக் கண்டு கடிந்ததோடு — கல்லாதவர்கள் — தமிழ் நூல்களைத் தேர்ந்து கொள்ளாதவர்கள் செய்யும் சிறப்பற்ற செயல்களையும் கடிந்தும் பாடியுள்ளார்.

பிள்ளையவர்கள் செய்யுள்மூலம் கைத் தொழிலைச் சிறப்பித்துப் பாடினர். உழவுத் தொழிலின் மேம்பாட்டை உணர்த்தினர். அதே நேரத்தில் தமிழ் மறுமலர்ச்சிக்கும் அதிமுக்கியத்துவம் கொடுத்தார். பிள்ளையவர்களின் பாடல்கள் அக்காலத்தில் வாழ்ந்த ஈழத் தமிழர்களின் கலை, பண்பாடு, அரசியல், பொருளியல், சமூக அமைப்பு என்பவைகளின் நிலையைக் காட்டும் கண்ணாடியாகும். இந்தக் கண்ணோட்டத்தில் பாடல்களைப் பாடியதில் பிள்ளையவர்கள் ஈழத்தில் தலையானவர் என்றே கூறவேண்டும். செயல் உலகிலே பிள்ளையவர்கள் கல்விக் காதலனாகத் திகழ்ந்தார். அவர் உருவாக்கிய மகாஜனக் கல்லூரி இதற்குப் போதிய சான்று பகரும். கல்விக் காதலனாகிய பிள்ளையவர்கள் கருத்துலகில் தமிழ்க் காதலனாகத் திகழ்ந்தார். "சிவமணி மாலை" மூலம் ஆடல்வல்லானின் காதலனாகத் தன்னையே மாற்றிக் கொண்டார். சொல்லும் செயலும் ஒருங்கே அமையப்பெற்ற பிள்ளையவர்களின் பெயர் வரலாற்றுடன் இன்று ஒன்றிப்போய்விட்டது.

கோட்டுக்குப் போக வேண்டாம்

நாட்டின்மத் திட்ச ரிடம்போய் வழக்கில் நடுப்பெறற்குக்
கேட்டு மிணக்க மரிதெனக் காணிற் கிளருவழக்
காட்டின் முயலல் தவறன்று; கூடுமுன் னலெனில்நீ
கோட்டுக்குப் போகா தொழியென நற்புத்தி கூறுவனே.

எதிரி யுடனேவழக் காளியுஞ் சேர்ந்து
இருவரு மொருமனத் தோடன்பு கூர்ந்து
மதுரமான சமா தானத்தை நேர்ந்து
மகிமையாய் இணங்கலாம் மனதினில் தேர்ந்து.

உன்னைப்போல் உன்னய லானையும் நேசி
ஒருக்காலும் வழக்குக்குப் போகேனென் றுசி
என்னவந் தாலும்நீ நீதியைப் பேசி
இணக்கமாய் வாழ்ந்திருப் பாய்அது வாசி.

— பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

R. N. Sivapirahasam
Editor
Hindu Organ

PUBLIC WORKER PAR EXCELLENCE

To remember a truly great man is a tradition typical of high culture. Thamilakam has been gratefully recalling to mind the great achievements of her noble sons and daughters who had in the glorious past contributed to the general welfare in different spheres of dedication. In this context the name of T. A, Thuraiappahpillai looms large and figures in the front line.

Moving like a giant-wheel of intellectual energy Thuraiappahpillai made a mark as a model of multipurpose munificence. His mind magnanimously moulded as it was could not but get attracted to the noble profession of teaching at a time, when only financially self-sufficient persons could afford to do so. Thuraiappahpillai was a child of chill penny. But he braved it bruntly believing that service in the educational sphere would have its reward in spritual progress. Here was a decision that enabled Thamilakam enjoy the contribution of one more literator extending of the enlighted line of distinguished devotees of learning.

The four walls of the village school did not have sufficient space to contain the bubbling spirit of the new star in the educational firmament. Thuraiappahpillai's genius sought expansion. Constructive thinking in his cultured mind compelled him to strive forward in the sphere of service of spiritual significance. He could not live except as a servant of the people — Mahajana — மகாஜனம். The Mahajana mind soon began to develop in all directions of human duty. One standing monument to the Mahajana mind of this illustrious educationist is the Mahajana College. A talented teacher often becomes a pundit, a poet; for the exclerating urge of intelelectual inclination must necessarily find elevating expression. 'Chinthanai Cholai' is one illustration of the eminence of Thuraiappahpillai's poetical persuasion.

As a Journalist myself I must make particular mention of the fact that Thuraiappahpillai's capabilities as a writer of prose came to be utilized by the journals of North Ceylon — the 'Hindu Organ' and the 'Morning Star.' The 'Hindu Organ' had at that time the gifted writer Sabapathipillai, the then Nominated Member in the Legislative Council representing Tamils, as its editor. Talent could be recognized only by talent and Thuraiappahpillai was chosen by Sabapathipillai to help him in his editorial work as at that time the former was bed-ridden. The pages of the editions of the Hindu Organ during the years 1923 and 1924 contain some of the best journalistic contributions.

Thuraiappahpillai's brain functioned fully and fruitfully. The out come was a permanent contribution to the perennial growth of Tamil culture and learning.

பகுதி II

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

கலாநிதி
கார்த்திகேசு இந்திரபாலா
இலங்கைப் பல்கலைக்கழகம்
பேராதனை வளாகம்

கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு

ஈண்டுப் பதிப்பிக்கப்படும் கல்வெட்டானது இலங்கையிலே கிடைத்துள்ள சோழர்காலச் சாசனங்களுள் தனித் தன்மை பொருந்திய ஒன்று எனக் கூறலாம்.[1] இலங்கையிலே சோழராட்சிக் காலத்து வரலாறு பற்றிய சில முக்கியமான தகவல்களை இது தருகின்றது. துரதிர்ஷ்டவசமாக இக் கல்வெட்டுப் பல இடங்களிலே சேதமடைந்து இருப்பதனால் இதன் பயன் ஓரளவுக்குக் குறைந்துள்ளது எனலாம்.

இது ஒரு கற்பலகைச் சாசனமாகும். சாசனம் பொறிக்கப்பட்டுள்ள கருங்கற் பலகை இரு துண்டுகளாக உடைந்து கந்தளாயிலே பேராற்றுக் குடியிருப்பிலுள்ள பழைய சிவன்கோயிலிலே கிடக்கின்றது. இச் சிவன்கோயில் தற்பொழுது ஒரு சிறு கொட்டிலாகவே காணப்படுகின்றது. இதில் ஓர் உடைந்த லிங்கமும் சிவன், பார்வதி ஆகியோர் சிலைகளின் பாகங்களுமே வழிபாட்டுக்குரிய சின்னங்களாக உள்ளன. இவற்றை விடப் பல கருங்கற்றூண்கள் ஆங்காங்கே அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பேராற்றுக் குடியிருப்பு ஆரம்பிக்கப் பட்டபோதும் அதன் பின்னரும் வெளிப் படுத்தப்பட்டவை என அறியக்கிடக்கின்றது. பெரும்பாலும் இவை கடந்த நாற்ப தாண்டுக் காலத்திற்குள் வெளிப்படுத்தப் பட்டவை. இங்கு ஆராய்வதற்கு எடுக்கப் பட்டுள்ள கல்வெட்டை விடப் பள மோட்டைக் கல்வெட்டு என்ற பெயரால் பல ஆண்டுகளுக்கு முன்பு ஸெனரத் பரண விதான அவர்கள் பதிப்பித்த தமிழ்க் கல்வெட்டு சிவன் கோயிலின் முன்னுலே கிடக்கின்றது. இது எவ்வாறு பளமோட்டையிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டது என்பது தெரியவில்லை. இங்கு ஆராயப் படும் கல்வெட்டு, சிவன் கோயிலுக்கு முன்னுள்ள நிலத்திலேதான் அண்மைக் காலத்தில் அகழ்ந்து வெளிப்படுத்தப் பட்டது என அக்கோயிலின் அர்ச்சகர் தகவல் தந்துள்ளார். இது சரியாக எப் போது வெளிப்படுத்தப்பட்டது என்பதை அவராலே கூறமுடியவில்லை. இக் கட்டுரை யாசிரியர் அதனை வாசித்தறியும் வரை வேறு எவராவது அதனை வாசிப்பதற்கு முயற்சிக்கவில்லை என்றே தெரியவருகின்றது. சாம்பல்தீவைச் சேர்ந்த திரு. நா. தம்பிராசா அவர்கள் கொடுத்த அறிவித்தலுக்குப்பின் இக்கட்டுரையாசிரியர் கந்தளாய்க்குச் சென்று 1972 ஜூலை 23இல் இக் கல்வெட்டின் மைப்பிரதி ஒன்றை எடுத்துக் கொண்டார். இம் மைப்பிரதியின் உதவி கொண்டே கல்வெட்டு ஈண்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு இருபாகங்களாக உடைந் திருப்பதால் ஒன்று மேற்பாகம் என்றும் மற்றது கீழ்ப்பாகம் என்றும் இங்கு குறிப் பிடப்படும். மேற்பாகம் ஏறக்குறைய 1 அடி 11 அங்குல நீளமும் 1 அடி 8 அங்குல அகலமும் உடையது. கீழ்ப்பாகத்தின் நீளம் ஏறக்குறைய 1 அடி 11 அங்குலம், அகலம் ஏறக்குறைய 1 அடி 11 அங்குலம். மேற் பாகத்திலே 11 வரிகள் உள. கீழ்ப்பாகத் திலே 12 வரிகள் உள. இரு பாகங்களுக் கும் இடையில் இருந்த வரி ஒன்று கல் வெட்டு இரண்டாக உடைந்தபோது முற் றுகச் சேதமடைந்துவிட்டது. மேற் பாகத் தின் இடது புறத்தில் ஒரு துளை காணப்

1. இக் கல்வெட்டைப் பற்றிய செய்தி முதன்முறையாக **வீரகேசரி வாரவெளியீடு**, பக். 1இலும் **தினகரன் வாரமஞ்சரி**, பக். 1இலும் வெளிவந்தது.

படுகின்றது. இது சாசனம் பொறிக்கப்படுவதற்கு முன்பிருந்தே கல்லில் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் சாசனத்தின் எழுத்துக்கள் இதனை விலக்கி எழுதப்பட்டுள்ளன. மேற்பாகம் சேதமடையாது நன்கு பேணப்பட்டுள்ளது. ஆனால், கீழ்ப்பாகம் பல இடங்களிலே சேதமடைந்து காணப்படுகின்றது; அங்கும் இங்குமாகக் கல்லின் சில பாகங்கள் உடைந்திருப்பதனால் கீழ்ப் பாகத்தின் சாசனத்தைப் பூரணமாகப் பெறமுடியாது போயிற்று.

இக் கல்வெட்டின் எழுத்துப் பதினோராம் நூற்றாண்டுக் கிரந்த எழுத்தும் தமிழ் எழுத்துமாகும். இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் கிடைத்துள்ள பிற சோழர் சாலச் சாசனங்களின் எழுத்தினை இது ஒத்துள்ளது.

இக் கல்வெட்டின் திகதி கோ ஸ்ரீ சங்க வர்மரான உடையார் சோழ இலங்கேஸ்வர தேவருடைய பத்தாவது ஆட்சியாண்டு என்றுகொடுக்கப்பட்டுள்ளது. இம்மன்னன் சோழப் பேரரசன் ஒருவனின் பிரதிநிதியாக இலங்கையில் ஆட்சி நடத்திய ஒருவன் என்பதைப் பின்னர் காட்டுவோம். இவனுடைய முடிசூட்டு விழா எப்போது நடைபெற்றது என்பதை அறியமுடியாதிருப்பதால், கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ள பத்தாவது ஆண்டு எது என்று கண்டு கொள்ள முடியாது. இம்மன்னன் சோழப் பேரரசன் ஒருவனின் பிரதிநிதியாக விளங்கியமையால் இலங்கையிலே சோழராட்சி நடைபெற்ற காலமாகிய கி. பி. 992க்கும் 1070க்கும் இடைப்பட்ட காலத்திலே தான் இவன் ஆட்சி நடத்தியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. பேரரசின் பல்வேறு மண்டலங்களுக்கு அரசப் பிரதிநிதிகளாகச் சோழ வம்சத்து இளவரசர்களை நியமிக்கும் வழக்கம் முதலாம் ராஜேந்திர சோழனிலேதான் ஆரம்பிக்கப்பட்டது. ராஜேந்திர சோழன் இலங்கை முழுவதையும் கைப்பற்றி முடித்தது கி. பி. 1017இல் ஆகும். மும்முடி சோழ மண்டலம் என்னும் பெயருடன் சோழப் பேரரசுடன் இணைக்கப்பட்ட இலங்கையை ஆளுவதற்காக ஓர் அரசப் பிரதிநிதியை ராஜேந்திர சோழன் கி. பி. 1017இன் பின்பே நியமித்திருக்கலாம் என்று கொள்ள இடமுண்டு. ஆகவே, இங்கு ஆராயப்படும் கல்வெட்டின் காலம் (கி. பி. 1017+10) 1027க்கு முற்பட்டதாகாது எனலாம். இக் கல்வெட்டிலே காணப்படும் சில காலக்குறிப்புகள் இதன் காலத்தை நிர்ணயிப்பதற்கு ஓரளவு உதவுகின்றன. இங்கு, சோழ இலங்கேஸ்வர தேவரின் பத்தாவது ஆட்சியாண்டு, கும்ப மாதத்தில் பூர்வ பக்ஷத்துத் துவாதசியாகிய செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஒரு சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தினத்தின் நக்ஷத்திரம் ஆயில்யம் என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தினம் ஒன்றில் கி. பி. 1033 பெப்ரவரி 13ஆம் திகதி ஆகலாம் (அன்று துவாதசித் திதி சூரியோதயத்தின்பின் 54½ கடிகை நீடித்து முற்றுப் பெற்றது; ஆயில்ய நக்ஷத்திரம் மறுநாட் காலை சூரியோதயத்தின்பின் 57½ கடிகை வரை கூடியிருந்தது). அல்லது கி. பி. 1047 பெப்ரவரி 10ஆம் திகதி ஆகலாம் (அன்று துவாதசித் திதி சூரியோதயத்தின்பின் 24½ கடிகை நீடித்து முற்றுப் பெற்றது; ஆயில்ய நக்ஷத்திரம் மறுநாட் காலை சூரியோதயத்தின்பின் 39 கடிகை வரை கூடியிருந்தது).

இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதை அறிந்து கொள்வது கஷ்டம். ஏனெனில், இந்நோக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும் கீழ்ப்பாகம் பெரிதும் சேதமடைந்துள்ளது. இச் சாசனத்திலே ராஜராஜச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். அதன்பின் பண்டாரம், காசுகள், கண்ணுறுகள், விக்கிரமசோழ வாய்க்கால் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இவற்றைப் பொருத்தி ஊகிக்குமிடத்து, ராஜராஜச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி (மகாசபை) யின் பெருமக்கள் (அங்கத்தவர்கள்) ஒரு நாள் இரவு கூடி, விக்கிரமசோழ வாய்க்கால், அதன் கண்ணுறுகள் ஆகியவை சம்பந்தமான சில விஷயங்களைப் பற்றி ஆலோசித்துத் தங்கள் மகாசபையின் பண்டாரத்திலிருந்து சில காசுகளைச் செலவிட்டு மேற்படி நீர்ப்பாசன வசதிகளைத் திருத்த(?)த் தீர்மானித்தனர் எனத் தோன்றுகின்றது. இக் கூட்டத்திலே ராஜராஜச் சதுர்வேதி மங்

கலத்தில் வரிசேகரிக்கும் அதிகாரியாகக் கடமையாற்றியவனும் கலந்துகொண்டான் போலும். இவன் முத்தங்கை கோயில் எனப்பட்ட கோயிலிலே மாணியாக (பிரமச்சாரியாக) வசித்தவன் எனவும் அறியக்கிடக்கின்றது. மகாசபையின் தீர்மானத்தைப் பதிவு செய்வதற்கே இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது.

இக்கல்வெட்டுப் பல வகையாலும் முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாவதாக, இலங்கையைத் தங்கள் பேரரசின் ஒரு மண்டலமாகச் சோழப் பேரரசர் ஆண்டபோது செய்துகொண்ட சில நிர்வாக ஒழுங்குகளைப்பற்றி அறிந்துகொள்ள இது பயனுடையதாயிருக்கின்றது. இரண்டாவதாக, இலங்கையிலே சோழப் பேரரசன் ஒருவனுடைய பிரதிநிதியாக நியமிக்கப்பட்டு ஒரு சுதந்திர மன்னன் போன்று ஆட்சி நடத்திய சோழ இலங்கேஸ்வரனுடைய பெயரை முழுதாகக் குறிப்பிடும் ஒரேயொரு சாசனம் என்ற முறையிலும் இதற்கு முக்கியத்துத்துவம் உண்டு. திருகோணமலை மாஞங்கேணி வெள்ளை வில்வத்துக் கோணேஸ்வரர் கோயிலிலுள்ள உடைந்த சாசனத்திலே ''சோழ இல'' என்ற சொற்கள் மட்டும் பேணப்பட்டதாய் இம் மன்னனுடைய பெயர் காணப்படுகின்றது. அப்பெயர் 'சோழ இலங்கேஸ்வரன்' என்ற பெயரின் ஒரு பாகம் என்பதை அறியத்தருவது இங்கு ஆராயப்படும் கந்தளாய்ச் சாசனமாகும். மூன்றுவதாக, இலங்கையிலே சோழராட்சியின்போது தமிழர் வாழ்ந்த ஊர்களிலாவது எத்தகைய உள்ளூராட்சிமுறை நிலவியது என்பதை அறிவதற்கு இக் கல்வெட்டு உதவுகின்றது. நான்காவதாக, சோழராட்சியின்போது நீர்ப்பாசன வசதிகள் புறக்கணிக்கப்படவில்லை என்பதனைக் காட்டும் வகையிலும் இது பயனுடையது எனலாம். இறுதியாக, இதிலே இடம் பெறும் இடப்பெயர்கள் சோழராட்சிக் காலம்பற்றிய புதிய தகவல்களைத் தந்துதவுகின்றன.

சோழப் பெருமன்னர் இலங்கையை ஒரு மண்டலமாக மாற்றித் தம் பேரரசின் ஒரு பாகமாக நிர்வகித்தபோது பாண்டி மண்டலம் போன்ற பிற மண்டலங்களை நிர்வகிப்பதற்குச் செய்துகொண்ட ஒழுங்குகளைப் போன்றே இலங்கையிலும் ஒழுங்குகள் செய்திருந்தனர் என்பதை இக்கல்வெட்டால் அறிகின்றோம். சோழப் பேரரசின் மண்டலங்களை நிர்வகிக்கும் ஆட்சியாளர்களாகச் சோழ இளவரசர்களை நியமிக்கும் வழக்கம் முதலாம் ராஜேந்திர சோழன் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது என்பதைத் தென்னிந்தியக் கல்வெட்டுக்களால் அறியலாம். தன் மகன் ஒருவனை ஸ்ரீ சோழ பாண்டியன் என்ற பெயருடன் பாண்டிநாட்டை ஆளும்படி ராஜேந்திர சோழன் பணித்தான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிப்பிடும்.[2] இதனை ஒரு கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றது.[3] இச் சோழ பாண்டியன் வேறு கல்வெட்டுக்களிலே ஜடாவர்மன் சுந்தர சோழபாண்டியன் என்ற முழுப்பெயருடன் குறிப்பிடப்பட்டுள்ளான்.[4] இதிலிருந்து இவன் பாண்டிய வம்சத்தவர்களுடைய சிம்மாசனப் பெயராகிய ஜடாவர்மன் என்னும் பெயரையும் சூட்டிக்கொண்டான் என அறியமுடிகின்றது. இவன் ஒருவனே ஆரம்பத்தில் ராஜேந்திர சோழனுடைய

2. K. A. Nilakanta Sastri, **The Colas** (Madras 1955), p. 201; **South Indian Inscriptions**, III, ed. H. Krishna Sastri, p. 423 (verse 93), Madras 1920.

3. 363 of 1917. Nilakanta Sastri, **op. cit.** p. 202.

4. K. V. Subrahmanya Aiyar, 'Mannarkoyil Inscription of Jatavarman Sundara Chola-Pandyadeva,' **Epigraphia Indica**, XI, p. 292. Nos. 612, 615, 617, 618, 621 and 630 of 1916.

அரசப் பிரதிநிதியாக அல்லது துணை அரசனாக மண்டலம் ஒன்றில் ஆட்சிநடத்தினான் எனத் தோன்றுகிறது. ராஜேந்திரசோழனின் ஆட்சியின் பிற்பாகத்திலே வேறும் துணை அரசர்கள் பிற மண்டலங்களிலே நியமிக்கப்பட்டிருக்கலாம் என நீலகண்ட சாஸ்திரி அவர்கள் ஊகித்துள்ளார்கள்.[5] இப்படியான துணை அரசர்களுடைய நியமனம் பற்றி நீலகண்ட சாஸ்திரி அவர்கள் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது:

''இப்படியான வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டதும் அந்த இளவரசர்களுக்கு ஒரு வகையான பதவியளிப்பு நடத்தப்பட்டிருக்கலாம். அதன்படி, நாட்டிலே தத்தம் அந்தஸ்துக்கு ஏற்ப அவர்கள் தமக்கெனச் சிறு முடிகளைச் சூட்டிக்கொள்ள உரிமை பெற்றிருக்கவேண்டும். இத்துடன் வேறும் உரிமைகளையும் பெற்றிருக்கலாம். இந்த ஒழுங்குகளை ராஜாதிராஜனும் அவனுக்குப் பின் பதவிபெற்ற மன்னனும் தொடர்ந்து பேணினர் என அவர்களுடைய கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. அரச குடும்பத்தின் அமைதியற்ற இளவரசர்களுடைய சக்திகளைப் பயன்படுத்தத் தகுந்த தொழில்களைக் கொடுப்பதற்காக முதலாம் ராஜேந்திரன் தொடக்கிவைத்த புத்திசாலித்தனமான முறையானது அந்த இளவரசர்களுடைய அதிருப்திகளை நீக்கி, அரண்மனைச் சூழ்ச்சிகளும் புரட்சிகளும் நடைபெறுவதற்கான சாத்தியத்தைக் குறைத்து, பல்வகைப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்சினைகளை எல்லாம் எதிர் நோக்கிக் கொண்டிருந்த எல்லே கடந்த பேரரசின் நிர்வாகத்துக்குப் புதிய வலிமையையும் கொடுத்தது.''[6]

முதலாம் ராஜேந்திரனுக்குப் பின் பதவி பெற்ற ராஜாதிராஜசோழன் பேரரசின் பல்வேறு மண்டலங்களுக்குப் பல இளவரசர்களை அனுப்பிவைத்தான் என அவனுடைய கல்வெட்டுக்களிலுள்ள மெய்க்கீர்த்தியிலிருந்து அறிகின்றோம். இது பற்றிக் குறிப்பிடும் மெய்க்கீர்த்திப் பாகம் மேல் வருமாறு:

''தன்சிறிய தாதையுந் திருத் தமையனுங்
குறிகொள்தன் இளங்கோக் கிளையு நெறியுணர்
தன்திருப் புதல்வர் தம்மையுந் துன்றெழில்
வானவன் வில்லவன் மீனவன் கங்கன்
இலங்கையர்க் கிறைவன் பொலங்கழற் பல்லவன்
கன்னக் குச்சியர் காவலனெனப் பொன்னணி
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர்புகழ்
ஆங்கவர்க் கவர் நாடருளி''[7]

இதிலிருந்து, ராஜாதிராஜசோழன் தனது சிறிய தந்தை (ராஜேந்திர சோழனின் தம்பியருள் ஒருவன்), தமையன் (ராஜேந்திர சோழனின் மக்களுள் ஒருவன்), தம்பியர் (ராஜேந்திர சோழனின் மக்கள்), புதல்வர்கள் ஆகியோரை (எல்லாமாக எழுவரை) வெவ்வேறுமண்டலங்களை ஆளும்படி முடிசூட்டி வைத்தான் என அறிய முடிகின்றது. ஒவ்வொருவர்க்கும் இடப்பட்ட பெயரும் அந்தந்த மண்டலங்களின் பழைய ஆட்சியாளருக்குரிய அல்லது ஆட்சியுரிமையைக் குறிக்கின்ற பெயராக இருப்பதும் கவனிக்கத்தக்கது. சேரனுக்குரிய பெயராகிய வில்லவன் என்பது சேர மண்டலத்தை நிர்வகிக்கச் சென்றவனுக்கும், பாண்டியனுக்குரிய பெயராகிய மீனவன் பாண்டிமண்டலத்தை நிர்வகிக்கச் சென்றவனுக்கும் இடப்பட்டதையே இதிலிருந்து அறிகின்றோம். இலங்கை மன்னர்க்கு இப்படியான வம்சப்பெயர் இல்லாத காரணத்தினால் இலங்கையை நிர்வகிக்கச் சென்ற இளவரசனுக்கு இலங்கையர்க் கிறைவன் என்ற பெயர் சூட்டப்பட்டது என விளக்கம் கொடுக்க இடமுண்டு. இவ்வாறு வில்லவன், மீனவன், இலங்கையர்க்கிறைவன் எனத் தனித்தமிழ்ப் பெயர்கள் இம்மெய்க்கீர்த்தியிலே கொடுக்கப்பட்டிருந்தாலும் இவற்றின் வடமொழிப்படுத்தப்பட்ட பெயர்வடிவங்களையே அந்தந்த இளவரசர்கள் தரித்திருந்தனர் என்று பெரும்பாலான கல்வெட்டுக்களால் அறிய

5. Nilakanta Sastri, **op. cit.**, p. 197.
6. மேற்படி.
7. சி. கா. சுப்பிரமணியம், **தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள்**, III, பகுதி II (சென்னை 1957), பக். ஈஈ.

முடிகின்றது. அது மட்டுமன்றி, இப் பெயர்களுக்கு முன்னுல் தங்கள் சொந்த வம்சப் பெயராகிய 'சோழ' என்ற பெயரையும் அவர்கள் சேர்த்திருந்தனர். அதனுல், வில்லவன் என மேற்படி மெய்க்கீர்த்தியிலே குறிப்பிடப்படும் சேரநாட்டு நிர்வாகி உண்மையில் சோழ கேரளன் என்றும், மீனவன் என்பான் சோழ பாண்டியன் என்றும் இலங்கையர்க்கிறைவன் என்பவன் சோழ இலங்கேஸ்வரன் என்றும் பெயர் பெற்றிருந்தனர். இதனைத் தெளிவாக இரண்டாம் ராஜேந்திர சோழன் காலத்து மணிமங்கலத்துக் கல்வெட்டிலிருந்து அறியலாம். அதிலே இரண்டாம் ராஜேந்திர சோழனுல் நியமிக்கப்பட்ட பெருந்தொகையான (பதின்மூவர்) இளவரசர்களும் அவர்களுடைய விருதுகளும் கொடுக்கப்பட்டுள்ளன :

"..... தன்
சிறிய தாதை யாகிய வெறுழ்வலிக்
கங்கை கொண்ட சோழனைப் பொங்கிகல்
இருமுடிச் சோழ னென்றும் பெருமுரட்
டன்திருத் தம்பியர் தம்முள் வென்றிகொள்
மும்முடிச் சோழனைத் தெம்முனை யடுதிறற்
சோழ பாண்டிய னென்றுங் கோழிமன்
தொடுகழல் வீர சோழனைப் படிப்புகழ்
கரிகால சோழ னென்றும் பொருதொழில்
வாள்வலித் தடக்கை மதுராந் தகனைச்
சோழ கங்க னென்றுந் தோள்வலி
மேவிகல் பராந்தக தேவனைச் சோழ
அயோத்திய ராச னென்றும்
இருதயத் தன்பொடு கருது காதலருள்
இத்தலம் புகழிரா சேந்திர சோழனை
உத்தம சோழ னென்றுந் தொத்தணி
முகைய விழலங்கன் முடிகொண்ட சோழனை
இகல் விசயாலய னென்றும் புகர்முகத்
தேழுயர் களிற்றுச் சோழ கேரளனை
வார்சிலைச் சோழ கேரள னென்றுந்
திண்டிறற் கடாரங் கொண்ட சோழனைத்
தினகரன் குலத்துச் சிறப்பமர் சோழ
சனகராச னென்றுங் கனைகடற்
படிகொண்ட பல்புகழ் முடிகொண்ட சோழனைச்
சுந்தர சோழ னென்றுஞ் செந்தமிழ்ப்
பிடிகளிற் றிரட்ட பாடி கொண்ட
சோழனைத் தொல்புவி யாளுடைச் சோழ
கன்னக்குச் சியராச னென்றும் பின்னுந்தன்
காதலர் காதலர் தம்முள் மேதகு
கதிராங் கனைகழல் மதுராந் தகனை
வெல்படைச் சோழ வல்லப னென்றும்
மானச் சிலைக்கை யோரானைச் சேவகனை
நிருபேந்திர சோழ னென்றும் பருமணிச்
சுடர்மணி மகுடஞ் சூட்டி".[8]

இதிலிருந்து, இரண்டாம் ராஜேந்திர தேவன் சோழ இளவரசர் பலரைச் சோழ பாண்டியன், சோழகங்கன், சோழ அயோத்தியராசன், சோழ கேரளன், சோழ சனகராசன், சோழ கன்னக்குச்சிய ராசன், சோழ வல்லபன் என்றெல்லாம் பெயர் சூட்டி, அவர்களுக்கு முடி சூட்டினன் என அறிகின்றேம். இலங்கையர்க்கிறைவன் அல்லது இலங்கேஸ்வரன் என்ற பெயருடன் இளவரசன் ஒருவனுக்கு முடி சூட்டியது பற்றி இந்த மெய்க்கீர்த்தியிலே குறிப்பிடப்படாதிருப்பது கவனிக்கத் தக்கது. இம் மெய்க்கீர்த்தி கி. பி. 1055 அளவிலே கல்வெட்டாகப் பொறிக்கப் பட்டது. இரண்டாம் ராஜேந்திர சோழனுடைய ஆட்சியின் பிற்பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுக்களிலே இவ்வாறு பதவிபெற்ற இளவரசர் அறுவர் மட்டுமே குறிப்பிடப் படுகின்றனர்.[9] அவர்களுள்ளும் இலங்கையை நிர்வகிக்க அனுப்பப்பட்ட எவராவது குறிப்பிடப்படவில்லை. இரண்டாம் ராஜேந்திரனுக்குப் பின் பதவி பெற்ற வீர ராஜேந்திரனுடைய ஆரம்ப காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்களிலே இளவரசர்க்குப் பதவிகள் அளித்த செய்தி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது :

"அரும்பெறல் தமையன் ஆளவந் தானை
இரும்புவி புகழிரா ஜாதிராஜ னென்றும்
ஒளிமணி முடி சூட்டித் தன்திருப்
புதல்வ னுகிய மதுராந் தகனை
வாளேந்து தானைச் சோழேந்திர னென்று
எண்டிசை நிகழ வெழில்முடி சூட்டித்
தொண்டை மண்டலம் கொடுத் தருளித்

8. மேற்படி, பக். சம — சக.

9. மேற்படி, பக். சக — சஉ.

திண்டிறல் மைந்தனுகிய கங்கைகொண்ட
[சோழன்
ஏழுய ரியானைச் சோழ பாண்டிய னெனத்
திண்டுயர் மணிமுடி இசைபெறச் சூட்டிப்
பாண்டி மண்டலங் கொடுத்தருளி ஆண்டகை
வடிகொண்ட கதிர்வேல் முடிகொண்ட
[சோழனைச்
சுந்தரசோழ னென்று சுடர்முடி சூட்டி
அந்தமில் பெருஞ்சிறப் பருளித் தன்னோ
எவ்வெரு லகத்தவர்க் குரிய வகலிடம்
வேறு வேறு அருளி".[10]

இதிலும் இலங்கையை நிர்வகிக்க எவராவது நியமிக்கப்பட்டது பற்றிய குறிப்பு இல்லை. இவ்வாறு பார்க்குமிடத்து முதலாம் ராஜேந்திரசோழன் காலத்திலிருந்து வீர ராஜேந்திரன் காலம்வரை தொடர்ச்சியாகச் சோழ பாண்டியன் என்ற பெயரைப் பெற்ற இளவரசர்கள் பாண்டி நாட்டை ஆளுவதற்கு நியமிக்கப்பட்டிருந்ததை அறிய முடிகின்றது. ஆனால் இலங்கை, சேரநாடு போன்ற பிற மண்டலங்களிலே அவ்வாறு தொடர்ச்சியாக இளவரசர்கள் நியமிக்கப்படவில்லை என்றே கூறவேண்டியுள்ளது. பாண்டி நாட்டிலே பல சோழ பாண்டிய மன்னர்களுடைய கல்வெட்டுகள் கிடைப்பதும் இதனை உறுதிப்படுத்துகின்றது எனலாம். கேரளத்திலும் இலங்கையிலும் அவ்வாறு பல சோழ இளவரசர்களுடைய காலத்துக் கல்வெட்டுக்கள் கிடைக்கவில்லை.

இவ்வாறு ஆராய்ந்து பார்க்குமிடத்து, கந்தளாய்க் கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ள சோழ இலங்கேஸ்வரதேவன் யார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அவன் சோழப் பேரரசன் ஒருவனால் இலங்கையை ஆளுவதற்கு நியமிக்கப்பட்ட ஒரு சோழ இளவரசன் என்பதில் ஐயமில்லை. பாண்டி நாட்டை ஆண்ட சோழ பாண்டியரைப் போன்று இவன் இலங்கையை ஆண்டான். சோழபாண்டிய மன்னர்கள் எவ்வாறு பாண்டிய வம்சத்தவர்களுடைய சிம்மாசனப் பெயர்களாகிய ஜடாவர்மன் (அல்லது சடையவர்மன்), மாறவர்மன் ஆகிய பெயர்களைத் தங்கள் சிம்மாசனப் பெயர்களாகவும் கொண்டிருந்தனரோ[11] அவ்வாறே சோழ இலங்கேஸ்வரனும் ஈழத்து மன்னர்களுடைய சிம்மாசனப் பெயர்களுள் ஒன்றுகிய ஸ்ரீ சங்கபோதி வர்மன் என்பதன் குறுக்கமாகிய ஸ்ரீ சங்கவர்மன் என்ற பெயரைத் தனது சிம்மாசனப் பெயராகப் பெற்றிருந்தான். கந்தளாய்க் கல்வெட்டின் ஆரம்ப வரிகளையும் சோழபாண்டிய மன்னன் ஒருவனுடைய சாசனத்தின் ஆரம்பவரிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இது நன்கு விளங்கும்:

கந்தளாய்க் கல்வெட்டு வரி 1 — 3: "கோ ஸ்ரீ சங்கவன்மரான உடையா[ர்] ஸ்ரீ சோழ இலங்கேஸ்வர தேவற்கு யாண்டு பத்தாவது ....."

சுந்தர சோழ பாண்டியனுடைய மன்னூர் கோயிற் கல்வெட்டு வரி 1: "கோ சடைய பன்மரான உடையார் ஸ்ரீ சுந்தர சோழ பாண்டிய தேவர்க்கு யாண்டு பதின்மூன்றுவது."[12]

இவ்வாறு இலங்கையிலே ஆட்சி நடத்தியவனைக் கந்தளாய்க் கல்வெட்டு மூலம் நாம் அறிகின்ற சோழ இலங்கேஸ்வரனே எந்தச் சோழ இளவரசன் என்று அடையாளங் கண்டுகொள்வதிலே கஷ்டம் உண்டு. எனினும் இவன் யார் என்று ஓரளவுக்கு ஊகிக்க இடமுண்டு. இதற்கு, முன்னர் நாம் மேற்கோள்களாகக் காட்டியுள்ள மெய்க்கீர்த்திகளைப் பயன்படுத்த வேண்டும். ஏற்கனவே கூறியதுபோல, மண்டலங்களை ஆளுவதற்கு இளவரசர்களை நியமிக்கும் வழக்கத்தை முதலாம் ராஜேந்திர சோழன் ஆரம்பித்திருந்தான். அவனால் நியமிக்கப்பட்டவனைப் பாண்டிநாட்டை

10. மேற்படி, பக். சசு.

11. அடிக்குறிப்பு 4இல் ஜடாவர்மன் சுந்தரசோழபாண்டியனைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் காட்டப்பட்டுள்ளன; மாறவர்மன் பராக்கிரம சோழபாண்டியனைக் குறிப்பிடுபவை 614 & 329 of 1916; மாறவர்மன் விக்கிரமசோழபாண்டியனைக் குறிப்பிடுபவை 328, 616, 620, 627 & 628 of 1916.

12. Subrahmanya Aiyar, **op. cit.**, p. 295.

ஆண்ட சோழபாண்டியனைப்பற்றி மட்டுமே அறிகின்றோம். ஆனால், முதலாம் ராஜேந்திரன் காலத்திலேயே தந்தையுடன் ஆட்சி நடத்திய முதலாம் ராஜாதிராஜனுடைய மெய்க்கீர்த்திகளில் 'இலங்கையர்க் கிறைவனும்' பிற இளவரசர்களும் நியமிக்கப்பட்டது பற்றி அறிகின்றோம். இம் மெய்க்கீர்த்திகள் மன்னனுடைய இருபத்தேழாம் ஆட்சியாண்டிலிருந்தே (கி. பி. 1044–45) கிடைக்கின்றன. பத்தாண்டுகளின் பின்பு பொறிக்கப்பட்ட இரண்டாம் ராஜேந்திரனின் கல்வெட்டுக்களிலே பல இளவரசர்கள் வெவ்வேறு மண்டலங்களுக்கு நியமிக்கப்பட்டது கூறப்பட்டாலும் இலங்கைக்கு எவராவது நியமிக்கப்பட்டதுபற்றிய குறிப்பில்லை. இலங்கையில் ஏற்கனவே சோழ இளவரசன் ஆட்சி நடத்திக்கொண்டிருந்ததினால் புதிதாக ஒருவனை நியமிக்க வேண்டிய அவசியம் அப்போது இருக்கவில்லை என்று இதற்கு விளக்கம் கொடுப்பதும் கஷ்டம். ஏனெனில், ஏற்கனவே பதவி பெற்றிருந்தவர்களுக்குக் கூடப் புதிதாக இரண்டாம் ராஜேந்திரசோழன் நியமனம் வழங்கினன் என்று அறியக் கிடக்கிறது. உதாரணமாக, சேரநாட்டை ஆண்டுகொண்டிருந்த சோழ கேரளனைத் திரும்பவும் சோழகேரளன் என்று இம் மன்னன் முடிசூட்டியிருந்தான். இவனுக்குப் பின் பதவிபெற்ற வீரராஜேந்திரனுடைய கல்வெட்டுக்களிலும் பிற மண்டலங்களுக்கு அனுப்பப்பட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்; இலங்கைக்கு எவராவது அனுப்பப்பட்டது பற்றிய குறிப்பில்லை; வீரராஜேந்திரனுடைய ஆட்சியும் முடிவடைய இலங்கையும் சுதந்திரம் பெற்றது. இவற்றை எல்லாம் நோக்குமிடத்து, இலங்கையில் ஆட்சி நடத்திய சோழ இலங்கேஸ்வரன் என்பான் முதலாம் ராஜாதிராஜனால் அனுப்பி வைக்கப்பட்ட இலங்கையர்க்கிறைவன் என்பவனே என்று அடையாளங்காண இடமுண்டு. இலங்கையிலே முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன், இரண்டாம் ராஜேந்திரன், அதிராஜேந்திரன் (வீரராஜேந்திரனுடன் கூடி ஆட்சி நடத்திய சோழன்) ஆகிய மன்னர்களைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. சோழராட்சிக் காலத்தைச் சேர்ந்த மன்னர்களுள் ஒருவனுகிய முதலாம் ராஜாதிராஜனைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் மட்டும் இலங்கையிலே கிடைக்கவில்லை. ஒருவேளை ராஜாதிராஜன் காலத்திலே இலங்கையின் மன்னனுகச் சோழ இலங்கேஸ்வரன் ஆட்சி புரிந்ததினால், ராஜாதிராஜனைக் குறிப்பிடாது சோழ இலங்கேஸ்வரனைக் குறிப்பிட்டுக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருந்தமை இதற்குக் காரணமாகலாம். இதனலும், ராஜாதிராஜன் காலத்திலேதான் சோழ இலங்கேஸ்வரன் ஆட்சி நடத்தியிருக்க வேண்டும் என்று கொள்ள இடமுண்டு.

சோழப் பேரரசனின் பெயரைக் குறிப்பிடாது, சோழ இலங்கேஸ்வரனை மட்டும் குறிப்பிட்டுச் சாசனம் வெளியிடப்பட்டதால், சோழ இலங்கேஸ்வரன் ஒரு சுதந்திர மன்னன் போன்றே ஆட்சி நடத்தியிருக்க வேண்டும். எனினும் அவனுக்கும் பேரரசனுக்கும் இடையில் இருந்த தொடர்பு எத்தகையது என்பதைக் கந்தளாய்ச் சாசனத்தினால் அறியமுடியாது. பாண்டி நாட்டை ஆண்ட சோழபாண்டிய மன்னர்களுடைய கல்வெட்டுக்களை ஆராய்ந்தால், அரசியல்நீதியாக மட்டுமன்றி நிர்வாக ரீதியாகவும் மண்டலங்களை ஆண்ட மன்னர் பேரரசனுக்குக் கட்டுப்பட்டிருந்தனர் என அறியலாம். அவ்வாறே ஈழத்தை ஆண்ட சோழ இலங்கேஸ்வரனும் சோழப் பேரரசனுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவனகவே ஆட்சி நடத்தியிருக்க வேண்டும்.

இவ்விடத்திலே, இலங்கேஸ்வரன் என்ற பெயரைக் கவனிப்பதும் நல்லது. இப்பெயர் பொதுவாக இலங்கை மன்னரைக் குறிப்பிடுதற்குச் சோழர் பயன்படுத்திய ஒரு பெயராகும். சோழராலே கைப்பற்றப்பட்ட சிங்கள மன்னனுகிய ஐந்தாம் மஹிந்தனைக் குறிப்பிடுவதற்கு இப் பெயர் ஒரு சாசனத்திலே பயன்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் ராஜாதிராஜன் காலத்திலே இலங்கையின் தென்பாகத்தில் ஆட்சி நடத்திய விக்கிரமபாண்டியன் என்பானும் இலங்கேஸ்வரன் என்றே சோழர் கல்வெட்டுக்களிலே குறிப்பிடப்பட்டுள்ளான்;

சோழராட்சிக்குப்பின் இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களுள் ஒருவனாகிய இரண்டாம் கஜபாஹுவும் இலங்கேஸ்வரன் என்றே தமிழ்க் கல்வெட்டுக்களிலே குறிப்பிடப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது: அண்மைக் காலத்துக் கண்டி மன்னர்களும் தம்மை லங்கேஸ்வரர் என்று கூறிக்கொண்டனர்.

இலங்கையிலே சோழராட்சிக் காலத்திலே கந்தளாயில் எத்தகைய உள்ளூராட்சி நிறுவனம் இருந்தது என்பதைப்பற்றியும் அறிந்துகொள்ளக் கந்தளாய்ச் சாசனம் உதவுகின்றது. பொதுவாகச் சோழ நாட்டிலே ஊர், சபை அல்லது மகாசபை என்ற நிறுவனங்களே ஊராட்சி மன்றங்களாக இயங்கின. இவற்றுள் ஊர் என்பது பிராமணர் அல்லாதோர் வசித்த இடங்களின் நிறுவனமாகவும் சபை அல்லது மகாசபை பிராமணர் வசித்த சதுர்வேதி மங்கலங்களின் நிறுவனமாகவும் இருந்தன. இதேபோன்ற ஓர் அமைப்பே இலங்கையிலும் தமிழர் வாழ்ந்த பிரதேசங்களைப் பொறுத்தமட்டிலாவது சோழராட்சியின் போது காணப்பட்டது என்று கூறக் கந்தளாய்ச் சாசனம் உதவுகின்றது. ராஜராஜச் சதுர்வேதி மங்கலத்தின் (கந்தளாயின்) பெருங்குறிப் பெருமக்கள் ஒருநாள் இரவு கூடி எடுத்துக் கொண்ட ஒரு நடவடிக்கைபற்றி இக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. பெருங்குறி என்பது மகாசபை என்பதன் தமிழ்ச் சொல்லாகும். பெருமக்கள் என்பது மகாசபையின் அங்கத்தவர்களைக் குறிக்கும். இக் கூட்டத்தில் அவ்வூரிலே தண்டுகின்ற, அதாவது வரி சேகரிக்கின்ற, அதிகாரியும் கலந்துகொண்டான் போலும். இவன் முத்தங்கை கோயில் என்னும் கோயிலைச் சேர்ந்த ஒரு மாணி என அறிகின்றோம். மாணி என்ற சொல் கோயில்களிலே பிரமச்சாரிகளாகக் கடமை யாற்றியவர்களைக் குறிக்கும். பெருங்குறிப் பெருமக்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன என்பதைத் தெளிவாக அறிய முடியாதுள்ளது. எனினும் சேதமடைந்த கல்வெட்டுப் பாகத்தில் வரும் சொற்களாகிய பண்டாரம், காசு மூன்று, காசு ஆறு, நீர்நிலம், விக்கிரமசோழ வாய்க்கால், கண்ணுறு ஆகியவற்றைக் கவனிக்குமிடத்து, நீர்ப்பாசன வசதிகள் சம்பந்தமாகத் திருத்த வேலைக்கோ, அமைப்பு வேலைக்கோ ஊராட்சிமன்றத்தின் பண்டாரத்திலிருந்து சில காசுகள் செலவிடப்படுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தையே கல்வெட்டிலே பொறித்துள்ளார்கள் எனத் தோன்றுகிறது. நீர் நிலம் என்பது கொல்லை நிலத்தினின்றும் வேறான நன்செய்ப் பயிர்நிலமாகும். கண்ணுறு என்பது ஒரு சிறிய நீர்ப்பாசன வாய்க்காலாகும். சோழராட்சியின் போது நீர்ப்பாசன வசதிகள் புறக்கணிக்கப்படவில்லை என்பதை உணர்த்துவதற்கு இச் சாசனத்தின் சான்று உதவுகின்றது.

இறுதியாக, இக்கல்வெட்டிலே வரும் சில இடப் பெயர்களும் கவனிக்கத்தக்கவை. அவையாவன : ராஜேந்திரசோழ வளநாடு, ராஜவிச்சாதிர வளநாடு, ராஜராஜச் சதுர்வேதி மங்கலம், விக்கிரம சோழ வாய்க்கால் என்பவையாம். இவற்றுள் முதலிரண்டும் வளநாட்டுப்பெயர்கள். சோழர் நிர்வாக முறைப்படி, மண்டலங்கள் வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குப் பொதுவாகச் சோழ வம்சத்தவர்களுடைய பெயர்களே கொடுக்கப்பட்டன. ராஜேந்திர சோழ வளநாடு என்பது முதலாம் ராஜேந்திர சோழன் பெயரால் வழங்கிய வளநாடு என்பதில் ஐயமில்லை. ஆனால், ராஜவிச்சாதிர வளநாடு என்ற பெயர் எவரைக் குறித்து இடப்பட்டது என்பதைக் கண்டுகொள்ள முடியவில்லை. 'ராஜவிச்சாதிர' என்ற பெயர் தென்னிந்தியச் சாசனங்களிலும் வருகின்றது. ஒருவேளை சோழ இலங்கேஸ்வரனின் சொந்தப் பெயராக இது இருந்திருக்கலாம். சோழராட்சியின் போது இலங்கையில் வழங்கிய பிற வளநாட்டுப் பெயர்களுள் அருமொழிதேவ வளநாடு, நிகரிலி சோழவளநாடு, பரகேசரி வளநாடு, ராஜராஜ வளநாடு, ராஜேந்திரசிங்க வளநாடு, விக்கிரமசோழ வளநாடு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கந்தளாய்க்கு இடப்பட்ட ராஜராஜச்சதுர்வேதிமங்கலம் என்ற பெயர் முதலாம் ராஜராஜனைக் குறித்து இடப்பட்டதாகும். இப்



கந்தளாய்ச் சிவன் கோவிற் கல்வெட்டு — மேற்பாகம்

[மைப்பிரதி : கா. இந்திரபாலா ; அனுமதி : தொல்பொருளியல் ஆணையாளர்]

கந்தளாய்ச் சிவன் கோவிற் கல்வெட்டு — கீழ்ப்பாகம்

[மைப்பிரதி : கா. இந்திரபாலா ; அனுமதி : தொல்பொருளியல் ஆணையாளர்]

பெயர் சோழராட்சியின் பின் முதலாம் விஜயபாஹுவின் பெயரால் விஜயராஜச் சதுர்வேதி மங்கலம் என மாற்றப்பட்டது.[13] கந்தளாய்க் கல்வெட்டிலே இவ்விடம் ஒரு பிரமதேயம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இவ்விடம் பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட ஓர் இடமாகும். பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி நடத்திய நிஸ்ஸங்கமல்ல மன்னன் காலத்திலும் அது தொடர்ந்து ஒரு பிராமணர் குடியிருப்பாகவே (சதுர்வேத பிரஹ்மபுரம்) இருந்து வந்தது.[14] விக்கிரம சோழ வாய்க்கால் என இக் கல்வெட்டிலே வரும் வாய்க்காற் பெயர் சோழவம்சத் தவர்களுள் எவரைக் குறித்து இடப்பட்டது என்பதைத் திட்டவட்டமாகக் கூறுவது கஷ்டம். விக்கிரம சோழன் என்ற பெயர் முதலாம் ராஜேந்திர சோழனின் விருதுப் பெயர்களுள் ஒன்றாக இருந்ததினால், ஒருவேளை இம் மன்னனைக் குறித்தே இப்பெயர் இடப்பட்டிருக்கலாம்.

கல்வெட்டின் வாசகம்

மேற்பாகம்

1. ஷ்ரீ ஸ்ரீ கொ ஸ்ரீ சங்கவன்மரான உ
2. டையா [ர்*] ஸ்ரீ சொழ இலங்கெ ஸ்வர தெவற்கு
3. யாண்டு பத்தாவது ராஜெ ஜ்ய சொழ
4. வளநாட்டு ராஜ விச்சாதிர வளநாட்டு
5. (ஜ்ய)ஜ்ஜெசம் ஸ்ரீ ராஜராஜச் சதுவ்வெ(தி)
6. மங்கலத்துப் பெருங்குறி பெருமக்க(ெ)
7. ளாம் இய்யாட்ை(ட)க் கு(ம்)ப நாயற்று (பூவ-2)
8. ஷகூஷத்து ஸ்ரீஷ (சியும்) செவ்வாய்க்கிழை
9. மயும் பெற்ற ஆ (யி) லையத்துநா [ள*]ன்றிரவு
10. நம்மூர் தண்டுகின்ற முத்தங்ை(க) கொயில்
11. மாணி —.....

கீழ்ப்பாகம்

1. — — — — — — — — — — — — —
2. நி (ல) — — — — — (வ) ன்ப . — — — — —
3. (வ) ா — — — — — த பரிசா — — — — — —
4. ண — — — — — (வ்) வுக்கு — — — — — — —
5. — — — — — — (ஒ) லை — — — ட (ங்) — —
6. ண்டாரத்து — — — — (க)ாசு மூன்று இக் — —
7. மூ(ன்) — ல் இ — — — காசு ஆறுக — —
8. (க்காளு)ர் நீர் நிலத்தில் வாசு தெவ — — —
9. — (கு) விக்கிரமசொழ வாய்க்கால் — — —
10. — (ட)ங் (க)ண்ணூற்று மூன்றுஞ்ச(து) — —
11. — (மூன்று) மாவும் எ(ங்)கெ நா — — —
12. (று) — ாயும் இ(ங்)கெ மூன்றுங் கண் — —

13. S. Paranavitana, 'A Tamil Slab Inscription from Palamottai', **Epigraphia Zeylanica**, IV, p. 195.
14. D. M. de Z. Wickremasinghe, 'Kantalai Gal-asana Inscription of Kitti Nissanka-Malla', **Epigraphia Zeylanica**, II, p. 286.

செ. குணசிங்கம், எம். ஏ.
வரலாற்றுத்துறை
இலங்கைப் பல்கலைக் கழகம்
பேராதனை வளாகம்

கோணேஸ்வரம் கோவிலின் தோற்றக் காலம் எது?

மிகப் பழமைவாய்ந்த சில நிறுவனங்களினதோ அல்லது ஏதாவது அமைப்புக்களினதோ தோற்றக்காலம் பற்றி எதனையும் அறியமுடியாமலிருக்கும்போது அல்லது அவற்றின் தோற்றத்தைப் பற்றி அறிவதற்குத் தெளிவான ஆதாரங்கள் கிடைக்காத போது, அவற்றின் தோற்றத்தை விளக்குவதனை மையமாகக் கொண்டு, பல கதைகள் தோன்றுவது வழக்கம். இப்படியான கதைகளுள் மக்களின் கவனத்தை ஈர்க்கத்தக்க விதத்தில் அமைந்துள்ளவை மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து நிலைபெற்றுப் பாரம்பரியக் கதைகளாக, புராணக் கதைகளாக மாறிவிடுகின்றன. கிடைக்கின்ற ஆதாரங்களின் துணைகொண்டு, நிறுவனங்களினதோ அல்லது அமைப்புக்களினதோ தோற்றம் பற்றி அறிவியல் ரீதியான விளக்கம் கொடுக்கப்படுகையில், இவைபற்றிய கட்டுக்கதைகள் அல்லது புராணக் கதைகள் தமது செல்வாக்கை இழந்துவிடுகின்றன.[1] குறிப்பாகச் சமய நிறுவனங்களைப் பொறுத்து இத்தகைய புராணக் கதைகளின் செல்வாக்குக் கூடுதலாகக் காணப்படுகிறன்து. உதாரணமாக இந்துக் கோவில்களை எடுத்துக்கொண்டால் அவற்றின் தோற்றக்காலந் தெரியாதபோது தோற்றத்தை விளக்கும் கட்டுக்கதைகள், புராணக்கதைகள் காணப்படுகின்றன. ஒரு கோயில் எவ்வளவுக்குக் கூடிய தொன்மை வாய்ந்ததோ அவ்வளவிற்கு அது சிறப்பு வாய்ந்ததாகப் பொதுவாக நம்பப்படுவதால் இக்கதைகள் கோவிலின் தொன்மையைக் காட்டக் கூடியதாகவும் பத்தியை மக்களிடையே ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைகின்றன.

வரலாற்றுக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரர் கோவில் எப்போது தோன்றியது என்பதனை அறிதல் கஷ்டமாகும். நாம் மேலே கவனித்தவாறு இத்தகைய ஒரு நிலை, கோணேஸ்வரர் கோவிலின் தொன்மை பற்றிய பாரம்பரியக் கதை தோன்ற இடமளிக்கலாயிற்று. அக்கதை நீண்டகாலமாக நிலைபெற்று வந்துள்ளது மாத்திரமன்றி இன்றும் கல்வி கற்றோரிடையே இருந்து வருவதனைக் காணலாம். இங்கு எடுத்துக் கூறுமளவிற்கு அக்கதை வரலாற்றுண்மையுடையதாக இல்லாவிட்டாலும் மக்களிடையே இன்னும் அக்கதை பெற்றுள்ள செல்வாக்கின் அளவை அறிந்து கொள்வதற்கு அக்கதை பற்றிய சில கருத்துக்களை இங்கு எடுத்துக்காட்டல் அவசியமாகின்றது.

''குபேரனுக்குப் பின் இலங்கையை யாண்ட இராவணனே பெரும் சிவபக்தன்; அவனே ''இராவணேஸ்வரன்''

1. புத்தூர் மேற்கிலுள்ள "நிலாவரை" என அழைக்கப்படும் ஆழம் சரியாக அறியப்படாததும் எச் சந்தர்ப்பத்திலும் வற்றுதலுமான கிணறு எவ்வாறு தோன்றியது என அறியாதிருந்தோரில் சிலர் அதன் தோற்றத்துக்கான விளக்கம் ஒன்றைக் கொடுக்க முயற்சித்தனர். அதாவது இராமர் இவ்விடத்திற்கு வந்த காலத்தில் நீர் விடாயால் அவதியுற்றுத் தமது விடாயைத் தணிக்கும்பொருட்டு நீர் பெறுவதற்காகத் தமது கையிலிருந்த அம்பை ஊன்றினர் என்றும், அப்போது அந்த இடம் இடிந்து இப்போதிருக்கும் கிணறுகத் தோன்றியது என்றும் விளக்கினர். கல்வியறிவு குறைந்த அக் கிராமத்தவரிடையே இக்கதை இப்போதும் நிலவுவதனைக் காணலாம். இருந்தும் கிணற்றின் தோற்றத்தைப் பொறுத்து, புவிவெளி உருவவியல் அடிப்படையில் அறிவியல் ரீதியாக விளக்கம் கொடுக்கப்பட்டபின் மேற்படி கதை தனது செல்வாக்கின் பெரும் அளவினை இழந்துள்ளமையைக் காணலாம். சுண்ணும்புக்கல் பிரதேசத்தின் சில இடங்களில் இத்தகைய கிணறுகள் தோன்றலாம். கூடிய விபரத்திற்கு: P. Puvanarajan, Geomorphology of the Jaffna Peninsula, Unpublished M. A. Thesis. (Peradeniya, 1969), — பக். 52.

என்று உலகம் பாராட்டியது. கைப் போது மலர் தூவி முப்போதும் சிவ பிரானை வழிபட்ட முறைமையாளன் இராவணன். ''இராவணன் மேலது நீறு'' என்று திருநீற்றின் பெருமையைச் செந்தமிழில் செம்மாந்து பாடுகின்றார் திருஞானசம்பந்தர். இந்த இராவணேஸ்வரன் தன் தாயார் வணங்கும் பொருட்டுக் கோணமாமலையமர்ந்த கோவிலின் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தைப் புரட்டிப் புரண்டு விழுந்து எழுந்து வணங்கி மன்னிப்புப் பெற்ற கதை பெருங்கதை.''[2]

''வள்ளல் இருந்த மலையதனை வலஞ்செல்தல் வாய்மையென உள்ளம் கொள்ளாது தன் வலியைத் தானே வியந்து தருக்கிய இராவணன் கயிலை மலையை எடுத்த போழ்தில், தமது கால் விரலால் அவனது செருக்கை அழித்துப் பின்னர் அவன், தன் சிறுமை நீங்கி வழிபட அவற்கு வேண்டும் வரங்களை நல்கிச் சிறப்பித்த கோணமலையான் மாணருளை ''எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால், ஏத்திட ஆத்த மாம் பேறு தொடுத்தவர்'' என்றும் கூறுகின்றார்.[3]

''இவ்விலங்கையைச் சிறந்த சிவ பக்திமானை இராவணேசுவரன் ஆண்டானென்றும், அக்காலத்தில் அவனாலும் அவன் தம்பி விபீடணனாலும் பல சிவாலயங்கள் ஆக்கப்பட்டன வென்றும் வரலாறு கூறுகின்றது.''[4]

''மீண்டும் திருக்கைலாசத்துக்குப் போகும் வழியில் விட்டுணு மூர்த்தி ஓரு வயோதிக அந்தண வடிவிலே தோன்றித் தெட்சண கைலாசத்தின் பெருமையையும் அங்கு சிவலிங்கம் பெறலாமென்பதையும் கூறினார். இராவணன் தெட்சண கைலாசம் எனப் படும் திருகோணமலைக்கு வந்து இறைவனை வழிபட்டு நின்றான். இறைவன் காட்சி யளிக்காததால் கோபங்கொண்டு மலையின் கீழ் இறங்கி மலையைக் கட்டிப்பிடித்து அசைத்தான். மலை சிறிதும் அசையவில்லை. வெளியே வந்து மலையின் தெற்குப் பகுதியில் வாளினால் ஓங்கி வெட்டினான். மலையின் ஒரு சிறு துண்டு உடைந்து மேற்குப் பக்கம் போய் விழுந்தது.''[5]

''சிலகாலஞ் சென்றதன்பின் தசக்கிரீவன் சமுத்திரத்திலிருந்து வெளியே வந்து கோணநாயகர் எழுந்தருளியிருக்கும் ஆலயத்துக் கோபுர வாயிலில் நின்று 'சுவாமி நாயினுங் கடையேனாகிய நான் ஆணவ மிகுதியினாற் செய்த குற்றங்களைப் பொறுத்தருள வேண்டு'மென்று பிரார்த்தித்தான்..... அப்போது கோணநாயகர் திருவுளமிரங்கி, குறைந்த அனுபவங்கள் எல்லாவற்றையும் பின்பு உண்டாகும்படி செய்து, ஒரு வாளும் தேரும் கொடுத்து ஒரு இலிங்கமுமீந்து இலங்காபுரிக்குப் போகும்படி விடை கொடுத்தார். இராவணன் பின்பும் பலதரஞ் சுவாமியுடைய திருவடிகளை நமஸ்கரித்துக் கொண்டு போனான்.''[6]

''காப்பிய அரசன் இராவணன் கோணேஸ்வரர் பெருமானில் சிறந்த பக்திமான். சிவனில் அவன் கொண்ட பக்தி தமிழ் சைவ ஞானிகளின் பக்திப் பாடல்களில் அழியா இடம் பெற்

---

2. இ. விஸ்வநாதக்குருக்கள், 'கோணமாமலையமர்ந்தகோ', திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர், (திருகோணமலை, 1963), — பக். 36.
3. சு. துரைசாமிப்பிள்ளை, திருஞானசம்பந்தர் கண்ட திருக்கோணமலை', மேலே குறிப்பிடப்பட்டது (மே. கு.), —பக். 45.
4. கா. அருணாசலம் 'தக்ஷண கைலாயத் தெய்வீகம்', மே. கு., — பக். 50.
5. வை. சோமஸ்கந்தர், திருக்கோணேஸ்வரம் (யாழ்ப்பாணம், 1963), — பக். 10,
6. வே. அதிலேசபிள்ளை, திருக்கோணேசல புராணம், (அ. அளகைக்கோன் என்பவரால் பதிப்பிக்கப் பட்டது), (திருகோணமலை, 1950), — பக். 23.

றுள்ளது. அவனது தாயும், மனைவி மண்டோதரியும் சிவனிற் சிறந்த பக்தியுடையவர்கள்.''[7]

மேலே கூறப்பட்டவாறு, கோணேஸ்வரர் கோவிலின் தொன்மை பற்றி மக்களிடையே நிலவும் கருத்துக்கள் அவற்றின் உள்ளடக்கத்தைப் பொறுத்து அதிகம் வேறுபாடற்று ஒரே தன்மையினவாகக் காணப்படுவதால், ஒரு குறிப்பிட்ட புராணக் கதையின் அடிப்படையில் தோற்றம் பெற்ற கருத்துக்களே இவை எனக் கொள்ள முடிகின்றது. அதாவது கோணேசல புராணத்திற் கூறப்பட்ட செய்திகளே அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள் எனலாம். இப்புராணக் கதையின் சாரம், கோணேஸ்வரர் கோவில் இராவணன் வழிபட்டது என்பதாகும். கோணேஸ்வரர் கோவிலுடன் மாத்திரமன்றி இன்னுஞ் சில நிகழ்ச்சிகள் — சம்பவங்கள் — இராவணனுடன் தொடர்பு படுத்தப்படுவதனைக் காணலாம். கிழக்கு மாகாணத்தில் சிறப்புப் பெற்று விளங்கும் கன்னியாய் நீரூற்று ''ஈன்ற தாய்க்கு ஈமக்கடன் செய்ய இலங்கேசன் தொட்ட வெந்நீர்ச் சுனைகள்'' என்றும்[8] ''அன்னை தனக்காய் இராவணனர் அந்தியேட்டி செய்யவென்றே உன்னை யமைத்த துண்மையதோ.....'' என்றும்[9] கூறப்படுகின்றது. ''இதுவேயன்றிக் கோணமாமலையிலுள்ள பெரும் பாறைப் பிளவை இராவணனின் பலத்துடன் தொடர்பு படுத்துவர்.''[10]

புராணக் கதையின் அடிப்படையில் மேலே தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் ஓரளவிற்காவது ஏற்றுக்கொள்ளத்தக்கனவா எனக் கவனித்த பின்னரே மேற் கொண்டு செல்ல முடிகின்றது. வரலாற்று ஆசிரியனின் கடமை, கிடைக்கின்ற சான்றுடன் பொருந்தக்கூடியதான ஒரு விளக்கத்தைக் கொடுப்பதாகும். ஒரு புலவனைப் போலவோ அல்லது நாவலாசிரியனைப் போலவோ, அவன் புதுச்சான்றினை உருவாக்கும் நோக்கத்துடன் தன் கற்பனைச் சுதந்திரத்துக்கு இடமளிக்க முடியாது.[11] அதே நேரத்தில் ஒரு வரலாற்றுசிரியன் அல்லது ஒரு வரலாற்றுமாணவன் தனக்குக் கிடைக்கின்ற புராணக் கதைகளையோ அல்லது கர்ண பரம்பரைக் கதைகளையோ முற்றுகத் தள்ளிவிடவும் முடியாது. நம்பகரமான அல்லது ஓரளவிற்காவது நம்பகரமான ஆதாரங்கள் கிடைக்காதபோது சில கட்டுக்கதைகள் அல்லது பாரம்பரியக் கதைகள் ஒரு நாட்டின் முற்பட்ட கால வரலாற்றை அறிய ஓரளவிற்காவது உபயோகமானவையாக இருக்கின்றன. அதாவது எந்த ஒரு கட்டுக்கதையோ அல்லது பரம்பரைக் கதையோ ஓர் உண்மையின் அடிப்படையிற் கட்டி எழுப்பப்படுகின்றமை ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதால் அந்த உண்மை எதுவென ஆராய்ந்து அதனைப் பயன்படுத்துவதிலேயே ஒரு வரலாற்று மாணவனதோ அல்லது ஆசிரியனதோ திறமை காணப்படும். கட்டுக்கதையில்

---

7. C. S. Navaratnam, **A Short History of Hinduism in Ceylon and three Essays on the Tamils.** (Jatfna, 1964), பக். 1—2.

8. ஐ. சரவணமுத்து, 'ஈழத்தின் இணையிலா ஆலயம் திருக்கோணேஸ்வரம்', **திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர்** (1963),— பக். 27.

9. ஏ. பெரியதம்பிப்பிள்ளை, 'கன்னியாய்த் திரு', **மே. கு.**,—பக். 61.

கன்னியா வெந்நீரூற்றும் இராவணனுடன் தொடர்பு படுத்தப்படுவதற்குக் காரணம், அந்த நீரூற்று முன்னொரு காலத்தில் யாரோ ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டது என்ற தவறான கருத்தாகும். இக் கருத்தின் அடிப்படையில் எவர் தோற்றுவித்தார்? ஏன் தோற்றுவித்தார்? என்ற கேள்விகளுக்கு இராவணனைத் தொடர்பு படுத்தி விடையளித்துள்ளார்கள். கன்னியாவில் மாத்திரமன்றி வேறும் பல இடங்களிலும் இத்தகைய வெந்நீரூற்றுக்கள் காணப்படுகின்றன. பளிங்குருப் பளிங்கடுக்குப் பாறையிலான பகுதிகளில் இத்தகைய வெந்நீரூற்றுக்கள் ஏற்படலாம்.

P. G. Cooray, **An Introduction to the Geology of Ceylon**, (Colombo, 1967)— பக். 264—265.

10. C. S. Navaratnam, **மு. கு.** — பக். 3.

11. James, M. Powell, **The Civilization of the West**, A Brief Introduction, New York, (1967) — பக். 3.

வரும் விபரங்கள் பிழையாக இருக்கலாம்; ஆனால் அடிப்படை உண்மையாக இருக்கும். சமய ஆர்வத்தின் காரணமாகவோ அல்லது புகழ் பெற்ற ஒரு கதாபாத்திரத்தின் பெருமைக்காகவோ கட்டுக்கதை அமையும் போது, அக்கதையின் அடிப்படை உண்மையாக இருக்க விபரங்கள் திரிபடைந்து விடுகின்றன.[12]

மேற்கூறியவற்றை மனதிற்கொண்டு, கோணேஸ்வரம் கோவிலுடன் இராவணனைத் தொடர்பு படுத்தும் புராணக்கதை வரலாற்றுராய்ச்சியைப் பொறுத்து எந்தளவிற்காவது ஏற்றுக்கொள்ளத் தக்கதா என்பது கவனிக்கப்படவேண்டியதொன்று. கோணேஸ்வரம் கோவிலுக்கும், இராவணனுக்குமிடையில் தொடர்பையேற்படுத்தும் எத்தகைய ஒரு தகவலும் இராமாயணத்தில் இல்லை. இராமாயணம் கூறும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம் எதுவென்றே இதுவரை திட்டவட்டமாக அறியப்படவில்லை. இதனால் வேண்டுமென்றே கட்டியெழுப்பப்பட்ட புராணக் கதையாக இது காணப்படும். அப்படியானால் எத்தகைய அடிப்படையுண்மையின் மீது இக்கதை உருவாக்கப்பட்டிருக்கின்றது என்ற கேள்வி எழலாம்.

இக்கதையின் அடிப்படை உண்மையை விளக்குவது கஷ்டமன்று. அதாவது கோணேஸ்வரர் கோவில் எப்போது தோன்றியது என்பது எவருக்கும் தெரியாது; இந்தஉண்மையே இக்கதையின் அடிப்படையாக இருக்க இப்புராணக் கதை உருவம் பெற்றிருக்கிறது. அப்படியானால் இப்புராணக்கதை இராவணனோடு மாத்திரம் ஏன் கோணேஸ்வரம் கோவிலைத் தொடர்பு படுத்தவேண்டும் என்பதும் ஒருவரிடம் இயல்பாக எழக்கூடிய கேள்வியாகும். நாம் முன்னரே குறிப்பிட்டிருந்தோம் இராமாயண நிகழ்ச்சிகள் ஏற்பட்ட காலம் சரியாக அறியப்படவில்லையென்று. இராமாயண நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம்பற்றி அவதானித்த பர்கிரெர் (Pargiter) என்பவர், வம்சாவளித் தரவு அடிப்படையில் இராமாயண பாரத யுத்தங்கள் நடைபெற்ற காலங்களுக்கிடையில் ஐந்து நூற்றாண்டுகள் இடைவெளி காணப்படுகின்றன எனக் கூறியிருக்கிறார். அவர் தொடர்ந்து கூறுகையில் மகாபாரதப்போர் நடைபெற்ற கி. முற்பட்ட 1100க்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் இராமன் வாழ்ந்தான் என்றும் இதனால் இராமன் கி. மு. 1600 அளவில் ஆட்சிசெய்தான் என்றும் கூறியுள்ளார்.[13] ஜகோபி என்பவரின் கருத்துப்படி இராமனின் காலமும் இராமாயணத்தின் காலமும் கி. மு. 800—600க்கும் இடைப்பட்ட காலத்துக்கு அப்பாலுள்ளதாகும்.[14] இராமாயண நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் பின்னரேயே இராமாயண நூல் எழுதப்பட்டதாகத் தெரிவதால் இந்நூலுக்கு அதிககாலம் முற்படவிருந்து மக்களிடையே வழங்கிவந்த மரபுக் கதைகளை மையமாகக் கொண்டே இராமாயண நூல் எழுதப்பட்டது எனவேண்டும். மேலும் இங்கு கவனிக்கத்தக்கது, வால்மீகி இராமாயணத்தின் எந்தவொரு இடத்திலாவது இராவணன் நமது இலங்கையரசன் என்றகுறிப்பு இல்லை. வால்மீகி இராமாயணத்தில் இராவணனுடன் சேர்த்துக் கூறப்படும் 'லங்கா' என்பதனைப் பலரும் பலவாறு அடையாளங் கண்டுள்ளார்கள். சேர்தார் எம். வி. கிபே என்பவர் நெர்புதா ஆற்றைச் சுற்றியுள்ள சதுப்பு நிலமே வால்மீகி இராமாயணத்தில் வரும் லங்கா எனக் கவனித்துள்ளார். இன்றும் இராவணனுடன் இப்பகுதியை இணைக்கும் கதை மரபு இருப்பதனையும் இவர் எடுத்துக்

12. S. C. Paul, 'Pre-Vijayan Legends and Traditions Pertaining to Ceylon', **Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society** (JRASCB). XXXI, No. 82, (1929), — பக். 263.

13. S. N. Vyas, **India in the Ramayana Age**, (Delhi, 1967), — பக். 7.

14. மே. கு.

காட்டுவார்.[14அ] இந்த லங்கா என்பது, நாம் வசிக்கும் இலங்கையையே குறித்தது என்ற கருத்து இன்று வேரூன்றி இருந்தாலும் இதனை ஏற்கத்தக்க விதத்தில் எந்தவித நம்பகரமான சான்றும் நமக்கில்லை. இந்த லங்கா நமது இலங்கையைக் குறிக்கவில்லை என்ற கருத்துக்கு ஆதரவாகக் கொடுக்கப்படும் காரணங்கள் ஏற்கத்தக்கவையாகவுள்ளன.[14ஆ] தவறான விளக்கத்தின் அடிப்படையில் இராவணனை இலங்கையுடன் தொடர்புபடுத்தும் கதை மரபு தோற்றம் பெற்று அது கம்பராமாயண காலத்தில் நன்கு வேரூன்றிவிட்டது எனவேண்டும். இத்தகைய ஒரு கதை மரபு முற்பட்ட காலத்தில் இருந்தது எனவும் கொள்ளமுடியாது. நமக்குக் கிடைக்கும் ஏராளமான சங்க இலக்கியங்களில் எந்த ஒன்றிலும் இராவணனையும் இலங்கையையும் தொடர்புபடுத்தும் குறிப்பு எதுவுமில்லை. அத்துடன் முக்கிய சிங்கள இதிகாசங்களான தீபவங்ஸம், மகாவங்ஸம் கூட இலங்கைக்கும் இராவணனுக்குமான தொடர்பை எந்தவிதத்திலும் காட்டவில்லை. ஆகவே, இலங்கையையும் இராவணனையும் தொடர்புபடுத்தும் கதை மரபு ஆரம்பத்தில் இருக்காததொன்றாய் அது பிற்படத் தோன்றிய கதை மரபென்றே கொள்ளவேண்டும். மக்கள் மனதைக் கவரத்தக்க வலிமைமிக்க ஒரு பாத்திரமாக இராவணன் படைக்கப்பட்ட காரணத்தினால் இராவணன் பற்றிய மரபுக் கதை அதிக காலம் நிலைபெறக்கூடியதாக இருந்தது. சரியாக அறியப்படாத காலத்தைச் சேர்ந்தவனுதலாலும் குறிப்பிடத் தக்க புகழ் பெற்ற பாத்திரமாகச் சித்திரிக்கப்படுவதாலும் இராவணன், சில நிறுவனங்களின் தொன்மையைக் காட்டப் பயன்படும் பாத்திரமாகவும் மாற்றப்பட்டுவிட்டான். இதன் அடிப்படையிலேயே கோணேஸ்வரம் கோவில் இராவணனுடன் தொடர்புபடுத்தப் பட்டிருக்கின்றது எனவேண்டும். இத்தகைய ஒரு செயலை இங்கு மாத்திரம் நாம் காணவில்லை. இது பொதுவாகச் சர்வசாதாரணமான ஒரு செயலாகும். உதாரணமாக, இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அனுராதபுரத்தில் ஆட்சி நடத்தியவனும் பிரசித்தி பெற்றிருந்தவனுமான பண்டுகாபயன் காலத்தைப் பற்றி மகாவங்ஸம் குறிப்பிடுகையில், அவன் காலத்தில் நடக்காத சில சம்பவங்களையும் 'அவனுடன் தொடர்பு படுத்திக் கூறுவதனைக் காணலாம்.[15] இதேபோல, கோணேஸ்வரம் கோவிலின் தோற்ற காலம் தெரியப்படாதபோது, இராவணன் வாழ்ந்த காலம் தொன்மைக்காலம் எனக் கதைகளின் மூலம் நம்பப் பட்டமையால் கோணேஸ்வரம் இராவணனால் வழிபடப் பட்டதென்றுகூறிக் கோணேஸ்வரம்கோவில் இராவணன் காலத்துக்கும் முற்பட்டது எனக் காட்டுவதற்கு எடுத்த முயற்சியின் விளைவே இராவணனையும் கோணேஸ்வரத்தையும் தொடர்புபடுத்தும் புராணக் கதை எனலாம்.

அப்படியானால் கோணேஸ்வரம் கோவிலின் தோற்றம் எப்போது ஏற்பட்டது என்பது ஆராயப்படவேண்டிய தொன்றாகும். கோணேஸ்வரம் கோவில் பற்றிய தெளிவான தகவல்களை நாம் பெற்றுக் கொள்ளும் காலம் பல்லவர் காலமாகும். இக் காலத்தின் ஒரு பகுதியில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், தான் பாடியருளிய பல தலங்களுள் கோணமாமலையமர்ந்தார் மீதும் ஒரு பதிகத்தைப் பாடியுள்ளார்.[16] இதற்கு முற்பட்ட காலத்தில் கோணேஸ்வரம் கோயில் எத்தகைய நிலையில் இருந்தது என்பதனைத் தெளிவாக எடுத்துக்காட்டத்தக்க வகையில் நமக்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. திருகோண

14அ. Sirdar M. V. Kibe, 'Ravana's Lanka Discovered', **Proceedings and Transactions of the First Oriental Conference**, (Poona, 1920) — பக். 126–127

14ஆ. S. C. Paul, மு. கு., — பக். 269–270

15. **Mahavamsa or the Great Chronicle of Ceylon**, (Pali Text Society) (PTS) (London, 1934), X, — பக். 68-76.

16. பதிப்பாசிரியர் : இராமலிங்கத் தம்பிரான், **திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள்**, மூன்றாவது திருமுறை, (தருமபுரம், 1955), — பக். 595-593.

மலையில் ஓர் இந்துக்கோவில் பற்றி மிக முற்படப் பெருமளவு தெளிவாக அறியக்கூடிய காலம் மஹாஸேனன் காலமே. மகாவம்சம் மஹாஸேனனின் ஆட்சிக்காலம் பற்றிக் குறிப்பிடுகையில், மகாயான பௌத்தமதத்திற்கு ஆதரவாக ஏனைய மதங்களுக்கெதிராக அவன் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. இப்போது மஹாஸேனனால் இடிக்கப்பட்ட விஹாரைகளுள் கோகர்ண பிராமண விஹாரையும் ஒன்றாகும். இது பற்றி மகாவம்சம் குறிப்பிடுகையில் :

> "மணிஹீர விஹாரத்தையும் அரசன் (மஹாஸேனன்) கட்டினான். (பிராமணக்) கடவுளர்களுக்கான கோவில்களை அழித்து மூன்று விகாரங்களை அமைத்தான். கோகர்ண விஹாரம், ஏரகாவிலத்தில் ஒரு விஹாரம், கலந்தன் என்ற பிராமணனுடைய கிராமத்தில் ஒரு விஹாரம் என்பவற்றை அமைத்தான்".[17]

கோகர்ணம் என்பது திருகோணமலையைக் குறிப்பதாகும்.[18] மகாவம்சம் தரும் தகவலுக் கிணங்கத் திருகோணமலையில் பிராமணக் கடவுளுக்கான கோவில் ஒன்று மஹாஸேனனால் இடிக்கப்பட்டது எனத் தெரிகின்றது. மஹாவம்சத்தின்மீது எழுதப்பட்ட உரை நூலான மஹாவங்ஸதீக இது பற்றிக் குறிப்பிடுகையில், மஹாஸேனனால் இடிக்கப்பட்ட கோவில்களுள் ஒன்று திருகோணமலையிலிருந்த சிவலிங்கக் கோவில் ஆகும் எனக் குறிப்பிடுகின்றது.[19] இக்காலமளவில் வேறு இந்துக் கோவில்கள் திருகோணமலையில் இருந்ததற்குச் சான்றில்லை. அதே நேரத்தில் மஹாஸேனன் காலத்துக்கும் திருஞானசம்பந்தர் காலத்துக்குமிடைப்பட்ட காலத்தில் திருகோணமலையில் இந்துக்கோவில் இருந்ததற்கான சில தகவல்கள் கிடைக்கின்றன.[20] இதனைக் கொண்டு கவனிக்கையில் மஹாஸேனன் காலத்து இந்துக் கோவிலும் திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்கள் சிலவற்றில் இடம்பெற்ற கோணேஸ்வரக் கோவிலும் ஒன்றாக இருக்கலாம் எனத் தெரிகின்றது. இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தால் கோணேஸ்வரம் கோவில் பற்றி நமக்குக் கிடைக்கும் அதி முந்திய தகவல் மஹாஸேன மன்னன் காலத்ததாகும். அப்படியானால் இதற்கு முற்பட்ட காலத்தில் கோணேஸ்வரம் கோவில் எவ்வாறிருந்தது என்பது பிரச்சினைக்குரியதாகும். இப் பிரச்சினையையொட்டிக் கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தில் இக் கோவில் தோற்றம் பெற்றிருக்கலாமா எனக் கவனிப்பது பொருத்தமானதாகத் தெரிகின்றது. இதனால் இக்காலத்து நிலவிய சமய நிலைபற்றிய அறிவு அவசியமானது.

கிறித்துவுக்கு மிக முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கைக்கும் பிற நாடுகளுக்குமிடையே குறிப்பாக இந்தியாவுக்குமிடையே வர்த்தகத் தொடர்புகள் இருந்து வந்தன என அறியலாம். எந்த நாடுகளுக்கிடையேயும் பொதுவாக முதலில் வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டு அதன் வழியே பிற தொடர்புகள் அதாவது கலாசார அரசியல் தொடர்புகள் ஏற்பட்டன; ஏற்படுகின்றன என்பதை வரலாற்றில் காணக்கூடியதாக இருக்கிறது. இலங்கை இந்திய துணைக்கண்டத்துக்கு அருகில் இருப்பதுவும், மற்றும் இந்து சமுத்திரத்தில் ஒரு கேந்திர ஸ்தானமாக விளங்குவதும், கிறித்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இலங்கைக்கும் வெளிநாடுகளுக்குமிடையே வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட வழிவகுத்தன. வரலாற்றாராய்ச்சியைப் பொறுத்து ஜாதகக் கதைகள் அதிகம் நம்பகரமானவையாக,

17. **Mahavamsa**, XXXVII, — 40-41.
18. G. P. Malalasekera, **Dictionary of Pali Proper Names**, Indian Texts Series, (London), 1937. பக். 782.
19. G. P. Malalasekera, (Editor), **Vamsattbappakasini**, Commentary on the Mahavamsa, (PTS), Vol. II, (London, 1935), பக். 685.
20. K. Indrapala, 'Hindu Temples of Ancient Ceylon', **Hindu Dharma**; (Colombo 1962—63), — பக். 2–3.

இல்லாவிட்டாலும் இக்கால வர்த்தக நடவடிக்கைகள் பற்றி யறிய அவை உதவுகின்றன. கிறித்துவுக்கு முற்பட்ட ஆரும் நூற்றாண்டளவில் ஏற்பட்ட ஆரியக் குடியேற்றம்கூட வர்த்தகத் தொடர்பைத் தொடர்ந்து ஏற்பட்டதொன்றே. பொதுவாக மஹாவம்சம் குறிப்பிடுகின்ற காலத்துக்கு முன்னரேயே இலங்கையில் ஆரியக் குடியேற்றம் நடைபெற்றிருக்கவேண்டும் எனக் கொள்ளப்படுகின்றது.[21] இதனை ஏற்கலாம். காரணம் குடியேற்றமானது ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடந்து முடிவதல்ல. அது வெவ்வேறு காலங்களில் இடம் பெறலாம். பொதுவாக ஒரு நாட்டிலிருந்து இன்னோர் நாட்டுக்கு மக்கள் குடியேறக் காரணம் படையெடுப்பாளரின் நெருக்குதல், குடிசனமிகுதி, உள்நாட்டுப் பிரிவினைகள், வர்த்தகம். இவற்றில் முதல் மூன்றும் ஆரியரை எதிர்நோக்கியதாக இல்லை. இதனால் சமாதானமுறையில் நடைபெற்ற ஆரியக் குடியேற்றம் வர்த்தக சம்பந்தமாக நடைபெற்றதென்பதே பொருத்தமாகும்.[22] திவ்வியாவதான என்ற நூலில் வட இந்திய வியாபாரி ஒருவனின் மகன் விஜயன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[23] பாஹியான் இலங்கை பற்றிக் குறிப்பிடும்போது, இலங்கையில் ஆரம்பத்தில் குடிகள் எவரும் இருக்கவில்லை. நாகர்கள், தேவதைகள் (Dragons) என்போரே இருந்தனர். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வியாபாரிகளும் வர்த்தகம் செய்ய இங்கு வந்தனர். இந்த வியாபாரிகளின் வருகையைக் கண்ட ஏனைய நாட்டு மக்கள் (இந்த நாட்டின்) தன்மையைக் கேள்வியுற்று அதிகமாக வந்ததால் ஒரு பெரிய இராச்சியம் உருவாகியது.[24] இலங்கையில் நடந்த ஆரியக் குடியேற்றம் பற்றி மஹாவங்ஸத்தில் இடம்பெறும் மரபுக் கதைகளிலிருந்து வேறுபட்டவையாக மேற்கூறப்பட்டவை காணப்படுவதனால், மஹாவங்ஸத்தில் கூறப்பட்ட ஆரியக் குடியேற்றம் நடப்பதற்கு முன் நடந்த ஆரியக் குடியேற்றத்தைக் குறிப்பனவாக இவை இருக்கலாம்.[25]

நாம் மேலே கவனித்தவாறு கிறித்துவுக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட நிலவிய வர்த்தகத் தொடர்புகளைத் தொடர்ந்து வடஇந்தியாவிலிருந்து இலங்கையில் ஏற்பட்ட ஆரியக் குடியேற்றத்தினால் சில கலாசாரத் தொடர்புகள் ஏற்படலாயின. தேவனம்பியதீஸன் ஆட்சிக்காலத்தில் அதாவது கி. மு. மூன்றும் நூற்றாண்டில் (கி. மு. 250—310) பௌத்தமதம் இலங்கையில் உத்தியோகபூர்வமாகப் பரப்பப்பட்டது. பௌத்தம் உத்தியோகபூர்வமாகப் பரப்பப்படுவதற்கு முன்னரும் எவ்வாறு பௌத்தமத நம்பிக்கைகள் இலங்கையில் காணல்பட்டனவோ[26] அதேபோல வேறுமத நம்பிக்கைகளும் அங்கு காணப்பட்டன என அறிய முடியும். கி. மு. மூன்றும் நூற்றாண்டுக்கு முந்திய எவ்வகைப்பட்ட சாசனங்களும் நமக்குக் கிடைக்காமையால் இக்காலத்துக்கு முந்திய சமய நம்பிக்கைகள் பற்றிய அறிவுக்கு மஹாவங்ஸம் தரும் தகவல்களிலேயே தங்கியிருக்கவேண்டியுள்ளது. பௌத்தமத வருகைக்கு முற்பட்ட காலத்து வரலாறு பற்றி மஹாவங்ஸம் தரும் தகவல்கள் அதிகம் நம்பகரமானவையாக இல்லாவிட்டாலும், அக்கால மத நம்பிக்கைகள்பற்றி மஹாவங்ஸத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் தற்செயலாக இடம் பெற்ற தகவல்களாக இருப்பதனால் அவற்றை இங்கு ஆதாரங்களாகப் பயன்படுத்துவதில் தவறில்லை. அத்துடன் மஹா

21. B. J. Perera, 'The Foreign Trade and Commerce of Ancient Ceylon II — Ancient Ceylon and Its Trade with India', **The Ceylon Historical Journal** (CHJ), 1, (1951—52), — பக்: 192.

22. மே. கு.

23. E. B. Cowell and R. A. Neil (Editors), **The Divyavadana**, A Collection of Early Buddhist Legends, (Cambridge, 1886), — பக். 523.

24. Legge, **Fa–Hien's Record of Buddhistic Kingdom**, (Oxford, 1886) — பக். 101–2.

25. B. J. Perera, மு. கு., — பக். 193.

26. E. W. Adikaram, **Early History of Buddhism in Ceylon**, (Colombo, 1946), —பக். 48

வங்ஸத்தில் இக்காலச் சமய நம்பிக்கைகள் பற்றிக் கூறப்பட்டவற்றை ஏனைய நாடுச் சமகாலச் சமய நிலைமைகள் மாத்திரமன்றி, கி. முற்பட்ட மூன்றும் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்ற சாசனங்களும் உறுதிப்படுத்துகின்றன. மஹாவம்ஸம் தரும் தகவல்களுக்கிணங்கப் பௌத்தமத வருகைக்கு முன்னர் இயக்கர், நாகர் என்போரது வழிபாட்டு முறைகள், மரவழிபாடு, இலிங்க வழிபாடு, மற்றும் ஜைனம், பிராமணியம் ஆகிய மதக் கருத்துகள் காணப்பட்டன என அறியலாம்.[27] இவ்வாறு மத நம்பிக்கைகள் கருத்துகள் காணப்பட்டாலும் ஒரு தேசிய மதம் என்று கூறத்தக்கதாகவோ அல்லது ஒழுங்குபடுத்தப்பட்டதாகவோ பௌத்த மதத்தின் வருகைக்கு முன் இலங்கையில் ஒரு மதமும் காணப்படவில்லை. பௌத்த மதவருகைக்குமுற்பட்ட மதநம்பிக்கைகளைக் கவனித்த ஹூஆன் திஸாங் குறிப்பிடுகையில் முன்பு சிங்கள இராச்சியத்தில் ஒழுக்கக் கேடான சமய வழிபாடே காணப்பட்டது என்றும் புத்தர் இறந்து முதல் நூறு வருடங்களின்பின் அசோக ராஜனின் இளைய சகோதரனை மஹேந்திரர் எனப் பெயர் கொண்டவர் இலங்கைக்கு வந்து உண்மையான தர்மத்தின் அறிவைப் பரப்பினர் என்றும் கூறியுள்ளான்.[28] இங்கு பௌத்தத்திற்கு முதல் நிலவிய சமய நம்பிக்கை முறைகளை ஹூஆன் திஸாங் "ஒழுக்கக் கேடான சமய வழிபாட்டு முறை" என வர்ணித்துள்ளான். ஹூஆன் திஸாங் கிறித்துவிற்குப் பிற்பட்ட ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவனாக இருந்தாலும் இம்முற்பட்ட மத நம்பிக்கைகள் பற்றிக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இக் கருத்தைத் தெரிவித்திருக்கலாம். இக் காலச் சமய நம்பிக்கைகளின் நன்கு ஒழுங்கு படுத்தப்படாத தன்மையே ஹூஆன் திஸாங் அவற்றை ஒழுக்கக்கேடான நம்பிக்கைகள் எனக் கூற இடமளித்திருக்கலாம்.

பௌத்தமத வருகைக்கு முன்னர் நிலவிய எல்லா வழிபாடுகளையும் மதக் கருத்துக்களையும் எடுத்தாராய்வது இக்கட்டுரையின் நோக்கமன்று. ஆகையால், நமது தேவையின் அடிப்படையில், இக்கால மதவழிபாட்டுமுறைகளுள் ஒன்றான இந்துமத வழிபாடு எத்தகைய நிலையில் இருந்தது என்பதனைக் கவனிக்கலாம். மஹாவம்ஸம் தருகின்ற தகவல்கள் சிலவற்றிலிருந்து பௌத்தமத வருகைக்கு முற்பட்டகாலத்துப் பிராமணர்களின் நடவடிக்கைகள் பற்றி அறிந்துகொள்ளலாம். விஜயன் இலங்கைக்கு வந்தமையினைப்பற்றிக் குறிப்பிடும்போது, விஜயனுடன் உபதிஸ்ஸ என்ற பிராமணனும் (உபதிஸ்ஸோ புரோகிதோ) கூடவந்தான் என்றும் அவன் அனுராதபுரத்துக்கு வடக்கே உபதிஸ்ஸகாமம் என்ற கிராமத்தை அமைத்தான் என்றும் மஹாவம்ஸம் கூறுகின்றது.[29] இதே உபதிஸ்ஸ என்ற பிராமணனே, விஜயனின் இறப்புக்கும் பண்டுவாஸுதேவனின் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் அதிகாரம் பெற்றிருந்தான் என்றும் அறியப்படுகின்றது.[30] மேலும் பண்டுகாபயன் பற்றி மஹாவம்ஸம் குறிப்பிடும்போது பண்டுல எனப் பெயர்பெற்ற பிராமணன் ஒருவன் பற்றியும் குறிப்பிடுகின்றது. அதாவது பண்டுகாபயனின் தாய், அரச நடவடிக்கைகளில் பயிற்சிபெறச் செய்வதற்காகத் தனது மகனைப் பண்டுல என்ற பிராமணனிடம் ஒப்படைத்தாள்.[31] மேற்கொண்டு, மஹாவங்ஸம் கூறுவனவற்றி

27. S. Paranavitana, 'Pre – Buddhist Religious Beliefs in Ceylon', **JRASCB**, XXXI, No. 82 (1929), — பக். 302-328.

28. Hiuen Tsiang, **Buddhist Records of the Western World**, (Translated by Samuel Beal), Book XI, (London ?), — பக். 246–47.

29. **Mahavamsa**, VII-44

30. S. Paranavitana, மு. கு., பக். 321.

31. **Mahavamsa**, X, 21.

லிருந்து இப் பண்டுல என்பவன் பணம் படைத்த, வேதங்களைக் கற்றுத் தேர்ந்த ஒருவனாக இருந்தான் எனவும் அறிய லாம்.[32] பிற்பட்ட காலத்தில் தனது மாமன்மார்களுடன் நீண்ட போராட்டம் ஒன்றை நடத்தக்கூடியதாகப் பண்டுகாபய னுக்குப் போர்ப்பயிற்சியை அளித்தவன் இந்தப் பண்டுல என்பவனே.[33] இப் பிராமணனின் மகன் 'சந்திர' என்பவன் ஒரு புரோகிதனுக்கான கடமைகளை மேற் கொண்டதோடு ஓர் இராணுவத் தளபதி யாகவுமிருந்து பண்டுகாபயனுக்குச் சேவை செய்தான்.[34] தேவாநம்பியதிஸ்ஸ தனது சமகால வடஇந்திய ஆட்சியாளன் அலோ கனுக்குப் பரிசுப் பொருள்கள் அனுப்பிய போது தேவாநம்பியதிஸ்ஸனின் மரு மகன் அறித்தா என்பவனுடன் அரசனின் புரோகிதனும் உடன் சென்றான் என அறியப்படுகின்றது..[35] அனுராதபுரத்துக் குப் போதிமரக் கிளை கொண்டுவரப்பட்ட போது, கடற் றுறைமுகத்திலிருந்து நகருக் கிடைப்பட்ட பகுதியில் சமயாசாரப்படி பலதடவைகள் நிறுத்தி நிறுத்திக் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு நிறுத்தப்பட்ட இடங்கள் பற்றிக் குறிப்பிடுகையில், திவக்க எனப் பெயர்பெற்ற பிராமணனின் இராமத் துக்குப் போகும் வழியிலும் போதி மரக் கிளை நிறுத்தப்பட்டது என மஹாவங்ஸம் குறிப்பிடுகின்றது.[36] இந்தப் பிராமணன் மிக முக்கியத்துவம் பெற்ற ஒருவனாக இருந்தான் என்பதனை மஹாவங்ஸம் தரும் செய்திகளிலிருந்து கவனிக்க முடிகின்றது. அதாவது போதிமரம் நாட்டப்பட்ட வைப வத்தின்போது சமூகம் கொடுத்த முக்கியத் துவம் வாய்ந்தோரில் இப் பிராமணன் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளான்.[37]

பிராமணர் பற்றி மஹாவங்ஸம் தரும் மேற்கூறிய தகவல்களைக் கவனித்துப் பார்க் கும்போது பௌத்தத்திற்கு முற்பட்ட இலங்கையின் சமூகத்தில் பிராமணர் குறிப் பிடத்தக்க நிலையைப் பெற்றிருந்தார்கள் எனல் வேண்டும். இக்காலத்திற் பிராமணர் கள் எவ்வாறு இத்தகைய குறிப்பிடத்தக்க ஒரு நிலையைப் பெற்றிருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கதாகும். இதனை விளங்கிக் கொள்வதற்கு இக்காலமளவில் வடஇந்திய சமூகத்தில் பிராமணர் பெற்றிருந்த நிலை பற்றிய அறிவு ஓரளவுக்கு அவசியமாகின் றது. வேதகால, பிற்பட்ட வேதகால நூல் களிலிருந்து, வட இந்திய சமூகத்தில் பிரா மணர்கள் உயர்ந்த நிலையைப் பெற்றிருந் தார்கள் என்பதனை அறியலாம். பிராமணர் நிலை பற்றி அறிய நாம் பயன்படுத்தும் இக் கால அறநூல்கள் ஒரே வர்க்கத்தினரால் எழுதப்பட்ட நூல்களாகையால், இக் காலச் சமூகத்தில் பிராமணர் பெற்றிருந்த நிலை உயர்த்தப்பட்டிருக்கலாம் என்றாலும், நால்வகை வருணத்தவருள்ளும் பிராமணர் கூடிய அந்தஸ்தைப் பெற்றிருந்தார்கள் என்பதனை மறுப்பதற்கில்லை. சாஸ்திரங் களைக் கற்பதும் கற்ற சாஸ்திரங்களைப் போதிப்பதும், முதல் மூன்று வருணத்தவ ருக்குச் சமயச்சடங்குகள் செய்வதும், முதல் மூன்று வருணத்தவர்களிடமிருந்து கொடை களை ஏற்பதும் இவர்களுக்கமைந்த கருமங்க ளாகக் கருதப்பட்டன.[38] பிற்பட்ட வேத காலத்தில், பிராமணர் தாம் சட்டத்தி லும் மேலானவர்கள் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள்.[39] இறிஸ்துவுக்கு முற் பட்ட எட்டாம் அல்லது ஏழாம் நூற் றாண்டுக்குச் சேர்ந்ததாகக் கருதப்படும் பிந்திய வேதகால நூல்களுள் ஒன்றான

32. **Mahavamsa**, X, 21.
33. மே. கு., 21—23
34. மே. கு.
35. மே. கு., XI, 20
36. மே. கு., XIX, 37
37. மே. கு., 54
38. T. N. Bhattachariya, **Hindu Castes and Sects**, (Culcutta, 1896), —பக். 19—23.
39. A. L. Basham, **The Wounder that was India**, Third Edition, (Canberra, 1967), — பக். 121.

ஐதரேய பிராமண நூல்[40] கூறுவதற் கிணங்க, யாகம் செய்ய விரும்பும் ஒவ் வொரு அரசனும் ஒரு புரோகிதனைக் கொண் டிருக்கவேண்டும். அல்லாவிடில் கடவு ளர்கள் அந்த யாகத்திலுள்ள பொருள்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.[41] பிராம ணன் என்ற சொல்லு முதலில், யாகம் நடைபெறும்போது, முழு யாகத்தையும் மேற்பார்வை செய்து சமயச் சடங்குகள் நடைபெறுகின்றபோது ஏற்படுகின்ற சில தவறுகளினால் யாகத்தில் தீய சக்திகளின் தலையீடு ஏற்படாமல் தடுப்பதற்காக மந்திர சக்தியிற் சிறப்புப்பயிற்சி பெற்றிருந்த குரு வுக்கு வழங்கப்பட்டதாகும்.[42] ஜாதகங்களி லும் பிராமணருக்கிருந்தகடமைகள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கூடாத கனவுகளின் மூலமோ அல்லது தீயசகுனங் களின் மூலமோ அரசனுக்கு ஏற்படும் ஆபத் துக்களைப் போக்குவதற்காகப் புரோகிதன் யாகங்கள் செய்ய வேண்டும். சமயச்சடங் குகளின்போது மாத்திரமன்றி நாளாந்த வாழ்க்கையிலும் அரசனுக்கு ஆலோசனை வழங்கும் முக்கிய ஆலோசகனுகவும் பிராமணன் காணப்பட்டான்.[43] சிறிது பிற்பட்டகால மனுதர்ம சாஸ்திர நூலில் "மனித உருவிலுள்ள பெருந் தெய்வ மாகப் பிராமணன் மதிக்கப் பட்டான் என்றும் அரசனும் படையினரும் அவனது உரிமை களை மீற முயற்சித்தால் பிராமணன் பெற் றிருந்த ஆத்மீக சக்தி அவர்களை அழித்து விடும் என்றும்" கூறப்பட்டுள்ளது.[44]

மேற்கூறியவற்றைக் கவனிக்கும்போது வேதகாலத்திலும் அதனைத் தொடர்ந்து பிற்பட்ட வேதகாலத்திலும், தர்மஸூத்திர, தர்மசாஸ்திர காலத் திலும் பிராமணர்கள் சமூகத்தில் ஏனைய வருணத்தவரைக் காட்டிலும் உயர் வான நிலையைப் பெற்றிருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது. மஹாவங்ஸம் தரும் குறிப்புக்களிலிருந்து, இக்கால இலங்கையின் சமூகத்திலும் பிராமணர் செல்வாக்குப் பெற்றிருந்ததை முன்பு கவனித்தோம். இக்காலமளவில், ஏற்பட்ட வட இந்தியாவுடனான வியாபார, குடி யேற்றத் தொடர்புகளின் காரணமாகச் சம கால வடஇந்திய கலாசாரத்தின் பாதிப்பு இலங்கையிலும் ஏற்படலாயிற்று. கிறிஸ்து வுக்கு முற்பட்ட மூன்றும் நூற்றாண்டுக்குப் பின்னர் அதாவது பௌத்த மத வருகைக் குப் பின்னுள்ள காலத்திருந்து கி. மு. முதலாம் நூற்றாண்டு முடியவுள்ள காலப் பகுதியில், இலங்கையில் பிராமணர்கள் பற்றி மஹாவங்ஸம் ஒரு சில தகவல் களையே தருகின்றது. இலங்கையில் எல்லாளனின் ஆட்சிக் காலத்தில் (கி. மு. 145-101) மிகிந்தலைக்குக் கிட்டவுள்ள துவார மண்டலம் என்ற கிராமத்தில் இருந்த குண்டல எனப் பெயர்கொண்ட பிராமணன் பற்றி மஹாவங்ஸம் குறிப்பிட் டுள்ளது. மஹாவங்ஸம் கூறுவதிலிருந்து, எல்லாளனின் அதிகாரத்துக் குட்பட்ட பிரதேசத்தில் இப்பிராமணன் இருந்த போதிலும் காக்கவண்ண தீஸனுக்கு ஆதர வாளனாக இருந்தான் என அறியலாம்.[45] காக்கவண்ண தீஸனின் புரோகிதனாக இருந் தவனின் மகள் சிரிகாலி என்பவள் கல்வி யில் தேர்ந்திருந்தாள் என்றும் பின்னர் பிக்குணி சங்கத்திற் சேர்ந்துகொண்டாள் என்றும் தீபவங்ஸத்திலும் அறியலாம்.[46]

---

40. மே. கு. — 82

41. Martin Hang (Editor), **Aitareya Brahmanam of the Rigveda**, The Sacred Books of the Hindus, VII, 24.

42. A. L. Basham, மு. கு., பக். 140.

43. H. Ellawala, **Social History of Early Ceylon**, 1969, — பக். 12.

44. F. Max Muller (Editor), **The Laws of Manu**, Sacred Books of the East, Vol. XXV, IX 317.

45. **Mahavamsa**, — XXIII, 24–26

46. B. C. Law (Editor), **The Dipavamsa**, A Historical Poem of the 4th century A. D. (February, 1059), 18, 21.

வட்டகாமினி அபயன் காலத்தில் (கி. மு. 44, 29-17) ரோஹணத்திலிருந்து திஸ்ஸ எனப் பெயர் கொண்ட பிராமணன் ஒருவன் வட்டகாமினிக் கெதிராகக் கலகம் செய்தான் என மஹாவங்ஸம் குறிப்பிடுகின்றது.[47]

நாம் மேலே கவனித்ததுபோல, கி. மு. மூன்றும் நூற்றாண்டுக்கும் கி. மு. முதலாம் நூற்றாண்டு முடிவிற்குமிடைப்பட்ட காலத்தில், பிராமணர் பற்றி மஹாவங்ஸம் ஒரு சில தகவல்களையே தந்தாலும், இக்காலத்துக்குரியனவான நமக்குக் கிடைக்கும் சாசனங்கள் பிராமணர் பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றும் நூற்றாண்டிலிருந்து இக்காலமளவில் கொடுக்கப்பட்ட குகைத்தானங்களைப் பதிவு செய்வதற்காகப் பொறிக்கப்பட்ட குகைச் சாசனங்கள், மற்றும் பிராஹ்மி சாசனங்கள் பிராமணர் பற்றிய சில தகவல்களைத் தருகின்றன. பிராமணர் பற்றிய குறிப்புக்களைத் தரும் இக்காலத்துக்குரிய சாசனங்கள் பற்றிய விபரம் பின் வருமாறு :[48]

தொடர் இல.	சாஸன இல.	இடம்	மாவட்டம்	விபரங்கள்
1.	67	ராஜகிரிகந்த	அனுராதபுரம்	பிராமணனின் மகன் 'ரெத' என்பவனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகிறது.
2.	124	ஹந்தகல விஹாரை	அனுராதபுரம்	பிராமணனின் மகன் புஸ்ஸதேவனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகிறது.
3.	205	யாக்கல	அனுராதபுரம்	கோணிகல் என்ற பிராமணனின் மகன் விஜிதசேனனின் குகை.
4.	228	மஹா அலகழுவ	அனுராதபுரம்	பூஜிக்கத்தக்க பிராமணன் திஸ்ஸவின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகிறது.
5.	242	றிற்றிகல— அன்டியகந்த	அனுராதபுரம்	உத்தர என்ற பிராமணனின் மகன் குட்ட என்பவனின் குகை.
6.	296	கந்தேகமகந்த	பொலன்னறுவை	பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த உத்திய என்ற பிராமணனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.
7.	545	கோங்கல	அம்பாறை	அதிமதக என்ற பிராமணனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.
8.	577	மண்டகல	அம்பாந் தோட்டை	பிராமணனின் மகன் பூதி என்பவன் பற்றியது
9.	589	மண்டகல	அம்பாந் தோட்டை	ஸுமண என்ற பிராமணனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.
10.	601	மஹாலிதுல் பவுவ	அம்பாந் தோட்டை	வச்ச என்ற பிராமணனது மகனின் குகை.
11.	656	லிதுல்பவுவ	அம்பாந் தோட்டை	கோதம என்ற பிராமணனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.

47. **Mahavamsa**, XXXIII, 37–41.

48. இங்கு கொடுக்கப்படுகின்ற சாசன இலக்கம் என்பது பரணவிதான அவர்களின் Archaeological Survey of Ceylon; Inscriptions of Ceylon (Vol. I — 1970) என்ற நூலில் தரப்பட்டுள்ள சாசன இலக்கங்களைக் குறிப்பதாகும். பரணவிதான தந்துள்ள சாசன வாசிப்புக்களின் அடிப்படையிலேயே இச்சாசனங்கள் ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தொடர் இல.	சாஸன இல.	இடம்	மாவட்டம்	விபரங்கள்
12.	812	மொலகொட	கண்டி	பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த ஸுரிய என்பவனின் மகன் தத்தக என்ற பிராமணனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.
13.	814	பம்பறகல	கண்டி	கொஜ்ற என்ற பிராமணனின் மகளும் நாக அரசன் பொசனி என்பவனின் மனைவியுமான தத்த என்பவளது குகை.
14.	838	தம்புல்ல	மாத்தளை	பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த திஸ்ஸ என்ற பிராமணனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.
15.	1003	ஸஸெறுவ	குருநாகல்	வஸகணி என்ற பிராமணனின் மகன் ஸோமதேவனின் குகை.
16.	1045	தியபத்த விஹாரை	குருநாகல்	மொக்கவி என்ற பிராமணனின் மகனும் பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த வருமான மஜ்ஜிம என்பவனின் மகன் தத்தவின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.
17.	1059	பிச்சண்டியாவ	புத்தளம்	கடவுளர்களின் நண்பனும் (தேவநம்பிய காமினி திஸ்ஸ எனப் பெயர்பெற்றிருந்த வனுமான அரசனுக்கு வைத்தியனாகவிருந்த கோபூதி என்ற பிராமணனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது. ஸிவபூதி என்பவன் கொடுத்த குகைத் தானமும் இதில் குறிப்பிடப்படுகிறது.
18.	1060	பிச்சண்டியாவ	புத்தளம்	கடவுளர்களின் நண்பனான (தேவாநம்பிய) அரசனுக்கு ஆசிரியனாக இருந்த கோபூதி என்ற பிராமணனின் குகை.
19.	1065	பிச்சண்டியாவ	புத்தளம்	புஸ்ஸக என்ற பிராமணனின் மகன் புனபஸ்ஸுத்த என்பவனின் குகை.
20.	1111	மிஹிந்தலை	அனுராதபுரம்	ஸீஹ என்ற பிராமணனின் மகள் தேவ என்பவளின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.
21.	1136	ஹந்தகல	அனுராதபுரம்	பருமகர்[49] என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த பிராமணனின் மகன் குத்த என்பவனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.
22.	1194	ரணசிரமட	குருநாகல்	பிராமணனின் மகனும் தம்மகுத்த என்பவனின் சகோதரனுமான மஹாதத்த என்பவனின் குகை சங்கத்துக்குக் கொடுக்கப்படுகின்றது.

---

49. பருமகர் என்ற சொல்லு, உயர்ந்த நிலையில் இருந்த அதிகாரியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட ஒரு விருதுப் பெயராகும். இச்சொல் பற்றிய விரிவான விளக்கத்திற்கு — C. W. Nicholas, 'Some Offices and Titles in the Early Sinhalese Kingdom', **University of Ceylon Review**, (UCR), 8, No. 2, (April, 1950), — பக். 116-28;
S. Paranavitana, **Inscriptions of Ceylon**, — பக். /XXII – /XXXVI.

மேலே நாம் கவனித்த, நேரடியாகப் பிராமணர் பற்றிய தகவல்களைத் தருகின்ற சாஸனங்களைவிட, இக்காலத்து வேறுசில பிராமிச் சாசனங்களிலும் பிராமணர் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன என ஹகத்தின் அடிப்படையிற் பரணவிதான தெரிவித்துள்ளார். ஸிதுல்பவுவ என்ற இடத்துச் சாசனம் குறிப்பிடும் ஆசிரியர் பராலரி என்பவனும், கதுருவவ இடத்துச் சாசனத்தில் வரும் வஹிதி என்பவனும், பறமாகந்த என்ற இடத்துச் சாசனம் குறிப்பிடும் வஹிரிமத என்பவனும், மிஹிந்தலைச் சாசனம் குறிக்கும் பொதிமஸ என்பவனும், றதாகம என்றஇடத்துச் சாசனத்தில் வரும் அதக என்பவனும் பிராமணர்களாக இருக்கவேண்டும் எனப் பரணவிதான கருதுகிறார்.[50] இருந்தும் இவை சந்தேகத்திற்கிடமான தகவல்களாகக் காணப்படுகின்றமையால் இவற்றை ஆதாரங்களாகச் சேர்த்துக்கொள்ள முடியாமல் உள்ளது.

மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ள பட்டியலில், கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் திருகோணமலை மாவட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் பிராமணர் பற்றிய இக்காலச் சாசனங்கள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இக்காலத்துக்குரிய ஆயிரக் கணக்கான சாசனங்களில் ஏறத்தாழ இருபத்திரண்டு சாசனங்களில் மாத்திரம் பிராமணர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சில மாகாணங்களிலிருந்து கிடைக்கின்ற சாசனங்களில் மாத்திரம் பிராமணர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுவதால், இலங்கையின் ஏனைய மாகாணங்களில் பிராமணர் இருக்கவில்லை என்பது பொருளாகாது. பிராமிச்சாசனங்கள் காணப்படும் இடங்கள் சிங்களவரின் ஆரம்பக் குடியேற்றங்களைக் காட்டுகின்றன என்றும் அதே நேரத்தில் பிராமிச் சாசனங்கள் காணப்படாத இடங்களில் சிங்களவரின் ஆரம்பக் குடியேற்றங்கள் இருக்கவில்லை என்பது அர்த்தமாகாது என்றும் பரணவிதான எடுத்துக் காட்டுவதுபோலப்[51] பிராமணர் பற்றிய குறிப்புக்களைத் தருகின்ற சாசனங்கள் இல்லாவிடங்களிற் பிராமணர்கள் இருக்கவில்லை என்பது அர்த்தமாகாது. வெறும் எண்ணிக்கையைப் பொறுத்து அதாவது ஆயிரக்கணக்கான சாசனங்களுள் இருபத்திரண்டு சாசனங்கள் எனக்கவனிக்கும்போது பிராமணர் பற்றிய தகவல்களைத் தரும் தழிழ்ச் சாசனங்கள் மிக மிகக் குறைவாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரைப் பற்றி அல்லது சமூகப் பிரிவினரைப் பற்றிக் குறிப்பிடுகின்ற சாசனங்கள் என்று எடுத்துக்கொண்டால் இந்த இருபத்திரண்டு சாசனங்கள் என்பதே குறிப்பிடத்தக்க எண்ணிக்கை எனக் கொள்ளவேண்டும்.

பிராமணர் பற்றிய மேற்குறிப்பிட்ட சாசனங்கள் தரும் விபரங்களை நாம் கவனிக்கையில், அனேகமாக அவ்வெல்லாச் சாசனங்களும் பௌத்த சங்கத்துக்குப் பிராமணர் கொடுத்த குகைத் தானங்களையே குறிப்பிடுகின்றன, இக்காலமளவில் பௌத்த சங்கத்துக்குப் பிராமணர் அளித்த ஆதரவு என்ன அடிப்படையில் அமைந்திருந்தது என விளக்குதல் கஷ்டமாகும். அதாவது இக்காலமளவில் ஏனையோர் குகைத்தானங்கள் அளித்ததுபோலத் தாங்களும் தானம் அளித்தார்களா அல்லது தானம் அளிக்கவேண்டிய தவிர்க்க முடியாத தேவை ஏதாவது அவர்களை எதிர் நோக்கியிருக்கலாமா என்பது பிரச்சினைக்குரியதாகும்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஆரும், ஐந்தாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் ஏற்பட்ட சமயக் குமுறல்கள் அதாவது பிராமண மதக் கருத்துக்களுக் கெதிராகச் சமண பௌத்தக் கருத்துக்களின் மோதுதல்கள் ஏற்பட்டன.[52] வர்த்தமான

---

50. S. Paranavitana, மே. கு., — பக். /XIX - /XX.

51. மே. கு., பக். XVI.

52. B. N. Lunia, Evolution of Indian Culture, (Agra, 1955), பக். 119–165
R. C. Majumdar, **The Age of Imperial Unity**, (Bombay, 1951), Vol. III.

வ்ஹாவீரரும் கௌதம புத்தரும், பிராமண மதக் கருத்துக்களுக்கு எதிராகத் தெரிவித்தவை மக்கள் மனதைக் கவரத்தக்கவையாக இருந்தமையால், பிராமண மதம் அது முன்பு பெற்றிருந்த செல்வாக்கின் அளவை இப்போது பெற்றிருக்கவில்லை. இதனைத் தொடர்ந்து பிராமணரின் நிலையிலும் தளர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும். அதே நேரத்தில், இச் சமயக் குமுறல் நடந்த காலத்துக்குப் பிற்பட எழுதப்பட்ட தர்மசாஸ்திர நூல்களில் பிராமணர்கள் சமூகத்திற் பெற்றிருந்த உயர்வான நிலை கூறப்பட்டுள்ளது.[53] ஒரே வர்க்கத்தினரால் எழுதப்பட்டவை எனக் கூறித் தர்ம சாஸ்திர நூல்கள் கூறுவனவற்றை நாம் தட்டிவிட முடியாது. இருந்தும் சமண பௌத்த மதக் கருத்துக்களினால் பிராமண மதக் கருத்துக்கள் பாதிக்கப்பட்டபோது சமய விவகாரங்கள் குறித்துப் பிராமணர்களின் உதவி முன்பு வேண்டப்பட்டதைக் காட்டிலும் இப்போது குறைவாக வேண்டப்பட்டிருக்கவேண்டும் எனலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையிற் கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றும் நூற்றாண்டுக்குமுன் இன்னுஞ் சிறப்பாகக் கூறுவதாக இருந்தால் பௌத்த மதத்தின் வருகைக்கு முன்னர் பிராமணர் சமூகத்தில் எத்தகைய ஒரு நிலையைப் பெற்றிருந்தார்களோ அதே நிலையைப் பௌத்த மத வருகைக்குப் பின் பெற்றவர்களாகக் காணப்படவில்லை.[54] பௌத்த மதம் அரச ஆதரவுடனேயே இலங்கையிற் பரப்பப் பட்டது. அரச ஆதரவைப் பெற்றிருந்த இம்மதம் மக்களாதரவையும் குறிப்பிடத்தக்க அளவிற் பெற்றுக்கொண்டது. தேவாநம்பிய திஸ்ஸனுக்கு (கி. மு. 247 – 207)ப் பின் வந்த அரசர்களும் பௌத்தத்திற்கே தமது ஆதரவை அளித்தனர். இத்தகைய சூழ்நிலையில் பௌத்த மத வருகைக்கு முன் பிராமணர் எத்தகைய அரச ஆதரவைப் பெற்றிருந்தார்களோ அதே ஆதரவைப் பௌத்தத்தின் பின் பெற்றிருந்திருப்பார்கள் என எதிர்பார்க்கமுடியாது. அத்துடன் சமயவிவகாரங்கள் குறித்துப் பிராமணர்களுக்கான தேவையும் பௌத்தமத அரசருக்குக் குறைவாக இருந்திருக்க வேண்டும். இத்தகைய நிலையில் தமது நிலையைத் தொடர்ந்து பாதுகாக்கக் கருதிய பிராமணர் பௌத்தமத ஆதரவாளர்களாகவும் தமக்காக அமைந்த சொந்தத் தொழில்களுடன் வேறு தொழில்களைச் செய்வோராகவும் காணப்பட்டார்கள் எனலாம்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றும் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திற் செய்தது போலக் கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றும் நூற்றாண்டுக்குப் பின்னரும் பிராமணர் அரசர்களுக்கு ஆசிரியராக இருந்தனர். பிச்சண்டியாவ என்ற இடத்து (புத்தளம் மாவட்டம்)ச் சாசனம், கோபூதி என்ற பிராமணன் அரசன் ஒருவனுக்கு ஆசிரியனாக இருந்தமை பற்றிக் கூறுகின்றது.[54அ] அதே நேரத்தில் இதே பிராமணன் அரசனுக்கு வைத்தியனாக இருத்தான் என்றும் அறியலாம். பருமக என்ற அந்தஸ்துப் பெற்றிருந்த பிராமணன் ஒருவனின் மகன் வில்லுகள் செய்யும் தொழிலை மேற்கொண்டவனாக இருந்தான். அத்துடன் சாசனங்கள் குறிப்பிடும் பிராமணர்களில் ஐந்து பேர் பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தனர் எனவும் அறியலாம்.[55]

---

53. மனுதர்ம சாஸ்திரம், பிராமணன் மனித உருவிலுள்ள தெய்வம் என்றும் அவனுடைய உரிமைகளை மீற முயற்சித்தால் அவன் பெற்றுள்ள தெய்வீக சக்தி அரசனையும் அவனது படையையும் அழித்துவிடும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

54. இருந்தும் இவர்களுடைய தளர்ச்சி நிலை தற்காலிகமாகவே இருந்தது. தளர்ச்சியுற்ற இதே சக்தி மிக விரைவில் தலைதூக்குவதனைக் காணலாம். தவிர்க்கமுடியாத நிலையில் தளர்வுறும் சக்தி பின்னர் ஏற்படும் தனக்குகந்த சூழ்நிலையில் தலைதூக்குவது வரலாற்றில் அடிக்கடி காணப்படும் ஒன்றாகும். இதே நிலையில்தான் இக்காலப் பிராமணர் நடவடிக்கைகளினையும் காணுகின்றோம்.

54.அ S. Paranavitana, **Inscriptions of Ceylon**, இல. 1060, — பக். 83.

55. சாசன இலக்கங்கள் : 296, 812, 838, 1045, 1136.

பிராமணர்களாக இருந்துகொண்டு இவர்கள் பௌத்த மதத்திற்கு அளித்த ஆதரவும், மற்றும் தமிழரசன் (எல்லாளன்) அதிகாரம் வலுவுற்றிருந்தும் அவனது அதிகாரத்துட்பட்ட பிரதேசத்தில் இருந்து கொண்டு குண்டல என்ற பிராமணன் சிங்கள அரசனுக்கு ஆதரவளித்தமையும் குறிப்பிடத்தக்கவையாகும். தமது நிலையைப் பாதுகாத்துக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு பௌத்த சங்கத்திற்கு ஆதரவு அளித்துவந்தாலும் சந்தர்ப்பம் கிடைத்தபோது பிராமணர் தமக்குரிய இடத்தைப் பெறுவதற்கு முயற்சித்திருக்கிறார்கள் என வேண்டும். வட்டகாமினி அபயன் ஆட்சிக்காலத்தில் திஸ்ஸ என்ற பிராமணன் ஏற்படுத்திய கலகத்தைப் பற்றி மஹாவங்ஸம் குறிப்பிட்டாலும்[56] இக்கலகத்தினுல் ஏற்பட்ட விளைவுகளைக் குறிப்பிடவில்லை. உரை நூல்களிலிருந்து, பௌத்த மத வியாக்கியானங்கள் எழுதி வைக்குமளவிற்குக் குறிப்பிடத்தக்க விளைவை இக் கலகம் ஏற்படுத்தியது என வறியலாம்.[57] ஸம்மோஹவினோதனி என்ற நூல் கூறுவதிலிருந்து இவன் பெருமளவு அதிகாரத்தைப் பெற்றிருந்தான் என அறியலாம். பௌத்த பிக்குகளின் கவனத்தைக் குறிப்பிடத்தக்க அளவில் ஈர்க்கத்தக்க முறையில் இவன் நடத்திய கலகத்தினுல் ''சண்டாளன்'' என்ற அவப் பெயரைப் பிராமணன் பெற்றுக்கொள்ள நேரிட்டது.[58] பிற்பட்ட காலத்திற் ஸிறிநாக என்ற பிராமணன் விளைவித்த கலகமும் பௌத்த மதத்திற்கெதிரான கலகமாகவே விளங்கியது..[59]

இலக்கிய நூல்களிலிருந்தும் சாசனங்களிலிருந்தும் கிடைக்கின்ற தகவல்களைக் கொண்டு நாம் இதுவரை கவனித்தவற்றைத் தொகுத்துக் கூறலாம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட, ஏறத்தாழ ஆரும் நூற்றாண்டளவில் இருந்து கி. மு. முதலாம் நூற்றாண்டின் முடிவு வரையுள்ள காலப் பகுதியில் இடையீடின்றிப் பிராமணர்களின் நடவடிக்கைகள் இருந்து வந்திருக்கின்றன. பௌத்த மத வருகைக்கு முன் இருந்த அதே அளவிற்கு, பின்னரும் ஆதிக்க முடையவர்களாக விளங்காவிட்டாலும் தொடர்ந்து சமூகத்தில் தமது நிலையைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள் என்றும் சந்தர்ப்பம் வந்தபோது தமது உண்மையான நிலையை மீட்டுக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிகின்றது.

பிராமணர் பற்றியும் அவர்களது நடவடிக்கைகள் பற்றியும் நாம் அறிந்து கொள்பவற்றை விடப் பௌத்த மதத்தின் வருகைக்கு முற்பட்ட காலத்திலேயே சிவ வழிபாடு நிலவியது எனக் கொள்ளவும் தகவல்களைப் பெற முடிகின்றது. பண்டுகாபயன் ஆட்சி பற்றிக் கவனிக்கையில், அவன் சிவலிங்கக் கோவில் ஒன்றைக் கட்டினன் எனத் தெரிகிறது.[60] இதுபற்றிய விபரத்தைப் பின்னர் பார்க்கலாம். இலக்கிய ஆதாரங்களிலிருந்தும் சாசன ஆதாரங்களிலிருந்தும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் 'சிவ' என்ற பெயரையும், 'சிவ' என்று தொடங்கும் பெயரையும், 'சிவ' என்பதனுடன் முடியும் பெயரையும் அரசர்கள் சிலரும் பொதுமக்கள் பலரும் பெற்றிருந்தமையை அறியலாம். இக்காலச் சாசனங்களில் 'சிவ' என்பதுடன் வரும் பெயர்களைக் கொண்டு, ''இவை இக்காலத்திற் சிவ வணக்கம் இருந்தது என்பதனைக் காட்டுகின்றன'' எனப் பரணவிதான

56. **Mahavamsa**, XXXIII, 37 – 41

57. C. W. Nicholas, 'Brahmanas in the Early Sinhalese Kingdom' **UCR.**, Vol. 8, No. 4, (October, 1950), பக். 259; E. W. Adikaram, மு. கு., பக். 73–74.

58. H. Ellawala, மு. கு., பக். 15

59. மே. கு.

60. **Mahavamsa**, x, 102; S. Paranavitana, 'Pre–Buddhist Religious Beliefs in Ceylon', பக். 326

அவர்கள் கூறியுள்ளார்கள்.[61] வெறும் பெயரடிப்படையில் சிவ என்ற பெயருடையோர் எப்போதும் சிவ வணக்கத்தவர்களாகவே இருந்தார்கள் எனக் கூறுவது கஷ்டமாக இருந்தாலும், குறிப்பிட்ட 'சிவ' என்பதுடன் தொடர்புபட்ட பெயர்கள் இந்து மதம் கிறிஸ்துவுக்குமுற்பட்டஇலங்கையிலே ஒரு காலப் பகுதியிலாவது நிலவியது எனக் காட்ட உதவுகின்றன. அத்துடன் இந்து மதம் நிலவியமை பற்றி வேறு ஆதாரங்களிலிருந்து நாம் பெறுகின்றவற்றை உறுதிப்படுத்துவதிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. பௌத்தத்திற்கு முற்பட்ட காலத்திலேயே 'சிவ' என்ற பெயரைப் பெற்றிருந்தோர் பற்றி யறியக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக 'சிவ' என்ற இளவரசன்,[62] பண்டுவாசனின் பதினெரு பிள்ளைகளுள் ஒருவன் 'சிவ' என்ற பெயரைப் பெற்றிருந்தான்,[63] பண்டுகாபயனின் மாமன்மார்களில் ஒருவன் கிரிகந்தசிவ,[64] அஸேலனின் எட்டுச் சகோதரர்களில் ஒருவன் மஹாசிவ,[65] தேவாநம்பியதிஸ்ஸனின் தந்தை முட்டசிவ[66] என்போரைக் குறிப்பிடலாம். கி. மூ. மூன்றும் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையிற் சிவலிங்க வழிபாடு நிலவியது எனக் கொள்ள நமக்குக் கிடைக்கும் ஆதாரங்களே மேற்குறிப்பிட்ட பெயர்கள் உறுதிப்படுத்துவனவாகவுள்ளன. இவற்றைவிடக் கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றும் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்ற சாசனங்கள் பலவற்றிலும் 'சிவ'வுடன் தொடர்புபட்ட பெயர்கள் வருவதனைக் காணலாம். சிவ என்ற சொல்லுத் தொடர்புபடும் பெயர்களைக் கொண்டிருக்கும் சாசனங்கள் பின்வருமாறு :

தொடர் இல.	சாசன இல:	இடம்	மாவட்டம்	விபரங்கள்
1.	29	மிஹிந்தலை	அனுராதபுரம்	சிவ என்ற இளவரசனின் குகை:
2.	40	மிஹிந்தலை	அனுராதபுரம்	கிராமச்சபை உறுப்பினரான சிவ என்பவனின் மகள் உப்பலா.
3.	152	பிராஹ்மணயாகம	அனுராதபுரம்	பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த சிவனின் குகை.
4.	153	பிராஹ்மணயாகம	அனுராதபுரம்	பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த சிவனின் குகை.
5.	161	பிராஹ்மணயாகம	அனுராதபுரம்	கிராமச்சபை உறுப்பினன் கால—சிவனின் குகை.
6.	215	மஹாஅலகமுவ	அனுராதபுரம்	குட—சிவனின் மகன் கலு என்பவன்:
7.	243	றிற்றிகல—அன்டியகந்த	அனுராதபுரம்	சிவ—குட்ட என்ற தலைவனின் குகை.
8.	282	திம்புலாகல	பொலன்னறுவை	சிவனின் குடும்பத்தினரது குகை:
9.	301	முதுகல்ல	பொலன்னறுவை	மஜ்ஜிம என்பவனது மகன் சிவ:
10.	304	முதுகல்ல	பொலன்னறுவை	சிவ என்ற இளவரசனது குகை.
11.	309	முதுகல்ல	பொலன்னறுவை	கிராமச்சபை உறுப்பினன் சிவ.

61. Paranavitana, Pre-Buddhist, Religious Beliefs in Ceylon — பக். 327.
62. **Dipavamsa**, 18, 45.
63. மே. கு. 10, 3.
64. **Mahavamsa**, x, 29.
65. மே. கு., XXI, பக். 143, அடிக் குறிப்பு 3.
66. மே. கு., XI, I.

தொடர் இல.	சாசன இல:	இடம்	மாவட்டம்	விபரங்கள்
12.	315	முதுகல்ல	பொலன்னறுவை	பூசிக்கத்தக்க சிவனின் குகை.
13.	333	எறுபொத்தான	வவுனியா	பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த குட-சிவனின் மகன்.
14.	401	நியந்தவருகல	மட்டக்களப்பு	பூசிக்கத்தக்க சிவ.
15.	402	நியந்தவருகல	மட்டக்களப்பு	சிவ என்ற தலைவனின் குகை.
16.	431	ரஜகல	மட்டக்களப்பு	தேரர் சிவனின் குகை.
17.	443	ரஜகல	மட்டக்களப்பு	சிவபூதி என்ற தலைவனின் சுபதித்த என்ற குகை.
18.	449	ரஜகல	மட்டக்களப்பு	தேரர் சிவனின் குகை.
19.	450	ரஜகல	மட்டக்களப்பு	தேரர் சிவ.
20.	478	தமண	அம்பாறை	சிவ என்ற பக்தனின் குகை.
21.	518	பம்பருகஸ்-தலாவ	அம்பாறை	சிவ என்ற குடும்பத்தவனின் குகை.
22.	537	வெஹெறகல்கந்த	அம்பாறை	சிவறக்கித என்ற தலைவனின் குகை.
23.	608	ஸிதுல்பவுவ	அம்பாந் தோட்டை	சிவனபுதிய என்ற தலைவனின் குகை.
24.	623	ஸிதுல்பவுவ-கொறவாகல	அம்பாந் தோட்டை	கிராமச்சபை உறுப்பினன் சிவனின் மகன் கம்போஜாவின் குகை.
25.	624	ஸிதுல்பவுவ-கொறவாகல	அம்பாந் தோட்டை	கிராமச் சபை உறுப்பினர் சிவனின் குகை.
26.	625	ஸிதுல்பவுவ-கொறவாகல	அம்பாந் தோட்டை	சிவ என்ற கிராமச்சபை உறுப்பினன் மகன் கம்போஜாவின் குகை.
27.	626	ஸிதுல்பவுவ-கொறவாகல	அம்பாந் தோட்டை	சிவ என்ற தலைவனின் குகை.
28.	633	ஸிதுல்பவுவ-கொறவாகல	அம்பாந் தோட்டை	சிவகுடக என்ற தலைவனது (குகை).
29.	660	ஸிதுல்பவுவ-கொறவாகல	அம்பாந் தோட்டை	வியாபாரி சிவலினதும் மற்றும் கஸசு என்பவனதும் குகை.
30.	679	மகுல் மஹ விஹாரை	அம்பாந் தோட்டை	சிவ என்ற குடும்பத்தவனின் குகை,
31.	685	ஆகாஸசேத்திய	அம்பாந் தோட்டை	சிவ என்ற குடும்பத்தவனின் குகை.
32.	733	வல எல்லுகொட-கந்த	மொனருகல	சிவகுட்ட என்பவனின் குகை.
33.	755	கஹட அடுஹெல	பதுளை	சிவ என்ற பக்தியுள்ள பெண்.
34.	756	ஓலகம்கல	பதுளை	சிஇ என்ற அரசனின் கொடை
35.	757	ஓலகம்கல	பதுளை	சிவ என்ற இளவரசனின் மஹா சுதஸ்ஸன என்ற குகை
36.	768	கிரிமகுல்கொல்ல	இரத்தினபுரி	மஹாசிவ என்ற இளவரசனின் மஹபதஸ்ஸன என்ற குகை,
37.	780	கலிபாய	இரத்தினபுரி	சிவ என்ற கிராமச்சபை உறுப்பினின் குடும்பத்தின் தானம்.
38.	786	லெணகல	கேகாலை	சிவ என்ற இளவரசனின் மகன் துஹதர என்பவனின் குகை.

தொடர் இல.	சாசன இல:	இடம்	மாவட்டம்	விபரங்கள்
39.	792	யதஹெலன-விஹாரை	கேகாலை	சிவ என்ற இளவரசனின் மகனும் இளவரசனுமான துஸதர என்பவனின் குகை.
40.	793	யதஹெலன விகாரை	கேகாலை	காமனி சிவ என்பவனின் குகை:
41:	796	யதஹெலன விஹாரை	கேகாலை	சிவநகர என்ற இடத்து ஒரு பகுதி நிலம் காமனி சிவ என்பவனால் கொடுக்கப்பட்டது.
42.	797:	அதுகொடை	கேகாலை	சிவ என்ற கிராமச்சபை உறுப்பினின் குகை.
43.	808	துல்வல	கண்டி	பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த சிவ என்பவனால் வடிவாக அமைக்கப்பட்ட குகை.
44.	821	அலுவிஹாரை	மாத்தளை	சிவகுட்டவினுடையது:
45.	823	காணேகெதற விஹாரை	மாத்தளை	சிவனின் குகை.
46.	841	தம்புல்ல	மாத்தளை	தேரர் சிவகுடவின் சீடனான தேரர் குட்ட என்பவரின் குகை.
47.	853	தம்புல்ல	மாத்தளை	சிவ என்ற பக்தியுள்ள பெண்.
48.	873	பிதுருகல	மாத்தளை	கொலகமத்து சிவ என்பவனின் மகன் மஜ்ஜிம:
49.	906	விஹாறெகம	குருநாகல்	சிவ என்ற பக்தனது.
50:	914	நுவரகந்த	குருநாகல்	சிவ என்ற கிராமச்சபை உறுப்பினின் மகன்.
51.	952	றன்கிரி–விஹாரை	குருநாகல்	சிவ என்ற கிராமச்சபை உறுப்பினனது.
52:	966	கோம்புவ	குருநாகல்	சிவ என்ற கிராமச்சபை உறுப்பினின் குகை.
53:	970	தாகம	குருநாகல்	சிவ (கிராமச்சபை உறுப்பினன்)னின் மகன் அபய.
54.	1001	ஸஸெறுவ	குருநாகல்	சிவகுட என்ற தலைவனது.
55:	1044	தியபத்த விஹாரை	குருநாகல்	பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த சிவனின் குகை.
56.	1059	பிச்சண்டியாவ	புத்தளம்	சிவபூதி என்பவன் சேர்ந்து கொடுத்த தானம் பற்றியது.
57.	1067	பிச்சண்டியாவ	புத்தளம்	பூஜிக்கத்தக்க சிவபூதி என்பவனின் குகை:
58.	1068	முல்லேகம	புத்தளம்	சிவபூதி என்ற தலைவன் சேர்ந்து கொடுத்த தானம்.

தொடர் இல.	சாசன இல:	இடம்	மாவட்டம்	விபரங்கள்
59.	1120	பில்லாவெகல	அனுராதபுரம்	விஹாரையைக் கட்டியவனும் சபையின் குடையின் பாதுகாப்பாளனுமான சிவனின் குகை.
60.	1137	ஹந்தகல	அனுராதபுரம்	சிவ என்ற பக்தியுள்ள பெண்ணின் படுக்கையிடம்.
61.	1149	அவுகன	அனுராதபுரம்	மஹாசிவ என்பவனின் மகன் சிவனின் குகை.
62.	1156	மஹாஅலகமுவ	அனுராதபுரம்	சிவ என்ற பக்தியுள்ள பெண்.
63.	1233	பிச்சண்டியாவ	புத்தளம்	பருமகர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்த சிவனின் சிர்பஜ என்ற குகை.

இதுவரை கவனித்தவற்றைக் கொண்டு பார்க்கும்போது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் அதாவது ஆகக் குறைந்தது கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஆரும் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதலாம் நூற்றாண்டுவரையுள்ள காலப் பகுதியில் இலங்கை மக்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரிடையே இந்துமத நம்பிக்கை இடையீடின்றி வந்திருக்கின்ற தென்பதனை அறியலாம். இந் நிலையில் இக் காலத்துக்குரிய மக்கள் கோவில் அமைத்து வழிபட்டிருப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. இருந்தும் கிடைக்கின்ற தகவல்களைக் கொண்டு பார்க்கும் போது இக்காலத்துக்குரியனவாக ஒரு சில கோவில்கள் பற்றியே அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. பண்டுகாபயன் பற்றி மஹாவங்சம் கூறுகையில் அவன் ஸிவிகாஸாலா எனவும், ஸொத்திஸாலா எனவும் அழைக்கப்பட்ட இல்லங்களை அமைத்துக் கொடுத்தான் எனக் கூறும்.[67] இந்த ஸொத்திஸாலா என்பதற்கு மஹாவங்சத்தின் மீதான உரையெழுதியவர் இரு கருத்துக்களைக் கொடுத்துள்ளார். ஒன்று, பிராமணர் இருந்து மந்திரம் உச்சரிப்பதற்கான இல்லம்; இரண்டாவது, வைத்தியசாலை.[68] இரு வேறுபட்ட விளக்கங்கள் கொடுத்துள்ளமையால் இதனை ஆதாரமாகப் பயன்படுத்துவது கஷ்டமாகும். ஸிவிகாஸாலா என்பதற்கும் உரையாசிரியர் இரு விளக்கங்களைக் கொடுத்துள்ளார். ஒன்று, 'சிவலிங்கத்தைக் கொண்டுள்ள வீடு', அடுத்தது 'வைத்தியசாலை'.[69] பண்டுகாபயனால் கட்டப்பட்ட இரு இல்லங்களுக்கும் உரையாசிரியர் ஏறத்தாழ ஒரேவிதமான இரு விளக்கங்களைக் கொடுத்துள்ளமை கவனிக்கத்தக்கது. விளக்கம் ஒன்றுக்கு மேற்பட்டவையாக இருப்பதனால் ஆதாரமாகப் பயன்படுத்த முடியாவிட்டாலும் இந்த இரண்டில் ஒன்று எப்படியும் சமயச் சார்புடையதாக இருந்திருக்க வேண்டும் எனலாம். ஸிவிகாஸாலா என்பதனைப் பொறுத்துப் பரணவிதான 'சிவலிங்கத்தைக் கொண்டுள்ள வீடு' என்ற கருத்தையே எடுத்துள்ளார். இதற்கு அவர் காட்டும் காரணம், இக்கட்டிடம் ஏனைய சமயச் சார்புடைய கட்டிடங்களுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுவதால் இதுவும் சமயச் சார்புடையதாக இருக்கலாம் என்பதே.[70]

---

67. **Mahavamsa**—பக். 102.

68. S. Paranavitana, Pre-Buddhist, Religious Beliefs — பக். 322.

69. **Vamsatthappakasini** — பக். 207.

70. S. Paranavitana, Pre-Buddhist Religious Beliefs — பக். 326.

மொஹெஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் நடாத்தப்பட்ட தொல் பொருள் ஆராய்ச்சியின் விளைவாக சிந்து நதி நாகரிக காலத்தில் லிங்க வழிபாடு இருந்திருக்கின்றது எனக் கூறத்தக்க விதத் திற் சான்றுகள் கிடைத்துள்ளன.[71] இது மட்டுமன்றிச் சிந்துவெளி நகர மக்களை ஆரியர் தஸ்ஸீக்கள் என அழைத்தது மாத் திரமன்றி லிங்க வழிபாடுடையவர்கள் எனவும் அழைத்தார்கள்.[72] இதனடிப் படையில் மிக முற்பட்ட காலத்திலேயே லிங்கவழிபாடு நிலவியதற்கான தகவல்கள் கிடைப்பதால் இக்காலப்பகுதியில், அதா வது பண்டுகாபயன் ஆட்சிக்காலத்தில், சிவ லிங்கக் கோவில் இருந்திருக்கும் என்பதில் சந்தேகப்படவேண்டியதில்லை. இதனை உறு திப்படுத்தத்தக்க வகையில் மஹாபோதி வம்ச என்ற நூல்[73] 'தியவஸ' என அழைக் கப்படுகின்ற பிராமணனுக்குச் சேர்ந்த ஒரு கோவில் பற்றிக் குறிப்பிடுகின்றது. இது தேவாநம்பியதிஸ்ஸன் காலத்துக்குச் சேர்ந்த கோவிலாகும். மஹாபோதிவம்ச பிற்பட எழுதப்பட்டதாக, அதாவது கிறிஸ் துவுக்குப் பிற்பட்ட பத்தாம் நூற்றாண் டைச் சேர்ந்ததாகக் கூறப்படுவதால்[74] இது தரும் முற்பட்ட தகவலைப் பயன்படுத் துகையில் கவனமாக இருக்கவேண்டும். இருந்தும் இந்நூல் முற்பட்ட கதைமரபு பற்றிக் கூறுவதால் (போதிமரம் வந்தமை பற்றி) இந்நூலில் உள்ள கதை, மரபுவழி யாகப் பேணப்பட்ட மரபாகும். இவற் றைத் தவிர இந்துக்கோவில்பற்றி நாம் அறியும் அடுத்த தகவல் முன்னர் குறிப் பிடப்பட்டதுபோல மஹாசேனன் காலத்த தாகும். ஏறத்தாழ ஆறு நூற்றாண்டு காலப் பகுதியில் (கி. மு. 6, கி. மு. 1) இரு இந்துக் கோவில்களைப் பற்றிய குறிப்புக்களே நமக்குக் கிடைக்கின்றன. இருந்தும் தகவல் கள் கிடைக்காமையால் இவற்றைவிட வேறு இந்துக்கோவில்கள் அப்போது இருக்க வில்லை எனக் கூறுவது தவறாகும். பௌத்த மத வருகைக்கு முற்பட்ட காலத்தில் பிராமணர் சமூகத்தில் குறிப்பிடத்தக்க செல்வாக்கையுடையவர்களாக இருந்தனர் என அறிய முடிவதால் அவர்கள் தம் வழிபாட்டுக்காகக் கோவிலை அமைத்திருப் பார்கள் எனலாம். இத்தகைய ஒரு கால கட்டத்திலேயே கோணேஸ்வரம் கோவில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். வர்த்தகத் தொடர்பே ஏனைய நாடுகளுடன் இலங்கையின் முதல் தொடர்பை ஏற்படுத் தியது என நாம் முதலில் கவனிக்க முடிந்த தால் வர்த்தக நடவடிக்கைகளை மேற் கொண்டோர் ஆரம்பகாலத்திலிருந்து சிறந்த வர்த்தகத்துறையாக விளங்கிய திருகோண மலைத் துறைமுகத்துக்கு அணித்தாகக் கோவில் ஒன்று கட்டுவதில் உதவியிருப் பார்கள் எனலாம்.

71. A. L. Basham, xx மு. கு. — பக். 24.

72. மே. கு.—பக். 33.

73. A. S. Strong (Editor) **Mahabodhivamsa** (PTS), (London, 1891) — பக். 136.

74. G. P. Malalasekera, **Dictionary of Pali Proper Names** — பக். 537.



கி. மு. 3ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி. மு. 1ஆம் நூற்றாண்டு வரை பிராமணர் பற்றிய குறிப்புக்கள் கொண்ட சாசனங்கள் காணப்படும் இடங்கள்.

வி. சிவசாமி, எம். ஏ.,
வரலாற்று விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி

எழுத்துத் தொல்பொருளியலும் தமிழியலும்

I. பொது

தொல்பொருள் என்னும்போது பழைய கால மனிதன் பயன்படுத்திய பொருள்கள் — கல், மண், மரம், உலோகம் முதலிய வற்றினாலே செய்து பயன்படுத்திய கருவி கள், உபகரணங்கள், மேற் குறிப்பிட்டன வற்றில் எழுதப்பட்டுள்ள சாசனங்கள், நாணயங்கள், குகைகள், வீடுகள், மாளிகைகள் முதலிய இருப்பிடங்கள், கோவில்கள், மனிதன் இறந்தபின் எஞ்சும் எலும்புக்கூடுகள், அவற்றாலாய கருவிகள் முதலியனவற்றையே கருதுகிறோம். இவை பற்றிய ஒழுங்கான அறிவியலே தொல் பொருளியலாம். மேற்குறிப்பிட்ட ஒவ் வொன்றினைப் பற்றியுமே தனித்தனியாக விவரிக்கலாம். தமிழியல் என்ற பதம் மிக அண்மைக் காலத்தியது. தமிழைப்பற்றிய எல்லாவிதமான அறிவும் — இலக்கியம், இலக்கணம், மொழிநூல், மொழியியல், வரலாறு, வரிவடிவம் முதலியன பலவும் தமிழியலில் அடங்கும்.

II. தொல்பொருளியலும் தமிழியலும்

தொல்பொருளியலுக்கும் தமிழிய லுக்கு மிடையில் என்ன தொடர்பு, என மேலெழுந்த வாரியாகச் சிலர் வினவலாம். ஆனால் இவ்விரு அறிவியற் றுறைகளையும் கூர்ந்து நோக்கும்போது இரண்டிற்கு மிடையிலுள்ள தொடர்புகள் தெளிவாகும். ஆதிகாலம் தொட்டு மனிதனைப் பற்றிய எவ்விதமான அறிவியல்களும் ஒன்றோ டொன்று தொடர்புள்ளனவாகவே யிருந்து வந்தன; ஆனால், சமீபகாலத்திலேதான் இத்தகைய தொடர்புகள் நன்கு அறியப் பட்டு வற்புறுத்தப்படுகின்றன.

தமிழியலின் பலதுறைகளுக்கும் இன்று தொல்பொருள் நன்கு துணையாக அமைந் துள்ளது. தமிழ் நூல்களின் காலவரை யறை — தமிழிலக்கணம், இலக்கியம், வரி வடிவம், முதலியனவற்றின் காலவரையறை யினை நிர்ணயிப்பதற்குத் தொல்பொருள் ஏதோ வகையில் உதவலாம். இலக்கிய, இலக்கண நூல்களிலே காணப்படாத கவிதைகள், வசனப்பகுதிகள், தொடர்கள், சொற்கள், இலக்கண வழக்குகள் முதலியனவும் தொல்பொருளியல் மூல மாக வெளிப்படலாம். அதேவேளையிலே இலக்கிய மூலங்கள் கூறும் வரலாற்றுச் செய்திகளை உறுதிப்படுத்தவும், சிலவேளை களிலே பூரணப்படுத்தவும் தொல்பொருள் கள் உதவுவன. இக்கால விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தாலே தொல்பொரு ளியலும் வளர்ந்துவந்துள்ளது. பழம் பொருள்களின் காலவரையறையினை விஞ் ஞான முறைப்படி எளிதிலே கணித்து விடலாம். இம்முறைகள் இலங்கையிலோ இந்தியாவிலோ இன்னும் பரவலாகப் பயன் படுத்தப்படவில்லை.

III. இன்றைய நிலையிலே தொல்பொருளிய லும், தமிழியலும்

இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் தமிழியல் பற்றி ஆய்ந்தோர் தொல்பொரு ளியலை அவ்வளவு பயன்படுத்திலர். சிலர் முற்றுகவே பயன்படுத்திலர். காலஞ்சென்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் போன்ற சிலர் இதற்குப் புறநடையாவர். ஆனால், இன்றோ வயோதிபத் தமிழ்ப் பேராசிரியர் என்றால் என்ன, இளம்பிராயத் தமிழறிஞர் என்றால் என்ன, தொல்பொரு ளியலையும் பயன்படுத்துவதைக் காண லாம். எடுத்துக்காட்டாகப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய தமிழிலக்கிய வரலாறு என்னும் நூலைக் குறிப்பிடலாம். அல்லது எமது நாட்டவரான பேராசிரியர் எக்ஸ். எஸ். தனிநாயக அடிகள், கலாநிதி கா.

கைலாசபதி போன்றோர் எழுதிய நூல்களைக் குறிப்பிடலாம். உதாரணமாகப் பின்னையவரின் பண்டைத்தமிழர் வாழ்வும் வளமும் என்ற நூலினைக் குறிப்பிடலாம். அல்லது கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் சாசனமும் தமிழும் என்ற நூலினைக் குறிப்பிடலாம்.

IV. தென்னிந்தியத் தமிழகம்

தென்னிந்தியத் தமிழகத்திலே கற்போது நடைபெற்றுவரும் தொல்பொருளாராய்ச்சியினூலே பண்டைத் தமிழ்மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, தமிழக வரலாறு முதலியன நன்கு துலங்குகின்றன. எடுத்துக்காட்டாகத் திரு. ஐராவதம் மஹாதேவன் அவர்கள் தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் பற்றி எழுதியுள்ள ஆய்வுரையினைக் குறிப்பிடலாம்.[1] மேலும் காவிரிப் பூம்பட்டினத்திலே நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சியினூலே சங்க நூல்களின் வரலாற்றியல்பு மேம்படுதலையும், அந்நகர் முற்றுகைக் கடலினூலே கொள்ளப்படவில்லையென்பதையும், இதுபற்றிப் பிந்திய காலத் தமிழ் நூல்கள் குறிப்பிட்டிருப்பது சரியில்லை என்பதையும் அறியக்கூடியதாயுள்ளது.[2] இவ்வாறு பல எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடலாம்.

V. ஈழம்

ஈழத்துத் தமிழியல் பற்றி அறிவதற்குத் தொல்பொருளியல் ஓரளவாவது உதவுகின்றது. எமது நாட்டிலே தொல்பொருளியல் இன்னும் நன்கு வளர்ச்சியடையவில்லை. குறிப்பாகத் தமிழியலுக்குத் துணைபுரியக்கூடிய தொல்பொருளியல் ஆராய்ச்சி ஆரம்ப நிலைகளிலேதான் இருக்கிறதெனலாம். ஈழவரலாற்றிலே, தமிழியல் நெடுங்காலமாக ஒரு பிரதான காரணியாக நிலவி வந்தமைக்கு இலக்கிய மூலங்களிலும்பார்க்கத் தொல்பொருளியலே சான்று பகரவேண்டும். ஆனால், அத்துறையின் வளர்ச்சி மந்தமாக இருப்பது ஒரு முட்டுக்கட்டையாக உள்ளது. அவ்வாறாயினும் சில பிரதான அம்சங்களைக் குறிப்பிடலாம்.

இலங்கையிலே, ஆரிய நாகரிகத்துடன் வந்த சிங்கள மக்களும், திராவிட நாகரிகத்துடன் வந்த தமிழரும், பிற திராவிடரும், இவர்களுக்கு முன் வாழ்ந்த ஆதி ஒஸ்ரலோயிட்ஸ் போன்ற இனத்தவரும் சேர்ந்து கட்டியெழுப்பியதே இலங்கை நாகரிகமாகும். ஈழத்துப் பௌத்த-சிங்கள மரபுகளை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றினையே, பாளிமொழியிலே தீபவம்சம், மஹாவம்சம், சூளவம்சம் முதலியன பொதுவாக எடுத்துக் கூறுவன. இதனூலிவை ஒரு தலைச் சாய்வான நாகரிகத்தினை ஓரளவு பிரதிபலிப்பன. ஆனால் இக் குறைபாட்டினைத் தொல்பொருளியலே ஓரளவாவது நிவர்த்திசெய்யலாம். இத்தகைய குறைபாடு கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரையுள்ள ஈழ வரலாற்றில் அதிகம் உண்டு.

கிறிஸ்து ஆண்டிற்குச் சற்று முன்பின்னை சில நூற்றாண்டுகளாக (கி. மு. 2ஆம் நூற்றாண்டு தொட்டுச் சில நூற்றாண்டுகளாக) ஈழத்திலே திராவிடர் குறிப்பாகத் தமிழரின் செல்வாக்கு நன்னிலையிலிருந்ததற்குப் பாளி நூல்களிலே வரும் குறிப்புகள் மட்டுமன்றிப் பொன்பரிப்பு, குருகல்கின்ன, கதிரவெளி, படியகம்பொல, கொண்டதெனிய, வளவே பகுதி, கொக்கபே, குல்ஸோஹொனகனதே, வல்லிபுரம், மாதோட்டம், அநுராதபுரம், வவுனியா முதலிய இடங்கள் பலவற்றிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ள திராவிடவியல் சார்பான பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள்-குறிப்பாகத் தாழிகளும், சில கல்வெட்டுக்களும் ஆதாரமாம். இவை பற்றிய மூலங்களைச் சற்று விரிவாகக் கலாநிதி கா. இந்திரபாலா

---

1. Mahadevan Irawatham—Tamil Brahmi Inscriptions of the Sangam Age—Madras 1968.
2. நியாகராசன் புலவர் கா. (i) "காவிரிப்பூம் பட்டினத்தில் புதைபொருளாராய்ச்சி" — ஆராய்ச்சி III, I —1972. ப. 101 — 109.

   (ii) Raman K. V. Excavations at Pumpuhar — ஆராய்ச்சி மேற்படி ப. 118 — 123.

அவர்கள் ஒன்றுசேர்த்துக் குறிப்பிட்டுள்ளார்.[3] தமிழர் செல்வாக்கு நிலவிய அக்காலப்பகுதியிலே சில புலவராவது எமது நாட்டிலும் வாழ்ந்திருப்பர். சங்க நூற்தொகுதி சிலவற்றி லிடம்பெற்றுள்ள சில பாடல்களைப் பாடிய ஈழத்துப் பூதந் தேவனார்[4] ஈழநாட்டவர்என்பது பொருத்தமானதே. சங்ககால முடிவிலே தமிழகத்திலே கி. பி. நான்காம் நூற்றாண்டளவிலே களப்பிரர் ஆதிக்கம் ஏற்பட்டது. மூவேந்தர் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. ஈழத்திலும் பௌத்த செல்வாக்கு முன்னைய காலத்திலும் பார்க்க அதிகரித்தது. இத்தகைய காரணங்களாலே தமிழியற் செல்வாக்குக் குன்றியிருக்கலாம்.

இதன்பின், தென்னிந்தியாவிலே, பல்லவ — பாண்டியப் பேரரசுகள் கி. பி. 7ஆம் நூற்றாண்டிலே விரிவுற்றன. இதைத் தொடர்ந்து தமிழியற் செல்வாக்கும் அதிகரித்தது. கி. பி. 7ஆம் நூற்றாண்டிலே தமிழகத்திலே வாழ்ந்த திருஞானசம்பந்தர் திருக்கோணமலையிலும், மாதோட்டத்திலும், எட்டாம் நூற்றாண்டிலே வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாதோட்டத்திலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சிவபெருமானைப்பற்றிப் பதிகங்கள் பாடியுள்ளனர். இவையிரண்டும் துறைமுகப் பட்டினங்களுமாம்; இவ் விடங்களிலே தமிழ்ச் சைவரின் செல்வாக்கு அக்காலத்திலும், அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பும் நன்னிலையில் நிலவியிருந்திருக்க வேண்டும். அல்லாவிடில், தேவார ஆசிரியர் இவற்றிலே கவனஞ் செலுத்தியிரார். இவ் விடங்களிலேயே பழைய சைவக்கோயில்கள், மக்க ளிருந்தமைக்குத் தொல்பொருளியலும் சான்று பகரும். ஆனல் இன்னும் கூடுதலான தொல்பொருளியல் ஆராய்ச்சி மூலம் பல விபரங்கள் தெரியவரலாம். தமிழியற் செல்வாக்கு அதிகரித்தமைக்குச் சிங்கள மன்னர் சேவையிலிருந்த தென்னிந்திய வீரரும், தென்னிந்திய வணிக கணங்களின் நடவடிக்கைகளும் சில பிரதான காரணிகளாம்.[5] ஐஞ்ஞாற்றுவர், வீரவலஞ்சியர், நானதேசியர், நகரத்தார், வீரக்கொடியார் முதலியோரின் கணங்கள் குறிப்பிடற்பாலன.[6] ஈழத்திலே கிடைத்தகாலத்தால் முந்திய சாசனத் தமிழ்ச் செய்யுள் அநுராதபுரத்து நான்கு நாட்டார் என்ற வணிக கணத்தாருடைய தென்பது குறிப்பிடற்பாலது.

VI. யாழ்ப்பாண அரசு

இவ்வரசு கி. பி. 13ஆம் நூற்றாண்டளவிலே தோன்றி கி. பி. 1619 வரை நிலவியது. ஈழத்துத் தமிழ்க்குடியேற்றங்கள் சில பற்றியும், இவ்வரசு பற்றியும் கி. பி. 16, 17, 18ஆம் நூற்றாண்டுகளி லியற்றப்பட்ட கைலாயமாலை, வையா பாடல், யாழ்ப்பாண வைபவமாலை முதலியன எடுத்துக் கூறுவன.[7] யாழ்ப்பாண அரசு தோன்றிய பின்னரே திட்டவட்டமான தமிழியல் மரபு ஈழத்திலே தோன்றியது எனலாம். எனவே இதற்கு முந்தியகாலத் தமிழியலுக்குத் தொல்பொருளியலின் முக்கியத்துவம் வெள்ளிடைமலை. மேற்குறிப்பிட்ட நூல்கள் கூறுவன சிலவாவது தொல்பொருள்களால் உறுதிப்படுத்தப்படுகின்றன; ஆனல் யாழ்ப்பாண அரசின் தலைநகரான நல்லூரில் இன்றைய நிலையிலாவது ஓரளவு அகழ்வாராய்ச்சி நடத்தினல் சிலவேளை புதிய தகவல்கள்

3. Indrapala K. (i) "Early Tamil Settlements in Ceylon". Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society. New Series Vol. XIII. 1968. ப. 43—63.
(ii) வீரகேசரி 7-6-69, 22-6-69, 6-7-69.

4. பூதத்தேவனார் பாடல்கள் (7). அகநானூறு 86, 231, 307; குறுந்தொகை 189, 343; 360, கற்றிணை 366

5. Indrapala K. "South Indian Mercantile Communities in Ceylon Circa 850 — 1250" The Journal of Historical and Social Studies New Series I No. 2. ப. 104 — 106.

6. இந்திரபாலா க. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் — கண்டி 1972. ப. 4.

7. இவைபற்றிக் கலாநிதி சி. பத்மநாதன் ஆராய்ந்து வருகின்றார். ஈழத்து வரலாற்று நூல்கள் பாகம் I (கைலாயமாலை, வையாபாடல்)—பேராதனை 1972.

எவையாவது கிடைக்கலாம். மேலும், நல்லூரைப் போத்துக்கேயர் இறுதியாகத் தாக்கியபோது கோவில்களைக் குறித்த (பூதபௌஷக) சம்பவங்களையும், செப்புப் பட்டயத்தினையும் கொண்டு, கோவிற் பண்டாரம் மட்டக்களப்பிற்கு ஓடினான் என வைபவமாலை கூறும்.[8] இப்பட்டயத் தினை இன்று தேடிக் கண்டுபிடித்தால், ஈழத் தமிழியல் பற்றிய சில அரிய செய்திகள் வெளிவரலாம். யார் முயற்சிப்பர்? யாழ்ப் பாண மன்னரின் சேது நாணயங்கள் கிடைத் துள்ளன. அவர்களின் தனித்துவத்திற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாம்.

VII. ஈழத்துத் தமிழ்ச் சாசனவியல்

இத்துறை தமிழியலுக்குப் பலவகையிலே வரையறுக்கப்பட்ட அளவிலே துணை புரி கின்றது. இத்துறையிலே திரு. கிருஷ்ண சாஸ்திரி, பேராசிரியர் செ. பரணவிதான, பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ஆகி யோர் ஆரம்ப கட்டங்களிலே தொண் டாற்றிவந்தனர். தற்போது கலாநிதி கா. இந்திரபாலா, கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை ஆகியோர் தொடர்ந்து குறிப்பிடத்தக்க ஆய்வுகள் கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு வரு கின்றனர்.

ஈழத்துப் பூதந்தேவனுருக்குப் பின் ஈழத்திலுள்ள இருபெரும் சிவஸ்தலங்களைப் பற்றித் தமிழகச் சைவ நாயன்மார் பாடிய திருப்பதிகங்கள் பற்றிக் குறிப்பிடப்பட் டது. இத்திருப்பதிகங்கள் பிறநாட்டுச் சைவ நாயன்மாராலே பாடப்பட்டனவாகிலும், ஈழத் தமிழியலுக்குத் துணைபுரிவன. இன்று ஈழத்திலேயே கிடைத்துள்ள காலத்தால் முந்திய தமிழ்ச் சாசனச் செய்யுள் ஏற் கனவே குறிப்பிட்ட நான்கு நாட்டார் என்ற தென்னிந்திய வணிக கணத்தின ரதாம். இச்செய்யுள் தன்மபாலன் என்ற புத்தபிக்குவைச் சிறப்பித்து வெண்பாவிற் கூறும். அதாவது,

"போதி நிழலமர்ந்த புண்ணியன்போ
லெவ்வுயிர்க்குந்
தீதி லருள்சுரக்குஞ் சிந்தையான் — ஆதி
வருதன்மங் குன்றுத மாதவன் மாக்கோதை
யொருதன்ம பாலனுளன்" என்பதாம்.[9]

மிக எளிமையான நடையிலே புத்தசமயக் கருத்துக்களும் இதிலே வந்துள்ளன. இவ் வணிக கணத்தினரின் புத்தசமய ஈடுபாட் டினையு மிது குறிக்கின்றது. இஃது ஒருவேளை யவர்கள் வியாபாரச் சலுகைகள் பெறுதற் காகக் காட்டிய அனுதாபமுமாயிருக்க லாம். இதுபோன்று வேறுபல பாடல்களு மிருந்திருக்கலாம். ஆனாலவை யின்று வரை கிடைத்தில. சிலப்பதிகாரத்தில் இடை யிடையே அருகியும் பதினெண்கீழ்க் கணக்கு வரிசை நூல்கள் சிலவற்றிலும், 'பாரத வெண்பா'விலும் வரும் வெண்பா மரபினை இது நினைவூட்டுகின்றது. இது கி. பி. 9ஆம் நூற்றாண்டளவைச் சேர்ந்தது எனலாம்.

இதன்பின் கிடைத்த குறிப்பிடத்தக்க சாசனங்கள் கி.பி. 10 ஆம் 11ஆம் நூற் றாண்டுகளைச் சேர்ந்த சோழரின் மெய்க் கீர்த்திகளும் பிறவுமாம். இவைபற்றிய ஆய்வுகள்தொடர்ந்து நடைபெறுகின்றன. சோழர் மெய்க்கீர்த்திக்கு எடுத்துக்காட் டாக, பதவியாவிலே கிடைத்த முதலாம் ராஜராஜன் காலத்துச் சாசனத்திலே "திரு மகள்போலப் பெருநிலச் செல்வியும்" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்திப் பாகத்தினை[10] அல்லது யாழ்ப்பாணக் கோட்டையிலே கிடைத்த 1ஆம் ராஜேந்திரன் காலத்துச் சாசனத்திலே "திருமன்னி வளர" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்திப் பாகத்தினைக் குறிப்பிடலாம்.[11] இவை ஆசிரியப்பாவா லமைந்தவை; சமகாலத் தென்னிந்திய சாசனங்களிலே பரக்கக் காணப்படுகின்றன. சோழருக்குப்பின் சிங்கள ஆதிபத்தியத்தினை நிலைநாட்டிய முதலாம் விஜயபாகு முதலாம் பராக்கிரமபாகு முதலியோர் காலத் தமிழ்ச் சாசனங்களைக் குறிப்பிடலாம். தொடர்ந்து

8. திரு. குல சபாநாதன் (பதிப்பாசிரியர்), யாழ்ப்பாண வைபவமாலை—சுன்னாகம் 1949. ப. 80 — 81.
9. இந்திரபாலா கா. (பதிப்பாசிரியர்), சிந்தனை I, IV — பேராதனை 1967. ப. 31 — 35.
10. Indrapala K. (Editor) Epigraphia Tamilica Vol. I. Part I. 1971. ப. 32 — 36.
11. Indrapala K. மேற்படி ப. 52 — 57.

கி. பி. 12ஆம் நூற்றாண்டுப் பிற்காலப் பகுதியில் ஆட்சிசெய்த கலிங்க மன்னனான நிசங்கமல்லனின் பண்டுவாசநுவரக் கல் வெட்டிலே விருத்தப்பா ஒன்றுள்ளமையினை நோக்கலாம்; அதாவது,

"தென்னிலங்கைக் கோன் பராக்கிரமபாகு
நிசங்க மல்லற் கியாண்டஞ்சிற்
தினகரன் சுறவிலணைந்த வத்தையி
லுத்தரட்டாதி யேழ்பக்கம்
பொன்னவன் தினநற் சாதயோகத்தில்
உயர்தரு போதிமாதவற்கும்
பொற்பமர் கோயில் முனிவராலயந்
தெனறந்திகழ் சாலியுஞ் சயித்தம்
அன்னவைதிகழ ஐவர் கண்டன்வனு
பெரிஇலங்கை அதிகாரி அலகுதபுயந்,
தென் பராக்ரமன் மேணைச்
சேனவிநாதன் திருப்பியரன்
மன்னிய சிறப்பில் மலிதருமழகாற்
பராக்ரம அதிகாரிப் பிரிவுனவளர்தர
அமைத்தான் ஸ்ரீபுர நகருள்
மதிமான் பஞ்சரன் மகிழ்ந்தேய்"[12]

என்பதாம்.

விருத்தப்பாவில் இம் மன்னனைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது; சம காலத் தமிழகத்திலே கம்பர் இதே யாப்பிலே கம்ப இராமாயணம் என்னும் பெருங் காப்பியம் எழுதியுள்ளமை குறிப்பிடற் பாலது. இதேகாலத்திலும் தென்னிந்திய, ஈழத் தொடர்புகள் பல இருந்து வந்தன. இவை சமகாலச் சோழச் சாசனங்களாலும், நிசங்கமல்லனின் அல்லாய் சாசனத்தாலும், பிறவற்றாலும் தெளிவாகும்.

இக்காலத்தின் பின்னரும் தொடர்ந்து சிங்கள மன்னர் சிலர் சிங்களத்தில் மட்டுமன்றித் தமிழிலும் சாசனங்கள் வெளியிட்டனர். எடுத்துக்காட்டாக, ஆறாவது பராக்கிரமபாகுவின் காலத்திய முன்னேஸ்வரம் கோவிற் சாசனம், யாழ்ப்பாணம் பிரதானவீதிக் கல்வெட்டு முதலியனவற்றினைக் குறிப்பிடலாம். போத்துக்கேயராட்சி முடியும்வரை கோட்டை இராச்சியத்திலும் 1815 வரை கண்டி இராச்சியத்திலும் தமிழியற் செல்வாக்கு நிலவியது. 16ஆம் நூற்றாண்டுக் கோட்டையரசர்களில் ஒருவரான 7ஆம் புவனேகபாகுவின் கடிதம் தமிழிலுண்டு.[13] கண்டி இராச்சிய காலத்தின் பிற்கட்டத்தில் எழுதப்பட்ட ஓலையினைக் காணலாம்.[14]

கி. பி. 13ஆம் நூற்றாண்டிலேற்பட்ட யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளின் கி. பி. 14ஆம் நூற்றாண்டுச் சாசனமொன்று கேகாலையிலுள்ள கோட்டகம என்ற இடத்திலே வெண்பாவிலே வந்துள்ளது. அதாவது,

"கங்கணம்வேற் கண்ணினையாற்
காட்டினர் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம்
பாரித்தார் — பொங்கொலிநீர்ச்
சிங்கைநக ராரியரைச்
சேரா அநுரேசர்
தங்கள் மடமாதர் தாம்"[15]

ஏறக்குறைய சமகாலத்திலேதான் புகழேந்தியார் நளவெண்பா பாடிப் புகழ் பெற்றவர்.

மேற்குறிப்பிட்டதைவிட கி. பி. 16ஆம் நூற்றாண்டளவைச் சேர்ந்த திருகோணமலைக் கல்வெட்டினைக் குறிப்பிடலாம். அதாவது,

---

12. Kanapathippillai K. (i) "Tamil Inscription from Panduvasanuvara" University of Ceylon Review XVIII 1960. ப. 157 — 162.

    (ii) Krishnan K. G. "Notes on the Tamil Inscription from Panduvasanuvara" University of Ceylon Review XX. ப. 15 — 16.

13. Perera Fr. S. G. History of Ceylon for Schools Colombo 1951. ப. 33.

14. நாயக்கவமிச மன்னர்களைக் குறிப்பிடலாம்.

15. (i) "The Problem of the Kotagama Inscription" Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society XXXII. ப. 214 — 15.

    (ii) இராசநாயகம் செ. யாழ்ப்பாணச் சரித்திரம் 1933. ப. 68.

"முன்னே குளக்கோட்டன்
மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி
பிரிக்கவே — மன்னவபின்
பொண்ணுதை தனையிற்ற
வழித்தே வைத்து
எண்ணரே பின்னரசர் கள்"[16] என்பதாம்.

இஃதுமொரு வெண்பாவே.

இவ்வாறு சாசனமூலம் ஈழத்திலே சில தமிழ்ச் செய்யுட்கள் கிடைத்துள்ளன; இவைபோன்று மேலும் சிலவாவது கிடைக்கலாம்; இவற்றிலே, சமகாலத் தமிழக இலக்கியத்தின் போக்கும் தொனிக்கின்ற தெனலாம். சிலவகையிலே வேறுபாடிருப்பினும், தமிழக இலக்கிய வளர்ச்சியினை ஒட்டியே ஈழத்திலும் தமிழிலக்கிய வளர்ச்சி பண்டுதொட்டு வளர்ந்து வந்ததெனலாம். இக் கருத்திற்குச் சாசனவியலும் சான்றாகும். இன்று ஈழத்திலே கிடைத்துள்ள காலத்தால் முந்திய முழுமையான தமிழ் நூல் கி. பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சரசோதி மாலையாகும். இதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே சாசனமூலம் தமிழ்ச் செய்யுட்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடற்பாலது. ஈழத்துப் பூதந்தேவனார் பாடல்கள் வேறுவகையின;

VIII. ஈழத்துத் தமிழ்மொழி நூல்

ஈழத்தில் இன்றுவரை கிடைத்துள்ள சுமார் 150 தமிழ்ச் சாசனங்களிலே ஈழத் தமிழ் மொழியின் நிலையினையும், அதிலே காணப்படும் சில பண்புகளையும் ஓரளவு அறியலாம். இவ்வகையிலே இலக்கிய நூல்களிற் காணப்படாத குறைபாடுகள் சில வற்றைச் சாசனங்கள் பூரணப்படுத்துகின்றன. தென்னிந்தியாவினைப் போன்று பெருந் தொகையான தமிழ்ச் சாசனங்கள் இங்கு கிடைக்காவிடினும், குறைந்த அளவிலாவது கிடைத்துவருவது குறிப்பிடற்குரியது. தென்னிலங்கையிலும், மத்திய இலங்கையிலும் கிடைத்துள்ள சில சாசனங்களிலே சிங்களச் சொற்கள் சில வந்துள்ளன. ஈழத் தமிழ்மொழி வரலாற்றினைச் சாசனவியற் சான்றினடிப்படையிலு மாராயவேண்டும். இதற்குமுன் பல இடங்களிலும் கிடைக்கக் கூடிய தமிழ்ச் சாசனங்களைத் தேடிப் பதிப்பித்த லவசியமாகும்.

IX. ஈழத்துத் தமிழ்வரி வடிவம்

ஈழத்துத் தமிழ்வரிவடிவ வளர்ச்சியின் வரலாற்றினைக் குறிப்பாகச் சாசனங்கள் மூலமாகவும் பழையகால ஏடுகள் (கிடைப்பின்) மூலமாகவுமே அறியலாம். தென்னிந்தியாவிலே தமிழ்வரி வடிவத்திலேற்பட்ட வளர்ச்சிக்கேற்பவே இலங்கையிலும் வளர்ச்சியேற்பட்டாலும் சில வகையிலே வேறுபாடுகள் உள்ளன. ஈழத் தமிழ்வரி வடிவ வளர்ச்சிக்கும், சமகாலச் சிங்கள வரிவடிவ வளர்ச்சிக்குமிடையிலே தொடர்புண்டு. இரண்டிலும் தென்னிந்தியக் கிரந்த, தமிழ் வரிவடிவ வளர்ச்சியின் தாக்கமுண்டு.[17] ஈழத் தமிழ்வரிவடிவ வளர்ச்சி வரலாற்றினை நன்கு ஆராய்ந்து எழுத வேண்டும்.

X. ஈழத்துச் சாசனத் தமிழிலக்கியம்

இத்துறையினைப்பற்றி ஓரளவு கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை யவர்கள் ஆய்ந்துள்ளாராயினும்[17அ] இது விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். சாசனத் தமிழ்ச் செய்யுட்கள் நான்கு ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றைவிட வேறு செய்யுட்களும் உள்ளன. இவையும் சாசனங்களின் வசனபாகங்களும் நன்கு ஆராயப்பட வேண்டியவை. சாசனத் தமிழிற்கும் இலக்கியத் தமிழிற்கும் மட்டுமன்றிப் பேச்சுத் தமிழிற்கு மிடையிலே நெருங்கிய தொடர்பு உண்டு. ஆகவே தமிழ் இலக்கிய, இலக்கண ஆசிரியர் மட்டுமன்றி மொழியியல் ஆசிரிய

16. இராசநாயகம் செ. மேற்படி ப. 80 இறுதிவரி "எண்ணரே பின் வந்தவர்கள்" எனவும் பூரணப்படுத்துவர்.

17. Fernando P. E. "Palaeographical Development of the Sinhalese Script". University of Ceylon Review VII. 4. 1949. ப. 282 — 301; VIII. 4. 1950. ப. 222 — 243.

17அ. வேலுப்பிள்ளை ஆ. சாசனமும் தமிழும் — கண்டி 1971.

ருக்கும் சாசனங்கள் பயன்படத் தக்கவை. ஈழத்துத் தமிழ்ச் சாசனத் தொகுப்பு நூல் ஒன்று வெளிவரின் இவற்றிற்கு நன்கு பயன்படலாம்.

XI. காலம்தோறும் ஈழத்திலே தமிழ்மொழி நிலை

இவ்விடயம்பற்றி எமக்குத் தொல் பொருளும் துணை செய்கின்றதா? மிகப் பழைய காலத்திலே தமிழ்மொழியின் நிலை எவ்வாறிருந்தது என்பதுபற்றித் திடமாக அறியமுடியாதிருக்கிறது. அக்காலத்திலே ஈழத்தமிழர் அநுராதபுரத்தில் என்ன, துறைமுக நகரங்களில் என்ன தம்மவர்க்குள்ளே தமிழ் பேசி யிருப்பர்; சிங்கள மக்களுடன் அவர்களின் மொழியிலே தொடர்புகொண்டிருந்தனர் எனலாம். கி. மு. இரண்டாம் நூற்றாண்டு தொட்டுச் சில நூற்றாண்டுகளைச் சேர்ந்த ஆதிச் சிங்கள மொழியி லெழுதப்பட்ட கல் வெட்டுக்கள் சில தமிழர்போன்ற திராவிட ராலே வெளியிடப்பட்டன. இச்சாசனங்கள் அநுராதபுரத்திலோ, அண்மையி லுள்ள இடங்களிலோ கிடைத்துள்ளன. கி. பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வசபன் காலத்திய வல்லிபுரம் பொற்சாசனம் ஆதிச் சிங்கள மொழியி லெழுதப்பட்டுள்ளது. ஆனால், இஃது ஓர் உத்தியோகபூர்வமான சாசனமாகும். ஆகவே இதுவும் முற்குறிப் பிட்ட சாசனங்களும் அக்கால உத்தியோக மொழியிலெழுதப்பட்டவை. இக்காரணத்தி னாலே தமிழ் முற்றாக நிலவவில்லையெனத் திடமாகக் கூறமுடியாது. தமிழர் நடமாட் டங்களையும், செயல்கள் சிலவற்றையும் பற்றித் தீபவம்சம், மஹாவம்சம் போன்ற இலக்கிய மூலங்கள் மட்டுமன்றி இதுவரை கிடைத்துள்ள பெருங்கற் சமாதிகளும் சான்று பகருவன. இலங்கையின் வட பகுதியிலேயுள்ள கந்தரோடையிலே 1970ஆம் ஆண்டு பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி விமலா பேர்க்லி, திரு. புரூன்சன் முதலி யோர் குறிப்பிடத்தக்க அகழ்வாராய்ச்சி நடத்தினர். கட்டுரையாசிரியரும், யாழ்ப் பாணக் கல்லூரி முதல்வரும், வேறிரு நண்பர்களும் அவ்விடத்திற்குச் சென்று பார்த்தனர். அவர்கள் அகழ்ந்தெடுத்த சின்னங்கள் பலவற்றைக் குறித்துத் திரு. புரூன்சனிடம் கேட்டபோது இவ்அகழ்வு களின் கீழ்ப்படைகளிலே தமிழ்நாட்டி லுள்ள அரிக்கமேட்டிற் கிடைத்துள்ள சின னங்கள் போன்றவை காணப்படுவதாகக் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடபகுதியிலும், மேற குக் கரையோரம், அநுராதபுரம், பொல நறுவை போன்ற இடங்களிலும் பழைய காலத்திலே தென்னிந்தியாவிற் போன்று தமிழ்ப் பௌத்தர்களும் வாழ்ந்தனர் என லாம். ஆங்கிலேயர் காலத்திய கிறிஸ்தவர் தமிழைவிட லத்தீன், குறிப்பாக ஆங்கிலத் தினைப் போற்றியதுபோல அவர்களும் பாளிமொழியினையும் சிங்கள மொழியினை யும் போற்றினர் எனலாம். இக்கருத்திற்குக் கி.பி.5ஆம் நூற்றாண்டுவரை கிடைத்துள்ள சில கல்வெட்டுகளைக் குறிப்பிடலாம்.[18] தமிழ்ப் பௌத்தர் வெளியிட்ட காலத் தால் முந்திய தமிழ்ச் சாசனம் கி. பி. 9ஆம் நூற்றாண்டைய நான்கு நாட்டார் சாசனமாகும். இதற்கு முந்திய காலத் தமிழ்க் கல்வெட்டுக்கள் இனிமேலாவது கிடைக்குமா? ஆனால் இனிமேலாவது கல் வெட்டுக்களோ பிற சான்றுகளோ கிடைக் கும் வரை, இக் காலம்வரை தமிழின் நிலை பற்றித் திடமாகக் கூறமுடியாது. தமிழ் பேசிய மக்கள் வாழ்ந்தனர் என்பதையும் அவர்கள் ஈழத்திற்குப் பல வழிகளிலும் தொண்டாற்றி வந்தனர் என்பதையும் மறுக்க முடியாது.

கி. பி. 10ஆம் நூற்றாண்டின் முடிவி லேற்பட்ட சோழப் பெருமன்னர் படை யெடுப்புக்களைத் தொடர்ந்து தமிழ் நன் னிலையுற்றது. சோழரின் இலங்கையிலே (கி. பி. 985—1070) தமிழ் உத்தியோக மொழியாக இலங்கியது. பல இடங்களிலே

18. அநுராதபுரத்தினும் வவுனியாவினும் கிடைத்துள்ள கி. மு. 2ஆம் நூற்றாண்டு விசாக(ன்) போன்றோர் கல்வெட்டுக்கள் அல்லது கி. பி. 5ஆம் நூற்றாண்டு பெரும்பாரிதேவ(ன்), இளம்பாரிதேவ(ன்) போன்றோரின் கல்வெட்டுக்களைக் குறிப்பிடலாம்.

தமிழ்ச் சாசனங்கள் பொறிக்கப்பட்டன. சோழரின்பின் சிங்கள ஆதிபத்தியத்தினை மீண்டு மேற்படுத்திய 1ஆம் விஜயபாகு காலம் தொட்டு இலங்கையிலே சிங்கள மன்னர் தமிழ்மொழிக்கும் ஓரளவு ஆதரவு அளித்தனர் என்பதற்குச் சான்று உண்டு. மேலும், தமிழ்மக்கள் கூடுதலாக வாழ்ந்த பிராந்தியங்களிலே (வடபகுதி, மேற்குப் பகுதி, கிழக்குப்பகுதி, கேகாலைமாவட்டம் முதலியன), தமிழ்மொழிக்குத் தக்க அந்தஸ்து ஓரளவாவது நிலவியதை கி. பி. 11ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதி தொடக்கம் ஆட்சிசெய்த பெரிய சிங்கள மன்னரின் சாசனங்களாலும் அறியலாம். குறிப்பாக, 1ஆம் விஜயபாகு,[19] 1ஆம் ஜயபாகு[20], 1ஆம் பராக்கிரமபாகு,[21] (கலிங்க) நிசங்க மல்லன்[22], 6ஆம் பராக்கிரமபாகு[23] முதலியோர்காலச் சாசனங்களைக் குறிப்பிடலாம்.

மேலும் கி. பி. 14ஆம் நூற்றாண்டிலே தம்பதேனியாவிலிருந்து ஆட்சிசெய்த 4ஆம் பராக்கிரமபாகுவின் ஆதரவிலிருந்த போசராச பண்டிதர் சரசோதிமாலை என்ற நூலினை ஆக்கியமை குறிப்பிடற்பாலது. தொடர்ந்து கம்பளை, கோட்டை, சீதவாக்கை, கண்டி ஆகிய அரசுகளிலும் தமிழிற்கோரிடமிருந்தது. இக்காலத்திய பௌத்த பிரிவேனாக்களிலே தமிழும் பயிற்றப்பட்டது. தமிழிலக்கிய, இலக்கண மரபுகளைப் பின்பற்றிச் சிங்கள இலக்கண, இலக்கிய நூல்கள் எழுந்தன. எடுத்துக்காட்டாக சித்தத்சங்கிரஹ என்ற சிங்கள இலக்கண நூலினையும்,[24] மயூர சந்தேசய, கோகில சந்தேசய, சேலாலிஹினி சந்தேசய போன்ற சிங்கள தூதுப் பிரபந்தங்களையும் குறிப்பிடலாம்; இவை வடமொழித் தூதுப் பிரபந்தங்களை மட்டுமன்றித் தமிழ்த் தூதுப் பிரபந்தங்களையும் ஒட்டி எழுந்தனவாம். இவ்வாறு சாசனமூலம் அறியப்படுவது பிறமூலங்களாலும் உறுதிப்படுத்தப்படும்.

சிங்கள அரசுகளிலே தென்னிந்திய குறிப்பாகத் தமிழர் செல்வாக்கு அதிகம் நிலவிய படியாற்றான் இதுபற்றி ஆராய்ந்த முதுபெரும் இலங்கை வரலாற்றாசிரியரான கலாநிதி ஜே. ஸி. மென்டிஸ் என்பவர் போத்துக்கேயர் 16ஆம் நூற்றாண்டில் வந்திராவிடின் நிலைமை வேறுபட்டிருக்கலாமென்பர். "அதாவது சிங்கள மன்னர் சபையிலே தமிழர் செல்வாக்கு கி. பி. 15ஆம் நூற்றாண்டி லதிகமேற்பட்டிருந்தது. தக்க நேரத்திலே போத்துக்கேயர் வந்திராவிடில் இலங்கை, மதுரை அல்லது தஞ்சாவூர் ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கும். தென்னிந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருதலைத் தடுத்து, இலங்கைமேலுட்டுச் செல்வாக்கிற்குட்படப் போத்துக்கேயரே ஐயமின்றி வழிகோலினர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.[25] ஆனால், இவரின் கருத்தினை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாதெனினும், தமிழர் செல்வாக்கு நன்கு நிலவியதை மறுக்க முடியாது. மேலும் பேராசிரியர் கா. குலரத்தினம் அவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களிலுள்ள தமிழ் இடப் பெயர்களைப் பற்றிஆராய்ந்துள்ளார்.[26] இதுவும் ஓரளவு

19. Epigraphia Zealonica Vol. II. ப. 242 — 253. Vol. IV. ப. 191 — 195.
20. மேற்படி Vol. III. ப. 302 — 312 1ஆம் ஜயபாகு காலத்திய புது முத்தாவசாசனங்கள் (2).
21. (i) Rasanayagam C. Ancient Jaffna — Madras 1926. ப. 208.
    (ii) Indrapala K. Nainativu Tamil Inscription of Parakramabahu I University of Ceylon Review XXI 1. 1963. ப. 63 — 70.
22. ஏற்கனவே கூறப்பட்டது.
23. Indrapala K. (Editor) Epigraphia Tamilica Vol. I. Part I. ப. 29 — 31.
24. Godakumpura C. E. Sinhalese Literature Colombo 1955. ப. 318 — 319.
    இவ் இலக்கணநூல் வீரசோழியத்தைப் பின்பற்றியது.
25. Mendis G. C. Ceylon Yesterday and Today Colombo 1963. ப. 55.
26. Kularatnam K. "Tamil place names in Ceylon outside the Northern and Eastern Provinces" Proceedings of the First International Conference Seminar of Tamil Studies Vol. I. Kualalampur 1970. ப. 486 — 493.

இப்பகுதிகளிலே நிலவிய தமிழர் செல்வாக்கினை வலியுறுத்துவதாகும். கி. பி. 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் 1619வரை நிலவிய யாழ்ப்பாண இராச்சியத்திலே தமிழ் உத்தியோக மொழியாக விளங்கிற்று. இவ் அரசின் சாசனங்கள், நாணயங்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. சாசனங்களிலொன்று மட்டுமே கிடைத்துள்ளது, நாணயங்களிலே செ(சே)து என்ற வாசகம் காணப்படுகிறது.

XII. கட்டிடக் கலை

சிங்கள தமிழ் மக்களிடையிலே நிலவிய சமூக கலாச்சார சமயங்களின் செல்வாக்குப் பரஸ்பரமாயிருந்தது. தென்னிந்தியாவில் ஆதிகாலம் தொட்டுத் தமிழர் வளர்த்த கட்டிடக்கலை, சிற்பம் முதலியன வற்றின் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டு வந்தது. இதுபற்றிய ஆராய்ச்சி முன்னுரையொன்று அண்மையிலே கலாநிதி கா. இந்திரபாலா அவர்களாலே வெளியிடப்பட்டுள்ளது.[27] போத்துக்கேயரின் அநாகரிகமான கலை அழிவுக் கொள்கையாலே இலங்கையின் கரையோரப் பகுதிகளிலே பழைய கோவில்களும், பிறகட்டிடங்களும் பெருமளவு அற்றுப்போய்விட்டன. ஈழத்துத் திராவிடக் கட்டிடக் கலையியல் தொடர்ந்து ஆராய வேண்டியதாகும்.

XIII. பிற தொல் பொருட்கள்

ஈழத்துத் தமிழர் நாகரிக சார்பான எலும்புக்கூடுகள், சமூக பண்பாட்டு நிலைகளைப் பிரதிபலிக்கும் பொருட்கள், குறிப்பாக அன்றாட வாழ்க்கையிலே பயன்படுத்தப்பட்ட மண், கல், மரம் உலோகமாகிய வற்றினாலே செய்யப்பட்ட பொருட்கள் முதலியனவற்றையும் தொகுத்து ஆராய்தலவசியம். எடுத்துக்காட்டாக, மட்பாண்டவியலைக் குறிப்பிடலாம். மனிதன் தொன்று தொட்டு மண்ணினைப் பயன்படுத்தி வருகிறான். அவனுக்குத் தேவையான உணவுப் பொருட்களைப் பெறும் மூலப்பொருளொன்றாக மட்டுமன்றி, அவனுடைய வசிப்பிடங்கள், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பாத்திரங்கள், கருவிகள் முதலியனவற்றை அமைத்தற்கும் மண் பயன்படுகின்றது. இன்றைய காலத்திலும் பார்க்கப் பழைய காலத்திலே மனிதன் மண்ணாலான சட்டி, பானை, சிறுபிள்ளை விளையாட்டுப் பொருட்கள், வணங்கும் தெய்வத்தின் சிலைகள், மனிதன், மிருகம், பறவை முதலியனவற்றின் உருவங்கள், போர்க்கருவிகள், பிணப்பெட்டிகள் முதலிய பல்வேறுரகமான பொருட்களைப் பயன்படுத்திவந்துள்ளான்.

எமது நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பரவலாகக் காணப்படும் தொல் பொருட்களிலே மட்பாண்டங்கள் குறிப்பிடற்பாலன. இவை காணப்படாத இடங்கள் அருமை. எவ்விடத்திலாயினும், மனித சஞ்சாரம் நிலவியதற்கு மட்பாண்டமும் ஒரு முக்கியமானசான்றும். ஏனெனில், நாகரிக நிலையடைந்த பழையகால மனிதன் மட்பாண்டங்களை எவ்வாறே பயன்படுத்தியே வந்துள்ளான்.

இன்று விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகத் தொல்பொருளியல் பற்றி மூன்றாயிரம் பன்மடங்கு அறியக்கூடியதாயுள்ளது. அறிஞரில் ஒருசாரார் கருத்துப்படி மட்பாண்டவியல் தரும சான்று பிறவற்றிலும் பார்க்க நம்பகமானதாம். ஈழத்திலே கிடைக்கக் கூடிய மட்பாண்டங்களைத் தொகுத்து விஞ்ஞான ரீதியில் ஆராயின் தமிழியல் பற்றியும் சில முக்கியமான கருத்துக்களைப் பெறக்கூடியதாயிருக்கும். மேலும், மட்பாண்டங்கள் அவற்றின் உபயோகத்தின் காரணமாக ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் மத்தியில் மட்டுமன்றி, மற்றவர்கள் மத்தியிலும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஆகையால் இத்தகைய ஆராய்ச்சியிலே கவனமாயிருக்கவேண்டும்

தென்னிந்தியாவிலே கிடைத்துள்ள. திராவிட நாகரிகச் சார்பான சின்னங்களுடன் இலங்கையிலே கிடைத்துள்ள சின்னங்களை ஒப்பிட்டு ஆராய்தலவசியம். ஆனால், பொருட்கள் பல இக் கலாச்சாரங்கள் யாவற்றிற்கும் பொதுவாகவுமிருந்துள்ளன. எப்படியாயினும் சிலவகையிலே தனிப்பண்புகள் தென்படும்.

இவ்வாறு ஈழத் தமிழியலுக்குத் தொல் பொருளியல் பலவழிகளிலும் உதவக்கூடியதாகும். இவ்விரண்டினையும் இணைத்து ஆய்வதன் மூலமே ஈழத் தமிழியல் நன்குதுலங்கும்.

---

27. இந்திரபாலா கா. இலங்கையில் வளர்ந்த திராவிடக் கட்டிடக் கலை — கொழும்பு 1970.

கி. மௌனகுரு, பி. ஏ. [ஆனர்ஸ்]
பாடவிதான அபிவிருத்தி நிலையம்
கொழும்பு

கிராமியக் கலைகளின் மறுமலர்ச்சி

படிப்பறிவில்லாத கிராமிய மக்களின் மத்தியிலே பண்டுதொட்டு நிலவிவரும் கலைகளே கிராமியக் கலைகளாகும். எல்லா இன மக்களிடையேயும் இக் கிராமியக் கலைகள் அவர்களின் பண்பாடு வரலாற்றுக்கு ஏற்ப உண்டு. தமிழரிடையேயுள்ள கிராமியக் கலைகள் சிறப்புவாய்ந்தவை. நாட்டுப்பாடல், வில்லுப்பாட்டு, உடுக்குப் பாட்டு, கும்மி, கோலாட்டம், காவடி, கரகம், லாவணி என அழைக்கப்படும் தர்க்கப்பாட்டு, தெருக்கூத்து, கூத்து, அண்ணாவிமரபு நாடகங்கள் முதலியவை தமிழர்களின் கிராமியக் கலைகளாம்.

இக் கிராமியக்கலைகளின் மறுமலர்ச்சி பற்றி, அதன் அடுத்த கட்ட வளர்ச்சிபற்றிக் கடந்த இரு தசாப்தங்களாக — படித்த மட்டங்களைப் பொறுத்தவரையிலும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் ஓர் எழுச்சி உணர்வு தென்படுகின்றது. இந்த எண்ண எழுச்சி ஒரு தற்காலிகமான எழுச்சியன்று. அது திடீரென ஏற்பட்ட ஓர் உணர்வுமன்று. இதுகாலவரையும் இல்லாத ஈடுபாடு கிராமியக் கலைகளிற் பலருக்கு உண்டானமைக்கும், கிராமியக் கலைகள் இன்று புனிதமாக எண்ணப்பட்டுப் பேணப்படுவதற்குமான காரணந்தான் யாது? இதற்கான காரணம் வரலாறூடு சம்பந்தப்பட்டது.

பழைய பொருளாதார அமைப்புக்களால் மக்கள்மீது திணிக்கப்பட்ட சமூக அமைப்பினையும் சமூக நெறிகளையும் விட்டுப் புதிய பொருளாதார அமைப்புக்களால் ஏற்படும் சமூக அமைப்பையும் சமூக நெறிகளையும் மக்கள் நாடுகையில் பழைய கலைகளைப்பற்றி மக்கள் யோசிப்பதும் அவற்றைக் காப்பாற்ற எண்ணுவதும் நியதி. இலக்கிய வரலாற்றிலே இவ்வுண்மைக்குச் சான்றுகள் நிறைய உள. நாயக்கர் காலப் பகுதியிலே அந்நியருடைய கலாசாரப் பிடியில் அகப்பட்ட தமிழகம் தன் பழமை பேணிப் பாதுகாத்தமையையும் அதனால் அக்கால இலக்கியங்கள் 'பழமை போற்றும் பண்பு' பெற்றனவாக அமைந்தமையையும் இலக்கிய வரலாற்று மாணவர்கள் அறிவர்.

கைத்தொழிற் புரட்சியின் பின்னர் உலக ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களிற் சில பண்டுதொட்டு நிலவிவந்த எமது சமூக அமைப்பின் அடித்தளத்தையும் தகர்த்திருக்கின்றன. அதனோடு தொடர்ந்த ஒரு புதிய சமூக அமைப்பும், புதிய சமூக நெறிகளும் உருவாகி வரும் ஒரு காலகட்டத்தில்தான் நாம் வாழுகின்றோம். ஐரோப்பியர் நம்மை ஆண்டபோது நம்மீது திணிக்கப்பட்ட மேற்கத்திய கலாசாரத்தின் பிடியிலிருந்து விடுபட்டுத் தேசிய உணர்வின் காரணமாக நமது பண்டைய கலைகளைப் பேணவேண்டும் என்ற நிலைக்கு நாம் இன்று வந்துள்ளோம்.

அந்நிய கலாசாரம் எமது நாட்டின் நகரப்புறங்களைத் தாக்கி ஊடுருவல் செய்தபோது, எமது தேசியக் கலைகள் கிராமங்களிலேயே முடங்கிவிட்டன. கிராமத்திலே எமது தேசிய ஆத்மா உறங்கிக் கிடந்தது. கிராமிய மக்களே அவற்றைப் பாதுகாத்து அழியாது பேணினர். அவர்களின் புறச் சூழலும் அதற்குச் சாதகமாயமைந்தது. இன்று ஆட்சி எம் இலங்கை மக்களின் கைக்கு வந்ததன் பின்னர் எமது தேசியக் கலைகளை வளர்க்கும் எண்ணம் எமக்குண்டாயிற்று. தவிர்க்கமுடியாதபடி நம் தேசியக் கலைகளைத் தேடிக் கிராமத்திற்குச் செல்ல வேண்டிய நிலை, கிராமியக் கலைகளை ஏற்க வேண்டிய நிலை இன்றைய தலைமுறையினருக்கு அவசியமாயிருந்தது. இதனாலேயே முன்னொருபோதும் இல்லாத வகையில் கிராமியக் கலைகளைக் 'கவனிக்கும்' வழக்கம்—அதைப் பேணிப் பாதுகாக்கும் வழக்கம் இன்று நம்மவரிடையே காணப்படுகின்றது.

இந்தக் கலைகளைப் பேணுதல் வளர்ச்சியின் முதலாவது படியாகும். அக்கலைகளை வளர்த்தல் அதன் இரண்டாவது படியாகும். வளர்ச்சியின் இறுதியில் அவை கிராமியக் கலைகள் என்ற குறுமைக்குள் நின்று வெளிப்பட்டுத் தேசம் அளாவிய கலைகளாகப் பரிணமித்தல் அதன் மூன்றுவது படியாகும்.

ஐரோப்பியரிடமிருந்து நேரடியாக ஆட்சி அதிகாரத்தைப் பெற்றவர்கள் பொதுமக்களல்லர். தேசிய முதலாளிகளே யாவர். இவர்கள் கிராமியக் கலைகளைப் பேணுவதிலேயே கவனம் செலுத்துவர். அவர்களுக்குக் கலை கலைதான். கிராமியக் கலையும் மரபு ரீதியான ஒரு புனிதமான பொருள்தான். ஆனால் பொதுமக்கள் கலையைக் கலையாக மாத்திரம் கருதுபவர்களல்லர்; கலையை வாழ்க்கையோ டிணைத்தவர்கள். எனவே அதைப் பேணுதலில் மட்டுமன்றி அதை வளர்த்தலிலும் பங்கு கொள்வோர் பொதுமக்களே. ஆட்சி அதிகாரம் பொதுமக்களின் கைக்கு மாறும் பொழுது கிராமியக் கலைகளை வளர்க்கும் பணியும் ஆரம்பமாகும். எனினும் வரலாற்று நியதிக்கு ஏற்ப இன்று பொதுமக்கள் மத்தியிலிருந்து சமுதாய, விஞ்ஞான, சரித்திர உணர்வு பெற்றவர்கள் தோன்றுவதனால் இக்கலைகளைப் பேணுதல் மட்டுமன்றி அவற்றை வளர்க்கும் முயற்சிகளும் ஆங்காங்கே நடைபெறுவதைக் காண்கின்றோம். ஆனால் தேசக் கலைகளாக மாறுமளவுக்கு இன்னும் ஈழக் கிராமியக் கலைகளின் வளர்ச்சி ஆரம்பமாகவில்லை என்பதையும் அதனையிட்டுச் சிந்திப்போர் வெகு குறைவு என்பதையும் நாம் இங்கு ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும்.

கிராமியக் கலைகளில் ஈடுபாடு கொண்டோர் ஆரம்பத்தில் அவற்றைப் பேணுதலையே பிரதான பணியெனக் கொண்டனர். தென்னிந்தியத் தமிழ் அறிஞர்களும், ஈழத்துத் தமிழ் அறிஞர்களும் ஆரம்பத்திற் கிராமியக் கலைகளுக்கு ஆற்றிய பணி, கிராமியக் கலைகளைப் பேணிப் பாதுகாப்பது ஒன்றே. இவர்கள் கிராமிய மக்கள் மத்தியிலே நிலவிய வாய்மொழிப் பாடல்களை அப்படியே தொகுத்தனர். கிராமிய நாடகங்களை, வில்லுப்பாட்டுக்களை, கும்மி, கோலாட்டம் அத்தனையையும் அப்படியே பதிப்பித்தனர். அதற்கு விளக்கவுரை—பதவுரை யாவும் எழுதினர். இன்னும் ஒரு படி மேற்சென்று சங்க அகத்திணை இலக்கியத்தோடு ஒப்பிட்டு அமைதி கொண்டும் ஆனந்தம் கண்டனர். இந்தியாவில் கி. வா. ஜகந்நாதன், பெ. தூரன் போன்றோரும், ஈழத்தில் வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம், கலாநிதி சு. வித்தியானந்தன், F. X. C. நடராஜா போன்றோரும் இவர்களுட் குறிப்பிடத்தக்கவர்கள். இவை கிராமியக் கலைகளைப் பாதுகாக்க எடுத்த முயற்சியின் முதற்படியாகும். அக் கால கட்டத்தில் இவை குறிப்பிடத்தக்க முயற்சிகளே.

வரலாற்று நியதிக்கியைய இலங்கையிலும் இக் கிராமியக்கலை வளர்ச்சி இக் காலகட்டத்தில் ஆரம்பித்தது.

1956க்குப் பின்னர் நாட்டிலே பொதுவாகப் பல துறைகளிலும் ஏற்பட்ட மறுமலர்ச்சியினை நாம் ஞாபகத்திற் கொள்ள வேண்டும். இக்காலத்தைத் தொடர்ந்து இரு இன மக்களிடையேயும் தேசிய உணர்வு ஏற்பட்டதன் பயனைக் கிராமியக் கலைகளைப் பேணவேண்டும் என்ற மனோபாவம் நம் நாட்டுப் படித்தவர்களிடமும் ஏற்பட்டது. 1956ஆம் ஆண்டு முதன் முதலாக இலங்கைச் சாஹித்திய மண்டலமும்—கலைக்கழகமும் ஆரம்பிக்கப்பட்டுத் தேசியக் கலைகளைப் பேண அரசாங்கம் ஆதரவு தந்தது. நாட்டிலிருந்த இலவசக் கல்வி முறையும் சுதேச மொழிகளில் உயர்கல்வி புகட்டப்பட்டமையும் கிராமிய மக்களின் பிள்ளைகள் படித்தவர்களாக வெளிவர உதவியது. இத்தகைய பௌதிகக் காரணிகள், கிராமியக் கலைகளைப் பேணும் மனப்பாங்கை இலங்கை மக்களுக்கு அளித்தது.

1958ஆம் ஆண்டுக்குப் பின்னர் கலைக் கழகத் தலைவராயிருந்த கலாநிதி சு. வித்தியானந்தன் ஆற்றிய பணிகள் இங்கு குறிப்பிடத்தக்கன. அவர் கிராமியக் கலைகளை ஒலிப்பதிவு செய்து அதைப் பேணிப் பாது

காத்தார். அரசாங்க ஆதரவில் மாவட்டங்கள்தோறும் அண்ணாவிமார் மாநாடுகள் வைத்து கிராமிய நாடக ஆசிரியர்களுக்கு உற்சாகந் தந்தார். பண்டைய நாட்டுக் கூத்து ஏடுகளை அட்சரம் பிசகாமல் அப்படியே பதிப்பித்தார். இவரைத் தொடர்ந்து வித்துவான் வி. சீ. கந்தையா, கலாநிதி கா. சிவத்தம்பி ஆகியோர் நாட்டுக் கூத்து ஏடுகள் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இவை யாவும் கிராமியக் கலைகளைப் பாதுகாக்கவும் பேணவும் எடுத்த முயற்சிகளேயாகும்.

கிராமியக் கலைகளின் இரண்டாவது கட்ட வளர்ச்சி என்ன என்பது இப்போது நம்முன் நிற்கும் முக்கிய கேள்வியாகும். கிராமியக் கலைகளை வளர்ப்பதே இரண்டாவது கட்ட வளர்ச்சியாகும். இச் சந்தர்ப்பத்தில், கிராமியக் கலைகளை வளர்ப்பதா? அது செயற்கையானதல்லவா? என்ற கேள்விகள் நம்மிடையே எழுவது இயல்பு. நடைமுறை என்ற உரைகல் உபயோகித்தும் பிறநாடுகளிலிருந்து பெற்ற அறிவு—அனுபவங்களைக் கொண்டும் நாம் இதற்கான விடைகளைத் தெரிந்துகொள்வதோடு கிராமியக்கலைகளின் எதிர்காலத்தையும் வரையறை செய்துகொள்ளலாம்.

நாட்டுக் கூத்துக்களைப் பேணிப் பாதுகாத்தவர்களுள் ஒருவரான பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் 1962, 63, 64, 65ஆம் ஆண்டுகளில் 'கர்ணன் போர்', 'நொண்டி நாடகம்', 'இராவணேசன்', 'வாலிவதை' ஆகிய கூத்துக்களைப் பல்லைக் கழக மாணவர்களைக் கொண்டு தயாரித்தளித்தனர். நவீன நாடக உத்திகளைக் கையாண்டு, மரபு ரீதியான கிராமியக் கலைகளை வளர்க்க ஈழத்தில் அடி எடுத்துவைத்த முதல்வர் அவர். அன்றும் கிராமியக் கலைகளை வளர்த்தல் செயற்கையானதொரு செயல் என்ற குரல் எழுத்தான் செய்தது. ஆனால் நடைமுறை என்ற உரைகல் அக் கூற்றுப் பிழைஎன நிரூபித்துவிட்டது. அவருடைய நவீனப்படுத்தப்பட்ட கூத்துக்கள் ஈழத்தில் தமிழ்பேசும் மக்கள் வாழும் இடமெல்லாம் சென்று சிறப்புற்றமையையும், அதே பாணியில் மட்டக்களப்பின் பல்வேறு நாடகமன்றங்களும், பாடசாலைகளும் கூத்துக்களைத் தயாரித்தமையையும் ஈழத்து நாடக உலகு நன்கு அறியும்.

எனினும், இக்கால அளவோடு கிராமியக் கலைகளைப் பொறுத்தவரை ஒரே தேக்கநிலை காணப்படுவதைக் காணுகின்றோம். இத் தேக்கநிலை ஏன்? சரியான பாதையில் இக் கிராமியக்கலை வளர்ச்சி ஏற்பட்டிருக்குமாயின் அது தொடர்ந்து சென்றிருக்க வேண்டுமே. செல்லாமைக்கான காரணம் என்ன? இதற்கான காரணம் நாமறிந்ததே. கலாநிதி சு. வித்தியானந்தன் தம் நாடகத்தில் உலவவிட்ட பாத்திரங்கள் பழைய நிலமானிய அமைப்பில் வந்த பாத்திரங்களே. புது யுக்தின் பிரதிநிதிகளாக இக்காலப் பிரதிநிதிகள் அவர் நாடகத்தில் நாயகர் நாயகியராக வரவில்லை. கிராமியக் கூத்தின் உருவத்தில் மாற்றம் செய்து ஒரு கட்டத்திற்கு அதனை வளர்த்துச் சென்ற அவர் மறு கட்டத்திற்கு—அதாவது சமுதாயச் சமகால உணர்வுகளைக் கூத்திற் காட்டுமளவுக்குச் செல்லவில்லை. அதனால் அவரோடு அத்தேக்கநிலை ஆரம்பமாயிற்று. இத் தேக்கத்தை உடைத்து அடுத்த கட்டத்திற்கு இக் கிராமியக் கூத்தினை வளர்த்துச் சென்றவர்கள் அடுத்த தலைமுறையினராவர். 1969இல் கொழும்பில் அரங்கேற்றப்பட்ட 'சங்காரம்' என்ற வடமோடிக் கூத்தும், 1970இல் யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்ட 'கந்தன் கருணை' என்ற யாழ்ப்பாணக் கூத்தும் இதற்கு உதாரணங்களாகும். இவ்விரண்டு நாடகங்களும் சமகால சாதி, இன, நிறப் பிரச்சனைகளையும் அதற்கான தீர்வினையும் உள்ளடக்கமாகக் கொண்டவை. இவ்வழியிற் சென்ற கிராமியக் கூத்துக்கள் மக்கள் மத்தியில் இடம் பெற்றதனையும், விமர்சகர்களாற் பாராட்டப்பட்டதனையும் நாமறிவோம். எனவே கிராமியக் கலைகளின் இரண்டாவது கட்ட வளர்ச்சி என்ன என்பதனை இந் நடைமுறை நமக்கு உணர்த்துகின்றது. அண்மையிற் கொழும்பில் மேடையேறிய புகழ்பெற்ற 'கடுழியம்', 'புதிய வீடு' ஆகிய நாடகங்களில் கிராமியத் கூத்து

ஆட்ட முறைகள் அமைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே புதிய உள்ளடக்கத்தைக் கொடுத்து மக்கள் மத்தியிற் கிராமியக் கலைகளை உலவ விடுதலே அதன் இரண்டாவது கட்ட வளர்ச்சி என்பதாகும்.

அடுத்து மக்கள் மத்தியில் இன்று செல்வாக்குப் பெற்றுள்ள பொதுவான இன்னுமொரு கிராமியக்கலை வில்லுப் பாட்டாகும். தென்னிந்தியாவுக்கே சிறப்பாக உள்ள இக்கலை இலங்கையிலும் சமீப காலமாகச் செல்வாக்குப் பெற்று வருகின்றது. முன்பு வில்லுப்பாட்டிற் பாடப்பட்ட கதைகள் கடவுளர், அரசர் பற்றிய கதைகளாகவே இருந்தன. பின்னர் வ. உ. சிதம்பரம்பிள்ளை கதையும் காந்திமகான் கதையும் வில்லில் இசைக்கப்பட்டன. ஈழத்தில் சமூகப்பின்னணியை விளக்கும் மஹாகவியின் 'கண்மணியாள் காதை' வில்லுப்பாட்டுப் பிரபலமானதை நாம் அறிவோம். இதிலிருந்து நாம் அறிவது இதுதான்: சமகால உணர்வுகள் கிராமியக் கலைகள் மூலம் கூறப்படுகையில் அங்கு கிராமியக்கலை வாழுங் கலையாக—மக்கள் தொடர்ந்து விரும்பி வரவேற்கும் கலையாக மாறுகின்றது.

கிராமிய இசைகளாக இருந்த சிந்து, கண்ணி, தெம்மாங்கு என்பன பாரதியாருக்குப் பின்தான் பரவலாக்கப்பட்டுப் பொதுமக்களால் விரும்பிப் படிக்கப்பட்டன. இதற்கான காரணந்தான் யாது? தம் காலத் தேசபக்தியை வெளிப்படுத்தப் பாரதியார் அக் கிராமியப் பாவடிவங்களைக் கையாண்டமையேயாகும்.

மக்கள் மத்தியிலேயுள்ள எரிகின்ற பிரச்சனைகள் கலையாக்கப்படுகையில் அங்கு கலை, வாழும் கலையாக மாறுகின்றது. எனவே, கிராமியக் கலைகளாக வேண்டுமாயின் பேணுதலான முதற்படியினின்றும், வளர்த்தல் என்ற இரண்டாவது படிக்கு அவை உயர்த்தப்படவேண்டும். கருத்துக்களின் வளர்ச்சிதான் கலைகளின் வளர்ச்சி, கருத்துக்கள் மக்களால் விரும்பி ஏற்கப்படுகையில் அது தாங்கும் கலைவடிவமும் மக்களால் விரும்பி ஏற்கப்படும். இதுவே அதன் இரண்டாவது கட்ட வளர்ச்சியாகும். இன்று ஈழத்தில் இரண்டாவது கட்ட வளர்ச்சியின் ஆரம்ப முயற்சிகளைத்தான் ஆங்காங்கே சிதறலாகக் காணுகின்றோம்.

மூன்றுவது கட்ட வளர்ச்சியும் கிராமியக் கலைகளுக்குண்டு. கிராமியக் கலைகள் தேசத்தின் கலைகளாக மாறும் கட்டமே அது. இரண்டாவது கட்ட வளர்ச்சியின் ஆரம்பப்பகுதியிலே இருக்கின்ற நாம்—அந்தளவு வளர்ச்சியைக்கூட ஏற்கத் தயங்கும் நாம்—மூன்றுவது கட்ட வளர்ச்சியான இதைக் கற்பனை பண்ணுவது கூடக் கஷ்டமே. எனினும் உலக நாடுகளில் இக் கட்டம் நடந்தேறிவிட்டமை பிரத்தியட்சம். ஜோன் பயஸ் (Joan Baez), பொப் டிலன் (Bob Dylon) ஆகியோர் அமெரிக்காவிலே நாட்டுப்பாடல்களில் ஏற்படுத்திய மறுமலர்ச்சி இங்கு மனம் கொள்ளத்தக்கது. அவர்கள் ஆரம்பத்தில் நாட்டுப்பாடலில் வியட்நாம் யுத்த எதிர்ப்பினையும், அமெரிக்க வீரர்கள் அந்த யுத்தத்தினுல் அநியாயமாக மாள்வதனையும் கண்டித்துப் பாடினார்கள். அந்தவகையில் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட நாட்டுப்பாடல்கள் இன்று வியட்நாம் யுத்தப் பிரச்சனைகளினின்றும் வளர்ச்சியுற்று அமெரிக்க அரசியல் தேர்தல், சமூகப் பிரச்சனைகள் யாவையும் பாடுகின்ற கலையாக வளர்ந்திருக்கிறது. மக்கள் யாவரும் கிராமத்தவர் — நகரத்தவர் என்ற பேதமின்றி இன்று அதனை இரசிக்கின்றனர். அது கிராமியப்பாடல் என்ற நிலையினின்றும் தேசத்தின் பாடல் என்ற நிலைக்கு உயர்ந்திருக்கின்றது. கிராமங்கள் நகரங்களாக மாறுகையில் கிராமியப் பாடல் தேசப்பாடலாக மாறுவது இயல்பு. இன்று அமெரிக்க சீரிய இசை வாணர்களாலும் கிராமியப் பாடல் பாடப்படுகிறது. சுருங்கச் சொன்னால் கிராமியம்—கிராமியமற்றதென்ற நிலை மாறி அக்கலை

மக்களுடன் இணைந்துவிட்டது. 'கிராமியம்' அற்று மக்களுடன் ஒன்றிணைந்து தேசத்துக் காகி விடுவதே அதன் வளர்ச்சியின் கொடு முடி.

இதற்கு இன்னும் சில உதாரணங்க ளைத் தரலாம். ஆபிரிக்காவிலே அடிமைப் படுத்தப்பட்ட நீக்ரோக்கள் அமெரிக் காவுக்கு ஏற்றுமதியாக்கப்படும்பொழுது அவர்கள், தம் உதடுகளிலும் உள்ளங்களி லும் கொண்டுசென்ற ஒரேஒரு சொத்து கிராமியக்கலை உணர்வே. அவர்கள் பின் னளிற் கிறிஸ்தவர்களானபோது கிறிஸ்தவ உணர்வுகளை நீக்கிரோக் கிராமிய இசை யிற் பாடினர். பின்னளில் அதே இசை 'நீக்கிரோக்களின் ஆத்மார்த்த பாடல்கள்' என்ற பெயரிற் பரவி இன்று அது நீக்கி ரோக்களின் நாட்டுப்பாடல்களாக மட்டு மன்றி பல்வேறுபட்ட மக்களின் பாடலாக ஒலிப்பதையும் காணுகின்றோம்.

நீண்ட காலமாகப் பிரித்தானியரின் கீழிருந்த ஐரிஷ் மக்கள் தம் ஆத்மாவைக் காப்பாற்றி வைத்தது தமது கிராமியக் கலைகளினூலேயாம். அங்கு கிராமியப்பாடல் அயர்லாந்து நாட்டுக் கிராமிய மக்களுக்கு மாத்திரமுரியதல்லாமல் முழுத்தேசத்தின் பாடலாகவும் உள்ளது.

எனவே கிராமியக் கலைகளின் உன்னத வளர்ச்சி அது 'கிராமியம்' என்ற தன் மையிலிருந்து தேசத்தின் கலையாக — உயர்ந்தநிலைக் கலையாக மாறுவதே. அப் போது கிராமியக்கலை கிராமத்தை மாத் திரம் பிரதிபலிக்காது முழுத் தேச மக்களின் உணர்வையும் பிரதிபலிக்கும். அப்போது கிராமியக்கலை புதிய மரபுகளையும் புதிய வரலாற்றையும் உருவாக்கும். அதுவே இதன் கொடுமுடியாம்.

ஈழத்தைப் பொறுத்தவரை நாம் முதற் படியிலேயே நிலையாக நிற்கிறோம். இரண் டாவது கட்ட வளர்ச்சி ஆரம்ப முயற்சி களை ஆங்காங்கே காணுகின்றோம். அவ் வளர்ச்சி நம்பிக்கை தருகின்றது. வரலாற் றின் வேகம் எம்மை மூன்றுவது கட்ட வளர்ச்சிக்கும் இட்டுச் செல்லும்.

பாவலர் போற்றுதும்

அலன் ஆபிரகாம் அவர்கள், B. A.

திருவள ரிலங்கா சிரமென யாண்டும்
பெருவளம் பொலிந்து பிறங்குயாழ்ப் பாணச்
சீருறை நாட்டின் திலதமே யாகும்
ஏர்பெறு தெல்லிநல் லெழில்நகர் வாசன்
மேழிப் பதாகை விளங்குவே ளாளர்
சூழுநன் மரபு துலங்குநற் பாக்கியம்
அட்டதிக் கெங்கணு மழிவுரு நற்புகழ்
எட்டிய வேளரு ளம்பல முதலியார்
புரிதவப் பேருய்ப் புவிமிசை யுதித்து
அரியநற் றமிழோ டாங்கில முணர்ந்தோன்
பெட்புறு மாணவர் பேணுநற் கலைகளை
நட்புட னேது நலங்கிள ராசான்
செவியமு தாகச் செழும்பொருண் மதுரக்
கவிமழை பொழியுங் கவின்மிக வுடையான்
திருந்திய கலைஞர் சிறந்தபா வலர்புகழ்
அருங்கலை யுணர்ந்துரை யப்பநற் பாவலன்
சிந்தைக் கினிய செவிக்குவாய்க் கினிய
சந்தவின் பம்நிறை சங்கீத மெட்டுகள்
சொன்னயம் பொருணயம் சுகிர்தவின்
னிசைநயம்
பண்ணயம் விளங்கு பதகீர்த் தனங்களால்
முந்துறு நீதி முறைகலை யமைத்துச்
செந்தமிழ்ச் செல்வி சிறந்து நடஞ்செயக்
கீதமஞ் சரியெனக் கிளந்தஞா னப்பிர
போதநன் மாலை புனைந்துரு டினனே.

க. சித்திரலேகா, பி. ஏ. [ஆனர்ஸ்]
ஆராய்ச்சி மாணவி
இலங்கைப் பல்கலைக் கழகம்
கொழும்பு வளாகம்

ஈழத்துத் தமிழ் நாவல்களில் வழக்குத் தமிழின் ஆரம்பம்

நவீன உலகின் பேரிலக்கியமெனக் கருதத்தகும் நாவலிலக்கியத்தின் பிரதான பண்புகள் குறித்து ஆங்கில இலக்கிய வரலாற்றுசிரியரான செயின்ஸ்பரி பின் வருமாறு கூறினர்: ''நாவலின் பொருளாகவும் உறுப்புக்களாகவும் சாதாரணமான வாழ்க்கை, வழக்கமான நிகழ்ச்சிகள், பாத்திரங்கள், புனைந்துரையாடல்கள், இன்னோரன்ன சில்லறையான பல்பொருட்கள் கதை வடிவில் இடம்பெறும்.''[1]

சாதாரண வாழ்க்கை, வழக்கமான நிகழ்ச்சிகள், புனைந்துரையாடல்கள் எனும் போது இவை யாவருக்கும் பொதுவான தாய் அமைவதில்லை. நாவலில் தனி மனிதர்களைக் காலம், களம் என்னும் பின்னணியில் நிறுத்தி விளக்கும்போது, அம் மனிதர்களைத் தனித்துவம் வாய்ந்தவர்களாகவும் அக்காலத்திற்கும் களத்திற்கும் பொருத்தமானவர்களாகவும் அவற்றால் உருவாக்கப்பட்டவர்களாகவும் காட்ட வேண்டும். இதனால் நாவலுக்கெனச் சில உள்ளார்ந்த பண்புகள் வந்து பொருந்துகின்றன. இவற்றுள் முக்கியமானதொன்று பாத்திர உரையாடலில் பேச்சுவழக்கின் கையாளுகையாகும். இங்கு ஒரு வினா எழலாம். சாதாரணமாக, அன்றாட வாழ்வில் மனிதர்கள் பேசுவது என்ன ஒரு பொதுவழக்கு உண்டா? காலத்துக்குக் காலமும் இடத்துக்கு இடமும் மனித வாழ்க்கைமுறை வேறுபடும்போது பேச்சு வழக்கும் வேறுபடுகிறது. எனவே இறுதியில் நோக்கும்போது நாவலில் பேச்சு வழக்கின் கையாளுகை என்பது நாவல் குறிப்பிடும் வாழ்க்கை நடக்கும் பிரதேச அல்லது வட்டார வழக்கைக் கையாள்வதையே குறிக்கும். பாத்திரப் பண்பையும் அதன் உண்மைத் தன்மையையும் பேணுவதற்கு இவ்வட்டார வழக்கும் பிரதேச வழக்கும் உதவுகின்றன. பேச்சு வழக்கு உரையாடலில் பொருத்தமாகவும் இயல்பாகவும் வந்து அமைவது நல்ல நாவலொன்றின் உள்ளார்ந்த பண்பாகும். உண்மையில் பாத்திரங்களைக் கட்டியெழுப்புவதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. எனவேதான் பேச்சுவழக்கு நாவலின் வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது.

நாவல் உலகானுபவத்துடனெட்டிய தெனவும் அது பொதுமக்களுக்குரிய இலக்கிய வகையெனவும் அதனால் அது நவீனமானதென்றும் எமது ஆரம்பகால நாவலாசிரியர்கள் ஒப்புக்கொண்டனரெனினும் அதனை அவர்கள் செயல்முறையில் நிரூபிக்கவில்லை. ஈழத்திற்கும் தமிழ் நாட்டுக்கும் இது பொதுப் பண்பாகவேயுள்ளது. காவிய எச்சமாகத்தான் நாவல் கருதப்பட்டது. எனவே ஆரம்பகால நாவலில் காவியச் சாயலில் கதைப் போக்கு, பாத்திரப் படைப்பு என்பன அமைந்தன. அமையவே, அங்கு பேச்சுவழக்கு இடம்பெற முடியாமற்போயிற்று. ஏனெனில், பேச்சு வழக்கு என்பது நாவலின் உலகானுபவத்துடனும் மெய்ம்மைத்தன்மையுடனும் பின்னிப் பிணைந்த ஒன்றாகவே காணப்படுகிறது. நாவல் ஒரு புதிய இலக்கியவகை என்பதை உணரினும் அதனை முழு உணர்வுடன் கையாள ஆரம்பகால நாவலாசிரியருக்கு இலக்கியஅத்திவாரமும், தைரியமும் இருக்கவில்லை எனலாம். பலகாரணங்களாலும் ஆரம்பத்தில் சிருஷ்டி இலக்கியத்துறையில்

1. Spearman D. **The Novel and Society** — London, 1966, P. 18f.

தமிழ்நாட்டுக்கு எவ்வளவோ பின்தங்கியிருந்த ஈழத்தில் இப்பண்பினை அதிகம் காணலாம். பொதுவாக ஈழத்தமிழ் நாவலாசிரியர் நாவலைப் புராணத்துடன் இனங்கண்டனர்.

> ''உலகத்தில் மக்களது அறிவு விருத்திக்குக் காரணமாயுள்ளவை நூல்களேயாகும். இந்நூல்கள் நீதிகள், ஒழுக்கங்கள் முதலியவற்றைக் கூறுவனவும், கதைரூபமாக அவற்றை விளக்குவனவுமாக இருவகைப்படும். தீவிர அறிவுவாய்ந்தவர்களுக்கே யன்றிச் சாதாரண அறிவுள்ள பொதுமக்கள் எவர்களுக்கும் நீதிநெறிகளை நேரே கூறும் நூல்களிலும் பார்க்கக் கதைகள் மூலமாக அவற்றைக் கூறும் நூல்கள் எளிதில் உணரக்கூடியனவாயிருக்கலாம். அதுபற்றியே முற்காலத்தில் புராணங்களும் காப்பியங்களும் அறிஞரால் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் அவைகள் செய்யுள் வழக்கிலே இருந்தமையால் அவற்றைப் பொதுமக்கள் அறியும்படி விளக்கிக் கூறவும் அவ்வறிவுள்ள மற்றொருவரின் உதவி வேண்டப்படுவதாய் இருந்தது. இதனால் பிற்காலத்தில்..... வசனரூபத்திலும் நூல்கள் ஆக்கப்படுவனவாயின. கற்பிதங்களாக எழுதப்படும் நூல்கள் தற்போது 'நவல்' என்னும் ஆங்கிலப் பதத்தால் வழங்கப்படுகின்றன.''2

இவ்வாறு இலங்கையில் முதல் தமிழ் நாவல் தோன்றிச் சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னால் எழுதப்பட்ட காந்தமலர் என்னும் நாவலில் அதன் பதிப்பாசிரியர் கூறுகிறார். இக்கூற்று புராணத்துடன் நாவலை இனங்காணும் போக்கிற்கு நல்ல உதாரணமாயமைகின்றது. நாற்பத்தைந்து வருட இடைவெளிக்குப்பின் வந்த நாவல்களுக்கே அறப்போதனை செய்யும் இந்நோக்குப் பொதுப்படையாக இருப்பின் ஆரம்ப நாவல்கள் இதனை எவ்வாறு பேணியிருக்கும் என்பதை விளக்கவேண்டியதில்லை. இவ்வாறு அறப்போதனை, தர்மத்தின் வெற்றி என்பவற்றினடிப்படையில் நாவலை அமைக்கும்போது அங்கு உலகானுபவமோ, அவ்வாறு உலகானுபவத்தைக் காண்பிப்பதன் விளைவாக வரும் பாத்திரங்களின் மெய்ம்மைத்தன்மை பொருந்திய உரையாடலோ, வழக்கோ இடம்பெற மாட்டாது. இதற்கிணங்கவே இலங்கையின் ஆரம்பகாலத் தமிழ் நாவல்களில் பேச்சுவழக்கைக் காணமுடியாமல் உள்ளது. தமிழ் நாட்டிலும், நாவலிலும் சரி; உரையாடலிலேயே உயிர்நாடியாகக்கொண்ட நாடகத்திலும் சரி; வழக்குத் தமிழ் ஆரம்பத்தில் இடம் பெறுததை இங்கு நினைவுகூரலாம். சுருங்கக் கூறின் சமகால உலகானுபவம், பாத்திரம், பிரச்சனை என்பவை ஆரம்ப நாவலில் இடம்பெறுததன் காரணமாகவே பேச்சு வழக்கும் இடம்பெறவில்லையெனலாம். ஆரம்ப நாவல்களான மோகனாங்கி, விஜயசிலம் என்பவை இதற்குச் சிறந்த உதாரணங்கள். சமூகப்பிரச்சனைகளும் சமூகப் பாத்திரங்களும் நாவலில் இடம்பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே இலங்கைத் தமிழ் நாவலிலும் வழக்குத் தமிழின் ஆரம்பத்தைக் காணத் தொடங்கலாம்.

நாவலில் வழக்குமொழிபற்றி ஆராயும்போது அதன் தோற்றத்தையும் வளர்ச்சியையும் இரு அம்சங்கள் பற்றிப் பார்க்கலாம் எனத் தோன்றுகிறது. ஒன்று உரைநடை வளர்ச்சி; மற்றது நாவல் இலக்கிய வளர்ச்சி. உரைநடை வளர்ச்சி எனும்போது ஆரம்பகால நிலையிலிருந்து வளர்ந்து ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்க முள்ளவனும் விளங்கிக்கொள்ளக்கூடிய இலகுத்தன்மை பொருந்தி அமையும் நடை இலக்கியத்தில் இடம்பெறும் நிலை எனலாம். உரைநடையில் இதனை ஏற்றுக்கொள்ளும்போதும் உணர்ந்து செயற்படும்போதும் அதன் ஒரு விளைவாக நாவல் இலக்கியத்தில் துணிந்து பேச்சுவழக்கினைக் கையாளும் மனப்பாங்கு வந்து அமையும். இதனைப் பொதுவாகக் கூறுவதானால் குறிப்பிட்ட ஒரு இலக்கியக்கொள்கை வளர்ச்சியின் பிரதிபலிப்பு எனலாம். இக் கொள்கை நாவல் ஆரம்பகாலத்தில் ஈழத்தில் இடம்பெறுததன் காரணமாகவும் வழக்குத் தமிழின்

---

2. சி. வே. தாமோதரம்பிள்ளை, **காந்தமலர்**— கொக்குவில், 1936. பதிப்புரை.

ஆரம்பத்தைக் காலம் தாழ்த்தியே காண முடிகிறது.

நாலல் இலக்கியத்தின் வளர்ச்சி எனும் போது இரு அம்சங்களைக் கவனிக்கலாம். ஒன்று, நாவலின் கதைகூறும் உத்தி சம்பந்தப்பட்டது. அடுத்தது, நாவல் சமுதாயப் பிரக்ஞைகொண்ட இலக்கியவடிவமாக, யதார்த்தத்தன்மை கொண்டதாக வளர்வது ஆகும். எமது ஆரம்பகால நாவல்களில் பாத்திர உரையாடலுக்கோ, அதன் மூலம் கதையை நடத்தும் உத்திக்கோ முக்கியத்துவ மளிக்கப்படவில்லை. பழைய கதை சொல்லும் மரபில்தான் கதைத்தொடர் உரையைப் பயன்படுத்தி நாவலாசிரியர் எழுதினர். பழைய கதைசொல்லும் பாணியில் பிரபஞ்ச உற்பத்தி கூறிப் புராணம் தொடங்குவதுபோல ஆரம்ப நாவல்களின் கதைத்தொடக்கம் அமைந்தது.

''பூமியிலுள்ள நவகண்டங்களினுள்ளே செல்வம், கல்வி, நாகரிகம், வருணாசாரம், தேவபக்தி முதலியவற்றினுற் சீர்பெற்றேங்கியதும் மும்மையு முணர்ந்த முனிவர்கள் பலருக்கு இருப்பிடமாக விளங்கியதும் ஏனைய கண்டங்களிலேயுள்ள பெரியோர் சிறியோர் யாவரினாலும் விரும்பப்படும் தன்மைத்தாயதுமாகிய இப் பரதகண்டத்தின் ஐம்பத்தாறு தேயங்களில் ஒன்றாகிய மகத தேயத்தைச் சேர்ந்த இணைநாட்டிலே ஒருன்னதமான பூங்காவனத்திலே, கையில் விற்களும், முதுகில் அம்பறாத்தூணிகளும், அரையிற் கச்சுவாட்களும் தரித்தவராய் இரண்டு வாலிபர் வரும் பொழுது ஒருவன் மற்றவனைப் பார்த்து ''சினேகிதா! இஃதொரு பூங்காவனமாயிருப்பதினாலும் குளிர்காற்று வீசுவதினாலும் சமீபத்திலே தண்ணீரிருக்குமென்று நினைக்கிறேன்'' என்றனன்.[3]

விஜயசீலம் *(1916)* இவ்வாறு ஆரம்பிக்கின்றது. ''ராசாராணிக் கதையாதலால் பழையபாணியில் கூறப்படுகிறது, என்று சமாதானங் கூறலாம். ஆனால் காவிய நடைக்குரிய படாடோபம் ஒருவகையான செயற்கைத் தன்மையைக் கொடுக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டும். இது நிச்சயமாகப் பேச்சுத் தமிழின் விரிவு அன்று.''[4] இவ்வாறு கலாநிதி கைலாசபதி வேரூர் சந்தர்ப்பத்திற் குறிப்பிட்டமை இங்கும் பொருந்துமெனலாம். ஆசிரியரே முன்நின்று யாவற்றையும் விளக்கிக் கதையை வழிநடத்திச் செல்லும் காரணமாக நாவல் தொடங்கி ஒரு கால்நூற்றாண்டு வரை உரையாடலுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படவில்லை. அதன் பயனாக எத்தகைய உரையாடல் எத்தகைய வழக்கு என்பதுபற்றிய பிரச்சனையோ, உணர்வோ தோன்ற இடமிருக்கவில்லை. அடுத்து ஈழத் தமிழ் நாவல்களோ அவற்றின் வளர்ச்சியை ஒட்டி வரலாற்றடிப்படையிலும் பண்படிப்படையிலும் பார்க்கும்போது சமூகப்பிரச்சனைகளும் யதார்த்தப்போக்கும் முதல் நாவல் தோன்றியதையடுத்த இரு தலைமுறைகளின் பின்புதான் இடம்பெற்றன. அதனையொட்டித்தான் வழக்குத் தமிழும் இலங்கைத் தமிழ்நாவலில் இடம்பெறத் தொடங்குகிறது.

ஈழத்துத் தமிழ் நாவல்களில் வழக்குத் தமிழின் ஆரம்பத்தை இரண்டு படிமுறைகளிற் பிரித்துக் காணலாம் என நினைக்கிறேன். இவ்விரு படிமுறைகளுமே ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதுக்கு முன் வந்த நாவல்களில் இடம்பெறுகின்றன. (உண்மையில் முழு உணர்வுடனும் இலக்கிய அக்கறையுடனும் வழக்குத்தமிழ் நாவல்களிற் கையாளப்பட்டது, 56ஆம் ஆண்டுக்குப் பின்னரே என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.) முதற் கட்டத்தில் வழக்குத் தமிழ், வேலைக்காரர் கல்வியறிவற்றவர் முதலிய கீழ்மட்டத்தில் உள்ள பாத்திரங்களின் வாய்மொழியாகவே அறிமுகப்படுத்தப்படுகிறது. உதாரணமாக 'விஜயசீல'த்தில் *(1916)* இராசகுமாரி, தோழிகள், பிராமணர் ஆகியோர் அவ்வப்

3. சி. வை. சின்னப்பபிள்ளை, **விஜயசீலம்** — யாழ்ப்பாணம், 1916, P. 1, 2.

4. க. கைலாசபதி, **தமிழ்நாவல் இலக்கியம்** — சென்னை, 1968, P. 90.

பாத்திர மட்டத்துக்குரிய வழக்கில் பேசுவதாகக் காட்டப்படுகிறது. எனினும் இதனை உண்மையான வழக்குத்தமிழ் எனக் கூற முடியாது. வட்டாரப் பேச்சுத் தமிழாக அது இல்லை. ஏனைய நாடகம் போன்ற இலக்கிய வடிவங்களிலும், இக்காலத்தில் காணக்கூடிய பொதுவான ஒரு பேச்சு நடையாகவே உள்ளது. (பாவலர் துரையப்பாபிள்ளையின் "சகலகுண சம்பன்னன்" (1905) என்ற நாடகத்திலும் இப் பண்பு காணப்படுவது குறிப்பிடத்தக்கது). விஜய சீலத்தின் கதையும் இலங்கையின் வரலாற்றுத் தொடக்ககாலத்துக் கதைக் கருவை மையமாகக் கொண்டது. அதனால் வழக்குத் தமிழை எதிர்பார்ப்பதற் கிடமில்லை. 1914இல் எழுதப்பட்ட மங்களநாயகம் தம்பையாவின் நொறுங்குண்ட இருதயம் என்னும் நாவலில் பரவலான பேச்சு வழக்குநடையும் சொற்களும் இடம் பெற்றுள்ளதாகக் கூறுகின்றனர். இது கிறிஸ்தவ சமயப் பிரசாரத்தை யொட்டி, சமூகப் பிரச்சனையை நாவலில் கையாண்டதால் வந்து அமைந்தது எனலாம். சுந்தரன் செய்த தந்திரம் (1918) எனும் நாவலும் இவ்விடத்தில் முக்கியம் பெறுகின்றது. யாழ்ப்பாணத்தில் சமூகத்தை ஏமாற்றித் திரிவோரின் செயல்களை விளக்குவதாக அமைந்த இந்த நாவல் பொதுவான யாழ்ப்பாணப் பேச்சுவழக்கைத் தழுவிய கதைத்தொடர் உரையில் அமைந்துள்ளது. அதன் ஒரு அம்சமாகவே பாத்திர உரையாடலில் இவ்வழக்குத் தமிழ் இடம் பெறுகிறது. உரையாடலுக்கும் அதனைப் பாத்திரப் பண்பைக் காட்ட உபயோகிக்கும் நோக்கிற்கும் முக்கியமளிக்கப்படவில்லை.

"..... சிலநாட் சென்று ஒரு சந்தடியுமின்மையால் அச்சீலைகளையும் பணத்தையும் போய் எடுத்துப் பள்ளன் தொட்டமையால் அதை உபயோகிக்கலாகாதென்று ஒன்றை வைத்துக்கொண்டு வடிவான சால்வையை வண்ணரச் சுப்பனிடம் வெளுக்கும்படி கொடுத்தார். சுப்பனை 'கமக்காரன் இது ஆருடைய சேலை, புதுமாதிரியான கரை வைத்திருக்குது' என்று கேட்டான். சுந்தரோ அது என்னுடையதுதான், நீவெளுத்து வா என்றார். சுப்பனை இது ஒரு வெள்ளை வெளுத்திருக்குது, ஆத்தையறியாத காரியமு முண்டோ என்று மருத்துவிச்சி மகன் சொன்னதுபோல என்னையறியாமல், நான் வெளாமல் இந்தச்சீலை வந்த வழியென்ன வென்றான்."[5]

"இவன் வருகையைக் காத்திருந்த குருமூர்த்திச் செட்டி நடந்த சங்கதிகளையெல்லாம் விசாரித்தறிந்தபின் சமீபித்து வந்து கூட்டாளிகளையும் கண்டு நீங்கள் வந்தவர்களிடம் சங்கதிகளைக் கேட்டறிந்தபின் கோடிப்பக்கமாய்ப் போவதேன் என்றான். நாங்கள் தாகசாந்தி செய்யவும் சலமலோபாதை நிவர்த்தி செய்யவும் போனோம். நீயேன் நுணுக்கமாய் விசாரிக்கிறாய். உன்பாட்டிற் போ என்றார்கள்."[6]

இங்கு உரையாடலுக்குத் தனியிடம் கொடுக்காமல், கதைகூறும் முறையுடன் சேர்த்து உரைநடைப் பண்பின் ஒரு அம்சமாக வழக்குத்தமிழ் இடம் பெற்றிருக்கிறது.

கீழ்மட்டப் பாத்திரங்கள் கற்றோர் வழக்கிலிருந்து மாறுபட்டுப் பேசுவதையும் அதில் 'கொச்சை' இருப்பினும் வழக்காற்றின் உண்மைத்தன்மை இருக்கவில்லை என்பதையும் முன்னர்ப் பார்த்தோம். காலத்தால் பின்னுக்குவர கீழ்மட்டப் பாத்திரங்களின் உரையாடலில் வழக்குத் தமிழ் உணர்வுடனும் ஏற்புடைமையுடனும் தாராளமாகவும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

"ஆ! தெய்வமே! எங்களுக்கேனிப்படி விட்டாய்? அடே! மச்சான்! நீ இண்டைக்கு விதி குறுகி, இங்கை வந்தியோ? நீ இந்த மண்ணுக்கு இரையாய்ப் போனாய். அதுவும் எங்கடை

5. எஸ். தம்பிமுத்துப்பிள்ளை, **சுந்தரன் செய்த தந்திரம்** — யாழ்ப்பாணம், 1918, P. 16.
6. எஸ். தம்பிமுத்துப்பிள்ளை, **சுந்தரன் செய்த தந்திரம்** — யாழ்ப்பாணம் 1918, P. 16.

கையாலேயோ நீ சாகவேணும்? நாங்க என்ன பாவத்தையடா செய்து போட்டம். உன்ரை, பெண்டிலுக்கும் பிள்ளைகளுக்கும் என்ன சொல்லப் போறம்? நீ சாகையுக்குள்ளை, எங்களுக்குச் சோலி தேடி விட்டிட்டாய். இனி உன்னை எப்ப காணப்போறம்? கள்ளன் பெண் கைம் பெண் என்றபடி, உன்ரை பெண்டிலடை பாடு முடிஞ்சுதே! நீலகண்டன் நல்ல காலம் உன்னிலேயா இடியாய் விழுந்தது.''[7]

நீலகண்டன் என்ற நாவலிற் கள்ளர்களின் வாய்மொழியாக இப்பகுதி வருகிறது. இந் நாவலும் கற்றோர், பெரியோர் ஆகியோர் இலக்கண சுத்தமான தமிழே கதைக்கின்றனர். இந்நிலை இக்காலத்துப் பொதுப்பண்பாகவும் பின்னுக்கு இடைக்கிடையும் காணப்படினும் அடுத்த சில ஆண்டுகளில் இன்னோர் முக்கிய வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ம. வே. திருஞானசம்பந்தபிள்ளையின் நாவல்கள் இக் காலகட்டத்திலே தனிப்பட்டனவாகவும், அதிகம் சமூகப்பிரச்சனைகளுடன் சம்பந்தப்பட்டனவாகவும் வழக்குத் தமிழின் பயன்பாட்டை இன்னோர்படி முன்னெடுத்துச் செல்வனவாகவும் அமைகின்றன. 1927இல் வெளிவந்த **கோபால நேசரத்தினம்** சாதாரண யாழ்ப்பாண இந்துக் குடும்பத்தில் கிறிஸ்தவ சமய இடையீட்டினால் வரும் பிரச்சனைகளைக் கூறுகிறது. ஒருவகையிற் பார்க்கப்போனால் சுதேசிகளை அன்னிய மதத்தைத் தழுவச் செய்யும் நோக்கத்துடனேயே இது எழுதப்பட்டுள்ளது எனலாம். இங்கு குறிப்பிட்ட பாத்திரங்கள் மட்டுமன்றிப் பரவலாக எல்லாப் பாத்திரங்களும் வழக்குத் தமிழைப் பேசுகின்றன. இது நாவலுக்கு உண்மைத் தன்மையையும் கொடுக்கிறது.

''உன் அப்பர் உயிரோடிருந்தால் இந்த எண்ணம் உன்மனதில் எப்போதாயினும் வருமா! இவன் பிள்ளையல்ல கைம் பெண்டாட்டி வளர்த்த கழுதை என்று உற்றூர் அயலார் சொல்ல நடக்கப்போகிறூயா? மகனே பஞ்சம் போம், பஞ்சத்திற் பட்ட வடுப் போகாது; அவர்களுடைய குலமென்ன. எங்களுடைய குலமென்ன; சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒட்டுமோ; அவர்கள் சாதி பார்ப்பதில்லை. சமயம் வேறு; இந்தக் காரியம் உன்னளவில் முடிந்துவிடுவதா? ஊழியுள்ள காலம் வரைக்கும் எங்கள் பிற்சந்ததிக்கு இது ஓர் வசையாகுமல்லவா? உன் அப்பருடைய தகப்பன் சிவபூசை செய்து வந்த வராமே: இவைகள்தான் ஒருபுறத்திற் கிடந்தாலும் போதகருடைய மகளை வைத்துத் தாபரிக்க உன்னால் முடியுமா? உன்னை விற்றாலும் அவளுடைய உடுப்புக்குக் காணுதே; சட்டையென்ன, பாவாடையென்ன, பவுடர்மாவென்ன, சவர்க்காரமென்ன, கட்டப்பூட்ட நகையென்ன, மூக்குக்கண்ணுடியென்ன, கைமேசு கால்மேசு சப்பாத்தென்ன, இவைகளுக்கு நீ என்ன செய்வது?''[8]

யாழ்ப்பாணத்திலும் முற்றுக வட்டாரத்தமிழ் என்று கூற முடியாவிடினும் பொதுவான ஒரு பேச்சுவழக்கின் பண்பை இந்த உரையாடலிற் காணமுடிகிறது. முற்றுகப் பேச்சுவழக்கினைக் கையாளும் துணிவு இக்கால நாவலாசிரியர்களுக்கு இருக்கவில்லை. புத்திபுகட்டுவது நோக்கமாதலாலும் இலகுவான நடையைக் கையாளவேண்டி வந்தது. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளையின் அடுத்த நாவலில் (1931) இன்னோர் வளர்ச்சியைக் காணமுடிகிறது. கோபால நேசரத்தினம் சமயமாற்றத்தைப் பிரச்சனையாக எடுத்துக்கொள்ள துரைரத்தினம் நேசமணி அதிலும் சற்று விரிவானதும் யதார்த்தத் தன்மையுடையதுமான சமூகப் பிரச்சனைகளில் ஈடுபடுகின்றது. ''இக்கதை அற்பதமிழ்ப் பயிற்சியுடையவர்களும் விளங்கிக் கொள்ளத்தக்கதாய் இயன்றவரையில் இலகுவான தமிழில் எழுதப்பெற்று, இதன்கண் சீதனத்தால் வரக்கூடிய பிணக்கு,

7. இடைக்காடர், **நீலகண்டன்** — யாழ்ப்பாணம், 1925, P. 73.

8. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை, **கோபால நேசரத்தினம்** — யாழ்ப்பாணம், 1927, P. 24, 25.

மதுபானத்தால் வருங் கேடு. தீயவர் சகவாசத்தால் நேரும் அனர்த்தம், பரத்தையரைச் சேர்தலால் வரும் பழி என்பன உதாரண முகத்தால் விளக்கப்பட்டுள்ளன.'' என்று முன்னுரையிற் கூறும் ஆசிரியர் பிரச்சனைகளையும் அவ்வாறே காட்டுகிறார். இந்த வகையில் துரைரத்தினம் நேசமணி (1931) இதற்கு முன்புள்ள நாவல்களிலிருந்து மிகவும் வேறுபட்டு நிற்கிறது. அதன் ஒரு அம்சந்தான் வழக்குத் தமிழ் தாராளமாக இங்கு உபயோகிக்கப் படுவதாகும்.

''பேசிய பேச்சின்படி அந்தக் காசு நூறு பவுணையும் வாங்கித் தரவேண்டும்; இல்லையேல் நீ அவர்களுடைய நன்மை தீமைக்குப் போகக்கூடாது. அப்படிப் போகிறதாய் இருந்தால் பின் இந்த வீட்டுப் படலையும் திறக்க விடமாட்டேன். உன் அப்பர் வீட்டிலேயே இருந்துவிடு; எத்தனை தவணை சென்றுவிட்டது. தருவதானால் தருகிறது, இல்லையேல் இல்லையென்று நேரே சொல்லிவிடுவது. இதை விட்டுவிட்டு ஏன் நூறு ஆசைக்கதை பேசுவான்?''

நாவலின் தொடக்கமே இவ்வாறுதான் அமைந்துள்ளது. பொதுவாக நாவல் முழுவதிலும் இத்தகைய ஒரு வழக்கு உபயோகத்தையே காணமுடிகிறது. இதற்கு முக்கிய காரணமாக யதார்த்தத் தன்மையிலிருந்து வழுவாத பிரச்சனைகள் நிகழ்ச்சிகள் என்பன நூல்முழுவதிலும் வருவதைக் கூறலாம்.

இந் நிலைக்குப் பின் '30ஆம் ஆண்டை' அடுத்துத் தோன்றிய நாவல்கள் பெரும்பாலும் துப்பறியும் மர்மப் பண்பு வாய்ந்த கதைகளாய் உள்ளன. இந் நாவல்கள் கதைச்சுவை, தர்மத்தின் வெற்றி என்பவற்றையே முக்கிய நோக்கமாய்க் கொண்டதாலும் இவ்வகை நாவல்களுக்கு இலங்கையில் உண்மையான சமூக ஆதாரம் இன்மையாலும் உண்மையில் இவை திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த கற்பனைக் கதைகளாகவே அமைந்தன. ஆகவே, சமூக மெய்ம்மையாகிய யதார்த்தம் இல்லாதிருக்கவே அத்தகைய பாத்திரங்களோ, அப் பாத்திரங்களால் நிகழ்த்தப்படும் உரையாடலோ, அவற்றில் வழக்குத்தமிழ் வருவதோ முடியாமல் போகிறது. சுருங்கச் சொன்னால் சமகால உலகம் நாவல்களில் இடம் பெறும்போது பேச்சுத்தமிழும் இடம் பெறுகிறது. அந்நிலை மறைய பேச்சுத்தமிழும் மறைந்துவிடுகிறது. ஆகவே, வழக்குத்தமிழ் நாவலின் முழுமையையும் அது கலைவடிவாகும் தன்மையையும், அதன் பொருளடக்கத்தையும் பொறுத்ததாக அமைகிறது.

இத்தகவல்களைத் தொகுத்து நோக்கும் போது வழக்குத் தமிழின் ஆரம்பத்தை ஆரம்ப நாவல்களிற் காணுவது சற்று அரிதாகவேயுள்ளது என்பதும் காலத்தால் பின்னுக்கு வந்து நாவலின் சமூக மெய்ம்மைத் தன்மையும், கலைத் தன்மையும் வளர்ந்துவரவே அது மெதுவாக வளர்ச்சியடையத் தொடங்குகிறது என்பதும் தெளிவாகின்றன.

பாவலர் போற்றுதும்

ஸ்ரீ ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்

நாவுக் கினியது கேள்விக் கினியது நாட்டுதமிழ்ப்
பாவுக் கினியது பண்ணுக் கினியதெப் பாலவரும்
மேவற் கினிய துரையப்ப பாவலன் மிக்கிசைத்த
வாவற் கினிய விதகீத மஞ்சரி யானதுவே.

சபா. ஜெயராசா, B. Ed. [Cey.]
உதவி ஆசிரியர்
நெல்லியடி மகா வித்தியாலயம்

கல்வி நோக்கில் கிராமிய இலக்கியங்கள்

1 - 0. கல்வி நோக்கில் கிராமிய இலக்கியங்கள் பரந்த துறையாக விளங்குகின்றன. இலக்கிய வாசிரியனுக்கு மட்டுமன்றி, கல்வியியலாளன், வரலாற்றுசிரியன், சமூகவியலாளன், சங்கீதவாசிரியன், மொழியியலாளன், மனிதவியலாய்வாளன் (Ethnologist) போன்ற பல்வேறு துறையினருக்குமுரிய களமாகக் கிராமிய இலக்கியங்கள் செறிந்து நிற்பதனால் அறிவு சம்பந்தமான பயன்பாடுகளைக் கொண்டு விளங்குகின்றன. இத்துறைகளில் ஆய்வுகள் செய்வதற்குப் பரந்த துறைகள் காணப்படுவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.[1]

1-1. மனித இனத்தின் வரலாற்றினை அறிவதற்கு உதவும் அளவுகருவியாகக் கிராமிய இலக்கியங்கள் விளங்குகின்றன. அரசியல், பொருளாதாரப் பண்பாட்டு வரலாற்றின் பிரச்சினைகளை[2] இவை துலக்குகின்றன. வரலாறு சமூகவியலுடன் இணைந்திருப்பதோடு, நிறைந்த கல்விப்பயனை[3] நல்கும் சாதனமாகவும் விளங்குகின்றது. இசையின் தொன்மையினையும், பண்டைய இசை வகைகளையும் அறிவதற்குக் கிராமியப்பாடல்களைப் போன்ற பிறிது சாதனங்கள் இல்லையென்று துணிந்து கூறலாம். ஆங்கில கிராமியப் பாடல்களை ஆராய்ந்தபோது[4] 1500 இசைகள் வரையிற் கண்டுபிடிக்கப்பட்டன. கிராமிய மக்களது உணர்ச்சிகளை வெளிக்கொண்டுவரும் தன்மை பொருந்திய இசை வகைகள் கிராமியப் பாடல்களில் நிறைந்து காணப்படுகின்றன. மொழியியல் ஆய்வுகளுக்கு இதில் இடம்பெறும் சொற்கள், வாக்கிய வமைப்பு முதலியன பெரிதும் துணை செய்வனவாம்.

1 - 2. சமூகவரலாற்றின் விளக்கங்களுக்குக் கிராமிய இலக்கியம் பயன்படுவதால் விஞ்ஞானப் பண்புகளையும் கொண்டு விளங்குகின்றது. இவ்வாறு பல துறைகளிலும் கிராமிய இலக்கியம் செறிந்து நிற்பதனால் கல்விநோக்கில் இதன் பயன்பாடு தனிச்சிறப்பு வாய்ந்தது.

2 - 0. அழகியல் உணர்வினை வளர்த்தல் கல்வியின் பிரதான நோக்குகளுள் ஒன்றாகும். இசை ஒரு கல்விமூலகமாக விளங்கி மனிதனின் குணநலத்தையும், ஆளுமையினையும் உருவாக்குவதற்குத் துணை செய்கின்றது. கிராமியப் பாடல்களிலுள்ள இசை வகைகள், பொருட்செறிவு முதலியன உணர்ச்சிகளைத் தூண்டும் தூண்டிகளாக விளங்கி, உணர்ச்சிகளுக்குப் பயிற்சியளிக்கவும் வல்லன.

2 - 1. மக்களது உணர்ச்சிகளை வெளிக்கொண்டுவர இவ் விசைவகைகள் சிறந்த சாதனங்களாக விளங்குகின்றமையால் கிராமிய இசைகளைக் கையாளும்பொழுது மக்கள் கவரப்படுகின்றார்கள். ஆரம்ப காலத்திலே கே. வி. மகாதேவன், விஸ்வநாதன் — ராமமூர்த்தி ஆகியோர் தமிழ்த் திரையில் புதுமை காட்டியதற்கும் நாட்டுப் பாடல் வளத்திலிருந்து அவர்கள் பல

---

1. Sharp Cicil J. English Folk Song — முன்னுரை
2. Gerould G. H. The Ballad of Tradition
3. Rowse A. L. The Use of History
4. Sharp Cicil J. English Folk Song.

மெட்டுக்களைப் பெற்றமையே காரணமாகும்.[5] இன்று சோவியத் நாட்டிலும் சீனாவிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு ஆகியவற்றை விளக்கும் கவிதைகளுக்குரிய மெட்டுக்களைக் கிராமியப் பாடல்களிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றார்கள். அழுக்சப்படும் உணர்ச்சிகளை வெளியிட இவை பொருத்தமான மெட்டுக்கள் போலும்.

2-3. தென்–இந்திய இசையாசிரியர்கள் பலர் இன்று இசையினைக் கற்பனாவாதப் பொருளாகிய 'ஆத்மாவிற்கு' உரிய தொன்றெனக் கருதி, அதன் சமூகப் பணியினை மறக்கும் வேளையில் கிராமிய இலக்கியத்தைச் சமூகப் பணியில் ஈடுபடுத்துதல் கல்வி நோக்கில் பிரதான ஒரு நிகழ்ச்சியென்றே குறிப்பிடுதல் வேண்டும்.

3-0. மனிதனைச் சூழ்நிலைக் கேற்றவாறு சரியான வழியில் சீராக்கம் செய்து கொள்ளத் துணைபுரிவது கல்வியாகும். சமூகத்தினூடாக்கப்பட்ட கிராமிய இலக்கியம் தனிமனிதவுணர்ச்சிகளுக்கும், சமூகவுணர்ச்சிகளுக்கும் மதிப்பளித்துச் சீராக்கத்திற்குரிய கருவியாகின்றது. இதனால் நாட்டுப்பாடல்களைச் சமூகம் உருவாக்கிய சிந்தனையின் நடைமுறைப் பிரயோகமெனவும் கொள்ளலாம். இலக்கியம் மனிதத் தேவைகளுக்காக மனிதனூடாக்கப்பட்ட கருவி யென்று கூறும்பொழுது அதில் கிராமிய இலக்கியப் பங்கு மிகத் தெளிவாகவுள்ளது.

3-1. ஜோன் டியூஇ கல்வியை ஒரு சமூகச் செயல்முறையாகக் கருதினர்.[6] சமூகத் திறமையே கல்வி யனுபவத்தை மாற்றியமைத்துத் தூய்மைப் படுத்திக் கொண்டு செல்கின்றதெனக் கருதப்படுகின்றது. இந்நிலையில் அனுபவரீதியான உண்மைகளைக் கூறும் கிராமிய இலக்கியம் சமூகச் சீராக்கத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கத் துணைசெய்யும். வாழ்க்கையுங் கல்வியும் ஒன்றிய நிலையில் விளங்குவதைக் கிராமிய இலக்கியங்கள் காட்டுகின்றன.

3-2. கல்வி என்பது பண்பாட்டின் சின்னமாக விளங்குவதுடன் பண்பாட்டைப் பாதுகாக்கவும், பரப்பவும், புதுப்பிக்கவும் வேண்டும். கிராமிய இலக்கியங்கள் பண்பாட்டின் சின்னமாக விளங்குவதுடன் பண்பாட்டைப் பரப்பியும், புதுப்பித்தும் வந்துள்ளதைச் சமூகவியல் ரீதியாக ஆய்வு செய்தல் பயனுடையதாகும்.

4-0. கிராமிய நாடகங்களை நோக்கினால் அவை வாழ்க்கைக்கு வழிகாட்டியாக நிற்பதுடன், குறித்த சமூகம் கருதும் உயர்ந்த வாழ்வினையும் சிருஷ்டித்து நிற்கின்றன. கிராமியப் பாடல்களைப் போலவே நாடகங்களும், ஆளுமை வளர்ச்சிக்கும், சீராக்கத்திற்கும் உதவுவதுடன், தருக்க ரீதியான சிந்தனை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கின்றன. கிராமிய நாடகங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மக்கள் எவ்வாறு தருக்க ரீதியாகச் சிந்தித்தார்கள் என்பதை அறிய முடியும். வாழ்வின் வீழ்ச்சிகளுக்கும் எழுச்சிகளுக்கும் மக்கள் கண்ட தருக்கரீதியான காரணங்கள் கிராமிய நாடகங்களின் மையப் புள்ளிகளாக அமைந்திருப்பதைக் காணலாம். தருக்க சிந்தனையை வளர்த்தலும் காரணங் காணுதலும் அறிவின் திறவுகோல்களாகின்றன.

4-1. கிராமிய நாடகங்கள் கற்பித்தலுக்குரிய சிறந்த சாதனங்களுள் ஒன்றாகும். கிராமிய நாடகங்களை மேடையேற்றுவதனூலோ, அதன் பண்புகளை நவீன நாடகங்களிற் புகுத்தி மேடையேற்றுவதனூலோ, மக்கள்பால் அவை செல்வாக்கினைச் செலுத்துமென்பதில் ஐயமில்லை. டென்மார்க்கிலுள்ள நாடோடிப் பாடசாலைகளிலும், தாகூரின் இலட்சியமாகிய சாந்திநிகேதனிலும், கிராமிய நாடகங்கள் கலைத்திட்டத்திற் பிரதான இடத்தினை வகிக்கின்

---

5. கைலாசபதி க. — சிந்தனை, ஏப்ரல் 1967

6. John Dewey on Education — Selected Writings

றன. சமூகத்தையும். கல்வி நிலையங்களையும் இணைப்பதற்குக் கிராமிய நாடகங்கள் பெரிதும் துணை செய்வனவாம்.

5 - 0. கிராமியக் கதைகள் ஆக்கச் சிந்தனை வளர்ச்சிக்கு உதவி புரிகின்றன. மாணவர்களின் ஆக்கத்திறனை வளர்த்தல் ஆசிரியரது தலையாய கடனுகும். கண்டு பிடிக்கும் சிந்தனை யாற்றல், பழைய பிரச்சினைகளுக்குப் புதிய தீர்வுகாணும் சிந்தனை யாற்றல், சுயமான சிந்தனையாற்றல் முதலிய ஆக்கத்திறன் பண்புகளைக் கிராமிய இலக்கியங்கள் வளர்த்தெடுக்கும் தன்மை வாய்ந்தன.

5 - 1. ஆக்கச்சிந்தனை மிக்க கதைப் புலவர்களால் உருக்கொடுக்கப்பட்ட கிராமியக் கதைகள், மக்கள் மத்தியில் உலாவும் பொழுது, ஆக்கச்சிந்தனை மிக்கவர்களால் மேலும் மெருகூட்டப்படுகின்றன. இத்தகைய சிறப்பியல்பு வாய்மொழிக் கதைகளுக்கு மாத்திரமே யுண்டு. இக்கதைகள் சமுதாயத்தின் மானிட மதிப்புக்களை உருவாக்குவனவாகவும் காணப்படுகின்றன.

6 - 0. பழமொழிகளும், விடுகதைகளும் மக்கள் இதுவரை கண்ட தத்துவத்தின் சாரமாகவே விளங்குகின்றன.

இவை அனுபவரீதியான அறிவையும், ஒழுக்கத்தினையும் புகட்டுகின்றன; அனுபவரீதியான அறிவையும், ஒழுக்கத்தினையும் வழங்குதல் கல்வியின் தலையாய பயனுகும். சமூக அனுபவங்கள் கல்வி அனுபவத்தை மாற்றிமாற்றித் தூய்மைப்படுத்திக்கொண்டு செல்கின்றன. இந்நிலையில் சமூக அனுபவங்களின் குறியீடுகளாகிய பழமொழிகளும் விடுகதைகளும், கல்வியனுபவத்தை வளர்ப்பதற்குத் துணை செய்வனவாம்.

6 – 1. விடுகதைகளும், பழமொழிகளும் சொற்களின் நுணுக்கமான வேறுபாட்டினையும், சொற்களில் மறைந்துள்ள மறை பொருள்களையும், சொற்களின் விரிந்த அல்லது ஒடுங்கிய கருத்தோட்டங்களையும் காட்டுவனவாக விளங்குகின்றன. இவைகள் மாணவர்களின் சொல்லாட்சியினையும், மொழிவன்மையினையும் வளர்க்கத் தூண்டுவதுடன், எழுத்தறிவில்லாத மக்களின் மொழியறிவினை வளர்க்கும் பயன் மிக்க சமூகக் கல்விச் சாதனமாகவும் விளங்கும். எழுத்தறிவற்றவர்களை அதிகமாகக் கொண்ட நாடுகளின் முதியோர் கல்வி வீரிவாக்கற் திட்டங்களில் இவற்றின் பங்கு மேலும் சிறப்புடையதாகும்.

7 – 0. கல்வியென்பது வாழ்வதற்கு இன்றியமையாததாகும். வாழ்க்கையும் தொழிலும், கல்வியும் ஒன்றிய நிலையில் விளங்குவதைக் கிராமிய இலக்கியங்கள் காட்டுகின்றன. கிராமிய இலக்கியங்களுக்கும் தொழிற்பாட்டினுக்கும்[7] நெருங்கிய இணைப்புக் காணப்படுகின்றது. உழவன், விறகுவெட்டி, வண்டியோட்டி, மீனவன், படகோட்டி போன்ற தொழிலாளிகளின் தொழிற்கண்ணோட்டத்தினைக் கிராமியப் பாடல்கள் காட்டுகின்றன. இவற்றிடையே தொழிலின் மகத்துவம் தெளிவாகத் துலங்குகின்றது.

7 - 1. கிராமிய இலக்கியங்கள் குறித்த வொரு சமுதாயத்தினுலுருவாக்கப்பட்டாலும், உழைப்பாளிகளின் இலக்கியம் என்ற அடிப்படை இணைப்பினுல் அவை குறித்த அச்சமுதாயத்தினையும் கடந்து ''ஒருலக நெறியினை'' வளர்த்துச் செல்கின்றன. கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றுக விளங்குவது சர்வதேச நெறியினை வளர்த்தலாகும். உலகம் உய்ய உழைக்கும் விழுமிய மனோபாவம் கிராமிய இலக்கியத்தின் அழகினுக்கு வலிமை தருகின்றது. கல்வியின் நோக்கம் மனிதனை மனிதனுக்குவது மட்டுமல்ல, மனிதனை மேலும் மனிதனுக்குவதாகும்.

---

7. Division of Labour

8 - 0. வெறும் தத்துவங்களை மட்டும் கற்றல் கல்வியாகாது. அது உண்மைத் தன்மை பொருந்தியதாக இருத்தல் வேண்டும்.[8] வீண் கற்பனைகள், புளுகுகள் அற்ற நிலையில் நிஜத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமிய இலக்கியங்கள், உண்மைத் தன்மையை எடுத்துக் கூறிக் கல்வி நோக்கினை நிறைவு செய்கின்றன. இதனால் கிராமிய இலக்கியங்கள் நிஜத்தன்மை பொருந்திய ஜீரணமாக அமைவதுடன், உயிர் ஊட்டுவனவாய், ஊக்கமளிப்பனவாய் அமைகின்றன.

8 - 1. சகல வயதினர்க்கும் அவரவர் உளத் திறமைக்கேற்ற வகையிலே இவ் விலக்கியங்கள் அமைந்துள்ளன. கல்வி யென்பது வயதிற்கும், ஆற்றலிற்கும் ஏற்ற வாறு வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து செல்லும் செயல்முறையாகும்.[9] தொட்டிலிலுள்ள சிறுவர் தொடக்கம், கட்டிலிலுள்ள முதியவர்வரை கல்வி செயல் முறையாக வமைகின்றது. தாலாட்டும், தொழில்முறைப் பாடல்களும், காதற் பாடல்களும், தெய்வப் பாடல்களும், அவரவர் உள வயதிற் கேற்றவாறு கல்வி யூட்டுவதற் கேற்ற பண்பினைக் கொண்டுள்ளன.

8. Mao Tse Tung — Reform our Study

9. Lester Smith — Education

பாவலர் போற்றுதும்

வயாவிளான், க. வேலுப்பிள்ளை அவர்கள்

இருந்தும் புகழொன் றிலரெம்முட் கோடி
இருந்துமிறந் தும்புகழை யெய்த — பெருந்தகைமை
யாளருட்டெல் லித்துரையப் பாசிரியன் பேருமென்றும்
ஆளப் படுமொன்று மே.

பாவலனே யுண்மைப் பரோபகா ரம்படைத்த
காவலனே கால்பரத நூல்கற்றுக் — கீதரச
மஞ்சரிசெய் மாவலனே மாநிலனேத் தாசிரிய
சுந்தரனே யித்துரையப் பா.

தெல்லி மகாஜன வாங்கில வித்யா லயச்சுடரை
நல்கிய தென்னவன் றத்தோத் திரியவ தாரநரன்
வில்லுங் கலியிற் குணேதிட் டிரனென்றெஞ் ஞான்றுமிக்கார்
சொல்லும் புகழைநட் டானித் துரையப்ப தூமணியே

மதுரைமுன் னீங்கப் பயம்பசு வெய்தவந் தான்றெலிக்கோர்
புதுவிது போலிருந் தானென் பதைமறுத் தும்புகல
எதுபொழு தேனு மிலையொரு பேரெனி லென்றுமிருப்
பதுஇற வாத திவன்பே ரெனிற்படி றல்லவதே.

ச. அம்பிகைபாகன், பி. ஏ.
முன்னைநாள் அதிபர்
வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம்

ஆங்கிலேயராட்சியிலே யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சி

ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை 1796ஆம் ஆண்டிலும், கண்டி இராச்சியத்தை 1815ஆம் ஆண்டிலும் கைப்பற்றினர். ஆரம்பத்தில் ஆங்கிலேயர் கல்வி விஷயத்தில் அதிகம் அக்கறைகாட்டவில்லை. கரையோரப் பிரதேசங்களில் டச்சுக்காரர்களால் அமைக்கப்பட்டிருந்த பள்ளிக்கூடங்களும் சீர்குலைந்து வந்தன.[1] இந்நிலையில் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து மிசனரிமார் இலங்கையில், விசேடமாக யாழ்ப்பாணத்திலே, தமது கல்விப் பணியை ஆரம்பிக்கத் தொடங்கினர்.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தவர்கள் வெஸ்லியன் மிசனரிமார்கள் ஆவர். இவர்கள் 1817ஆம் ஆண்டில், முன்பு ஓர் அஞ்தசாலையும் லூதரின் சேட்சும் இருந்த இடத்தில், [இப்பொழுது மத்திய கல்லூரி இருக்கும் இடத்தில்] ஒரு ஆங்கிலப் பாடசாலையை நிறுவினர்.[2] இதையடுத்து 1823ஆம் ஆண்டில் அங்கிளிக்கன் மிசனரிமார் நல்லூரில் பழைய டச்சேட்ச் இருந்த இடத்தில் ''நல்லூர் இங்கிலிஷ் செமினரி'' என்னும் பேரில் ஓர் ஆங்கிலக் கல்வித் தாபனத்தைத் தொடங்கினர்.[3] அமெரிக்கன் மிசனரிமார் 1816ஆம் ஆண்டில், தெல்லிப்பழையிலும் மல்லாகத்திலும் இலவசத் தமிழ்ப் பாடசாலைகளைத் தாபித்தனர். இதனோடு திருப்தி அடையாது, தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், உடுவில் முதலிய இடங்களிலும் விடுதிப் பாடசாலைகளைத் தாபித்தனர். இவ் விடுதிப் பாடசாலைகளிற் படித்த ஒவ்வொரு பிள்ளையும், அமெரிக்காவில் இருக்கும் ஒருவர் அல்லது ஒரு தாபனம் கொடுத்த உதவிப் பணத்தைக் கொண்டு தாபரிக்கப்பட்டு வந்தனர். எவரிடமிருந்து ஒரு பிள்ளை உதவிப்பணம் பெற்றதோ அவரின் பெயர் அப் பிள்ளைக்குச் சூட்டப்பட்டது. இவ்விடுதிச்சாலையிற் படித்த பிள்ளைகளுக்கு ஆங்கிலமுந் தமிழும் கற்பிக்கப்பட்டதோடு, கிறீஸ்த சமயம், இலக்கணம், கணிதம், பூமிசாஸ்திரம் முதலிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1823ஆம் ஆண்டில் இவ்வைந்து விடுதிப் பாடசாலைகளிலும் 105 ஆண்களும் 28 பெண்களும் கல்வி கற்றனர். இப்படிக் கற்று வந்தவர்களில் 20 ஆண்பிள்ளைகள் மிகத் திறமைசாலிகளாகக் காணப்பட்டனர். இவர்களுக்கு உயர்தரக் கல்வியைப் புகட்டுவதற்கு ஒரு மத்திய கல்வீ நிலையத்தைத் தாபிக்கவேண்டிய அவசியத்தை அமெரிக்கன் மிசனரிமார் உணர்ந்தனர்.

---

1. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி, ஜி. வி. மென்டிஸ், கொழும்பு அப்போஜிக்கரில் கம்பனி, 1960 — பக்கம் 53.
2. Jaffna Central College (1834 — 1934) Centenary Memorial Edition. The Ceylon Examiner Press, Colombo, 1936 — Page 13.
3. A History of St. John's College, Jaffna (1823 — 1923) Compiled by J. C. Handy, H. W. Cave & Co, 1924 — Page 2.

இத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டே வட்டுக்கோட்டைச் செமினரியை 1823ம் ஆண்டில் தாபித்தனர்.[4]

1823ம்ஆண்டு மார்ச் மாதத்தில் செமினரியின் ஐந்து நோக்கங்களையும் விளக்கி ஒரு விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

முதலாவது நோக்கம் தகுதியுடைய சுதேச இளைஞர்களுக்கு ஆங்கிலப் பாஷையிற் சிறந்த அறிவு புகட்டுதல். இந் நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு ஆங்கிலமே போதனாமொழியாகக் கொள்ளப்பட்டது. வங்காள தேசத்தில் இதே காலத்தில் அமெரிக்கன் மிசனரிமார் ஏற்படுத்திய சிரம்பூர் கல்லூரி யதிகாரிகள் சுதேச பாஷையே போதனாமொழியாக இருக்கவேண்டுமென்று வாதாடினர். வங்காளிகளுக்கு ஆங்கில மூலம் போதித்தல், ஆங்கிலேயருக்கு இலத்தீன் மொழி மூலம் போதித்தலை ஒக்கும் என்றனர். இது போலி நியாயம் என்று செமினரியைச் சேர்ந்தவர்கள் சுட்டிக்காட்டினர். ஆங்கிலத்திலுள்ள அறிவுக்களஞ்சியங்களை எல்லாம் தமிழில் மொழிபெயர்த்தல் முடியாதென்றனர். அப்படிச் செய்வதற்கு இரு பாஷைகளிலும் வல்லுநர் தோன்றுவதற்கு ஆண்டுகள் பல செல்லும் என்றுங் கூறினர்.

இரண்டாவது நோக்கம் தமிழ்ப் பாஷையை வளர்த்தல். தமிழ்ப்பாஷை, கிரேக்க, சமஸ்கிருத, கிபுறு பாஷைகளைப் போலத் தனித்தன்மையுடைய, வளர்ச்சியடைந்த பாஷையென்றும், அதை அறிந்திருக்காத மிசனரிமார்களைச் சுதேசிகள் மதிக்கமாட்டார்கள் என்றும், ஒரு சில மிஷனரிமார்களாவது அப்பாஷையிலுள்ள இலக்கியங்களை நன்குகற்கவேண்டுமென்றும் கருதப்பட்டது. தமிழ் மாணவர்களுக்குக் கட்டுரை வரைதலில் நல்ல பயிற்சி கொடுத்து, தமிழில் காலத்திற்கேற்ற உரைநடையை வளர்க்க உதவி செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டது.

மூன்றாவது நோக்கம் விரும்பிய மாணவர்களுக்குச் சமஸ்கிருத பாஷையைக் கற்பித்தல்.

நான்காவது நோக்கம் தெரிந்தெடுக்கப்பட்ட சில மாணவர்களுக்குக் கிபுறு பாஷையைக் கற்பித்தல். பைபிளைச் செவ்வனே கற்பதற்கும் அதனை மொழிபெயர்ப்பதற்கும் இது உதவும் எனக் கருதப்பட்டது.

ஐந்தாவது நோக்கம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கல்லூரிகளிற் சாதாரணமாகக் கற்பிக்கப்படும் பூமி சாஸ்திரம், சரித்திரம், தத்துவசாஸ்திரம், கணிதத்தின் பலபிரிவுகள் முதலியவற்றைப் போதித்தல். இந் நோக்கங்களைப் பற்றி விரிவாக அறிய விரும்புவோர் ஜே. வி. செல்லையா அவர்கள் எழுதிய யாழ்ப்பாணக் கல்லூரிச் சரித்திரத்தைப் படித்தறியலாம்.

மேற்கூறப்பட்டவற்றை நிறைவேற்றும் பொருட்டு வட்டுக்கோட்டையில் 1823ஆம் ஆண்டு ஜூலாய் மாதத்தில் வண. டானியல் பூஅர் என்பவரை அதிபராகக் கொண்டு செமினரி தொடக்கப்பட்டது.[5]

இதனையடுத்து 1824ஆம் ஆண்டில் பெண்பிள்ளைகளுக்கென உடுவிலில் ஓர் ஆங்கில பாடசாலையை அமெரிக்கன் மிசனரிமார் தொடங்கினர்.[6]

அங்கிளிக்கன் பாதிரிமார் நல்லூரில் இதேபோலப் பெண்களுக்கென ஓர் ஆங்கில பாடசாலையை ஆரம்பித்தனர். கத்தோலிக்கர் 1850ஆம் ஆண்டளவில்

---

4. A Century of English Education - J. V. Chelliah, American Ceylon Mission Press, 1922 — Page 2, 3, 4.

5. ibid Page 9 to 16.

6. யாழ்ப்பாண வைபவ கௌமுதி - க. வேலுப்பிள்ளை, ஜயசிறீ சாரதா பீடேந்திரசாலை, 1918—பக். 278.

ஆண்களுக்கென ஒரு பாடசாலையையும், பெண்களுக்கென ஒரு கன்னியாஸ்திரி மடத்தையும் தாபித்தனர்.[7]

யாழ்ப்பாணத்தில் மிசனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட கல்வித் தாபனங்களின் வளர்ச்சிக்கு அக்காலத்து அரசாங்கத்தின் மொழிக் கொள்கையும் அரசியற் போக்கும் உதவியாயிருந்தன. 1829ஆம் ஆண்டு இலங்கையின் அரசியல் நிர்வாகத்தைச் சீர்திருத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறும்படி கோல்புறூக் என்பவரைப் பிரித்தானிய அரசாங்கம் நியமித்தது. அவர் கூறிய ஆலோசனைகளைப்பற்றி டாக்டர் மென்டிஸ் பின்வருமாறு எழுதியுள்ளார்: ''தற்காலத்துத் தேவைக்கேற்ற கல்விமுறையை உதவாத வகையில் அமைந்த சுயபாஷைப் பாடசாலைகளுள் திறமையற்ற பாடசாலைகளை அகற்றிவிட்டு ஆங்கிலப் பாடசாலைகளைத் தாபித்து இலங்கையரைப் பயிற்றுமாறு சிபார்சு செய்தார். கீழைத்தேசக் கல்வியினாற் பயனில்லை என்றும் ஆங்கில அறிவினால், கீழைத் தேச மக்கள் அறிவாலும் ஒழுக்கத்தாலும் முன்னேற்றம் அடைவார்கள் என்றும் இக்காலத்திருந்த ஆங்கில அறிஞர்கள் எண்ணினார்கள். கோல்புறூக்கும் இதே அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தபடியால் ஆங்கிலப் பாடசாலைகளைத் திறக்க வேண்டுமென்று விரும்பினர்.''[8]

இலங்கையில் ஆங்கிலக் கல்வியின் விருத்தியை மேற்பார்வை செய்வதற்கு அங்கிளிக்கன் பாதிரிமார்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் அடங்கிய 'ஸ்கூல் கமிசனை' (பாடசாலைச் சபையை) அரசாங்கம் நியமித்தது. இச் சபை புரொட்டஸ்டன்ற் சபைகளால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்குச் சார்பாக இருந்ததில் வியப்பில்லை.

1843 ஆம் ஆண்டளவில் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்களின்போது ''யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆங்கிலப் பாடசாலைகளைப் பாதிரிமார் திறம்பட நடாத்தி வந்தபடியால் ஆங்கிலக் கல்வி பயிற்றும் பொறுப்பை அரசாங்கம் அவர்களிடமே விட்டு உதவி நன்கொடை அளித்து வந்தது''[9] என டாக்டர் மென்டிஸ் கூறுகிறார். இதுவுமல்லாமல் இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் நடாத்திய இரண்டொரு ஆங்கிலப் பாடசாலைகளையும் மூடும்படி பாதிரிமார் செய்தனர். இதனால் யாழ்ப்பாணத்தில் அரசாங்க பாடசாலைகள் ஏற்படாமைக்கு மிசனரிமாரின் முயற்சியே காரணம் என்பது புலப்படும்.

அரசாங்கத்தின் உதவியோடு மிசனரிமார் நடாத்திய ஆங்கிலப் பாடசாலைகளிலிருந்து பல மேதாவிகள் வெளிவந்தனர். இவர்களுட் பலர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். வெஸ்லியன் ஆங்கில பாடசாலையிலிருந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சாமுவேல் கிரெனியர் (பிற்காலத்தில் இலங்கையில் அற்றேணி ஜெனரலாக இருந்தவர்), T. செல்லப்பாபிள்ளை (திருவாங்கூரில் பிரதம நீதியரசராக இருந்தவர்), ஜி. எஸ். அரியநாயகம்பிள்ளை (திருவாங்கூர் நீதியரசராக இருந்தவர்), டாக்டர் யோன் ரொக்வூட் முதலியோர் வெளிவந்தனர்.[10] நல்லூர் இங்கிலிஸ் செமினரியிலிருந்து புவிராசசிங்க முதலியார் (அரசாங்க சேவையிற் பெரும் பதவிகள் வகித்தவர்). வண. தோமஸ் மோட்டிமர், வழக்கறிஞர் உவில்லியம் மார்ஸ் முதலியோர் தோன்றினர்[11].

வட்டுக்கோட்டைச் செமினரியிற் கொடுக்கப்பட்ட கல்வி மிகச் சிறந்த முறையில் அமைந்திருந்தது. ஆங்கிலம் போதனா மொழியாக இருந்தபோதிலும்

7. யாழ்ப்பாண வைபவ கௌமுதி - க. வேலுப்பிள்ளை, ஜயசிறீ சாரதா பீடேந்திரசாலை 1918 — பக். 279.
8. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி — பக்கம் 79.
9. மேற்படி பக்கம் 99.
10. Jaffna Central College — Page 22.
11. A History of St. John's College — Page 3.

தமிழ்மொழி சிறப்பாகக் கற்பிக்கப் பட்டது. கந்தபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்கள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தன. வானசாத்திரம், கணிதம், தத்துவசாஸ்திரம் முதலியன கற்பிக்கப் படும்போது மேல்நாட்டு முறைகளோடு இந்திய முறைகளும் கற்பிக்கப்பட்டன. செமினரிக்கு இரண்டாவது அதிபராக விளங்கிய வண. கொய்சிங்ரன் என்பவர் சைவசித்தாந்த சாத்திரங்களிற் பாண்டித் தியம் பெற்றவராய்ச் சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவக் கட்டளை முதலிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் தனர்.[12] செமினரிக் கல்வியின் சிறப்பைப் பற்றிப் பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளை தாமியற்றிய யாழ்ப்பாண சுவதேசக் கும்மியில் கூறியதில் ஒரு பகுதி பின்வருமாறு.[13]

"யாழ்ப்பாணி கள்கல்வி தன்னிலோர் கால்மிக
ஏற்ற மடைந்தார் சிலரவர்க்குள்
நாப்புக ழுமருங் கீர்த்திபெற் றகதை
ஞால மறியாதோ சங்கமின்னே."

"மிக்கநன் மைகள்வி ளங்கு மமெரிக்க
மிஷன்முன்னர் தந்த செமினரி
தக்க வுயர்கல்வி நம்மவர்க் கீந்து
தழைத்து வளர்ந்தது சங்கமினே."

"வட்டு நகர்ச்செமி னரி யிறந்தபின்
வாகா முயர்கல்வி மாகழுதை
கட்டெறும் பானது போல மிகவுங்
கரைந்து குறைந்தது சங்கமின்னே."

இப்படிச் சிறந்த கல்வியைக் கொடுத்த படியாற்றான் அங்கிருந்து சி. வை. தாமோ தரம்பிள்ளை, கரொல் விசுவநாதபிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, வைமன் கதிர வேற்பிள்ளை போன்ற மேதாவிகள் தோன்ற முடிந்தது. இன்னும் அங்கிருந்து வெளி யேறியவருட் சிலர் அரசாங்கத்திற் பெரும் உத்தியோகங்களில் அமர்ந்திருந்தனர்; மேலும் சிலர் இந்தியாவுக்குச் சென்று பெரும் பதவிகளைப் பெற்றனர்.[14]

இப்படியிருந்தும் அமெரிக்கன் மிசனரி மார் சிலருக்குச் செமினரி செய்துவந்த வேலை திருப்தியைக் கொடுக்கவில்லை. செமி னரியிலிருந்து வெளியேறிய சிலர் பழைய படி தங்கள் சொந்த மதமாகிய சைவ சமயத்தைத் தழுவினர். பலர் அரசாங்க உத்தியோகத்தை விரும்பினரே யொழிய கிறித்தமத சேவையில் ஈடுபட விரும்ப வில்லை. இவற்றுல் ஆங்கிலக் கல்வியினுல் அதிகம் பயனில்லை எனக் கூறிச் செமி னரியை மூடிவிட்டுத் தமிழ்ப் பாடசாலை களைத் தாபித்துக் கிராமங்களிலே தொண் டாற்றினுல் கிறித்த மதத்தைப் பரப்புவ தற்குச் சாதகமாக இருக்குமென ஒரு பகுதி மிசனரிமார் வாதாடினர்.[15] இவர்கள் கையோங்கியதினுல் முப்பத் திரண்டு ஆண்டுகள் பணிபுரிந்த செமினரி 1855ஆம் ஆண்டு மூடப்பட்டது.

இப்படியான ஒரு நிலை வெஸ்லியன் மிசனிலும் ஏற்பட்டது. நாவலர் அவர் களின் ஆசிரியரும் பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்க அரும்பாடுபட்டவரு மான வண. பார்சிவல் அவர்கள் கல்வித் துறையில் ஊக்கத்துடன் உழைத்தார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பல விதத்திலும் நன்னிலைக்குக் கொண்டு வந் தார். இதனேடு இவர் மேற்பார்வையில் இயங்கிவந்த பெண்கள் பாடசாலையையும் கண்காணித்து வந்தார். இவற்றுக்கு மேலாக ஒரு ஆசிரியப் பயிற்சி வகுப் பையும் நடாத்தி வந்தார். ஆனுல் இப் பணிகள் சிலருக்குப் பிடிக்கவில்லை. இதற்குக் காரணம் இக் கல்வித் தாப னங்கள் மத மாற்றத்துக்குப் போதிய உதவி புரியவில்லை என்பதாம். வண, பார்சிவலை எதிர்த்த வண. ஸ்ரொற் என்பவர் கூறியது பின்வருமாறு: "பாட

12. A Century of English Education — Page 52
13. "சித்தினைச்சோலை" — தெ. அ. துரையப்பாபிள்ளை, கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம், 1960 — பக்கம் 32.
14. A Century of English Education — Page 76.
15. ibid Page 67, 68.

சாலைகள் சாதனங்களாகும். அவை முக்கிய மானவையல்ல. அவை உண்மையான மத மாற்றத்துக்குச் சிறிதும் பயன்படவில்லை, என்பது எனது திடமான நம்பிக்கை யாகும்." வண ஸ்ரொற் என்பவரும் சுதேச பாஷையில் சமயப்பிரசாரஞ் செய்யவேண் டிய அவசியத்தை வற்புறுத்தினர். இப்படிக் கிளர்ச்சி நடந்துகொண்டிருக்கும்போது நீண்டகால லீவில் இங்கிலாந்து சென்ற வண. பார்சிவல் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வரவில்லை. இதற்குப் பதிலாக அவர் சென்னைக்குச் சென்று அங்குச் சிறந்த கல்விப் பணியும் தமிழ்ப்பணியும் புரிந்து சகலருடைய நன்மதிப்பையும் பெற் றார். சென்னைச் சர்வகலாசாலை பார்சிவ லின் பணியைப் பாராட்டு முகமாகச் சர்வகலாசாலை அலுவலகத்தில் அவரின் சிலையை நிறுவியுள்ளது.[16]

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் இலங் கையில் அரசாங்கப் பாடசாலைகளும் அர சாங்க நன்கொடை பெறும் பாடசாலை களுமென இருவகைப்பட்ட பாடசாலைகள் இருந்தன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் எல்லாப் பாடசாலைகளும் அரசாங்க நன்கொடை பெற்று மிசனரி மாரால் நடத்தப்பட்டவையாயிருந்தன. இப்பாடசாலைகளில் மாணவரின் பெற்றோ ரின் விருப்பத்துக்கு மாறுகச் (Conscience Clause) சமய போதனை செய்யப்படா தெனச் சட்டசபை அங்கத்தவர் வாதாடின போதிலும், மிசனரிமார் இக் கொள் கையை ஏற்கவில்லை. தாங்கள் விரும்பிய படியே மதபோதனை செய்து வந்தனர்.[17] இந்தக் காலத்திற்றான் நாவலர் அவர்கள் தோன்றிச் சைவப்பிள்ளைகள் சைவப் பாட சாலைகளில் அல்லது அரசாங்க பாடசாலை களிற் படிக்கவேண்டுமெனக் கிளர்ச்சி செய்து வந்தார். மிசனரிமார் அரசாங்கம் கொடுக்கும் நன்கொடைப் பணத்தைக் கொண்டு தங்கள் மதத்தைப் பரப்புவது பற்றியும் நன்கொடைப்பணத்தைத் துர்ப் பிரயோகம் செய்வது பற்றியும் நாவலர் அவர்கள் 1872ஆம் ஆண்டு ஐப்பசி மாதத் தில் வெளியிட்ட யாழ்ப்பாணச் சமயநிலை என்னும் பிரசுரத்திற் பின்வருமாறு கூறி யுள்ளார்:[18]

"இந்தியாவிலுள்ள பாதிரிமார்கள் தங்கள் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற சைவ, வைஷ்ணவப் பிள்ளைகளை விபூதி, திருமண் என்னும் சமயச் சின்னங்களை அழிக்கும் பொருட்டாயினும், தங்கள் விவிலிய நூலைப் படிக்கும்பொருட்டாயி னும், தங்கள் பிரசங்கத்தைக் கேட்க வரும் பொருட்டாயினும் வலாற்காரம் பண்ணு கிறார்களில்லை; வலாற்காரம் பண்ணினால் அங்கேகவர்ண்மெண்டாராலும்சுதேசிகளா லும் தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக் குப் போய்விடுவார்களென்னும் பயமே அப் பாதிரிமார்களைத் தடுக்கின்றது. இந்தியாவி லுள்ள கவர்ண்மெண்டுப் பள்ளிக்கூடங் களிலும் சுதேசிகளுடைய பள்ளிக்கூடங் களிலும் விவிலிய நூல் படிப்பிக்கிற தில்லை. கவர்ண்மெண்டுப் பள்ளிக்கூடங் களிலே விவிலிய நூல் படிப்பித்தல்வேண்டு மென்று பாதிரிமார்கள் இங்கிலாந்திலுள்ள கவர்ண்மெண்டுக்கு விண்ணப்பம் எழுதி னார்கள். கவர்ண்மெண்டு விவிலிய நூல் படிப்பிக்க உடன்படவில்லை. இத்தேசத்தி லுள்ள பாதிரிமார்கள் தங்கள் பள்ளிக் கூடங்களிலே படிக்கின்ற சைவசமயப் பிள்ளைகளை விபூதி யழிக்கும்பொருட்டு வலாற்காரம் பண்ணுகிறார்கள். விபூதி அழிக்க உடன்படாத பிள்ளைகளை வித்தியா சாலையினின்றும் நீக்கிவிடுகிறார்கள். கிறித்து சமயப் புத்தகங்களையும் சைவதூஷணப் புத்தகங்களையுமே நெடுநேரம் படிப்பிக் கின்றார்கள். ஞாயிற்றுக் கிழமைகளிலே தங்கள் பிரசங்கம் கேட்க வராத பிள்ளை களையும் சைவசமயத் திருநாட்களிலே சைவசமயக் கோயில்களுக்குப் போகும்

16. Jaffna Central College — Page 23 — 26.

17. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி — பக்கம் 134.

18. நாவலர் பிரபந்தத் திரட்டு – யாழ்ப்பாணச் சமயநிலை, சென்னபட்டணம் வித்தியாதுபாலன யந்திரசாலை, 1954 — பக்கம் 41, 42, 43.

பிள்ளைகளையும் தண்டிக்கிறார்கள். இங்குள்ள கத்தோலிக்க குருமார் மாத்திரம் இப் படிப்பட்ட வலாற்காரங்கள் செய்யக் காணேம்.

சில காலத்துக்கு முன்னே கவர்மெண்டார் இத் தேசத்திலே சில இங்கிலீசுப் பள்ளிக்கூடங்களைத் தாபித்துச் சில வருஷங்கள் நடத்தினார்கள்; அவைகளிலே கிறித்து சமயப் புத்தகமொன்றும் படிக்கப் படவில்லை. அங்கே சைவசமயப் பிள்ளைகளெல்லாரும் விபூதி தரித்துக்கொண்டே படித்துவந்தார்கள். அதைக் கண்ட பாதிரிமார்கள், கவர்ண்மெண்டுப் பள்ளிக்கூடங்கள் நிலைபெற்றால் தங்கள் கருத்து வாய்க்காது என்று நினைந்து இங்கிருந்த சில துரைமாரைத் தங்கள் வசப்படுத்திக் கவர்ண்மெண்டுக்கு வேறு நியாயங்காட்டி எழுதுவித்து, அப்பள்ளிக்கூடங்களை எடுப்பித்துவிட்டு அவர்களுக்குக் கவர்ண்மெண்டார் செலவழிக்கும் பணத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களுக்கு ஆக்குவித்துக்கொண்டு அநீதியாய்த் தங்கள் கருத்தையே நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள். கவர்ண்மெண்ட் பொருளுதவியைப் பெறும் பள்ளிக் கூடங்களிலே விபூதியை அழிக்கும் பொருட்டும் தமது சமயநூல்களைப் படிக்கும் பொருட்டும், சமயப் பிரசங்கத்தைக் கேட்க வரும் பொருட்டும் பிள்ளைகளை வலாற்காரம் பண்ணுதல் கவர்ண்மெண்டாருடைய கருத்துக்கு முழுதும் விரோதமேயாம்.''

கவர்ண்மெண்ட் கொடுக்கும் பணத்தைத் துர்ப்பிரயோசனஞ் செய்வது பற்றி நாவலர் அவர்கள் கூறியதில் ஒருபகுதி பின்வருமாறு: ''பாதிரிமார்களுடைய இங்கிலீசுப் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற பிள்ளைகள் மாசச்சம்பளம் மும்மூன்று மாசத்துக் கொருதரம் முன்னேறவே கொடுத்து வருகின்றார்கள். அந்தந்தப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் கொடுக்கும் சம்பளத்தை மாத்திரம் கொண்டு அந்தந்தப் பள்ளிக் கூடத்தை நடத்திக்கொள்ளுகின்றார்கள். கவர்ண்மெண்டார் கொடுக்கும் பணத்தை அந்தந்தப் பள்ளிக்கூடத்தின் பொருட்டுச் செலவு செய்யாது தங்கள் சமயவிருத்தியின் பொருட்டும், சுவப்பிரயோசனத்தின் பொருட்டும் கவர்ந்து கொள்ளுகின்றார்கள்.''[19]

1855ஆம் ஆண்டில் மூடப்பட்ட செமினரிக்குப் பதிலாக 1872ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியை அமெரிக்கன் மிசனரிமார் ஆரம்பித்தனர். இக்காலத்தில் யாழ்ப்பாணம் வெஸ்லியன் மிஷன் மத்திய வித்தியாசாலை மத்திய கல்லூரியென்றும், சுண்டிக்குளிச் செமினரி சென்ற் யோன்ஸ் கல்லூரியென்றும், கத்தோலிக்க வித்தியாசாலை சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி என்றும் அழைக்கப் பட்டு ஆங்கிலக்கல்வி விருத்தி அடைந்து வந்தது.[20]

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குக் கிளையாக வண்ணார்பண்ணையில் ''கில்னர் கொலிச்'' என்னும் ஒரு ஆங்கிலப் பாடசாலை நடைபெற்று வந்தது. 1871ஆம் ஆண்டில் அங்குப் படிக்குஞ் சைவப்பிள்ளைகளை விபூதி தரியாது பாடசாலைக்கு வரும்படி அப்பாடசாலைத் தலைமையாசிரியர் கட்டளையிட்டார். இப்பிள்ளைகள் போய் நாவலர் அவர்களுக்கு முறையிட்டனர். இதற்குப் பரிகாரமாக 1872ஆம் ஆண்டில் அவர்கள் ஒரு சைவ ஆங்கில பாடசாலையை வண்ணார்பண்ணையில் ஆரம்பித்தனர். அரசாங்கத்தின் அங்கீகாரம் இதற்குக் கிடைக்காதபடியால் போதிய பிள்ளைகள் இதிற் சேரவில்லை. பணக்கஷ்டமும் ஏற்பட்டது. ஆகவே நாலு வருடங்கள் நடத்தியபின் இப்பாடசாலையை மூடவேண்டி நேர்ந்தது. ஆனால் நாவலர் அவர்கள் முயற்சி வீண் போகவில்லை. ஏனெனில் அவர்கள் சிவபதமடைந்த சில ஆண்டுகளுக்குள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதே வண்ணார் பண்ணையில் ஆரம்பிக்கப்பட்டது.[21]

---

19. நாவலர் பிரபந்தத் திரட்டு — யாழ்ப்பாணச் சமயநிலை, சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலை, 1954 — பக்கம் 44.

20. யாழ்ப்பாண வைபவ கௌமுதி — பக்கம் 305

21. நாவலர் பணிகள் — ச. தனஞ்சயராசசிங்கம், நாவலன் பிறின்டர்ஸ், 1969 — பக்கம் 30.

நாவலர் அவர்கள் மறைந்தபின் மிசனரிமாரின் ஆதிக்கம் பழையபடி தலை யெடுத்தது. இதுபற்றிச் சைவப் பெற் ரோர் சேர் பொன்னம்பலம் இராமநாத னுக்கு முறையிட்டனர். அவர்கள் சட்ட சபையில் இவ்விஷயம்பற்றிப் பின்வருமாறு பிரஸ்தாபித்தனர். ''முதலில் நான் யாழ்ப் பாணத்தில் அரசாங்கத்தால் நடாத்தப் படும் ஆங்கில பாடசாலைகளோ அல்லது துவிபாஷா பாடசாலைகளோ இல்லை யென்பதையும், இதனால் யாழ்ப்பாண மக்கள் ஆங்கிலக் கல்வி பெறுவதற்கு அங்கு நிலைநாட்டப்பட்ட மிசனரிமாரின் பாடசாலைகளிற் றங்கியிருக்க வேண்டி யிருக்கிறதென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமய விஷயத்தில் மிசனரி மாரின் சகிப்புத்தன்மை இன்மையின் வேகம் காலத்துக்குக் காலம் மாறி வரு கிறது. இந்துக்களின் தலைசிறந்த சீர் திருத்தவாதி 1879ஆம் ஆண்டில் மறைந்த பின்னர் இவ்வேகம் வளர்ந்து வருகிறது.

தலைமை வகித்த கவர்னர்: தாங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?

இராமநாதன்: இந்துக்களின் சீர் திருத்தவாதி ஆறுமுகநாவலர். தங்களுக் கெனப் பாடசாலைகள் இல்லாதபடியால் மிசனரிமாரின் பாடசாலைக்குப் போகும் இந்து மாணவர்கள் மிசனரிமாரிட மிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வழி வகைகளைப் பழகியுள்ளார்கள். வீட்டில் வழிபாட்டின்போது திருநீற்றையணியும் மாணவர்கள் பாடசாலையை அணுகிய வுடன் அதை அழித்துவிட்டுப் பாடசாலை நேரத்தில் கிறீஸ்த மாணவர்களைப் போல் பாசாங்கு செய்கிறார்கள். கிறீஸ்த பாடசாலைகளில் படிக்கும் போதும் படிப் பிக்கும் போதும் ஞானஸ்நானம் பெற்ற மாணவரும் ஆசிரியரும் அப்பாடசாலை விட்டேகிய பின்பு சைவர்களாகித் திரு நீறு உருத்திராட்சம் முதலிய சைவ சாதனங்களைத் தரித்துக்கொள்ளுகிறார் கள். இப்படிச் செய்வதினால் மக்களின் பரிகாசத்துக்கும் மிசனரிமாரின் சிற்றத் துக்கும் ஆளாகிறார்கள்.''

மேலும் தொடர்ந்து பேசுகையில் கத்தோலிக்க குருமாரும் கல்வி மாவதி காரியும் மிசனரிமாரின் போக்கைக் கண்டிக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி அரசாங்கம், மிசனரிமாரின் பாடசாலைக ளில் கட்டாயமாகச் சமயக்கல்வி போதிப் பதை நிறுத்தவேண்டும் அல்லது மறு இடங்களிற்போல் யாழ்ப்பாணத்திலும் அரசாங்க பாடசாலைகள் நிறுவ வேண்டு மென்றும் கேட்டுக்கொண்டார்கள்.[22]

நாவலர் அவர்கள் செய்த பிரசாரத் தினால் சைவ மக்கள் மத்தியில் புதிய உணர்ச்சி ஏற்பட்டுச் சைவசமயத்தைப் பாதுகாப்பதற்குச் சைவபரிபாலன சபையை 1888ஆம் ஆண்டில் நிறுவினர். சைவசமயப் பிரசாரஞ் செய்வதற்கு 'இந்து சாதனம்' என்னும் பத்திரிகையையுந் தோற்றுவித்தனர். சைவபரிபாலன சபை யின் ஆதரவோடு 1889ஆம் ஆண்டில் அப்புக்காத்து S. நாகலிங்கம், திருவாளர் பசுபதிச் செட்டியார், புறக்டர் காசிப் பிள்ளை, கௌரவ சபாபதி முதலியவர்கள் சேர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யைத் தாபித்தனர். இதுவே யாழ்ப்பா ணத்திற் ரூபிக்கப்பட்ட முதற் சைவக் கல்லூரியாகும். சேர் பொன்னம்பலம் இராமநாதன், அவரின் சகோதரர் திரு. குமாரசுவாமி, திரு. அருணாசலம் முதலி யோரின் ஆதரவு இதற்குக் கிடைத்தது.[23]

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத் திற் பல இடங்களிலும் சைவ ஆங்கில பாடசாலைகளை ஆரம்பிப்பதற்குச் சிலர் முயற்சி எடுத்தனர். ஆனால் அவற்றிற்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறுவதற் கும் உதவி நன்கொடை பெறுவதற்கும் பெரும் முட்டுக்கட்டைகளை மிசனரிமார் போட்டனர். ஒரு கிறீஸ்த பாடசாலை இருந்தால் அதற்கு அருகில் சைவப் பாட சாலை தாபிப்பதற்கும் கிறீஸ்த பாடசாலை களிற் படிக்குஞ் சைவப் பிள்ளைகளைப் புதி

22. Sir Ponnambalam Ramanathan Select Speeches in Council (Vol. I, 1879—1894), Ceylon Daily News Press, 1929 — Page 85 - 88.

23. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி — பக்கம் 164 – 165.

தாகத் திறக்கப்படுஞ் சைவப் பாடசாலைகளிற் சேர்ப்பதற்கும் தடைகள் இருந்தன. கந்தரோடையிற் கந்தையா உபாத்தியாயர் ''கந்தரோடை இங்கிலிஸ் இன்ஸ்றிற்றியூற்'' என்னும் பெயரோடு ஓர் ஆங்கில பாடசாலையை 1894ஆம் ஆண்டிலே தாபித்தனர். இதற்கு உதவி நன்கொடைப் பணம் எட்டு வருடங் கழித்து 1902ஆம் ஆண்டிற்றான் கிடைத்தது.24

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இந்தியாவிலும் இலங்கையிலும் சமயம், கல்வி, அரசியல் முதலிய துறைகளில் ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டது. இதற்கு விவேகானந்தர் போதனைகளும் இந்திய தேசிய இயக்கத்தையும் முக்கிய காரணங்களாகக் கருதலாம். டாக்டர் ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் முயற்சியால் இலங்கையில் 1905ஆம் ஆண்டில் சமுதாயச் சீர்திருத்தச் சபை தாபிக்கப்பட்டது. இவர் ஆங்கிலக் கல்விபற்றிச் சிறப்பாக மிசனரிமாரின் கல்லூரிகளிற் கொடுக்கப்பட்ட கல்வியைப்பற்றிப் பின் வருமாறு கூறுகிறார்: ''ஒன்றின் பயனைக் கொண்டே அதன் நன்மை தீமையை நாம் அறியலாம். இக்கல்வியைப் பெறும் பெரும் பாலானோர் இந்தியக் கலாசாரத்தின் பெருமையை உணர முடியாதவர்களாய் இருக்கிறார்கள். இந்திய சர்வகலாசாலைப் பட்டதாரியோடு அல்லது இலங்கை மாணவனோடு நீங்கள் மகாபாரதத்தின் இலட்சியங்கள்பற்றிப் பேசினால் அவன் சேக்ஸ்பியர்பற்றித் தனது அறிவைக் காட்ட விரைந்து முன்வருவான். சமயத்தைப்பற்றி அவனுடன் பேசினால், ஐரோப்பாவிற் போன சந்ததியிற் காணப்பட்ட நிரீச்சுரவாதிகளைப் போல் காட்சியளிப்பான். ஆங்கிலேயரைப் போலத் தத்துவ சாத்திர அறிவிற் சுத்தசூனியமாக இருப்பான். இந்திய சங்கீதத்தைப்பற்றிப் பேசினால் அவன் கிராமபோன் இசையையோ அல்லது காமோனியத்தின் இசையையோ உங்கள்மீது திணிப்பான். இந்திய உடை, அணிகலன்கள் பற்றிப் பேசினால் அவை நாகரிகமற்றவை எனக் கூறுவான். இந்திய கலைகளைப்பற்றிப் பேசினால் அவைகளிருப்பது அவனுக்குத் தெரியாதபடியால் நாம் பேசுபவை அவனுக்குப் புதிராக இருக்கும். அவனுடைய தாய்ப்பாஷையில் எழுதிய கடிதம் ஒன்றை மொழிபெயர்க்கும் படி கொடுத்தால் அவனால் அது முடியாது. தன் சொந்த நாட்டில் அந்நியனாக அவன் இருக்கிறான்.'' (இந்தப்பகுதிக்குக்கொடுத்த அடிக்குறிப்பில் தான் கூறுவது இலங்கைக்குப் பொருந்துமென்றும் இந்தியாவில் எல்லா மாகாணங்களுக்கும் பொருந்தாதென்றும் கூறியுள்ளார்.)25

மகாஜனக் கல்லூரியைத் தாபித்த துரையப்பாபிள்ளை அவர்கள் நாம் மேலே குறிப்பிட்ட மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்தவர். அவர் சைவனாகப் பிறந்து யாழ்ப்பாணக் கல்லூரியிற் படித்தபோது கிறீஸ்த மதத்தைத் தழுவியவர். படிப்பு முடிந்த பின்பு இலங்கையிலும் இந்தியாவிலும் ஆசிரியராக இருந்துவிட்டுத் தாம் ஆரம்பத்திற் படித்த தெல்லிப்பழை அமெரிக்கன் மிசன் பாடசாலையிற் சில காலம் ஆசிரியராக இருந்தார். இப்படி இருந்து வருங்காலத்தில் மிசன் பாடசாலைகள் சைவசமயப் பிள்ளைகளுக்குச் செய்து வந்த தீங்கைப் படிப்படியாக உணர்ந்திருக்கவேண்டும். அதுவுமல்லாமல் மிசனரிமாரின் பாடசாலைகள் தமிழர் பண்பாட்டையுங் கெடுத்துத் தமிழர் கலைகளாகிய கர்நாடக சங்கீதம் முதலியவற்றைப் புறக்கணிப்பதையும் கண்டிருக்கவேண்டும். ஏனெனில், யாழ்ப்பாணத்தில் வளர்ந்து வரும் போலி ஐரோப்பிய நாகரிகத்தைத் தமது பாடல்களிற் கண்டித்துள்ளார். இதனாலேயே மறுபடியுஞ் சைவசமயத்தைத் தழுவி அதை வளர்ப்பதற்கென்றே 1910ஆம் ஆண்டில் மகாஜனக் கல்லூரியைத் தாபித்தார். இக்கல்லூரிக்கு அங்கீகாரம்

---

24. "Skanda", 1969. Seventyfifth Anniversary Number of Skanda Varodaya College — Page 37.

25. Essays in National Idealism — Dr. Ananda Coomaraswamy, Colombo Apothecaries, 1909 — Page 96 & 97.

பெறவும் உதவி நன்கொடை பெறவும் எட்டு வருடங்கள் சென்றன.[26]

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்தான் முதன் முதல் யாழ் பாணத்தில் சைவப்பெண்களுக்கென்று ஒரு ஆங்கிலக் கல்லூரியை நிறுவியவர். முதலில் இக் கல்லூரியைக் கோப்பாயிலே தாபிக்க எண்ணி அங்கு இருபத்தைந்து ஏக்கர் நிலத்தை வாங்கினர். பின்னர் மக்கள் பலர் அதிலும் பார்க்க மருதனர் மடமே பொருத்தமான இடம் என எடுத்துக் காட்டியபடியால் அங்கு பதினைந்து ஏக்கர் நிலத்தை வாங்கினர். அங்கு கல்லூரியைத் தாபிக்க ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கும்பொழுது அமெரிக்கன் மிசனரி மார் உடுவிற் பெண்பாடசாலைக்கு அணித்தாக இது அமைய இருப்பதால் தாங்கள் செய்துவரும் வேலைக்கு இது பங்கம் விளைவிக்கக்கூடும் என அச்சம் தெரிவித்தனர். வெல்ப்ஸ் என்பவர் சைவக் கல்விபற்றிக் கிராமங்களிற் செய்துவரும் பிரசாரத்துக்குத் தங்கள் எதிர்ப்பையுந் தெரிவித்தனர். இதற்கு இராமநாதனவர்கள் அளித்த ஆணித்தரமான பதிலை 1910ஆம் ஆண்டு ஏப்பிரில் 10ஆந் திகதி வண. ஸ்கொட் பாதிரியாருக்கு எழுதிய கடிதத்திற் காணலாம். கிறீஸ்த பிள்ளைகள் கிறீஸ்த பாடசாலைகளிற் படிப்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவவசியம் சைவப்பிள்ளைகள் சைவப் பள்ளிக்கூடத்திற் படிப்பது எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.[27] 1913ஆம் ஆண்டில் இராமநாதன் கல்லூரி ஏற்பட்டதோடு சைவப் பெண்கள் கல்வியைப் பொறுத்த வரையில் ஒரு புதிய சகாப்தம் ஏற்பட்டது.

ஆசிரியர் ரி. நாகமுத்து அவர்கள் 1913 ஆம் ஆண்டில் வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் வடக்கு வீதியில் வைத்தீஸ்வர வித்தியாலயம் என்னும் ஆங்கில பாடசாலையை ஆரம்பித்தனர். அதை மூன்று வருடங்களாக, அருகிலிருந்த பாடசாலை முகாமைக்காரர்களின் எதிர்ப்பினால், அரசினரின் அங்கீகாரமில்லாமலும், உதவி நன்கொடைப் பணம் பெறுமலும் நடாத்தி வந்தனர். 1918ஆம் ஆண்டில் இதனை இராமகிருஷ்ண சங்கத்திடம் ஒப்படைத்தனர். சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்துக்குத் தலைவராயிருந்த சுவாமி சர்வானந்தர் அவர்கள் இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பாக இதனைக் கையேற்றனர். இராமகிருஷ்ண சங்கமும் இதனை இரண்டு வருடங்கள் நடத்திய பின்பே உதவி நன்கொடைப் பணம் கிடைத்தது.[28] இலங்கையில் இராமகிருஷ்ண சங்கத்தின் கல்விப் பணி வைத்தீஸ்வர வித்தியாலயத்தைப் பொறுப்பேற்றதோடு ஆரம்பித்து, பின்னர் சுவாமி விபுலானந்தர் தலைமையில் கிழக்கிலங்கையில் பல்கிப் பெருகிற்று.

1918ஆம் ஆண்டில் வெளிவந்த 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்னும் நூலில் அக்காலத்து ஆங்கிலக் கல்வி நிலைபற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது:— "முற் காலத்திலும் இக்காலத்தில் யாழ்ப்பாணம் கல்வியில் அதிக விருத்தியடைந்திருக்கிறது பிரத்தியட்சமான சம்பவமாகும். இக் காலத்திலே உயர்தர ஆங்கிலக் கல்வியைக் கற்பிக்கும் பதினெரு கல்லூரிகள் யாழ்ப் பாணத்திலுண்டு. இவற்றுள் யாழ்ப்பாணக் கல்லூரி, மத்தியகல்லூரி, கில்நர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, சென்ற் யோன்ஸ் கல்லூரி, செட் மிஷன் பெண்கள் கல்லூரி என்னும் ஆறு ஸ்தாபனங்களும் புரொட்டெஸ்தாந்து மிஷனரிமாராலும், பற்றிக் கல்லூரி ரோமன் கத்தோலிக்க மிஷனாலும், இந்துக்கல்லூரி, விக்ரோரியாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி யென்னும் நான்கும் இந்துக்களாலும் நடத்தப்படுகின்றன.

---

26. சித்தனைச்சோலை — பக்கம் XII, XIII.

27. "The Life of Sir Ponnambalam Ramanathan" – M. Vaithilingam, Thirumakal Press, Chunnakam, 1971 — Pages 252 — 254.

28. Vaidyeshwaran Golden Jubilee Number, 1963 — Page 22.

மேலே கூறப்பட்ட இராமநாதன் கல்லூரி, செட் மிஷன் பெண்கள் கல்லூரி, உடுவில் விடுதிப் பெண்பாடசாலை, உடுப்பிட்டி விடுதிப் பெண்பாடசாலை, வேம்படி விடுதிப் பெண்பாடசாலை, பருத்தித்துறை விடுதிப பெண்பாடசாலை, நல்லூர் விடுதிப் பெண்பாடசாலை, யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரி மடம் முதலிய ஸ்தாபனங்களும் பெண்களின் உயர்தரக் கல்வியை விருத்தியாக்கும் விசேஷ ஸ்தாபனங்களாய் விளங்குகின்றன. இவ்வளவு கல்லூரிகளும், பெண் விடுதிப் பாடசாலைகளும் அதிகப் பட்ட வேறு ஓர் ஸ்தானம் இலங்கை, இந்தியாவிற் காண்பதரிதாம்.''[29]

இதுகாறும் முதலாம் உலக யுத்த காலம் வரைக்கும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட ஆங்கிலக் கல்வி வளர்ச்சியை ஆராய்ந்தோம். இதற்குப் பிந்திய காலத்திலும் பழைய கல்லூரிகள் விருத்தியடைந்தும், புதிய கல்லூரிகள் தோன்றியும் ஆங்கிலக் கல்வி மேலும் விருத்தியடைந்தது.

29. யாழ்ப்பாண வைபவ கௌமுதி — பக்கம் 325, 326.

தாய்மொழி உணர்வு பற்றி, பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

செந்தமி ழென்றிடு மெங்கள் சுயபாஷை
சீர்குலைந் தேகவெப் பாலவரும்
சொந்தமா யிங்கிலிஷ் தன்னையே கற்கிறார்
துக்கமி தல்லவோ சங்கமின்னே.

தன்னைப்பெற் றதமி ழன்னையை நீத்திந்தத்
தாரணியி லிங்கி லீஷதையே
பொன்னைப் பெறும்வழி யென்று படித்திடல்
புத்தியோ சொல்லடி சங்கமின்னே.

செந்தமி ழும்வேணும் இங்கிலீ சும்வேணும்
சேர்த்திவ் விரண்டையு மோர்பவரே
புந்தி விரிந்து மகிழ்வர்தற் காலத்தில்
புத்தி யிதுவடி சங்கமின்னே.

— யாழ்ப்பாண சுவதேசக் கும்மி.

செ. யோகராசா, பி. ஏ. [ஆனர்ஸ்]
ஆராய்ச்சி மாணவன்
இலங்கைப் பல்கலைக் கழகம்
கொழும்பு வளாகம்

மறுமலர்ச்சிக் குழுவினரும் ஈழத்துக் கவிதையும்

ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் மறுமலர்ச்சிக் குழுவினர் ஏற்படுத்திய சில மாற்றங்கள் இதுவரை எவராலும் சுட்டிக் காட்டப்படவில்லை யென்றே கூறவேண்டும். அவ்வாறு தனித்து நோக்குமளவுக்கு அவர்கள் என்னதான் செய்தார்கள் என்ற வியப்பு அல்லது ஐயம் சிலருக்கு எழுதல் கூடும்; இந்நிலையில் ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் மறுமலர்ச்சிக் குழுவினர் செய்த சில குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கோடி காட்டுவது பொருத்தமுடையதாகும்.

''1943 அல்லது 1944இல் தான் மறுமலர்ச்சிச் சங்கம் யாழ்ப்பாணத்தில் உதயமாகியது.'' வரதர், அ. செ. முருகானந்தம், நாவற்குழியூர் நடராஜன், அ. ந. கந்தசாமி, பஞ்சாட்சர சர்மா ஆகியோர் அப்போது அதில் அங்கம் வகித்தனர். அச்சங்கத்தினுல் முதலில் கையெழுத்துப் பிரதியாகவும். பின் (அச்சுருவில்) சஞ்சிகையாகவும் வெளியிடப்பட்டதே 'மறுமலர்ச்சி' யாகும். இதில் கவிதை எழுதியோருள் குறிப்பிடத்தக்கவர்கள், மஹாகவி, 'சாரதா', அ. ந. கந்தசாமி, சோ. தியாகராஜன், நாவற் குழியூர் நடராஜன், கதிரேசன் முதலியோராவர். எனினும் இவரது ஆக்கங்கள் 'மறுமலர்ச்சி'யில் மட்டுமன்றி, ஈழகேசரி, பாரதி, கிராம ஊழியன் என்பவற்றிலும் வெளிவந்தன. அவையும் நம் கவனத்துக் குரியன.

இக் குழுவினரின் இயல்புகளை அறிந்து கொள்வது இன்றியமையாதது; மறுமலர்ச்சிக் குழுவிலுள்ள ஒருவரின் நினைவலைகள் இவை :

''வாலிபத்தின் வைகறையிலே பள்ளி மாணவனுக யாழ்ப்பாண நகரக் கல்லூரிக்கு வந்துவிட்டு மாலையில் கிராமத்தை நோக்கிப் புகைவண்டியில் செல்லுகையில் சில சமயம் தன்னந்தனியாக ரயில் வண்டியிலிருப்பேன். அப்பொழுது என் கண்கள் வயல் வெளிகளையும் தூரத்துத் தொடுவானையும் உற்றுநோக்கும்... உள்ளத்திலும் உடம்பிலும் சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்த காலம்... உலகையே என் சிந்தனையால் அளந்துவிடவேண்டுமென்று பேராசை கொண்ட காலம்....''

ஒருவரின் நினைவலைகளாயினும் பொதுவாக இக்குழுவினர் அனைவருக்கும் இவை பொருந்துவனவாம்.

''காண்பதெல்லாம் புதுமையாகவும் அழகாகவும், வாழ்க்கை ஒரு வானவில் போலவும்'' விளங்கிய இம் மறுமலர்ச்சிக் கவிஞர் கையிற்றன் ஈழத்தைப் பொறுத்த வரையில், முதன்முதலாக, செய்யுள் — கவிதை வேறுபாடுகள் வெளிப்படத் தொடங்கின; தெளிவுற்றன:

''செறிவான அக அனுபவத்தின் வெண் சூட்டிலே பிறப்பெடுக்கும் ஒன்றுக்கு, செய்யுளானது ஊடகமாக அமையும் போதே அது கவிதையாகிறது''. அத்தகைய அனுபவங்களை வெளிப்படுத்துவதற்குச் செய்யுளைக் கருவியாகக் கொள்ளும் நவீன தன்மையை மறுமலர்ச்சிக் குழுவினர் ஏற்படுத்தியமை அவர்தம் சாதனைகளுள் முதன்மையானது; இதனை மேலும் விளக்குவது நன்று.

பொதுவாகவும் குறிப்பாக ஈழத்துத் தமிழிலக்கியத்தைப் பொறுத்த வரையிலும் செய்யுள் நீண்ட கால வளர்ச்சியும் ஆதிக்கமும் பெற்றிருந்தது. 'கவிதை'க்குச் செய்யுள் யாப்பே முக்கியமானதாக

விருந்தது. அற, நீதிக்கருத்துக்களும், கடவுளரும் அதன் பொருளாயின; சோதிடம், வைத்தியம் முதலிய கலைகளெல்லாம் செய்யுளிலேயே அமைந்திருந்தன; கற்றோரின் பாராட்டும் அத்தியாவசியமாகும்.

இந்நிலையில் 19ஆம் நூற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சமூக, அரசியல் மாற்றங்கள் மனங்கொள்ளத்தக்கன; அதனால் கவிதையின் இயல்பு, நோக்கம், பொருள், உருவம் என்பன சிற்சில மாற்றத்துக்குள்ளாயின.

சமுதாயப் பிரச்சினைகளை இலக்கியப் பொருளாக்கும் போக்கைப் பாவலர் துரையப்பாபிள்ளையிடம் காணமுடிகிறது; அதற்கேற்ற எளிமையும், அதற்கேற்ற யாப்பு அமைதிகளும் அவரது ஆக்கங்களில் இடம்பெற்றன. சிந்து, கும்மி, கண்ணி முதலியவற்றை அவர் கையாண்டார்; எனினும் அவை இசைத்தன்மை மிக்கபாக்களே.

ஆரம்பகால 'ஈழகேசரி'யில் வெளிவந்த 'கவிதை'களிற் பெரும்பான்மையனவும் சமூகச் சீர்திருத்தம், தேசாபிமானம், விடுதலைவேட்கை என்பவற்றைப் பொருளாகக் கொண்டனவே. செயற்கைப் பாங்கும் போதனைத் தன்மையும் அவற்றில் விரவியிருந்தன.

மேற்கூறிய பின்னணியில் மறுமலர்ச்சிக் குழுவினர் ஏற்படுத்திய மாற்றம்—அதாவது, அனுபவத்தையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் நவீன கவிதைத் தன்மையைச் செய்யுளில் புகுத்தியமை குறிப்பிடத்தக்கதல்லவா?

மறுமலர்ச்சிக் குழுவினர் இவ்வாறு கவிதையைக் கரம் பிடித்தமை இயல்பானவொன்றேயாகும். அவர்களிற் பலர் கிராமத்திலிருந்து கல்லூரிப் படிப்பிற்காக நகரத்துக்குச் சென்ற இளைஞர்கள். அவர் தம் வாழ்க்கைமுறை மாற்றம் புதிய அனுபவங்களை அளித்தது. புதுச் சிந்தனைகளும், இலட்சிய வெறியும், இலக்கிய ஈடுபாடும், அசாதாரண தன்னம்பிக்கையும் அவர்களிடம் நிறைந்திருந்தன. அத்துடன், 'குருகுலக்கல்வி' வழிச் செல்லாமல் கல்லூரிகளுக்குள் நுழைந்தமை, செய்யுள் மரபில் ஊறும் வாய்ப்பை அற்றுப்போகச் செய்தது. இவை யாவும் செய்யுள் மரபிலிருந்து விடுபட்டு நவகவிதையை நாடக் காரணங்களாயமைந்தன.

செய்யுள், 'கவிதை'யாயிற்று; அதன் நோக்கம் வேறுபட்டமைந்தது. அவை மட்டுமல்ல; கவிதைப் பொருளும், அதனை நோக்கும் முறையும் மாறுபட்டமைந்தன. இவ்வழி, மூவர் கவிதைகளின் இயல்புகள் குறிப்பிடத்தக்கன.

அமைதியான குடும்ப வாழ்வும், எளிமையான கிராம வாழ்க்கையும், சிறப்பாக 'மஹாகவி'யின் கவிதைப் பொருளாயின. அவரது கவித்துவ ஆற்றலில் அவருக்கிருந்த அசாதாரண நம்பிக்கை, கவிஞன் பற்றியும் கவிதை பற்றியும் பாடவும் தூண்டின.

அ. ந. கந்தசாமியின் கவிதைகள் முற்போக்கான கருத்துக்களையும், சிந்தனைகளையும் கொண்டன. வாழ்வின் அடித்தளத்திலுள்ள மக்களதும், தொழிலாளரதும் வாழ்வின் அவலங்கள் அவரிடம் வெளிப்பட்டன.

மறுமலர்ச்சிக் கவிஞருள் 'சாரதா' (இ. சரவணமுத்து) குறிப்பிடத்தக்க ஒருவராவர். ஆயினும் அவரது கவிதைகள் இதுவரை நன்கறியப்படவில்லை என்றே கூறுதல் வேண்டும். அவர் தொடாத பொருட்களில; அனைத்தும் 'சுவை புதிது வளம் புதிது' ஆக விளங்கின எனல் மிகையன்று. ஒரு மகிழ்ச்சியான குடித்தனம் பற்றிய அந்தரங்கம், பெண்மை சீறும் சூடு கண்ட பூனை, சமுதாய நாற்றங்களை நையாண்டி செய்யும் ஆளில்லை ஆகிய மூன்று கவிதைகளுமே அவரை இனங் காணப் போதுமானவையாகும்.

பாரதிக்குப் பின் வளர்ந்த நவீன தமிழ்க் கவிதையின் முக்கிய பண்புகளுள் ஒன்று கவிதையின் பேச்சோசைத் தன்மையாகும். இப் பண்பு இன்று தென்னகத்தை விட ஈழத்திலேயே செழிப்புற வளர்ந்து ஈழத்துக் கவிதையின் சிறப்பியல்புகளுள் ஒன்றாக மிளிர்கின்றது; இதன் தொடக்க நிலையை மறுமலர்ச்சிக் குழுவினரிடம் காணலாம்.

"கைத்தேனு உங்களுக்கு?
கால்நடையில் கூடக்
கந்தோர்விட் டெப்பொழுதோ
வந்திருக்கக் கூடும்!
பத்தான தேமணி! அப்
பாவருவார் என்று
பார்த்திருந்த கண்மணியாள்
போய்த்துயின்று விட்டாள்
.....
.....
.....
....."

என்பது 'மஹாகவி'யின் கவிதையொன்றின் முதலடிகள்; முழுக் கவிதையும் விரிவு கருதித் தரப்படவில்லை. ஆயினும் பேச்சோசையின் அழுத்தம் கவிதைக்கு எவ்வளவு தூரம் சிறப்பளிக்கின்றது என்பதற்கு இம் முழுக் கவிதையும் நல்லெடுத்துக் காட்டாகும்.

இக் கவிதைகளின் பிறிதொரு சிறப்பியல்பாக அமைவது, அவை சரளமான ஓசையொழுக்கையும், மென்மையான, நளினமான, குழைவான சொற்களையும் கொண்டிருந்தமையாம்.

"கேட்டியோ! அன்றுனைக்
கீழ்மைப் படுத்திய
நாட்டிலே நின்கவி
நாதம் நிறைந்தது;
ஈட்டிவேல் வாளெனத்
தீட்டிநீ விட்டசொற்
பாட்டினுல் எம்தளைப்
பாரம் குறைந்தது"

நாவற்குழியூர் நடராஜனின் மேற்காட்டிய கவிதையில் தடங்கலின்றிச் சொற்கள் ஒன்றன்பின் ஒன்றுக ஊர்ந்து செல்வதைக் கவனிக்கலாம்.

மறுமலர்ச்சிக்குழுவினரிடம் பரிசீலனைத் தாகமும் விதந்துரைக்குமளவிற்கு விளங்கிற்று. இன்று கணிசமானவளவு வளர்ந்துள்ள வசனகவிதை தென்னிந்தியாவில் மணிக்கொடிக் குழுவினரிடம் அரும்பியது; ஈழத்தில் இக்குழுவைச் சார்ந்த வரதர், 'சோதி', விஜயன் முதலியோரும் இவ் வசனகவிதையை எழுதிப் பார்த்தனர். சோதியின் வசன கவிதையொன்றில் வருவன பின்வரும் சில அடிகள்:

"சூரியன் வந்து வேலையைச் செய்யட்டும்
கூட்டுபவளைப் போல
பணக்காரன் ஏழையை வதைக்கட்டும்
அரிவாளைப் போல
உடம்பெடுத்தவன் உயிரோடு போகட்டும்
நண்பர்களைப் போல
எல்லோரும் சென்ற வழியிலே நடப்போமே
எப்படிவந்தாலும் வரட்டுமென்று."

இவை, இன்றைய 'மீரா'வின் வசன கவிதையை வரிக்குவரி நினைவூட்டுகின்றது அல்லவா?

ஆங்கிலக் கவிதை மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் இக்குழுவைச் சார்ந்தோர் ஈடுபட்டனர். இது முதன் முயற்சியன்று; இவர்களுக்கு முன்னரும் ஷெல்லி, ரெனிசன், பைரன் முதலிய கவிஞர்களின், ஆங்கிலக் கவிதைகளைச் சிலர் மொழி பெயர்த்துள்ளனர்; எனினும், சிறந்த மொழிபெயர்ப்புக்கள் என்ற விதத்தில், அ. ந. க., 'சாரதா' முதலியோரின் முயற்சிகளைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ஒட்டுமொத்தமாகக் கூறின், இன்று ஈழத்துப் புனைகதை இலக்கியம் போன்று கவிதை இலக்கியமும் தென்னிந்தியாவிலிருந்து வேறுபட்ட நவீன இயல்புகளைப் பெற்று வளர்ந்துள்ளது உண்மையே; அவ்வாறுயின் கவிதையைப் பொறுத்தவரையில் அதற்கு வேண்டிய களமமைத்துக் கொடுத்தோர் மறுமலர்ச்சிக் குழுவினரேயாவர்.

கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை,
Ph. D. (Cey.) D. Phil. (Oxon)
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கைப் பல்கலைக் கழகம்
பேராதனை வளாகம்

ஈழநாட்டுத் தமிழும் செட்டிநாட்டுத் தமிழும்

தென்னிந்தியாவைப்போல ஈழநாடும் மிகப் பழைய காலத்திலிருந்தே தமிழ் மக்கள் வாழ்ந்த நாடு என்று ஒரு சாராரும் தென்னிந்தியாவிலிருந்து ஈழநாட்டுக்கு வந்தேறிய குடிகளே ஈழநாட்டுத் தமிழ் மக்கள் என்று ஒரு சாராரும் வாதித்து வருகின்றனர். தென்னிந்தியாவுக்கும் ஈழ நாட்டுக்கும் மிகப் பழைய காலத்தி லிருந்து நெருங்கிய தொடர்பு இருந்து வந் திருக்கிற தென்பதையும் தென்னிந்திய மக்கள் அண்மைக் காலம் வரை ஈழநாட் டிற்குக் குடிபெயர்ந்து வந்திருக்கின்றன ரென்பதையும் பொதுவாக அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். தென்னிந்தியா வில் எவ்வெப் பகுதிகளுக்கும் ஈழநாட் டின் எவ்வெப் பகுதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளதென்பதை அறிந்தால் இரண்டு நாடுகளுக்குமிடையி லேற்பட்ட பண்பாட்டு உறவு விளக்க மடையும்.

தென்னிந்தியாவிலே தமிழர் பெரும் பான்மையாக வாழும் பகுதி தமிழ்நாடு என்று வழங்கப்படுகின்றது. எனவே, இக் கட்டுரையிலும் தமிழ் நாடு என்ற வழக்கு; தென்னிந்தியத் தமிழ்ப் பிரதேசத்தைக் குறிக்கவே வழங்கப்படுகிறது. பண்டைக் காலத் தமிழகம் இன்று கேரளம் என்று வழங்கும் பழைய சேர நாட்டையும் உள் ளடக்கியிருந்தது. தமிழ் நாட்டுக்கு வட கிழக்கே அமைந்த ஆந்திரப் பிரதேசமும் ஈழநாட்டோடு தொடர்புகள் கொண்டி ருந்தது. ஆந்திரப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் திராவிட மொழிகளுள் ஒன்றான தெலுங்கு மொழியைப் பேசுவோராவர். கேரளம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் என்பனவற்றிலிருந்து ஈழநாட்டுக்கு வந்த மக்கள் ஈழ நாட்டிலே தமது தனித்துவத் தைப் பேண வாய்ப்புகளிருந்த பகுதி களிலே ஈழநாட்டுப் பழந்தமிழ்க்குடிகளாகி யிருக்கவேண்டும். ஈழநாட்டின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளிலிருந்து சில மைல் கள் தூரத்திலுள்ள தமிழ்நாட்டின் செல் வாக்கு ஈழநாட்டில் எப்பொழுதும் மிகவும் அதிகமாக இருந்துள்ளது. ஈழநாட்டு மக்களிடையே காணப்படும் சேரநாட்டுச் செல்வாக்கைப் பலர் குறிப்பிட்டுள்ளனர். இராகவனுடைய நூலில்[1] இந்த அம்சம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஈழநாட்டுக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான தொடர்பிலே தென் னிந்தியக் கடற்கரையோடொட்டிய பிர தேசங்கள் மிகவும் முக்கியத்துவம் பெறு கின்றன; தமிழ் மொழிக்கு மொழியியல் அடிப்படையிலான புவியியல் (Linguistic Geography) இன்னும் எழுதப்படவில்லை. பேச்சுவழக்குத் தமிழின் கிளைமொழிகளைப் பற்றிய ஆராய்ச்சி ஆரம்பநிலையிலேயே இருக்கிறது. பல்கலைக் கழகங்களில் நடை பெறும் சில சில ஆராய்ச்சிகள் கூட நூலுருவம் பெற்று வெளிவருவது அருகிய வழக்கு. தமிழ் நாட்டில் வெளியாகும் ஆராய்ச்சி நூல்கள் அனைத்தும் ஈழநாட் டுக்கு வந்து சேர்வதுமில்லை. இந்த நிலை யிலே ஈழநாட்டுத் தமிழுக்கும் தமிழ் நாட்டுத் தமிழுக்கும் இடையிலான ஒற்றுமைகளை விரிவாக ஆராய இயலாது.

---

1. M. D. Ragavan, Tamil Culture in Ceylon, pp. 106 – 126.

ஈழநாட்டுத் தமிழைத் தமிழ் நாட்டின் ஒரு பகுதித் தமிழோடு ஒப்பிட்டு ஆராய்ந்த முதற் கட்டுரை[2] சுமார் முப்பது ஆண்டு களுக்கு முன்பே வெளிவந்துவிட்டது. ஈழநாட்டிலே பிறந்து வளர்ந்து தமிழ் கற்றுத் தமிழ் நாட்டிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே முதலாவது தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய ஒருவரால் அவ் வாராய்ச்சிக் கட்டுரை வெளியிடப்பட்டது. சுவாமி விபுலானந்தரைத் தொடர்ந்து வேறு எவரும் அத்தகைய கட்டுரைகள் எழுதவில்லை.

ஈழநாட்டுத் தமிழுக்கும் செட்டி நாட்டுத் தமிழுக்கும் இடையிலான ஒப்புமையை எடுத்துக் காட்டும் இக் கட்டுரை, சோமலை[3] அவர்கள் வெளி யிட்ட 'செட்டிநாடும் தமிழும்' என்ற நூலிலிருந்து செட்டி நாட்டுத் தமிழைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொண் டுள்ளது. செட்டி நாட்டுக்குரிய சிறப்புத் தமிழ் வழக்குகளாக அவர் எடுத்துக் காட்டுவனவற்றுள் ஒரு கணிசமான பகுதி ஈழநாட்டுக்குரிய சிறப்புத் தமிழ் வழக்குக ளாகவும் அமைந்துள்ளன. 'நமது தமிழ் நாடு' என்ற பொதுத் தலைப்பிலே தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களைப் பற்றியும் அவர் தனித்தனி நூல் எழுதி யுள்ளார். ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் எழுதிய நூலில் அவ்வம் மாவட் டத்துக்குரிய சிறப்புத் தமிழ் வழக்காறு களை எடுத்துக் காட்டியுள்ளார். ஈழ நாட்டுக் கடற்கரையிலிருந்து தூரத்தில் அமைந்துள்ள மாவட்டங்களிலேயுள்ள சிறப்புத் தமிழ் வழக்காறுகள் ஈழநாட்டுத் தமிழிலே காணப்படவில்லை; அல்லது மிக வும் அருகிக் காணப்படுகின்றது. உதாரண மாக சோமலை எழுதியுள்ள கோயம் புத்தூர் மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் என்ற நூல்களைப் பார்க்கலாம்.

சோமலை, செட்டிநாட்டுச் செட்டி மரபினராதலினால் அவர் செட்டி நாட்டு வழக்குகளாகக் கூறுவனவற்றைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கவேண்டியதில்லை. சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்பு 'ஆனந்தவிகடன்' என்ற சஞ்சிகை தமிழ் நாட்டு மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் சிறப்பு மலர் வெளியிட்டு வந்தது. அவ் வாறு வெளிவந்த இராமநாதபுரம் மாவட்டமலரிலே செட்டிநாட்டு வாழ்க்கை யைப் பகைப்புலமாகக் கொண்ட கதை களும் வேறுபல செய்திகளும் வெளிவந்தன. ஈழநாட்டுத் தமிழுக்கும் செட்டி நாட்டுத் தமிழுக்குமிடையிலான ஒப்புமை அப் பொழுதும் விளங்கித் தோன்றியது.

செட்டிச் சமூகத்தினர் ஈழநாட்டிலே இயற்றிய சைவப்பணி பற்றியும் தமிழ்ப் பணி பற்றியும் ஈழநாட்டினர் விதந்து கூறு கின்றனர். ஈழநாட்டிலுள்ள முக்கியமான நகரங்களிலே வணிக நிமித்தம் வந்து சேர்ந்த செட்டிமார் அவ்வப் பகுதிகளி லுள்ள சைவக் கோவில்களுக்குத் திருப் பணிகள் பல புரிந்தனர். நகரங்களிலுள்ள கோவில்கள் சில இன்னும் செட்டிமார் நிர்வாகத்திலேயே இயங்கிவருகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சைவப் பணியும் தமிழ்ப் பணியும் செய்து தம் பெயர் நிறுவிய ஆறுமுகநாவலருக்கும் செட்டிமார் உதவியதுண்டு. ஈழநாட்டி லுள்ள பழைய தமிழ்ச் சாசனங்களை ஆராயும்போது செட்டிமார் ஈழநாட்டிலே பெற்றிருந்த செல்வாக்கும் இயற்றிய சைவப் பணியும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து வந்தமை தெரிய வருகின்றது.[4]

செட்டிமார் பல்லவர்காலப் பகுதி யிலேயே ஐஞ்ஞூற்றுவர், திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர், வீரக்கொடி என்ற பெயர்

---

2. **சுவாமி விபுலானந்தர்** — *சோழமண்டலத் தமிழும், ஈழமண்டலத் தமிழும்* — *கலைமகள்* (1941), — பக்கம் 82–88.

3. **சோமலை** — *செட்டிநாடும் தமிழும்* (1954).

4. A. Veluppillai — Ceylon Tamil Inscriptions Part I (1971). Also Ceylon Tamil Inscriptions Part II (1972).

களில் வணிகக் கூட்டுத்தாபனமாக இயங்கி வந்ததை அக்காலத் தமிழ் நாட்டுச் சாசனங்கள் தெரிவிக்கின்றன. சோழப் பெருமன்னர் காலத்திலே, இவ்வணிகக் கூட்டுத்தாபனம் கடல் கடந்த நாடுகளிலும் தொழில் செய்யத் தொடங்கிற்று என்பது வரலாற்றுண்மை. நகரத்தார் என்று அழைக்கப்பட்ட செட்டிமார் வணிகம் செய்த இடங்களிலே மன்னர்களின் தானங்களாக வீரபட்டினங்களைப் பெற்று அவற்றின் தலதாபன அலுவல்களைத் தாமே கவனித்து வந்தனர். ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள் இத்தகைய வீரபட்டினங்கள் பதவியா, கப்புகொல்லாவ, லிகாரகின்னே, புலத்திய நகரம், கல்தென் பிட்டி, தெட்டியமுல்லை என்னும் இடங்களில் இருந்ததைச் சுட்டுகின்றன. ஸ்ரீபதிக் கிராமம் என்று வழங்கப்பட்ட பதவியாவில் செட்டி சமூகத்தினர் செய்த சிவன் கோவிற் றிருப்பணியைப் பல தமிழ்ச் சாசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. களுத்துறையிலே ஐஞ்ஞூற்றுவருடைய காளி கோயில் ஒன்று இருந்ததை ஒரு தமிழ்ச் சாசனம் குறிப்பிடும். வெருகலம்பதிக் கோவிலின் மதிற்சுவர் ஒன்றும் செட்டி மாராற் கட்டப்பட்டுள்ளது:

ஈழநாட்டிலே, செட்டிகள், கொழும்புச் செட்டிகள், அண்மையிலே தமிழ் நாட்டிலிருந்து குடியேறிய செட்டிகள் என்று பல தரப்பினர் காணப்படுகின்றபோதும் செட்டி சமூகத்தின் செல்வாக்கு முழுத் தமிழ்ச் சமூகத்திலும் ஆழமாகப் பதிந்துள்ளதென்று கொள்வதற்கு மொழித் தொடர்பு ஒரு முக்கிய சான்றுகின்றது. ஒரு காரியத்தைத் தொடங்கும்போது, காப்புக் கட்டி அக்காரியம் முடிந்ததும் காப்பை அவிழ்த்தல், மணமக்களை அறுகு, நெல் தூவி வாழ்த்துதல் முதலிய சங்ககால வழக்கங்களை இன்றும் பேணி வருதல் செட்டிநாட்டுக்குரிய சிறப்பென்று சோமலெ கூறுவர். இவ்வழக்கங்கள் ஈழநாட்டிலும் உண்டு, கந்தசட்டி, பிள்ளையார் கதை முதலிய நோன்புகளில் ஈடுபடும் போது, காப்புக்கட்டிப் பின்பு அவிழ்க்கும் வழக்கம் கிராமங்களிலும் காணப்படுகின்றது. சோழர் காலத்தில் நாய்ச்சியார் என்று வழங்கிய பெண்பாற்பெயர் செட்டி நாட்டில் இன்றும் வழங்குகிறது: யாழ்ப்பாணத்தில் பெரியநாய்ச்சி, சின்னநாய்ச்சி (சின்னுய்ச்சி), குழந்தைநாய்ச்சி என்ற பெயர்கள் வழங்குகின்றன.

செட்டிநாட்டிலே, தா, கொடு என்ற சொற்கள் இலக்கண மரபு தவறுது 'எனக்குத் தந்தான்', 'அவனுக்குக் கொடுத்தான்' என்று வழங்குவதையும் சோமலெ எடுத்துக் காட்டி வியந்துள்ளார். இவ்வழக்கு ஈழநாட்டுப் பேச்சு வழக்கிலும் போற்றப்படுவதைக் காணலாம்.

'செட்டிநாட்டில் வழங்கும் தமிழ்ச் சொற்கள்' என்ற பகுதியிலே சோமலெ தந்துள்ள பட்டியலில் ஒரு கணிசமான பகுதி ஈழநாட்டிலும் வழங்குவதைக் காணலாம். காலம் அல்லது இடம் உணர்த்தும் சொற்களிலே சிலவற்றை இங்கே நோக்கலாம். வெள்ளனை என்பது செட்டி நாட்டிலே அதிகாலையில் அல்லது விரைவில் என்ற பொருளில் வழங்குகிறது. ஈழநாட்டில், வெள்ளண என்ற சொல் அதே பொருளில் வழங்குகிறது. கிருகப் பிரவேசம் என்று தமிழ் நாட்டில் பல பகுதிகளிலும் வழங்கும் வட மொழித் தொடருக்குப் பதிலாகச் செட்டி நாட்டில் குடிபுகுதல் என்ற தூய தமிழ்த் தொடர் வழங்குகிறதெனச் சோமலெ கூறுவர். ஈழநாட்டிலும் குடிபுகுதல் என்ற தொடரே வழங்குகிறது. தொலைக்குப் போவது என்பது செட்டிநாட்டில், பொருளீட்டுவதற்காக நெடுந்தொலைவிலுள்ள கடல் கடந்த நாடுகளுக்குச் செல்வதைக் குறிக்கும். ஈழநாட்டில் துலைக்குப் போவதென்பது நெடுந்தூரம் பிரயாணம் செல்வதைக் குறிக்கிறது. ஈழநாட்டுக்கும் செட்டி நாட்டுக்கும் பொதுவானதாகக் காலம், இடம் என்பனவற்றை உணர்த்தும் சொற்கள் சில:- மேலைக்கு (அடுத்த ஆண்டுக்கு); கூதல் (குளிர்); சவலை (பால் மணம் மாறுப் பச்சிளங்குழந்தை); அங்ஙனே/அங்ஙினே/அங்கினே (அங்கே); இங்ஙனே/இங்ஙினே/இங்கனே (இங்கே); ஒட்டற (இறுதிவரை); மேல் (உடம்பு); மானம்பு (மகாநோன்பு).

வணிகத் தொழிலோடு தொடர்புடைய சொற்கள் சிலவும் ஈழநாட்டுத் தமிழுக்கும் செட்டிநாட்டுத் தமிழுக்கும் பொதுவாக உள்ளன. இந்தா என்பது இங்கே வா, இதை வாங்கிக் கொள் என்னும் பொருள்களில் இரண்டு நாடுகளிலும் வழங்குகின்றது. சல்லி என்பது நாணயத்தை உணர்த்த இரண்டிடங்களிலும் மட்டுமல்லாது சிங்களத்திலும் வழங்குகிறது. நிறைய, அதிகம், நிரம்ப என்ற பொருள்களிலே செட்டிநாட்டுத் தமிழில் வழங்கும் உண்டனு என்பது ஈழநாட்டுத் தமிழில் உண்டண என வழங்குகிறது. இன்னும் இத்தகைய சொற்கள் சில :- பைய (மெல்ல); வாசி (அனுகூலம்); வல்லிசு/வள்ளிசு (கருர்); பொணை/பீணை (பொறுப்பு); உருத்து (உரிமை, உரியது, உரித்து); எடுபிடி (பணிவிடை); நட்டாமுட்டி (சில்லறைவேலை, தரக்குறைவானது).

பாவனைப் பொருள்கள் பற்றிய சொற்கள் பல செட்டிநாட்டிற்கும் ஈழநாட்டிற்கும் மட்டும் சிறப்பாக உள்ளன. தமிழ் நாட்டில் பிற பகுதிகளிலே வளையல் என்று வழங்குவது இவ்விரு நாடுகளிலும் காப்பு என வழங்கப்படுகிறது. இரண்டு நாடுகளுக்கும் பொதுவான மேலும் சில சொற்கள் :- அருநாக்கொடி (அரைநாண்கொடி); கடகம் (ஓலைப்பெட்டி); கூறு (பகுதி); சத்தகம் (ஒருபுறம் கத்தியும் மறுபுறம் முனையுமாக உள்ள ஒரு கருவி); சொளகு/சுளகு (முறம்); துப்பட்டி (போர்வை, கம்பளம்); மெத்தை (படுக்கை); கோக்காலி (கோக்கப்பட்ட கால்களையுடைய ஒரு தள பாடம்).

அன்றூட வாழ்க்கையிலே காணப்படும் வேறு பல சொற்களும் இவ்விரு நாடுகளுக்கு மட்டும் பொதுவாக உள்ளன. அவற்றை வகைப்படுத்தி நோக்குவதற்காகக் கவலையை உணர்த்துவது, வெறுப்பை உணர்த்துவது என இரண்டாகப் பிரிக்கலாம். இயலவில்லை என்ற பொருளில் முடியவில்லை என்பது இரண்டு பகுதிகளிலும் வழங்கப்படுகிறது. தடுமன் (நீர்க்கோவை) என்ற வழக்கு யாழ்ப்பாணத்திலும் உண்டு எனச் சோமலெயும் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விரு நாடுகளுக்கும் சிறப்பாக உரிய சில வழக்காறுகள்: மெனக்கட்டு மினக்கட்டு (வலிந்து); பேத்தல் (பிதற்றுவது); படிமானம் (கீழ்ப்படிதல், குறைவது); நோஞ்சல் (வலுவில்லாதவன்); கெடதலை / கிடதலை (நோய்); கரச்சல் (தொந்தரவு); எசகேடு / இசைகேடு (இடையூறு); அசதி (களைப்பு); அடம் (பிடிவாதம்); அருமந்தா பிள்ளை/அருமந்த பிள்ளை (அருமருந்தன்ன பிள்ளை); கெடக்கிறான்/கிடக்கிறான் [(1) உடல் நலமின்றியிருக்கிறான் (2) அவனைப்பற்றிக் கவலையில்லை]; தள்ளிவைப்பது, (சமூகத்திலிருந்து விலக்கிவைப்பது, ஒத்திவைப்பது); தட்டுக்கெடுவது (சீர்கேடு அடைவது); உக்கிப்போவது (உக்கியபின் காணப்படுவதுபோலக் கவலையால் இளைத்துப் போவது).

வெறுப்புணர்ச்சியைப் புலப்படுத்துகிற சொற்கள் பல இவ்விரு நாடுகளிலும் மட்டும் வழங்கிவருகின்றன. சில எடுத்துக் காட்டுகள்: கழுசறை (கீழ்த்தரமான, கழிக்கப்பட்டவன்); காடையன் (போக்கிரி); ஊதாரி (வரம்பு மீறிச் செலவு செய்பவன்); துப்புக்கெட்டவன் (திறமையில்லாதவன்); மல்லுக்கட்டு (கட்டாயப் படுத்துவது); நெளிவு சுளிவு (சூழ்ச்சி); சுணக்கம் (தாமதம்); சுணை (சொறணை, உணர்ச்சி); கோணமாணை (வரன்முறையில்லாதது); ஈரட்டு / ஈரோட்டு (ஐயப் பாட்டுக்கு உரியது).

சில சொற்களுக்குச் செட்டி நாட்டில் விரிந்த பொருளும் ஈழநாட்டில் குறுகிய பொருளும் வேறு சில சொற்களுக்கு ஈழ நாட்டில் விரிந்த பொருளும் செட்டி நாட்டில் குறுகிய பொருளும் காணப்படுகின்றன. சாடை என்பது சைகையை இரண்டு நாடுகளிலும் குறிக்கிறது. செட்டிநாட்டில், அச்சொல்லிற்கு மறைமுகமாகத் திட்டுவது என்ற பொருளும் உண்டு. பொல்லாதவன் என்றால் கடுமையானவன் என்ற பொருள் இரண்டு நாடுகளிலும் காணப்படுகிறது. செட்டி நாட்டில் அச் சொல்லிற்குக் கெட்டிக்காரன் என்ற பொருளும் உண்டு. வக்கணை என்றால் விமரிசனம்

என்ற பொருள் இரு நாடுகளிலும் வழங்குகின்றது. செட்டிநாட்டில் அச்சொல்லிற்கு எழுதும் முறை முதலிய வேறு பொருளும் வழங்கும். பந்தல் என்ற சொல் பிணப் பந்தலைக் குறிக்க இரண்டு நாடுகளிலும் வழங்கும், ஈழநாட்டில் அது மணப்பந்தலையும் குறிக்கும். அம்மான் என்ற சொல் தாய்மாமனைக் குறிக்க இரு நாடுகளிலும் வழங்கும். ஈழநாட்டிலே அது பிற மாமன் மாரையும் குறிக்கிறது. இஞ்சே என்பது இரு பகுதிகளிலும் கணவர் மனைவியரை விளிக்க வழங்குகிறது. ஈழநாட்டில் அது மனைவியர் கணவரை விளிக்கவும் வழங்கும்.

செட்டிநாட்டுக்குரிய சிறப்பு வழக்காறுகளாகக் கூறப்படும் சொற்களிலே சில ஈழநாட்டிலே வழங்குகின்றபோதும், அவற்றின் பொருள் வேறுபட்டிருப்பதைக் காணலாம். அலக்கழிப்பது என்பது செட்டிநாட்டிலே கேலிசெய்வது, கிண்டல் செய்வது எனப் பொருள்படுமென்றும், தென்ஞர்க்காட்டிலே இன்று நாளையென நாள் கடத்துவது எனப் பொருள்படுமென்றும், நெல்லையிலும் யாழ்ப்பாணத்திலும் தொந்தரவு செய்வது எனப் பொருள்படுமெனவும் சோமலெ கூறுவர்; யாழ்ப்பாணத்தில் அச் சொல்லுக்குத் தென்ஞர்க்காட்டில் வழங்கும் பொருளும் உண்டு. ஆவலாதி என்பது செட்டிநாட்டிலே அவதூறைக் குறிக்கிறது. ஈழநாட்டிலே அது ஆசையைக் குறிக்கும். நடப்பு என்பது செட்டிநாட்டிலே நிகழ்ச்சிமுறை, பழக்கவழக்கம், இன்றைய முறை என்பவற்றைக் குறிக்குமெனவும் யாழ்ப்பாணத்திலே கர்வமாக நடத்தலைக் குறிக்குமெனவும் சோமலெயும் சுட்டியுள்ளார். மூதலிக்கிறது என்பது செட்டிநாட்டில் நிரூபித்தல், ருசுப்படுத்துவது என்ற பொருள்களில் வழங்க மோதலிக்கிறது என்பது ஈழநாட்டில் சண்டைக்குப் போதல் என்ற பொருளில் வழங்குகிறது.

இவை யாவற்றையும் நோக்கும்போது செட்டிநாட்டுக்கும் ஈழநாட்டுக்குமிடையிலான தொடர்பு ஆழமானதென்பது புலப்படும். இவ்விரு நாட்டுக்குமிடையிலான தொடர்பு இன்னும் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராயப்படவேண்டும். ஈழத் தமிழர் வரலாறு, தமிழ்மொழி வரலாறு, தமிழ்மொழியியல் என்பன நிறைவெய்துதற்கு இந்த ஆராய்ச்சியும் உதவும்.

தமிழ் மாதின் பிரலாபம்

என்னைக் கைவிடுவது ஏற்குமோ உமக்கென
இயம்புவீர் யான்பெற்ற இளைஞர்களே.

முன்னொரு காலம் முழுவனு கூலம்
முத்தமி ழெனக்கது மணக் கோலம் ;
பின்னவ காலம் பிறந்தலங் கோலம்
பெருகிடச் செய்ததிக் கலி காலம்.— ஐயோ ! – என்னை.

பெற்றவள் மேலே பிள்ளைவன் பாலே
பிறிதொரு ஸ்திரி தாயென்றவள் பாலே
பற்றுறல் போலே பரவிங்லிஷ் நூலே
படித்தீ ரெனைப்பேணும் இனி மேலே. — ஐயோ ! – என்னை.

— பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

ஆ. சிவநேசச்செல்வன்,
பி. ஏ. [ஆனர்ஸ்]
தமிழ் விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி

ஈழத்தின் முதலாவது நாவலாசிரியை
மங்களநாயகம் தம்பையா

நொறுங்குண்ட இருதயம் கதையும் கதைப் பண்பும்[1]

தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சியின் ஒரு பிரிவாக ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சி தனியாக ஆய்வு செய்ய வேண்டியவொரு துறையாகும். 1891ஆம் ஆண்டு வெளிவந்த ஈழத்தின் முதலாவது நாவலான உசோன் பாலந்தைக் கதை முதல் இன்றுவரை ஈழத்து நாவலாசிரியர்கள் நின்று நிலைக்கக்கூடிய நல்ல நாவல்களைப் படைத்துள்ளனர். இதன் வரலாறு சமூக பொருளாதார அரசியற் பின்னணியை யொட்டி விரிவாக ஆராயப்படவேண்டிய தொன்றாகும். தமிழ் நாவல் வளர்ச்சியில் ஈழத்தின் பங்கு என்ன என்பதனை நிர்ணயிப்பதற்கும், ஈழத்து நாவலாசிரியர்களின் போக்கினை மதிப்பீடு செய்வதற்கும், முன்னேடியாகக் காலத்துக்குக் காலம் வெளிவந்த நாவல்கள் பற்றிய தொகுப்பினையும் நாவலாசிரியர்கள் பற்றிய செய்திகளையும் புனராய்வு செய்யவேண்டும்.

ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியவளர்ச்சி பற்றி விரிவான ஆய்வுகள் முழுமையாக இற்றைவரை வெளியாகவில்லை. உதிரியாகப் பல ஆய்வுகளும் நாவல் அறிமுகங்களும் ஆங்காங்கே நடத்தப்பட்டுள்ளன. இத்துறையிற் சில்லையூர்ச் செல்வராசனின் பணியும், கனக. செந்திநாதனின் பணியும் போற்றற்குரியன; சில்லையூர்ச் செல்வராசனின் ஈழத்து நாவல் இலக்கியம் தொகுப்பு முயற்சியாக அமைந்திருப்பினும் ஆங்காங்கு நூல்களைப் பற்றி அளித்துள்ள குறிப்புக்கள் மிகவும் பயனுடையவை. கலாநிதி க. கைலாசபதி தமது தமிழ் நாவலிலக்கியம் என்ற நூலில், சுதந்திரம் பெற்றபின்னர் ஈழத்தில் ஏற்பட்ட நாவலிலக்கிய வளர்ச்சியின் போக்குகளைப் பண்பாய்வு செய்துள்ளார். கனக. செந்திநாதனுடைய அறிமுகக் கட்டுரைகளும் குறிப்பிடக்கூடியவை. இக்கட்டுரைகளையும் நூல்களையும் புனராய்வு செய்யும்போது பல பழைய நாவல்களும் முக்கியமான நாவலாசிரியர்களும் இணைக்கப்பட்டு ஆய்வு செய்யவேண்டிய தேவை உருவாகின்றது.

சில்லையூர்ச் செல்வராசன், கனக. செந்திநாதன் ஆகியோருடைய நூல்களில் முதலாவது ஈழத்துத் தமிழ் நாவலாசிரியை தோன்றிய காலம் 1920க்கும் 1930க்கும் இடைப்பட்ட காலமாகக் குறிக்கப்பட்டுள்ளது. செல்வராசன் தமது 'ஈழத்து நாவலிலக்கிய வளர்ச்சி' என்ற நூலில்,

''செ. செல்லம்மாள் எழுதிய இராசதுரை என்னும் நாவல் 1924இல் வெளியானது. துணிந்தெழுதிய முதல்

1. "மல்லிகை" — மே, ஜூன் 1972 இதழில் முதன்முதலாக வெளிவந்த இக்கட்டுரை இங்கு விரிவுபடுத்தப்பட்டுப் பிரசுரிக்கப்படுகின்றது.

நாவலாசிரியை என்றபடியாலும், தொகை யில்லாவிட்டாலும் கதைத் தன்மையிற் பொதுமை காண முடியு மென்பதாலும் தமிழ்நாட்டுக் கோதை நாயகியாருடன் இந்த அம்மையாரை ஒப்பிடுவது தவிர வேறெதுவும் சொல் வதற்கில்லை''[2] என்று குறிப்பிடுகிறார்.

மங்களநாயகம் தம்பையா எழுதிய நொறுங்குண்ட இருதயம் என்ற நாவல் இதற்கு முன்னரே 1914இல் வெளியாகி யுள்ளது.[3] கதையமைப்பிலும் நோக்கத்தி லும் சூழ்நிலைச் சித்திரிப்பிலும் தனக் கெனவுரிய பாணியைக் கொண்டு, யாழ்ப் பாண மண்வாசனை வீச எழுதப்பட்ட இந்த நாவலின் ஆசிரியை, அக்காலத்திற் பிரபல நியாயதுரந்தரராகவும் அறிஞராக வும் விளங்கிய கலாநிதி ஐசக் தம்பையா அவர்களுடைய மனைவியாராவர். ஆங்கி லத்திலும் தமிழிலும் பூரண அறிவு நிரம்பி யவரும், பதிவிரதை விலாசம் முதலிய பல சிறந்த நூல்களை எழுதியவருமாகிய ரி. டபிள்யூ. பி. குமாரகுலசிங்க முதலியாரின் கனிஷ்ட புத்திரியான இவர் 'நொறுங் குண்ட இருதயம்' நாவலைத் தவிர அரிய மலர் என்ற நாவலையும், அனுபவக் களஞ்சியம் என்ற கட்டுரைத் தொகுப்பை யும் எழுதி வெளியிட்டுள்ளார்.[4] அனுபவக் களஞ்சியம் 'Taste and See' என்றமகுடத் துடன் கலாநிதி ஐசக் தம்பையா அவர்க ளால் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப் பட்டு வெளியிடப்பட்டுள்ளது. நாவலின் பொதுப் போக்கினைக் கிடைத்த பகுதியின் மூலம் ஓரளவுக்கு உணரமுடிகிறது. முகவுரையோ நாவலின் முடிவோ கிடைக்க வில்லை. 'அனுபவக் களஞ்சியம்' என்ற நூலின் அட்டையில் 'நொறுங்குண்ட இருதயம்', 'அரியமலர்' ஆகிய சரித்திரங் களின் ஆசிரியை மங்களநாயகம் தம்பையா என்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 'Taste and See' என்றநூலின் பின்அட்டை யில் உள்ள விளம்பரத்தில் 'நொறுங்குண்ட இருதய'த்தின் இரண்டாம் பதிப்பு வெளி யான செய்தியும் குறிக்கப்பட்டுள்ளது.

மங்களநாயகம் தம்பையாவின் வாழ்க்கை வரலாறு எதிலும் குறிப்பிடப் படவில்லை. கலாநிதி ஐசக் தம்பையாவின் வாழ்க்கை வரலாறுகளிலும் நூல்களிலும் கூட எவ்வித குறிப்பும் காணப்படவில்லை; இவர் குடும்பத்தில் முக்கியமானவராக இன்று வாழ்ந்துவரும் திருமதி கனகசுந் தரம்பிள்ளையவர்கள்தந்த குறிப்புக்கள் மிக முக்கியமானவை. மங்களநாயகம் தம் பையா ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகுந்த பயிற்சியுடையவர். எப் பள்ளிக்கூடத்தி லும் சேர்ந்து கற்காத இவர் மிசனரிமா ரின் தொடர்பினாலும், குடும்பத்தினரின் கல்விப் பின்னணியாலும், செல்வாக்கினா லும் இல்லத்திலேயே கல்வி பயின்றார். இளமை தொடக்கம் தந்தையார் உதவி யுடனும் மற்றையோருதவியுடனும் பெற்ற கல்வியும் வாழ்ந்த கல்விச் சூழலும் காரண மாக நூல்களில் ஆர்வங்கொண்டு படித்து அறிவுவளம் பெற்றார். நிரம்பிய கல்வி யறிவும் புகழும் வாய்ந்த கலாநிதி ஐசக் தம்பையாவைக் கணவராகப் பெற்றது இவருக்குப் பெரும் வாய்ப்பை ஏற்படுத் தியது.

இத்தகைய வாய்ப்புக்களைப் பெற்ற பின்னரே இவர் எழுதிய 'நொறுங்குண்ட இருதயம்' வெளியாகியது. சென்னைக் கிறித்துவ இலக்கிய சங்க[5] ஆதரவில் இந்த நூல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து வெளிவந்த 'அரியமலர்' என்ற நாவலும், 'அனுபவக் களஞ்சியம்' என்ற நூலும் மலே யாவிற் கணவருடன் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்டுப் பினாங்கு பிரிட்டிஷ் அச்சகத்

2. செல்வராசன் கில்லூர் — **ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி** (முதற்பதிப்பு '67) பக். 21.

3. இந் நாவலின் பிரதியொன்று யாழ்ப்பாணக் கல்லூரி நூல் நிலையத்திற் காணப்படுகின்றது.

4. **அரியமலர்** என்ற நாவலின் குறிப்பிட்ட நூறு பக்கங்களையும் **அனுபவக் களஞ்சியம்** 'Taste and See' ஆகிய நூல்களையும் தெல்லிப்பழையில் வசிக்கும் திருமதி கனகசுந்தரம்பிள்ளையிடம் இக் கட்டுரையாசிரியர் பெற்று **யாழ்ப்பாணக் கல்லூரிப்** பழைய சுவடிப்பகுதியில் ஒப்புவித்துள்ளார்.

5. C. L. S. Society, Madras (1914)

தில் 1921 டிசம்பரில் அச்சிட்டு வெளியிடப் பட்டவை. 'Taste and See' என்ற ஆங்கில மொழிபெயர்ப்பு 1922ஆம் ஆண்டில் மலேயாவில் வெளியிடப்பட்டுள்ளது. கலாநிதி ஐசக் தம்பையாவின் வாழ்க்கைப் பின்னணி அம்மையாரின் எழுத்தார்வத்தை வளர்த்திருக்கவேண்டும். வழிமுறையான புலமைக் குடும்பத்திலே தோன்றியமையால் பாடல்களும் புனைந்துள்ளார். தாம் அவ்வப்போது எழுதிவைத்த 'அம்மானை'ப் பாடல்களையும் 'அனுபவக் களஞ்சியம்' என்ற நூலின் இறுதியிற் சேர்த்துள்ளார்.

ஈழத்தின் முதலாவது நாவலாசிரியையாக அமையும் இவ்வம்மையாரின் இரு நாவல்களும் கட்டுரைத் தொகுப்பும் அக்காலக் கிறித்துவப் பின்னணியின் சமூகப் பிரச்சினைகளையும் போக்குகளையும் உணர வாய்ப்பளிக்கின்றன. அம்மையாரின் வாழ்க்கைப் பின்னணியையும் அனுபவங்களையும் அவரது 'அனுபவக் களஞ்சிய'த்தின் மூலம் உணர்ந்துகொண்டு 'நொறுங்குண்ட இருதய'த்தையும் 'அரியமலர்' என்ற நாவலின் உதிரிப்பாகங்களையும் படிக்கும்போது அம்மையாரின் நாவல் வெற்றியை உணர முடிகிறது.

கல்விக் குடும்பப் பின்னணியும் கிறித்துவ நம்பிக்கையும் கொண்ட அம்மையாரின் நூல்களிற் கிறித்துவ பிரச்சாரப் பண்பும் போதனை மனோநிலையும் தெளிவாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்துச் சூழலின் சித்திரிப்பும் கதை நிகழுமிடமாகிய தெல்லிப்பழை, கீரிமலை ஆகிய இடங்களின் வருணனையும் ஆசிரியையின் சிறந்த எழுத்து நடையினூடே இழையோடிச் செல்வதை உணரலாம்.

'நொறுங்குண்ட இருதயத்தின்' கதையையும் கதைப் பண்பையும் நோக்கமுன்னர், அம்மையார் எழுதிய முகவுரையையும். பதிப்பாளரின் குறிப்புக்களையும் நோக்குவது சாலவும் பொருத்தமானது.

''சன்மார்க்க சீவியத்தின் மாட்சிமையை உபதேசத்தால் விளக்குவதிலும் உதாரணங்களாலுணர்த்துவது மிகவும் நன்மை பயத்தற் கேதுவாகும் என்றெண்ணி இக் கதையை எழுதத் துணிந்தேன். யாதேனும் ஒரு விடயத்தை உவமைகளாலும் ஒப்பனைகளாலும் மனதிற் பதியப்பண்ணுதல் இலகுவென்றது யாவருங் கைகண்ட நல்வழியாகையால் சில காரியங்களைப் போதனையாகவும் புத்திமதியாகவும் இச் சிறுபுத்தகத்திலடக்க மனமேவப்பட்டேன். இக்கதைகளிற் காணுங் குற்றங் குறைகளைச் சிறியனவாயெண்ணியாதாயினும் நன்மைப் பகுதியிருக்குமாயின் அதனைப் பெரிதாய் நினைந்து மெச்சிக்கொள்ளுமாறு அதிக தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றேன். இக் கதையை வாசிப்பதால் ஒரு ஆத்மாவுக்குத்தானும் அருட்சியுண்டாகுமாயின் அதன் மகிமை கருணை நிறைந்த எம்பெருமானுக்கே உரியது.''[6]

மேலுள்ள முகவுரைப் பகுதியில் தடிப் பெழுத்துக்கள் மாத்திரம் எம்மாலிடப் பட்டவை. முக்கிய வாசகங்களை முழுமையாகவே தந்துள்ளேன்.

கிறித்துவ மதத்தில் ஆழ்ந்த விசுவாசமுடைய கல்விக் குடும்பத்திலே தோன்றியவர் மங்களநாயகம் தம்பையா. இவரது 'அனுபவக் களஞ்சியம்' என்ற நூல் கிறித்துவ மார்க்கத்திற் பலரையும் ஈடுபடுத்தவேண்டும் என்ற நோக்கில் எழுந்தது. போதனையாகவும்புத்திமதியாகவும் என 'நொறுங்குண்ட இருதய'த்தின் முகவுரையிற் கூறும் கருத்தின் முழுமையை 'அனுபவக் களஞ்சிய' முகவுரையில் மேலும் தெளிவாக உணரலாம்.

''''அனுபவக் களஞ்சியம்' என்னும் இச் சிறியபுத்தகத்தின் முழுநோக்கமும், நம் சகோதரிகள் கிறிஸ்துவின் அன்பில் வளர்ச்சியடையத் தெண்டிக்கவேண்டும் என்பதுவும்; தம் நாட்டிற்கும் தமக்கும் நன்மை பயக்கும் நோக்கங்கொண்டு தேவ பக்தியை வளர்க்கும் காரியங்களில் தம் மனத்தைப் பதியவைக்கவேண்டுமென்பதுவுமே. நம் சிறந்த நாட்டில் நன்கு வாசித்தும் கற்றும் உலக காவியம்

6. மங்களநாயகம் தம்பையா, நொறுங்குண்ட இருதயம் முகவுரை (1914) பக். 3

சீர்திருத்தம் முதலியவற்றில் செவ்வனே தேர்ந்த அநேக சீமாட்டிகளிருக்கின்றனர். அவர்கள் தாம் கற்றவாறும் அறிந்தவாறும் கிறித்து மார்க்க வளர்ச்சிக்குரிய காரியங்களில் மற்றோருக்கு உபயோகமாயிருக்க முன்னேறிவரத் தெண்டிக்க வேண்டு மென்பதே நம் வாஞ்சை. இவ் வாஞ்சை சித்தியாகவும் இப் புத்தகம் அநேகருக்குப் பிரயோசனமாயிருக்கவும் கருணாநிதியாகிய எம்பெருமான் இதனை ஆசீர்வதிப்பார்.''

ஆசிரியையின் மனோநிலையையும் நோக்கத்தையும் உணர்ந்துகொள்ள மேற்காட்டிய முகவுரைப் பகுதிகளே போதுமானவையாகும். ஆசிரியையின் முதன்மையான நோக்கம் சன்மார்க்க சீவியத்தின் மாட்சிமையைத் தெளிவாக உணர்த்த வேண்டுமென்பதேயாகும். கதையை வாசிப்பதன் மூலம் ஓர் ஆத்மாவுக்காயினும் அருட்சியேற்படுத்துவதையே விரும்பியுள்ளார். மிசனரிமாரின் போதனைநெறி வழியில் ஆசிரியையும் தமது கருத்து வெளிப்பாட்டுக்கு நாவலிலக்கியத்தினைக் கருவியாகக் கொள்ள முயன்றுள்ளார்.

நாவலின் முற்பகுதி கதையோட்டம் நிறைந்ததாகவும் பிற்பகுதி தத்துவ விசாரம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரத்தின் முற்பாதி நாவலாகவும், பிற்பாதி கனவாகவும் விளங்குவது போல இந் நாவலும் அமைந்திருப்பதைக் காணலாம். இந் நாவலில் வரும் 'கண்மணி' என்ற பாத்திரத்திற்குத் தொடர்ந்து வரும் துன்பங்களை ஊடகமாகக் கொண்டு ஆசிரியை தத்துவ விசாரம் செய்துள்ளார். உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் காட்டலாம்:

''அன்பும் தயையும் கருணையும் நிறைந்த அருமைப் பரமபிதாவே! தாயினுங் கருணை நிறைந்த கருணைக் கடலே! உம்மிடத்தில் அடைக்கலம்புகுந்த என்னை நீர் கைவிட்டுவிட்டால் நான் என்ன செய்வேன், எனக்கொரு கதியுமில்லையே, என் ஆபத்து வேளையில் எனக்கு நீர் சகாயஞ் செய்யாவிட்டால் நான் எங்கே போவேன்? என்னுடைய கவலையை ஆர்க்குரைத்தாறுவேன்? ஆரிடமிருந்து சகாயம் பெறுவேன்? இவ்விக்கட்டிலிருந்து என்னை நீர் விடுவிக்காதுவிட்டால் நான் எங்கே ஓடி ஒளிப்பேன்? என் மேற் சுமத்திய குற்றத்திற்கு நான் பாத்திரவாளியல்ல வென்பதை என் புருஷன் அறிந்துகொள்ளச் செய்யும்படி உம்முடைய பாதாரவிந்தத்தில் விழுந்து கெஞ்சுகின்றேன்''.[7]

கதையிற் பின்னணியாக வரும் சமூக மாந்தரின் தீய மனோநிலை ஆசிரியையின் கண்டிப்புக்குள்ளாகின்றது. ஆத்மீக வாழ்க்கையின் மூலம் மனவமைதி யடைவது பல்வேறிடங்களிலும் வெளியாகின்றது. பல்வேறு வாழ்க்கைச் சிக்கல்களையும் உணர்த்தும் ஆசிரியை சமூகப் பிரச்சினையை ஆழமாக நோக்கி எளிமையாகப் பிரதிபலித்துள்ளமையும் தமது கருத்து வெளிப்பாட்டுக்கு நாவலிலக்கியத்தைக் கையாண்டுள்ளமையும் மனங்கொள்ள வேண்டியவை.

இந்நூலின் பதிப்பாசிரியர் ஜே. ரி. அப்பாபிள்ளை அவர்கள் தமது உரையிற் கூறியவையும் ஆசிரியையின் நோக்கையும் நாவலின் போக்கையும் தெளியவைக்க உதவுவதாகும்:

''தம்முடைய அரிய உதரக் கனிகளாகிய பெண்மக்களைத் தெய்வ பயமற்ற துட்டர் கையில் மனைவியாகக் கொடுக்கும்படி பெரும்பாலு மேவிவிடுகின்ற பொருளாசையெனும் கொடிய நோய் வாய்ப்பட்டு வருந்துந் தந்தை தாயரது நிலைமையைக் கண்டு பரிதவித்து அரிய சற்போதமாகிய மருந்தை இனிய சரித்திர ரூபத்துட் பொதிந்து ஆசிரியர் கொடுத்திருக்கின்றார். இதனால் அநேகர் இம்மை மறுமை யென்னும் இருமைக்கு முரிய பெரும் பயனடைவார்களென்பது நமது நம்பிக்கை''.[7அ]

7. மங்களநாயகம் தம்பையா, நொறுங்குண்ட இருதயம் — பக். 209.

7அ. மே. கு. தூ. — நூற்பிரயோகம் — பக். 5 பதிப்புரை நூற்பிரயோகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது அவதானிக்கத்தக்கது. நூற்பதிப்பாசிரியரும் தேதியும் J. T. Appapillai, May, 24th 1914, Point Pedro.

சமூகத்திலே பொருளாசை அந்தஸ்து என்ற போலி உணர்வுகளாற் பெண்கள் மன விருப்பிற்கு மாறுகத் திருமணம் செய்துவைக்கப்பட்டு வாழ்க்கையில் நிறை வையும் அமைதியையும் இழந்து தவிப் பதைக் குறிப்பாகப் பாத்திரவாயிலாக ஆசிரியை விளக்குகிறார். மனமுறிவுற்ற பெண்களுக்குக் கதி சன்மார்க்க சீவியம் என்பதை நிறுவிச் சமூகப் பின்னணியில் புதிய ஒளியைப் பாய்ச்ச ஆசிரியை மிகவும் முயன்றுள்ளார்.

'நொறுங்குண்ட இருதயம்' என்ற நாவ லின் பெயரும் அக்காலத்து நாவல்களுக் கிடப்பட் பெயர் மரபில் ஒரு புதுமை யாகும். புதுமைக் கூறு வீச இடப்பட்ட இப் பெயர் இவரது 'அனுபவக் களஞ்சிய' நூலில் உள்ள அம்மானை நடைப் பாடலில் ஓர் அடியாக வருவதையும் அவதானிக்கலாம்.

"அடிமைக் குணையன்றி
ஆதரவு இல்லையென்றுன்
அடியின் துணைதழுவி
அண்ணலே யுன்னண்டை
வந்தேன்நான் பொய்யாத
வையகத்து வேதனையால்
நொந்து மிகவாடி
நொறுங்குண்ட பாவியெனின்"[8]

என 'இறைவனைக் கெஞ்சுதல்' என்ற பகுதியிற் கூறுகின்றார். ஆசிரியை, நொறுங் குண்ட இருதயமாகக் கதைப்பின்னணியிற் காட்டும் பாத்திரம் மீட்சியடைய ஆத்மீக வெற்றி வேண்டும் என்ற உணர்வு கொண் டுள்ளார். அவர் இட்ட பெயர், புதுமைப் பெயராக மட்டுமன்றி—அவரது மனதில் ஆழமாகப் பதிந்த பெயராகவும் உள்ளது அவதானிக்க வேண்டியதாகும்.

ஆசிரியை இளமையில் வாழ்ந்த தெல்லிப்பழை என்ற கிராமத்தின் கிறித் துவப் பின்னணியும் கல்விச் சூழலும் அவ ரது நாவல்களிலே தெரிகின்றன. 'நொறுங் குண்ட இருதய'த்தின் கதையமைப்பை யும் பாத்திரப் படைப்பையும், நடை, உத்தி என்பவற்றையும் நோக்குவதற்கு முன்னேடியாகக் கூறியவை வழித்துணை விளக்கமாக அமையுமென நினைக்கின்றேன். ஆசிரியையின் 'அரியமலர்' என்னும் இரண் டாவது நாவல் 'பெடரல் ரப்பர் ஸ்ராம்ப் கொம்பனி' புத்தக விற்பனையாளர், பினாங், கோலாலம்பூர்[9] என்ற பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. 'அரியமலர்' நாவ லுடன் 'நொறுங்குண்ட இருதய' நாவலை யும் முழுமையாகப் பெற்று ஒப்பியலாய்வு செய்வது பயனுள்ளதாகும்.

மங்களநாயகம் தம்பையா ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சியில் மிக முக்கிய மானவர். பெண் எழுத்தாளர்களில் முதன் மையாகக் கொள்ளக்கூடிய பண்புள்ளவர். நாவலை ஆசிரியையின் வாழ்க்கைப் பின் னணியுடன் இணைத்துத் திறனாய்வு செய் வதன் மூலம் இதனை நிர்ணயிக்கலாம். இதற்குப் பின்னணியாகச் சில பொதுப் பண்புகளை நோக்குவது பொருத்தமாகும்.

இருபதாம்நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்களில் ஈழத்தில் வெளியாகிய இலக்கிய ஆக்கங்களைக் குறிப்பாக அவதா னிக்கும் பொழுது சில தனிப் பண்புகளை நாம் வகைந்து கொள்ளலாம். சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களும், சமூக விழிப் புணர்ச்சியும் ஈழத்தின் பல்வேறு பகுதி களிலும் பல்வேறு உருவங்களிற் காணப் பட்டன. சமூகத்தின் போக்கிற் கிணங்கக் காலத்தின் குரலாகப் பன்முகப்பட்ட உணர்வுகளையும் காலத்தின் தேவைகளை யும் உணர்த்தும் இலக்கியவடிவங்கள் தோன்ற ஆரம்பித்தன.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியி லிருந்து படிப்படியாக உருவாகிய ஆங்கிலக் கல்வி வளர்ச்சியின் தாக்கம் சமூகத்திற் பரவலாகப் பலவிளைவுகளை ஏற்படுத்தியது. கிறித்துவ மிசனரிமாரின் சமய இயக்கங் களும் அவற்றின் காரணகாரியத் தொடர் பான கல்விச் சாலைகளும் பல்வேறு கிராமங்களிலும் ஆங்கிலங் கற்ற மத்திய வகுப்பினரைப் பொதுவாகவேற்படுத்தியது. பரந்துபட்ட நூற்கல்வியும் விரிந்த சிந்தனை வளர்ச்சியும் ஒன்றுசேர்ந்து பலரையும்

8. மங்களநாயகம் தம்பையா, **அனுபவக் களஞ்சியம்** பக். 32
9. Federal Rubber Stamp Co. Book Sellers, Penang, Kulalampur.

சமுதாயப் புரட்சியையும் மாற்றங்களையும் அவாவிச் செல்லும் நிலைக்கு இட்டுச் சென்றன. தாம் மனங் கொண்ட சமூக சீர்திருத்தக் கருத்துக்களை மக்கள்மத்தியிற் பரவச் செய்யப் பலவழிகளைக் கையாண்டனர். சாதாரண மக்களை நோக்கிப் பிரசார நோக்கிலே எழுத ஆரம்பித்தமை எளிமையாக எழுதவேண்டிய தேவையை ஏற்படுத்தியது. வசன ரூபத்திலும் கவிதை ரூபத்திலும் கருத்துக்கள் வெளியாயின.

சமூக சீர்திருத்த அடிப்படையிலும் கிறித்துவப் பிரசார நோக்கிலும் தமது இருநாவல்களையும் கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்ட மங்களநாயகம் தம்பையா அக்காலத்துச் சமூக பொருளாதாரப் பின்னணியின் இயக்கசக்தியால் உந்தப்பட்டார். குறிப்பாகத் தெல்லிப்பழை என்ற கிராமத்தில் ஏற்பட்ட சமூக மாற்றம், சீர்திருத்த இயக்கம் ஆதியன உருவாக்கிய சிந்தனைத்தாக்கங்கள் ஆசிரியையின் இலக்கிய முயற்சிக்கு விளைநிலமாக அமைந்தன எனலாம். மக்களின் அகநிலையிலும் புற நிலையிலும் பரவலாகக்காணப்பட்ட போலி உணர்வுகளைத் தமது நாடகம், கட்டுரை, கவிதைகள் மூலம் பரவலாகக் கண்டித்த பாவலர் தெ. அ துரையப்பா பிள்ளையவர்களும் இதே காலத்தவராவர். ''பன்முகப் பட்ட உணர்வுகளோடு பாவலர் அவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களின் தாக்கம் சமூகத்திற் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. பழம் பெருமை பேசி வாழும் யாழ்ப் பாணச் சமூகத்தைத் திருத்தும் பணியில் அமைந்த பாவலரின் பாடல்கள் அக்காலத்தில் மிகுந்தசெல்வாக்குப்பெற்றன.''[10] ஐசக் தம்பையா அவர்களின் குடும்பத்தினருடன் பாவலர் அவர்கள் கொண்டிருந்த தொடர்பும் கருத்துப் பரிமாறல்களும் மங்களநாயகம் தம்பையா அவர்களின் இலக்கிய ஆக்கத்திற்கு ஒரு காலாக விளங்கினவெனவும் கூறலாம்.[11] ஆங்கிலப்போலி நாகரிகத்தின் வெறுமையினூலே தன்னிலை யிழந்து வெற்று வாழ்க்கையை அவாவிய மத்தியதர வர்க்க மக்களையும் பின்தங்கிய மக்களையும் ஒன்றுசேர்த்து வழிப்படுத்த முனைந்த பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் போக்கு மங்களநாயகம் தம்பையா அவர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை. மங்களநாயகம் தம்பையா, பாவலர் அவர்களைப் போலவே சீதனவழக்கம், தீய வழியிற் பொருளாசை, தெய்வபக்தியின்மை போன்றவற்றை 'நொறுங்குண்ட இருதயம்' என்ற நாவலிற் குறிப்பாக அலசுகின்றார்.

கதை, பாத்திரப்படைப்பு, நடை என்ற மூன்று பகுதிகளாகப் பிரித்துச் சுருக்கமாக 'நொறுங்குண்ட இருதய' நாவலை ஆராய்வு செய்தல் பல பண்புகளையும் விளங்கிக்கொள்ளத் துணைசெய்யும். கதையைச் சுருக்கமாக நோக்குவோம்.

— சுப்பிரமணியருக்குள்ள பிள்ளைகளிற் கண்மணி, பொன்னுத்துரையாகிய இருவரும் மூத்தவர்கள். கண்மணியின் அயல் வீட்டுக்காரி பொன்மணி அவளுடைய சிநேகிதி. பொன்னுத்துரை பொன்மணியைக் காதலிக்கிறான். அப்பாத்துரை அருளப்பாவின் தம்பி. அருளப்பா இணக்க மற்ற பெற்றோரை இணங்கச்செய்து கண்மணியை விவாகஞ்செய்கிறான். பொன்னுத்துரையின் காதலை அறிந்தும் பொன்மணியின் பெற்றோர் அவளை அப்பாத்துரைக்கு விவாகம் பேசுகின்றனர். பொன்மணி பொன்னுத்துரையைத்தான் மணம் முடிப்பேன் என்று உறுதி பூண்டு வாக்களித்துப் பெற்றோர் முடிவை எதிர்க்கிறாள்.

கண்மணி தன் கணவனுக்கு வந்த கல்கத்தாக் கடிதம் ஒன்றை அவன் உடன் பாடின்றிப் படித்து அவனது கல்கத்தா வாழ்வில் ஒரு பெண் சம்பந்தப்பட்டிருப்பதை அறிகிறாள். கடிதம் வாசித்த உண்மையைக் கணவனுக்குக் கூறி அவன் தண்டனைக்கும் வெறுப்புக்கும் ஆளாகின்றாள். கணவனது பையிற் பணம் களவுபோக அக்களவு கண்மணிமேற் சுமத்தப்படுகின்

10. சிவசேகரச்செல்வன் ஆ. மல்லிகை — ஜூலை 1972 ''பாவலர் துரையப்பாபிள்ளை நினைவு இதழ்''.

11. திருமதி கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் கூறிய கருத்தை ஆதாரமாகக் கொண்டே இக் கருத்து எழுதப்படுகின்றது.

றது. வேண்டாப்பெண்ணைத் தாய்வீடு செல்லவும் அனுமதிக்கப்படாமல் வாழ்ந்து இரு குழந்தைகளுக்குத் தாயாகிறாள். கற்புச் செல்வியாகித் துன்பந் தாங்கிக் கணவன் உவப்பன செய்து பொறுமையின் பூஷணமாக வாழ்கிறாள் கண்மணி.

அப்பாத்துரைக்கும் பொன்மணிக்கும் விவாகப்பதிவு நிகழும் நாளில் தப்பியோடும் ஒழுங்கிருந்தும் அது வாய்க்கப்பெறுத பொன்மணி தான் பலவந்தம் காரணமாகக் கலியாணப் பதிவுக் கையெழுத்திடுவதாகச் சபையோருக்குக் கூறிக் கையொப்பம் வைக்கிறாள். தன் திருமணத்துக்குத் தடையாக நிற்பவன் பொன்னுத்துரையென அறிந்து அவன்மீது குரோதம்கொள்கிறான் அப்பாத்துரை. சென்ற பொன்னுத்துரையை அருளப்பாவும் அப்பாத்துரையும் கட்டிப்பிடித்து நையப்புடைக்கின்றனர். பொன்னுத்துரையின் நண்பன் நவரத்தினம் இரகசியமாக வந்து அப்பாத்துரையைக் காயப்படுத்தி விடுகிறான். அக்காயம் பொன்னுத்துரை செய்ததென்று பொய் வழக்குத் தொடருகிறான் அப்பாத்துரை. ஆனால் வழக்குத் தீர்ப்பில் பொன்னுத்துரை விடுதலையாகிறான்.

பின்னர் பொன்மணியின் கலியாண ஆரவாரம் நடக்குங்கால் அப்பாத்துரை வீட்டிற் சிறு பிள்ளையின் காப்புக் களவாடப்படக் கண்மணிமேல் அக்களவு சுமத்தப்படுகிறது. கணவனால் அவள் தண்டிக்கப்படுகிறாள். சில நாட்களின்பின் கண்மணி பாதிரியாரொருவரின் சமயப் பிரசங்கத்தை வீட்டிற் கேட்டுக் கிறித்துமதச் சார்புடையவளாகிறாள். தண்டிக்கப்பட்ட கண்மணி வீட்டின் ஒருபுறத்தே நோய் வாய்ப்பட்டுக் கிடக்கிறாள்.

விவாக தினத்தன்று மாப்பிள்ளை வந்த வேளையில் பொன்மணி தப்பி ஓடிப் பொன்னுத்துரைகொணர்ந்த கரத்தையில் ஏறி மண்டைதீவுக்குப் போகிறாள். கண்மணியையும் பொன்னுத்துரை அழைத்துச் சென்றுவிடுகிறான். ஏமாந்த மாப்பிள்ளை அப்பாத்துரை பொன்மணியின் தங்கையை மணந்துகொள்கிறான். மணவாழ்விற் பிடிப்பில்லாமல் கொழும்பு சென்று அப்பாத்துரை கடனாளியாகிறான். அருளப்பா கண்மணியின்றிப் பிள்ளைகளோடு இருக்கும் நாளில் கண்மணி பொன்னுத்துரையாகியோர் வீடுவந்து சேர்கின்றனர். கண்மணிக்கு நோய் படிப்படியாக ஏறுகிறது. அருளப்பா குழந்தைகளைத் தாய்வீட்டுக்கு அனுப்பிவிடுகிறான். கண்மணி யிறக்கமுன்னரே பொன்மணி பொன்னுத்துரை விவாகம் நடைபெறுகிறது. அருளப்பா வீட்டிற் களவுபோன பொருள்களெல்லாம் பூரணம் என்னும் வேலைக்காரியிடம் அகப்படக் கண்மணியின் தூய்மையை அருளப்பா உணர்ந்து கண்மணியைத் தேடிச் செல்கிறான். அவனை வரவேற்றுப் பேசியவாறே கண்மணியின் ஆவி பிரிகிறது. தன் கொடுமையை உணர்ந்த அருளப்பா பிறதேசம் சென்று முதுமையில் மீண்டு வந்து, மணம் முடித்து வாழும் மகளுடன் இறுதிநாளைக் கழிக்கிறான்:—

கண்மணியின் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களும் அவளைச் சூழவுள்ள சமூகத்தின் அபிலாசைகளுமே கதையில் முழுமையாகச் சித்திரிக்கப்படுகின்றன. ஆரம்பம்முதல் இறுதிவரை மன உணர்வுகளுட் சிக்கித் தவிக்கும் இலட்சிய பாத்திரமாக வளர்க்கப்படுகின்றாள். அருளப்பா, அப்பாத்துரை ஆகிய இருவர் தீய பண்புகள் கொண்ட எதிர்நிலைப் பாத்திரங்களாகப் படைக்கப்படுகின்றனர். உப பாத்திரங்கள் யாவும் செவ்வனே படைக்கப்பட்டுள்ளனர். மொத்தத்தில் கதையை வளர்த்துச்செல்லும் பண்பில் நாவலாசிரியை நல்ல வெற்றியை யடைந்துள்ளாரென்றே கூறவேண்டும்.

இயல்பான யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு நடையைப் பரவலாக ஆசிரியை கையாண்டுள்ளார். ஆங்கில அறிவின் பயனைத் தமிழ் வசன நடையில் நெகிழ்வு காணப்படுகிறது. ஆற்றொழுக்குப் போன்ற வசனநடை கதைப்போக்கில் விறுவிறுப்பை ஏற்படுத்துகின்றது. மண்வாசனை வீசும் சொற்களை இடையிடையே பெய்துள்ளமை ஆசிரியையின் நடைக்கு மெருகூட்டியுள்ளது. கரத்தையொன்று ஓடிக் குடைக்கடிக்கும் காட்சியைக் கூறுவதை அவதானிக்கும் போது ஆசிரியையின் நடைப்போக்கையும் சொல்லாட்சியையும் நோக்கலாம்.

''வழியிலுள்ள ஒரு கோயிலுக்குச் சமீபமாய் வந்த தருணம், கோயில் மேள வாத்தியத்தைக் கேட்டு, வயோதிகரின் மாடுகள் வெருண்டோடி முன் சென்ற வாலிபனுடைய ஒற்றைக் கரத்தையில் மோத, அக் கரத்தை சூடைக்கூடித்து பக்கத்திலுள்ள கானுக்குள் விழுந்தது. சுப்பிரமணியரின் மாடுகள் அடக்க நில் லாது கால்மைல் தூரம் வரையில் ஓடவே கரத்தைக்காரன் தங்களுக்கு அபாயம் நேரிடாது தப்பிக்கொள்ளும் பொருட்டு மணற்றரையான ஓரிடத்தைக் கண்டு மாடுகள் அங்கிருக்குமாறு நாணயத்தை அப்பக்கமாய்ச் சுண்டப்பிடிக்க அவைகள் மணலில் ஓடிக்கொள்ளச் சக்தியற்று நின்றுவிட்டன. மாடுகள் வெருண்டு புகைவண்மாய் ஓடுவதைக் கண்ட கண்மணி யும் அவள் தாயாரும் நடுநடுங்கித் 'தெய்வமே, தெய்வமே' என்று பதறிக் கத்தினர்கள்''[12]

இப் பந்தியில் பேச்சு வழக்குச் சொற் கள் கலந்துள்ளமைபோல நாவல் பூராவும் விரவியுள்ளன. குறிப்பாக ஆரம்பகால நாவ லாசிரியர்களின் பண்பு கதை வளரும் போக் கிற் காணப்படுகிறது. கதை முழுமையாகத் தானே யெடுத்து மொழியும் நிலையாகவே காணப்படுகிறது. பாத்திரங்களின் உரை யாடல்கள் கதையில் யதார்த்தமாக அமை யாது இடையிடையே செயற்கைப் பண்பு கலந்து விளங்குகின்றன. சுருங்கக் கூறின் கதை இலட்சியப்போக்குடன் நீதி, நேர்மை, கடவுள் விசுவாசம் என்ற கோட்பாடு களின் பின்னணியில் வளர்ந்து செல்கின் றது. இடையிடையே பிரச்சாரக் கருத் துக்கள் கதைப்போக்குடன் இணையாது குத்திட்டு நிற்கின்றன.

ஒட்டு மொத்தமாக நோக்குங்கால் 'நொறுங்குண்ட இருதய'க் கதையில் பாத் திரங்களின் தொகையும் போக்கும் கதை யைச் சிக்கல்நிறைந்ததாக்குகின்றது. எனி னும் காலத்தின் ஒளியில் நோக்கும்போது மங்களநாயகம் தம்பையாவின் முயற்சி முழுமையடைகின்றது எனலாம். 'நொறுங் குண்ட இருதய'த்திலும் பார்க்க 'அரிய மலர்' நாவலில் நடையும் கதைப்போக்கும் முதிர்ச்சியடைந்த நிலையில் உள்ளதையும் குறிப்பிடலாம். இரு நாவல்களிலுமுள்ள பாத்திரங்களின் பெயர் ஒற்றுமையும் கதைப் பின்னணியும் ஒன்றிற்கொன்று வளர்ச்சியும் தொடர்ச்சியும் ஆக உள்ளமை யும் அவதானிக்கக்கூடியன. தமது நோக் கத்தை நிறைவேற்றும் போக்கில் ஆசிரியை பெறும் வெற்றி நாவலின் வெற்றியாக அமைகிறது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலே இருப தாம்நூற்றாண்டின் ஆரம்பகால நாவலிலக் கியப் பண்புகளைத் தெளிவுபடுத்தவும், பண் பாய்வு செய்யவும் 'நொறுங்குண்ட இருத ய'த்தை மேலும் நுணுகி நோக்குவது பன் முகப்பட்ட பண்புகளை விளங்கிக்கொள்ள உதவுவதாகும்.

12. மங்களநாயகம் தம்பையர், நொறுங்குண்ட இருதயம் — (1914) பக். 7.

யாழ்ப்பாணத்துச் சமயநிலை

சாமிகள் தொகையூரில் கனத்துப்போச்சு — பக்தி
சத்தியம் சிவதொண்டு குறைந்துபோச்சு
வாமம் மிகும்புண்ணியம் அருகிப்போச்சு — எங்கும்
மறக்குண மொன்றுமே பெருகிப்போச்சு.

— பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

Dr. S. Pathmanathan
Lecturer in History
University of Ceylon
Peradeniya

The Tamil Inscription From Māṅkaṉai

The Tamil inscription from Māṅkaṉai, a village in the Trincomalee district, was deciphered by K. Kanapathypillai. His edition of the inscription together with an estampage of the record was published in the *University of Ceylon Review.*[1] This epigraph, dated in the 43rd year of King Jayabāhu purports to record the grant of some fields to Mintan Korran, the supervisor of Palanquin bearers in the royal bed chamber. Besides it mentions of two other rulers, Gajabāhudevar and Mānābharaṇadevar, in connexion with the grant. The inscription is doubtless of considerable historical importance; but some expressions in the text raise serious doubts about its genuineness.

Kanapathippillai's reading of the inscription was substantially correct; but he has not discussed the significance of its contents. Moreover, his identification of Mānābharaṇadevar and his interpretation of the text can be questioned. He believed that Mānābharaṇa referred to in this inscription was the ruler of Māyarata[2]. However, an examination of the contents of the inscription in the light of traditional history reveals that this prince was the ruler of Rohaṇa[3].

The identification of Jayabāhudēvar and Gajabāhudēvar is easy. The former was the brother and successor of Vijayabahu I (A. D. 1070—1110) and the latter was of course the grandson of Vijayabāhu. The contents of the inscription together with the honorific *devar* suffixed to his personal name suggest that Mānābharaṇa also was a ruler[4]. In the twelfth century there were two rulers in Ceylon who had the name Mānābharaṇa; one of them was a nephew of Vijayabāhu I. This prince who was the eldest son of Mitta—a younger sister of Vijayabāhu—attempted to secure control over Rājaraṭa on the death of Vijayabāhu[5]. How

1. *K. Kanapathypillai, 'Mankanai inscription of Gajabahu II' — University of Ceylon Review (UCR), XX, No. 1, p. 12.*
2. *Ibid, p. 12*
3. *A Sinhalese inscription of Māhābharaṇa of Rohana has been discovered at Katagamuva. It records the grant of certain lands by him to a monastory in the 35th year of Jayabāhudeva.*
4. *In Ceylon, the word deva was suffixed to the personal names of kings and princes as an honorific from the reign of Vijayabāhu I onwards. This custom among the Sinhalese royalty was an imitation of a Coḷa practice. The Katagamuva inscription also refers to the ruler of Rohana as Mānābharanadeva. See Epigraphia Zeylanica, (EZ) V, (i), p. 142.*
5. *The Cūlavamsa translated by Wilhelm Geiger (into German) and from German into English by C. Mabel Rickmers (CV trans.) Colombo, 1953. LIX: 41-42; LXI: 1-5. See also footnote on page 225.*

ever, he was defeated and driven out of Rājaraṭa by Vikramabāhu, the son of Vijayabāhu. Although he took Rājaraṭa, Vikramabāhu could not subdue the rest of the country. His cousins, the sons of Mitta, conquered the regions to the south of Rājaraṭa and Mānābharaṇa, administered Māyaraṭa while his two brothers were entrusted with authority over the two divisions of Rohaṇa.[6] The ruler of Māyaraṭa may be referred to as Mānābharaṇa I in order to be distinguished from his nephew Mānābharaṇa, the son of Srī Vallabha of Rohaṇa.

As the Māṅkaṇai epigraph is dated in the 43rd year of Jayabāhu (A. D. 1153) the prince Mānābharaṇa referred to in it cannot be the ruler of Māyaraṭa because he had died about twenty years earlier. Indeed Mānābharaṇa I had died even before Gajabāhu II became ruler of Rājaraṭa[7]. The prince referred to in the inscription was evidently Mānābharaṇa II of Rohaṇa, the cousin and contemporary of Gajabāhu II and Parākramabāhu I.

Mānābharaṇa II was deeply involved in the struggle between Parākramabāhu I and Gajabāhu II for the control of Rājaraṭa. He had considerable support and sympathy among the inhabitants of the Northern principality to whom he appeared as the only source of support against the armies of Parākramabāhu which they seem to have disliked. The ruler of Rohaṇa led his armies into Rājaraṭa on two occasions on the request of several dignitaries from that part of the country. On both occasions his success though conspicuous, was short lived.

On the first occasion he advanced into Rājaraṭa when Gajabāhu was imprisoned by the armies of Parākramabāhu which had overrun that principality[8]. Mānābharaṇa dislodged those armies from Polonnaruwa and freed Gajabāhu from captivity. Nevertheless, he was not inclined to restore Gajabāhu to authority. He had the members of his family and his courtiers brought to Polonnaruwa from Rohaṇa and took charge of the government of Rājaraṭa[9]. However, he had to withdraw into his principality after several military reverses.[10]

---

6. *CV, LXI*: 8-26.
7. *Ibid., LXII*: 67.
8. *As regards Mānābharaṇa's intervention the chronicle records*: "..... *All the people who dwelt in the town, (Polonnaruwa) the officials and councillors, the townsmen and the troops gathered together, betook themselves to Mānābharaṇa, told him of the events and spoke as follows: "You must come with us, we shall take to ourselves the royal dominion and make it over to you. Only help must be brought to us."... When the monarch Mānābharaṇa heard the whole tale the imprudent one took counsel with his foolish ministers. He thought under the pretext of setting free the king, "I will arise slay the enemy and get hold of the whole of Rājaraṭṭha." 'He equipped in haste the able-bodied men among the inhabitants of the two provinces and marched together with the officials and the forces hailing from Rajarattha, to the town, delivered there a bitter action and cut down the whole army large as it was, without remnant.' CV, LXX*: 254 — 261.
9. *CV, LXX*: 264 — 270.
10. *He was forced by Parākramabāhu's troops to leave Rājaraṭa.*

Later when Gajabāhu died at Gaṅgataṭāka[11] his ministers moved out to Koṭṭhasara[12] and from there they invited Mānābharaṇa to come over and take charge of the government.[13] In response to this appeal Mānābharaṇa advanced into Rājaraṭa. He overwhelmingly defeated the armies of his cousin, Parākramabāhu. In their retreat those armies had to abandon most of Rājaraṭa.[14]

The claim in the Māṅkaṇai inscription that it was set up by Mānābharaṇa does not appear to be a genuine one. It records:

> The fields called Tel, Kiratu and Narātu which have as their four boundaries the lands of the vihāra of Lord Gajabāhudevar which is situated beside the main road were granted to me Mintaṉ koṟṟaṉ, the supervisor of palanquin bearers attached to the royal bed-chamber, by Gajābāhudevar as life tenure. Regarding the notification of the king (recording this land grant) Mānābharaṇadevar issued an order endorsing that it was given by Gajabāhudevar and had it engraved on stone.[15]

The foregoing passage implies that Gajabāhu had previously made a grant to Mintaṉ koṟṟaṉ and that subsequently Mānābharaṇa had confirmed it by having caused the notification of Gajabāhu concerning the grant to be engraved on stone. In the text Mintaṉ koṟṟaṉ is referred to in the first person (Miṉtaṉ koṟṟaṉeṉ eṉakku jīvitamāka)[16] while Mānābharaṇadēvar is referred to in the third person. Such expressions are inconsistent with the claim that the record was caused to be engraved on stone by Mānābharaṇa.

---

11. *Kantalāy.*
12. *Kōṭṭiyāram.*
13. *CV, LXXXI*: 5—7. *Formerly Gajabāhu I and Parakramabāhu I had concluded their wars by a treaty of alliance. According to their terms of agreement in the event of the death of one of them the other should inherit the kingdom of the deceased. However, the ministers of Gajabāhu completely disregarded the treaty. Parakramabāhu therefore had to wage another war in order to secure control over Rāiaroṭa.*
14. *CV, LXXII*: 148—151.
15. *See lines 7—14 of the text.*
16. *Similar expressions are found in the Tamil pillar inscription of the 40th year of Jayabāhu from Hingurakdamana in the North Central Province. The relevant passage in this epigraphic record runs*: Gajabāhudevar akampaṭiccakaiyaril Mannāḷayil jīvitam uṭaiya Umpiḷa ayittaṉēṉ en jivitam pilappēṭṭil ōr amaṇam Viccu...

This passage may be translated as, I Umpiḷa ayittaṉ belonging to the group of Agampaṭi in the service of Gajabāhudēvar, having sold ān amaṇam (of land) from my jīvita at (or called) Pilappēṭṭu ... This inscription was set up by Umpiḷa ayittaṉ who donated the proceeds from the sale of an amanam (of land) from his jīvita to the Buddhasthāna and therefore Umpiḷa ayittaṉ is naturally referred to in the first person. The māṅkanai inscription which purports to record a land grant made by the king to Mintaṉ koṟṟaṉ strangely refers to the receipient of the grant in the first person.

see A. Veluppillai, Ceylon Tamil Inscriptions Pt. I (Peradeniya, July, 1971 pp. 32—34 and K. Indrapala, Epigraphia Tamilica Pt. I. (June, 1971). p. 17.

Lands were granted as jīvita by the king to those who rendered services to him and the royal orders stipulating such grants were recorded by court officials and subsequently the texts of such records were engraved on copper plates, or stones or in both as according to necessity and convenience. In the drafts recording such grants the king who makes the grant would be referred to in the first person and the receipient of the grant—could be an individual or group or an institution—would be referred to in the third person. As the Māṅkaṇai inscription which does not confirm to this normal procedure and mentions Mintaṉ korraṉ, the receipient of the grant, in the third person, the genuineness of the inscription is open to doubt.

Apparently the inscription was set up by Mintaṉ korraṉ and not by Mānābharaṇa. Therefore this inscription has to be regarded as a spurious one. In other respects the details recorded in this epigraph may have a historical basis. The date of the inscription, the provenance of the record and the evidence of traditional history may suggest that this inscription was set up before the consecration of Parākramabāhu I in Polonnaruwa and while he was trying to consolidate his power in Rājaraṭa, after a short spell of power enjoyed by Mānābharaṇa in that principality.

Although the record is spurious, the claim that it was caused to be engraved by Mānābharaṇa presupposes that Māhābharaṇa had in fact crossed into Rājaraṭa and exercised authority in that province for some time. Therefore in a limited way this epigraph, like the Sangamuwa inscription, confirms the *Cūlavamsa* account of the struggle between Parākramabāhu and Mānābharaṇa II for the control of Rājaraṭa.

Mintaṉ korraṉ may have been a supervisor of the palanquin bearers attached to the palace during the time of Gajābāhu. But there is no means of ascertaining whether he had received a land grant from Gajabāhu. Gajabāhu could have granted him as life tenure the lands referred to in the inscription. It could also be surmised that Mintaṉ korraṉ, who was a person of some consequence acquired possession of these lands during a period of instability and insecurity that followed the death of Gajabāhu II. Mintaṉ korraṉ must have set up this inscription with a view to authenticate his claims over the lands which had come under his possession. The phraseology of the inscription closely follows that of the contemporary Tamil records in Ceylon and it reveals that the author was quite familiar with such records.

Nine inscriptions dated in the regnal years of Jayabāhu have hitherto been discovered. Of these two are in Sinhalese. The others are in Tamil.[17] The inscrip-

17. *The Māṟa Vāḍiye rock inscription of Sundaramahādevi, from Dimbulāgala (EZ, II No.* 34) *and the Katagamuva inscription of Mānābharaṇa II (EZ. V. Pt.* 1, *p.* 142) *dated in the* 27*th and* 35*th years respectively of Jayabāhu are in Sinhalese. The Tamil inscriptions dated in regnal years of Jayabāhu were discovered at Budumuṭṭāva (EZ. III,* 33) *Morawahagala (UCR, XVIII,* 1960 *pp.* 47—49) *Mahākirindāgama (Epigraphia Tamilica, I, June* 1971, *pp.* 6—9; *Ceylon Tamil Inscriptions, pt. I, July* 1971, *pp.* 27—31 , *Polonnaruwa and Māṅkaṇai. Moreover the inscription from Hingurakdamana seems to have been dated in the* 40*th year of this King, (Epigraphia Tamilica, Vol. I, pp.* 14—17, *Ceylon Tamil Inscriptions, Pt. I, p.* 34.)

tion from Māṅkaṉai is recorded in the 43rd year, the last known date of Jayabāhu II. Jayabāhu, however, did not rule for such a long period; nor did he live for that length of time.[18] When Jayabāhu was consecrated King after the death of his brother Vijayabāhu I, Mānābharaṇa, the eldest son of Mitta attained the rank of Māhadipāda.[19] The claims of Vikramabāhu, the son of the previous king were overlooked. Vikramabāhu, however, ousted Jayabāhu and his partisans from Rājaraṭa and subsequently ruled that principality from Polonnaruwa. Jayabāhu lived at Mahānāgakula with his nephew, Kit Sri Megha, and died a few years after his deposition.[20]

Despite the deposition and death of Jayabāhu, the official documents in all the three principalities of Rājaraṭa Māyarata and Rohaṇa (which were under different rulers) were dated in the regnal years of Jayabāhu for a long period—until the accession of Parākramabāhu I. This practice was unusual. It has been argued that this was due to the fact that the rulers of the three principalities were not consecrated kings.[21] The descendants of Mittā, particularly Mānābharaṇa I and Mānābharaṇa II were content with the ranks of Māhādipāda and Ādipāda respectively. They did not assume royal titles because they could not dislodge their rivals from Rājaraṭa, the king's province. They had to record their documents in the regnal years of Jayabāhu presumably on account of two considerations; firstly they were not consecrated kings; secondly they did not either acknowledge the authority or recognize the claims of Vikramabāhu and Gajabāhu who held Rājaraṭa.

Gajabāhu II is not known to have borne any consecration name or royal title. The inscriptions engraved in Rājaraṭa during his time also were dated in the regnal years of Jayabāhu. This may suggest that Gajabāhu and his father Vikramabāhu were not consecrated.[22] After the deposition and death of Jayabāhu, Vikramabāhu had a stronger claim than his cousins—Mānbāharaṇa, Kit Sri Megha and Sri Vallabha—to the throne of Polonnaruwa. Nevertheless despite their long reigns and effective control of Rājaraṭa, Vikramabāhu and his son refrained from assuming royal titles and also from undergoing the ceremony of consecration as kings. This would seem inexplicable. The customs regarding succession to the throne had probably become confused

18. *The Rājāvaliya states that Jayabāhu ruled for* 3 *years. According to the Pūjavaliya he ruled for* 14 *years. The testimony of the Rājāvaliya, a late work, cannot be regarded as authentic. Nor could it be held on the testimony of the other chronicle that he ruled for* 14 *years. He lost authority soon after his accession and lost his throne but perhaps retained his crown. He may have lived for* 14 *years after his accession. According to the Cūlavamsa Vikramabāhu and Gajabāhu ruled for* 21 *years and* 22 *years respectively. The* 43*rd year of Jayabāhu therefore corresponds to the last year of Gajabāhu.*

19. *CV., LXI*: 4; *LXII:* 4.

20. *Jayabāhu had died before the birth of Parākramabāhu. CV, LXII:* 1—2.

21. *EZ, Vol. II*: 200 — 202, *EZ. V, p.* 17.

22. *Indeed the Cūlavamsa asserts '... without the royal consecration it is true, he held sway as monarch in Rājaraṭṭha.' CV, LXI*: 53

owing to the influence of matriarchy in the royal family during this period.

As noted earlier this inscription testifies that several fields were granted as Jīvita to Mintaṉ korraṉ, the supervisor of planquin bearers. The tax-free lands given for maintenance were generally denoted as Jīvita. Such assignments were given as remuneration for service. Originally what was assigned was the king's dues from the land and not the proprietorship of the soil. In course of time, however, the terms of such assignment were modified.[23] The Jetavanarāma Sanskrit inscription, which contains one of the earliest references to *jīvita* in Ceylon, testifies that certain plots of land were assigned as *jīvita*. It records that masons and carpenters received 1½ *kiriya* of field (6 *amunam*) and *vāṭṭi* (enclosure, garden, house-site) as their *jīvita*.[24] Tamil inscriptions of the twelfth century prove that the assignees of *jīvita* acquired proprietory rights over *jīvita* lands which could be alienated by the assignee. The Moragahawela pillar inscription of the 28th year of Jayabāhu attests that one Uḷakāyakittan donated to a Buddhist shrine one *vēli* of land from his *jīvita* in the village of Pātālaya.[25] The epigraph from Hingurakdamana records the sale of one *amaṇam* (of land) by Umpiḷa ayittaṉ from his *jīvita* at Mānnālāy.

The inscription terminates with the imprecatory formula: *Buddharāññai, Vallavaraiyaṉ, Cūḷaravu*, implying thereby that the grant shall be protected by the command of the Buddha and the oath of Vallavaraiyaṉ. It is difficult to explain the significance of Vallavaraiyaṉ in this context.

The term could be interpreted as a title signifying the Lord of Vallavar. South Indian inscriptions generally refer to the Cālukya rulers as Vallavaṉ (equivalent of Vallabha).[26] Even some South Indian princes had borne the title Vallavaraiyan. The husband of the elder sister of Rājaraja I (985—1016) was Vallavaraiyar Vandyatēvar.[27]

Moreover, Balarāma could be referred to as Vallavaraiyaṉ. This term may denote even Mahāvīra the founder of Jainism or Ayyanār, the favourite deity,

---

23. *The Sinhalese equivalent of Jīvita was divel. See H. W. Codrington, Ancient Land Tenure and Revenue in Ceylon, Colombo* 1938, *p.* 17.

24. *'The Jetavanarāma Sanskrit Inscription', EZ, I,* (1) *p.* 5.

25. *K. Kanapathypillai, 'A Pillar inscription from Moragahawela', UCR, XVIII* (1&2) *p.* 48.

26. *K. A. Nilakanta Sastri, The Cōḷas, Second Edition (University of Madras,* 1955) *p.* 303.

27. *He was called the chief of Sāmantas and a part of modern North Arcot district lying around Brahmadesam was under his jūrisdiction. A Nāṭu came to be called Vallavaraiyar nāṭu after this chief. See The Cōḷas, pp.* 186, 226, *and South Indian Inscriptions (S II) Vol. II, pt.* 2. *No.* 2.

among the pastoral peoples of South India.[28] As Vallavaraīyaṉ is mentioned along with the Buddha the authors of the inscription must have had in mind either a deity or a highly esteemed religious dignitary.

The expression Vallavaraiyaṉ Cūḷaṟavu is found in a few inscriptions[29] from Toṇṭaimaṇṭalam in the Tamil country and the occurence of this expression is an evidence of the influence of South Indian epigraphy on that of Ceylon.

Transliteration of the Text

Face A	Face B
1. Svasti Srī a	1. Nirupati (ta)
2. Paiya calāmē	2. ṉ kurippu
3. Ka panmarāṇa ca	3. kku Mānā
4. kkaravarttika	4. paraṇa tē
5. ḷ Sri Jayabāhu	5. Var Gahabā
6. dēvaṟkku yāṉ	6. hu tēvar
7. ṭu 4(o) 3 āvatu ti	7. ceytatu ce
8. ruppaḷḷic civi	8. yaleṉṟu
9. Kaiyāril kaṇkā	9. aruḷi tiru
10. ṇi Mintan Ko	10. mukam varakkā
11. ṟṟanēṉ Gajabā	11. ṭṭic cila
12. hu dēvar enakku jī	12. lēkam ce
13. Vitamāka i (ṭ) ṭa i(t)	13. ytu kuṭu
14. tel vecārum	14. ttu itu
15. Kiratu Narātu ve	15. kku oru vi
16. cārum itil nāṟ	16. kka(na)ñ ce(ya)
17. pāl ellai peru	17. leṉṟuḷama
18. māṉ Gajabā	18. tip puttarā
19. hu dēvar veya	19. ñ ñai Vā
20. ka vērattāṉa parit	20. Ilava (rai)
21. ta pūmi tāṉam	21. yaṉ cūḷu
22. āka iṭṭaruḷiṉa	22. ṟavu

---

28. *The Cūḷāmani Nikaṇṭu, a Tamil work in lexicography, attests that one of the pastoral tribes of the Tamil country were called ān vallavar. See M. D. Raghavan, Tamil Culture in Ceylon, (Colombo, 1971) p.* 182.

29. *SII, VII, Nos.* 118, 150, 922.

The author wishes to acknowledge his indebtedness to Dr. (Mrs.) S. Kiribamune for her valuable suggestions and comments on this article.

Translation

Hail prosperity! (Now it is) The 43rd year of his Majesty Abhaya salāmegha Srī Jayabāhudevar. The fields called Tel, Kiratu and Narātu which have as their four boundaries the lands of the Vihāra of Lord Gajabāhudevar which is situated beside the main road were granted to me Mintankorran, the supervisor of palanquin bearers attached to the royal bed-chamber, by Gajabāhudevar as life tenure. Regarding the notification of the king recording this land grant Mānābharaṇadēvar issued an order endorsing that it was given by Gajabāhudēvar and had it engraved on stone with the stipulation that there should not be any impediments to the grant.

(May this be protected by) the command of the Buddha and the oath (in honour) of Vallavaraiyan.

*Ch

THURAIAPPAHPILLAI'S CANDID COMMENTS

I have much pleasure in presenting the Tamil Speaking public with this garland of moral songs which, though by no means fit to be valued as a classical work, can yet be said to form an addition to the class of healthy Tamil Literature. That music, both vocal and instrumental, has great charms for the Tamil mind, is an oft-repeated and well-known fact, in which every Tamil should take a noble pride. To this fact, coupled with the peculiar adaptability of Tamil for metrical purposes must be attributed the existence in Tamil of the large number of works in verse, the happy possession of which, I believe, is the lot of very few other cultured languages, ancient or mordern.

The object of this small book is threefold: to give the Tamil people a number of Songs which *all* persons can sing without polluting their morals, to elevate the people by drawing their attention to certain reforms our country stands in urgent need of, and to inspire the educated classes with a desire to cultivate the art of music.

The nature of my present work is such that I think no apology is needed for offering it to the public. I claim it to be unique, at least as far as Jaffna is concerned; for, without following the beaten track of composing lyrics on personal, religious or dramatic themes, which have had, at any rate, a portion of their share of attention at far worthier hands than mine, and in spite of the thought that praising God is the noblest use to which the poetic genius of one can be put, my Muse has preferred to sing on subjects of moral and general utility, the verses on which can be used irrespective of creed.....

—Keetharasa Manjari

இம்மலர் சுன்னகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு பாவலர் துரையப்பா
ஊ நூற்றாண்டு விழாச் சபையின் சார்பில் திரு. ஆ. சிவநேசச்செல்வன் அவர்களால்
பெற்று